# வேதாகம புத்தகங்களின் அறிமுகம்

*வேதாகமத்தில் உள்ள 66 புத்தகங்களின் அறிமுகம் / முன்னுரை*



# வேதாகம புத்தகங்களின் அறிமுகம்

*வேதாகமத்தில் உள்ள 66 புத்தகங்களின்*
*அறிமுகம் / முன்னுரை*

**ஆசிரியர் யாரென்று தெரியவில்லை**

WOG BOOKS 101

First Edition 2023

Author / ***ஆசிரியர்:***

*ஆசிரியர் யாரென்று தெரியவில்லை*

Creator / ***உருவாக்கியவர்:***

Bible Minutes, a unit of www.WordOfGod.in

***Published By:***

*யாரென்று தெரியவில்லை*

***Copyright: Public Domain / இலவசம் / பொதுதளம்***

This book is not copyright protected. You are free to download, print and make copies without any permission from us. *இந்தப் புத்தகத்தை நாங்கள் காப்புரிமைக்கு உட்படுத்தவில்லை. ஆகையால் நீங்கள் இந்தப் புத்தகத்தை எங்களுடைய அனுமதி இல்லாமலேயே மறுப்பதிப்புச் செய்துக்கொள்ளலாம்.*

Download / ***பதிவிறக்கம்:***

www.WordOfGod.in and www.Archive.org

Contact Us:

Email: wordofgod@wordofgod.in

WhatsApp: +91 7676 50 5599

Follow Us:

YouTube: Bible Minutes

Facebook: Bible Minutes

*If you are using this PDF in mobile, Navigation by Index may not work with Google Drive's PDF viewer. We would recommend ReadEra App (https://play.google.com/store/apps/details?id=org.readera) in Android or other similar Apps in iPhone for better performance and navigation experience.*

# பொருளடக்கம்

ஆதியாகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் முதல் புத்தகம்.....1

யாத்திராகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் இரண்டாம் புத்தகம்விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள் .................................8

லேவியராகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் மூன்றாம் புத்தகம் ..........................................................................16

எண்ணாகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் நான்காம் புத்தகம் ..............................................................................25

உபாகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் ஐந்தாம் புத்தகம்....34

யோசுவா...........................................................................42

நியாயாதிபதிகள்...................................................................48

ரூத்.................................................................................54

சாமுவேல் (1 மற்றும் 2)........................................................61

இராஜாக்கள் (1 மற்றும் 2).....................................................70

நாளாகமம் (1 மற்றும் 2).......................................................85

எஸ்றா..............................................................................93

நெகேமியா........................................................................103

எஸ்தரின் சரித்திரம் ..............................................................113

யோபுடைய சரித்திரம்...........................................................123

சங்கீத புத்தகம் ..................................................................139

நீதிமொழிகள்......................................................................147

பிரசங்கி...........................................................................157

சாலொமோனின் உன்னதப்பாட்டு ..............................................159

ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம்....................................................166

எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம்..................................................177

எரேமியாவின் புலம்பல்.................................................................187

எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம்............................................195

தானியேலின் புத்தகம்...................................................................206

ஓசியா.......................................................................................215

யோவேல்...................................................................................221

ஆமோஸ்....................................................................................229

ஒபதியா.....................................................................................234

யோனா......................................................................................240

மீகா..........................................................................................244

நாகூம்.......................................................................................250

ஆபகூக்.....................................................................................254

செப்பனியா................................................................................260

ஆகாய்.......................................................................................265

சகரியா......................................................................................269

மல்கியா.....................................................................................277

மத்தேயு எழுதின சுவிசேஷம்.......................................................285

மாற்கு எழுதின சுவிசேஷம்..........................................................299

லூக்கா எழுதின சுவிசேஷம்.........................................................314

யோவான் எழுதின சுவிசேஷம்......................................................331

அப்போஸ்தலர்களுடைய நடபடிகள்.............................................346

ரோமர்.......................................................................................348

1 கொரிந்தியர்.......................................................................350
2 கொரிந்தியர்.......................................................................353
கலாத்தியர்.........................................................................356
எபேசியர்...........................................................................358
பிலிப்பியர்..........................................................................360
கொலோசெயர்......................................................................363
1 தெசலோனிக்கேயர்.................................................................366
2 தெசலோனிக்கேயர்.................................................................368
1 தீமோத்தேயு.......................................................................370
2 தீமோத்தேயு.......................................................................372
தீத்து ..............................................................................374
பிலேமோன்..........................................................................376
எபிரெயர் ...........................................................................378
யாக்கோபு ..........................................................................380
1 பேதுரு...........................................................................383
2 பேதுரு...........................................................................385
1 யோவான்.........................................................................387
2 யோவான் ........................................................................390
3 யோவான்.........................................................................392
யூதா................................................................................394
வெளிப்படுத்தின விசேஷம்......................................................396

# ஆதியாகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் முதல் புத்தகம்

*ஆதியாகமம் (Genesis) என்னும் தலைப்பு, "தோற்றம்" என்று பொருள் தரும் கிரேக்க மொழிபெயர்ப்பில் இருந்து வருகிறது (செப்டுவஜிண்ட் LXX); வேதாகமத்தின் முதல் வார்த்தை "ஆதியிலே" என்பதில் இருந்து எபிரேய தலைப்பு பெறப்பட்டது. பழைய ஏற்பாட்டின் முதல் 5 புத்தகங்கள், வேதாமகத்தின் ஐந்து ஆகமங்களையும், முழு வேதாகமத்தினையும் அறிமுகம் செய்திட ஆதியாகமம் உதவுகிறது. புதிய ஏற்பாட்டில் 35 இடங்களுக்கும் மேலாக குறிப்பிடப்பட்டிருப்பதில் இருந்தும், இரு ஏற்பாட்டுகளிலும் நூற்றுக்கும் மேலான இடங்களில் இதன் மறைமுக குறிப்புகள் பயன்பட்டிருப்பதே - வேத வாக்கியங்களில் ஆதியாகமத்தின் தாக்கத்தை நிரூபிக்கும் சான்று. ஆதியாகமம் 3 ஆம் அதிகாரத்தில் தொடங்கும் இரட்சிப்பின் கருத்துத் தொடர், வெளிப்படுத்தல் 21, 22 ஆம் அதிகாரங்களில், மீட்கப்பட்ட விசுவாசிகளால் ஆன நித்திய ராஜ்யத்தினை மகிமையாக, தத்ரூபமாக சித்தரிக்கும் வரை அது முடிவடையவில்லை.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*ஆதியாகமத்தில் ஆசிரியர் தன்னைத்தான் அடையாளம் காட்டவில்லை.*

*ஏறக்குறைய மோசே பிறந்ததற்கு 3 நூற்றாண்டுகளுக்கு முன் ஆதியாகமம் முடிவடைகிறது, பழைய ஏற்பாடு (யாத்.17:14; எண். 33:2; யோசுவா 8:31; 1ராஜா.2:3; 2 ராஜா. 14:6; எஸ்ரா 6:18; நெகேமியா13:1; தானி.9:11; மல்கியா 4:4) மற்றும் புதிய ஏற்பாடு (மத்.8:4; மாற்கு 12:26; லூக்கா 16:29; 24:27, 44; யோவான் 5:46;7:22; அப்.15:1; ரோமர்10:19; 1கொரி.9:9; 2கொரி.3:15) மேற்காணும் வசனங்களின் அடிப்படையிலும் அவருடைய படிப்பின் பிண்ணனியையும்*

*(அப்.7:22) வைத்துப் பார்க்கும் போது இதனை தொகுத்து எழுதுவதற்குப் பொருத்தமான ஆசிரியர் மோசே தான் எனக் கூறுகின்றனர். வேறு மோசே தான் ஆசிரியர் என்பதை எதிர்த்து வலிந்து தீர்க்க்ககூடிய எந்தவொருக் காரணமும் எழவில்லை. ஆதியாகமம், யாத்திராகமம் (கிமு. 1445) புத்தகத்திற்குப் பின், ஆனால் மோசேயின் மரணத்திற்கு முன் எழுதப்பட்டது (கிமு. 1405). மோசேயின் சுருக்கமான வாழ்க்கை வரலாற்றின் குறிப்பினை யாத்திராகமம் 1-6ல் வாசித்து தெரிந்து கொள்ளுங்கள்.*

## ***பிண்ணனி மற்றும் அமைப்பு***

*ஆதியாகமத்தின் தொடக்கத்தின் அமைப்பு - நித்திய கடந்தகாலம். தேவன், தமது விருப்பமான செயல் மற்றும் தெய்வீக வார்த்தையினால், சர்வ சிருஷ்டிகளையும் வார்த்தையால் சிருஷ்டித்தார், அலங்கரித்தார், இறுதியில், தேவனாகிய கர்த்தர் ஆதாமைப் பூமியின் மண்ணினாலே தமது சாயலில் வடித்து ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதி சிருஷ்டித்தார். தேவன் தமது சிருஷ்டிப்பின் கிரீடமாக மனுக்குலத்தை உண்டாக்கினார். அதாவது, அவருடைய உறவினைக் கொண்டாடி, அவருடைய நாமத்திற்கு மகிமை சேர்க்கும் தோழர்களாக வைத்தார்.*

*ஆதியாகமத்தில் காணும் ஆரம்ப சம்பவங்களின் வரலாற்றுப் பிண்ணனி, மெசொப்பொத்தாமியாவைச் சேர்ந்தது. இந்த புத்தகம் எந்த வரலாற்று காலகட்டத்திற்காக எழுதப்பட்டது என்பதை துல்லியமாக கூறுவது கடினமாக இருந்தாலும், இஸ்ரவேல் ஜனங்கள் ஆதியாகமத்தை யோர்தான் நதியைக் கடந்து வாக்குதத்தம் செய்யப்பட்டிருந்த தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன் வாசிக்கக் கேட்டிருந்தனர் (கிமு. 1405).*

*புவியியல் ரீதியில் ஆதியாகமம் 3 தெளிவான, தொடர்ச்சியான அமைப்பைக் கொண்டுள்ளது: 1) மெசொப்பொத்தாமியா (அதிகாரங்கள் 1-11)*

*2) வாக்குதத்தம் செய்து தரப்பட்ட தேசம் (அதிகாரங்கள் 12-36) மற்றும் எகிப்து (அதிகாரங்கள் 37-50). இந்த மூன்று பிரிவுகளின் கால அளவுகள்; 1) சிருஷ்டிப்பில் இருந்து 2090 கிமு, 2) 2090 கிமு - 1897 கிமு, மற்றும் 3) 1897-1804 கிமு வேதாகமத்தின் ஏனைய புத்தகங்களின் கால இடைவெளியை ஒன்றுசேர்த்தாலும் அதைக் காட்டிலும் - அதிக கால இடைவெளியை ஆதியாகமம் கடந்து செல்கிறது.*

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*இந்த தொடக்கங்கள் (ஆதியாகமம்)-இன் புத்தகத்தில் தேவன் தம்மை வெளிப்படுத்தி, இஸ்ரவேலுக்கு உலகத்தை குறித்த ஓர் பார்வையை தந்தார். அது இஸ்ரவேலுக்கு அண்டை தேசத்தாரின் உலகப்பார்வைக்கு, பல காலகட்டங்களில் முற்றிலும் முரணானதாக இருந்தது. தேவன் இருக்கிறார் என்பதையோ அல்லது அவரின் ஆள்தத்துவத்தையோ அவரின் செயல்பாடுகளையோ முன்வைத்து தற்காத்துக்கொள்ள - ஆசிரியர் எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. மாறாக, இஸ்ரவேலின் தேவன் இஸ்ரவேலின் அண்டை தேசத்தாரின் தேவர்கள் என்றுச் சொல்லப்பட்டவர்களில் இருந்து - தான் முற்றிலும் மாறுபட்டவர் என்பதை தெளிவாக காட்டி, தன்னைத்தான் வேறுபடுத்திக் கொள்கிறார். பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன், மனுஷன், பாவம், மீட்பு, உடன்படிக்கை, வாக்குதத்தம், சாத்தான் மற்றும் தேவதூதர்கள், இராஜ்ஜியம், வெளிப்படுத்தல், இஸ்ரவேல், நியாயத்தீர்ப்பு, மற்றும் ஆசீர்வாதம் உள்ளடக்கிய இறையியலின் அடிப்படை கருப்பொருட்கள் வெளிப்படுத்தப்படுகிறது.*

*ஆதியாகமம் 1-11 (முதன்மை/ பழமையின் வரலாறு) பிரபஞ்சத்தின் தோற்றங்களைக் குறித்து வெளிப்படுத்துகிறது. அதாவது, காலம், இடம் போன்றவற்றின் ஆரம்பம், மனிதனின்*

அனுபவத்தில் - திருமணம், குடும்பம், வீழ்ச்சி, பாவம், மீட்பு, நியாயத் தீர்ப்பு மற்றும் தேசங்கள் போன்ற அனேக முதல்-அனுபவங்கள் தொடங்கின. ஆதியாகமம் 12 முதல் 50ம் அதிகாரம் வரை (கோத்திரத்தலைவர்களின் வரலாறு) இஸ்ரவேலர்கள் எப்படி குடும்பமாக வாழ ஆரம்பித்தனர், அவர்கள் சந்ததியை ஏபேர் (அதினால் தான் ''எபிரேயர்''; அதியாகமம் 10:24,25) வரை கண்டறிய முடியும் என்பது இஸ்ரவேலர்களுக்கு விளக்கப்பட்டது. இன்னும் தூர உறவான சேம், நோவாவின் மகன் வரையும் கூட அவர்கள் சந்ததி ஆறியப்பட்டிருந்தது. (சேமுடைய சந்ததியார்; ஆதியாகமம் 10:21).

தேவனுடைய ஜனங்கள் தங்கள் சந்ததி மற்றும் குடும்ப வரலாற்றினை அறிந்துகொள்ள முடிந்தது மட்டுமல்ல, அவர்கள் குடும்ப அமைப்பு, பழக்க வழக்கங்கள், மொழிகள், வேறுபட்ட கலாச்சாரங்கள் இவைகளின் தோற்றத்தினையும் அறிந்திருந்தனர். விசேஷமாக, மனிதனின் அடிப்படை அனுபவமான பாவம் மற்றும் மரணம் குறித்த புரிந்துகொள்ளுதல் அவர்களிடம் இருந்தது.

தேவனுடைய ஜனங்கள் கானானைச் சுதந்தரித்து, கானானியரை துரத்தி விட்டு அவர்களது வீடு மற்றும் உடைமைகளை சுதந்தரிக்க இருந்ததால், தேவன் இஸ்ரவேலரின் சத்துருக்களின் பிண்ணனி குறித்து அவர்களுக்கு முன்னறிவித்தார். இதனுடன், கொலையின் அழியாத்தன்மையின் வெளிச்சத்தில் அவர்கள் அறிவிக்க இருக்கும் யுத்தத்தின் உண்மையான அடிப்படையை மோசே எழுதிக் கொண்டிருந்த ஏனைய 4 புத்தகங்களுடன் இணக்கமாக (யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம்) அவர்கள் புரிந்திருக்க வேண்டியது அவசியமாக இருந்தது. இறுதியில், யூத தேசம் முந்தைய உலகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியின் வரலாற்றையும், இஸ்ரவேல் தேச தொடக்கத்தின் பிண்ணனியையும்

*அறிந்திருப்பதை அடிப்படையாகக் கொண்டு, யோசுவாவின் தலைமையின் கீழ் அவர்களது மூலமுதலான கோத்திரப்பிதா, ஆபிரகாமுக்கு வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்தில் அவர்கள் தங்கள் புதிய தொடக்கத்தை தொடங்கி வாழ்வார்கள்.*

*ஆதியாகமம் **12: 1-3** தேவன் ஆபிரகாமுக்குத் தந்த வாக்குதத்தங்கள் மீது முதன்மையான கவனத்தை கொண்டுவந்தது. இது அவர்களின் பார்வை முழு உலகத்தில் உள்ள மக்கள் மீது இருந்ததை சுருக்கி, ஆதியாகமம் **1-11** ல் இஸ்ரவேல் என்னும் ஒரு சிறிய தேசத்தின் மீது அதாவது, அவர்கள் மூலமாக தேவன் அவரது மீட்பின் திட்டத்தை தொடர்ச்சியாக நிறைவேற்றும்படிக்குக் கவனத்தை கொண்டு வந்து நிறுத்தியது. "ஜாதிகளுக்கு ஒளியாக" (ஏசாயா **42:6**) இருப்பதே இஸ்ரவேல் தேசத்தின் பணி என்பதை அடிக்கோடிட்டது. தேசம், வழித்தோன்றல்கள் (விதை) மற்றும் ஆசீர்வாதத்தினை தேவன் வாக்குத்தத்தம் செய்தார். இந்த மும்முனை ஆசீர்வாதம்தான் பின்வரும் நாட்களில் ஆபிரகாமுடன் (ஆதியாகமம்: **15:1-20**) செய்த உடன்படிக்கைக்கு அடிப்படையாக மாறியது. அதற்குப்பின் வரும் வேத வாக்கியங்கள் யாவும் இந்த வாக்குதத்தங்களின் நிறைவேறுதலைக் குறித்துப் பேசுகின்றன.*

*பெரிய அளவில், ஆதியாகமம் **1-11** அதிகாரங்கள் தேவனுடைய குணாதிசயம் மற்றும் செயல்கள் என்னும் ஒரே செய்தியைக் குறித்துத்தான் பேசுகின்றன. இந்த வேதவசனங்கள் அடங்கிய அதிகாரங்களில் - நிகழ்வேறிய சம்பவங்களை தொகுத்துப் பார்க்கும் போது, மனுக்குலம் சுயவிருப்பத்தோடு கீழ்ப்படியாமல் சென்ற போது அவனுக்கு எவ்விதத்தில் தேவன் பதில் அளித்தார் என்பதில் இருந்து தேவனின் பரிபூரண கிருபையின் செயல்பாடு வெளிப்படுகிறது. விதிவிலக்கு இல்லாமல், ஒவ்வொரு இடத்திலும் தேவன் அவருடைய கிருபையின் வெளிப்பாட்டை அதிகரித்தார். அதேவேளையில், எந்தவொரு விதிவிலக்கும்*

இல்லாமல், மனிதன் அதிகரிக்கும் பாவம் என்னும் மீறுதலினாலேயே பதிலளித்தான். வேதாகமத்தின் வார்த்தைகளின்படி, பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று (ரோமர் 5:20).

இறுதியாக, வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய முக்கிய கருப்பொருள் இப்புத்தகத்தை ஏனைய புத்தகங்களில் இருந்து வேறுபிரிக்கிறது. அது வேதவசனங்களின் முதல் புத்தகம் கடைசிபுத்தகத்துடன் மிக நெருக்கமாக தொடர்பில் இருக்கிறது என்பதே. வெளிப்படுத்தல் புத்தகத்தில், ஆதியாகமத்தில் இழந்த பரதீசு மீட்டெடுக்கப்படும். ஆதியாகமம் 3-ல் காணும் சாபத்தின் விளைவினால் உண்டான பிரச்சினைகளுக்கு தனது புத்தகத்தில் யோவான் எதிர்காலத் தீர்வாக இருக்கும் சம்பவங்களை தெளிவாக விவரிக்கிறார். மனிதனின் வீழ்ச்சியினால் படைப்பிற்கு சாபத்தினால் உண்டான அழிவில் தேவன் எப்படி அவருடைய சிருஷ்டிகளை விலக்கி காக்கிறார் என்பதில் அவரது கவனத்தைச் செலுத்துகிறார். யோவானின் சொந்த வார்த்தைகளில் சொல்வோமானால், ''இனி ஒரு சாபமுமிராது'' (வெளி.22:3). தேவனுடைய வார்த்தையின் கடைசி அதிகாரத்தில், விசுவாசிகள் மீண்டும் ஏதேன் தோட்டத்தில் "ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதையும்'' (வெளி.22-14) தாங்கள் நகரத்திற்குள் பிரவேசிக்கவும் காண்கிறார்கள், அப்பொழுது, அவர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே தோய்த்து வெளுத்தவர்கள் (வெளி.7:14).

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

இந்த புத்தகத்தின் ஒட்டுமொத்த மற்றும் தனிப்பட்ட செய்தி - விசுவாசம் மற்றும் கிரியைகளுக்கு முக்கிய பாடங்களைக் கற்றுத் தருவதாக இருக்கிறது என்பதால், ஆதியாகமத்தில் தனிப்பட்ட செய்திகளை புரிந்து கொள்ள வேண்டும் என்பது இப்புத்தகத்தின் பெரிய திட்டமும் நோக்கமுமாக இருப்பது என்பது ஒரு பெரிய

சவாலாக இருக்கிறது. ஆதியாகமம் சிருஷ்டிப்பு “ஒன்றும் இல்லாமையில் இருந்து”, “*ex nihilo*” என்னும் தெய்வீக கட்டளையில் இருந்து சிருஷ்டிக்கப்பட்டது எனக் கூறுகிறது. மனிதனின் வீழ்ச்சி, உலகம் முழுவதும் வெள்ளம், தேசங்கள் பகிர்ந்து அளிக்கப்படுதல் என்னும் மூன்று அதிர்ச்சிகரமான சம்பவங்களை நாம் உலக சரித்திரத்தை புரிந்து கொள்ள நமக்கு பிண்ணனியாக தரப்பட்டுள்ளது. பின்னர் ஆபிரகாமில் இருந்து, தேவனின் மீட்பு மற்றும் ஆசீர்வாத்தில் கவனம் செலுத்துகிறது.

ஆதியாகம-நாட்களில் காணப்பட்ட பழக்கவழக்கங்கள் இன்றைய நம்முடைய நாகரீக உலகில் காணப்படும் பழக்கவழக்கங்களுக்கு மிகவும் வேறுபட்டவை. கிழக்கத்திய தேசங்களின் பழங்காலத்து பிண்ணனியில் வைத்து அவற்றுக்கு விளக்கம் தரவேண்டும். பழக்கவழக்கங்களைக் குறித்து விளக்கம் அளிக்க வெளி குறிப்புகளையோ அல்லது வேதாகமத்தின் வேறு வசனங்களைக் கொண்டு விளக்கம் தருவதற்கு முன் அந்த குறிப்பிட்ட பத்தியில் உடனடியாக காணப்படும் சூழ்நிலையைக் கொண்டே முதலில் விளக்கம் அளிக்க வேண்டும்.

# யாத்திராகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் இரண்டாம் புத்தகம்

## *தலைப்பு:*

*இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்து புறப்பட்டதே (19:1) இந்த புத்தகத்தில் மோலோங்கி நிற்கும் வரலாற்றுக் கருத்தாக இருந்தபடியால் பழைய ஏற்பாட்டின் கிரேக்க செப்டுவஜிண்ட் LXX மற்றும் லத்தீனின் வுல்கேட் பதிப்பும் மோசேயின் இரண்டாம் புத்தகத்திற்கு "யாத்திராகமம்" என்ற தலைப்பினைத் தந்தனர்." ஆங்கில மொழிபெயர்ப்பிர்ல் "Now (and) these are the names of children of Isreal" என்று தொடங்குவதாலும், மேலும் இவ்வார்த்தைகளே எபிரேய வேதாகமத்திலும் தொடக்க வார்த்தைகளாக இருப்பதால் இந்த புத்தகம் மோசேயின் முதல் புத்தகமாகிய ஆதியாகமத்தினைத் தொடர்ந்து வரும் புத்தகம் என ஏற்றுக் கொள்ளும்படி பரிந்துரைக்கிறது. (தமிழ் மொழிபெயர்ப்பில் இந்த அமைப்பை காண முடியாது). இஸ்ரவேலின் புத்திரர்கள் எகிப்தை விட்டு "புறப்படுவார்கள்" அல்லது "வெளியேறுவார்கள்" என்பதை ஏறக்குறைய 350 வருடங்களுக்கு முன்னரே (கிமு 1804) தனது மரணப்படுக்கையில் இருக்கும் வேளையில் (கிமு 1445) கண்டு, பேசிய யோசேப்பின் விசுவாசத்தை எபிரேயர் 11:22 பாராட்டுகிறது.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*எந்தவித தயக்கமும் இல்லாமல், மோசே தான் இதன் ஆசிரியர் என ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மோசே - தேவனுடைய கட்டளைகளைப் பின்பற்றி, "கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதி வைத்தார் (யாத் 24:4). இவற்றில் அமலேக்கியருடன் ஆன யுத்தம் (17:14), பத்து*

*கட்டளைகள் (34:4, 27-29) மற்றும் உடன்படிக்கையின் புத்தகம் அடங்கும். மோசே தான் இதனை எழுதியவர் என்பது ஏனைய ஐந்து ஆகம புத்தகங்களும் உறுதியாகச் சொல்கின்றன. எண்.33:2 ல் "அவர்களுடைய பிரயாணங்களை எழுதினான்" எனவும் உபாகமம் 31:9 ல் "மோசே இந்த நியாயப்பிரமாணத்தை எழுதி" எனவும் பார்க்கிறோம்.*

*பழைய ஏற்பாட்டின் மேற்சொன்ன வசனங்கள் மோசே தான் இதன் ஆசிரியர் எனக் கூறியதை இந்த வசனங்களும் (யோசுவா 1:7,8; 8:31,32; 1 ராஜா.2:3; 2 ராஜா.14:6; நெகே.13:1; தானியேல் 9:11-13; மற்றும் மல்கியா 4:4) உறுதிப்படுத்துகின்றன. புதிய ஏற்பாட்டும், மாற்கு 12:26-ல் தேவன் முட்செடியைக்குறித்துச் சொல்லிய இடத்தில் மோசேயின் ஆகமத்தில் அவனுக்குச் சொன்னதை நீங்கள் வாசிக்கவில்லையா? என யாத்திராகமம் 3:6-ஐ எடுத்துப் பயன்படுத்துவதில் இருந்தும், லூக்கா 2:22,23-ல் "மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே" என மேற்கோள் காட்டுவதினால் புதிய ஏற்பாடும் மோசே தான் ஆசிரியர் என ஒப்புக்கொள்கிறது. மேலும் இயேசுவும் "மோசேயும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே" என மோசேயைக் குறிப்பிட்டு அறிக்கையிடுகிறார். (யோவான் 5:46:47).*

*தனது 80ஆம் வயதில் தொடங்கி 120 வயது வரை (யாத்.7:7, உபாக.34:7) இஸ்ரவேலின் தலைவராக இருந்த 40 ஆண்டு கால இடைவெளியில் மோசே தான் எழுதிய ஐந்து புத்தகங்களில் இந்த இரண்டாம் புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும். இன்னும் குறிப்பிட்டுச் சொல்வோமானால், மோவாப் சமவெளிப்பகுதியில் நெபோ மலைப்பகுதிக்கு வெளியேறி வந்த பின்னும் அவரது மரணத்திற்கு முன்னும் எழுதியிருக்க வேண்டும். எகிப்தைவிட்டு வெளியேறி வந்த நாட்கள் (1445 கிமு) - இப்புத்தகம்*

எழுதப்பட்டதால், இப்புத்தகம் எழுதப்பட்ட காலம் கி.மு 15-ஆம் நூற்றாண்டு எனத் தீர்மானிக்க உதவுகிறது.

சாலமோன் ராஜாவின் ஆட்சிக்காலத்தின் நான்காம் ஆண்டில் அவர் தேவனுடைய ஆலயத்தைக் கட்ட ஆரம்பித்தார் (கிமு 966/65). இது எகிப்தில் இருந்து வெளியேறிய நாட்களில் இருந்து 480 ஆண்டுகளுக்குப் பிறகு (1ராஜாக்கள் 6:1) என்பதால், கிமு 1445-ல் இந்த புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம். யெப்தாவின் நாட்களில், இஸ்ரவேலர் எஸ்போனில் 300 ஆண்டுகள் குடியிருந்தனர் - என்று யெப்தா குறித்து வைத்துள்ளார். யெப்தாவின் நாட்களில் இருந்து முன்னும் பின்னுமாகவும், அந்நியர்கள் அடிமைப்படுத்தல், நியாயாதிபதிகள் மற்றும் ராஜாக்கள் காலம், வனாந்திரத்தில் சுற்றி அலைந்த காலம், யோசுவாவின் தலைமையின் கீழ் வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் பிரவேசித்து கைப்பற்றிய நாட்கள் இவைகளை வைத்து, 480 ஆண்டுகள் எனக் கணக்கிட்டதை உறுதிபடுத்தியுள்ளனர். வேதவசனம் - "இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் 430 வருஷம்" (12:40) என்பதில் இருந்து யாக்கோபும் அவனது நீட்டிக்கப்பட்ட குடும்பத்தினர் எகிப்திற்குள் பிரவேசித்தது 430 வருஷங்களுக்கு முன் (கிமு.1875) என அறிகிறோம். இதினால் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், யோசேப்பு வாழ்ந்த காலம் 12-வது ராஜவம்சம் எனவும், அது எகிப்து ராஜ்ய வரலாற்றின் நடுத்தர காலம் எனவும், மேலும், மோசேயின் நாட்கள் மற்றும் இஸ்ரவேல் ஜனத்தார் எகிப்தில் குடியிருந்ததில் இறுதி மற்றும் அடிமைதனத்திற்கு உட்பட்டிருந்த ஆண்டுகள், நடுத்தர காலம் எனவும், 18-வது ராஜவம்சம் அல்லது புதிய ராஜ்யத்தின் காலம் என்றும் குறிப்பிடுகின்றனர். சிலகாலம் எகிப்தில் குழப்பமான சூழ்நிலை இருந்த போது ஹைக்ஸோஸ் (Hyksos, கிமு. 1730 -1570) என்னும் அன்னிய தேசத்தார் படையெடுத்து வந்தனர், யோசேப்பு எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாக ஆனதினால் (ஆதி:45:8) அவர்களால்

முழு எகிப்து தேசத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியவில்லை. ஹைக்ஸோஸ் - கூட்டு வில்லை (composite bow) அறிமுகம் செய்த செமிட்டிக் கலப்பினத்தவர்கள். இந்த போர்க்கருவிகளைச் செயல்படுத்தியது இஸ்ரவேலர் எகிப்தில் இருந்து வெளியேறுவதைச் சாத்தியமாக்கியது.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

எகிப்தின் பதினெட்டாவது ராஜவம்சத்தின் காலம், எகிப்திலிருந்து இஸ்ரவேலின் வியத்தகு வெளியேற்றம் நடைபெற்ற நாட்கள் - எகிப்து வரலாற்றில் வலுவிழந்த அல்லது தெளிவற்ற காலக்கட்டம் எனக் கூறமுடியாது. உதாரணமாக, தட்மோஸ்-III, அடக்குமுறை பார்வோன் "பண்டைய கால எகிப்தின் நெப்போலியன்" என அழைக்கப்பட்டவன், எகிப்தின் இயற்கையான எல்லைகளுக்கும் அப்பால் அவனது ஆட்சியை விரிவாக்கினான். இதே ராஜவம்சம்தான், நூற்றாண்டுகளுக்கு முன் அமோஸே-I-ன் தலைமையின் கீழ் ஹைக்ஸோஸ் ராஜாக்களை நாட்டை விட்டு துரத்தி, நாட்டின் பொருளாதார, ராணுவ, மற்றும் இராஜதந்திரத்தில் வளரச்செய்யும்படி மாற்றினர். எகிப்தை விட்டு இஸ்ரவேலர் வெளியேறின போது, எகிப்து பலமுள்ள தேசமாக இருந்தது; பலவீனமான தேசமாக இல்லை.

மோசே, கிமு 1525-ஆம் ஆண்டு பிறந்தவர் (அவருக்கு கிமு.1445-ல், 80 வயது) மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு" (அப்.7:22), தட்மோஸ்-I, II மற்றும் ராஜஸ்திரீ ஹட்ஷுப் சூட் (Hatshepsut) அடங்கிய பார்வோன்களின் அரசவையில் 40 ஆண்டுகள் வாழ்ந்தான் (அப்.7:23). தட்மோஸ்-III ஆண்ட காலத்தில் மீதியானியர்கள் வெளியே சென்ற காலத்தில் தனக்குத் தானே நியமித்துக்கொண்டு, மேலும் 40 வருடங்கள் வாழ்ந்தான் (அப்.7:30). பின்னர் யாத்திராகமத்தில் நாம் காணும் அமென்ஹோதேப்-II (Amenhotep) பார்வோனின் ஆரம்ப ஆட்சி

*காலத்தில், மோசே, தேவனின் வழிநடத்துதலின்படி இஸ்ரவேல் ஜனத்தாருக்கு தலைவனாக ஆனார். பராக்கிரமசாலியான பார்வோனின் முன் இஸ்ரவேல் ஜனங்களின் தலைவனாக நிற்கவும், சீனாய் வனாந்திரத்தின் வழியாக அவரது கடைசி 40 ஆண்டுகள் ஜனங்களை வழிநடத்த வல்லவனாக மாற்ற அவர் எகிப்தில் கல்வி பயின்றதையும், மீதியானில் இருந்து வெளியேறியது, இவ்விரண்டையும் தேவன் பயன்படுத்தினார் (அப்.7:36). மோசேயின் கோபம் மற்றும் அவமதிப்பின் நிமித்தமாக (எண். 20:1-3) தேவனது நியாயத்தீர்ப்பு அவர்மீது காணப்பட்டபடியால் மோசே 120 வயது ஆகும் போது நெபோ மலையில் மரித்தார் (உபாகமம் (34:1-16). தூரத்தில் இருந்து வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்தைக் கண்டாரே அல்லாமல், அவர் அதனுள் பிரவேசிக்கவில்லை. பல நூற்றாண்டுகள் கழித்து சீஷர்களுக்கு மறுரூப மலையில் தோன்றினார் (மத்.17:3).*

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*தேவனுடைய கால அட்டவணையின்படி, ஆபிரகாமின் வழித்தோன்றல்களின் அடிமைத்தனத்தின் முடிவை யாத்திராகமம் குறித்தது, மேலும் ஆபிரகாமிற்கு தேவன் தந்த உடன்படிக்கை வாக்குதத்தத்தின் நிறைவேறுதலாக, அவரின் வம்சத்தார் வாக்குத்தத்த தேசத்தில் வசிப்பது மட்டுமல்ல, அவர்கள் பெருகி, பெரிய தேசமாக மாறுவார்கள் (ஆதி 12:1-3,7) என்பதும் ஆரம்பமாகியது. இந்த புத்தகத்தின் நோக்கத்தினை இப்படியாக கூறலாம்: எகிப்தில் இருந்து வெளியேறிய யாக்கோபின் வழித்தோன்றல்கள் தேவனைச்சார்ந்து இருக்கும் தேசத்தை நிறுவ எப்படி - விரைவான வளர்ச்சியைக் கண்டனர் என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ள உதவுகிறது.*

*சரியான வேளையில், சீனாய் மலையிலும் மோவாப் வனாந்திரத்திலும் தேவனைச் சார்ந்திருக்கும் ஜனங்களாக*

*இஸ்ரவேலர் வாழ்வதற்குத் தேவையான சட்டங்கள், சட்ட அமைப்புக்களைத் தேவன் தந்தார். இதினால் அவர்கள் மற்ற தேசத்தாரைக் காட்டிலும் வேறுபட்டு இருந்தனர் (உபா.4:7,8; ரோமர் 9:4,5).*

*தேவனின் சுய-வெளிப்படுத்தலின்படி, இஸ்ரவேலர்கள் அவர்களது தேவனின் குணாதிசயங்களான, பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் ஒரே தேவனின் இறையாண்மை, மகத்துவம், நன்மை மற்றும் பரிசுத்தம், கிருபை மற்றும் இரக்கம் குறித்த கட்டளைகளைப் பெற்றிருந்தனர். (விசேஷமாக யாத்திராகமம் 3,6,33,34-ஐ பாருங்கள்). யாத்திராகமம் குறிப்பிடுபவைகளும் மற்றும் தொடர்ந்து நிறைவேறின சம்பவங்களும், வேதாகமத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படும் வெளிப்படுத்தல்களின் அடிப்படையாக இருக்கின்றன. (சங்.105:25-45, 106:6-27, அப். 7:17-44; 1கொரி. 10:1-13, எபிரேயர் 9:1-6, 11:23-29).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*எகிப்து தேசம் பத்து வாதைகளால் வாதிக்கப்பட்டது மற்றும் பார்வோனின் சேனைகள் செங்கடலில் அமிழ்ந்து அழிந்தது குறித்து எகிப்து தேசத்து குறிப்புகள் ஏதும் இல்லை என்பதால் இப்படிப்பட்ட வரலாற்றுச் சம்பவம் உண்மையில் நிறைவேறினதா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியதில்லை. ஏனெனில், எகிப்தின் வரலாற்று ஆசிரியர்கள் பார்வோன்களின் தடுமாற்றங்கள் மற்றும் இழிவான தோல்விகளை ஒருபோதும் குறிப்பு எழுதுவதில்லை. யோசுவாவின் தலைமையின் கீழ், இஸ்ரவேல் மூன்று பட்டணங்களை எரித்து நாசமாக்கப்பட்டதைக் குறித்து (யோசுவா 6:24, 8:28, 11:11-13) வேதவாக்கியம் குறிப்பிடுகிறது. இந்த வெற்றி சொல்லப்போனால், ஏற்கெனவே அமைப்பாக இருந்த பட்டணத்தையும் அதின் குடியிருப்புகளையும் கையகப்படுத்திக் கொண்டதாக இருந்ததே அல்லாமல், அழித்துப் போடும்படி*

மேற்கொண்ட யுத்தம் அல்ல. பிற்காலத்தில் பட்டணங்களில் எரிந்து போன இடங்களில் மேற்கொண்ட ஆராய்ச்சினை வைத்து கானான் தேசத்துக்குள் இஸ்ரவேலர் பிரவேசித்த நாட்களை கணக்கிட்டு உறுதிபடுத்த முடியாது.

வேதாமத்திற்கு வெளியில் எந்த ஒரு தடயமும் இல்லாதிருந்தும், கிழக்கத்திய நாடுகளின் எபிரேய அடிமைத்தனம், கொள்ளைநோய்கள், வெளியேற்றம் மற்றும் வெற்றி சம்பந்தப்பட்ட குறிப்புகள் மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் சான்றுகள் ஆரம்ப நாட்களை உறுதிப்படுத்துகின்றன. எகிப்தின் கீழ்ப்பகுதியில் கட்டிடங்கள் கட்டி சான்றுகளாக அனைத்து பார்வோன்களும் 15-ஆம் நூற்றாண்டில் விட்டுச்சென்றனர். டெல்டா வனப்பகுதியில் கோசேனுக்கு அருகில் - மோசே சென்றடையத்தக்க இடத்திலேயே இந்த பகுதிகள் இருந்தன.

ஆசரிப்புக்கூடாரத்தில் அச்சுக்கலையின் முக்கியத்துவம் மிகுந்த பிரதிபலிப்பை ஏற்படுத்தியது. கூடாரத்தின் ஒவ்வொரு தட்டுமுட்டுச்சாமான்களையும் அதன் ஒவ்வொரு கட்டுமானப் பொருட்களையும் புத்திசாலித்தனமாக கிறிஸ்துவுடன் இணைத்துச் சொல்வது புதிராகத் தோன்றும், புதிய ஏற்பாட்டின் குறிப்புகள் அப்படி இணைத்துப் பார்ப்பதை ஆதரிக்கவில்லை என்றால், வேதாகமத்தை விளக்கும் இறையியல் துறை அதை எச்சரிப்புடன் கையாள வேண்டும். அழகிற்காக, அதன் செயல் திறனுக்காக ஆசரிப்புக் கூடாரமும், அதன் அலங்கரிப்பின் அமைப்பும் சொல்லியிருக்கும் விதமாக அமைக்கப்பட்டது என்பது சரி, ஆனால் அதில் மறைந்திருக்கும் அர்த்தம் மற்றும் அது இதைத்தான் குறிக்கிறது என எங்கேயும் குறிப்புகள் இல்லை. முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசாரிப்புக் கூடாரத்தில் எப்படி பலி செலுத்தப்பட்டது மற்றும் ஆராதனை செய்யப்பட்டது, வரவிருக்கும் மேசியாவின் மீட்பின் செயலை முன்னறிவிப்பவையாக அவை இருக்கின்றன என்பதை விளக்க,

புதியஏற்பாட்டின் வசனங்கள் அந்த தலைப்பினை/ பொருளை எப்படி கையாள்கிறதோ அதற்கு விட்டு விட வேண்டும்.

# லேவியராகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் மூன்றாம் புத்தகம்

*இந்த மூன்றாம் நியாயப்பிரமாணப் புத்தகத்தின் மூலமுதலான எபிரேய தலைப்பு - "மோசேயைக் கூப்பிட்டு" என்னும் முதல் வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. அனேக பழையஏற்பாட்டு புத்தகங்களும் இவ்வண்ணமே அவைகளின் எபிரேய தலைப்பினைப் பெறுகின்றன. (உதாரணமாக, ஆதியாகமம் - "ஆதியிலே", யாத்திராகமம் - "இந்நாமங்களே இப்பொழுது" என்பதில் இருந்து பெறப்பட்டது.*

*லேவியராகமம் என்னும் தலைப்பு கிரேக்க பழையஏற்பாட்டின் (LXX) லத்தீன் வுல்கேட் (Vulgate) பதிப்பின் லுட்டிகோன் என்பதில் இருந்து வருகிறது - அர்த்தம் "லேவியர்களைப் பற்றியச் செய்திகள்" (25:32,33). இந்தப் புத்தகம் லேவியரின் பொறுப்புக்களில் காணப்படும் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கிறது. முக்கியமாக, ஆராதனையின் போது ஜனங்களுக்கு எவ்விதத்தில் உதவி செய்யவேண்டும், ஜனங்கள் பரிசுத்தமாக எப்படி வாழவேண்டும், என்ன கற்றுத் தர வேண்டும் என்ற கட்டளைகளை ஆசாரியர்களுக்குத் தருகிறது. புதிய ஏற்பாட்டை எழுதிய ஆசிரியர்கள் லேவியராகம புத்தகத்தை 15 முறை மேற்கோள் காட்டியிருக்கின்றனர்.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி கர்த்தர் சீனாய்மலையில் மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே (27:34) (cf 7:38; 25:1; 26:46), என்ற லேவியராகமத்தின் கடைசி வசனத்தின் அடிப்படையில் இந்த புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதியை குறித்த சந்தேகம் தீர்த்து வைக்கப்படுகிறது. இந்த பிரமாணங்களை மோசேக்கு தேவன் கொடுத்தார் (1:1) என்பது*

*லேவியராகமத்தில் **56** முறை காணப்படுகிறது. விரிவான பிரமாணமுறைகளைக் குறித்து தந்திருப்பது மட்டுமல்ல, நியாயப்பிரமாணத்தின் வரலாற்றினைக் கால வரிசைப்படி வரிசைப்படுத்தியும் தந்துள்ளது. **(8-10** அதிகாரம்; **24:10-23** பார்க்க). யாத்திராகமத்தின் வெளியேற்றம் கிமு **1445**-வில் நிறைவேறியது. (யாத்திராகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி பகுதியைக் காண்க) ஆசாரிப்புக் கூடாரம் அச்சம்பவத்தின் ஒருவருடம் கழித்து அமைக்கப்பட்டது. (யாத்.**40:17**) லேவியராகமம் குறிப்பு பதிவுசெய்வதில் இருந்து தொடங்குகிறது, எகிப்தில் இருந்து வெளியேறிய இரண்டாம் ஆண்டின் முதல் மாதம் (ஆபிப்/ நிசான்) இப்புத்தகம் வெளிப்பட்டிருக்கலாம். எண்ணாகமம் புத்தகம் இரண்டாம் மாதத்தில் இருந்து தொடங்குகிறது (ஜிவ் மாதம்; உறுதிப்படுத்துவது **1:1** வசனம்).*

## *பிண்ணனி மற்றும் அமைப்பு*

*சீனாய் மலையில் இஸ்ரவேலர் கூடாரமிட்டு தங்கியிருந்த ஆண்டிற்கு முன்பு: **1)** தேவனுடைய மகிமை இஸ்ரவேலர்களின் மத்தியில் முன் ஒருபோதும் முறைப்படி தங்கியிருந்தது இல்லை. **2)** ஆசரிப்புக் கூடாரம், போன்ற ஆராதிக்கும் மைய்ய இடம் முன்பு இருந்ததில்லை. **3)** முறையான பலிசெலுத்தும் முறைகள் மற்றும் பண்டிகை கால ஆசரிப்பு இதற்கு முன் கொடுக்கப்படவில்லை. **4)** பிரதான ஆசாரியர், முறைப்படியான ஆசாரியத்துவம், ஆசாரிப்புக்கூடாரத்தில் பணிசெய்பவர்கள் என ஒருவரும் இதற்கு முன் நியமிக்கப்பட்டதில்லை. எகிப்தில் இருந்து வெளியேறிய பின்பு முதலில் சொன்ன இரண்டும் செயல்பாட்டில் வந்து விட்டபடியால் அடுத்துச் சொன்ன இரண்டு அம்சங்களின் தொடக்கம் தேவைப்பட்டது, இந்த இடத்தில் தான் லேவியராகமத்தின் அவசியம் ஏற்படுகிறது. யாத்திராகமம் **19:6**-ல், தேவன் இஸ்ரவேல் புத்திரரிடம் - “நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்” என்றார். எனவே, லேவியராகம புத்தகம்*

அவருடைய புதிதாக மீட்கப்பட்ட ஜனத்திற்கு - தேவன் அளித்த கட்டளைகளின் புத்தகமாக மாறியது - எப்படி அவரை ஆராதிக்க மற்றும் அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதைக் கற்றுத் தரும் கட்டளைப் புத்தகம் லேவியராகமம்.

இஸ்ரவேல் அன்றைய தினம் வரை, அவர்களின் முற்பிதாக்களிடம் இருந்து பெற்ற கடந்த கால குறிப்புகளில் இருந்து - எப்படி தேவனுக்கு முன்பதாக வாழ வேண்டும், அவரை எப்படி ஆராதிக்க வேண்டும் என்ற குறிப்பினை மட்டும் பெற்றிருந்தார்கள். எகிப்தில் பல நூற்றாண்டுகளாக அடிமைகளாக வாழ்ந்ததினாலும், அவர்கள் வாழ்ந்த தேசம் எண்ணற்ற தேவர்களினால் நிறைந்திருந்ததினாலும், அவர்களின் ஆராதனை மற்றும் தேவனைக்குறித்த பயம் அதிக அளவில் பாதிப்புக்குள்ளாகி இருந்தது. பல தேவர்களை வழிபடுதல் மற்றும் அன்னிய தேவர்களின் சடங்கு சம்பிரதாயங்கள் போன்றவற்றில் தொடர்ந்து ஈடுபடுவது அவர்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த போது அதிகமாக அவர்களில் காணப்பட்டது. (உதாரணமாக பொன் கன்றுக்குட்டியை வணங்குதல் யாத்.32 உறுதிபடுத்துகிறது). அவர்களின் அண்டை தேசமாகிய எகிப்தியரைப் போல் இஸ்ரவேலர் தன்னை ஆராதிக்க தேவன் அனுமதிக்க மாட்டார், மேலும் ஒழுக்கநெறி மற்றும் பாவத்தினைக் குறித்து எகிப்தியர்களின் நிலைப்பாட்டை பொறுத்துக் கொள்ளவே மாட்டார். லேவியராகம புத்தகத்தின் கட்டளைகளைப் பின்பற்றி, கர்த்தருக்கு ஏற்ற முறையின்படி இஸ்ரவேல் தேசத்தாரை ஆராதிக்கும்படி ஆசாரியர்கள் வழிநடத்த முடியும்.

நியாயப்பிரமாணங்களைக் குறித்தே இப்புத்தகம் அதிகமாகப் பேசினாலும், இது ஒரு வரலாற்றுப் புத்தக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. மோசேயின் மேற்பார்வையில் ஆசரிப்புக் கூடாரம் கட்டப்பட்ட உடனே, தேவன் தம் மகிமையோடு அதில் வந்து வாசம் செய்யும்படி இறங்கினார் என்று கூறி

யாத்திராகம புத்தகம் நிறைவடைகிறது (40: 34-38). "கர்த்தர் ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்து மோசேயைக் கூப்பிட்டு" என்று ஆரம்பித்து, "இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படி கர்த்தர் சீனாய் மலையில் இருந்து மோசேக்கு விதித்த கட்டளைகள் இவைகளே" என லேவியராகம புத்தகம் முடிவடைகிறது. இஸ்ரவேலின் ராஜா அவரது அரமணையில் தங்கி (ஆசரிப்புக் கூடாரம்), அவருடைய பிரமாணங்களை நிலைப்படுத்தி, ஓர் உடன்படிக்கையின் பங்காளராக அவர் தம்மைத் தாமே தமது ஜனத்திற்கு உறுதியாக கூறுகிறார்.

பூகோள ரீதியான எந்தவொரு நகர்தலும் இந்த புத்தகத்தில் இல்லை. இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் அவரது கட்டளைகளைத் தரும்படி இறங்கிவந்த சீனாய் மலை அடிவாரத்தில் தங்கி இருக்கின்றனர் (25:1; 26:46; 27:34). அவர்கள் அங்கேயே ஒருமாத காலம் தங்கியிருந்தனர் - அதற்குப் பின், எண்ணாகம புத்தகம் தனது பதிவினைத் தொடங்குகிறது (எண்ணாகமம்1:1).

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

பரிசுத்தம் தேவனின் குணாதிசயம், இஸ்ரவேலின் பரிசுத்தத்தைக் குறித்த தேவனுடைய சித்தம் - இந்த இரண்டு அடிப்படைக் கருத்துக்களின் அடிப்படையிலேயே லேவியராகம புத்தகத்தின் கருத்துக்கள் அனைத்தும் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. தேவனின் பரிசுத்தம், மனுக்குலத்தின் பாவகுணம், பலிசெலுத்துதல் மற்றும் பரிசுத்த ஸ்தலத்தில் தேவனுடைய பிரசன்னம் இவைகளே இப்புத்தகத்தில் அதிகமாக காணப்படும் கருப்பொருட்கள். இப்புத்தகம் தெளிவாக மற்றும் அதிகாரத்துடன், தனிநபர் பரிசுத்ததிற்கான கட்டளைகளை தேவனின் தூண்டுதலின்படி வடிவமைத்துத் தருகிறது (11:44,45; 19:2; 20:7,26; உறுதிபடுத்துவது 1 பேதுரு 1:14—16). இஸ்ரவேலின் தனிநபர் பரிசுத்தத்தைக்காட்டிலும் மேலானதாக ஆசரிப்புகளின்

*சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேலின் விசுவாச வாழ்க்கையின் கருப்பொருள் என்பதின் அடிப்படையில் அமைந்துள்ளது. உண்மையில், தேவனுடைய பரிசுத்தத்திற்கு பதில் அளிக்கும் வண்ணமாக தனிநபரின் பரிசுத்த வாழ்க்கை இருக்க வேண்டும் என்பதற்கு, தொடர்ச்சியாக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். (இந்த வற்புறுத்தலை லேவியராகமம் 17 முதல் 27ம் அதிகாரங்களின் வசனங்களில் காணலாம்). இப்புத்தகம், லேவியராகமம் மனுக்குலத்தின் பரிசுத்தமற்ற தன்மையை சுத்திகரிப்பது எப்படி என்பதற்கான கட்டளையையும் 125 க்கும் மேலான குறிப்புகளில் தருகிறது. பரிசுத்தத்தினை பாதுகாக்க வேண்டிய அவசியத்தினை இரண்டு வாக்கியங்களை திரும்பத்திரும்ப சொல்வதின் மூலமாக கற்பிக்கிறது. அவை "நானே கர்த்தர்" மற்றும் "நான் பரிசுத்தர்" என்னும் வார்த்தைகளே. இந்த வாக்கியங்கள் 50 தடவைகளுக்கு மேலாக எடுத்தாளப்பட்டிருக்கிறது. (பார்க்கவும் 11:44, 45)*

*நிபந்தனைக்குட்பட்ட மோசேயின் உடன்படிக்கையின் கருப்பொருள், இப்புத்தகம் முழுவதும் காணப்படுகிறது. குறிப்பாக, 26ம்-அதிகாரத்தில் மீண்டும் எழுகிறது. புதிய தேசத்தின் உடன்படிக்கை, உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையினால் விளையும் விளைவுகளின் விபரத்தைக் குறிப்பிடுவது மட்டுமல்ல, இஸ்ரவேலின் வரலாற்றினை உறுதிச்செய்ய வல்ல விதத்தில் எழுதப்பட்டுள்ளது. கீழ்ப்படியாமைக்குரிய தண்டனையின் விபரம் அது எவ்வளவு தீர்க்கதரிசனமாக சம்பந்தப்படுத்தி எழுதப்பட்டுள்ளது என்பதையும் காணலாம். மோசே லேவியராகமம் எழுதிய (கிமு. 538) வருடத்திற்கு ஏறக்குறைய 900 ஆண்டுகளுக்குப் பின் பாபிலோனுக்கு நாடு கடத்தப்படுதல், சிறைபிடிக்கப்படுதல் மற்றும் தேசத்திற்கு திரும்ப வருதல் போன்ற சம்பவங்களைக் குறிக்கிறது. தனது ராஜ்ஜியத்தை அறிமுகப்படுத்த மேசியா வருதல், லேவியரகமம் 26 மற்றும்*

*உபாகமம் 28-ல் (உறுதிபடுத்துவது சகரியா14:11) சொல்லப்பட்டுள்ள சாபங்களின் முடிவு உண்டாகும் வரை இஸ்ரவேலின் கீழ்ப்படியாமையை கடைசிகால சம்பவங்களுடன் சம்பந்தப்படுத்திப் பார்ப்பது முடிவுக்கு வராது. வருத்தம் தெரிவிக்கும் மற்றும் நன்றியறிதலுடன் ஆராதிப்பவர் இந்த சடங்குகளை ஆசரிப்பதன் மூலம் - நாங்கள் தேவனை விசுவாசிக்கிறோம் அவரில் அன்பு கூறுகிறோம் என்பதை வெளிப்படுத்தினர். அவர்களின் இருதயம் விசுவாசத்துடனோ அல்லது அன்புடனோ இல்லாது இருக்கும் வேளையில் அவர்கள் சடங்குகளை ஆசரிப்பதில் தேவன் பிரியமாக இருக்கவில்லை (ஆமோஸ் 5:21-27). பலிகள் சுட்டெரிக்கப்பட்டதன் அடையாளம் - அவர்கள் பாவம் கழுவப்பட வேண்டும் என்ற ஆராதிப்பவரின் விருப்பத்தையும், அவர்கள் தேவனுக்கு முன் ஏறெடுக்கும் மெய்ஆராதனையின் சுகந்த வாசனை மேலே எழும்புவதைக் குறிக்கிறது. அவர்கள் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய பிரமாணங்களுக்கு எவ்வளவு தூரம் துல்லியமாக கீழ்ப்படிய வேண்டும் என்பதை அவர்களுக்கு கற்றுக் கொடுக்க மற்றும் அவரது வார்த்தையின் ஒவ்வொரு தனிச்சிறப்பிற்கும் அவர்கள் மதிப்பு அளிக்க வழிவகுக்கும் என்பதே, சடங்குகள் செய்வதில் எண்ணற்ற விபரங்களைத் துல்லியமாக தந்திருப்பதின் காரணம்.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*இஸ்ரவேலர் தேவனை எப்படி ஆராதிக்க வேண்டும் என்பதற்கான பாடபுத்தகமாகவும் பழைய உடன்படிக்கையின் ஆசரிப்பு முறைகளைச் சொல்லும் இறையியல் புத்தகமாகவும் லேவியராகம புத்தகம் இருக்கிறது. மோசே இந்த புத்தகத்தை எழுதினபோது அந்த நாட்களில் இருந்த சில வரலாற்று உண்மைகள் தெரிந்திருக்கும் என கருதுவதாக எடுத்துக் கொண்டு எழுதினபடியால், இந்நாட்களில் இதில் சொல்லப்பட்டிருக்கும் சடங்குகள், நியாயப்பிரமாணங்கள் ஏனைய சம்பிரதாயங்களுக்கு*

கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்தைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது. விரிவான விளக்கத்தை நாம் ஒருவழியாக புரிந்து கொண்டபின், திருச்சபையில் இருக்கும் விசுவாசிகள் இதற்கு எப்படி பதில் அளிக்க வேண்டும் என்பது அடுத்துவரும் கேள்வி. ஏனென்றால், சடங்குகளின் பிரமாணம், (அப் 10:1-16; கொலோ 2:16,17), லேவியர்களின் ஆசாரியத்துவம் (1பேதுரு 2:9; வெளி.1:6; 5:10; 20:6), பரிசுத்தஸ்தலம் (மத்தேயு 27:51) போன்றவற்றை தெளிவாக, புதியஏற்பாடு ரத்து செய்கிறது; அதேநேரத்தில், புதிய உடன்படிக்கையையும் நிறுவுகிறது. (மத்.26:28; 2கொரி.3:6-8; எபிரேயர்7-10). பழைய சடங்குகளை கடைபிடிக்க அல்லது அதற்குள் என்ன ஆழமான ஆவிக்குரிய சத்தியம் இருக்கிறது எனத் தேட முயற்சிப்பதற்குப் பதிலாக, அவற்றில் மறைந்திருக்கும் பரிசுத்த மற்றும் தெய்வீக குணங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதினால் தான் - மோசே அடிக்கடி "தேவனுடைய அடிப்படை நோக்கம் "பரிசுத்தமே", சடங்குகளை ஆசரிப்பது அல்ல என பல இடங்களில் சுட்டிக்காட்டுகிறார். சடங்குகளில் வேரூன்றி இருக்கும் நியதிகள் காலத்தைக் கடந்தவை - ஏனென்றால் அவை தேவனுடைய இயல்பினோடு புதைந்துள்ளன. தெளிவாக பெந்தெகோஸ்தே நாளுக்குப் பின்வரும் நாட்களில் இருந்து (அப்.2), திருச்சபையானது புதிய உடன்படிக்கையின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறது, பழைய உடன்படிக்கைக்கு கீழ் அல்ல என புதியஏற்பாடு வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.

இந்த புத்தகத்தின் தனிச்சிறப்புக்களில் இருந்து புதியஏற்பாட்டு ஆசிரியர்கள் எடுத்துக் காட்டும் ஆசரிப்புக்கூடாரம் மற்றும் அதன் சடங்கு சம்பிரதயங்களின் வகைப்பாடு, ஒப்புமை போன்றவற்றை பயன்படுத்தி, கிறிஸ்துவை குறித்து பயனுள்ள பாடங்களையும், புதியஏற்பாட்டின் உண்மைநிலைப்பாட்டையும் அறிவது என்பது விளக்கம் அளிப்பவருக்கு முன் இருக்கும் சவாலாகும். கிறிஸ்துவிற்கும் அவரது மீட்பின் செயலுக்கும்

*முன்னடையாளமாக (எபி.10:1) சடங்குகளின் பிரமாணம் இருந்ததே அல்லாமல், அதைவிட்டுவிட்டு அதிகப்படியான ஆராய்ச்சியினை இதில் மேற்கொள்வதை தவிர்க்க வேண்டும். புதியஏற்பாட்டு ஆசிரியர்கள் எந்த வகைப்பாடுகள் கிறிஸ்துவிற்குப் பொருந்துகின்றன எனச் சொல்லியிருக்கிறார்களோ அவைகளை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். (உதாரணமாக, 1கொரி.5:7; "கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே").*

*லேவியராகமத்தில் இருந்து நாம் படித்துக் கொள்ளும் மிகப் பயனுள்ள படிப்பினை என்னவென்றால்: பாவம், குற்ற உணர்ச்சி, பதிலீடாக மரித்தல், பரிகாரம் போன்றவற்றைக் குறித்த சத்தியத்தைப் புரிந்துகொள்கிறோம். பழையஏற்பாட்டின் வேறு எந்த வேதவசனமும் இவ்வளவு அழகாக உதாரணத்துடன் இந்த சத்தியத்தின் அம்சத்திற்கு விளக்கம் தருவதில்லை. பின்நாட்களில் வரும் பழைய ஏற்பாட்டு ஆசிரியர்களும் விசேஷமாக புதியஏற்பாட்டு ஆசிரியர்கள், லேவியராகமம் அமைத்துள்ள அஸ்திபாரத்தினை புரிந்துகொண்டு அதன் அடிப்படையிலேயே கட்டியெழுப்பியுள்ளார்கள். லேவியராகமத்தின் கண்ணோட்டதில் இருந்து இறுதியாக பலிசெலுத்துதலின் தனிச்சிறப்பைப் புரிந்துகொண்டு, இயேசு கிறிஸ்து ஒரே தரம் மனுக்குலத்திற்கு பதிலீடாக மரித்து நிறைவேற்றினார் என்பதை திட்டவட்டமாகச் சுட்டிக்காட்டுகின்றனர்.*

***சுருக்கம்:***

*லேவியராகமம் **1-16** அதிகாரங்க்கள் தேவனுக்குப் பொருத்தமான ஆராதனையின் மூலமாக, தனிப்பட்ட விதத்தில் தேவனை எப்படி அணுக முடியும் என்பதை விளக்குகிறது. லேவியராகமம் **17-27** அதிகாரங்கள் தேவன் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆவிக்குரிய மற்றும் கீழ்ப்படிதலான வாழ்க்கை எப்படி வாழ முடியும் என்பதனை விளக்குகிறது.*

# எண்ணாகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் நான்காம் புத்தகம்

***தலைப்பு:***

*Numbers (எண்ணாகமம்) என்னும் ஆங்கில தலைப்பு கிரேக்க (LXX) மற்றும் லத்தீன் (Vg.) பதிப்புகளில் இருந்து வருகிறது. 1-4 மற்றும் 26-ம் அதிகாரங்களில் எண்ணித் தொகையேற்றுதலுக்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டதால் இப்பெயர் பெற்றது. எபிரேய வேதாகமத்தின் முதல் அதிகாரம், முதல் வசனத்தின் ஐந்தாம் வார்த்தை "வனாந்திரத்திலிருக்கிற" என்பதில் இருந்து பொதுவாக வழக்கத்தில் இருக்கும் பெயர் பெறப்பட்டது. வனாந்திரத்தில் அலைந்து திரிந்தனர் என்பதைக் காட்டிலும் அதிக விளக்கத்தை இப்பெயர் தருகிறது. மற்றொரு எபிரேய தலைப்பு, ஆதித்திருச்சபை போதகர்களால் ஆதரிக்கப்பட்டது - எபிரேய பதிப்பின் 1:1ன் முதல் வார்த்தை "கர்த்தர் பேசினார்" என்பதனை அடிப்படையாகக் கொண்டது. இந்த தலைப்பு இஸ்ரவேலுக்கு தேவன் தந்த வார்த்தையை பதிவுசெய்துள்ளது என்பதை வலியுறுத்துகிறது.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*நியாயப்பிரமாண புத்தகங்கள் என்று அழைக்கப்படும் வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களின் வரிசையில் எண்ணாகம புத்தகம் நான்காவதாக வருகிறது. இதன் ஆசிரியர் மோசே என்பதை வேதவாக்கியங்களில் காணலாம். (யோசுவா 8:31; 2இரா. 14:6; நெகேமியா 8:1; மாற்கு 12:26; யோவான் 7:19). எண்ணாகம புத்தகத்திலேயே 33:2 மற்றும் 36:13 ஆகிய வசனங்களில் "மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே .... எழுதினான்) என்று காண்கிறோம்.*

*மோசேயின் வாழ்க்கையின் இறுதிகாலங்களில் எண்ணாகம புத்தகம் எழுதப்பட்டது. எகிப்தில் இருந்து வெளியேறி 40 வருடங்களுக்கு பிறகு 20:1-லிருந்து புத்தகத்தின் முடிவு வரை காணப்படும் சம்பவங்கள் நிறைவேறுகின்றன. எரிகோவை கடந்து யோர்தான் நதியின் கிழக்கு பக்கத்தில் இஸ்ரவேல் தயாராக இருப்பதோடு சம்பவங்கள் முடிவடைகின்றன (36:13), இங்கு தான் கானான் தேசத்தின் மீது பெறும் வெற்றி (யோசுவா 3-6) தொடங்குகிறது. எண்ணாகம புத்தகம் உபாகமம் புத்தகத்திற்கு அடிப்படையாக இருக்கிறது. உபகாமம் புத்தகம் எழுதிய காலகட்டம் எகிப்திலிருந்து வெளியேறியதில் இருந்து 40-வது வருடத்தின் 11-வது மாதத்தில் (உபாகமம் 1:3) என்று இருக்கிறபடியால், எண்ணாகம புத்தகம் எழுதப்பட்ட காலம் கிமு 1405-ஆக இருக்க வேண்டும்.*

## *பின்னணி மற்றும் அமைப்பு*

*புத்தகத்தின் அனேக சம்பவங்கள் ''வனாந்திரத்தில்'' நிறைவேறின. எண்ணாகம புத்தகத்தில் "வனாந்திரம்" என்னும் வார்த்தை 48 தடவை பயன்பட்டுள்ளது. சிறிய தாவரங்கள் மற்றும் மரங்கள் இருக்ககூடிய நிலப்பகுதியை இவ்வார்த்தை குறிக்கிறது; தொடர்ச்சியான மழைப்பொழிவு இல்லாததால், பயிர் சாகுபடி செய்ய முடியாது. இந்த நிலப்பகுதி விலங்குகளின் மேய்ச்சலுக்கு சிறப்பாக பயன்பட்டது. வசனம் 1:1-10:10, ''சீனாய் வனாந்திரத்தில் இஸ்ரவேலர் கூடாரமிட்டு தங்கியிருந்தனர்'' என்று பார்க்கிறோம். சீனாய் வனாந்திரப்பகுதியில் தான் இஸ்ரவேலருடன் கர்த்தர் "மோசேயின் உடன்படிக்கையை" ஏற்படுத்தினார் (யாத்.19-24). வசனங்கள் 10:11 - 12:16-ல், இஸ்ரவேலர் சீனாய் வனாந்திரப்பகுதியில் இருந்து காதேஸ் வனாந்திரத்திற்கு பிரயாணப்பட்டனர் என்பதைப் பார்க்கிறோம். வசனங்கள் 13:1 - 20:13-ல் நிறைவேறின சம்பவங்கள் யாவும் காதேசை சுற்றியுள்ள ''பாரான் வனாந்திரப்பகுதிகள்'' (12:16;*

*13:3,26),* "*சீன் வனாந்திரப்பகுதிகளில்*" *(13:21; 20:1, 20:14 - 22:1) நிறைவேறின என்று பார்க்கிறோம். 20:4 -22:1 வசனங்களில், இஸ்ரவேல் மக்கள் காதேஸில் இருந்து புறப்பட்டு "மோவாபின் சமனான வெளிகளில்" பாளயமிறங்கினார்கள் என்று பார்க்கிறோம். 22:2 - 36:13-அல் சொல்லப்பட்டுள்ள அனைத்து சம்பவங்களும் இஸ்ரவேல் மக்கள் மோவாபின் வடக்கு பகுதியில் முகாமிட்டு இருந்த போது சம்பவித்தது. சமனானபகுதி என்பது தரிசுநிலத்தில் தட்டையானதாகவும் வளமானதாகவும் இருக்கும் பகுதியாகும் (21:20; 23:28; 24:1).*

*எகிப்தை விட்டு இஸ்ரவேல் ஜனங்கள் வெளியேறினபின் இரண்டாம் மற்றும் நாற்பதாவது வருடத்தில் நடைபெறும் சம்பவங்களில் எண்ணாகம புத்தகம் கவனம் செலுத்துகிறது. இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியேறியபின் கி.மு. 1445-வில் நிறைவேறின சம்பவங்கள் 1:1 - 14:45 வசனங்களில் குறிக்கப்பட்டுள்ளன. 15:1 - 19:22-ல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்களுக்கு தேதியிடவில்லை; ஒருவேளை கி.மு 1406/1405-ல் அதாவது எகிப்தில் இருந்து வெளியேறியதில் இருந்து 40-வது ஆண்டில் அனைத்தும் நிறைவேறி இருக்கலாம். 15:1 - 19:22-ல் காணும் சம்பவங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு தேதியிடவில்லை. ஒருவேளை கி.மு. 1443-ல் இருந்து கிமு 1407 கால இடைவெளிக்குள் எனக் குறிக்கலாம். எகிப்தில் இருந்து கானான் வரை பிரயாணம் செய்த காலகட்டத்தில் - ஏனைய ஆண்டுகளை ஒப்பிடும் போது இந்த 37 ஆண்டுகளில் நடந்தவைகளுக்கு குறிப்பு இல்லாது இருப்பது - இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாக கலகம் செய்ததினால், அதனிமித்தம் விளைந்த நியாயத்தீர்ப்பினால் இத்தனை ஆண்டுகளை வீணாக்கினர்கள் என்று அறிகிறோம்.*

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*இஸ்ரவேல் தேசத்தாரின் இரண்டு தலைமுறையினரின் அனுபவங்களை எண்ணாகமம் வரிசைப்படுத்துகிறது. முதல் தலைமுறையினர் எகிப்தில் இருந்து வெளியேறிய சம்பவத்தில் பங்கேற்றனர், இவர்களின் அனுபவம் யாத்திராகமம் 2:23ல் தொடங்கி லேவியராகமம் ஊடாக கடந்துசென்று எண்ணாகமத்தின் முதல் 14 அத்தியாயங்கள் வரை தொடர்கிறது. வம்சங்களிலுள்ள புருஷர்களின் தலைகள் எண்ணப்பட்டு கானானை (1:1-46) மேற்கொள்ளும் யுத்தத்திற்கு என்று தொகையேற்றப்பட்டது. ஆனாலும், ஜனங்கள் கானானின் தென் முனைக்கு வந்த போது, கானான் தேசத்துக்குள் பிரவேசிக்க மறுத்தார்கள் (14:1-10). அவர்கள் கர்த்தருக்கு விரோதமாக கலகம் செய்தபடியால், 20 வயது முதல் மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் (யோசுவா மற்றும் காலேப்) தவிர அனைவரும் வனாந்திரத்தில் மடிந்து விழுந்தனர் (14:26-38). 15-25 அதிகாரங்களில், முதல் மற்றும் இரண்டாம் தலைமுறையினர் ஒன்றுடன் ஒன்று கலக்கின்றனர்; முதல் தலைமுறையினர் மரிப்பதும் இரண்டம் தலைமுறையினர் பெரியவர்களாக வளருவதையும் காண்கிறோம். இரண்டாம் தலைமுறையினரின் காலத்தில் இருபது வயது முதல் அதற்கு மேற்பட்ட இஸ்ரவேலிலே யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களின் எண்ணப்படுதல் ஆரம்பிப்பதை 26:1-56 வசனங்களில் காண்கிறோம். எண்ணாகமம் 26:1-ல் தொடங்கும் இந்த இரண்டாம் தலைமுறையினர் குறித்த சம்பவங்கள் உபாகமம் மற்றும் யோசுவா புத்தகங்களின் ஊடாகக் கடந்து செல்கிறது.*

## எண்ணாகம புத்தகத்தில் மூன்று இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள் ஊடுருவிச் செல்கின்றன.

*முதலாம் கருப்பொருள்: கர்த்தர் தாமே மோசேயின் மூலமாக (1:1; 7:89, 12:6-8) பேசினார், அதினால் மோசேயின் வார்த்தைகள் தேவனின் அதிகாரத்தைக் கொண்டிருந்தன.*

*மோசேயின் வார்த்தைகளுக்கு இஸ்ரவேல் தேசத்து மக்கள் அளித்த பதிலில் அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறார்களா அல்லது கீழ்ப்படியவில்லையா என்பது பிரதிபலித்தது. கர்த்தருடைய வார்த்தைக்கு இஸ்ரவேலர் எப்படியாக பதில் அளித்தனர் என்பதன் அடிப்படையில் எண்ணாகம புத்தகம் நன்கு வரையறுக்கப்பட்ட மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. கீழ்ப்படிதல் (அதிகாரம் **1-10**), கீழ்ப்படியாமை (அதிகாரம் **11-25**), மறுபடியும் புதுப்பித்த கீழ்ப்படிதல் (அதிகாரம் **26-36**).*

*இரண்டாம் கருப்பொருள்: கர்த்தர் நியாயம் தீர்க்கும் தேவன். எண்ணாகம புத்தகம் முழுவதும் இஸ்ரவேலரின் பாவத்தினிமித்தம் கர்த்தருடைய "கோபம்" மூண்டது எனக் காண்கிறோம் (**11:1,10,33; 12:9; 14:18; 25:3,4; 32:10,13,14**).*

*மூன்றாம் கருப்பொருள்: ஆபிரகாமின் வித்திற்கு, கானான் தேசத்தை தந்திடுவேன் என்ற வாக்குதத்தம், கர்த்தர் வாக்கு பண்ணினதில் உறுதியாக இருந்தார் என்பதை வலியுறுத்தப்படுகிறது (**15:2; 26:52-56; 27:12; 33:50-56; 34:1-29**).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*எண்ணாகமம் புத்தகத்தை வாசிப்பவருக்கு விளக்கமளிப்பதில் நான்கு பெரிய சவால்கள் உள்ளன.. முதலாவது, எண்ணாகம புத்தகம் தனிப்பட்ட புத்தகமா அல்லது ஐந்து ஆகம புத்தகங்களில் ஒன்றா? என்ற கேள்வி. வேதாகமத்தின் தோரா என்னும் தோல்சுருள் - ஆகமபுத்தகங்களான, ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் உபாகமம் என்னும் - இந்த ஐந்து புத்தகங்களை உள்ளடக்கியது. வேதவாக்கியங்களின் ஏனைய அனைத்து புத்தகங்களும் இந்த ஐந்து புத்தகங்களை - ஒரே தொகுப்பாக காண்கின்றன. ஐந்து ஆகம புத்தகங்களின் (Pentateuch) பிண்ணனி/சூழலை தவிர்த்து விட்டு எண்ணாகமத்தை முழுமையாகப் புரிந்துகொள்ள*

முடியாது. இந்த புத்தகத்தின் முதல் வசனம் கர்த்தர், மோசே, ஆசரிப்புக்கூடாரம் மற்றும் இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டதைக் குறித்து பேசுகிறது. வாசிப்பவர் எண்ணாகம புத்தகத்திற்கு முன் உள்ள மூன்று ஆகம புத்தகங்களில் பழக்கமானவராக இருக்கிறார் என்பதைக் கருத்தில் எடுத்துக்கொள்கிறது. கிடைக்கப்பெறும் ஒவ்வொரு எபிரேய கையெழுத்துப் பிரதியும், இன்றைய நாட்களில் ஐந்தாகம புத்தகங்கள் எப்படி பிரிக்கப்பட்டு இருக்கின்றனவோ அதேவரிசையில் ஐந்து புத்தகங்களையும் பிரித்து வரிசைப்படுத்தி உள்ளன. இப்புத்தகங்களில் எண்ணாகம புத்தகம் நன்கு வரையறுக்கப்பட்டு தனக்கே உரிய விதத்தில் கட்டமைப்பில் ஒருமைப்பாட்டுடன் விளங்குகிறது. அது ஏனைய புத்தகங்களின் ஊடாக இருந்து செயல்படுவதாக இருந்தாலும், அதற்கென்று ஆரம்பம், இடைப்பட்ட மற்றும் இறுதி பிரிவு என்ற தெளிவான பிரிவைக் கொண்டுள்ளது. இதனால் தான் எண்ணாகமம் புத்தகத்தை தனிபுத்தகத்தகமாக அடையாளப்படுத்திப் பார்க்கின்றனர்.

விளக்கம் அளிப்பதில் கேட்கப்படும் இரண்டாவது கேள்வி, எண்ணாகம புத்தகத்தில் ஒத்திசைவு இருக்கிறதா? என்பதே. எண்ணாகமம் புத்தகத்தில் பலதரப்பட்ட இலக்கியங்கள் மற்றும் வடிவங்கள் இருக்கின்றன என்பதை எளிதில் கண்டுகொள்ளலாம். மக்கள்தொகை வரிசைகள், வம்சவரலாறுகள், பிரமாணங்கள், வரலாற்று கதைகள், கவிதை, தீர்க்கதரிசனம் மற்றும் பிரயாண பட்டியல்கள் - என பல செய்திகள் இப்புத்தகத்தில் காணக் கிடைக்கின்றன. ஆனாலும், சீனாய் மலையில் இருந்து மோவாப் சமவெளி வரை சென்ற இஸ்ரவேலரின் பிரயாணத்தை இவைகள் ஒன்றுக்குள்ஒன்றாக கலந்து கூறுகின்றன. எண்ணாகமத்தில் உள்ள ஒத்திசைவை கீழ்க்காணும் சுருக்கத்தில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

*மூன்றாம் கேள்வி, இஸ்ரவேலரின் மாபெரும் மக்கள் தொகை 1:46 மற்றும் 26:51 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இஸ்ரவேலில் யுத்தம் செய்யவல்ல மனிதரின் எண்ணிக்கை இரண்டுமுறை 39 வருட இடைவெளியில் கணக்கிடப்பட்டு இரண்டு முறையும் எண்ணிக்கை 6,00,000க்கும் மேல் எனக் கண்டறியப்பட்டது. இவ்வளவு எண்ணிக்கையில் யுத்தவல்ல மனிதர் இருந்தனர் எனக் கண்டறியப்பட வேண்டுமானால், இஸ்ரவேல் தேசத்து மக்களின் மொத்த ஜனத்தொகை எப்பொழுதும் 25 இலட்சக்கும் அதிகமாக இருந்திருக்க வேண்டும். இயற்கையான கண்ணோட்டத்தில் பார்ப்போமானால், வனாந்திர வெளி இவ்வளவு பெரிய ஜனக் கூட்டம் வாழ்வதற்கு ஏற்றதாக இருந்திருக்காது. ஆனாலும், கர்த்தர் தாமே இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் இஸ்ரவேல் ஜனத்தை 40 வருடங்கள் (உபா.8:1-5) பராமரித்தார் என்பதை நாம் கண்டுகொள்ள முடியும். எனவே மிகப்பெரிய தொகையை அப்படியே முகமதிப்பில் எடுத்துக் கொள்ள வேண்டும்.*

*விளக்கம் அளிப்பதில் உள்ள நான்காவது சவால் புறஜாதியாரின் தீர்க்கதரிசி பாலாம்; இவரைப் பற்றி வசனம் 22:2 - 24:25 ல் காண்கிறோம். நான் கர்த்தரை அறிவேன் என பாலாம் உரிமை பாராட்டினாலும் (22:18) வேதவாக்கியங்கள் இவர் கள்ள தீர்க்கதரிசி (2பேது 2:15,16; யூதா 11) என்றே தொடர்ச்சியாகக் கூறுகிறது. கர்த்தர் தாம் பேச வேண்டிய வார்த்தைகளை பாலாம் வாயில் அவர் தாமே பாலாமின் வாயில் போட்டு அவரின் வாயாக மட்டுமே அவரைப் பயன்படுத்தினார்.*

*[H2[புத்தகத்தின் சுருக்கம்*

## *I* இஸ்ரவேல் தேசத்து முதல் தலைமுறையினரின் வனாந்திர அனுபவம்: *(1:1 - 25:18)*

*அ. இஸ்ரவேலர் கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் (1:1 - 10:36)*

*1. கர்த்தரின் ஆசரிப்புக் கூடாரத்தைச் சுற்றி இஸ்ரவேலர் ஒன்றுசேர்தல் (1:1-6:27)*

*2. கர்த்தருடைய ஆசரிப்புக் கூடாரத்தின் நிலைப்பாட்டிற்கு தக்கவாறு அமைத்துக் கொள்ளுதல் (7:1 -10:36)*

*ஆ. இஸ்ரவேலர் கர்த்தருக்குக் கீழ்ப்படியாதிருத்தல் (11:1 - 25:18)*

*இஸ்ரவேலர் வழிப்பிரயாணத்தின் போது குறைகூறுதல் (11:1-12:16)*

*2. காதேஸ் பகுதியில் இஸ்ரவேல் ஜனங்களும் அதின் தலைவர்களும் கலகம் செய்தல் (13:1 -20:29)*

**இஸ்ரவேலர் கலகம் செய்ததும் அதன் விளைவுகளும் (13:1-19:22)*

**மோசே மற்றும் ஆரோனின் எதிர்ப்பு மற்றும் அதன் விளைவுகள் (20:1-29)*

*3. புதுப்பிக்கப்பட்ட இஸ்ரவேலரின் கலகம் (21:1 - 22:1)*

*4. இஸ்ரவேலரை பாலாம் ஆசீர்வதித்தல் (22:2 -24:25)*

*5. பாகால்பேயோரைப் பற்றிக்கொள்ளுதலால் இஸ்ரவேலர் மீது கர்த்தருடைய கோபம். (25:1-18)*

*[H3[II இஸ்ரவேல் தேசத்து இரண்டாம் தலைமுறையினரின் மோவாப் சமவெளி அனுபவம்:*

*கர்த்தரிடத்தில் இஸ்ரவேலர் தங்கள் கீழ்ப்படிதலைப் புதுப்பித்துக் கொள்ளுதல். (26:1 - 36:13)*

*அ. தேசத்தைக் கைப்பற்ற ஆயத்தப்படுதல் (26:1 - 32:42)*

*ஆ. வனாந்திரத்தில் பிரயாணம் குறித்து மதிப்பாய்வு செய்தல் (33:1-49)*

*இ. தேசத்தைச் சுதந்தரிக்கும்படி எதிர்பார்த்தல் (33:50 - 36:13)*

# உபாகமம் - என்று அழைக்கப்படும் மோசேயின் ஐந்தாம் புத்தகம்

**தலைப்பு:**

*Deuteronomy என்னும் ஆங்கில தலைப்பு தமிழ் உபாகமம் 17:20 வசனத்தில் "நியாயப்பிரமாண நூலைப் பார்த்து, தனக்காக ஒர் பிரதியை எடுத்து" என்று வரும் வார்த்தைகள் "இரண்டாம் நியாயப்பிரமாணம்" என கிரேக்க செப்டுவகஜிண்டில் (LXX) தவறாக மொழிபெயர்த்ததினால், அதற்கு "Deuteronomium" என்ற பெயரை - லத்தீனின் பதிப்பு (வுல்கேட்) வழங்கியது. முதல் இரண்டு வார்த்தைகளான, "சொல்லப்பட்ட வார்த்தைகள்" என்பதில் இருந்து எபிரேய புத்தகத்தின் தலைப்பு பெறப்பட்டது. இது இரண்டாம் நியாயப்பிரமானமாக இல்லாமல், நியாயப்பிரமாணத்தைக் குறித்து மோசே பேசிய வார்த்தைகளை - குறிப்பெடுத்து வைத்த புத்தகமாக இருக்கிறபடியால், எபிரேயத் தலைப்பு இப்புத்தகத்திற்கு சிறப்பான தலைப்பாக அமைந்துள்ளது. இலக்கிய அமைப்பில் ஐந்து பாகங்களாக அமையப்பெற்ற ஐந்து-ஆகம (Pentateuch) புத்தகங்களை நிறைவு செய்வதாக உபாகமம் புத்தகம் இருக்கிறது.*

*[H2[ஆசிரியர் மற்றும் தேதி:*

*மோசே தான் இப்புத்தகத்தை எழுதினார் என்பதற்கு இந்த புத்தகமே சாட்சியாக நிற்கிறது (1:15; 31:9; 22:24). பழைய ஏற்பாடும் (1ராஜா.2:3; 8:53; 2ராஜா. 14:6; 18:12) புதிய ஏற்பாடும் (அப்.3:22,23; ரோமர் 10:19) மோசே தான் இதன் ஆசிரியர் என்னும் உரிமை பாரட்டுதலை ஆதரிக்கின்றன. உபாகமம் 32:48 -34:12 வசனங்கள் மோசே மரித்த பிறகு (ஒருவேளை யோசுவா சேர்த்திருப்பார் எனக் கருதப்படுகிறது),*

*புத்தகத்தின் ஏனைய பகுதிகள் மோசேயின் கைகளினால் கி.மு. 1405-ல் அவர் மரிப்பதற்கு முன்பு எழுதப்பட்டது.*

*எகிப்தில் இருந்து இஸ்ரவேல் ஜனங்கள் வெளியேறிய - 40-வது வருஷம் 11-வது மாதம் முதல் தேதியில் (1:4) இருந்து ஆரம்பித்து, இஸ்ரவேல் ஜனத்தாரிடம் மோசே 120 வயதில் விடைபெறுவதற்கு முன் பேசின பேச்சுக்களின் தொகுப்பாகவே இப்புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதி இருக்கிறது. இந்த பேச்சுக்களின் நிகழ்வு ஜனவரி-பிப்ரவரி, கி.மு.1405 எனத் தேதியிடப்படலாம். மோசேயின் வாழ்க்கையின் இறுதிகால கட்டத்தில் இப்பேச்சுக்களுக்கு எழுத்துவடிவம் தந்து, இஸ்ரவேலின் வருங்கால சந்ததியினரிடம் சென்று அடையும்படிக்கு ஆசாரியர்கள் மற்றும் மூப்பர்கள் கரங்களில் தரப்பட்டது.*

## *பிண்ணனி மற்றும் அமைப்பு:*

*வரலாற்றின் காலகட்டத்தில் லேவியராகம புத்தகம் செல்வதைப் போல் இப்புத்தகம் முன்னேறிச் செல்லவில்லை. முழுவதும் ஒரே இடத்தில் ஏறக்குறைய ஒரு மாத கால அவகாசத்தில் இப்புத்தகத்தில் உள்ள சமபவங்கள் அனைத்தும் நிறைவேறின. (உபா.1:3, உபா 34:8 மற்றும் யோசுவா 5:6-12). யோர்தானின் இக்கரையான வனாந்திரத்தின் சமனான வெளியிலே கூடாரமிட்டு (உபா.1:1) இருந்த வேளை அது. எண்ணாகமம் 36:13-ல் இந்த இடம் - அர்னோன் நதியின் கிழக்குபகுதி - எரிகோவின் அருகே யோர்தானுக்கு இப்புறத்திலுள்ள "மோவாபின் சமனானவெளியில்" கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்கு விதித்த கட்டளைகளும் நியாயங்களும் இவைகளே" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறிய வருடத்தில் இருந்து ஏறக்குறைய 40 வருடங்கள் கழித்து எழுதப்பட்ட புத்தகம் ஆகும்.*

உபாகமம் புத்தகம் மோசேயின் வாழ்க்கையின் இறுதி வாரங்களில் நிறைவேறின சம்பவங்களில் அதிக கவனம் செலுத்துகிறது. முக்கியச் சம்பவமாக - இஸ்ரவேல் ஜனங்களுக்கு தெய்வீக வெளிப்பாடாக - கர்த்தர் மோசேயின் மூலமாக பேசின வசனங்களைச் சொல்லலாம் (1:1-30:20; 31:30-32:47; 33:1-29). இதைத் தவிர இப்புத்தகத்தில் காணப்படும் இதர சம்பவங்கள்: 1) மோசே நியாயப்பிரமாணத்தை புத்தகமாக குறித்து வைப்பதும், யோசுவாவை புதிய தலைவனாக நியமிப்பதும் (31:1-29); 2) நேபோ பர்வதத்தில் இருந்து மோசே கானான் தேசத்தைப் பார்த்தல் (32:48-52; 34:1-4); மற்றும் 3) மோசே மரித்தல் (34:5-12).

வாய்வழியாகவும் எழுத்து ஆக்கமாகவும் மூலமுதலான உபாகமம் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் - இஸ்ரவேல் தேசத்தின் இரண்டாம் தலைமுறையினர். அந்த தலைமுறையினரின் 40-ல் முதல் 60 வயது வரை இருந்தவர்கள் - எகிப்தில் பிறந்தவர்கள்; 40 வயதைக்காட்டிலும் குறைவாக இருந்தவர்கள் எகிப்தில் இருந்து வெளியேறின போது குழந்தைகளாக அல்லது பதின்ம வயதினராக இருந்தவர்கள். (யோசுவாவும் காலேபும் தவிர, அவர்கள் வயதில் மூத்தவர்கள்). 40 வயதிற்கும் குறைவான வயதில் இருந்தவர்கள், வனாந்திரத்தில் பிறந்து அதில் வளர்ந்தவர்கள். அனைவரையும் சேர்த்து பார்க்கும் போது, எகிப்தை விட்டு வெளியேறிய 40-வது வருடத்திற்கு பிறகு, இவர்கள் யாவரும் யோசுவாவின் தலைமையின்கீழ் கானான் தேசத்தை சுதந்தரிக்க இருந்த தலைமுறையினர் என்பதில் அடங்கும் (1:34-39).

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்:

லேவியராகமத்தைப் போல, உபாகமபுத்தகம் சட்டப்படியான விபரங்களை உள்ளடக்கியது, ஆனால் இப்புத்தகத்தில்

சொல்லமுத்தம் ஆசாரியர்களுக்கு அளிக்கப்படுவதைக் காட்டிலும் மக்களுக்கு அதிகம் தரப்பட்டுள்ளது. இஸ்ரவேலின் இரண்டாம் தலைமுறையினரிடம் - கர்த்தரை விசுவாசித்து, ஓரேப் (சீனாய்) மலையில் தேவன் செய்த உடன்படிக்கைக்கு கீழ்ப்படியுங்கள் என்று அழைப்பு விடுத்த போது, இஸ்ரவேலின் கடந்த கால வரலாற்றில் நடைபெற்ற சில சம்பவங்களைச் சுட்டிக்காட்டி அவரது கருத்திற்கு மோசே விளக்கம் அளித்தார். ஒரேபில் (9:7-10:11) காதேஸில் (1:26-46) இஸ்ரவேல் கர்த்தருக்கு விரோதமாக கலகம் செய்தது - அழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தினது என்பதை நினைப்பூட்டினார். கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருக்களின் மீது ஜெயம் பெறச்செய்து எவ்வளவு தூரம் சொல்லுறுதி உடையவராக இருந்தார் என்பதையும் நினைவுபடுத்தினார் (2:24 - 3:11; 29:2,7,8). மிக முக்கியமாக, அவர்களின் முற்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு தேவன் வாக்குபண்ணியிருந்த தேசத்தை, ஜனங்கள் சுதந்தரித்துக் கொள்ள அழைப்பு விடுத்தார் (1:8; 6:10;9:5;29:13;30:20; 34:4; உறுதிபடுத்த, ஆதியாகமம் 15:18-21;26:3-5; 35:12 பார்க்கவும்). மோசே கடந்த காலத்தை திரும்பி பார்த்ததும் அல்லாமல், அவர் இஸ்ரவேலின் எதிர்காலத்தையும் கண்டு - அதில் இஸ்ரவேல் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போவது - இஸ்ரவேல் தேசங்களின் நடுவில், கர்த்தர் அவர்களின் முற்பிதாக்களுக்குச் செய்த உடன்படிக்கை நிறைவேறுவதற்கு முன்பதாக - எப்படி சிதறுண்டு செல்லும் என்பதையும் மோசே கண்டார் (4:25-31; 29:22-30:10; 31:26-29).

உபாகமம் புத்தகம் சங்கீதம் மற்றும் ஏசாயா உடன் இணைந்து, தேவனின் பண்புகளை அதிகமாக வெளிப்படுத்துகிறது. இதினால், இப்புத்தகம் புதிய ஏற்பாட்டில் 40 தடவைக்கும் மேலாக புதிய ஏற்பாட்டில் உள்ள உள்ளடக்கத்திற்கு நேரடி உதவியாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது (சங்கீதம் மற்றும் ஏசாயா இதனிலும் அதிகம்). உபாகமம் கர்த்தர் ஒருவரே தேவன்

*(4:39;6:4)* என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும், அவர் எரிச்சலுள்ள தேவன் *(4:24)* உடன்படிக்கையையும் தயவையும் காக்கிற உண்மையுள்ள தேவன் *(7:9)*, அன்பு வைப்பவர் *(7:13)*, இரக்கமுள்ளவர் *(4:31)* ஆனாலும் பாவத்தைக்கண்டு எரிச்சலடைகிறவர் *(6:15)*. இந்த தேவனே இஸ்ரவேல் தேசத்தை தம்மிடம் வரும்படி அழைத்தவர். "உன் தேவனாகிய கர்த்தர்" என்னும் வாக்கியத்தினை இஸ்ரவேலரிடம் மோசே 250 தடவைக்கும் மேலாக மீண்டும் மீண்டும் கூறுகிறார்.

இஸ்ரவேலர் கீழ்ப்படியும்படிக்கு அழைப்பைப் பெற்றனர் *(28:2)*, இஸ்ரவேலர் கர்த்தருக்குப் பயந்து *(10:12)*, அவர் வழிகளில் நடந்து, அவர் கற்பிக்கிற கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்வதினால் - இஸ்ரவேல் தன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூர்ந்து *(10:12)*, சேவிக்க *(10:12)* அழைக்கப்பட்டனர் *(10:12,13)*. அவருக்கு கீழ்ப்படிவதினால், இஸ்ரவேல் அவரது ஆசீர்வாதங்களைப் *(28:1-14)* பெறும். கீழ்ப்படிதலும், தனிப்பட்ட வாழ்க்கையின் பரிசுத்தத்தை காத்துக் கொள்வதும் - எப்பொழுதும் தேவனுடைய குணாதிசயத்தினை அடிப்படையாகக் கொண்டது. அவர் யாராக இருக்கிறாரோ, அவ்வண்ணமே அவருடைய ஜனங்களும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் *(7:6-11; 8:6;11,18; 10:12,16,17; 11:13; 13:3,4; 14:1,2)*.

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்:

உபாகமத்தை வாசிப்பவருக்கு, விளக்கம் அளிப்பதில் மூன்று சவால்கள் நிற்கின்றன. முதலாவது, உபாகம புத்தகம் தனிப்பட்ட புத்தகமா அல்லது ஐந்து ஆகம புத்தகங்களில் ஒன்றா? என்ற கேள்வி. வேதாகமத்தின் தோரா என்னும் தோல்சுருள் - ஆகமபுத்தகங்களான, ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் உபாகமம் என்னும் இந்த ஐந்து புத்தகங்களை உள்ளடக்கியது. வேதாகமத்தின் மற்ற

*புத்தகங்கள் இந்த ஐந்து புத்தகங்களை ஒரே தொகுப்பாக காண்கின்றன. ஐந்து ஆகம புத்தகங்களின் (Pentateuch) பிண்ணனி/சூழலை விட்டு பிரித்து, உபாகமத்தின் ஒட்டுமொத்த அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியாது. வாசிப்பவர் உபாகம புத்தகத்திற்கு முன் உள்ள நான்கு ஆகம புத்தகங்களில் பழக்கமானவராக இருக்கிறார் என்று கருத்தில் எடுத்துக்கொள்கிறது. ஆதியாகமத்தில் இருந்து எண்ணாகமம் வரை வெளிப்படுத்தப் பட்டவை அனைத்தையும் உபாகமம் கவனத்தில் எடுத்துக் கொள்வது மட்டுமல்ல, தேசத்தில் பிரவேசித்ததும், வெளிப்பாடுகளின் நோக்கத்தை மக்களின் கவனத்திற்கு கொண்டுவரவும் செய்கிறது. கிடைக்கப்பெறும் ஒவ்வொரு எபிரேய கையெழுத்துப் பிரதியும், ஐந்து ஆகம புத்தகங்கள் எப்படி பிரிக்கப்பட்டு இருக்கின்றனவோ அதேவரிசையில் - இன்றைய நாட்களிலும் ஐந்து புத்தகங்களையும் பிரித்து வரிசைப்படுத்தி இருப்பதன் மூலம் - அந்த வரிசையில் இந்த புத்தகம் இஸ்ரவேலுக்கு மோசே இறுதி நாட்களில் பேசின பேச்சுக்கள் ஒன்று சேர்த்த கட்டாக இருக்கிறது. அதே வேளையில், உபாகமம் - தனித்து மோசேயின் பேச்சுக்கள்-பதிவுகளின் தொகுதியாகவும் பார்க்கலாம்.*

*இரண்டாவது சவால், உபாகம புத்தகத்தின் வடிவமைப்பு மோசேயின் காலத்தில் இருந்த மதச்சார்பற்ற ஒப்பந்தங்களை அடிப்படையாக கொண்டு வடிவமைக்கப்பட்டதா? என்பது. வேதாகம வல்லுனர்கள் கடந்த 35 வருடங்களில், ஏறக்குறைய மோசே வாழ்ந்த காலத்தில், கிழக்கத்திய தேசங்களை ஆண்ட மன்னர்கள் மேற்கொண்ட ஒப்பந்தங்களுக்கும் உபாகம புத்தகத்தில் வடிவமைப்பிற்கும் ஒருமைப்பாடு இருப்பதால், அவற்றின் அடிப்படையாக கொண்டு மோசே எழுதியவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன என குறிப்பிடுகின்றனர். மதச்சார்பற்ற ஆதிக்கம் செலுத்தும் மன்னர்களின் ஒப்பந்தங்கள் (மன்னன் தன் அடிமைகளுக்கு தன் விருப்பங்களை எழுதுவது) கிறிஸ்துவுக்கு முன், மத்திய முதல் புத்தாயிரம் ஆண்டில் எழுதப்பட்ட மாதிரி*

வடிவங்களை பின்பற்றவில்லை. இந்த ஒப்பந்தங்களில் கீழ்க்காணும் பிரிவுகளைக் காணலாம். 1) முன்னுரை - நிபந்தனைகளுக்கு உட்படுவோரின் அடையாளம் 2) வரலாற்றுப்படியான முன்னுரை - மன்னர் தன் அடிமைகளைக் கையாள்வதின் வரலாறு 3) பொதுவான மற்றும் குறிப்பான நிபந்தனைகள் 4) சாட்சிகள் 5) ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்கள் மேலும் 6) உறுதிமொழிகள் மற்றும் உடன்படிக்கை ஒப்புதல்கள். உபாகமம் இதே வடிவமைப்பை பின்பற்றுகிறது என நம்புகின்றனர். உபாகமம் 1:1-5 ஒர் முன்னுரை என்பதினை ஏற்றுக்கொள்கின்றனர். 1:5 - 4:43-ல் வரலாற்று முன்னுரை, 27,28 அதிகாரங்கள் ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களை முன்வைக்கின்றன. இந்த வடிவமைப்பின் ஏனைய அதிகாரங்கள் எப்படி பொருந்துகின்றன என்பது தெரியவில்லை. மோவாபின் சமனான வெளிகளில் உடன்படிக்கை புதுப்பித்தல் ஏற்பட்டிருக்கலாம் என இருந்தாலும், இது வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ உபாகமத்தில் காணப்படவில்லை. உபாகம புத்தகம் புதிய தலைமுறையினருக்கு மோசே அளித்த நியாயபிரமாணங்களின் விளக்கம் என உரிமை பாராட்டுகிறதே அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது நலம். மோசே உரையின் வடிவமைப்பை இந்த ஆகமம் பின்பற்றுகிறது.

மூன்றாவது சவால், மோவாப் தேசத்திலே மேற்கொண்ட உடன்படிக்கை (29:1). இந்த உடன்படிக்கை சீனாய் மலையில் 40 வருடங்களுக்கு முன் முதல் தலைமுறையினருடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் புதுப்பித்தல் தான் என்பது அனேகரின் கருத்து. இங்கே மோசே அதே உடன்படிக்கையை மேம்படுத்தி இஸ்ரவேலின் இரண்டாம் தலைமுறையினருடன் புதுப்பித்தார் என்று கருதப்படுகிறது. மற்றொரு பார்வை - இஸ்ரவேல் தேசத்தாருக்கு தேசத்தின் உரிமைக்கு உத்திரவாதம் அந்நாட்களுக்கும், எதிர்காலத்திற்கும் அளித்த பாலஸ்தீன உடன்படிக்கையே இந்த இரண்டாம் உடன்படிக்கை என்கின்றனர். மூன்றாவது நிலைப்பாடு - மோசே, சீனாய்

*உடன்படிக்கையை இஸ்ரவேல் நிச்சயம் கைக்கொள்ளாது என்பதை அறிந்திருந்தபடியால், அதிகாரம் 29,30-ல் புதிய உடன்படிக்கையினை எதிர்பார்த்தார் என்கிறது. மூன்றாம் கருத்தே மிகச்சிறப்பான கருத்து ஆக காணப்படுகிறது.*

# யோசுவா

***தலைப்பு:***

*பன்னிரெண்டு வரலாற்றுப் புத்தகங்களில் இப்புத்தகம் முதல் புத்தகம், மோசேயின் சேவகனாக இருந்து, பின், மோசே ஜெபித்து இஸ்ரவேலருக்கு தலைவனாக்கின (எண் 27:12-13) யோசுவாவின் சாதனைகளை குறித்து பேசுகிறபடியால் இப்புத்தகம் யோசுவா என அழைக்கப்படுகிறது. யோசுவா என்றால் "யெகோவா இரட்சிக்கிறார்" அல்லது "கர்த்தரே இரட்சிப்பு" என்பதாகும். மேலும், புதியஏற்பாட்டின் "இயேசு" என்ற பெயருடன் தொடர்புடையது. தேவன் யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேலருக்காக இரட்சிக்கும் தலைவனாக பொறுப்பேற்று யோசுவா யுத்தம் செய்தபோது, தேவன் இஸ்ரவேலரை விடுவித்தார் (5:14-62; 6:2; 10:42; 23:3,5; அப்.7:45).*

## ***ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி:***

*இப்புத்தகத்தை எழுதின ஆசிரியரின் பெயர் தெரிவிக்கப்படவில்லை, எனினும் இதில் காணப்படும் சம்பவங்களை (உறுதிபடுத்தும் வசனங்கள் 18:9; 24:26) கண்களால் கண்ட முக்கிய சாட்சி - யோசுவா ஆக இருப்பதால், அவர்தான் இப்புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும் என்பது பிரபலமான கருத்து. யோசுவா வளர்த்த அவனது சேவகன், யோசுவாவின் மரணத்திற்குப் பின் இப்புத்தகத்தில் குறிப்பு (24: 29-35) எழுதி, இணைத்து இப்புத்தகத்தை நிறைவுசெய்திருக்க வேண்டும். வேறுசிலர் இந்த பகுதி பிரதான ஆசாரியன் எலேயாசர், அல்லது அவரது மகன் பினேகாஸ் இவர்களால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்கின்றனர். யோசுவா 6:25 எழுதப்பட்ட நாட்களில் ராகாப் வாழ்ந்து கொண்டு தான் இருந்தாள். தாவீதின் அரசாட்சிக்கு முன் இப்புத்தகம் முற்றும்*

*எழுதி முடிக்கப்பட்டது (15:63; உறுதிபடுத்தும் வசனம் 2சாமு 5:6-9). கி.மு 1405-1385-ம் ஆண்டுகளில் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.*

*எகிப்தில் அடிமைப்பட்டு கிடந்த நாட்களில் யோசுவா பிறந்து, மோசேயினால் பயிற்சி அளிக்கப்பட்டபின், தேவனின் தெரிந்தெடுப்பால் இஸ்ரவேலரை கானான் தேசத்திற்குள் வழிநடத்திச் செல்லும் தலைவனாக பின்நாட்களில் உயர்வு பெற்றவர். இவரை வேறுபிரித்துக் காட்டும் அம்சங்கள்: 1) சேவகன் (எண் 17:10; 24:13; 33:11; எண் 11:28) 2) சேனை வீரன் (யாத் 17:9-13); 3) வேவுபார்த்தல் - இதன் அர்த்தம் எதிரியின் இடத்திற்குள் சென்று அவர்களைப்பற்றி அறிந்து வருவது (எண் 13,14); 4) மோசேயினால் வேண்டிக் கொள்ளப்படுதல் (எண் 27:15-17); 5) தேவனின் இறையாண்மை (எண் 27:18); 6) தேவ ஆவியானவரின் பிரசன்னம் (எண் 27:18; உபா 34:9); 7) மோசேயினால் பிரித்து எடுக்கப்படுதல் (எண் 27:18-23; உபா 31:7,8,13-15); மற்றும் 8) முழுமனதுடன் சுயநலம் பாராமல் கர்த்தரைப் பின்பற்றுதல் (எண் 32:12).*

*[H2[பிண்ணனி மற்றும் அமைப்பு:*

*மோசே மரிக்கும் முன், தலைமையின் கோலை யோசுவாவினிடத்தில் தருகிறார் (உபா 34). இஸ்ரவேல் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த 40 வருட கால இறுதியில் இருந்த வருடம் கி.மு.1405, யோசுவா இந்தவேளையில் 90 வயதை நெருங்கி இருந்தார், அவரது 110 வது வயதில் மரித்தார் (24:29), அவ்வேளையில், கானானியரில் அனேகரைத் துரத்திவிட்டு 12 கோத்திரங்களுக்கிடையில் தேசத்தைப் பிரித்து தந்திருந்தார். உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன் (ஆதி: 12:7; 15:18-21) என்று வாக்குதத்தம் செய்திருந்த மோவாப் சமவெளி பூமியிலே, யோர்தான் நதியின் கிழக்குப் பகுதியில் இஸ்ரவேலர் அத் தேசத்தை கைப்பற்ற தேவன் தாமே*

வழிகாட்டும்படிக்கு காத்திருந்தனர். யோர்தானின் மேற்குபகுதியில் இருந்த மக்கள் அயோக்கியத்தில் திளைத்தவர்களாக இருந்தனர். அவர்களை தேவன் கட்டயமாக அந்த இடத்தில் இருந்து துரத்தி விடும் அளவுக்கும் அவர்களின் அயோக்கியத்தனம் இருந்தது (லேவி 18:24,25). ஆபிரகாமுக்கும் அவர் சந்தியினருக்கும் கொடுத்த வாக்குதத்தத்தை நிறைவேற்றும்படிக்கு தேவன் இஸ்ரவேலர் தேசத்தை கைப்பற்றி சுதந்தரிக்கும்படி செய்தார். அதேசமயத்தில் அந்த தேசத்தில் அக்கிரமத்தில் வாழ்ந்தவர்களின் அக்கிரமத்தை தண்டித்தார் (ஆதி 15:16). தேசத்தின் பல பகுதிகளில் கானானிய வம்சத்தார் குடியிருந்து நீண்ட காலமாக உடைமையாக்கி வைத்திருந்தனர், அது ஆபிரகாமின் நாட்களுக்கு முன்பே சம்பவித்திருக்க வேண்டும். (ஆதி 10:15-19; 12:6;13:7). அதில் குடியிருந்தவர்கள் யோசுவாவின் காலம் மட்டும் அந்நிய தேவர்களை வழிபட்டு அக்கிரமத்தில் திளைத்து வந்தனர்.

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்:

ஆபிரகாமின் வழித்தோன்றல்களுக்கு தேசத்தை தருவேன் என்று தான் செய்த வாக்குத்தத்ததை நிறைவேற்றி, தாம் சொன்ன வார்த்தைகளில் தேவன் எவ்வளவு சொல்லுறுதி உடையவராக இருந்தார் என்பதே இதில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் (ஆதி 12:7; 15:18-21; 17:8). அவரின் வழிநடத்துதலினாலே, இஸ்ரவேல் தேசத்தார் யோர்தானின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதியில் குடியிருந்தனர். ''சுதந்தரித்துக் கொள்ளும்படி'' என்ற வார்த்தை ஏறக்குறைய 20 தடவை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கருப்பொருளுக்கு சம்பந்தப்பட்ட ஒன்று, இஸ்ரவேலர் தேசத்தின் அனைத்து பகுதிகளையும் கைப்பற்ற தவறியது (13:1). பின்வரும் நியாயாதிபதிகள் 1-2 அதிகாரம், இந்த பாவத்தினால்

*விளைந்த சோக முடிவுகளை விளக்குகிறது. கவனம் செலுத்த வேண்டிய முக்கிய வசனங்கள் 1) தேவன் தேசத்தில் குடியேறுவீர்கள் என வாக்குதத்தம் செய்வது (1: 3,6); 2) தேவனுடைய நியாயபிரமாணங்களை தியானிப்பது என்பது அவரது ஜனங்கள் யாவற்றிலும் முண்ணணியில் நிற்பதற்கு உதவும் (1:8); மேலும் 3) இஸ்ரவேல் தேசத்தின் சிலபகுதிகளை மட்டுமே இஸ்ரவேலர் கைப்பற்றுதல் (11:23; 21:45; 22:4).*

*13-22-ஆம் அதிகாரங்களில் காணப்படுவதைப்போல குறிப்பிட்டு தேசத்தை பகிர்ந்து கொடுப்பது - யோசுவாவின் வேலை. இஸ்ரவேலர்கள் எங்கே வாழ்ந்தாலும், அவர்களுக்கு தேவனுடைய ஆராதனை சேவைகள் லேவியர்கள் மூலமாக எளிதில் கிடைக்கும்படி பட்டணங்களின் 48 முக்கியத்துவமான இடங்களில் லேவியர் குடியேற்றப்பட்டனர்.*

*தேவன் தம்முடைய ஜனங்கள் பின்வரும் காரணங்களுக்காக தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என விரும்பினார். 1) அவருடைய வாக்குதத்ததை நிறைவேற்றும்படிக்கு (ஆதி.12:7); 2) அவருடைய ராஜ்ஜியத்தின் எதிர்கால திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய ஓர் மேடையை அமைக்க (ஆதி.17:8; 49:8-12), உதாரணமாக, இராஜாக்கள் மற்றும் நியாயாதிபதிகளின் காலகட்டங்களில் நிறைவேற இருக்கும் சம்பவங்களுக்கு - இஸ்ரவேலை ஆயத்தப்படுத்த; 3) மிகுதியான பாவத்தினால் தேவனுக்கு அவமானமாக காணப்பட்ட ஜனங்களை தண்டிக்க (லேவி.18:25) மற்றும் 4) உடன்படிக்கை தேவனின் உள்ளம் அனைத்து தேசத்து ஜனங்களையும் நேசிக்கின்றபடியால், மற்ற ஜனங்களுக்கு முன்பதாக சாட்சியாக (யோசுவா 2:9-11) நிற்க வேண்டும்.*

## *விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்:*

*அற்புதங்கள் வாசிப்பவருக்கு - ஒருபக்கம் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவன் (ஆதி.1:1) வேறு*

அற்புதங்களையும் செய்யக் கூடும் என விசுவாசிக்கச் செய்யும் அல்லது ஏதேனும் விளக்கம் அளித்து விட்டுச் செல்லச் செய்யும் ஒரு சவாலை எப்பொழுதும் முன்வைக்கிறது. மோசேயின் நாட்களில் காண்கிறது போல, இந்த புத்தகத்தில் இருக்கும் அற்புதங்கள் தேவனின் நோக்கத்தின் ஒரு பகுதியாகவே இருக்கின்றன, உதாரணமாக, 1) யோர்தானின் நதியில் புரண்டுவரும் தண்ணீரை தடுத்து நிறுத்தியது (யோசுவா 3:7-17); 2) எரிகோவின் சுவர்கள் தகர்ந்து விழுந்தது (யோசுவா 6:1-27); 3) பெரிய கற்களை விழப்பண்ணினார் (யோசுவா 10:1-11); 4) நீண்ட பகல் வேளை (யோசுவா 10:12-15).

இப்புத்தகத்தில் சவால்களாக இருக்கும் கேள்விகள் 1) தேவனுக்கு விசுவாசத்தினால் பதிலளித்த வேசியாகிய ராகாப் பொய்சொல்லிய போதும் அவளை ஆசீர்வதித்தது எப்படி? 2) ஆகானை கல்லெறிந்து கொன்ற போது, அவன் வீட்டாரையும் சேர்த்து கல்லெறிந்து கொன்றது ஏன்? (யோசுவா 7); 3) ஆயி தேசத்தாரிடம் இஸ்ரவேலர்களைக் காட்டிலும் குறைந்த எண்ணிக்கையில் ஆட்கள் இருந்த போதும், ஆயி பட்டணத்தாரை மேற்கொள்ள முடியாது போனது ஏன்? (யோசுவா: 7,8); 4) "உங்கள் முன்பாக குளவிகளை அனுப்பினேன்" என இஸ்ரவேலரிடம் தேவன் சொன்னதன் அர்த்தம் என்ன?

**சுருக்கம்**

***I. வாக்குதத்தமாக பெற்ற தேசத்தில் பிரவேசித்தல் (1:1 -5:15)***

***II. வாக்குதத்த தேசத்தை வெற்றி கொள்ளல் (6:1 -12:24)***

அ. மத்திய பகுதியில் கூடாரமிடுதல் (6:1 - 8:35)

ஆ. தெற்கு பகுதியில் கூடாரமிடுதல் (9:1 - 10:43)

இ. வடக்கு பகுதியில் கூடாரமிடுதல் (11:1-5)

*ஈ. ஜெயம் பெற்ற பகுதிகளின் சுருக்கம் (11:16 - 12:24)*

***III. வாக்குதத்த தேசத்தை பங்கிட்டு கொடுத்தல் (13:1 -22:34)***

*அ. கட்டளைகளின் சாராம்சம் (13:1-33)*

*ஆ யோர்தானின் மேற்கு பகுதி (14:1 - 19:51)*

*இ. அடைக்கலப் பட்டணங்கள் (20:1-9)*

*ஈ. லேவியரின் பட்டணங்கள் (21: 1-45)*

*உ. யோர்தானின் கிழக்கு பகுதி (22:1-34)*

***IV. வாக்குதத்த தேசத்தை தக்கவைத்துக் கொள்ளல் (23:1-24:28)***

*அ. யோசுவாவின் முதல் பேச்சு (231-16)*

*ஆ. யோசுவாவின் இரண்டாம் பேச்சு (24:1-28)*

***V. பின்குறிப்பு (24:29-33)***

# *நியாயாதிபதிகள்*

## *தலைப்பு:*

*''நியாயாதிபதிகள்'' - என்னும் மிகப் பொருத்தமான பெயரை இந்த புத்தகம் பெற்றுள்ளது. தேவன் தம்முடைய ஜனங்கள், அவர்களுடைய சத்துருக்களிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ள தேவன் தந்த ஒப்பிடமுடியாத தலைவர்களை இது குறிக்கிறது (2:16:18; 17:9; 19:17). சாமுவேலுக்கு முன் இப்படி தனித்துவம் வாய்ந்த பண்ணிரண்டு நியாயாதிபதிகள் எழும்பினர்; பின்னர் ஏலியும் சாமுவேலும் இந்த எண்ணிக்கையை 14 ஆக உயர்த்தினர். தேவன் அவர் மிக உன்னத நியாயாதிபதியாகிய கர்த்தர் (11:27). யோசுவா ஜெயம் பெற்ற (கி.மு. 1398) ஆண்டில் இருந்து ஏலி மற்றும் சாமுவேல் நியாயாதிபதிகளாக பொறுப்பு வகித்து ராஜாக்களின் காலத்தினை (கி.மு. 1043) நிலைநாட்டினது வரை 350 ஆண்டுகள் கடந்து சென்றுள்ளது.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*ஆசிரியர் என ஒருவரது பெயரும் இப்புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை, ஆனால் யூதர்களின் புத்தகம் தல்மூத் - இந்த சம்பவங்கள் நிறைவேறின காலத்தில் வாழ்ந்தவரான சாமுவேல், இக்காலகட்டத்து ராஜாங்கத்தின் முறையை புஸ்தகத்தில் எழுதி (1சாமுவேல் 10:25) தந்திருக்கலாம் என கருதுகிறது. தாவீது எருசலேமை கைப்பற்றின கி.மு. 1004 நாட்களுக்கு முந்தைய நாட்கள் (2சாமு 5:6,7) ஏனென்றால், அந்நாள் மட்டும் எபூசியர் அந்த இடத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் (நியா 1:27). இப்புத்தகத்தினை எழுதிய ஆசிரியர் - ஒரு ராஜா ஏற்படுத்தப்பட்டு தேசத்தை ஆளும் காலம்வரை நிறைவேறினவற்றை குறித்து எழுதுகிறார் (17:6; 18:1; 21:25). சவுல் தன் ராஜ்யபாரத்தை ஆரம்பித்த*

கி.மு. 1043 அடுத்த நாட்களில் நியாயாதிபதிகள் புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

யோசுவாவின் புத்தகத்தை பின்தொடர்ந்து வரும் ஒரு துயர்நிறைந்த புத்தகம் நியாயாதிபதிகள் புத்தகம். யோசுவாவில் யுத்தத்தில் ஜெயம்பெற்று தேசத்தை சுதந்தரிப்பது வரை தேவனுக்கு கீழ்ப்பந்திருந்தனர். நியாயாதிபதிகளின் புத்தகத்தில், கீழ்ப்படியாதவர்களாக, விக்கிரகாரதனை செய்பவர்களாக, அதிகமான இடங்களில் தோற்றுப் போனவர்களாக ஜனங்களை காண்கிறோம். நியா 1:1 - 3:6 வரை உள்ள வசனங்களில் யோசுவா புத்தக நிறைவில் நடந்த சம்பவங்களைக் குறித்து அதிகமாகப் பார்க்கிறோம். நியா 2:6-9 யோசுவாவின் மரணத்தையும் (உறுதிபடுத்தும் வசனங்கள் யோசுவா:24:28-31) அவன் அடக்கத்தையும் குறித்து பேசுகிறது. யோசுவா மரிக்கும் முன்னரே, இஸ்ரவேலர் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப் போனதும், அதற்குபின் - வெளிப்படையாக காணப்படும் ஏழு தொடர்நிகழ்வுகளை இப்புத்தகம் விவரிக்கிறது - பின்னர் அது கர்த்தரை விட்டு இஸ்ரவேல் முழுவதும் விலகிப்போன அளவிற்கு மாறினதைப் பார்க்கிறோம். இஸ்ரவேலரின் ஒழுக்கம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையில் பின்வாங்கிப்போனதற்கு ஐந்து அடிப்படைக் காரணங்கள் உண்டு. 1) தேசத்தில் இருந்து கானானியரை துரத்த தவறினது (நியா 1:19,21,35), 2) விக்கிரகாரதனை (2:12), 3) பொல்லாத கானானியருடன் கலப்புமணம் செய்தது (3:5,6), 4) நியாயாதிபதிகளின் வார்த்தைகளுக்கு செவி கொடாமல் போனது (2:17), மற்றும் 5)நியாயாதிபதிகளின் மரணத்திற்குப் பின் தேவனிடத்தில் இருந்து விலகிச்சென்றது (2:19).

நான்கு பகுதிகளாக பிரித்து பார்க்க கூடிய தொடர்நிகழ்வுகள் இஸ்ரவேலர் வரலாற்றின் இந்த காலகட்டத்தில் மீண்டும்

மீண்டும் நிகழ்கிறது. 1) இஸ்ரவேலர் தேவனை விட்டு தூரமாக செல்லுதல், 2) தேவன் இஸ்ரவேலரை யுத்தத்தில் தோற்றுப் போக அனுமதிப்பதன் மூலம் அவர்களை சிட்சித்து, அவர்களை பணியசெய்தல், 3) இஸ்ரவேலர் தங்களை விடுவிக்கும்படி ஜெபித்தல், 4) உள்ளூர் வாசிகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அல்லது யுத்தத்தில் சத்துருக்களை தோற்கடித்து முன்நின்று நடத்திய ஜெயவீரன் இப்படிப்பட்டவர்களை "நியாயாதிபதிகளாக" தேவன் எழுப்புவது. பதினான்கு நியாயாதிபதிகள் எழும்பினர் - அதில் ஆறு பேர் யுத்தத்தை மேற்கொண்டவர்கள் (ஒத்தினியேல், ஏகூ, தெபோரா, கிதியோன், யெப்தா மற்றும் சிம்சோன்), இருவர் (ஏலி, சாமுவேல்) ஆவிக்குரிய தலைமைபொறுப்பு வகிப்பதில் விசேஷமான முக்கியத்துவம் பெற்றவர்கள். அதேவேளையில் இவ்விருவருக்கும் இடையில் வேறுபட்ட பண்புகள் காணப்படுகின்றன. 1) ஏலி, ஒரு நியாயாதிபதி மற்றும் பிரதான ஆசாரியர் (நல்ல உதாரணமாக இவரைச் சொல்ல முடியாது), 2) சாமுவேல், ஒரு நியாயாதிபதி, ஆசாரியர் மற்றும் தீர்க்கதரிசி (இவர் ஒரு நல்ல உதாரணம்).

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

நியாயாதிபதிகள் புத்தகம் காலவரிசைப்படி எழுதப்படாமல், கருப்பொருட்களின் அடிப்படையில் எழுதப்பட்டது; கருப்பொருட்களில் தேவனுடைய வல்லமை முதன்மையானதாக இருக்கிறது. மேலும், இஸ்ரவேலர்கள் பாவ வாழ்க்கையுடன் சமரசம் செய்து தேவனை விட்டு விலகினதால் விளைந்த தீயபலன்களில் இருந்து தேவனுடைய உடன்படிக்கையின் இரக்கம் இஸ்ரவேலர்களை விடுவிப்பதை முக்கிய கருப்பொருளாக இப்புத்தகத்தில் பார்க்கிறோம் (2:18,19; 21:25). பாவத்தில் இருந்து இரட்சிப்பிற்குள் கடந்து வந்த குறிப்பிட்ட ஏழு காலகட்டங்களில், யோசுவாவினால் பங்கிடப்பட்ட

தேசத்தில் வாழ்ந்த தனது ஜனங்களை தேவன் தன்னுடைய மனதுருக்கத்தினால் விடுவித்தார் (யோசுவா 13-22). தேசம் முழுவதும் இஸ்ரவேல் ஜனங்கள் பொல்லாப்பானதைச் செய்து, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து போனார்கள்; ஒவ்வொரு திசையிலும் இருந்த தேசத்தின் பகுதிகளைக் குறித்து நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. தெற்குப்பகுதி (3:7-31); வடக்குப்பகுதி (4:1 - 5:31); தேசத்தின் மையப்பகுதி (6:1 -10:5); கிழக்குப்பகுதி (10:6 -12:15); மேற்குப்பகுதி (13:1 -16:31). அவர்கள் மாம்சீக சுபாவத்தோடு சமரசம் செய்துகொண்டு, அவர்கள் எல்லைமீறி செய்த பாவங்களால் - விளைந்த அனைத்து தீய விளைவுகளின் அந்தகார கேடுகளில் இருந்து பற்றுதியுடன் தேவனின் வல்லமை இஸ்ரவேலரை விடுவிப்பதைப் பார்க்கிறோம் (யோசுவா 17-21). புத்தகத்தின் கடைசி வரி (21:25)- “அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிபோனபடி செய்து வந்தான் என புத்தகத்தின் சுருக்கத்தைச் சொல்கிறது”.

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

நமது கருத்தை அதிகம் கவரும் சவால்கள்: ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு அல்லது தன் தேசத்தவருக்கு இழைத்த கொடுஞ்செயல்கள் தேவனுடைய ஒப்புதலைப் பெற்றதா? இல்லையா? 2) சிலவேளைகளில் தேவனுடைய சித்தத்தையும் வேறுசில வேளைகளில் தங்கள் பாவ வாழ்க்கையை பின்பற்றும் தலைவர்களை தேவன் எடுத்து பயன்படுத்துவது ஏன்? (கிதியோன், ஏலி, யெப்தா, சிம்சோன்); 3) யெப்தா செய்த பொருத்தனையும் அவன் தன் மகளுக்கு செய்ததையும் எந்த கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் (11:30-40); மற்றும் 4) மனுஷன் பாவத்தில் வீழ்ந்த போதும், அவர் அவனது தேவைகளை சந்திப்பதில் இருந்து தேவனுடைய ஆளுகையில் உள்ள அவருடைய சித்தத்தை எப்படி தீர்மானமாக அறிந்து கொள்ள முடியும் (14:4)?

*யாத்திராகமத்தில் இருந்து சாலமோனின் நான்காம் வருட காலம் கி.மு. 967/கி.மு. 966 வரை உள்ள ஆண்டுகள் 480 ஆண்டுகள். இந்த காலகட்டத்திற்குள், வெவ்வேறு நியாயாதிபதிகள் தேசத்தின் வெவ்வேறு பகுதிகளில் இருந்தபடியால், நியாயதிபதிகளின் காலகட்டத்தின் மொத்த ஆண்டுகளை இந்த கால இடைவெளிக்குள் அமைத்து கணக்கிடுவது பல கேள்விகளை எழுப்புகிறது. நியாயாதிகள் பலர் தேசத்தின் பல இடங்களில் நியாயம் விசாரித்து விடுதலை பெற்றுத் தந்த காலங்கள் என்பவை ஒன்றுக்கொன்று இணையாக அமைந்தவை, அவர்கள் நியாயம் விசாரித்த காலங்கள் தொடர்ச்சியாக செல்லவிலை என்பதே இதற்கு நியாயமான விளக்கம். பவுல், அப்போஸ்தலர்: 13:20-ல் கணக்கிட்ட "ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷகாலமாய்" எனக் குறிப்பிடுவது ஒரு தோரயமான கால அளவாகும்.*

**சுருக்கம்**

***I* அறிமுகம் மற்றும் சுருக்கம் - இஸ்ரவேலின் கீழ்ப்படியாமை *(1:1-3:6)***

*அ. கானானியர் மீது முற்றுப்பெறாத யுத்தத்தை மேற்கொள்ளல் (1:1-36)*

*ஆ. சரிவு மற்றும் இஸ்ரவேலை நியாயம் தீர்த்தல் (2:1 - 3:6)*

***II* தெரிந்தெடுக்கப்பட்ட நியாதிபதிகளின் வரலாறு - இஸ்ரவேல் விடுவிக்கப்படுதல் *(3:7-16:31)***

*அ. முதல் காலகட்டம்: ஒத்தானியேல் (எதிர்) மெசபோதாமியர்கள் (3:7-11)*

*ஆ. இரண்டாம் காலகட்டம்: எகூத் மற்றும் சம்கார் (எதிர்) மோவாபியர்கள் (3:12-31)*

*இ. மூன்றாம் காலகட்டம்: தெபோராள் (எதிர்) கானானியர்கள் (4:1 - 5:31)*

*ஈ. நான்காம் காலகட்டம்: கிதியோன் (எதிர்) மீதியானியர்கள் (6:1 - 8:32)*

*உ. ஐந்தாம் காலகட்டம்: தோலா மற்றும் யாவீர் (எதிர்) அபிமேலேக்குவின் எதிர்ப்புகள் (8:33 - 10:5)*

*ஊ. ஆறாம் காலகட்டம்: யெப்தா, இப்சான், ஏலோன்,அப்தான் (எதிர்) பெலிஸ்தியர் மற்றும் அம்மோனியர்கள் (10:6 - 12:15)*

*எ. ஏழாம் காலகட்டம்: சிம்சோன் (எதிர்) பெலிஸ்தியர்கள் (13:1 - 16:31)*

## *III.* பின்குறிப்பு: இஸ்ரவேல் தன் கடமையில் இருந்து தவறுதல் *(17:1 - 21:25)*

*அ. மீகா மற்றும் தாண் கோத்திரத்தார் (17:1 -18:31)*

*ஆ.கிபியாவில் நடந்த குற்றம் மற்றும் பென்யமீனுக்கு விரோதமாக யுத்தம் (19:1 -21:25).*

# ரூத்

## *தலைப்பு:*

*பழங்கால பதிப்புகள் மற்றும் நவீன கால மொழிபெயர்ப்புகள் இப்புத்தகத்திற்கு தொடர்ச்சியாக தந்துள்ள தலைப்பு - ரூத் என்பதாகும். இவள் இலட்சிய மோவாபிய பெண் - இப்புத்தகத்தில் பெயர் சொல்லி 12 முறை அழைக்கப்பட்டுள்ளவள் (1:4 - 4:13). இவள் பெயர் இப்புத்தகத்திற்கு தலைப்பாக கொடுக்கப்பட்டுள்ளது. பழையஏற்பாட்டில் இரண்டே இரண்டு பெண்களின் பெயர் தான் புத்தகத்தின் பெயராக வைக்கப்பட்டுள்ளது, அவை - ரூத் மற்றும் எஸ்தர். பழைய ஏற்பாட்டின் வேறு எந்த பகுதியிலும் ரூத்திலிருந்து குறிப்பு எடுக்கப்படவில்லை; புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு இடத்தில் - அதாவது கிறிஸ்துவின் வம்சவரலாற்றில் மட்டும் ரூத் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது (மத்தேயு 1:5; உறுதிபடுத்தும் வார்த்தை ரூத் 4:18-22). மோவாபிய அல்லது எபிரேய மொழியில் வரும் "ரூத்" என்னும் வார்த்தைக்கு "நட்பு" என்று அர்த்தம். ரூத் பெத்லகேமுக்கு புறதேசத்தாளாக வந்தாள் (2:10), ஒரு வேலைக்காரியாக ஆனாள் (2:13), செல்வந்தன் போவாஸை மணந்தாள் (4:13), மேலும் கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இடம் பெற்றாள் (மத்தேயு 1:5).*

## *ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி:*

*யூதர்களின் பாரம்பரியம் இதன் ஆசிரியர் சாமுவேல் ஆகத் தான் இருக்கவேண்டும் எனக்கூறி கௌரவிக்கிறது. தாவீதை தேவன் தெரிந்தெடுத்த ராஜாவாக அபிஷேகித்த (1சாமு.16:6-13) நாள் வரை சாமுவேல் மரிக்கவில்லை (1 சாமு.25:1) என்பதால் இது நம்பத்தகுந்தது. ஆனாலும், உள்ளடக்கங்களோ அல்லது வெளிப்புற சாட்சிகளோ இவர் தான் ஆசிரியர் என முடிவாக அடையாளம் காட்டவில்லை. இஸ்ரவேலில் தாவீது அரசாட்சி*

செய்ய ஆரம்பித்த அல்லது செய்து கொண்டிருந்தபோது - இந்த நேர்த்தியான சம்பவம் நடந்திருக்கலாம் (கி.மு. 1011-971), ஏனென்றால் தாவீது (4:17,22) குறிப்பிடப்பட்டிருக்கிறார், ஆனால் சாலமோன் குறிப்பிடப்படவில்லை. கோட்டெ (Goethe)," இந்த - பெயர் அறியப்படமுடியாத ஆனால் ஈடுஇணையில்லாத இலக்கியபடைப்பினை, "சிறிய அளவில் படைக்கப்பட்ட அழகான, பூரணமான படைப்பு" எனக் குறிப்பிடுகிறார். சிலைக்கு வீனஸ் எப்படியோ, ஓவியத்திற்கு மோனாலிஸா எப்படியோ அப்படி - ரூத் இலக்கியத்திற்கு இருக்கிறது.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

பெத்லகேமைத் தவிர (1:1) மோவாப் மட்டுமே, (சாக்கடலுக்கு கிழக்கில் இருக்கிற மோவாப், இஸ்ரவேலின் நிரந்தர பகைஞராக இருந்தவர்கள்) - இப்புத்தகத்தில், பூகோள ரீதியான/ தேசத்தின் பெயராக குறிப்பிடப்பட்டுள்ளது (1:1,2). லோத்து தன் மூத்த மகளிடம் உறவுமுறையற்று பெற்று - மோவாபிற்கு தகப்பன் ஆனான் (ஆதி.19:37). பல நூறாண்டுகளுக்குப் பின், பிலேயாம் தீர்க்கதரிசியின் மூலம் ஏற்பட்ட மோவாபின் ராஜா பாலாக்கின் எதிர்ப்பை யூதர்கள் சந்திக்க வேண்டியிருந்தது (எண்:22-25). நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலரை மோவாபியர் 18 ஆண்டுகாலம் ஒடுக்கினர் (நியா.3:12-30). சவுல் மோவாபியர் மீது வெற்றி சிறந்தான் (1சாமு.14:47), அதேவேளையில், தாவீது அவர்களோடு சமாதானமான உறவை கொண்டிருந்தான் (1சாமு.22:3,4). பின்னர், மோவாபின் ராஜா இஸ்ரவேல் ராஜாவிற்கு விரோதமாக கலகம் பண்ணினான் (2ராஜா.3:5-27; எஸ்றா 9:1). மோவாபியர் அருவருப்பாகிய காமேசு விக்கிரத்தை வணங்கினபடியால் (1ராஜா.11:7, 33; 2ராஜா. 23:13) அது இஸ்ரவேலுக்கு விரோதமாக இருந்தபடியால், தேவன்

*மோவாபியரை சபித்தார் (ஏசா15,16; எரே. 48; எசே. 25:8-11; ஆமோஸ் 2:1-3).*

*ரூத்தின் சரித்திரத்தின் காலம் "நியாயாதிபதிகள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து வரும்" (1:1). கி.மு. 1370 லிருந்து கி.மு. 1041 (நியா. 2:16-19) நாட்களில் சம்பவித்தது - இதனால் நியாயதிபதிகளுக்கும் இஸ்ரவேலரை ராஜா ஆண்டகாலத்திற்கும் இடைபட்ட காலத்திற்கு இது ஒரு பாலமாக அமைந்துள்ளது. "யூதா தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று" (1:1) என்னும் நிகழ்வைக் கொண்டு ரூத் சம்பவங்களை தேவன் தொடங்கி வைக்கிறார். ஆனால், இந்த பஞ்சத்தை குறித்து நியாயாதிபதிகளின் புத்தகத்தில் எந்த குறிப்பும் இல்லாதபடியால், ரூத் சரித்திர சம்பவங்களின் தேதியை அறுதியிட்டுச் சொல்வது கடினமாக இருக்கிறது. தாவீது அரசாண்ட (கி.மு. 1011-971) தேதியில் இருந்து - ஆண்டுகளை நாம் பின்னோக்கி கணக்கிடுவோமானால், ரூத் சம்பத்தின் நாட்கள் அதிகபட்சமாக யாவீர் (கி.மு.1126 - 1105) நியாயம் விசாரித்த நாட்கள் ஆக இருந்திருக்கலாம் (நியா. 10:3-5).*

*ரூத் சரித்திரம் கீழ்க்காணும் சம்பவங்களை வைத்து பார்க்கும் போது 11 அல்லது 12 ஆண்டுகளில் நிகழ்ந்திருக்கும்: 1) 1:1-18 மோவாபில் 10 வருடங்கள் (1:4); 2) 1:19 - 2:23, அனேக மாதங்கள் (ஏப்ரல் மத்தியில் இருந்து ஜூன் மத்தியில் வரை) போவாஸின் வயல்வெளியில் (1:22; 2:23); 3) பெத்லகேமில் ஒரு நாள் வாற்கோதுமை தூற்றும் இடத்தில் ஓர் இரவு (3:1-18); 4) ஏறக்குறைய ஓர் ஆண்டு பெத்லகேமில் இருந்தாள் (4:1-22).*

## வரலாற்று கருப்பொருள் மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*ரூத் புத்தகத்தின் - மொத்த (85) வசனங்களும் புனிதபுத்தக வரிசையில் வருவதாக யூதர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.*

*உன்னதப்பாட்டு, எஸ்தர், பிரசங்கி மற்றும் புலம்பல் என்னும் வரிசையில் - ரூத் - மெகிலோத் அல்லது "ஐந்து தோல்சுருள்கள்" என்று அழைக்கப்படும் பழையஏற்பாட்டு புத்தகங்களோடு இருக்கிறது. வருடத்தின் ஐந்து விசேஷ நாட்களில் ரபீமார்கள் / யூதகுருமார்கள் தேவாலயத்தில் இந்த புத்தகங்களை எடுத்து வாசிப்பார்கள். ரூத் புத்தகத்தின் 2 மற்றும் 3 ஆம் அதிகாரங்களில் அறுவடை சம்பவங்கள் வருவதால், ரூத் புத்தகத்தை பெந்தெகோஸ்தே காலத்தில் வாசிப்பார்கள்.*

*வம்சவரலாற்றை குறித்து பார்க்கும்போது, ரூத் புத்தகம் ஏறக்குறைய 900 ஆண்டுகளுக்கு முந்தைய யாக்கோபின் காலத்தை குறிப்பிடுகிறது. எதிர்காலத்தை குறித்து பேசும் போது 100 ஆண்டுகளுக்கு பின் வரும் தாவீதின் அரசாட்சியை குறிப்பிடுகிறது (4:17,22). யோசுவா மற்றும் நியாயாதிபதிகளின் புத்தகம் தேசத்தின் பரம்பரையை குறித்து கவனம் செலுத்தும் வேளையில், ரூத் புத்தகம் தாவீதின் வம்சவரலாற்றில் கவனம் செலுத்தி அவனது பரம்பரையின் வேர் ஐந்து ஆகம காலத்தில் இருக்கிறது என்கிறது.*

*ஏறக்குறைய ஏழு பெரிதான இறையியல் கருப்பொருட்கள் - ரூத் புத்தகத்தில் வெளிப்படுகின்றன. முதலாவது, மோவாபிய பெண்ணான ரூத்தின் சரித்திரம் குறித்து இப்புத்தகம் பேசுவதால், தேவன் தமது மீட்பின் திட்டத்தில் யூதர்களுக்கும் அப்பால் புறஜாதியாருக்கும் இடம் அளித்துள்ளார் என்பது வெளிப்படுகிறது (2:12). இரண்டாவது, தேவனின் இரட்சிப்புக்கும் கிருபைக்கும் - பெண்களும் உடன் - சுதந்திரவாளிகள் என்பதை நிரூபிக்கிறது (கலா.3:28). மூன்றாவது, நீதிமொழிகள் 31:10 சித்தரித்துக் காட்டும் குணசாலியான பெண்ணை நமக்கு படம்பிடித்து காட்டுகிறது (3:11). நான்காவது, அற்பமான ஜனங்களிடம் முக்கியமற்ற வேளையில் தேவனின் இறையாட்சி (1:6; 4:13) மற்றும் தேவைகளை சந்தித்தல் (2:3) நிறைவேறுவதும், பின்னர் அதுவே தேவனுடைய*

சித்தம் நிறைவேற்றுவதில் மகத்தான முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறினது என்பதையும் நிரூபிக்கிறது. ஐந்தாவது, ரூத் தாமார் (ஆதி.38), ராகாப் (யோசுவா 2) மற்றும் பத்சேபாள் (2சாமு.11,12) உடன் மேசியாவின் வம்சவரலாற்று வரிசையில் வருகின்றாள் (4:17,22 மத்தேயு 1:5 உறுதிபடுத்துகிறது). போவாஸ், ரூத்தின் உறவினனும், மீட்பனுமாகி, கிறிஸ்துவைப் போன்றவன் என ஆகிறான் (4:1-12). இறுதியாக, இஸ்ரவேலின் சிங்காசனத்திற்கு உரிய தாவீதின் உரிமை (இதனால் கிறிஸ்துவின் உரிமை) யூதாவின் வழியாக நிலைநாட்டப்படுகிறது (4:18-22; ஆதியாகமம் 49:8-12)

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

ரூத்தின் சரித்திரம் உண்மையில் வரலாற்றில் நடந்த சம்பவம் என அவசியம் புரிந்துகொள்ள வேண்டும். நியாதிபதிகள் மற்றும் 1 மற்றும் 2 சாமுவேலின் புத்தகத்துடன் இணக்கமாக இருப்பதுடன் ரூத் புத்தகத்தில் காணப்படும் சார்ந்திருக்கக் கூடிய உண்மைகள் ரூத் சரித்திரம் உண்மையாக நிறைவேறின ஒன்று என உறுதிப்படுத்துகிறது. ஆனாலும், சிற்சில கடினமான பகுதிகளை புரிந்துக்கொள்ள தனிப்பட்ட கவனம் அவசியம்.

முதலாவது, உபாகமம் 23:ல் மோவாபியர் பத்து தலைமுறை மட்டும் சபைக்குள் வரக்கூடாது என வெளிப்படையாக தடைசெய்திருக்கும் பொழுது, ரூத் சீலோவில் இருந்த (1 சாமு.4:4) ஆசரிப்புகூடாரத்தில் எப்படி ஆராதிக்க முடிந்தது? யூதர்கள் தேசத்தில் பிரவேசித்தது கி.மு. 1405 மேலும் ரூத் கி.மு. 1150 வரை பிறந்திருக்கவில்லை, இதைவைத்து பார்க்கும் போது, அவள் குறைந்த பட்சம் 11-வது தலைமுறையினரை (அல்லது அதற்கு பின் உள்ளவர்களை) பிரதிநிதித்துவம் செய்தாள். "பத்து தலைமுறைகள்" என்பது நெகேமியா 13:1 தெரிவிப்பது போல "என்றைக்கும்" என்று அர்த்தப்படுத்துகிறது என்று எடுத்துக் கொண்டால், ஏசாயா 56:1-8-ல் அந்நியபுத்திரன் ஒருவன்

ஆண்டவரிடத்தில் சேர்க்கப்பட்டுக் கொண்டான் என நாம் காண்பது போல், ரூத் அந்நியதேசத்து புத்திரியாக சங்கத்திற்குள் பிரவேசிக்க அனுமதி பெற்றிருப்பாள்.

இரண்டாவது, போவாஸும் ரூத்தும் திருமணத்திற்கு முன் இரவு நேரத்தில் ஒன்றாக இருந்தது *(3:3-18)* நம்மை அதிகம் சிந்திக்க வைக்கிறது. யெகோவா தேவன் இஸ்ரவேல் மீது வஸ்திரத்தை மூடி எப்படி உடன்படிக்கை செய்து கொண்டாரோ அப்படி *(எசே.16:8)*, கிழக்கத்திய நாடுகளின் வழக்கத்தின்படி எப்படி தான் மணமுடிக்க விரும்பும் பெண்ணின் மீது வஸ்திரத்தை வீசி நிச்சயித்துக் கொள்வது போல், போவாஸ்-ரூத் திருமண நிச்சயம் நடந்திருந்தது. இந்த வேதாகம பகுதி "விடியற்காலமட்டும் அவன் பாதத்தண்டையில் படுத்திருந்து *(3:14)*" என்று விளக்கம் அளிப்பதில் இருந்து இதில் எந்த விதத்திலும் நன்னெறி கெடவில்லை என அறிகிறோம். இவ்வாறாக, தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என போவாஸ் தாமே வேண்டிக்கொண்டது போல போவாஸ் ரூத்திற்கு தேவனின் அளித்த பதிலாக இருந்தான்.

மூன்றாவது, உபாகமம் *25:5,6*-ல் நாம் காண்பது போல், "சகோதரனின் விதவையை மணக்கும்" பழக்கம், நெருங்கிய உறவினருக்கு ஏற்கெனவே விவாகம் உண்டாயிருந்தால், நெருங்கிய உறவுகளுக்குள் மணம் / பல தார மணம் போன்ற ஒழுக்க குறைபாடுகளுக்கு வழிநடத்தினதா? மரண தண்டனைக் கேதுவான ஒழுக்கக்கேட்டை தேவன் ஒருபோதும் வடிவமைக்க மாட்டார். உபாகமம் *25:5,6*-ஐ நன்றாக கவனித்தோமானால் - நெருங்கிய உறவினர்களுக்குள் விவாகம் என்றாலும் அவர்களுக்கு இடையில் விவாகம் செய்வதற்கான தகுதி மற்றும் ஏனைய பிரமாணங்கள் விதித்திருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே மணம்புரிதல் வேண்டும் என்று இருப்பதை அறிந்துக்கொள்ளலாம்.

*நான்காவது, மோவாபியருடன் விவாகத்தில் இணைக்கப்படுதல் நியாயபிரமாணத்தின்படி கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது அல்லவா? இஸ்ரவேல் தேசத்தார் மேற்கொண்டு சுதந்தரிக்கும் தேசங்கள் அல்லது ஜனங்களுடன் தான் விவாகம் செய்யக்கூடாது என தடைசெய்யப்பட்டிருந்தது - இதில் மோவாப் தேசம் இல்லை (யாத்.34:16; உபா.7:1-13; யோசுவா:23:12). மேலும், போவாஸ் - "யெகோவா தேவன் என் தேவன்" என ஏற்றுக் கொண்ட (1:16,17), மோவாபியர் வழிபடும் அருவருப்பான காமோசுக்கு பின்செல்லாத, ஒரு பெண்ணைத் தான் மணம் முடித்தார் (பின்னர், மோவாபியரின் இந்த பிரதான தேவர்கள் பிரச்சினைக்குள்ளாகுவதை எஸ்றா 9:1-2 மற்றும் நெகேமியா 13:23-25 ல் காண்கிறோம்).*

**சுருக்கம்**

*I எலிமெலேக்கு இறந்து போனான் மற்றும் நகோமி தனித்தவளானாள் (1:1-5)*

*II: நகோமியும் ரூத்தும் பெத்லகேமிற்கு திரும்புகிறார்கள் (1:6-22)*

*III. போவாஸ் வயல்வெளியில் காணும் ரூத்தை ஏற்றுக் கொள்கிறான் (2:1-23)*

*IV. போவாஸ் ரூத் காதல்வயப்படுதல் (3:1-18)*

*V. போவாஸ் ரூத்தை மீட்டெடுத்தல் (4:1-12)*

*VI. போவாஸ் ரூத் தம்பதியினருக்கு தேவன் ஒரு மகனை பரிசாக அளிக்கிறார் (4:13-17).*

*VII. இஸ்ரவேலின் அரியணை ஏறும் உரிமையை தாவீது பெறுகிறார். (4:18-22)*

# சாமுவேல் (1 மற்றும் 2)

## தலைப்பு:

*பழைய எபிரேய கையெழுத்துப்பிரதிகளில் முதல் மற்றும் இரண்டாம் சாமுவேல் புத்தகங்கள் ஒரே புத்தகமாகத்தான் கருதப்பட்டது. பின்நாட்களில் கிரேக்க மொழிபெயர்ப்பாளர்கள் செப்டுவாஜிண்ட் (LXX)-ல் இரண்டு புத்தகங்களாக பிரித்தனர். இப்பிரிவினை லத்தீன் வுல்கேட் (Vg), ஆங்கில மொழிபெயர்ப்புகள் மற்றும் நாகரீக எபிரேய மொழிபெயர்ப்புகளிலும் காண்கிறோம். இஸ்ரவேல் தேசத்தில் ராஜாக்களை அபிஷேகித்து அரசாட்சி ஏற்படுத்த தேவன் எடுத்துப் பயன்படுத்தின "சாமுவேல்" பெயரை - ஒரே புத்தகமாக இருந்த பழைய எபிரேய கையெழுத்துப்பிரதிகள் தலைப்பாக இட்டிருந்தன. பின்னர், எபிரேய நூல்களும் ஆங்கில பதிப்புகளும் பிரிக்கப்பட்ட புத்தகங்களை 1 மற்றும் 2 சாமுவேல் என அழைக்க ஆரம்பித்தன. LXX - இப்புத்தகங்களுக்கு "முதல் மற்றும் இரண்டாம் ராஜ்ஜியத்தின் புத்தகங்கள்" எனவும் வுல்கேட் "முதல் மற்றும் இரண்டாம் ராஜாக்கள்" என்றும் பெயரிட்டன. இதனால் அடுத்து வரும் 1 மற்றும் 2 ராஜாக்கள் புத்தகங்களுக்கு "மூன்றாம் மற்றும் நான்காம் ராஜாக்கள்" என்ற பெயர் வழங்கப்பட்டது.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*யூதர்களின் பாரம்பரியம் "சாமுவேல்" புத்தகத்தை எழுதியது, சாமுவேல் எனக் குறிப்பிடுகிறது. தமிழ் வேதாகத்தில் 1 நாளா **29:30**-ல் நாம் பார்க்கிற வார்த்தைகளின் அடிப்படையில் சாமுவேல், நாத்தான் மற்றும் காத் சேர்ந்து எழுதியிருக்க வாய்ப்புள்ளது. ஆனால் சாமுவேல் ஆசிரியராக இருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், அவரது மரணம் 1சாமுவேல் **25:1***

ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது தாவீதின் ஆட்சிகால சம்பவங்கள் நடைபெறுவதற்கும் முன்னமே உள்ள காலகட்டத்தைப் பற்றியது. மேலும், நாத்தான் மற்றும் ஞானதிருஷ்டிக்காரனாகிய காத்தும் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளாக தாவீதின் நாட்களில் இருந்தனர். எனவே சாமுவேல் புத்தகம் எழுதும்போது இவர்கள் வாழ்ந்திருக்க வாய்ப்பு இல்லை. இந்த தீர்க்கதரிசிகளின் பிரபந்தங்களில் உள்ள தகவல்கள் 1 மற்றும் 2 சாமுவேல் புத்தகம் எழுத பயன்பட்டிருக்கலாம். உண்மையில் சாமுவேல் புத்தகம் எழுதிய மனிதர் யார் என்பது தெரியாததாக இருக்கிறது. இப்புத்தகம் பெயர் அறியப்படாத ஆசிரியர் எழுதியதாகவே நம் கரங்களில் இருக்கிறது. இதனை எழுதிய ஆசிரியர் கர்த்தருக்கென்று பேசுகிறார். மேலும் சொல்லப்படும் சம்பவங்களுக்கு தெய்வீகத்தன்மை வாய்ந்த விளக்கத்தை அவர் தருகிறார்.

சாமுவேல் புத்தகத்தில் அது தொகுத்து எழுதப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை. இஸ்ரவேல் மற்றும் யூதா என ராஜ்ஜியங்கள் பிரிக்கப்பட்ட கி.மு. 931-க்கு பின் எழுதப்பட்டது என்பது மட்டும் மிகத் தெளிவாக இருக்கிறது. காரணம், இஸ்ரவேல் வேறு யூதா வேறு என்று பிரித்து தெளிவான வேதாகம குறிப்புகள் பல பகுதிகளில் காணப்படுகின்றன (1சாமு.11:8; 17:52; 18:16; 2சாமு.5:5; 11:11; 12:8; 19:42-43; 24::9). “சிக்லாக் இந்நாள் வரைக்கும் யூதாவின் ராஜாக்களைச் சேர்ந்திருக்கிறது” என நாம் 1சாமு 27:6-ல் காண்பது சாலமோன் காலத்திற்குப் பின் இப்புத்தகம் எழுதப்பட்டது என்பதற்கான மிகத்தெளிவான ஆதாரம். எவ்வளவு காலத்திற்குப்பின் எழுதப்பட்டது என்பதற்கான தெளிவான ஆதாரம் இல்லை. ஆனாலும், எபிரேயரில் எழுதப்பட்ட புனித புத்தகங்கள் என்ற வரிசையில் - யோசுவா, நியாயாதிபதிகள், 1 மற்றும் 2 ராஜாக்கள் உடன் 1 மற்றும் 2 சாமுவேல் சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. முந்தைய தலைமுறை தீர்க்கதரிகளின்

புத்தகங்கள் ஓர் அணியில் சேர்க்கப்படுமானால், சாமுவேல் புத்தகம் இஸ்ரவேலர் பாபிலோனியரால் சிறைபிடிக்கப்பட்ட காலத்தில் (கி.மு 560-540) எழுதப்பட்டிருக்கும். ஆனாலும், சாமுவேல் புத்தகத்தின் எழுத்து நடை ராஜாக்கள் புத்தகத்தைவிட வேறுபட்டு இருக்கிறபடியால், ராஜ்ஜியங்கள் பிரிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட காலகட்டத்திற்கு முன்பு எழுதப்பட்டிருகலாம் என கருதப்படுகிறது (கி.மு. 931 -722). பின்நாட்களில் முந்தையநாட்கள் தீர்க்கதரிசிகளின் தொகுப்புடன் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

1 மற்றும் 2 சாமுவேல் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான சம்பவங்கள், இஸ்ரவேல் தேசத்தின் மைய்ய மலைப்பகுதிகளில் நிறைவேறி இருக்க வேண்டும். இஸ்ரவேல் தேசம் என்பது வடக்கே எப்பிராயீம் மலைத்தேசத்தில் (1சாமு.1:1; 9:4) இருப்பது தெற்கே யூதா மலைப்பிரதேசம் (யோசுவா 20:7, 21:11) இடைப்பட்ட 90 மைல்கள், கிழக்கில் இருந்து மேற்கே 15 லிருந்து 35 மைல்கள் தூரம் இடைப்பட்ட பகுதி ஆகும். மைய்ய மலைப்பகுதிகள் உயரம் கடல்மட்டத்தில் இருந்து 1,500 லிருந்து 3,300 அடி வரை இருக்கும். 1 மற்றும் 2 சாமுவேலின் புத்தகங்களின் குறிப்பிடப்பட்டிருக்கும் பட்டணங்கள், சீலோ - ஏலியின் வீடு மற்றும் ஆசரிப்புக் கூடாரம் இருந்த இடம்; ராமா - சாமுவேலின் சொந்த பட்டணம். கிபியா - சவுலின் தலைநகரம்; பெத்லகேம் - தாவீது பிறந்த ஊர்; எபிரோன் - தாவீது யூதாவை அரசாண்ட நாட்களில் அவனது தலைநகரம். மற்றும் எருசலேம் - இறுதியான “தாவீதின் நகரம்”.

1 மற்றும் 2 சாமுவேல் புத்தகங்களில் சாமுவேல் பிறந்த வருடம் கி.மு. 1105-ல் (1சாமு.1:1-28) இருந்து தாவீது தன் கடைசி வார்த்தைகள் (2சாமு.23:17) பேசிய வருடம் கி.மு. 971 வரை

*உள்ள நாட்களில் இந்த சம்பவங்கள் நிறைவேறின. ஆக, இந்த புத்தகம் ஏறக்குறைய 135 வருடங்கள் வரலாற்றை விவரிக்கிறது. இந்த ஆண்டுகளில், இஸ்ரவேல், ''நியாயதிகளின்'' விசாரிப்பின் அடியில் ஒரு தளர்வாக பின்னப்பட்ட கோத்திரமாக இருந்து - மறுரூபமடைந்து மையப்படுத்தப்பட்ட ராஜாவின் அரசாட்சிக்குள் ஒன்று சேர்ந்த தேசமாக மாறி இருந்தது. அவர்கள் கி.மு.1105 -1030 வரை சாமுவேலை நோக்கிப் பார்த்தனர், பின்னர் கி.மு.1050 -1011 வரை சவுல் ஆட்சி செய்தார், அதற்கடுத்து தாவீது கி.மு.1011-971 வரை ஒன்று சேர்ந்த ஏகாதிபத்திய இராஜ்ஜியத்திற்கு ராஜாவாக வீற்றிருந்து ஆட்சி செய்தார்.*

## வரலாற்று கருப்பொருள் மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*1சாமுவேல் புத்தகம் ஆரம்பிக்கும் வேளையில், இஸ்ரவேலர் ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகவும் மோசமான இடத்தில் இருந்தனர். ஆசாரியத்துவம் சிதைந்து போய் இருந்தது (1சாமு.2:12-17; 22-26). உடன்படிக்கைபெட்டி ஆசரிப்பு கூடாரத்தில் இல்லை (1சாமு.4:3-7:2). இஸ்ரவேலர் விக்கிரகாரதனையில் ஈடுபட்டிருந்தனர் (1சாமு.7:3,4). நியாயாதிபதிகள் நேர்மையற்றவர்களாக இருந்தனர் (1 சாமு.8:2,3). தேவபயத்துடன் இருந்த சாமுவேல் (1சாமு.12:23) மற்றும் தாவீதினால் (1 சாமு.13:14) நிலைமை மாறியது. இரண்டாம் சாமுவேல் புத்தகம் "கர்த்தர் தேசத்துக்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார், இஸ்ரவேலின் மேல் இருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது'' (2 சாமு.24:25) என முடிவடைகிறது.*

*1 மற்றும் 2 சாமுவேல் விவரிக்கும் ஆண்டுகளில் பண்டைய உலகில் இருந்த சாம்ராஜ்ஜியங்கள் பெலவீனப்பட்டு இருந்தன. எகிப்து அல்லது மெசெபோத்தாமியா வல்லரசுகள், பாபிலோன்*

*மற்றும் அசீரியா - ஆகிய எந்தவொரு தேசமும் இஸ்ரவேலருக்கு அச்சுறுத்தலாக இல்லை. இஸ்ரவேலருக்கு விரோதிகளாக - அதிகப்படியாக இருந்த இரண்டு தேசங்கள் - மேற்கில் பெலிஸ்தியர் (1சாமு.4:7, 13; 14; 17;23; 31; 1சாமு.5) மற்றும் கிழக்கில் அம்மோனியர்கள் (1சாமு.11: 2சாமு.10-12). அதிக எண்ணிக்கையிலான பெலிஸ்தியர் - ஏஜியன் தீவுகள், ஆசியா மைனர் பகுதிகளில் இருந்து 12-ஆம் நூற்றாண்டில் குடிபெயர்ந்திருந்தனர். எகிப்திற்குள் செல்ல அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டபோது அவர்கள் கானான் தேசத்து மத்தியதரைக்கடல் பகுதியில் ஏற்கெனவே இருந்த பெலிஸ்தியருடன் சேர்ந்து குடியேறினர்.*

*பெலிஸ்தியர் இரும்பை பயன்படுத்துவதை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். இது அவர்களை இராணுவ மற்றும் பொருளாதார பெலத்தில் இஸ்ரவேலரைக் காட்டிலும் மேலாக வைத்தது (1சாமு.13:19-22). அம்மோனியர்கள் லோத்தின் வழிவந்தவர்கள் (ஆதி.19:38). இவர்கள் ஜோர்டான் பீடபூமி பகுதியில் வாழ்ந்தவர்கள் தாவீது இஸ்ரவேல் தேசத்தைச் சுற்றியிருந்த தேசங்களுடன் சேர்ந்து (2சாமு.8:2-14), பெலிஸ்தியர் (2சாமு.8:1) மற்றும் அம்மோனியரையும் மேற்கொண்டார் (2சாமு.12:29-31).*

*1 மற்றும் 2 சாமுவேல் புத்தகங்களில் நான்கு இறையியல் கருப்பொருட்கள் மேலோங்கி நிற்கின்றன. முதலாவது, தாவீதின் உடன்படிக்கை, அன்னாளின் ஜெபத்தில் சொல்லப்படும் "அபிஷேகிக்கப்பட்ட" ராஜா (1சாமு. 2:10) மற்றும் தாவீதின் பாடல்களை, (2சாமு:22:51) குறிப்பாக எடுத்துக்கொண்டு இந்த புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது தேவனுக்கு விரோதமாக எழும்பும் தேசங்களை ஜெயிக்கும் ராஜாவாகிய மேசியாவை குறிக்கிறது (ஆதி.49:8-12; எண்.24:7-9; 17-19). கர்த்தருடைய வாக்குதத்தத்தின்படி, தாவீதின் வம்சத்தில் மேசியா வருவார்; வந்து தாவீதின் சிங்காசனத்தை சதாகாலத்திற்கும்*

நிலைப்படுத்துவார் (2 சாமு.7:12-16). சாமுவேல் புத்தகத்தில் குறித்து வைக்கப்பட்டுள்ள தாவீதின் வாழ்க்கை குறிப்புகள் எதிர்காலத்தில் அவரது வம்சவழியில் வரும் - அவரின் குமாரனுக்கு (அதாவது கிறிஸ்துவிற்கு ) நிழலாட்டமாக இருக்கின்றன.

இரண்டாவது, தேவனுடைய அரசாட்சி இப்புத்தகங்களில் மிகத் தெளிவாக காணப்படுகிறது. ஒரு உதாரணம், அன்னாளின் ஜெபம் கேட்டு பதிலாக சாமுவேல் பிறந்தது (1சாமு.9:17; 16:12,13) கூடவே, தாவீது இஸ்ரவேலரை ஆட்சி செய்ததை வைத்துப் பார்க்கும்போது, தேவனுடைய திட்டத்தை எதுவும் தடுக்க முடியாது என்பது தெளிவாகிறது.

மூன்றாவது, தேவன் நியமித்த பணிகளை செய்யும் மனுஷருக்கு அதிகாரம் அளிப்பதில் பரிசுத்த ஆவியானவர் இறங்கிச் செயல்படுவதைக் காண்கிறோம். சவுலும், தாவீதும் ராஜாக்களாக அபிஷேகிக்கப்பட்டவுடன் கர்த்தருடைய ஆவியானவர் அவர்கள் இருவர் மீதும் இறங்கினதைக் காண்கிறோம் (1சாமு.10:10; 16:13). பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவர்களுக்கு தீர்க்கதரிசன வார்த்தைகளை உரைத்தது (1சாமு.10:6), உடன் யுத்தத்தில் அவர்களுக்கு ஜெயத்தைத் தந்தது. (1சாமு.11:6).

நான்காவது, சாமுவேல் புத்தகங்கள் தனிப்பட்ட நபர் அல்லது தேசத்தின் பாவத்தினால் விளையும் விளைவுகளை நிரூபிக்கிறது. ஏலி மற்றும் அவனது குமாரர்களின் பாவங்கள் அவர்களின் மரணத்திற்கு காரணமாகியது (1சாமு.2:12-17; 22-25; 3:10-14; 4:17-18). உடன்படிக்கைப் பெட்டியினிடத்தில் அதற்குரிய பயபக்தியை செலுத்தாதபடியால், அனேக இஸ்ரவேலர்கள் மரித்துப் போக காரணமானது எனவும் காண்கிறோம் (1சாமு.6:19; 2சாமு.6:6,7). சவுலின் கீழ்ப்படியாமை, இஸ்ரவேலின் ராஜ்ஜியபாரத்தில் இருந்து, அவரை நிராகரிக்கப்பண்ணி, கர்த்தரை நியாயம் தீர்க்க்கும்படிச் செய்தது

*(1சாமு.13:9; 13:14; 15:8,9,20-2).* தாவீது செய்த விபச்சாரம் மற்றும் கொலை குற்றத்தை அவர் உணர்ந்து, அறிக்கை செய்தபடியினால் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டார். எனினும், அப்பாவத்தின் தவிர்க்கமுடியாத மற்றும் அழிவுகரமான விளைவினை அவர் சந்திக்கத்தான் வேண்டி இருந்தது *(2சாமு.12 :14).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

சாமுவேலின் புத்தகங்களில் விளக்கம் அளிப்பதில் அனேக சவால்கள் இருக்கின்றன. அவைகளை இங்கே விரிவாக காணலாம்.

அசல் கையெழுத்துப்பிரதியுடன் பண்டைய காலத்து பிரதிகளில் எந்த பிரதி மிக நெருக்கமான அர்த்தத்தை தருகிறது? எபிரேய (மேசேரெட்டிக்) என்னும் உரைமூலம் ஒப்பிட்டுபார்ப்போமானால், மிகவும் தரம் குறைந்த நிலையில் ஆவணம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதனால், *LXX* மொழிபெயர்ப்பு அதிக இடங்களில் வேறுபடுகிறது. ஆக, மூல மொழியில் என்ன அர்த்தத்தில் எழுதியிருப்பார்கள் என்று உறுதியாக தீர்மானிக்கமுடியாமல் போய்விட்டது (1சாமுவேல்13:1 ஐ பார்க்கவும்). *NKJV* மொழிபெயர்ப்பு மேசோரெட்டிக் என்னும் - யூத புனித புத்தக உரையை எடுத்துப் பயன்படுத்துகிறது. எங்கெல்லாம் அதிகப்படியான மாறுதல் வருகிறதோ, அதை புத்தகத்தின் அடிக்குறிப்பில் குறிப்பிடுகிறது. மிகப்பெரிய இலக்கண அல்லது கூறப்படும் சூழலில் அசாத்தியாமான செய்திகளில் வேறுபாடு இல்லாத போது - மேசேரட்டிக் உரையே மூல மொழி கூறும் செய்தி என்று அப்படியே எடுத்தாளப்படுகிறது. அனேக இடங்களில் உள்ள மொழிபெயர்ப்பு வித்தியாசத்திற்கான காரணம் இதில் இருந்து விளங்குகிறது.

*சாமுவேல் இஸ்ரவேலில் மனுஷரை ராஜாவாக அமர்த்துவதில் தெளிவற்றவராக இருந்தாரா? 1சாமு.9-11ல் ராஜாவை ஏற்படுத்துவதில் அவர் உடன்பட்டு இருந்தார் எனக் காண்கிறோம். அதேவேளையில் 1 சாமு. 8 மற்றும் 12 அரசாட்சிக்கு விரோதமாக பேசுகிறது. இந்த புத்தகம் மனுஷரை ராஜாவாக அமர்த்தி, ஆட்சிபுரிய வைப்பது குறித்து ஒரு சமன்செய்து பார்க்கும் பார்வையைக் கொண்டிருக்கிறது எனலாம். இஸ்ரவேலில் ராஜா வேண்டும் என விரும்பினது - ஏற்றுக் கொள்ளப்பட்டது (உபா.17:15), ஆனால், அவர்கள் ராஜா வேண்டும் எனக் கேட்டதற்கான காரணம் கர்த்தரிடத்தில் அவர்களுக்கு விசுவாசம் இல்லை என்பதைக் காட்டியது.*

*தீர்க்கதரிசிகளின் தெளிவற்ற நடவடிக்கைகள் குறித்து எப்படியாக ஒருவர் விளக்கம் தரமுடியும்? 1 மற்றும் 2 சாமுவேல்* புத்தகங்கள் *தீர்க்கதரிசிகளை களிப்பூட்டும்* பேச்சாளர்கள், மேலும் *புறஜாதிகளின் விக்கிரக ஆராதனை* செய்யும் *தீர்க்கதரிசிகளைப்போல* தெளிவற்ற *நடத்தை* கொண்டவர்களாக *சித்தரிக்கிறது என்பது* பொதுவான, *தவறான எண்ணம். வேதாகமத்தில் இந்த கருத்திற்கு மாறாக தான் இருக்கிறது.* எந்தவொரு *இடத்திலும்* தெய்வீக வெளிப்படுத்தலைச் சொல்லுவதைத் *தவிர* வேறு *விதமாக தீர்க்கதரிசிகள் நடந்து* கொள்வதையோ *அல்லது ஓர் இசைக் கருவியை* வைத்துக் கொண்டு *மக்களை களிப்பூட்டுவதாகவோ தீர்க்கதரிசிகளை குறித்து இந்த புத்தகத்தில் எங்கும் காணவில்லை.*

பெந்தெகோஸ்தே *நாட்களுக்கு முன் எப்படி பரிசுத்த ஆவியானவர் எப்படி* செயல்படலாம்? *பரிசுத்த ஆவியானவர் இறங்கி* செயல்பட்டார் *என நாம் 1சாமு.10:6,10; 11:6; 16:13,14; 19:20,23; 2சாமு.23:2 வசனங்களில் காண்பது, புதியஏற்பாட்டில் ஆவியானவர் இரட்சிப்புக்கு விளக்கம் தருவது* போன்ற செயல் *அல்ல. மாறாக, அவரது* சேவைக்கு *கர்த்தர்*

*தாமே அதிகாரம் அளித்து அவர்களை நியமிப்பது போன்றதாக இருந்தது. (நியா 3:10; 6:34; 11:29; 13:25; 14:6; 15:14).*

*"கர்த்தரால் அனுப்பிவிடப்பட்ட பொல்லாத ஆவி (1சாமு.16:14)" என்பதன் அடையாளம் என்ன? அது தனிப்பட்ட நபரைப்பொறுத்ததா? அதாவது, ஒரு பிசாசு அல்லது ஒரு பொல்லாப்பு உண்டாக்கும் ஆவி இருதயத்தில் தேவனால் உண்டுபண்ணப்பட்டதா? (நியா.9:23). பாரம்பரிய வழக்கமாக, இது ஒரு பிசாசு என்று பார்க்கப்படுகிறது.*

*1சாமு.28:3-5-ல் எப்படி சாமுவேல் தோன்றினார்? சாமுவேலைப்போன்ற தோற்றம் சவுலுடன் பேசும்படிக்கு தோன்றியது, மரித்த சாமுவேலே வந்து பேசுவது போல் காட்சி அளித்தது.*

*2சாமு.7:12-15-ல் தாவீதின் கர்ப்ப பிறப்பாகிய சந்ததி என்று சொல்லப்பாட்டு இருப்பது யாருக்கு அடையாளம்? பொதுவாக இது சாலமோனைக் குறிக்கிறது என எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனாலும், புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தைகள் எபிரேயர் 1:5-ல் இயேசுவை, தேவனுடைய குமாரனைக் குறிக்கின்றன என்கிறது.*

# இராஜாக்கள் (1 மற்றும் 2)

## தலைப்பு:

முதலாம் மற்றும் இரண்டாம் இராஜாக்கள் புத்தகம் ஒரே புத்தகமாக தான் ஆரம்பத்தில் இருந்தது. மூல எபிரேய புத்தகம் - இதன் பெயரை முதல் அதிகாரம் முதல்வசனத்தில் இருக்கும் "இராஜா" என்ற அடைமொழியில் இருந்து - இதன் தலைப்பைப் பெற்றுள்ளது. பழைய ஏற்பாட்டின் செப்டுவாஜிண்ட் (LXX), கிரேக்க மொழிபெயர்ப்பு இந்த புத்தகத்தை இரண்டாக பிரித்தது. தொடர்ந்து லத்தீன் பதிப்பு (Vg.) மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகள் இரண்டாக பிரித்தன. நீளமான தோல்சுருள் மற்றும் வேதாகம கையெழுத்துப்பிரதிகளை பிரதி எடுக்க வசதியாக பிரிக்கப்பட்டதேயல்லாமல், புத்தகத்தின் உள்ளடக்கத்தைப் பொறுத்து அல்ல. நாகரீக எபிரேய வேதாகமங்கள் இப்புத்தகங்களுக்கு "இராஜாக்கள் அ" "இராஜாக்கள் ஆ" எனப் பெயரிட்டுள்ளன. LXX மற்றும் Vg. ராஜாக்கள் புத்தகத்தை சாமுவேல் புத்தகத்துடன் இணைத்து "மூன்றாம் மற்றும் நான்காம் ராஜ்ஜியத்தின் புத்தகங்கள்" என தலைப்பிட்டுள்ளன. Vg. பதிப்பில் இதன் பெயர் "மூன்றாம் மற்றும் நான்காம் இராஜாக்கள்". 1 மற்றும் 2 சாமுவேல் 1 மற்றும் 2 இராஜாக்கள் புத்தகத்துடன் இணைந்து, யூதா தேசம் மற்றும் இஸ்ரவேல் தேசத்து இராஜாக்கள் - அதாவது, சவுலில் இருந்து சிதேக்கியா இராஜா வரை உள்ள இராஜாக்களின் ஆண்டுக்கணிப்பைக் கூறுகிறது. யூதா தேசத்து இராஜாக்களின் ஆண்டுக்கணிப்பை மட்டுமே 1 மற்றும் 2 நாளாகம புத்தகங்கள் தருகின்றன.

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*இது சாத்தியமற்றதாக இருந்தாலும், யூத பாரம்பரியம் ராஜாக்களின் புத்தகத்தை எரேமியா எழுதியிருக்கலாம் என கருதுகிறது. ஏனென்றால், இப்புத்தகத்தின் கடைசி சம்பவம் பாபிலோனில் கி.மு. **561-**ல் நடைபெற்றது என குறித்துள்ளது (**2**ராஜா.**25:27-30**). எரேமியா எகிப்திற்கு சென்றாரே (எரே **43:1-7**) அல்லாமல், ஒருபோதும் பாபிலோனியாவிற்குச் செல்லவில்லை. கி.மு **561-**ல், அவருக்கு வயது குறைந்தது **86-**ஆக இருந்திருக்கும். உண்மையில், பெயர் அறியப்படாத இந்த ஆசிரியர் - யார்? என்பதை நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ராஜாக்களின் புத்தகங்களில் தீர்க்கதரிசிகளின் ஊழியங்கள் அதிகமாக வலியுறுத்தப்படுவதால், தேவனுடைய சமூகத்தில் இருந்து தள்ளிவிடப்பட்டு பாபிலோனில் வாழ்ந்த தேவனால் எடுத்துப் பயன்படுத்தப்பட்ட இஸ்ரவேல் தேசத்து தீர்க்கதரிசி ஒருவரால் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.*

*ஆசிரியர் இந்த புத்தகத்தைத் தொகுத்து எழுத “சாலமோனின் நடபடிகள்” (**1**ராஜா. **11:41**) “இஸ்ரவேல் ராஜாக்களின் நாளாகமம்” (**1**ராஜா.**14:19;15:31; 16:5, 14,20,27; 22:39; 2**ராஜா. **1:18; 10:34; 13:8,12; 14:15,28; 15:11; 15:21,26,31**), “யூதா ராஜாக்களின் நாளாகமம்” (**1**ராஜா.**14:29; 15:7,23; 22:45; 2**ராஜா. **8:23; 12:19; 14:18; 15:6,36; 16:19; 20:20; 21:17,25; 23:28; 24:5**) உட்பட பலதரப்பட்ட ஆதாரங்களை பயன்படுத்தி இருக்கிறார் என்பது தெளிவாகிறது. மேலும், ஏசாயா (**36:1 - 39:8**) தரும் தகவல் **2**ராஜா.**18:9-20:19-**க்கும் எரேமியா **52:31-34 - 2**ராஜா.**25:27-29-**க்கும் ஆதாரமாக இருப்பதையும் காண்கிறோம். இவைகளை வைத்து பார்க்கும் போது, பாபிலோனுக்கு தேவனுடைய சமூகத்தில் இருந்து தள்ளிவிடப்பட்டு இருந்த ஒரு தனிநபர், நாடு கடத்தப்படுவதற்கு முன் தனக்கு கிடைத்த ஆதாரங்களைப் பயன்படுத்தியவர், இதன் ஆசிரியராக இருந்திருக்கலாம் என்று யூகிக்க முடிகிறது.*

## பிண்ணனி மற்றும் அமைப்பு

*புத்தகத்தின் ஆதாரங்களுக்குரிய அமைப்பு, புத்தகங்களின் ஆசிரியர் அமைத்த காட்சி அமைப்பு இவ்விரண்டின் தனித்தன்மையை வேறுபடுத்தி பார்க்க வேண்டும். சம்பவங்களை கண்ணாரக்கண்ட சாட்சிகள் மற்றும் அதில் பங்குபெற்றவர்களினால் புத்தக ஆதார உள்ளடக்கங்கள் எழுதப்பட்டவை. இந்த தகவல்கள் சரித்திரபூர்வமாக துல்லியமானவைகள் - உதாரணத்திற்கு, இஸ்ரவேல் புத்திரர் குறித்து பேசுபவை, தாவீதின் மரணம் மற்றும் சாலமோன் ராஜாவாகுதலில் (கி.மு. 971) இருந்து தேவாலயமும் எருசலேமும் பாபிலோனியர்களால் அழிக்கப்படுதல் வரை (கி.மு. 586) பேசுகின்றன. ஆக, ராஜாக்கள் புத்தகம் இரண்டு பிரிவுபட்ட ராஜாக்கள் மற்றும் தேவனுடைய பிரமாணத்திற்கும் அவரது தீர்க்கதரிசிகளுக்கும் கீழ்ப்படியாத ஜனங்களால் ஆன தேசங்கள் இஸ்ரவேல், யூதா என்று அழைக்கப்பட்ட, சிறைபிடிப்புக்கு நேராகச் சென்ற தேசங்களின் வரலாற்றின் தடயங்களை ஆராய்கிறது.*

*ராஜாக்களின் புத்தகம் ஒர் வரலாற்று புத்தகம் மட்டுமல்ல, விளக்கம் அளிக்கப்பட்ட வரலாறு. பாபிலோனியரால் நாடுகடத்தப்பட்டவராக இருந்தவர், ஆசிரியர், நாடுகத்தப்பட்டவர்களாக இருந்தவர்கள், இஸ்ரவேலின் வரலாற்றில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை இவை என அறிவுறுத்த விரும்பினார். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், அவர் நாடுகடத்தப்பட்டவர்களின் மீது தேவனின் நியாயதீர்ப்பு ஏன் வந்தது என அவர்களுக்கு எடுத்துரைத்தார். ஆசிரியர்-தான் கூறும் விளக்கத்தில் ராஜாக்கள் அவர்களின் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை நிலைக்கப்பண்ண - தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள - ராஜாவாக ஆட்சிபொறுப்பில் இருப்பவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு - கீழ்ப்படியவேண்டியது அவசியம் என முதலிலேயேக் கூறியிருந்தார். கீழ்ப்படியாமை -*

*தேவ சமூகத்தில் இருந்து அவர்கள் தள்ளிவிடப்படுதலைக் கொண்டுவரும் (1ராஜா. 9:3-9). வரலாற்றை புரட்டி பார்க்கும் போது வெளிப்பட்ட சோகமான உண்மை என்னவென்றால் - இஸ்ரவேலின் அனைத்து இராஜாக்களும் யூதாவின் அதிகபட்சமான ராஜாக்களும் "கர்த்தருடைய பார்வையில் பொல்லாப்பானதைச் செய்தார்கள்" என்பதே. இந்தப் பொல்லாத இராஜாக்கள், அவர்களது ஜனங்களை விக்கிரகாரதனைக்கு எதிர்த்து நிற்க பழக்காமல், அதனை ஆதரித்து விசுவாச துரோகிகள் ஆனார்கள். ராஜா உண்மை தவறிய வேளையில், ராஜாக்களும், பாவத்துடன் வாழும் ஜனங்களும் மனம்திரும்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த கர்த்தர் தமது தீர்க்கதரிசிகளை அனுப்பினார். இந்த தீர்க்கதரிசிகளின் செய்திகள் நிராகரிக்கப்பட்டப்படியால், தீர்க்கதரிசிகள் தேசங்களின் ஜனங்கள் தேவனின் சமூகத்தை விட்டு அகற்றப்படுவார்கள் என முன்கூட்டியே எச்சரித்தார்கள் (2ராஜா.17:13-23; 21:10-15). ராஜாக்களின் புத்தகத்தில் தீர்க்கத்ரிசிகள் உரைத்த ஒவ்வொரு தீர்க்கத்ரிசனமும் நிறைவேறினதுபோல, கர்த்தரிடத்தில் இருந்து வந்த இந்த வார்த்தையும் நிறைவேறியது (2ராஜா.17:5,6; 25:1-11). ஆகையால், ராஜாக்கள் - ஜனங்கள் தேவசமூகத்தை விட்டு அகற்றப்பட்ட உட்பொருளை வெளிப்படுத்தி, ஜனங்கள் - தாங்கள் விக்கிரக ஆராதனையினால் - தேவதண்டனைக்கு ஆளானோம் என்பதை காண அவர்களுக்கு உதவினர். தேவன் எவ்விதமாக ஆகாப்பிற்கு (1ராஜா.21:27-29) யோயாக்கீனுக்கு (2ராஜா.25:27-30) இரக்கம் காட்டினாரோ, அவ்விதமாக அவர்களுக்கும் இரக்கம் காட்ட விருப்பமாக இருந்தார் என்பதையும் விளக்கியது.*

*ராஜாக்களின் புத்தகத்தில் மேலோங்கி நிற்கும் பூகோள அமைப்பு - இஸ்ரவேல் தேசம் முழுவதும், தாண் முதல் பெயர்செபா (1ராஜா.4:225) வரை யோர்தானைச்சுற்றியுள்ள பகுதிகள் (1ராஜா.4:25) கி.மு.971-லிருந்து கி.மு.561 வரை படையெடுத்து*

*வந்த நான்கு தேசங்கள், இஸ்ரவேல் மற்றும் யூதா தேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்தின. கி.மு பத்தாம் நூற்றாண்டில் சாலமோன் மற்றும் யெரொபெயாம் (1ராஜா.3:1; 11:14-22,40; 12:2; 14:25-27). அரசாண்ட காலங்களில் எகிப்து - இஸ்ரவேலின் வரலாற்றில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியது. சிரியா (ஆராம்) கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் இஸ்ரவேலின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக (கி.மு. 890-800) இருந்தது (1ராஜா.15:9-22; 20:1-34; 22:1-4,29-40; 2 ராஜா.6:8 -7:20; 8:7-15; 10:32,33; 12:17,18; 13:22-25).*

*கி.மு.800-ல் இருந்து கி.மு.750 வரையிலான ஐம்பது ஆண்டுகள் - இஸ்ரவேல் மற்றும் யூதா தேசத்திற்கு சமாதானமும் சுபிட்சமுமாக இருந்தது - காரணம், அசீரியர்கள் சிரியா தேசத்தாரை சமன் செய்து வந்தபடியால் தென்பகுதிக்கு அச்சுறுத்தலாக சிரியா அக்காலங்களில் இல்லை. திக்லாத்-பிலேயெசர் III (2ராஜா.15:19,20,29) காலத்தில் இதில் மாற்றம் ஏற்பட்டது. எட்டாம் நூற்றாண்டின் மத்திய நாட்களில் இருந்து கி.மு. ஏழாம் நூற்றாண்டு கடைசி காலம் வரைக்கும் அசீரியா இஸ்ரவேலருக்கு அச்சுறுத்தலாக இருந்து, இறுதியில் இஸ்ரவேலை மேற்கொண்டு (ராஜ்ஜியத்தின் வடபகுதியை) கி.மு.722 -ல் அழித்துப்போட்டது (2ராஜா.17:4-6) கி.மு. 701-ல் எருசலேமை முற்றிகைபோட்டது (2ராஜா.18:17-19:37). கி.மு. 612-லிருந்து கி.மு. 539 வரை பாபிலோன் தான் பண்டைய தேசங்களுக்கு நடுவே ஆதிக்கத்தில் இருந்த தேசம். பாபிலோன் யூதா மீது 3 முறை (தென் தேசத்து ராஜ்ஜியம் மீது) படையெடுத்தது இதில் மூன்றாவது முறை படையெடுத்த போது, எருசலேமும் அதன் ஆலயமும் கி.மு.586-வில் அழிக்கப்பட்டது (2ராஜா.24:1-25:21).*

## வரலாற்று கருப்பொருள் மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*அதற்குப்பின், கி.மு.971வில் இருந்து கி.மு. 561 வரை உள்ள இஸ்ரவேல் புத்திரரின் வராற்றில் ராஜாக்கள் புத்தகம் கவனம் செலுத்துகிறது. முதல் ராஜாக்கள் 1:1-11:43 சாலமோன் அரியணை ஏறுவது, ஆட்சி செய்வது குறித்து பேசுகிறது (கி.மு.971-931). இரண்டாக பிரிக்கப்பட்ட இஸ்ரவேல் மற்றும் யூதா தேசங்களை குறித்து 1ராஜா.12:1; 2ராஜா.17:41 வசனங்களில் காண்கிறோம். வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் இருந்த ராஜாக்களை குறித்து எடுத்துச்சொல்வதில் ஆசிரியர் கருப்பொருட்களை அழகாக வேறுபடுத்திக் காட்டியுள்ளார். ஒவ்வொரு அரசாட்சியை குறித்தும் விளக்கம் தரும் போதும் கீழ்க்காணும் இலக்கிய கட்டமைப்பு பின்பற்றபடுவதைப் பார்க்கிறோம். ஒவ்வொரு ராஜாவும் 1) அவரது பெயர் மற்றும் முந்தைய ராஜாவிற்கும் இவருக்கும் என்ன தொடர்பு; 2) நடைமுறையில் இருக்கும் அடுத்த தேசத்து ராஜாவின் வருஷத்திற்கும் - ஆட்சிபொறுப்பை ஏற்கும் ராஜாவின் நாளுக்கும் உள்ள தொடர்பு; 3) அரியணை ஏறும் போது அவரது வயது (யூதாவின் ராஜாக்களுக்கு மட்டும் பொருந்தும்); 4) ஆட்சிசெய்த காலம்; 5) ஆட்சிசெய்த இடம்; 6) அவரது தாயாரின் பெயர் (யூதாவின் ராஜாக்களுக்கு மட்டும் பொருந்தும்); மற்றும் 7) அவரது ஆட்சியில் இறையியல் தொடர்பான மதிப்பீடு. இந்த அறிமுகத்தை தொடர்ந்து ஒவ்வொரு ராஜாவின் காலத்தில் என்ன என்ன சம்பவங்கள் நடைபெற்றன என்பதற்குரிய விளக்கம். இந்த விளக்கங்கள் ஒன்றுக்கொன்று மிக அதிக அளவில் வேறுபடுகின்றன. ஒவ்வொரு விளக்கமும் இச்செய்தியுடன் முடிவடைகிறது: 1) எந்த ஆதாரங்களில் இருந்து எடுத்தாளப்படுகின்றது என்ற விபரம். 2) மேலதிக வரலாற்று குறிப்புகள், 3) மரணத்தைக் குறித்த அறிவிப்பு, 4) அடக்கம் செய்யப்படுதலைக் குறித்த செய்தி, 5) அடுத்து யார் பொறுப்பேற்கிறார்கள் என்ற செய்தி, 6) சில இடங்களில் சற்று அதிகமான இறுதி தகவல்கள் (உதாரணத்திற்கு 1ராஜா.15:32; 2 ராஜா.10:36). 2ராஜா 18:1-*

*25:21 வசனங்களில் யூதா தேசம் தனித்து இருந்த காலத்தைக் குறித்து பார்க்கிறோம் (கி.மு.722-586). பாபிலோனியாவில் இருந்து வெளியேறிய நாட்களில் நடந்தேறிய சம்பவங்கள் குறித்து இரண்டு இறுதி பத்திகள் பேசுகின்றன (2ராஜா.25:22-26,27-30).*

*ராஜாக்கள் புத்தகத்தில் மூன்று இறையியல் கருப்பொட்கள் வலியுறுத்தப்படுகின்றன. முதலாவது, கர்த்தர் இஸ்ரவேல் மற்றும் யூதா தேசத்தை அவருடைய பிரமாணங்களுக்கு இஸ்ரவேலர் கீழ்ப்படியாதபடியால் நியாயம் தீர்த்தார் (2ராஜா.17:7-23). ஜனங்கள் மத்தியில் காணப்பட்ட இந்த உண்மையில்லாத தன்மை, பொல்லாத ராஜாக்களின் விசுவாச துரோகம் அவர்களை விக்கிரகாராதனைக்குள் அதிகமாக வழிநடத்தியது (2 ராஜ. 17:21, 22; 21:11). இதனால், கர்த்தர் தம்முடைய நீதியுள்ள கோபத்தை - அவரது கலகம் செய்யும் ஜனங்களுக்கு விரோதமாக வெளிப்படுத்தினார். இரண்டாவது, மெய்யான தீர்க்கதரிசிகளின் வார்த்தை நிறைவேறினது (1 ராஜா.13:2,3; 22:15-28; 2ராஜா.23:16, 24:2). இது கர்த்தர் தமது நியாயத்தீர்ப்பின் எச்சரிக்கையை கொடுத்திருந்த போதிலும், அவர் தந்த வார்த்தையில் உண்மையாக இருந்தார் என்பதை உறுதிப்படுத்தியது. மூன்றாவது, கர்த்தர் தாம் தாவீதிற்கு அளித்திருந்த வாக்குதத்தத்தை நினைவுகூர்ந்தார் என்பது (1ராஜா.11:12-13, 34-36; 15:4; 2 ராஜா.8:19) தாவீதின் வம்சத்தில் வந்த ராஜாக்கள் கர்த்தருக்கு கீழ்ப்படியாதவர்களாக இருந்தபோதிலும், இஸ்ரவேலில் இருந்த யெரோபெயாம் I, உம்ரி மற்றும் யெகூ இவர்களின் குடும்பத்தாருக்கு என்ன நடந்ததோ அதைப்போல தாவீதின் வம்சத்திற்கு / குடும்பத்தாருக்கு சம்பவிக்க விடவில்லை. புத்தகம் நிறைவுறும் வேளையில், தாவீதின் வம்சவழியினர் ஜீவித்து இருப்பதைக் காண்கிறோம் (2ராஜா. 25:27-30), அதினால் தாவீதின் "வித்திற்கு" நம்பிக்கை இருந்து கொண்டிருந்தது (2சாமு. 7:12-*

*16). இதிலிருந்து கர்த்தர் தாம் தரும் வார்த்தைகளைக் காப்பாற்றுபவர் என்பதையும், அவருடைய வார்தையின் மீது நாம் முழுநிச்சயமாக நம்பிக்கை வைக்க அது பாத்திரமானது என்பதையும் அறிகிறோம்.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*ராஜாக்கள் புத்தகத்திற்கு விளக்கம்அளிப்பதில் உள்ள சவால்களில் பெரிதானது - இஸ்ரவேல் மற்றும் யூதா ராஜாக்களின் காலவரிசைப்படி அமைப்பதில் இருக்கிறது. ராஜாக்கள் புத்தகத்தில் காலவரிசை சம்பந்தப்பட்ட தரவுகள் பரிபூரணமாக நிறைந்து இருந்தாலும், அந்த தரவுகளை வைத்து விளக்கம் அளிப்பது கடினமே. முதலாவது, உள்ளுக்குள்ளே கிடைக்கும் தகவல்களில் முரண்பாடு இருப்பது. 1ராஜா.16:23 "யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தோராம் வருஷத்தில், உம்ரி இஸ்ரவேல்மேல் ராஜாவாகி, பன்னிரண்டு வருஷம் ராஜ்யபாரம் பண்ணினான்" என்கிறது. ஆனால் 1ராஜா.16:29 ல் பார்க்கும் போது, "யூதாவின் ராஜாவாகிய ஆசாவின் முப்பத்தெட்டாம் வருஷத்தில் உம்ரியின் குமாரனாகிய... ராஜாவானான்" என்று சொல்லும் போது, உம்ரி 7 வருடங்கள் தான் ராஜ்யபாரம் செய்தது போலவும் 12 வருஷங்கள் அல்ல என்பதாகவும் தெரிகிறது. இரண்டாவது, பரிசுத்த வேதாகமத்தை தவிர, வேறு ஆதாரங்களை (கிரேக்க, அசீரிய மற்றும் பாபிலோனிய) வைத்து, அவற்றை வானசாஸ்திர தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நம்பத்தகுந்த தேதிகளின் வரிசையை கி.மு.892லிருந்து கி.மு. 566 வரை நாம் கண்டறிய முடியும். இஸ்ரவேலின் ராஜாவாகிய, ஆகாப் மற்றும் யெகூ, இவர்களை குறித்த குறிப்புகள் அசீரிய குறிப்பேடுகளில் காண்கிறோம். அதன் அடிப்படையில், கி.மு.853-வில் ஆகாப் மரித்தார் எனவும், கி.மு.841ல் யெகூ ராஜ்யபாரத்தை தொடர்ந்தார் என கணக்கிடலாம். இந்த நாட்களை சரிதிட்டமான நாட்கள் என*

எடுத்துக் கொண்டு இந்நாட்களுக்கு முன்னும் பின்னும் சென்று இஸ்ரவேல் தேசத்தை யூதாவில் இருந்து பிரித்த வருடம் கி.மு.931, சமாரியாவின் வீழ்ச்சி கி.மு.722, எருசலேமின் வீழ்ச்சி கி.மு.586வில் சம்பவித்ததாக நம்பப்படுகிறது. ராஜாக்கள் ராஜ்யபாரம் செய்த மொத்த வருஷங்களை கணக்கிடும் போது, இஸ்ரவேல் தேசத்திற்கு 241 வருஷங்கள் என வருகிறது (கி.மு. 931-722 இடைப்பட்ட 210 வருடங்கள் இல்லை); யூதா தேசத்திற்கு 393 வருஷங்கள் (கி.மு. 931-586 இடைப்பட்ட 346 வருஷங்கள் இல்லை) என கணக்கிடப்படுகிறது. இரு தேசத்து ராஜ்யபாரத்திலும் ஒரு குடும்பத்தினர் ஒரே சமயத்தில் ஆட்சிசெய்த காலங்கள் உண்டு முக்கியமாக, தகப்பன் மற்றும் மகன் ஒரே நேரத்தில் ஆட்சி செய்தனர். இவர்கள் ஆட்சிகாலத்தை கணக்கிடும் போது, ஒன்றுக்குமேல் ஒருவருஷம் சேர்த்து கணக்கிடப்பட்டு இருக்கும் என புரிந்து கொள்ளலாம். வேறொரு காரணம், ராஜாக்களின் காலங்களை கணக்கிட வெவ்வேறு முறைகள் பின்பற்றி இருக்கலாம் உடன் வெவ்வேறுபட்ட நாட்காட்டி இரண்டு தேசங்களில் வெவ்வேறு நாட்களில் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பது இந்த முரண்பாடுகளுக்கு காரணமாக இருக்கலாம். இதைதவிர, நாம் ராஜாக்கள் புத்தகத்தில் பொதுவாக காணப்படும் - ஆண்டுகணிப்பை, வரலாற்று தொடர்வரிசையை எடுத்துக்காட்டலாம் மேலும் உறுதியும்படுத்தலாம்.

விளக்கம் அளிப்பதில் உள்ள இரண்டாவது சவால் ஆபிரகாம் மற்றும் தாவீதின் உடன்படிக்கைகளுடன் சாலமோனுக்கு உள்ள உறவு குறித்து இடைபடுகிறது. 1ராஜா 4:20,21 ஆபிரகாமிற்கு தேவன் அளித்த வாக்குதத்தத்தின் (ஆதி.15:18-21; 22:17) நிறைவேறுதல் என்று விளக்கம் தரப்பட்டது. ஆனால் எண்ணாகமம்.34:6-ல் நாம் காண்கிறது ஆபிரகாமிற்கு வாக்குதத்தம் செய்யப்பட்ட தேசத்தின் மேற்கு எல்லை மத்தியதரைக்கடல் என காண்கிறோம். 1ராஜா.5:1-ல் தீருவின் ராஜாவாக ஈராம் (மத்தியதரைக்கடல் பகுதியையும் சேர்த்து)

*இருப்பதையும் சாலமோனுக்கு சமமாகவும் சொல்லப்படுவதைப் பார்க்கிறோம். சாலமோனின் அதிகாரத்தில் அதிகப்படியான இடங்கள் இருந்தபோதிலும், கர்த்தரால் ஆபிரகாமுக்கு உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தையின் நிறைவேறுதலாக சாலமோனின் ராஜ்ஜியம் இல்லை என்பதையே இதிலிருந்து அறிகிறோம். 1ராஜா.5:5 மற்றும் 8:20-ல் சாலமோன் தான் தாவீதிற்கு வாக்குதத்தம் செய்த வம்சத்தில் வருவதாக உரிமை கோருவதை காணமுடிகிறது (2சாமு.7:12-16). ராஜாக்கள் புத்தகத்தை எழுதிய ஆசிரியரும் - தாவீதிற்கு கர்த்தர் தாம் அருளின வார்த்தையின் நிறைவேறுதலே சாலமோன் கட்டின தேவாலயம் என்ற கருத்தை ஆதரிக்கிறார் எனினும், அந்த வாக்குதத்தம் நிறைவேற என்ன நிபந்தனைகளை கைக்கொள்ள வேண்டும் என்பது சாலமோனுக்கு திரும்ப வலியுறுத்திச் சொல்லப்பட்டது (1ராஜா.6:12), ஆனாலும், நிபந்தனைகளை சாலமோன் நிறைவேற்றவில்லை என்பதையும் காண்கிறோம் (1ராஜா.11:9-13). உண்மையில், தாவீதின் வம்சத்தில் வந்த எந்தவொரு ராஜாவையும் வாக்குதத்தம் செய்ததில் சொல்லப்பட்ட நிபந்தனைகள் யாவற்றையும் நிறைவேற்றியவர் இவர் என்று சொல்லமுடியாது. ராஜாக்கள் புத்தக ஆசிரியரின் கூற்றுப்படி, ஆபிரகாம் மற்றும் தாவீதின் உடன்படிக்கையின் நிறைவேறுதல் இஸ்ரவேலரின் கடந்த காலத்தில் அல்ல என்பது உறுதியாகிறது. இது வருங்காலத்து தீர்க்கதரிசிகள் (ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் ஏனைய பன்னிரண்டு தீர்க்கதரிசிகளின்) வருகைக்கு அஸ்திபாரம் போட்டது. இந்த தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலரின் எதிர்கால நம்பிக்கை - மேசியா தான் எனவும் இவரில் இந்த வாக்குதத்தங்கள் யாவும் நிறைவேறின என்பதையும் சுட்டிகாட்டுகின்றனர் (ஏசா.9:6,7-ஐ பார்க்கவும்).*

**சுருக்கம்**

*I ஒன்றுசேர்ந்து இருந்த ராஜ்ஜியம் : சாலமோனின் ஆட்சி (1ராஜா. 1:1-11:43)*

அ. சாலமோனின் எழுச்சி (1ராஜா.1:1-2:46)

ஆ. சாலமோனின் ஞானம் மற்றும் செல்வ செழிப்பின் ஆரம்பம் (1ராஜா.3:1-4:34)

இ. தேவாலயம் கட்டுவதற்கு ஆயத்தப்படுதல் (1ராஜா.5:1-18)

ஈ. தேவாலயம் மற்றும் சாலமோனின் அரண்மனை கட்டுதல் (1ராஜ.6:1-9:9)

உ. சாலமோனின் மேலுமான கட்டிடப் பணிகள் (1ராஜா.9;10-28)

ஊ. சாலமோனின் ஞானம் மற்றும் செல்வ செழிப்பின் உச்சகட்டம் (1ராஜா.10:1-29)

எ. சாலமோனின் சரிவு (1ராஜா: 11:1-43)

II ராஜ்ஜியம் பிரிக்கப்படுதல்; இஸ்ரவேல் மற்றும் யூதாவின் ராஜாக்கள்

அ. விக்கிரகாரதனை பெருகுதல். இஸ்ரவேலின் யெரொபெயாம்/யூதாவின் ரெகோபெயாம் (1ராஜா.12:1 - 14:31)

ஆ. யூதா/ இஸ்ரவேல் ராஜாக்கள் (1ராஜா.15:1 - 16:22)

இ. உம்ரியின் ராஜவம்சம் மற்றும் அதன் ஆதிக்கம்: இஸ்ரவேலிலும் யூதாவிலும் பாகால் வணக்கத்தில் எழுச்சி மற்றும் வீழ்ச்சி (1ராஜா.16:23 - 2ராஜா.13:25)

1.பாகால் வணக்கத்தின் அறிமுகம் (1ராஜா.16:23-34)

2. பாகால் வணக்கத்திற்கு எலியாவின் எதிர்ப்பு (1ராஜா.17:1 - 2ராஜா.1:18)

3. மெய்யான தேவனை ஆராதிப்பதில் எலிசா வின் செல்வாக்கு (2ராஜா2:1 -9:13)

*4. இஸ்ரவேலில் பாகால் வணக்கம் தூக்கி எறியப்படுதல் (2ராஜா9:14 -10:36)*

*5. யூதாவில் பாகால் வணக்கம் தூக்கி எறியப்படுதல் (2ராஜா 11:1 -12:21)*

*6. எலிசாவின் மரணம் (2ராஜா.13:1 -25)*

*ஈ. யூதா/ இஸ்ரவேலின் ராஜாக்கள் (2ராஜா. 14:1 -15:38)*

*உ. அசீரியர்களால் இஸ்ரவேலர் தோற்கடிக்கப்பட்டு நாட்டை விட்டு துரத்தப்படுதல் (2ராஜா.16:1 -17:41)*

*III மீதமுள்ள ராஜ்ஜியம்: யூதாவின் ராஜாக்கள் (2ராஜா. 18:1 - 25:21)*

*அ. எசேக்கியாவின் நீதிநிறைந்த ஆட்சி (2ராஜா.18:1 - 20:21)*

*ஆ. மனாசே மற்றும் ஆமோனின் பொல்லாப்பான ஆட்சி காலம் (2ராஜா.21:1-26)*

*இ. யோசியாவின் நீதிநிறைந்த ஆட்சி 92ராஜா.22:1 -23:30)*

*ஈ.பாபிலோனியரால் தோற்கடிக்கப்பட்டு தேசத்தைவிட்டு துரத்தப்படுதல் (2ராஜா.23:31 -25:21)*

*IV முடிவுரை: ஜனங்கள் தொடர்ச்சியாக கலகம் செய்து வருதல் இருப்பினும் கர்த்தர் தாம் தொடர்ந்து அவர்களிடம் இரக்கம் காட்டிவருதல் (2 ராஜா.25:22-30).*

## இஸ்ரவேல் மற்றும் யூதாவின் ராஜாக்கள்

## ஒன்று சேர்ந்து இருந்த ராஜ்ஜியம்

*ராஜா* வேதாகம
வசனம்

*சவுல். 1சாமுவேல்9:1-31;1நாளாகமம்10:1-14, 2சாமுவேல்;*

*1 ராஜா.1:1 -2:9;*

*தாவீது 1நாளா. 11:1 -29:30*

*சாலமோன் 1ராஜா.2:10 -11:43; 2நாளா.1:1 -9:31*

**வடக்கு ராஜ்ஜியம்**

*ராஜா வேதாகம வசனம்*

*யெரோபெயாம் I 1ராஜா.12:25 -14:20*

*நாதாப் 1ராஜா.12:25 -14:20*

*பாஷா 1ராஜா 15: 25 -31*

*ஏலா 1ராஜா.16:8-14*

*சிம்ரி 1ராஜா.16:15-20*

*திப்னி 1ராஜா.16:21,22*

*உம்ரி 1ராஜா.16:21-28*

*ஆகாப் 1ராஜா.16:29 - 22:40*

*அகசியா 1ராஜா.22:51-53; 2 ராஜா.1:1-18*

*யோராம் 2ராஜா.2:1 - 8:15*

*யெகூ 2ராஜா.9:1 - 10:36*

*யோவாகாஸ் 2ராஜா.13:1-9*

*யோவாஸ் 2ராஜா.13: 10-25*

*யெரோபெயாம் II 2ராஜா.14: 23-29*

*சகரியா 2ராஜா.15:8-12*

*சல்லூம் 2ராஜா.15:13-15*

*மெனாகேம் 2ராஜா.15:16-22*

*பெக்காகியா 2ராஜா.15:16-22*

*பெக்கா 2ராஜா.15:27-31*

*ஓசெயா 2ராஜா.17:1-41*

**தெற்கு ராஜ்ஜியம்**

*ராஜா வேதாகம வசனம்*

*ரெகோபெயாம் 1ராஜா.12:1—14:31;2நாளா.10:1—12:16*

*அபியாம் 1ராஜா.15:1-8; 2நாளா.13:1—22*

*ஆசா 1ராஜா.15:9-24; 2நாளா.14:1 - 16:4*

*யெகோசாபாத் 1ராஜா.22::41-50; 2நாளா.17:1 - 20:37*

*யோராம் 1ராஜா.8:16-24; 2நாளா.21:1—20*

*அகசியா 2ராஜா.8:25: - 29:2; 2நாளா.22:1 - 23:21*

*அத்தாலியாள் (ராணி) 2ராஜா.11:1-16; 2நாளா.22:1—23:21*

*யோவாஸ் 2ராஜா.11:17-12:21; 2நாளா.22:1- 23:21*

*அகசியா 2ராஜா.8: 25-29; 2நாளா.22:1—9*

*உசியா (அசரியா) 1ராஜா.15:1-7; 2நாளா.26:1—23*

*யோதாம் 1ராஜா.15:32 - 38; 2நாளா.27:1—9*

*ஆகாஸ் 1ராஜா.16:1-20; 2நாளா.28:1—27*

*எசேக்கியா 2ராஜா.18:1 -20:21; 2நாளா.29:1— 32:33*

*மனாசே 2ராஜா.21:1-18; 2நாளா.33:1—20*

*ஆமோன் 1ராஜா.22:19-26; 2நாளா.33:21-25*

*யோசியா 2ராஜா.22:1-23:30; 2நாளா.34:1 - 35:27*

*யோவாகாஸ் 2ராஜா.23:31- 33:2; 2நாளா.36:1—4*

*எலியாக்கீம் 2ராஜா.23:34 -24:7; 2நாளா.36:5-8*

*யோயாக்கீன் 2ராஜா.24: 8-16; 2நாளா.36:9,10*

*சிதேக்கியா 2ராஜா.24:18 - 25:21; 2நாளா.36:11—21*

# *நாளாகமம் (1 மற்றும் 2)*

## *தலைப்பு*

*மூல-எபிரேய பிரதிகளில் "காலவரிசை" (அதாவது நிகழ்வுகள் அல்லது சம்பவங்கள்) வரலாறு என்றே தலைப்பிடப்பட்டிருந்தது. கிரேக்க பழைய ஏற்பாடான செப்டுவாஜிண்ட் (கி.மு. 200) முதல் மற்றும் இரண்டாம் நாளாகம புத்தகம் என பிரிக்கும் வரைக்கும், இது ஒரே புத்தகமாகவே இருந்தது. அந்த வேளையில், 1,2சாமுவேல் மற்றும் 1,2ராஜாக்கள் புத்தகத்தில் விடுபட்டவை என்ற அர்த்தத்தில் "விடுபட்டவை" என்ற துல்லியமற்ற தலைப்பு இதற்கு தரப்பட்டிருந்தது. இப்பொழுது இருக்கும் ஆங்கிலதலைப்பு - "புனித வரலாற்றின் நாளாகமம்" என்னும் யெரோம்-லத்தீன் வுல்கேட் மொழிபெயர்ப்பின் (கி.பி.400) முழுமையான தலைப்பினை எடுத்துப் பயன்படுத்தியே - நாளாகமம் என்ற தலைப்பு வந்தது.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*யூத பாரம்பரியத்தின்படி ஆசாரியனாகிய எஸ்றா (வரலாற்று ஆசிரியர்) இதனை எழுதி இருக்கலாம் என பலமாக நம்பப்பட்டாலும், (எஸ்றா 7:1-6) முதல் அல்லது இரண்டாம் நாளாகம புத்தகம் எதிலும் இப்புத்தகத்தை எழுதின மனித-எழுத்தாளர் இவர்தான் என்பதற்கான ஆதாரம் இல்லை. இதில் எழுதியுள்ள குறிப்புகள் கி.மு.450-430-வில் பதியப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. 1நாளா.1-9-ல் காணப்படும் வம்சவழி குறிப்பு கி.மு.450க்கு பின் புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம் என யூகிக்க வைக்கிறது.. புதிய ஏற்பாட்டில் 1 அல்லது 2 நாளாகமத்தில் இருந்து நேரடியாக எந்த மேற்கோளும் இல்லை.*

## *பிண்ணனி மற்றும் அமைப்பு*

*பாபிலோனில் நாடு கடத்தப்பட்டவர்களாக இருந்த யூதர்கள் மூன்று-கட்டங்களில் வாக்குதத்த தேசத்திற்கு திரும்புகின்றனர் என்பதே இப்புத்தகத்தின் வரலாற்று பின்னணி. 1) எஸ்றாவில் இருக்கும் செருபாபேல் (கி.மு.538) 2) எஸ்றாவில் இருக்கும் எஸ்றா 7-10 (கி.மு. 485) மற்றும் 3) நெகேமியா வில் இருக்கும் நெகேமியா 1-13 (கி.மு. 445). இவை முந்தைய வரலாறு. 2ராஜாக்கள், எரேமியா, எசேக்கியேல், தானியேல் மற்றும் ஆபகூக் புத்தகங்களில் நாம் காண்கிற முன்பே கணிக்கப்பட்ட/அறிவிக்கப்பட்ட பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட சம்பவத்தையும் குறிப்பில் எடுத்துக் கொள்கிறது (கி.மு. 605 - 538). மறுசீரமைப்பின் காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் ஆகாய், சகரியா மற்றும் மல்கியா.*

*யூதர்கள் தங்களது 70வருட சிறையிருப்பில் இருந்து (கி.மு.538), தாவீதின் காலத்தில் (கி.மு.1011-971) இருந்ததில் இருந்து முற்றிலும் வேறுபட்ட தேசத்திற்கு திரும்பி இருந்தார்கள். 1) எபிரேய ராஜா என்று ஒருவர் இல்லை, மாறாக பெர்சிய நாடுகளுக்கு அதிபதியே இருந்தார் (எஸ்றா 5:3; 6:6); 2) எருசலேம் பாதுகாப்பின்றி இருந்தது, அதனால் நெகேமியா அலங்கத்தை திரும்ப எடுத்து கட்ட வேண்டி இருந்தது (நெகேமியா 1-7); 3) தேவாலாயம் என்ற ஒன்று இல்லாதிருந்தது, அதனால் செருபாபேல் சாலமோன் கட்டின தேவாலயத்திற்கு சாயலாக இருக்கும் தேவாலயத்தைக் கட்ட அஸ்திபாரம் போட்டான் (எஸ்றா 3); 4) யூதர்கள் இனிமேலும் அப்பகுதிகளின் மீது ஆதிக்கம் செலுத்துகிறவர்களாக இல்லாமல், அதனை பாதுகாப்பவர்களாக மட்டுமே வாழ்ந்தனர் (எஸ்றா 4; நெகேமியா 4); 5) அவர்களது தேசத்திற்கு திரும்பினார்கள் என்ற ஆசீர்வாதத்தை தவிர வேறு சில ஆசீர்வாதங்களையும் அவர்கள் பெற்று அனுபவித்தனர். 6) முந்தைய ராஜ்ஜியத்தின் செல்வசெழிப்பில் சிறிதளவே பெற்றிருந்தனர்; மற்றும் 7) தெய்வீக பிரசன்னம் எருசலேமில் நிலைத்திருக்கவில்லை மாறாக, அங்கிருந்து எடுபட்டு போயிருந்தது (கி.மு. 597-591,எசே.8-11).*

இயல்பாகச் சொல்வோமானால், தாவீது மற்றும் சாலமோன் அரசாண்ட காலங்களில் கம்பீரமாக இருந்த அவர்களின் கடந்த காலத்துடன் பொருத்தி பார்ப்போமானால், அவர்களது எதிர்காலம் இருண்டதாக இருந்தது. இஸ்ரவேலர் தங்கள் சொந்த தேசத்திற்கு வந்த இந்த சம்பவத்தை கசப்பான-இனிப்பு எனலாம். தற்கால ஏழ்மை அவர்களின் மூதாதையர் செய்த பாவத்தை நினைவுபடுத்துவதாக இருந்தபடியால் அது கசப்பாகவும், 17 நூற்றாண்டுகளுக்கு முன் (ஆதி.12:1-3) ஆபிரகாமுக்கு தேவன் அருளிய வாக்குப்படி தாங்கள் பெற்ற சொந்த தேசத்திற்கு திரும்ப வந்திருப்பது ஓர் இனிப்பான செய்தியாகவும் இருந்தது. வரலாற்று ஆசிரியர் இஸ்ரவேலரின் வம்ச வரலாறு மற்றும் வரலாற்றின் செய்திகளை - ஆதாமில் (1நாளா. 1:1) இருந்து பாபிலோனில் இருந்து திரும்ப வந்தது (2நாளா.26:23) வரை குறிப்பிட்டு, யூதர்களுக்கு தேவனுடைய வாக்குதத்தங்களையும் அவற்றின் நோக்கங்களை 1) இடம் 2) தேசம் 3) தாவீது ராஜா 4) லேவிய ஆசாரியத்துவம் 5) தேவாலயம் மற்றும் 6) மெய்யான ஆராதனை இவகளில் எதுவும் பாபிலோனியரின் சிறையெடுப்பினால் ரத்து செய்யப்படவில்லை என்பதை நினைவுபடுத்துவதற்காக எழுதியிருக்கிறார். அவர்களின் கடினமான வேளையை அவர்கள் சந்தித்த போதிலும் அவர்களுக்கென்று - ஆவிக்குரிய பாரம்பரியம் ஒன்று இருக்கிறது என்பதையும், அவர்களை தேவனிடத்தில் உண்மையுள்ளவர்களாக இருங்கள் என உற்சாகப்படுத்தியும் எழுதுகிறார்.

## வரலாற்று கருப்பொருள் மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

முதல் மற்றும் இரண்டாம் நாளாகமம் என்பது ஜெரோம் இட்ட பெயர், இப்புத்தகம் சுருக்கமாக தாவீதின் உடன்படிக்கை மற்றும் தேவாலய ஆராதனை இவைகளுக்கு முக்கியத்துவம் தந்து பழையஏற்பாட்டின் வரலாற்றை மீண்டும் உருவாக்குகிறது. இலக்கிய படைப்பில் இணையொத்த புத்தகங்கள் என்று

*பார்ப்போமானால், தாவீது ராஜாவின் ஆட்சியை குறித்து விளக்கம் தருவதில் 1நாளாகமம் - 2சாமுவேல் புத்தகத்திற்கு இணையானதாக இருக்கிறது. முதல் நாளாகம புத்தகம் ஆதாம் (1:1) உடன் ஆரம்பித்து, தாவீதின் மரணம் சம்பவித்த கி.மு. 971-வுடன் (29:26-30) முடிவடைகிறது. இரண்டாம் நாளாகம புத்தகம் சாலமோனுடன் (1:1) ஆரம்பித்து 1 மற்றும் 2 ராஜாக்கள் புத்தகத்தில் காணும் வரலாற்று காலங்களை குறித்து பேசுகிறது. குறிப்பாக, தென் தேசத்து யூதா ராஜ்ஜியத்தின் ராஜாக்களை குறித்து பேசுகிறது, வடதேசத்து 10 கோத்திரங்கள் மற்றும் அவர்களை ஆளுகை செய்பவர்கள் அவர்கள் முழுவதும் பொல்லாப்பினால் நிறைந்து, மாய்மாலமான ஆராதனையை செய்தபடியால் அவர்களைக் குறித்து பேசவில்லை. அது கி.மு.971-வில் நடைபெற்ற சாலமோனின் ஆட்சியில் (1:1) ஆரம்பித்து கி.மு. 538-வில் (36:23) பாபிலோனில் இருந்து சொந்த தேசத்திற்கு திரும்பின நாள் வரைக்கும் பேசுகிறது. 55 சதவீதத்திற்கு மேல் நாளாகம புத்தகத்தில் இருக்கும் செய்திகள் தனித்தன்மை வாய்ந்தவை - அதாவது, 2சாமுவேல் அல்லது 1மற்றும்2 ராஜாக்கள் புத்தகத்தில் நாம் இவைகளைக் காணமுடியாது. ''வரலாற்றுஆசிரியர்'' எவை எதிர்மறையானவையாக இருந்தனவோ அல்லது தாவீதின் ஆட்சிக்கு விரோதமாக இருந்தனவோ அவற்றை தவிர்க்க முயன்றுள்ளார். மறுபுறத்தில் பார்க்கும் போது, தேவாலய வழிபாடு மற்றும் தாவீதின் வம்ச வழிக்கு முக்கியத்துவம் குறித்து பேசும்போது அவைகளின் தனித்தன்மையை எடுத்துக் காட்டுகிறார். பரிதாபமாக, 2ராஜாக்கள் 25 யூதா தேசத்தினர் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட செய்தியுடன் முடிவடைகிறது. 2நாளா 36: 22-23 யூதர் பெர்சியாவில் இருந்து விடுவிக்கப்பட்டதையும் அவர்கள் எருசலேமுக்கு திரும்பினார்கள் என்று நம்பிக்கையான வார்த்தைகளுடன் முடிவடைகிறது.*

நாடுகடத்தப்பட்ட யூதா தேசத்தினர் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பின போது, ஆசீர்வாத்தின் எதிர்கால நோக்கத்தின் நாளாகமமாக இந்த இரண்டு புத்தகங்களும் எழுதப்பட்டன, தேசத்தினர் கடந்த காலத்தில் அவர்கள் ஆவிக்குரிய/ஒழுக்க நெறிமுறைகளில் இருந்து தவறி, தேவ கோபாக்கினைக்கு ஏற்கெனவே உள்ளாகி அதற்குரிய கிரயத்தைச் செலுத்தி இருந்தனர்.

## முதல் மற்றும் இரண்டாம் நாளாகம புத்தகத்தின் சாராம்சமாக இவற்றைச் சொல்லலாம்:

*1. இஸ்ரவேலரின் தெரிந்தெடுக்கப்பட்ட வம்சவழியினரின் வரலாறு 1 நாளா.1-9*

*2. ஒன்றுசேர்ந்திருந்த ராஜ்ஜியத்தில் சவுல் (1நாளா.10), தாவீது (1நாளா.11-29), மற்றும் சாலமோனின் ஆட்சி (2நாளா.1-9).*

*3. பிரிக்கப்பட்ட ராஜ்ஜியத்தில் யூதாவின் ஏகாதிபத்திய ஆட்சி (2நாளா.10-36:21).*

*4. யூதா அதன் எழுபது வருட சிறையிருப்பில் இருந்து விடுவிக்கப்படுதல் (2நாளா. 36:22,23).*

வரலாற்றுக் கருப்பொருள் இறையியல் கருப்பொருளுடன் இரண்டற கலந்து, மனுக்குல வரலாற்றின் மேடையில் இஸ்ரவேலரைக் குறித்த தேவனின் தெய்வீக நோக்கம் இதில் அரங்கேற்றப்பட்டுள்ளது. நாடு திரும்புதல், யூதர்களுக்கு அவர்களின் பலதரப்பட்ட கடந்தகால நிலை, நிகழ்கால அவலநிலை என எப்படி இருந்தாலும், தேவன் தாம் உடன்படிக்கை செய்த வாக்குதத்தத்தில் உண்மயுள்ளவராக இருப்பார் என்பதை நிச்சயமாக அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கென்றே இந்த இரண்டு புத்தகங்களும் வடிவமைக்கப்பட்டன. தேவனால் அவர்கள் முதலில் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட தேசத்திற்கு - மோசேயின்

*பிரமாணசட்டப்படி அவர்கள் தேவனது நியாயதீர்ப்பிற்கு உட்பட்டவர்களாக (உபா.28:15-68) இருந்த போதிலும், அவர்கள் நாடு கடத்தப்பட்டிருந்தாலும் நாடு கடத்தப்பட்டதால் யூதர்களின் இன அடையாளம் அழிக்கப்படாமல் அவர்களது சொந்த தேசத்திற்கு தேவன் திருப்பி கொண்டுவந்தார். அவர்களது தேசிய அடையாளமும் (இஸ்ரவேல்) பாதுகாக்கப்பட்டது (ஆதி.12;1-3;15:5). எலியேசரின் குமாரன் பினெகாஸ் வழியாக ஆசாரியத்துவமும், லேவியர்களின் வம்சவழியும் தேவாலய ஆராதனைக்கென்று தேவனுடைய பிரசன்னம் ஓர் நாளில் திரும்பும் என்ற நம்பிக்கையில் பாதுகாக்கப்பட்டது (எண்.25:10-13; மல்கியா 3:1). எதிர்காலத்தில் நிறைவேறும் என்றதாக இருப்பினும் தாவீதின் வம்சவழி வரும் ராஜா தோன்றுவார் என்பது இன்றும் உறுதிபடுத்தப்பட்டதாக இருந்தது (2சாமு. 7:8-17; 1நாளா. 17:7-15). அவர்கள் ஒவ்வொரு தனிநபரின் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை மற்றும் நித்திய காலமும் உரியதாக இருக்கும் தேவனின் ஆசீர்வாதம் மீட்டெடுக்கப்படும் என்பதற்கான நம்பிக்கை - புதிய உடன்படிக்கை ஏற்படுவதின் மீதே சார்ந்து இருந்தது (எரே.31:31-34).*

*இந்த புத்தகங்கள் தனித்தனியாக குறிப்பிடும் இரண்டு நன்னடத்தை விதிகள் - பழைய ஏற்பாட்டின் ஏனைய புத்தகங்கள் அனைத்திலும் மேலோங்கி நிற்கின்றன. அவை - கீழ்ப்படிதல் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும், கீழ்ப்படியாமை நியாயதீர்ப்பைக் கொண்டுவரும் என்பதே.*

*நாளாகமத்தில் நாம் காண்பது, ராஜா கீழ்ப்படிந்து கர்த்தரை நம்பும் பொழுதெல்லாம், தேவன் அவர்களை ஆசீர்வதித்து பாதுகாத்தார். ஆனால் எப்பொழுது ராஜா கீழ்ப்படியாமல், கர்த்தரை விட்டுவிட்டு, உடன் / அல்லது வேற்று ஒருபொருள் மீது அல்லது ஒரு நபர் மீது தன் நம்பிக்கையை வைத்த போது,*

*தேவன் அவர் அளித்திருந்த ஆசீர்வாதத்தையும் பாதுகாப்பையும் திரும்ப பெற்றுக் கொண்டார்.*

*யூத ராஜாக்களின் மூன்று அடிப்படையான தவறுதல்கள் 1) தனிப்பட்ட நபர்களின் பாவம் 2) மாய்மாலமான / உருவ வழிபாடு உடன்/அல்லது 3) தேவனைக் காட்டிலும் மேலாக மனுஷன் மீது நம்பிக்கையை வைத்தல்.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*முதல் மற்றும் இரண்டாம் நாளாகம புத்தகங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட வம்சவழி மற்றும் வரலாற்று குறிப்புகளை தொகுத்து வழங்குகிறது. எங்கேயும் கட்டவிழ்க்க முடியாத சவால்கள் என எதுவும் இந்த இரண்டு புத்தகங்களிலும் இல்லை. சில சிக்கல்கள் எழும்புகின்றன: 1) 1மற்றும்2 நாளாகம புத்தகத்தை எழுதிய ஆசிரியர் யார்? 2) 2 நாளா.36:22-23 எஸ்றா 1:1-3 ஒன்றன்மீது ஒன்று கைகோர்த்துச் செல்வதால் எஸ்றா தான் இதன் ஆசிரியர் எனக் கூறுகிறதா? 3) 1நாளா.1-9 ல் உள்ள வம்சவழிக்கும் ஏனைய பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் காணப்படும் வம்சவரலாற்றுக்கும் உள்ள வித்தியாசத்தை எப்படி சமன் செய்வது? 4) உபாகமம் 28ல் சொல்லப்பட்டிருக்கும் சாபங்கள், எழுபதுவருட சிறையிருப்பு முடிவுக்கு வந்து விட்டபடியால், இன்னமும் செயல்பாட்டில் உள்ளதா? 5) சாமுவேல் மற்றும் ராஜாக்கள் புத்தகத்தை ஒருவர் ஒப்பிட்டுப் பார்ப்பாரானால், இரண்டுக்கும் இடையில் என்ணிக்கையில் காணப்படும் வித்தியாசத்தைக் குறித்து எப்படி விளக்கம் தருவது?*

### சுருக்கம்

*I.* தெரிந்தெடுக்கப்பட்ட வம்சவரலாறு *(1:1-9:34)*

*அ. ஆதாம் முதல் தாவீதிற்கு முன்புவரை (1:1 - 2:55)*

*ஆ. தாவீது முதல் சிறைபிடிக்கப்பட்டுப் போனது வரை (3:1-24)*

இ. பன்னிரண்டு கோத்திரங்கள் *(4:1 -9:1)*

ஈ. எருசலேமில் வாசம் செய்பவர்கள் *(9:2-34)*

*II.* தாவீது அரியணை ஏறுதல் *(9:35-12:40)*

அ. சவுலின் வம்சவழி மற்றும் மரணம் *(9:35-10:14)*

ஆ. தாவீது அபிஷேகிக்கப்படுதல் *(11:1-3)*

இ. எருசலேம் மேற்கொள்ளப்படுதல் *(11:4-9)*

ஈ. தாவீதின் ஆட்கள் *(13:1 - 29:30)*

*III.* தாவீதின் ஆட்சி *(13:1 -29:30)*

அ. உடன்படிக்கையின் பெட்டி *(13:1 -16:43)*

ஆ தாவீதின் உடன்படிக்கை *(17:1-27)*

இ. தெரிந்தெடுக்கப்பட்ட சேனையின் வரலாறு *(18:1 - 21:30)*

ஈ. தேவாலயம் கட்ட ஆயத்தங்கள் செய்தல் *(22:1 - 29:20)*

உ. சாலமோனுக்கு ஆட்சி மாற்றம் *(29:21-30)*

# *எஸ்றா*

## *தலைப்பு*

*சிறைபிடித்துச் செல்லப்பட்ட யூதர்கள் மீண்டும் எருசலேமுக்கு திரும்பும் சம்பவத்தில் வசனம் 7:1 வரை எஸ்றாவின் பெயர் காணப்படவில்லை என்றாலும், எஸ்றாவின் ("யெகோவா உதவிசெய்கிறார்") பெயரை இப்புத்தகம் பெற்றுள்ளது. ஏனென்றால், யூத மற்றும் கிறிஸ்த பாரம்பரியம் வேதபாரகரும்-ஆசாரியருமாக இருந்த இவர் தான் இதன் ஆசிரியர் எனக் கருதுகிறது.*

## ஆகமத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*எஸ்றாதான் ஆரம்பநாட்களில் ஒன்றாக இருந்த எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களின் ஆசிரியராக இருக்கக்கூடும். எஸ்றா 4:8 - 6:18 மற்றும் 7:12-26 பகுதிகள் அராமிக் மொழியில் எழுதப்பட்டுள்ளன. எஸ்றா தன்னைப்பற்றிக் கூறும்போது தான் இதன் ஆசிரியர் என்று எங்கும் கூறாவிட்டாலும் அனைத்து வாதங்களும் அவரே ஆசிரியர் என்பதற்கு உறுதுணையாக நிற்கின்றன. அவர் எருசலேமுக்கு திரும்பின உடன் (கி.மு. 458), மூன்றாம்நபர் (படர்க்கை) பேசுவது போல் எழுதியதை விட்டு விட்டு, (தன்மை) முதல்நபர் பேசுவது போன்ற எழுத்துநடையைக் கொண்டு செல்கிறார். முதல் பகுதிகளில் அவர் தன் நினைவுகளில் இருந்தனவற்றை எழுதுவதால் மூன்றாம்நபர் கூறுவது போல் எழுதுகிறார். நாளாகம புத்தகத்தை எழுதியதும் எஸ்றா-வாகத்தான் இருக்கலாம் என நம்பப்படுகிறது. பழையஏற்பாட்டின் முந்தினபுத்தகத்தை எழுதியவரே 70 வருட சிறையிருப்பிற்குப் பின் அவருடைய ஜனங்களைத் தங்கள் சொந்த தேசத்திற்கு திருப்பிக் கொண்டு வந்து, தேவன் தாம் அருளின வாக்குதத்தத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு உண்மையுள்ளவராக இருந்தார் என எடுத்துக்காட்டியது*

இயற்கையாக நிகழக்கூடிய சம்பவமே. நாளாகம புத்தகத்தை நாம் வாசிக்கும்போது, அதில் ஆசாரியரின் தொனி அதிகமாக காணப்படுகிறது, இதில் எஸ்றா ஆரோன் வம்சத்தில் வந்த ஆசாரியர் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும் (7:1-5). 2நாளாகமத்தை நிறைவு செய்யும் (36:22,23) வசனங்கள் எஸ்றா புத்தகத்தின் ஆரம்ப வசனங்களுக்கு (1:1-3a) கிட்டத்தட்ட ஒன்றானதாகவே இருப்பதால், இவ்விரண்டு புத்தகங்களின் ஆசிரியர் - எஸ்றாதான் என உறுதிசெய்கின்றது.

எஸ்றா ஆசிரியராக இருந்தபடியால் எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களில், விசேஷமாக எஸ்றா புத்தகத்தில் காணும் எண்ணற்ற ஆவணங்களை அணுக கூடிய வாய்ப்பைப் பெற்றிருந்தார். பெர்சிய சாம்ரஜ்ஜியத்தின் அரசுகாப்பகத்தினை அணுக அனுமதி ஒருசிலருக்கே இருந்தது, அதில் எஸ்றா விதிவிலக்காக இருந்தவர் (எஸ்றா1:2-4; 4:9-22; 5:7-17; 6:3-12).

எஸ்றா, தான் வேதபாரகர் என்ற அளவிலான பங்களிப்பு குறித்து 7:10-ல் இவ்வாறாக சொல்லப்பட்டுள்ளது "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும், நீதி நியாயங்களை உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்". அவர் பலசாலியான, தெய்வீக மனிதர், நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்தவர் (நெகேமியா:8:1-9; 12:36). பழையஏற்பாட்டு புத்தகங்களின் வரிசையை (Canon) முதன்முதலில் ஏற்றுக்கொண்ட, பெரிய தேவாலயத்தின் நிறுவனர் இவரே என பாரம்பரியம் கூறுகிறது.

பெர்சியாவில் இருந்து நாடு திரும்பிய இரண்டாவது நிகழ்விற்கு தலைமை ஏற்று நடத்திவந்தவர் - எஸ்றா (கி.மு. 485); ஆக, இந்த புத்தகத்தின் முழுபகுதியும் அடுத்து வந்த அனேக பத்தாண்டுகளில் எழுதப்பட்டிருக்கலாம் (கி.மு. 457-444).

## பிண்ணனி மற்றும் அமைப்பு

தேவன் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து, வழிநடத்திக் கொண்டுவந்தார் (கி.மு. 1445) நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு பிறகு, எஸ்றாவின் சம்பவங்கள் நிகழ்வதற்குமுன், "அவர்கள் தேவனுடன் கொண்டிருக்கும் உடன்படிக்கையை மீறும் போது, அவர் மீண்டும் அந்நிய தேசத்தினர் இஸ்ரவேலரை அடிமைகளாக்கிச் செல்ல அனுமதித்து விடுவார்" என தேவன் அவருடைய ஜனங்களிடத்தில் எச்சரித்திருந்தார் (எரேமியா:2:14-25). தேவன் தீர்க்கதரிசிகளின் வாய்மூலமாக மீண்டும் மீண்டும் எச்சரிக்கை தந்திருந்த போதிலும், இஸ்ரவேல் மற்றும் யூதா மக்கள் தங்கள் கர்த்தரை நிராகரிப்பதையே தெரிந்து கொண்டனர். அந்நிய தேவர்களை வணங்குவதில் பங்கு பெற்றனர், விக்கிரகாரதனையுடன் உண்டான அருவருப்பான செயல்களிலும் ஈடுபட்டனர் (2ராஜா.17:7-18; எரேமியா 2:7-13). தேவன் தாம் சொல்லியிருந்தபடியே, வழிதவறிய இஸ்ரவேல் மற்றும் யூதா தேசத்தினர் திருத்தும்படி - அசீரியர்களையும் பாபிலோனியரையும் வரவழைத்து அவர்களை சிட்சித்தார். கி.மு.722-வில் வடதேசத்து பத்து கோத்திரத்தாரை நாடு கடத்தி அவர்களை தேசமெங்கும் சிதறடித்தனர் (2 ராஜா.17:24-41; ஏசா.7:8). பல நூற்றாண்டுகளுக்குப் பின், கி.மு. 605-586வில் பாபிலோனியர்களால் துரத்தப்படச் செய்து, எருசலேமின் மக்கள்தொகையை குறைத்தார். யூதா தொடர்ந்து உடன்படிக்கையை மீறி உண்மையில்லாது இருந்தபடியால், தேவன் 70 வருட சிறையிருப்புக்கு அனுமதித்து அவர்களை சிட்சித்தார் (எரேமியா 25:11). பின்னர் எஸ்றா மற்றும் நெகேமியா ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தபடி அவர்கள் எருசலேமுக்கு திரும்பினார்கள். பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ், பாபிலோனியரை 539ல் தோற்கடித்தான்.

எஸ்றா புத்தகம் ஒருவருடம் கழித்து கோரேஸ் - "யூத ஜனங்கள் எருசலேமுக்குப் போய், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய

*ஆலயத்தைக் கட்டக்கடவன்'' என்ற ராஜாவின் ஆணையுடன் தொடங்குகிறது. யூதர்களின் தேசிய கால கணிப்பின்படியான பண்டிகைகளும் பலியிடுதலும் ஆசரிக்கப்படவும், இரண்டாம் தேவாலயம் கட்டப்படுதல் (கி.மு.536-ல் ஆரம்பித்து கி.மு.516வில் முடிந்தது) உள்ளிட்ட பணிகள் திரும்ப நடைபெறவும் ஆரம்பித்தது என்ற குறிப்பையும் எழுதுகிறது.*

*இஸ்ரவேலில் இருந்து பாபிலோனுக்கு நாடுகடத்தப்படுதல் மூன்று கட்டங்களாக நடைபெற்றதால் (கி.மு605, கி.மு.597 மற்றும் கி.மு.586), ஒன்பது தலைமுறை இடைவெளிக்குள் (90 ஆண்டுகள்), எருசலேமுக்கு திரும்ப வருதலும் 3 பகுதிகளாக நிறைவேறினது. கிமு. 538ல் செருபாபேல் முதலில் திரும்பினது. அவரைத் தொடர்ந்து எஸ்றா, அவர் இரண்டாவது எருசலேமுக்கு திரும்பிவருதலை கி.மு.485-வில் வழிநடத்தினார். அதற்கு 13 வருடங்களுக்குப் பின் நெகேமியா கி.மு.445-வில் வழிநடத்தி அழைத்து வந்தார். எந்த எதிர்ப்பும் இல்லாத அரசியல் தன்னாட்சி என்னவோ ஒருபோதும் திரும்ப ஏற்படவில்லை. செருபாபேலின் நாட்களில் கி.மு.520 மற்றும் அதற்கு அடுத்த ஆண்டுகளில் தீர்க்கதரிசிகள் ஆகாய் மற்றும் சகரியா பிரசங்கித்து வந்தனர்.*

## வரலாற்று கருப்பொருள் மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*பாபிலோனிய சிறையிருப்பில் இருந்து யூதர்கள் திரும்பி வந்தது, எகிப்தியரின் அடிமைத்தனத்தில் இருந்து தேவன் தன் இறையாட்சியினால் விடுவித்து எப்படி அழைத்துவந்தாரோ அதேப்போல் இதுவும் இருப்பதால், இது இரண்டாம் யாத்திராகமம் போன்று காட்சியளிக்கிறது. அசல் யாத்திராகமத்தில் நிறைவேறின செயல்பாடுகளினை ஒத்த செயல்கள் பாபிலோனில் இருந்து திரும்பும் போதும் நிகழ்ந்தது. 1) தேவாலயமும் பட்டணத்தின் மதில்சுவர்களும் திரும்ப*

எடுத்துக் கட்டப்பட்டது; 2) நியாயப்பிரமாணம் திரும்ப நிலைநாட்டப்பட்டது - இச்செயல், செருபாபேல், எஸ்றா மற்றும் நெகேமியா இவர்களை ஒன்று சேர பார்க்கும் போது, பார்ப்பதற்கு இரண்டாவது மோசே போல் தோற்றமளித்தது; 3) உள்ளூர் சத்துருக்களின் சவால் 4) யூதர்கள் அல்லாதவர்களுடன் திருமண ஒப்பந்தத்தில் ஈடுபட சோதிக்கப்பட்டு, முடிவில் விக்கிரக ஆராதனையில் முடிவடைகிறது. அசலான யாத்திராகம நிழ்விலும், பாபிலோனில் இருந்து நாடு திரும்பிய போதும் ஏற்பட்ட இணையொத்த நிகழ்வு- திரும்பி வந்தவர்களுக்கு தேவன் திரும்ப ஒரு புதிய ஆரம்பத்தை தந்திருக்கிறார் என்ற உணர்வினை அவர்கள் அவசியம் பெற்றிருப்பார்கள் என்பதே.

தேசத்திற்கு திரும்பி வந்தபோது, எஸ்றா வேதபாரகராக இருந்தபடியால் பெர்சியாவில் சேர்த்து வைக்கப்பட்டிருந்த நிர்வாக ஆவணங்கள் அவரை ஈர்த்தது. ராஜரீக நிர்வாக ஆவணங்களும் “அவனுடைய தேவனாகிய கர்த்தரின் கரம் அவன் /என் மேல் இருந்ததினால்” (7:6,28) என்ற வார்த்தைகளும் ஒன்று சேரும் போது மிக வல்லமையான செய்தியை எடுத்துச் செல்கின்றன. கட்டளைகள், பிரகடனங்கள், நிருபங்கள், பட்டியல்கள், வம்சவரலாறுகள், நினைவு குறிப்புகள் என இப்படி - இதில் அதிகமானவை பெர்சிய அரசாங்கத்தினால் எழுதப்பட்டவை, இவை இஸ்ரவேலரை மறுசீரமைப்பதில் இறையாட்சி செய்யும் தேவனுடைய கரம் அவர்களுக்காக செயல்பட்டது என்பதற்கு சான்று அளிக்கின்றன. அந்நிய தேவர்களை சேவிக்கும் ராஜா மற்றும் அவன் வழிவந்தவர்களப் பயன்படுத்தி ஓர் இசைபண் சுருதி சேர்க்க ஒன்றுசேர்வது போல் அனைத்து நிகழ்வுகளையும் காரணத்துடன் ஒன்று சேர்த்து கடந்தகால சோகமான சூழ்நிலையை (சிறைபிடிப்பை) மாற்றி யூதாவிற்கு ஓர் எதிர்கால நம்பிக்கையை (சொந்த தேசத்திற்கு திரும்புதல்) தந்தார். இந்த உலகத்தின் எந்தவொரு ராஜாவிற்கும் மேல்லோங்கி நிற்கும் தேவனுடைய நிர்வாகம், ஆகையால்

"ஒட்டுமொத்தமாக, இஸ்ரவேலருக்கு தேவனுடைய உடன்படிக்கையின் இரக்கம் தொடர்ந்து கிடைக்கப்பெறுகிறது" என்ற செய்தியே எஸ்றா புத்தகம்.

எஸ்றா புத்தகத்தின் முன்நிற்கும் மற்றொரு கருப்பொருள் - உள்ளூரில் இருந்த - அசீரியா தேசத்தில் இருந்து வந்து குடியமர்த்தப்பட்ட - சமாரியாவில் குடியிருந்தோரின் எதிர்ப்பு (எஸ்றா 4:2; உறுதிசெய்ய யோவான் 4:4-42 ஐப் பார்க்கவும்). ஆலய கட்டுமான பணிகளை தந்திரமாக தகர்க்க, இஸ்ரவேலரின் எதிரிகள் தேவாலயத்தை திரும்ப கட்டும் பணியில் தங்களையும் சேர்த்துக்கொள்ள கோரினர் (4:1,2). அவர்களின் கோரிக்கை புறக்கணிக்கப்பட்ட போது, அவர்கள் யூதர்களுக்கு விரோதமாக ஆலோசனைக்காருக்கு கைக்கூலிக்கட்டினார்கள் (4:4,5). ஆனால் கர்த்தர் தாமே, ஆகாய் மற்றும் சகரியா இருவரின் பிரசங்கத்தினால் ஜனங்களின் ஆவியை அனல் மூட்டி எழுப்பிவிட்டு அவ்ர்களின் தலைவர்களுக்கு - பெலன்கொண்டு, வேலையை நடப்பியுங்கள்; நான் உங்களுடன் இருக்கிறேன் என்ற வார்த்தைகளை தீர்க்கதரிசனமாகச் சொல்லி ஆலயத்தை திரும்ப கட்டச் செய்தார்கள் (ஆகாய் 2:4; உறுதிபடுத்தும் வசனம் எஸ்றா 4:24 - 5:2). தேவாலயம் கட்டுமானப்பணிகள் மீண்டும் தொடங்கி, தேவாலயம் கட்டும் வேலை நிறைவுற்றது, பிரதிஷ்டைச் செய்யப்பெற்றது, மீண்டும் தேவனுடைய சேவைக்கென்று பயன்பட்டது. (கி.மு516).

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

சொந்த தேசத்திற்கு திரும்பி வந்த பின் எஸ்றாவினால் எழுதப்பட்ட 1மற்றும்2 நாளாகமம் வரலாற்று புத்தகங்கள் - தேசம் திரும்பிய பின் எழும்பிய தீர்க்கதரிசிகளான ஆகாய், சகரியா மற்றும் மல்கியாவுடன் எப்படி தொடர்புபடுத்திக் கொள்கின்றன? நாளாகமத்தின் இரண்டு புத்தகங்களும் எஸ்றாவினால் வாக்குதத்தம் செய்யப்பட்ட தாவீதின்

*அரசாட்சியை, ஆரோனின் ஆசாரியத்துவத்தை, நினைவுக்கு கொண்டுவந்து தேவாலய ஆராதனையை பாராட்ட எழுதப்பட்டவை. தேவாலயம் திரும்ப எடுத்து கட்டப்பட்ட எஸ்றா (அதிகாரங்கள் 4-6) காலகட்டத்தில் ஆகாய், சகரியா இருவரும் தீர்க்கதரிசனம் உரைத்து வந்தனர். நெகேமியா பெர்சியா தேசத்திற்கு சென்றிருந்த போது மல்கியா எழுதினார் (நெகேமியா 13:6).*

*இரண்டாவது, இந்த புத்தகம் என்ன நோக்கத்தை நிறைவேற்றுகிறது? பாபிலோனில் சிறைபிடிக்கப்பட்டுச் சென்று பின் அங்கிருந்து எருசலேம் திரும்பும் குறிப்பில் மூன்றில் இரண்டு பங்கு குறிப்பை எஸ்றா புத்தகம் பேசுகிறது. செருபாபேல் வழிநடத்துதலில் (கி.மு.538) வந்த முதல் திரும்பி வருதல் (அதிகாரங்கள் 1-6), எஸ்றாவின் தலைமையில் இரண்டாவது திரும்பி வருதல் (கி.மு.458) நிறைவேறியது (அதிகாரங்கள் 7-10). எஸ்றா தனது வம்சத்தின் மூலத்தை எலியேசர், பினேகாஸ் மற்றும் சாதோக் (எஸ்றா 7:1-5) வரை கண்டறிந்து ஆரோன் முறை ஆசாரியத்துவத்துவத்தின் முக்கியத்துவத்தை திரும்பவும் நிலைநாட்டுகின்றார். இரண்டாம் தேவாலயம் கட்டப்படுவதைக் குறித்து எழுதி உள்ளார் (அதிகாரங்கள் 3-6) அந்நிய தேசத்து பெண்களுடன் கலப்புமணத்தில் ஈடுபட்டதினால் வந்த பாவத்தை அவர் எப்படி கையாண்டார் என்பதைக் குறித்து அதிகாரம் 9,10ல் பேசுகிறார். அதிமுக்கியமாக, தேவனின் ஆளுகைசெய்யும் கரம் எப்படியாக ராஜாக்களை செயல்பட வைத்து எதிர்வந்த அத்தனை எதிர்ப்புகளையும் மேற்கொண்டு, இஸ்ரவேல் - ஆபிரகாமின் வித்து (வம்சவரலாற்றில்) தேசத்தின் வழியாகவும் தனிநபராகவும் வந்தவர்கள் என்பதை ஆபிரகாம், தாவீது மற்றும் எரேமியாவுக்கு வாக்குதத்தம் செய்து தரப்பட்ட தேசத்தில் நிலைநாட்டுகிறார்.*

*மூன்றாவதாக, கோரேஸ் அரசாண்ட காலத்தில் தேவாலயம் கட்டப்பட்டது. அகாஸ்வேரு (4:6) மற்றும் அர்தஷ்டா (4:7-23)*

வின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால், அவர்களின் ஆட்சிகாலத்தில்கூட தேவாலயம் கட்டப்பட்டிருக்கலாம் என்ற முடிவிற்கும் ஒருவர் வரலாம். ஆனால், அப்படி முடிவு செய்வது வரலாற்றை மீறுவதாக ஆகிறது. எஸ்றா அகாஸ்வேரு மற்றும் அர்தஷ்டாவின் கட்டிட சாதனைகளக் குறித்து இங்கு பேசவில்லை. மாறாக, தேவாலயம் கட்டப்பட்ட பிறகு அவர்களின் எதிர்ப்பு - எஸ்றாவின் காலம் வரைக்கும் கூட நீடித்தது என்பதைக் குறித்து எழுதுகிறார். எஸ்றா 4:1-5 மற்றும் 4:24 - 5:2 செருபாபேல் காலத்தில் தேவாலயம் மறுபடியும் கட்டப்பட்டதைக் குறித்து பேசுகிறது; அடைப்புகுறிப்பில் இருக்கிற 4:6-23 எஸ்றா மற்றும் நெகேமியாவின் காலத்தில் வரலாற்றில் ஏற்பட்ட எதிர்ப்பை மீண்டும் கணக்கெடுத்துக் காட்டுகிறது) என்பதை இதிலிருந்து வெளிப்படையாக அறிந்து கொள்ளலாம்.

நான்காவது, எஸ்றாவின் காலவரிசையில் எஸ்தர் எந்த இடத்தில் பொருந்துகிறாள் என்பதை விளக்கம் தருபவர்தான் பொருத்திக் கொள்ள வேண்டும். கவனமாக சோதித்து பார்க்கும் போது, அதிகாரங்கள் 6 மற்றும் 7க்கும் இடையில் இச்சம்பவம் நடந்திருக்கும் எனக் குறிப்பிடுகிறது.

ஐந்தாவது, எஸ்றா 10-ல் நாம் காணும் விவாகரத்து தேவன் விவாகரத்தை வெறுக்கிறார் (மல்கியா 2:16) என்ற உண்மையுடன் எப்படி சம்பந்தபட்டுள்ளது? எஸ்றா எந்தவொரு விதிமுறையையும் நிர்ணயிக்கவில்லை ஆனால் வரலாற்றில் நடைபெற உள்ள ஒரு விசேஷ நிகழ்ச்சியை மையமாக வைத்து இதனுடன் இடைபடுகிறார். ஒருபெரிய தவற்றினை தவிர்ப்பதற்காக சிறிய தவறை செய்வதை தெரிந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற நியதியின்படி இது தீர்மானிக்கப்பட்டது. யூதர்குலம் அந்நியபெண்களுடன் கலப்புமணத்தில் ஈடுபட்டதால், தேசமும் தாவீதின் வம்சத்தில் மேசியா தோன்றுவார் என்ற வம்சவழி புறஜாதியாரினால் கலப்படம் ஆகி வம்சவழி முடிவுக்கு

*வந்துவிடக்கூடாது என்பதைக் கருத்தில் எடுத்துக் கொண்டனர். இப்படியாக-இந்த பிரச்சினையை தீர்த்துவைப்பது, தேவனின் இரக்கத்தை பெரிதுபடுத்துகிறது ஏனென்றால் இதற்கு மாற்று தீர்வு என்று பார்ப்போமானால், இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் (கணவன், மனைவிகள் மற்றும் குழந்தைகள்) யாத்திராகமத்தில் சித்தீம் என்ற இடத்தில் எப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அப்படி கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் (எண்.25:1-9) இது தவிர்க்கப்பட்டது.*

**சுருக்கம்**

*I. சொந்த தேசத்திற்கு - செருபாபேலின் தலைமையில் முதலாம் திரும்பி வருதல் (1:1 -6:22)*

*அ. திரும்புவதற்கு கோரேஸ் ஆணையிடல் (1:1-4)*

*ஆ. தேவாலயத்தை திரும்பகட்டுவதற்கு பணக்குவியல் (1:5-11)*

*இ. திரும்பினவர்கள் (2:1-70)*

*ஈ. இரண்டாம் தேவாலயத்தைக் கட்டுதல் (3:1 -6:22)*

*1. கட்டிடவேலை ஆரம்பித்தல் (3:1 - 6:22)*

*2. எதிர்ப்பு எழும்புதல் (4:1-5)*

*3. எதிர்கால எதிர்ப்பினை குறித்து விரிவான உரையாடல் (4:6-23)*

*4. கட்டிட வேலை புதுப்பிக்கப்படல் (4:24 -5:2)*

*5. எதிர்ப்பு புதிப்பிக்கப்படுதல் (5:3 -6:12)*

*6. தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படுதல் (6:13-22)*

*II. சொந்த தேசத்திற்கு - எஸ்றாவின் தலைமையில் வரும் - இரண்டாம் திரும்பி வருதல் (7:1 -10:44)*

*அ. எஸ்றா வின் வருகை (7:1 - 8:36)*

*ஆ. எஸ்றா எழுப்புதலை தலைமை ஏற்று நடத்துதல் (9:1 - 10:44).*

# நெகேமியா

## *தலைப்பு:*

*நெகேமியா ("யெகோவா ஆறுதல் அளிக்கிறார்") பிரபலமான பானபாத்திரக்காரர். வேதாகமத்தில் இந்த புத்தகத்தைத் தவிர்த்து, இவர் வேறு எங்கும் காணப்படவில்லை. அவரது சமகாலத்தவர்களான எஸ்றா மற்றும் எஸ்தர் போல இப்புத்தகமும் பெயரிடப்பட்டது. இவரது தலைமையின் கீழ் நடந்த சில குறிப்பிட்ட சம்பவங்களை இந்த புத்தகம் விவரிக்கிறபடியால், அவரது பெயரே இப்புத்தகத்திற்கு சூட்டப்பட்டது. கிரேக்க செப்டுவாஜிண்ட் (LXX) மற்றும் லத்தீன் வுல்கேட் "இரண்டாம் எஸ்றா" என இப்புத்தகத்திற்கு பெயரிட்டன. இன்றைக்கும் எபிரேய பதிப்புகளில் எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்கள் ஒன்றாக காணப்படுவது போல ஆங்கில மொழிபெயர்ப்புகளின் பழையபதிப்புகளிலும் சேர்ந்தே இருந்திருக்கலாம், ஆனால், இன்றைய நாட்களில் தனித்தனியாக தான் இருக்கின்றன. புதியஏற்பாட்டு எழுத்தாளர்கள் நெகேமியா புத்தகத்திலிருந்து மேற்கோள் எதுவும் காட்டவில்லை.*

## *புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி*

*இப்புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகள் நெகேமியாவின் தனிப்பட்ட நாட்குறிப்பில் (Diary) இருந்து எழுதப்பட்டதாக இருந்ததாலும், தன்மை (First Person) நடையில் எழுதப்பட்டிருந்ததாலும், யூத மற்றும் கிறிஸ்த பாரம்பரியங்கள் எஸ்றா தான் இதன் ஆசிரியர் என்று அங்கீகரிக்கின்றன. இதனை நாம் வெளி ஆதாரங்கள் மற்றும் LXX மற்றும் வுல்கேட்டில் காண்கிறது போல, எஸ்றாவும் நெகேமியாவும் முதலில் ஒரே புத்தகமாக இருந்தன என்பதில் இருந்து அறிகிறோம்; மேலும், உள்ளிருந்து வரும் ஆதாரமாகிய "கர்த்தருடைய கரம்" என்ற பதம் எஸ்றா மற்றும் நெகேமியா இரண்டு புத்தகங்களிலும்*

மேலோங்கி நிற்பதன் மூலம், இதன் ஆசிரியர் - ஆசாரியர் மற்றும் வேதபாரகர் - என்னும் தகுதிகளை பெற்றிருந்தார் என்பதன் மூலமும் அறிகிறோம். எஸ்றா வேதபாரகராக இருந்ததால், அவர் பெர்சிய ஆவண காப்பகங்களை அணுக முடிந்தது. இதன் காரணமாக இவரின் இரண்டு புத்தகங்கள் நெகேமியா, குறிப்பாக, எஸ்றாவில் எண்ணற்ற ஆவண குறிப்புகளைக் காணமுடிகிறது. பெர்சிய ஆவணங்களை அணுக ஒருசிலருக்கு மட்டுமே அனுமதி இருந்தது, அதில் எஸ்றா விதிவிலக்கானவர் (எஸ்றா 1:2-4; 4:9-22, 5:7-17; 6:3-12).

நெகேமியா 1-ல் உள்ள சம்பவங்கள், கி.மு.446-ல் பெர்சிய ராஜா அர்தசஷ்டாவின் (கி.மு.462-423) 20-வது வருடத்தில் தாமதமாக தொடங்குகின்றன. காலவரிசைப்படி இப்புத்தகம் எருசலேமில் நெகேமியா விசாரிப்புக்காரனாக முதல் முறை இருந்த கி.மு.445-433-லிருந்து தொடங்கி, அவர் இரண்டாவதுமுறை பதவிவகித்தவரை (ஒருவேளை கி.மு.424) வரிசைப்படுத்துகிறது (நெகேமியா 13). எஸ்றாவால், நெகேமியா புத்தகம் இரண்டாவது முறை விசாரிப்புக்காரராக இருந்தபோது அல்லது அதற்குப்பின் எழுதப்பட்டிருக்கலாம், ஆனால் கி.மு.400-விற்குப் பின் எழுதப்பட்டிருக்க வாய்ப்பு இல்லை.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

தேவன் நியாயம் செய்கிறவர் என்பதற்கேற்ப, வழிதவறிய யூதா மற்றும் இஸ்ரவேலர்களை சிட்சித்து அவர்களை திருத்த அசீரியர்கள் மற்றும் கல்தேயர்களை (பாபிலோனியர்) தேவன் கொண்டுவருகிறார். கி.மு.722-ல் அசீரியர்கள் வடபகுதியில் இருந்த 10 கோத்திரத்தாரை நாடுகடத்தி, அன்றைய நாட்களில் அறியப்பட்டிருந்த உலகத்தின் பல பாகங்களிலும் சிதறடித்தார் (2ராஜா.17). அதற்குப்பின் பல நூற்றாண்டுகள் கழித்து, கி.மு.605-586-ல் யூதா, தேவனுடன் கொண்டிருந்த உடன்படிக்கையை தொடர்ச்சியக அவமதித்து வந்தபடியால்,

*அத்தேசத்தை அழித்து, சூறையாடி எருசலேமில் இருந்த மக்கள் தொகை குறைந்து போகும்படிச் செய்ய கல்தேயரைப் பயன்படுத்தினார் (2ராஜா.25). தேவன் அவரின் ஜனங்கள் கல்தேயர் தேசத்தில் 70 வருடங்கள் சிறைப்பட்டுப் போக அனுமதித்து அவர்களைச் சிட்சித்தார்.*

*யூதர்கள் சிறைப்பட்டிருந்த காலத்தில், பேரரசின் தலைமை கல்தேயர் (பாபிலோனியர்) களிடமிருந்து பெர்சியர்களின் கரங்களில் வந்து சேர்ந்தது (கி.மு.539, தானியேல் 5). அதற்குப் பின் தானியேல் அனேக தீர்க்கதரின வெளிப்பாடுகளை கண்டார். கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன்: எருசலேமிலே ஆலயத்தைக் கட்ட எனக்கு கட்டளையிட்டிருக்கிறார் என்ற கட்டளையுடன் (கி.மு. 539) எஸ்றா புத்தகம் தொடங்குகிறது. யூதர்களின் நாட்காட்டியின்படியான பண்டிகை மற்றும் பலிசெலுத்துதல் காலவரிசையை மீண்டும் ஸ்தாபிக்கிறது. செருபாபேலும் யோசுவாவும் முதல் திரும்பிவருதலை வழிநடத்தி, தேவாலயத்தை திரும்ப கட்டினர் (எஸ்றா 1-6). ஆமான் யூதகுலத்தை முற்றும் அழிக்க முற்பட்டபோது, பெர்சியாவில் இருந்து யூதர்கள் வெளியேறிய நிகழ்வை சுருக்கமாக எஸ்தர் புத்தகம் தருகிறது (கி.மு. 483-473). எஸ்றா 7 முதல் 10 அதிகாரங்கள் எஸ்றாவின் தலைமையில் தேசத்திற்கு இரண்டாவது திரும்பிவருதலை (கி.மு.458) விவரிக்கிறது. எருசலேமைச் சுற்றி இடிபட்டுக் கிடந்த அலங்கத்தைக் கட்ட / மதில்சுவரைக்கட்ட நிகழ்ந்த மூன்றாவது திரும்பிவருதலைக் குறித்து நெகேமியாவின் புத்தகம் விவரிக்கிறது (கி.மு.445).*

*அந்நாட்களின் யூத வரலாற்றில், அறிப்பட்டிருந்த கிழக்கத்திய ராஜ்ஜியங்கள் அனைத்தின் மீதும் பெர்சியா ஆதிக்கம் செய்து வந்தது. யூதாவின் நிர்வாகம், தளர்ந்த கைகளுடன் நடைபெற்று வந்த போதும், அத்தேசத்து அடிமைகளின் கலகம் அல்லது வேறு இடையூறுகள் வராதபடி பார்த்துக் கொண்டனர்.*

மேற்கொள்ளப்பட்ட தேசங்களின் சுவர்கள் மீண்டும் கட்டப்படுதல் வெளிப்படையான ஓர் அச்சுறுத்தலாக மைய்ய பெர்சிய நிர்வாகத்திற்கு இருந்தது. இதை செய்வதற்கு ராஜாவின் நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவர் கையிலேயே விடப்படவேண்டும். யூதா தேசம் மறுபடியும் புத்துயிர் பெற்றுவரும் முக்கியமான தருணத்தில், ராஜ்ஜியத்தின் மிகவும் நம்பிக்கைக்குரிய பணியினை மேற்கொள்ள பானபாத்திரக்காரன் மற்றும் ராஜாவின் நம்பிக்கைக்கு பாத்திரமான நெகேமியாவை தேவன் எழுப்பினார். அர்தசஷ்டாவின் (கி.மு. 464-423) ஆதரவு நெகேமியாவிற்கு இருந்தது. எப்படி யோசேப்பு, எஸ்தர், தானியேல் போன்றோர் ராஜாவின் அரண்மனையில் முக்கியமான பொறுப்பை வகித்தனரோ, அப்படி பெர்சியர்களின் கட்டுப்பாட்டிற்குள் பட்டணம் வீழ்ந்து விடாதபடி எருசலேமின் இடிந்த மதில்சுவர்களைக் கட்ட தலைமை ஏற்று நடத்தக்கூடிய பொறுப்பிற்கு நெகேமியாவை தேவன் உயர்த்தினார்.

வரலாற்று குறிப்புகளில் சுவராஸ்யமான விஷயங்கள் அனேகம் இருக்கின்றன. எஸ்தர், அர்தசஷ்டாவின் மாற்றாந் தாய். அர்தசஷ்டா யூதர்களுக்கு தயை செய்யவேண்டி, குறிப்பாக நெகேமியாவிற்கு காட்டும்படி சுலபமாக கேட்டுக் கொண்டிருந்திருக்கலாம். இரண்டாவது, தானியேலின் தீர்க்கதரிசனத்தில் வரும் 70 வாரங்கள், அர்தசஷ்டா அலங்கத்தை கட்டும்படிக்கு ஆணை இட்ட கி.மு.445-விலிருந்து தொடங்குகிறது. மூன்றாவது, கி.மு 5-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த பிக்வாய் என்பவர் எழுதிய எலிபெண்டைன் பப்ரி என்ற ஓர் எகிப்திய ஆவணம் (கி.மு.410) நெகேமியா (10:16) நெகேமியா எழுதியது போல, சமாரியாவின் ஊழியக்காரனாகிய சன்பல்லாத்துவை (2:19) நீக்கி விட்டு, யோகனான் (6:18; 12:23) மற்றும் நெகேமியாவை எருசலேமின் தேசாதிபதியாக நியமித்ததை குறித்தக் குறிப்பை காண்கிறோம். கடைசியாக, நியமனத்தின்படி (Canonical) பழையஏற்பாட்டின் காலவரிசையில் எழுதப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றதை

*வைத்துப் பாரக்கும் போது, கடைசி புத்தகங்களாக நெகேமியா மற்றும் மல்கியா என எஸ்றா குறிப்பிட்டு எடுத்துக்காட்டுகிறார். (நெகேமியா 13; மல்கியா 1-4). ஆக, தேவனின் 400 வருட அமைதி கடந்து செல்லும் வரை, யோவான் ஸ்நானகன் மற்றும் இயேசுவின் பிறப்பின் செய்தி அறிவிக்கப்படும் வரை, இஸ்ரவேலருக்கான செய்திகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை (மத்தேயு 1; லூக்கா 1,2).*

*கிறிஸ்துவின் அவதரிப்பு முழுமை பெறுவதற்கு முன்னிருந்த இஸ்ரவேலரின் வரலாற்றின் வெளிப்பாடுகள் முழுவதும் பழையஏற்பாட்டில் நிறைந்திருந்த போதிலும், யூதர்கள் தேவனுடைய உடன்படிக்கைகள் மற்றும் வாக்குதத்தங்களின் முழுமையை அந்நாள்வரை அனுபவிக்காமலே இருந்தனர். யூதர்களில் மிச்சமானவர்கள் என இருந்தாலும், ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்திருந்ததைப் பார்க்கும் போது (ஆதி.15:7) எண்ணாகமம் 1:46-ல் எகிப்தைவிட்டு வெளியேறிய போது நாம் காணும் எண்ணிக்கை பெரிய அளவில் இல்லை. யூதர்கள் தேசத்தைச் சுதந்தரிக்கவுமில்லை (ஆதி.15:7) அல்லது இறையாண்மை வெளிப்படுத்தி தேசத்தை ஆளுபவர்களாகவும் (அதி.12:2) மாறவில்லை. பிரதான ஆசாரியர் எலியேசர் மற்றும் பினெகாஸ் வம்சத்தில் வந்தவராக இருந்தபோதிலும் (எண்.25:10-13) புதியஏற்பாட்டின் படியான மீட்பின் திட்டம் நிறைவேற மேசியாவின் பிறப்பு, சிலுவைப்பாடு மற்றும் உயிர்த்தெழுதலுக்காக காத்திருக்க வேண்டியிருந்தது.*

## வரலாற்று கருப்பொருள் மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*தேவனின் சித்தத்தைச் செய்வதற்காக தேவனுடைய வார்த்தை மிகக்கவனத்துடன் வாசிக்கப்படவேண்டும் என்பதே இப்புத்தகத்தின் தொடர்ச்சியான கருப்பொருள். எஸ்றா "கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாணப்*

*புஸ்தகத்தைக் கொண்டுவந்து வாசித்த போது" (நெகேமியா **8:1**) ஆவிக்குரிய எழுப்புதல் உண்டானது. எஸ்றாவும் சில ஆசாரியர்களும் "தேவனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைத் தீர்க்கமாக வாசித்து, அர்த்தஞ்சொல்லி, வாசித்ததை" வந்திருந்தவர்களுக்கு விளங்கப் பண்ணினார்கள் (**8:8**) எனக் காண்கிறோம். மறுநாளில், ஜனத்தின் சகல வம்சத்தலைவரும், ஆசாரியரும், லேவியரும், நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்று வேதபாரகனாகிய எஸ்றாவினிடத்தில் கூடிவந்தார்கள் (**8:13**) எனக் காண்கிறோம். "நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே" (நெகேமியா **10:34,36**) என்ற வார்த்தையின்படி, பலிபீடத்தில் பலியிடுதல் திரும்ப மிக கவனத்துடன் செயல்படுத்தப்பட்டது. தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்திற்கு கீழ்ப்படிவதில் அவர்கள் ஆணையிட்டுப்பிரமாணம் பண்ணினார்கள் (**10:29**); அவ்வளவு தூரம் கர்த்தருடைய சித்தம் நிறைவேற்றுவதில் கவனமாக இருந்தனர். விவாகம் பண்ணுவதில் சீர்திருத்தம் கொண்டுவருவந்ததில் "மோசேயின் புஸ்தகத்தை வாசித்தார்கள்" (**13:1**) என்பதில் இருந்து அதில் சொல்லியிருக்கிறபடி மாற்றங்களைக் கொண்டுவந்தனர் என அறிகிறோம்.*

*புத்தகத்தில் ஊடுருவிச்செல்லும் இரண்டாவது கருப்பொருள் "நெகேமியாவின் கீழ்ப்படிதல்" வெளிப்படையாக புத்தகம் முழுவதும் பேசப்படுகிறது. ஏனென்றால் இப்புத்தகம் நெகேமியாவின் நினைவில் நிற்பவைகளை அடிப்படையாகக் கொண்டு அவரே தன்னைக்குறித்து எழுதுவதுபோல் எழுதப்பட்டுள்ளது. தேவன் நெகேமியாவின் கீழ்ப்படிதலைக் கொண்டு செயல்பட்டார். ஆனாலும், தவறான நோக்கத்துடன், பொல்லாப்பானவைகளை செய்யத் துணிந்த நெகேமியாவின் எதிரிகளின் வழியாகவும் தேவன் செயல்பட்டார். நெகேமியாவின் வெற்றிகரமான செயல்திட்டங்களால் அல்ல, "தேவன், அவர்கள் (எதிரிகள்) ஆலோசனைகளை அபத்தமாக்கினார் (**4:15**)"*

*என்பதினால் நெகேமியாவின் எதிரிகள் மடங்கடிக்கப்பட்டார்கள். கோரேஸ் ராஜா தேவனுடைய ஜனங்கள் அவர்களின் எருசலேமின் சுவர்களை திரும்ப எடுப்பித்துக் கட்ட, கட்டட வேலைகளுக்கு பண உதவி செய்து, எப்படி தேவனின் ஜனங்கள் தேசத்திற்கு திரும்பச் செல்ல அனுப்பிவைக்க தயை பாராட்டச் செய்தாரோ, அதே போல, யூதாவின் எதிரிகளால் - தேவன் அவருடைய ஜனத்தாரின் முழங்கால்கள் முடங்கும் அளவிற்கு - கீழ்ப்படிதலைக் கற்றுத்தந்தார், நெகேமியா எருசலேமின் தேவனுடைய ஜனம் எருசலேமில் குடியேற்றப்படவேண்டும் என்பதே வசனம் 7:5-ல் காணும் "தேவன் என் மனதிலே ஓர் எண்ணத்தை உண்டாக்கினார்" என்பது. அதை தேவன் தாமே நிறைவேற்றினார்.*

*எஸ்றாவில் காண்பது போல, நெகேமியாவில் காணும் மற்றொரு கருப்பொருள் - "எதிர்ப்பு". பெர்சியா தேசத்திற்கு விரோதமாக தேவனுடைய ஜனத்தார் எழும்பினார்கள் என யூதாவின் சத்துருக்கள் வதந்தியைக் கிளப்பிவிட்டனர். எருசலேமின் மதில்சுவர் கட்டப்படுவதை தடுக்க அவர்களை பயமுத்துவதே அதன் நோக்கம். வெளியில் இருந்து எதிர்ப்பு, உள்ளத்தை உடைக்கும் அளவிற்கு ஊழல், உள்ளுக்குள் காணப்பட்ட கருத்து வேறுபாடு என பல அவலநிலைகள் இருந்த போதிலும், யூதா தேசத்தார் எருசலேமின் மதில்களை 52 நாட்களில் கட்டி முடித்தனர் (6:15). வேதபாரகனாகிய எஸ்றா "கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாணப் புத்தகத்தைக்" கொண்டுவந்து வாசித்து எழுப்புதல் பெற்றனர். "ஏழாம் மாதத்தில் பண்டிகையிலே கூடாரங்களில் குடியிருக்க வேண்டும்" என்று எழுதியிருக்கிறபடி கூடாரபண்டிகையைக் கொண்டாடினார்கள் (8:14, கி.மு.445). "சர்வ வல்ல தேவனின் கரம்" என்ற கருப்பொருளும் அத்துடன் தேவன், அவரது ஜனங்களுடனும் அவர் ஜனத்தாரின் எதிரிகளுடன்*

இடைபடுகிறார் மற்றும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார் என்ற அடிப்படைச் செய்தி புத்தகத்தின் ஊடாக கடந்து செல்கிறது; ஆனால், நெகேமியா என்னும் தனிநபரின் எண்ணங்கள், குறிக்கோள்கள், அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றங்கள் குறித்து இந்த புத்தகத்தில் எழுதியிருப்பதை நாம் வாசிக்கும் போது இந்த மேற்சொன்ன கருப்பொருளைக் காண்பதற்கும் மேலாக வாசிப்பவரை நெகேமியாவுடன் எளிதில் அடையாளப்படுத்திக் கொள்ளச் செய்கிறது. பானபாத்திரக்காரனாகிய நெகேமியாவின் மிகச்சிறப்பான, முன்மாதிரியான நடவடிக்கைகள், எருசலேமின் மதில்சுவரை மீண்டும் எடுத்துக் கட்ட வேண்டும் என தேவன் சகல எதிர்ப்புகள் மற்றும் பின்னடைவுகளுக்கு மத்தியிலும் தீர்மானித்து, நெகேமியாவை எடுத்துப் பயன்படுத்தி பண் இசைப்பதில் அழகாக செயல்பாடுகள் ஒன்றுசேர்ந்து இசை எழுப்புவது போல, ஒன்றுசேர்த்த தேவகரத்தின் செயல்களை மறைக்கிறது. "தேவனுடைய தயவுள்ள கரம்" நெகேமியா புத்தகம் முழுவதும் பாய்ந்து செல்கிறது (நெகேமியா-1:10; 2:8,18).

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

முதலில், எருசலேம் மதில்களுடன் சம்பந்தபடுத்தியே நெகேமியா புத்தகத்தின் அனேகமான பகுதிகள் சொல்லப்பட்டிருப்பதால் நீங்கள் நெகேமியவின் காலத்தில் எருசலேம் எனும் வரைபடத்தை பார்த்தல் நன்று. இரண்டாவது, அதிகாரங்கள் 1-12 காலகட்டம் ஒரேவருடம் (கி.மு. 445 ); அதிகாரம் 12க்கும் 13 க்கும் இடையில் அதிக கால இடைவெளி இருக்கிறது (ஏறக்குறைய 20 வருடங்கள்). கடைசியாக, ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். நெகேமியா எருசலேமின் இரண்டு தேசாதிபதிகளின் ஆட்சி காலத்தில் வேலை செய்தார். முதலாவது கி.மு. 445-433 வரை; இரண்டாவது கி.மு. 424-ல் ஆரம்பித்து கி.மு.410-ற்கு மேல் சென்றிருக்க முடியாது.

**சுருக்கம்**

***I* நெகேமியா அதிபதியாக முதல் முறை பணியாற்றியது (1:1-12:47)**

*அ. நெகேமியா திரும்பவருதல் மற்றும் அலங்கம் திரும்ப கட்டப்படுதல் (1:1 - 7:73முதல்பாகம் வரை)*

*1. நெகேமியா எருசலேம் செல்லல் (1:1 -2:20)*

*2. நெகேமியாவும் ஜனங்களும் சேர்ந்து மதில்சுவர்களை திரும்ப கட்டுதல் (3:1-7:3)*

*3. நெகேமியா முதல் முறை தேசத்திற்கு ஜனங்களை செருபாபேல் தலைமையின் கீழ் அழைத்து வருதல் (7:4 -73 முன்பாகம் வரை).*

*ஆ. எஸ்றாவின் எழுப்புதல் மற்றும் புதுப்பித்தல் (7:73 பின்பக்கம் முதல் - 10:39)*

*1. எஸ்றா நியாயப்பிரமாணத்தை விளக்குகிறார் (7:73 பின்பக்கம் முதல்-8:12)*

*2. ஜனங்கள் ஆராதித்தலும் மனந்திரும்புதலும் (8:13 - 9:37)*

*3. எஸ்றா வும் ஆசாரியர்களும் உடன்படிக்கையை புதுப்பித்தல் (9:38-10:39)*

*இ. நெகேமியா மீண்டும் குடியேறுதலும் மகிழ்தலும் (11:1 - 12:47)*

*1. எருசலேம் மீண்டும் குடியமர்த்தப்படுதல் (11:1-12:26)*

*2. ஜனங்கள் மதில்களை பிரதிஷ்டைச் செய்தல் (12:27-47)*

***II.* நெகேமியா அதிபதியாக இரண்டாம் முறை பணியாற்றியது (13:1-31)**

# எஸ்தரின் சரித்திரம்

## தலைப்பு:

*காலாகாலமாக "எஸ்தர்" என்ற தலைப்பே எந்தவொரு மாற்றமும் இல்லாமல் வழங்கிவருகிறது. எஸ்தர் மற்றும் ரூத் சரித்திரம், இவை மட்டுமே பழையஏற்பாட்டில் பெண்களின் பெயரால் அழைக்கப்படும் புத்தகங்கள். உன்னதப்பாட்டு, ஒபதியா மற்றும் நாகூம் புத்தகங்களைப் போன்றே எஸ்தர் புத்தகத்தில் இருந்தும் புதிய ஏற்பாட்டில் எந்தவொரு மேற்கோளும் காட்டடப்பட வில்லை.*

*"அத்சாள்" (2:7) அர்த்தம் "பசுமை மாறா நறுமணச்செடி" என்பதே எஸ்தரின் எபிரேயப் பெயர். இது "நட்சத்திரம்" என்ற பெர்சிய வார்த்தையில் இருந்தோ அல்லது பாபிலோனிய காதல் தேவதை இஸ்தாரின் பெயராகவோ இருந்திருக்கலாம். அபியாயிலின் மகளான இவள் தாய்தகப்பன் இல்லாது போன போது, மொர்தெகாயினால் மகளாக எடுத்து வளர்க்கப்பட்டாள் (மொர்தெகாயின் சிறியதகப்பனின் குமாரத்தி - எஸ்தர்; 2:7,15).*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*மொர்தெகாய், எஸ்றா மற்றும் நெகேமியா இவர்களில் யாரேனும் ஒருவர் ஆசிரியராக இருக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டாலும், ஆசிரியரின் பெயர் தொடர்ந்து அறியப்படாததாகவே இருந்து வருகிறது. எஸ்தர் சரித்திரம் யாருடைய எழுத்தாக இருந்தாலும், எழுதியவருக்கு பெர்சிய பழக்க வழக்கங்கள், ஆசாரம், வரலாறு மற்றும் சூசாவிலிருந்த அரன்மணை(1:5-7) என்பவை பரிச்சயமானதாக இருந்திருக்கின்றன. மேலும் எபிரேய கால அட்டவணை, பழக்கவழக்கங்கள் மிக நன்றாக அறிந்திருந்திருக்கிறார். அத்துடன் யூத தேசப்பற்று உள்ளவராக காணப்படுகிறார். இவர்*

*இஸ்ரவேலில் பின் நாட்களில் குடியேறிய பெர்சிய யூதர் ஒருவர் எஸ்தர் புத்தகத்தை எழுதியவராக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.*

## *பிண்ணனி மற்றும் அமைப்பு*

*எஸ்தரின் சரித்திர சம்பவங்கள் உலக வரலாற்றில் பெர்சிய காலத்தில் கி.மு. **539** (தானியேல் **5:30,31**) லிருந்து கி.மு. **331** (தானியேல்**8:1-27**) வரை உள்ள நாட்களில் சம்பவித்திருக்கும். அகாஸ்வேரு ராஜா அரசாண்ட காலம் கி.மு. **486 - 465** காலத்தில் எஸ்தர் புத்தக சம்பவங்களின் காலம் கி.மு. **483 - 473** வரை உள்ளடங்கியது. அகாஸ்வேரு என்ற பெயர் கேயர்ஷா (Khshayarsha) என்ற பெர்சிய பெயரின் ஒலிபெயர்ப்பு. சக்ஸீஸ் "Xerxes" என்பது அவரது கிரேக்க பெயர்.*

*பாபிலோனிய (கல்தேயர்) தேசத்தில் **70** வருடம் சிறையிருப்பில் இருந்து யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு செருபாபேல் தலைமையில் முதல்முறை திரும்பிய கி.மு. **538**-ற்கும் (எஸ்றா **1-6**) எஸ்றாவின் தலைமையில் கி.மு. **458**-ல் (எஸ்றா**7-10**) இரண்டாம் முறை திரும்பியதற்கும் இடையில் இருந்த நீண்ட கால இடைவெளியில் சம்பவித்தது. நெகேமியாவின் சூசானில் இருந்து எருசலேம் பயணம் (மூன்றாவது திரும்பிவருதல்) பின்னர் கி.மு. **445**—ல் நிறைவேறியது.*

*எஸ்தர் சரித்திரமும், யாத்திராகமும் யூத குலத்தை அழிக்கும்படிக்கு அந்நிய தேசங்கள் எவ்வளவு தீவிரமாக முயன்றன என்பதையும், கி.மு. **2100-2075**-வில் தேவன் ஆபிரகாமுக்குத் தந்த உடன்படிக்கையின் வாக்குதத்தங்கள்படி (ஆதி.**12:1-3; 17:1-8**) - அனைத்தையும் ஆளுகை செய்யும் தேவன் - தன் சொந்த ஜனத்தை தமது சர்வல்லமையினால் எவ்வாறு பாதுகாத்தார் என்பதை காலவரிசைப்படுத்தி எழுதுகின்றன. தேவனின் முயற்சியின் விளைவாக தோன்றிய புதிய வருடாந்திரப் பண்டிகை, தேசம் பாதுகாக்கப்ப்ட்டதை*

*நினைவு கூறும்படிக்கு, 12-வது மாதத்தில் கொண்டாடப்பட்டது; பூரிம் பண்டிகையின் தொடக்கத்தை (பிப்ரவரி - மார்ச்) எஸ்தர் 9,10 குறிப்பிட்டுள்ளது. மோசேயின் பிரமாணத்தில் கொடுக்கப்படாது - இஸ்ரவேல் ஜனங்கள் கொண்டாடும்படிக்கு கொடுக்கப்பட்ட இரண்டு பண்டிகையில் ஒன்றான இது - இந்நாள் வரை இஸ்ரவேலில் கொண்டாடப்பட்டு வருகிறது (ஹனுக்கா அல்லது ஒளியின் பண்டிகை (யோவான் 10:22).*

## வரலாற்று கருப்பொருள் மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*தேவனுடைய பெயர் இப்புத்தகத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்பதால், இப்புத்தகத்தின் உண்மைத்தன்மையில் சிலர் சந்தேகத்தை எழுப்பிய போதிலும், வேதாகமத்தின் புனித நூல் என எஸ்தர் புத்தகத்தின் 167 வசனங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. கிரேக்க செப்டுவாஜிண்ட் (LXX) இதற்கும் அதிகமாக மேற்கோள் காட்டமுடியாத 107 வசனங்களைச் சேர்த்தது. உன்னதப்பாட்டு, ரூத், பிரசங்கி மற்றும் புலம்பல் புத்தகங்களுடன் எஸ்தர் புத்தகம் - மெகிலோத்தின் பழைய ஏற்பாடு அல்லது "5 தோல்சுருட்கள்" உடன் சேர்ந்து இருக்கிறது. வருடத்தின் ஐந்து விசேஷ நாட்களில் - இந்த ஐந்து புத்தகங்களையும் தேவாலயத்தில் ரபீமார்கள் எடுத்து வாசிப்பது வழக்கம் - இதில் எஸ்தர் புத்தகம் பூரிம் பண்டிகை நாட்களில் வாசிக்கப்படும் (9:20-32).*

*எகிப்தில் இருந்து யூதர்கள் வெளியேறி ஏறக்குறைய 1000 வருடங்களுக்குப் பின், இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மொர்தெகாய் (யென்யமீன் கோத்திரத்தான் சவுல் வம்சவழி வந்தவர் 2:5) மற்றும் ஆமானுக்கும் (அமலக்கேயரின் ராஜா ஆகாக்கின் வம்சவழிவந்தவர் 3:1,10; 8:3,5; 9:24) இடையில் இந்த சம்பவம் நடைபெற்றது. எகிப்தில் இருந்து இஸ்ரவேலர் அமலக்கேயர் (அமலேக் - ஈசா வின் பேரன்*

*(ஆதி.36:12))* தாக்கிய போது வெளியேறினர். தேவன் அமலேக்கியரில் ஒருவரும் இல்லாதபடி அழித்துப்போடும்படி. கட்டளையிட்டார் *(யாத்.17:14; உபா.25:17-19)*. சவுலுக்கு (கி.மு. 1030) அமலக்கேயர் மற்றும் ஆகாக் ராஜா உட்பட அனைவரையும் கொன்று போட கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவன் இதில் கீழ்படியவில்லை *(1சாமு. 15:7-0)* அது தேவனுக்கு பிரியமாக இருக்கவில்லை *(1சாமு.15:11,26; 28:18)*. இறுதியாக, சவுல் ஆகாகை துண்டித்துப்போட்டான் *(1சாமு.15:32,33)* எனக் காண்கிறோம். எனினும், ஆகாக்கின் வம்சவழியில் வந்தபடியால், ஆமானுக்கு யூதர்களின்மீது ஆழமான வெறுப்பு இருந்தது.

ஆகாக்கின் மரணத்திற்குப் பின் 550 வருடங்கள் கழித்து எஸ்தரின் காலம் வருகிறது, இவ்வளவு காலம் கடந்த பின்பும், ஆகாகின் வம்சவழி வந்த ஆமானோ அல்லது பென்யமீன் கோத்திரத்து மொர்தகாயோ வழிவகை பகையை மறக்கவில்லை, அது அவர்கள் உள்ளத்தில் புகைந்தெரிந்து கொண்டிருந்தது. இது ஒன்றே மொர்தெகாய் ஆமானுக்கு முன் அடிபணியவில்லை என்பதற்கு விளக்கம் தருகிறது *(3:2,3)* மேலும் ஆமான் யூத குலத்தை ஏன் அடியோடு அழிக்க வேண்டும் என கொடூரமாக சிந்தித்தான் *(3:5,6,13)* என்பதற்கும் விளக்கம் தருகிறது. எதிர்பார்த்தவிதமாக, தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தையின்படி, அமலேக்கியர் முற்றிலும் அழிக்கப்பட்டதும், யூதர்களை பாதுகாப்பேன் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் தான் மேம்பட்டு நின்றது. பூரீம் பண்டிகை (அக்காதியன் மொழியில் "சீட்டு" என அர்த்தம்) அதன் அடிப்படையில் இப்பெயர் வைக்கப்பட்டது *(3:7; 9:26)*. இப்பண்டிகை அவர்கள் சஞ்சலம் சந்தோஷமாகவும், அவர்கள் துக்கம் மகிழ்ச்சியாகவும் மாறின மாதமாகவும் ஆசரித்து, அந்நாட்களில் விருந்துண்டு, சந்தோஷங்கொண்டாடவும், ஒருவருக்கொருவர் வரிசைகளை (பரிசுகளை) அனுப்பவும், எளியவர்களுக்கு

தானதர்மஞ்செய்யவும் திட்டம் பண்ணினார்கள் (9:21,22). இப்பண்டிகை சரியான காலத்திலே ஆசரிக்கப்பட்டு, இந்த நாட்கள் எல்லா தலைமுறைகளிலும், வம்சங்களிலும், தேசங்களிலும், ஊர்களிலும் நினைவுகூடப்பட்டு, தவறிப்போகாமல் ஆசரித்தார்கள் (9:27,28). எஸ்தர் பின்நாட்களில் உபவாசத்தோடும் அலறுதலோடும் ஆசரிப்போம் என தங்கள்மேல் கடனாக உறுதிபடுத்திக் கொண்டு எஸ்தர் ராஜாத்தி எழுதினாள் (9:31). பல நூற்றாண்டுகளாக இஸ்ரவேல் தேசத்தில் ஆசரிக்கப்படும் பண்டிகையாக இப்பண்டிகை இருந்த போதிலும், பரிசுத்த வேதாகமத்தில், வேறு எங்கும் பூரிம் குறிப்பிடப்படவில்லை.

எஸ்தர் சரித்திரத்தை ஒரு சதுரங்க விளையாட்டுக்கு ஒப்பிடலாம். தேவனும் சாத்தானும் - கண்களுக்குத் தெரியாதவர்கள்; நிஜ வாழ்வில் ராஜாக்கள், ராணிக்கள், பிரபுக்களை நகர்த்தி விளையாடினர். சாத்தான் ஆமானை அரமணைக்குள் வைத்தது அவன், "செக்" என்று இறுதி முடிவைச் சொன்னது போல் இருந்தது. எஸ்தரையும் மொர்தகாயையும் தேவன் நகர்த்தி, சாத்தானுக்கு "செக்மேட்" என்று செயலிழக்கச் செய்தது போல் ஆனது. ஆதி.3:1-19-ல் நாம் காணும் மனுஷனின் வீழ்ச்சிக்குப் பின் மனுஷசிருஷ்டிப்புடன் தேவன் கொண்டிருக்கும் உறவைத் துண்டிக்கவும், தேவன் இஸ்ரவேலருடன் கொண்டிருக்கும் உறவில் இடையூறு செய்யவும் சாத்தான் முயற்சி செய்து கொண்டே வருவதைப் பார்க்கிறோம். உதாரணமாக, கிறிஸ்துவின் வம்சவழி யூதா குடும்பத்திலுள்ள ராஜவம்சமான யாவரும் சங்காரம்பண்ணப்பட்டார்கள்; அதில், யோவாஸ் மட்டும் ஒளித்துவைத்துப் பாதுகாக்கப்பட்டான் (2நாளா.22:10-12). பின்நாட்களில் ஏரோது பெத்லகேமில் இருந்த இருவயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் இயேசு அவர்களுக்குள் இருக்கிறார் என்பதாக எண்ணிக்கொண்டு கொன்றுபோட்டான் (மத்தேயு2:16). சாத்தான் தேவனை

*விட்டுவிலகி, தன்னை சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து கொள் எனச் சோதித்தான் (மத்தேயு 4:9). சாத்தானின் வற்புறுத்தலின் பேரில், பேதுரு கல்வாரிக்கு இயேசு செல்வதைத் தடுக்கும்படி முயற்சித்தான் (மத்தேயு16:22). கடைசியாக, சாத்தான் யூதாஸின் உள்புகுந்து இயேசுவை யூதர்கள் மற்றும் ரோமர்களுக்கு காட்டிக்கொடுக்கும்படிச் செய்தான் (லூக்கா:22:3-6). தேவன் என்ற பெயர் எஸ்தர் புத்தகத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றாலும், அவரே சாத்தானின் கொடூரமான செயல்திட்டங்களை தடுத்து வருங்கால வைப்பாக பாதுகாப்பை யூதர்களுக்கு தந்தவர் என்பது புத்தகம் முழுவதும் எங்கும் வெளிப்படையாகக் காணப்படுகிறது.*

*எஸ்தர் புத்தகத்தில், தேவன் ஆபிரகாமுக்கு அளித்த நிபந்தனையற்ற உடன்படிக்கை வாக்குதத்தங்கள் (ஆதி.17:1-8) மேலும் தாவீதிற்கு அளித்த வாக்குதத்தங்கள் (2 சாமு.7:8-16) யாவும் ஆபத்திற்கு உள்ளானது. ஆனாலும், யூதகுலம் முற்றிலும் அழிக்கப்பட இருந்த அழிவில் இருந்து அவர் மீட்டெடுத்த வியத்தகு மீட்பினைக் காணும்போது, இஸ்ரவேலர் மீது தேவன் கொண்டிருந்த அன்பு வெளிப்படுவது போல் வேறு எங்கும் நாம் காண இயலாது. "இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை" (சங்கீதம் 12).*

## ***விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்***

*உன்னதப்பாட்டு புத்தகத்தில் நாம் காண்பது போலவே, எஸ்தர் புத்தகத்திலும் எங்கும் தேவன் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை என்பது வெளிப்படையான கேள்வி. இப்புத்தகத்தை எழுதிய ஆசிரியரோ அல்லது இதில் பங்குபெற்றவர்களோ தேவனுடைய நியாயப்பிரமாணம், லேவியரின் ஆசரிப்புப்படிபலியிடுதல், ஆராதனை அல்லது ஜெபம் குறித்து இப்புத்தகத்தில் எங்கேயும் குறிப்பிடவில்லை. சந்தேகப்படுகிறவர்கள் கேட்கும் கேள்வி, "பெர்சிய ராஜாவின்*

*குறிப்பு **175** தடவைக்கும் மேலாக புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் போது, தேவனின் பெயர் ஏன் ஒரு முறை கூட குறிப்பிடப்படவில்லை?" தேவன் தமது இறையாட்சியினால் எதிரிகளை மேற்கொண்டு யூதர்களை காப்பாற்றியிருக்கும் போது, அவருக்கு உரிய அங்கீகாரம் புத்தகத்தில் ஏன் அளிக்கப்படக்கூடாது?"*

*இக்கேள்விக்கு இப்படியாக பதில் அளிக்கலாம்: நான் இஸ்ரவேலை பாதுகாத்தேன் என்பது புத்தகத்தில் குறிப்பிடப்படவேண்டும் என தேவன் விரும்பியிருந்தல், அவர் தனது ராஜரீக வல்லமையால் எழுதிய ஆசிரியரை தேவன், தன்னைப்பற்றி எழுதும்படி ஏவியிருக்கலாம். இப்பிரச்சினை மனுஷர்களுக்குள் காணப்படும் பிரச்சினையாக இருக்கிறதே அல்லாமல், தெய்வீக பிரச்சினையாக காணப்படவில்லை. ஏனென்றால் தேவன் காணமுடியாதபடி இருந்து, வல்லமை தந்து, எல்லாவற்றையும் அவரது நோக்கத்திற்காக கட்டுப்பாட்டில் வைத்திருப்பவராக இருக்கிறார் என்பதற்கு உன்னதமான அடையாளமாக / விளக்கமாக எஸ்தர் இருக்கிறாள். எஸ்தர் புத்தகத்தில் எந்தவொரு அற்புதம் குறித்தும் குறிப்பிடப்படவில்லை என்றாலும் இஸ்ரவேலரை எதிர்காலத்திற்கென்று பாதுகாக்கும் ஒவ்வொரு சம்பவத்திலும், யெகோவா தேவனின் சர்வவல்லமை, மற்றும் அவர் சர்வத்தையும் அறிந்தவர் என்பது வெளிப்படுகிறது. அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை என்பது ஒரு வாதத்திற்குரிய செய்தியே இல்லை. அனைத்து சம்பவங்களிலும் அவரே முக்கிய காதாப்பாத்திரமாக இருக்கிறார்.*

*இரண்டாவது, மொர்தகாயும் எஸ்தரும் ஏன் உலகப்பிரகாரமான வாழ்க்கைமுறையைப் பின்பற்றினார்கள்? நாம் தானியேலில் காணபதுபோல (தானியேல் **18-20**)), எஸ்தரில் **(2:6-20)** பரிசுத்தத்தைக் குறித்த வைராக்கியம் காணப்படவில்லையே? மொர்தகாய் தன்னுடைய மற்றும் எஸ்தரின் யூத பரம்பரை*

*குறித்த விஷயத்தை, தானியேலைப் போல வெளிப்படுத்தாமல் தானியேல் **(6:5)**, ரகசியமாக பாதுகாத்து வந்தான். எஸ்றாவை ஒப்பிட்டுப்பார்த்தால், தேவனுடைய வேதத்தை ஆரய எஸ்றா தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான் (எஸ்றா:**7:10**) என காண்கிறோமே அப்படிப்பட்ட பக்குவம் இவர்களில் காணப்படவில்லை. நெகேமியா எருசலேமினை நேசித்தான் வெளித்தோற்றத்தில் இருந்து பார்க்கும்போது, நெகேமியா எருசலேம் மீது கொண்டிருந்த பற்று எஸ்தர் மொர்தகாய் இடையில் காணப்பட்ட பாசத்தை மறைக்கிறது (நெகே.**1:1-25**).*

## மேற்சொன்ன பிரச்சினைகளுக்கு கீழ்க்காணும் விளக்கம் தீர்வுகாண்கிறது

*முதலாவது, இந்த புத்தகம் நடைபெற்ற அனைத்தையும் குறித்து வைக்கவில்லை. மொர்தகாயும் எஸ்தரும் மிக ஆழமான விசுவாசம் வைத்திருந்தனர் என்பது **4:16**-ல் ''இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள்.'' என்பதில் இருந்து உறுதிபடுத்தப்படுகிறது. இரண்டாவது, தெய்வீக பயம் நிறைந்த நெகேமியா கூட அகாஸ்வேரு ராஜாவினிடத்தில் பேசும் போது, தேவன் என்ற வார்த்தையை உபயோகிக்கவில்லை (நெகே.**2:1-8**). மூன்றாவது, ஆராதனைக்கு அடிப்படையாக இருந்த யூதர்களின் பண்டிகைகள் உதரணமாக, பஸ்கா (**2**ராஜா.**23:22**) மற்றும் கூடாரப்பண்டிகை (நெகே.**8:17**) போன்றவை எஸ்தர் காலத்திற்கு பல வருடங்களுக்கு முன்பே தொலைந்து போயிருந்தன. நான்காவது, அகாஸ்வேரு ராஜாவிற்கு பல வருடங்களுக்கு முன் சமாரியர்களால் எழுதப்பட்ட நிருபம் அவர்களை பயமுருத்தியிருக்கலாம். (கி.மு. **486**; எஸ்றா**4:6**). ஐந்தாவது, ஆமானை வணங்கவுமில்லை, நமஸ்கரிக்கவுமில்லை (**3:1,2**) என்ற போது ஆமானின் பொல்லாத நோக்கம் வெளிப்படவில்லை. அது மற்றவர்களால் பேசப்பட்டு,*

*ஏற்கெனவே யூத ஜனத்தார் யாவரையும் மிரட்டி வைத்திருக்கக் கூடிய செய்தியாக இருந்திருக்கும். ஆறாவது, எஸ்தர் தன் யூத பாரம்பரியத்தை ஏற்ற வேளையில் வெளிப்படுத்தினாள் (7:3,4) என்றபோதிலும், ஏன் தானியேல் போல் எஸ்தரும் மொர்தகாயும் தேவனுக்கு தாங்கள் காட்ட வேண்டிய பக்தியை வெளிபடுத்தவில்லை என்ற நச்சரிக்கும் கேள்வி இருக்கத்தான் செய்கிறது. நெகேமியாவின் விண்ணப்பத்தில் (நெகே.1:5-11, விசேஷமாக வசனம் 7) நீர் உம்முடைய தாசனாகிய மோசேக்கு கற்பித்த கற்பனைகளையும், கட்டளைகளையும், நியாயங்களையும் கைக்கொள்ளாதேபோனோம் என்ற வார்த்தைகளில் இருந்து தேசத்திற்கு திரும்பி வந்து சூசாவில் இருந்த யூதர்களிடத்தில் ஆவிக்குரிய விஷயத்தில் சோர்வு இருந்தது என்று அறிகிறோம். ஆக, இந்த பிரச்சினைக்கு தீர்வு தேவன் தாம் காணவேண்டும் ஏனெனில் தேவன் - அவர் ஒருவர் மாத்திரமே மனுஷர்களின் இருதயங்களை அறிந்தவர்.*

**சுருக்கம்**

***I. வஸ்திக்கு மாற்றாக எஸ்தர் கொண்டுவரப்பட்டாள் (1:1-2:18)***

*அ. வஸ்தியின் கீழ்ப்படியாமை (1:1-22)*

*ஆ. எஸ்தர் முடிசூட்டப்படுதல் (2: 1-18)*

***II. மொர்தகாய் ஆமானை மேற்கொள்ளுதல் (2:19-7:10)***

*அ. மொர்தகாயின் விசுவாசம் (2:19:7:10)*

*ஆ. ஆமான் பதவி உயர்த்தப்படுதல் மற்றும் ஆணை (3:1-15)*

*இ. எஸ்தர் இடைபடுதல் (4:1-5:14)*

*ஈ. மொர்தகாய் அங்கீகரிக்கப்படுதல் (6:1-13)*

*உ. ஆமானின் வீழ்ச்சி (6:14- 7:10)*

## |II. ஆமானின் இனப்படுகொலை சதிதிட்டத்தில் இருந்து இஸ்ரவேல் பாதுகாக்கபடல் *(8:1-10:3)*

*அ. எஸ்தர் மற்றும் மொர்தகாய் பரிந்து பேசுதல் (8:1-17)*

*ஆ. யூதர்களின் வெற்றி (9:1-19)*

*இ. பூரிம் பண்டிகையின் ஆரம்பம் (9:20-32)*

*ஈ. மொர்தகாய் பிரசித்தம் அடைதல் (10:1-3)*

# யோபுடைய சரித்திரம்

## *தலைப்பு:*

*பரிசுத்த வேதாகமத்தின் ஏனைய புத்தகங்களைப் போலவே, சொல்லப்படும் சம்பவத்தின் முக்கிய நாயகனின் பெயர் இப்புத்தகத்திற்கும் சூட்டப்பட்டுள்ளது. எபிரேய மொழியில் "துன்புறுத்தப்பட்ட" என்ற வார்த்தையில் இருந்து "துன்புறுத்தப்பட்டவன்" என்ற அர்த்தத்தை யோபு என்ற பெயர் பெற்றிருக்கிறது. அல்லது அராமிய மொழியில் "மனம்திரும்பு" என்பதற்குரிய வார்த்தையில் இருந்து "மனம்திரும்பியவன்" என்ற அர்த்தத்தை ஏற்றுக் கொண்டது. யோபுவின் வாழ்க்கையின் ஒரு சகாப்தத்தை ஆசிரியர் விவரிக்கிறார். இதில் அவர் சோதிக்கப்பட்டு தேவனுடைய குணாதிசயம் வெளிப்படுவதைக் காண்கிறோம். புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை நேரடியாக குறிப்பிடுவதில் இருந்தும் (ரோமர் 11:35; 1 கொரி.3:19), எசேக்கியேல் 14:14,20 மற்றும் யாக்கோபு 5:11 புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதிலும் இருந்து யோபு என்பவர் நிஜ வாழ்க்கையில் வாழ்ந்த ஒரு மனிதரை பற்றிய சரித்திரம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*இந்த புத்தகம் அதன் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடவில்லை. யோபுவிற்கு பரலோகத்தில் அவருக்கு உண்டான கடும் சோதனை சம்பவங்கள் குறித்த அறியாமையை வைத்தே இந்த புத்தகம் அமைந்திருக்கிறபடியால், யோபு எழுதினார் என்று குறிப்பிட முடியாது. ஒரு தல்மூத் பாரம்பரியம் உஸ் இடம் மோசே 40 வருடங்கள் வசித்த மீதியான் தேசத்திற்கு சமீபத்தில் இருக்கிறபடியால், மோசே இந்த சம்பவங்கள் குறித்த பதிவுகளை பெற்றிருக்கலாம் என்கிறது. சாலமோன் ஆசிரியராக இருக்க வாய்ப்பு உண்டு; ஏனெனில், சாலமோன் ஏனைய*

ஞானப்புத்தகங்களை (சங்கீதபுத்தகம் 72,127 அதிகாரம் தவிர ஏனைய சங்கீதங்களை அவர் எழுதவில்லை) எழுதியுள்ளார். யோபு வாழ்ந்த வருடங்கள் பலவருடங்களுக்குப் பின் சாலமோன் வாழ்ந்திருந்தாலும், எப்படி ஆதாம் ஏவாள் குறித்து மோசே தேவனின் ஏவுதலால் எழுதினாரோ, அப்படி அவருடைய வாழ்நாட்களுக்கு முந்தைய சம்பவங்களை குறித்து எழுதியிருக்க கூடும் என்கின்றனர். எலிகூ, ஏசாயா, எசேக்கியா, எரேமியா மற்றும் எஸ்றா போன்றவர்களும் இப்புத்தகத்தை எழுதியிருக்கலாம் என கூறபடுகிறது, ஆனால் எந்த ஆதாரமும் இப்பெயர்களுக்கு இல்லை.

இந்த புத்தகம் எழுதப்பட்ட தேதி அதில் எழுதப்பட்டுள்ள சம்பவங்களுக்கு மிக அதிகமான நாட்களுக்குப்பின் எழுதப்பட்டிருக்கலாம். கீழ்க்காணும் காரணங்களினால் இந்த முடிவு எட்டப்படுகிறது.

யோபுவின் வயது (42:16)

அவனுடைய 200 வருட வாழ்நாட்கள் (42:16) - இது நம்முடைய முற்பிதாக்கள் காலத்தில் வாழக் கண்டது. ஆபிரகாம் 175 வருடங்கள் வாழ்ந்தார் ஆதி (25:7);

முற்பிதாக்களில் நாம் காண்பதைப் போன்ற சமூக அமைப்பு;

யோபின் வேலைக்காரரை கல்தேயர் பவுஞ்சாக வந்து அழித்துப்போட்டனர் (1:17) - கல்தேயர் நாடோடிகள் அவர்கள் பட்டணவாசிகள் அல்ல;

யோபுவின் செல்வம் அவன் பெற்றிருந்த கால்நடைகளினால் அளக்கப்பட்டத்துவே அல்லாமல், பொன்னும் வெள்ளியினால் அல்ல (1:3; 42:12);

யோபு ஆசாரிய அலுவல்களை அவனது வீட்டிற்குள் பார்த்துக் கொண்டது (1:4,5); மற்றும்

*ஆபிரகாமுடனான, இஸ்ரவேலுடனான உடன்படிக்கை, யாத்திராகமம், மற்றும் மோசேயின் பிரமாணங்கள் இவைகளைக் குறித்து இந்த புத்தகம் அமைதலாக இருக்கிறது. யோபு பெருங்காப்பியத்தில் காணப்படும் சம்பவங்கள் முற்பிதாக்களின் வாழ்வில் நடந்தவைப்போல் தோற்றம் அளிக்கின்றன. யோபுவை, மறுபுறத்தில் பார்க்கும் போது, ஆதாமைப் பற்றியும்(31:33), நோவாவின் வெள்ளத்தைக் குறித்தும் (12:15) அறிந்திருந்ததார். புத்தகத்தில் காணப்படும் கலாச்சார/வரலாற்று அம்சங்களை வைத்து காலவரிசைப்படுத்தினால், பாபேல்க்கு (ஆதி.11:1-9) பின்னும் ஆபிரகாமுக்கு (ஆதி.11:27) முன்னும் அல்லது அவருடன் சமகாலத்தவராக யோபு இருப்பவராக சம்பவங்களை வரிசைப்படுத்தலாம்.*

## *பிண்ணனி மற்றும் அமைப்பு*

*இப்புத்தகத்தில் குறிப்பிட்ட காலத்தில் பரலோகத்தில் நடைபெறும் சம்பவங்களும் அதனைத் தொடர்ந்து யோபின் வாழ்க்கையில் வந்த துன்பங்கங்கள், அனைத்து காலங்களில் வாழும் விசுவாசிகளின் விசுவாசத்திற்கு முக்கியமான கேள்வியை எழுப்பி விடுகின்றன. யோபு தேவனை ஏன் உத்தமமாக சேவித்தான்? யோபு, நோவா, தானியேல் உடன் ஒப்பிட்டுப் பேசப்படுகிறார்; அவருடைய நீதி பறைசாற்றப்படுகிறது (எசே.14:14-20) மற்றும் யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; என யாக்கோபு 5:11-ல் பேசப்படுகிறார். யோபின் துன்பத்தைப் பார்த்து பல கேள்விகள் கேட்கப்படுகிறது. உதாரணமாக, நீதிமான்கள் ஏன் உபத்திரவப்படுகிறார்கள்? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதில் முக்கியமானதாக இருந்த போதிலும் யோபின் சரித்திரம் எந்தவொரு பதிலையும் தரவில்லை. யோபிற்கோ அல்லது அவனது சிநேகிதர்களுக்கோ அவனது துன்பங்களுக்கான காரணம் தெரியவில்லை.*

*நீதியினிமித்தம் பாடுபட்ட அவருக்கு அவரது வேதனைகளுக்கான காரணம் தெய்வீக வழக்காடுமன்றத்தில் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடந்த வாதங்கள் எனத் தெரியாது. சர்வலோகத்தின் தேவனை பின்நாளில் எதிர்கொண்ட யோபு, தன் வாயின் மீது கை வைத்து ஒன்றும் பேசவில்லை. யோபுவின் அமைதலான பதில் எந்த விதத்திலும் அவர்பட்ட பாடுகள், வேதனகளை அற்பமானவைகளாக்கவில்லை. இச்செயல் பாடுகளின் மத்தியிலும் தேவனின் நோக்கங்களில் நம்பிக்கையுடன் இருப்பதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஏனெனில், பாடுகளும் மனுஷனுடைய ஏனைய அனுபவங்களைப் போலவே, தேவனின் பூரண ஞானத்தினால் வழிநடத்தப்படுகிறது. முடிவில், ஒருவரது பாடுகளுக்கான காரணம் தெரியாமல் இருக்கலாம்; ஆனால், சர்வவல்ல தேவனின் இறையாட்சியின் மீது பாடுகளின் ஊடாகச் செல்பவர் முழுமையான நம்பிக்கையை வைக்கவேண்டும் என்பதே இதில் இருந்து கற்றுக் கொள்ளும் பாடம். இது தான் பாடுகளுக்குரிய காரணத்திற்கான மெய்யான பதில்.*

## இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*இரண்டு மிகப்பெரிய கருப்பொருட்களும் அனேக சிறிய கருப்பொருட்களும் இப்புத்தகத்தின் அறிமுக அதிகாரங்கள் (1,2), முடிவுரை (42:7-17) மற்றும் யோபின் பாடுகள் குறித்து இடையில் காணப்படும் கவிதைசார்ந்த அதிகாரங்களில் (3:1 - 42:6) காணப்படுகிறது. பரலோகத்தில் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் நடைபெறும் வாதம் எப்படியாக யோபுவும் அவனது சிநேகிதர்களும் பூலோகத்தில் நடத்திய மூன்று சுற்று வாதங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்வதே முதல் கருப்பொருளை புரிந்து கொள்வதற்குரிய ஒரு திறவுகோல். விசுவாசிகளுடைய குணாதிசயத்தை தேவன் சாத்தானுக்கும், அனைத்து பிசாசுகளுக்கும், தேவதூதர்களுக்கும் மற்றும் ஜனத்தாருக்கும்*

நிரூபிக்கும்படி விரும்பினார். சாத்தானின் குற்றச்சாட்டு - யோபு விருதாவாகவா பயந்து நடக்கிறான்; அவனது உத்தமத்தை நீர் சோதித்துப் பார்த்ததில்லை, உம்மிடத்தில் இருந்து அவன் பெற்றுக் கொள்வதினால் நீதிமானாக நடந்து கொள்கிறான் என்பது. சாத்தானின் கூற்றுப்படி, யோபு உண்மையான/சுத்தமான நோக்கத்துடன் தேவனைப் பின்பற்றவில்லை, தேவனுக்கும் அவனுக்கும் இடையில் காணப்படும் உறவு வெறும் பாசாங்கு என்பதே. சாத்தான் எப்படி ஒருகூட்ட தேவதூதர்களை கலகம் செய்யும்படி தன்பக்கமாக திருப்பிக் கொண்டானோ, அப்படியே தேவனுக்கு விரோதமாக யோபுவை திருப்பிவிட முடியும் என்பது சாத்தானின் எண்ணம்.

யோபுவிற்கு பாடுகளைக் கொண்டுவந்தால், யோபினிடத்தில் இருந்த தேவன் தன்னைப் பாதுகாக்கிறவர் என்ற விசுவாசத்தை நொறுக்கிப் போட்டுவிடலாம் என்பது சாத்தனின் எண்ணம். தேவன் சாத்தானை சோதிக்க அனுமதித்தார், ஆனால் அதில் அவன் தோற்றுப்போனான் - தேவனிடத்தில் கொண்டிருக்கும் விசுவாசம் மெய்யானதாக இருக்குமானால் அதனை அசைக்கமுடியாது. யோபுவின் மனைவி கூட தேவனை தூஷித்து... எனக் கூறினாள் (2:9), ஆனால் அதனை யோபு மறுதலித்துவிட்டான். இதனையே சாத்தான் பேதுருவினிடத்திலும் செய்யும்படி பிரயாசப்பட்டான் (லூக்கா22:31-34-ஐ பார்க்க) பேதுருவினிடத்தில் காணப்பட்ட விசுவாசத்தை தகர்ப்பதிலும் தோற்றுப் போனான் (யோவான் 21:15-19). சாத்தான் தேவனுடைய இரட்சிக்கும் விசுவாசத்தில் விசுவாசம் கொண்டிருப்பவர்களை - தன்னால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்து பார்த்தாலும், அவர்கள் விசுவாசத்தில் உறுதியாக நின்றார்கள். ஒரு விசுவாசி எவ்வளவு பாடுகள் அனுபவித்தாலும், அல்லது அப்பாடுகள் புரிந்துகொள்ள முடியாததாகவும் தகுதியற்றதாகவும் இருந்தாலும் பரிசுத்தவான்கள் கொண்டிருக்கும் இரட்சிக்கும் விசுவாசத்தினை

*அழித்து விடமுடியாது என்பதை தேவன் முடிவில் சாத்தானுக்கு நிரூபித்தார்.*

*தேவன் தன் குணாதிசயத்தை மனுஷர்களுக்கு வழங்குவது இரண்டாவது கருப்பொருள் - முதலாவது கருப்பொருளுக்கும் தொடர்புடையது. தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் ஏற்பட்ட விவாதத்தினால் நீதிமானாகிய யோபு சோதிக்கப்பட்டதில் இருந்து, யோபுவினிடத்தில் தேவன் காட்டிய மனதுருக்கம் மற்றும் இரக்கம் குறைவுபட்டது என்று சொல்லமுடியுமா? இல்லை, ஒருபோதும் அப்படிச் சொல்லமுடியாது. யாக்கோபு தனது நிருபத்தில் 5:11-ல் மிகத்தெளிவாக "யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுள்ளவராயிருக்கிறாரே" என எழுதுகிறார். யோபு புத்தகம் 42:10,17 வசனங்களும் மேற்சொன்ன கூற்று தவறு என நிரூபிக்க யோபு 42:10-17ல் யோபு" தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ" என யோபு கூறுகிறார், தேவனுடைய ஊழியன் அவர் பாடு பட்டார் என்பதை மறுக்கவில்லை. அவனது பாடுகள் அவனது பாவத்தினால் விளைந்தவை என்பதையும் யோபு மறுக்கவில்லை. அவர் ஏன் பாடுகளுக்கும் துன்பத்திற்கும் உள்ளானார் என்ற காரணமும் புரியவில்லை.*

*ஆளுகைசெய்யும் மற்றும் பூரண ஞானமுள்ள தேவனுக்கு பக்திநிறைந்த ஆராதனை ஏறெடுக்கும் இதயத்துடன் மற்றும் தாழ்மையுடன் (42:5,6) யோபு தன் துயரங்களைச் சந்திக்கிறார் - சாத்தானுடன் தனக்கு ஏற்பட்ட எதிர்ப்பில் இருந்து யோபு இதனைக் கற்றுக் கொள்ள வேண்டும் என தேவன் விரும்பினார். முடிவில், யோபுவை தேவன் மிக அதிக அளவில், யோபு முன் அறிந்திராத அளவில் ஆசீர்வாதங்களால் நிறைத்து, ஆசீர் மழையைப் பொழிந்தார்.*

*குற்றமற்றவர்களாக இருப்பவர்களும் அனுபவிக்கும் பாடுகள் ஏன் என்று புரியாத இரகசியம் வெளிப்படுவதே இந்த புத்தகத்தின் மிகப்பெரிய சத்தியம். தேவன் அவருடைய பிள்ளைகள் துக்கத்திலும் வேதனையிலும் நடக்கும்படி அனுமதி வழங்குகிறார் சிலவேளைகளில் அவர்களது பாவத்தினால் (எண்.12:10-12), சிலவேளைகளில் அவர்களை சிட்சிக்கும்படிக்கு (எபி.12:5-12), சிலவேளைகளில் அவர்களைப் பெலப்படுத்த (2 கொரி.12:7-10; 1பேதுரு 5:10), சிலவேளைகளில் அவரது ஆறுதல் மற்றும் கிருபையை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தைக் கொடுக்க (2கொரி.1:3-17) அனுமதி தருகிறார். ஆனால், பரிசுத்தவன்களின் பாடுகளுக்குப்பின் மறைந்து உள்ள அடிப்படைக் காரணத்தை பரிசுத்தவான்களால் அறியமுடியாததற்கு காரணம் பரலோக நோக்கம் - அதனை பூலோகத்தில் இருப்பவர்களால் பகுத்தறிய முடியாது (உறுதிபடுத்தும் வசனங்கள் யாத். 4:11; யோவான் 9:1-3).*

*யோபுவும் அவனது சிநேகிதர்களும் பாடுகளுக்கான காரணங்களையும், அதின் தீர்வுகளையும் கண்டறிய தேடி ஆராய்ச்சி செய்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஆழமான இறையியல் கருத்துக்கள் மற்றும் சூழ்நிலையக் குறித்ததான நுண்ணறிவைக் கொண்டு அவர்கள் பதில்களுக்காகத் தேடுகின்றனர், ஆனால், பயனற்ற மற்றும் தவறான கருத்துக்களைத் தான் கண்டுபிடிக்கின்றனர். இறுதியில், தேவன் அவர்களை கண்டிப்பதைப் பார்க்கிறோம் (42:7). அவர்களுக்கு பரலோகில் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையில் என்ன நடந்தது என்பது தெரியாமல் இருந்ததால் யோபு ஏன் பாடுபட்டார் என்பதை அவர்களால் கண்டறிய முடியவில்லை. அவர்களுக்கு அனைத்து பதில்களும் தெரியும் என்று அவர்கள் நினைத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களது அறியாமையால் அவர்கள் தங்கள் சங்கடத்தை அதிகப்படுத்திக் கொள்ளவே செய்தார்கள்.*

**இந்த மகாபெரிய கருப்பொருளை விரிவாக்கிப் பார்க்கும் போது, யோபுவின் அனுபவத்தில் இருந்து கீழ்க்காணும் சத்தியங்களை நாம் கற்றுக்கொள்ள முடியும்.**

*விசுவாசிகளும் ஒன்றும் அறியாதபடிக்கு, பரலோகத்தில் சில விஷயங்கள் தேவனுடன் இடைபட்டுக்கொண்டிருக்கின்றன, ஆனால் அவைகள் விசுவாசிகளின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.*

*நாம் நமக்கு நடக்கும் பிரச்சினைகளுக்கு எவ்வளவு அதிக பிரயத்தனம் செய்து விளக்கம் அளித்தாலும் பிரயோஜனமில்லை.*

*தேவனுடைய ஜனங்களும் பாடு அனுபவிக்கின்றனர். நல்ல மனுஷருக்கு கெட்ட விஷயங்கள் எல்லா வேளைகளிலும் சம்பவிக்கின்றன. அதினால், ஒருவர் கடந்து செல்லும் வேதனையான பாதையினைக் கண்டு அவருடைய ஆவிக்குரிய வாழ்க்கையை ஒருவரும் எடை போடமுடியாது.*

*தேவன் தூரத்தில் இருப்பது போல் காணப்பட்டாலும், விசுவாசத்தில் விடாமுயற்சியுடன் இருப்பது மிக உன்னதபண்பு. தேவன் நல்லவராக இருக்கின்றபடியால், ஒருவர் தன் ஜீவியத்தை தேவனின் கரங்களில் பாதுகாப்பாக இருந்திடும்படி தந்திடலாம்.*

*விசுவாசி பாடுகளின் மத்தியில் தேவனை கைவிட்டுவிடக்கூடாது, மாறாக, அவருக்கு அருகில் கிட்டிச் சேரவேண்டும். அப்படிப்பட்ட ஐக்கியத்தில் ஆறுதல் வரும் - இதனை விவரிக்க முடியாது. மற்றும்*

*பாடுகள் ஒருவேளை மிக கடினமானதாக இருக்கலாம், ஆனால் நீதிமானுக்கு அவை இறுதியில் முடிவுக்குவரும். மேலும் தேவன் பரிபூரணமாக ஆசீர்வதிப்பார்.*

## ***விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்***

விளக்கம் அளிப்பதில் உள்ள மிகவும் நெருக்கடியான சவால் இப்புத்தகத்தில் இருக்கும் முதன்மையான செய்தி. இந்த புத்தகத்தின் அழுத்தமான பிரச்சினை இதுதான் என்றாலும், யோபுவின் பாடுகளுக்கான காரணம் வாசிப்பவர்களுக்கு தேவன் சாத்தானுக்கு ஒருகாரணத்தை நிரூபித்துக் கொண்டு இருக்கிறார் என்று தெரிந்திருந்த போதிலும், யோபுவிற்கு இதுதான் என்பது இறுதிவரை வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த விஷயம் யோபுவின் புரிந்துகொள்ளும் திறனை மிஞ்சுகிறது. யோபுவை குறித்து யாக்கோபு விளக்கம் அளிக்கும் போது (யாக் 5:11), தேவன் தம்முடைய மனதுருக்கத்தையும் இரக்கத்தையும் காட்ட என்ற காரணத்தை முடிவாகச் சொல்கிறார். ஆனால், யோபுவின் துன்பத்திற்கு இதுதான் காரணம் என குறிப்பிட்டு எந்தவொரு விளக்கத்தையும் அளிக்கவில்லை. இப்புத்தகத்தை வாசிப்பவர்கள் தங்கள் வாயில் தங்கள் கைகளை வைத்துக் கொண்டு, சர்வ ஞானம் நிறைந்த, சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகரை கேள்விகேட்க அல்லது குற்றம் சொல்ல உரிமை இல்லை. தேவன் அவர் அவருக்கு விருப்பமானவற்றைச் செய்கிறார், அப்படியாகச் செய்யும் போது, ஆவிக்குரிய உலகின் தேவதூதர்களுக்கும் பிசாசுகளுக்கும் அவர் சொல்வதைச் சுட்டிக்காடுகிறது. அதேவேளையில் அவரது மனதுருக்கத்தையும் இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. ''கடவுளையும் மீறி தீமை நேரிடல் என்ற தத்துவம் அதாவது, மனுஷனுடைய பேரிடர் மற்றும் துன்பத்தில் தேவனின் இடைபடுதல் குறித்து விளக்க மனுஷன் எடுக்கும் முயற்சி, இந்த வித சூழ்நிலைகளில் மிக பொருத்தமானதாகத் தான் தெரிகிறது, ஆனால் நாம் பார்க்கும் போது, தேவனுக்கு இடையில் எந்தவொரு மனுஷனும் ''நியாயவாதி/ வழக்காடுபவராக'' வரத் தேவையில்லை என்பதே முடிவாகிறது. மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள் என்ற

உபாகமம் 29:29 கூற்றினையே யோபு புத்தகம் மனவேதனையோடு விவரிக்கிறது.

யோபுவின் குற்ற உணர்வும் அப்பாவித்தனமும் அனேக கேள்விகளை எழுப்புகின்றன. தேவன் யோபுவை, உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்தவன், பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் என்கிறார். யோபுவிற்கு ஆறுதல் சொல்ல வந்தவர்கள் அவன் அனுபவித்த துன்பத்தின் அடிப்படையில்: யோபு பாவம் செய்யவில்லையா? என இக்கட்டான கேள்வியைக் கேட்கின்றனர். அனேக இடங்களில் தான் பாவம் செய்தேன் என்று யோபு ஒப்புக்கொள்கிறார் (7:21; 13:26).

ஆனால், யோபு படும் பாடுகளின் வேதனையின் ஆழத்தை அவனது பாவங்களுடன் ஒப்பிட்டு யோபு கேள்வி எழுப்புகிறார். இறுதியில் யோபு அவனது சிநேகிதர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளின் உரிமைகோரல்களுக்கு யோபு நிரபராதி என்று கூறி தேவன் முற்றுப்புள்ளி வைக்கிறார் (அதிகாரங்கள் 38-41). ஆனால் இதனையும் தேவன் சொன்னார், "யோபு பேசின வார்த்தைகள் சரி எனவும் ஆறுதல் தர வந்தவர்கள் பேசின வார்த்தைகள் தவறு எனவும்" என் தாசனாகிய யோபு பேசினதுபோல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை" என தேவன் அறிக்கையிடுகிறார் (42:7).

யோபுவின் கஷ்டங்களுக்கு யோபுவும் அவனுக்கு ஆறுதல் தரும்படி வந்தவர்களும் பேசிய "முந்தைய புரிந்துகொள்ளுதல்களுக்கு" தனியாக கணக்கு வைப்பது ஒரு சவாலாக வருகிறது. வெளிப்படையாக, தேவன் பொல்லாப்பை தண்டிக்கிறார் என்றும், கீழ்ப்படிகிறவர்களுக்கு பலன் அளிக்கிறார் என்றும், இதற்கு விதிவிலக்கு இல்லை என எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். யோபு தான் குற்றமற்றவனாக இருந்தும் பாடுகள் பட்டதினால், நீதிமான்களும் தண்டிக்கப்படுகிறார்கள் - இது ஒரு விதிவிலக்கு எனக்

கூறும்படியான நிலைக்கு வரும்படி கட்டாயப்படுத்தி தள்ளப்பட்டார். பொல்லாதோர் செழிப்படைகின்றனர் என்பதையும் அவர் கண்டார். இது விதிக்கு சிறிய விதிவிலக்குகளுக்கும் மேலாக இருப்பதால், யோபு - தேவனின் சர்வவல்ல இறையாட்சியில் - அவர் தம்முடைய ஜனத்தாருடன் இடைபடுவதினை குறித்து எளிமையாக என்ன நினைத்திருந்தாரோ அதனை திருப்பி யோசிக்க வைக்கும்படிசெய்தது. யோபு எப்படிப்பட்ட ஞானத்தை தழுவிக்கொள்ளும்படி விரும்பினாரோ, அது வெறும் பலன்பெற்றுத்தரும் அல்லது தண்டனையைக் கொண்டு வரும் என்ற வாக்குதத்ததை சார்ந்து இருக்கவில்லை. யோபுவிற்கும் அவனை குற்றம் சாட்டினவர்களுக்கும் இடையில் நடந்த நீளமான, வெறித்தனமான வாதங்கள், யோபின் அனுபவங்களில் தேவனது பழிவாங்குதல்கள் இவை என்று எண்ணிக்கொண்டிருந்து, உணரப்பட்ட சமத்துவமில்லாத தன்மையை சமரசம் செய்யும்படி நடந்தன. இப்படிப்பட்ட அனுபவ அணுகுமுறை அபாயகரமானது. இறுதியில், தேவன் யோபுவிற்கு விளக்கம் ஏதும் தரவில்லை; மாறாக, இதில் சம்பந்தப்பட்ட யாவருக்கும் சிருஷ்டிகரில் ஆழமான நம்பிக்கை வைக்கும்படிக்கு ஒர் அழைப்பை விடுத்தார். தேவன், பாவத்தால் குழம்பிப் போய் இருக்கும் உலகினை, ஞானம் மற்றும் இரக்கத்தினால் வழிநடத்தி, வல்லமை மற்றும் அதிகாரத்துடன் ஆளுகை செய்து வருபவர் என்பதை இதிலிருந்துக் கற்றுக் கொள்கிறோம்.

இந்த புத்தகத்தை புரிந்துகொள்வதற்கு தேவையானவை: 1) ஞானத்தில் இருக்கும் வேறுபாடு, விசேஷமாக, மனுஷனுடைய மற்றும் தேவனுடைய ஞானத்தில் இருக்கும் வேறுபாடு. மற்றும் 2) யோபுவும் அவனது சிநேகிதர்களும் சூழ்நிலைக்கு துல்லியமான முறையில் விளக்கம் தருவதற்குத் தேவையான தெய்வீக ஞானத்தைப் பெற்றிருக்கவில்லை. அவனது தோழர்கள் தொடர்ந்து முயன்ற போதிலும், யோபு தேவனுடைய சர்வவல்ல

*இறையாட்சியின்மீதும் தேவனின் இரக்கத்திலும் மனநிறைவுடன் இருக்க கற்றுக்கொண்டே வந்தார். இதற்குரிய தீர்வு அல்லது திருப்புமுனை யோபு 28-ஆம் அதிகாரத்தில் இருக்கிறது. அங்கே தேவனுடைய ஞானத்தின் தன்மைக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது: தேவனுடைய ஞானம் அரிதானது மற்றும் விலையில்லாதது. மனிதன் விலைகொடுத்து அதை வாங்கிவிட முடியாது. முற்றிலும் தேவனே அதற்குச் சொந்தக்காரர்.*

*பரலோகத்தில் தொடர்ச்சியாக என்ன நடந்து கொண்டிருக்கிறது, அல்லது தேவனுடைய நோக்கங்கள் தான் என்ன என்பதும் நமக்குத் தெரியாது. ஆனாலும், நாம் அவரில் தொடர்ந்து நம்பிக்கை வைக்க வேண்டும்.*

*இப்புத்தகத்தில் இருந்து - ''தேவனுடைய ஞானம் என்பதற்குப் பின்னே உள்ள இடத்தினை தான் - இக்காரணங்களினால் விசுவாசிகள் துயரப்படுகிறார்கள் என்பது எடுத்துக்கொள்கிறது'' என அறிகிறோம்.*

**சுருக்கம்**

***1. தடுமாற்றம் (1:1-2:13)***

*அ. யோபு அறிமுகம் (1:1-5)*

*ஆ. சாத்தானுடன் உண்டான தெய்வீக விவாதங்கள் (1:6-2:10)*

*இ. சிநேகிதர்களின் வருகை (2:11-13)*

***2. விவாதங்கள் (3:1 - 37:24)***

*அ. முதல் சுற்று (3:1 -14:22)*

*1. யோபுவின் விரக்தியை வெளிப்படுத்தும் முதல் பேச்சு (3:1 - 26)*

*2. எலிப்பாஸின் -அன்பான எதிர்ப்பை வெளிப்படுத்திய மற்றும் தாழ்மையையும் மனந்திரும்புதலையும் காட்ட - வேண்டிக்கொள்ளும் முதல் பேச்சு. (4:1 - 5:27)*

*3. யோபுவின் வேதனை நிறைந்த மற்றும் சோதனைகளைக் குறித்த கேள்விகள், அவனது வேதனையான வேளையில் அனுதாபம் காட்டக் கேட்டுக் கொண்ட பதில் (6:1-7:21)*

*4. தேவனை நீ தூண்டிவிட்டாய் என குற்றம் சாட்டி பில்தாத் பேசிய முதல் பேச்சு (8:1-22)*

*5. பில்தாத்தின் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டவனாக யோபு, இதில் நியாயமில்லாததினால் அதற்காக எதிர்ப்பு தெரிவிப்பேன் என யோபு பேசிய பதில் (9:1-10:22).*

*6. சோபாரின் முதல் பேச்சு, "நீ தேவனுடன் உறவை சரிசெய்து கொள் என்பதே" (11:1-20).*

*7. அவனது சிநேகிதர்கள் தவறு செய்கிறார்கள் என்பதை தேவன் ஒருவரே அறிவார். மேலும் அவருடன் பேசுவார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தி யோபு பேசின பதில் (12:1-14:22).*

*ஆ. இரண்டாம் சுற்று (15:1-21:34)*

*எலிப்பாஸ் இரண்டாம் சுற்றுப் பேச்சு: யோபு தன் சொந்த அனுமானத்தை எடுத்துக் கொண்டு, மூதாதையரின் ஞானத்தை நீ கருத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்று பேசியது (15:1-35)*

*எலிப்பாஸுக்கு யோபு பதில் அளித்தது - தேவனிடம் நியாயமில்லாமல் அவனைக் குற்றம் சாட்டுபவர்களைக் குறித்து மேல்முறையீடு செய்வதாக இருந்தது (16:1 - 17:16)*

*அவன் அனுபவிக்க வேண்டியதைத் தான் யோபு அனுபவிக்கிறான் என யோபுவிடம் பில்தாத் பேசிய இரண்டாம் சுற்றுப் பேச்சு* ***(18:1-21)***

*பில்தாத்தின் குற்றச்சாட்டிற்கு பதில் அளிக்கும் விதமாக யோபு தேவனிடத்தில் இரக்கத்திற்காக மன்றாடும் மன்றாட்டுபதில்* ***(19:1-29)***

*தேவனுடைய நீதியை குறித்து நீ கேட்ட கேள்வியே தவறு - என சோபார் இரண்டாவது சுற்றில் சுட்டிக் காட்டுகிறார்* ***(20:1-29)***

*சோபாருக்கு யோபு பதில் அளித்தில் - மெய்யானவற்றுடன் தான் சிறிது காலம் தொடர்பில் இல்லை எனக் கூறுகிறார்* ***(21:1-34)***

*இ. மூன்றாவது சுற்று* ***(22:1-26:14)***

***1.*** *எலிப்பாஸ் மூன்றாம் சுற்றுப் பேச்சு: யோபு தேவனின் நியாயத்தீர்ப்பைக் குறித்து விமர்சனம் செய்ததைக் கண்டிக்கிறது* ***(22:1-30)***

***2.*** *எலிப்பாஸுக்கு யோபு பதில் அளித்தது - யாவற்றையும் தேவன் அறிவார் தான் குற்றமற்றவன் என்பதையும், தேவன் ஒருவரே - சுத்திகரிக்க மற்றும் தேவைகளை சந்திப்பவர் என்பதால், பொல்லாதோருக்கு சிறிது காலம் தாற்காலிக வெற்றியை அனுமதிக்கிறார் என்கிறார்.* ***(23:1 -24:25)***

***3.****பில்தாத்தின் மூன்றாம் சுற்றுப் பேச்சு - தேவனிடம் நேரடியாக யோபு முறையிட்டதை பரிகாசம் செய்கிறது* ***(25:1-6)***

***4.*** *யோபு பதில் அளித்தது: அவர்கள் நினக்கின்ற விதமாக தேவன் எளிமையானவர் அல்ல, மேலும் அவர் தமது பூரணமான ஞானத்தினால், பூரணமாக சர்வவல்ல இறையாட்சியைத் தந்துகொண்டிருக்கிறார் என்பது* ***(26:1-14).***

*ஈ. யோபு தன்னை இறுதியாக பாதுகாத்துக் கொள்ளுதல் (27:1-31:24)*

***1.*** *யோபுவின் முதலாவது தனக்குத் தானே பேசிக்கொள்ளும் பேச்சில் - அவர் தனது நீதியை உறுதிசெய்கிறார்- மேலும் மனிதனால் தேவனுடைய ஞானத்தை கண்டறிய முடியாது என்கிறார் (27:1 - 28:28).*

***2.*** *யோபு இரண்டாவது தனக்குத் தானே பேசிக்கொள்ளும் பேச்சில் - அவர் தனது பழைய காலத்தை நினைவுகூறுகிறார், இப்போது இருக்கும் நிலைமையை விளக்குகிறார். மேலும் தான் குற்றமற்றவன் என்பதை எடுத்துக் கூறி, தேவன் தனக்கு பாதுகாப்பு தரவேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறார் **(29:1-31:40).***

*உ. எலிகூவின் பேச்சுக்கள் (32:1 -37:24)*

***1.*** *எலிகூ முட்டுக்கட்டையை நீக்கும் விதமாக விவாதத்தில் எலிகூ நுழைகிறார் **(32:1-22)***

***2.*** *எலிகூ யோபு தேவனை குற்றம் காண்பதாக அனுமானித்து, யோபுவை பாடுகளின் ஊடாகச் செல்ல அனுமதிப்பதிலும் கூட, தேவன் ஓர் அன்பான நோக்கத்தை வைத்திருப்பார் என்பதை அங்கீகரிக்காமல் பேசுகிறார் **(33:1-33)***

***3.*** *யோபு தேவனுடைய உத்தமத்தை குறித்து குற்றம் சாட்டினார் என்பதைக் கண்டித்து அது தெய்வீக வாழ்க்கைக்கு வழிவகுக்காது என்கிறார் **(34:1-37)***

***4.*** *எலிகூ கர்த்தருக்கென்று பொறுமையாக காத்திருத்தல் அவசியம் என்கிறார் **(35:1-16)***

***5.*** *எலிகூ, தேவன் யோபுவிற்கு ஒழுக்கம் கற்றுத்தருகிறார் என நம்புகிறார் **(36:1-21)***

*6. எலிகூ, தேவன் நியாயம்விசாரிக்கவும், இரக்கம் காட்டவும் செயல்படும்போது ஒருவருடன் இடைபடுவதை, மனுஷ பார்வையாளர்கள் கவனித்து போதுமான அளவு புரிந்துகொள்ள முடியாது என வாதிடுகிறார் (36:22-37:24)*

***3. விடுதலை (38:1-42:17)***

*அ. தேவன் யோபுவினிடம் கேள்வி கேட்கிறார் (38:1 - 41:34)*

*1. தேவன் யோபுவிற்கு அளித்த முதல் பதில் (38:1 -40:2)*

*2. யோபு தேவனுக்கு தந்த பதில் (40:3-5)*

*3. தேவன் யோபுவிற்கு அளித்த இரண்டாம் பதில் (40:6 - 41:34)*

*ஆ. யோபு அறிக்கையிதல், ஆராதனை செய்கிறார் மேலும் அவர் சரி என தேவனால் நிலைநிறுத்தப்படுகிறார் (42:1-17)*

*1. யோபு தன்னைத்தான் நியாயம் தீர்த்துக்கொள்கிறார் (42:1-6)*

*2. யோபு, எலிப்பாஸ், பில்தாத் மற்றும் சோபாரை கண்டிக்கிறார் (42:7-9)*

*3. தேவன் யோபுவின் குடும்பம், செல்வம் மற்றும் தீர்க்காயுசை தந்து அவன் வாழ்க்கையினை மீட்டு தருகிறார் (42:10-17)*

# சங்கீத புத்தகம்

## தலைப்பு:

*சங்கீதங்களின் முழு தொகுப்பிற்கும் "துதிகள்" என்று எபிரேய உரையில் பெயரிடப்பட்டுள்ளது. பின்நாட்களில் ரபீக்கள் (யூதகுருமார்கள்) இத்தொகுப்பினை "துதிகளின் புத்தகம்" என அவ்வப்போது பெயரிட்டு அழைத்தனர். செப்டுவாஜிண்ட் (LXX), பழையஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பை "சங்கீதங்கள்" எனப் பெயரிட்டது (சங்கீத புஸ்தகங்கள் என புதிய ஏற்பாட்டு: லூக்கா 20:42; அப்.1:20 ல் அழைக்கப்படுகிறது). "சங்கீதங்கள்" என்னும் பெயர்ச்சொல் "சரங்களை பறித்து முறுக்கி பண் எழுப்பு" என்ற கிரேக்க வினைச்சொல்லில் இருந்து வருவதால் இவ்வார்த்தைக்கு இசையுடன் ஓர் தொடர்பு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆங்கிலப் பெயரானது, கிரேக்க பெயரின் பின்னணியில் இருந்து வழங்கப்படுகிறது. இஸ்ரவேலருக்கு "தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிற" (2தீமோ 3:16) "பாட்டுப்புத்தகம்" என்பதால் சங்கீதபுத்தகம் பண்டைய காலத்தின் சரியான மெய்ப்பொருளாகவும் ஆராதனைகளின் உள்ளடக்கமாகவும் இருந்தது.*

*மொத்தத்தில் 116 சங்கீதங்கள் தலைப்பு அல்லது மேற்குறிப்பைப் பெற்றுள்ளன. எபிரேய மொழி உரையில் இந்த தலைப்புக்கள் வசனங்களுடன் சேர்ந்தே இருக்கின்றன. தலைப்புக்கள் ஒவ்வொன்றையும் உன்னிப்பாக பார்த்தால் பொதுவாக அவை யாவும் சங்கீதம் எழுதப்பட்ட பின்னர் உடன் சேர்க்கப்பட்டவை எனவும் மிகவும் நம்பத்தகுந்த தகவல்களைப்பெற்றிருக்கின்றன என்ற முக்கிய தகவலைக் கண்டுகொள்ளலாம் (லூக்கா 20:42).*

*அந்த தலைப்புக்கள் - எழுதிய ஆசிரியர், யாருக்கு சமர்ப்பிக்கப்பட்டது, வரலாற்று தருணம், இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம், வழிபாட்டுமுறை அறிவுரைகள் (இது எப்படிப்பட்ட சங்கீதம், இத்துடன் இசைக்கருவியை இசைக்க வேண்டுமா, அல்லது எந்த வேளையில் பயன்படுத்தவேண்டும்), இது தவிர, அவைகள் பழைமை வாய்ந்தவைகளானதால் வேறு நுட்ப அறிவுரைகள், ஒர் சிறிய எபிரேய முன்னிடைச்சொல் ஆகியவற்றை சங்கீத தலைப்புக்களில் ஆங்காங்கே காணலாம். அவை உதாரணமாக, "உடன்", "இருந்து", "ஆல்", "க்கு" "ஆக" என்பதுடன் - "பற்றி" என்பதுடன் வெவ்வேறு உறவுகளை ஏற்படுத்துகின்றன. சில இடங்களில் "இந்த குறிப்பிட்ட நபருக்காக இந்த நபரால் எழுதப்பட்டது" என்ற தகவலைத் தருகின்றன. ஆனாலும் இந்த தலைப்புகள் அதிகமாக தாவீதால் எழுதப்பட்ட இஸ்ரவேலின் சங்கீதம், மோசேயினால் எழுதப்பட்ட, சாலமோனால் எழுதப்பட்ட, ஆசாப்பினால் எழுதப்பட்ட அல்லது கோராவின் புத்திரரால் எழுதப்பட்ட சங்கீதம் என அதன் ஆசிரியரியரை சுட்டிக்காட்டுபவையாக இருக்கின்றன.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*தேவனின் கண்ணோட்டத்தில் இருந்து தேவன் தாமே சங்கீதங்களின் ஆசிரியர் என்று அறிகிறோம். ஆசிரியர் யார் என்று மனுஷரின் கண்ணோட்டத்தில் காணும் ஒருவர் ஏழு தொகுப்பாளர்களை அடையாளம் காணலாம். 150 சங்கீதங்களில் ஏறக்குறைய 73 சங்கீதங்களை தாவீது ராஜா எழுதியுள்ளார். கோராவின் புத்திரர் 10 சங்கீதங்களையும் (சங். 42, 44-49, 84,85,87); ஆசாப் 12 சங்கீதங்களையும் (சங்.50,73-83) எழுதியுள்ளனர். ஏனைய எழுத்தாளர்கள் சாலமோன் (சங்.72,127), மோசே (சங்.90), ஏமான் (சங்.88), மற்றும் ஏத்தான் (சங்.89). எஸ்றா சில சங்கீதங்களை எழுதியிருக்கலாம் என*

எண்ணப்பட்டாலும், மிஞ்சியுள்ள 50 சங்கீதங்களின் ஆசியர் யார் என அறியப்படாததாகவே இருக்கின்றன. மோசேயின் காலம் கி.மு.1410-ல் (சங்.90) தொடங்கி ஐந்தாம் நூற்றாண்டு ஆரம்பம் அல்லது ஆறாவது நூற்றாண்டின் முடிவு (சங்.126; சிறையிருப்பில் இருந்து திரும்பிய காலம்) வரையிலான யூதவரலாற்றின் ஏறக்குறைய 900 வருடங்கள் கால இடைவெளியில் சங்கீதங்கள் எழுதப்பட்டுள்ளன.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

சங்கீதங்களின் பின்னணி இரண்டுவிதமாக இருக்கின்றன. 1) தேவனின் சிருஷ்டிப்பு அதன் வரலாறு மற்றும் 2) இஸ்ரவேலரின் வரலாறு. வரலாற்று காலவரிசைப்படி, சங்கீதங்கள் உலகில் உயிர் உண்டானதில் இருந்து பாபிலோன் சிறையிருப்பில் இருந்து இஸ்ரவேலர் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்பின மகிழ்வான நாட்கள் வரை கடந்து செல்கின்றன. கருப்பொருள் - பரலோக ஆராதனையில் இருந்து பூலோக யுத்தம் வரை பல தலைப்புகளை குறித்து பேசுகிறது. பரிசுத்த வேதாகமத்தில் உள்ள புத்தகங்களிலேயே மிகப்பெரிய புத்தகம் சங்கீதம் புத்தகம், மிகப்பெரிய அதிகாரம் சங்கீதம் 119 மற்றும் புதிய ஏற்பாட்டில் அதிக எண்ணிக்கையில் குறிப்பாகச் சொல்லப்படும் பழையஏற்பாட்டு புத்தகம் சங்கீதபுத்தம். பரிசுத்த வேதாகமத்தில் 1189 அதிகாரங்கள் உள்ளன. இவற்றில் மைய்ய அதிகாரம் சங்கீதம் 117-ம் அதிகாரம். ”தேவனைத் துதிக்க, ஆராதிக்க - சரியான முறையை தோற்றுவித்து தருவதற்கு உதவும்” என்ற சங்கீதங்களின் உன்னத நோக்கத்தை சங்கீத புத்தகம் பலயுகங்களாக - முன் நிறுத்தி வந்து கொண்டே இருக்கிறது.

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*வாழ்க்கையில் ஒரேநேரத்தில் இரண்டு பரிமாணங்கள் செயல்படுகின்றன. 1) கிடைமட்டமான அல்லது தற்காலிக உண்மை 2) செங்குத்தான அல்லது எல்லை கடந்து செல்லும் சத்தியம். மெய்யான உலகில் மெய்யான வாழ்க்கை வாழ்வதே, சங்கீதங்களின் அடிப்படைக் கருப்பொருள்.*

*உலகில் பாடுகள் இல்லை என்று சங்கீதங்கள் மறுக்கவில்லை. மாறாக, தேவனுடைய ஜனங்கள் பரலோக/நித்திய பரிமாணத்தின் நபர் மற்றும் அவர் தரும் வாக்குதத்தங்களைச் சார்ந்து மகிழ்வுடன் வாழவேண்டும் எனக் கூறுகிறது. மனித வாழ்வில் வரும் துன்பங்கள் வெற்றிகள் என்னும் சுழற்சிகள் அனைத்தும் இஸ்ரவேலின் சர்வல்ல கர்த்தரிடத்தில் தங்கள் நம்பிக்கையினை காட்ட, குறைகளைச் சொல்ல, ஜெபிக்க அல்லது துதிக்க சந்தர்ப்பங்களை அளிக்கின்றன என்று கற்றுத் தருகிறது.*

*இவைகளை வைத்துப் பார்க்கும் போது, சங்கீதங்கள், அனுதின வாழ்க்கையில் செயல்படுத்த வல்ல பரவலான இறையியல் கருத்துக்களை வழங்குகிறன. மனுஷனின் பாவம் நிறைந்த குணத்தை குறித்து மட்டுமல்ல, பொல்லாதோரின் நடவடிக்கையின் மாதிரிகள் குறித்தும், விசுவாசிகள் தொடர்ந்து தடுமாறி விழுவது குறித்தும் கூட உறுதியாக எழுதுகிறது. தேவனுடைய இறையாட்சியை அனைத்து இடங்களிலும் அங்கீகரிக்கிறது, அதே வேளையில் மனுஷனின் பொறுப்பை எந்தவொரு இடத்திலும் தட்டிக் கழிக்கவில்லை. வெளியில் இருந்து பார்க்கும் போது, வாழ்க்கை கட்டுப்பாடு இழந்தது போல் காணப்படுகிறது. ஆனால், தெய்வீக வெளிச்சத்தில் வைத்துப் பார்க்கும் போது, தேவனது கால அட்டவணைப்படி நடைபெறும் அனைத்து சம்பவங்களும், சூழ்நிலைகளும் தேவன் நியமித்தபடி சரியான பாதையில் நடத்திச் செல்கின்றன என அறிந்து கொள்ளலாம். எதிர்காலத்தில் "தேவனுடைய நாள்" என்ற ஒன்று உண்டு என்ற நிச்சயத்தை தந்து, முடிவு பரியந்தம் நிலைத்து விடாமுயற்சியுடன் இருக்க ஓர் அழைப்பைத் தருகிறது.*

*இந்த துதியின் புத்தகம் மிக எளிதில் நடைமுறைப்படுத்தக்கூடிய இறையியலை வெளிப்படுத்துகிறது.*

*சங்கீதங்களில் ''ஒன்று'' என்னும் சங்கீதக்காரருக்கும் ''அனேகர்'' என்னும் இறையச்சம் சார்ந்த ஜனங்களுக்கும் இடையில் காணப்படும் உறவு தான் அதிகமான வேளைகளில் தவறாக புரிந்து கொள்ளப்படும் நிகழ்வு; அவற்றில் தாவீது ராஜா எழுதிய சங்கீதங்களில் ஏராளமானவை இருக்கின்றன. ஆளுபவராக/மத்தியஸ்தராக இருந்த ராஜாவிற்கும் அவரது ஜனங்களுக்கும் பிரிக்க முடியாத ஓர் உறவு இருந்தது; ராஜாவிற்கு எப்படி வாழ்க்கை இருந்ததோ அப்படியே அவரது ஜனங்களுக்கும் இருந்தது. இந்த உறவு சில வேளைகளில், சங்கீதக்காரனுக்கு கிறிஸ்துவுடன் இருந்த உறவு என மேசியாவின் சங்கீதங்களில் (அல்லது மேசியா குறித்து எழுதியுள்ள சங்கீதங்களில்) வெளிப்படுகிறது. இந்த கண்ணோட்டத்தில் இருந்து சாபங்களைக் கூறும் சங்கீதங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் மத்தியஸ்தராக பூவுலகில் இருக்கும் பிரதிநிதியாக, இருந்தார். தாவீது தனது சத்துருக்கள் தனக்கு துன்பம் விளைவிப்பது மாத்திரமல்ல, தேவனுடைய ஜனத்திற்கும் துன்பம் விளைவித்து வந்தனர் என்றும் இறுதியில் பார்த்தால், அவர்கள் ராஜாதி ராஜா, இஸ்ரவேலின் தேவனானவருக்கு சவால் விட்டுக் கொண்டிருந்தனர். எனவே தான், தாவீது தன் சத்துருக்களின் மீது தேவன் நியாயம் விசாரிக்க வேண்டும் என வேண்டிக்கொண்டார் என்பது நமக்கு புரிகிறது.*

## *விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்*

*துதிப்பாடல் புத்தகமாகிய சங்கீதத்தில் திரும்ப திரும்ப ஒரேவிதமான வகைகள் எழும்புவதை நாம் கவனித்தல் நலமாகும். வெளியரங்கமாக இருக்கக் கூடியவைகள் 1) சரியான வாழ்க்கை வாழ தேவையான ஞானம் தரும் அறிவுரைகள்*

நிறைந்த சங்கீதங்கள்; 2) (எதிரில் இல்லாத சத்துருக்களால் எழும்பும்) வாழ்க்கையின் வேதனைகள் பற்றிய புலம்பல்கள்; 3), "உள்ளிருக்கும்" சத்துரு அதாவது பாவம் - தீவினை செய்ததற்காக வருந்தும் சங்கீதங்கள்; 4) அரசாட்சியை வலியுறுத்தும் சங்கீதங்கள் (சர்வலோக ஆட்சி அல்லது மத்தியஸ்தம்; தெய்வபயம் சார்ந்த உடன்/அல்லது மேசியாவின் ஆட்சி); மற்றும் 5) நன்றிசொல்லும் சங்கீதங்கள்.

சங்கீதத்தின் நடை மற்றும் உட்பொருள் கருத்துக்கள் மேற்காணுமாறு வேறுபிரிப்பதற்கு அடையாளம் காட்டுகின்றன. சங்கீதங்களின் விரிவான இலக்கியப் பண்புகள்யாவும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. ஆங்கில கவிதைகள் எதுகை மோனையை சார்ந்து எழுதப்பட்டிருப்பது போன்று இல்லாமல், தர்க்க இசைவே சங்கீதங்களின் அடிப்படை குணாதிசயங்களாக இருக்கின்றன. சில முக்கிய தர்க்க இசைவுகள்: 1) ஒரே பொருள் உடையவை (முதல் வரியில் சொல்லப்பட்ட கருத்து இரண்டாவது வரியில் அதனைப்போன்ற வேறொரு கருத்துடன் திரும்ப சொல்லப்பட்டிருக்கும் உதாரணம் சங்கீதம் 2:1). 2) எதிர்மறை பொருள் உடையவை (இரண்டாவது வரியில் உள்ள கருத்து முதல் வரியில் உள்ள கருத்துக்கு முரணாக இருக்கும். 3) உச்சகட்ட வரிகள் (இரண்டாவது அல்லது அடுத்து உள்ள வரிகள் முக்கியமான வார்த்தை, சொற்றொடர் அல்லது கருத்தினை எடுத்துக் கொண்டு அதனை படிப்படியான முறையில் வளர்த்துக் கொண்டே செல்வது (சங்.29:1,2). 4) வார்த்தைகளை புரட்டிப்போட்டு கருத்தினை தெரிவிப்பது (தர்க்கம் அ.... ஆ என்பதை ஆ....அ என்று உருவாக்குவது; உதாரணம் சங்கீதம் 1:2)

பெருமளவில், சங்கீதங்களின் சில முதல் வரியில் இருந்து கடைசிவரை கரைந்துறைபாட்டாக (Acrostic) அல்லது அகரவரிசைப்படி அமைக்கப்பட்டுள்ளன. சங்கீதங்கள் 9, 10, 25, 34, 37, 111, 112, 119 மற்றும் 145 முழுமைபெற்ற அல்லது

முழுமைபெறாத கரைந்துறைப்பாட்டுகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எபிரேய உரையில் ஒவ்வொரு வசனத்தின் முதல் வார்த்தையின் முதலெழுத்து எபிரேய வெவ்வேறான மெய்யெழுத்துக்களாக மாறி, இறுதியில் 22 எபிரேய மெய்யெழுத்துக்களும் முடிந்து விடும்.

இப்படிப்பட்ட இலக்கிய படைப்பு உள்கருத்தை மனப்பாடம் எளிதில் செய்ய உதவும் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. அது பாட்டின் கருத்து - அ முதல் முதல் ஔ வரை எல்லாம் அதில் நிறைவாக தரப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டுகிறது. சங்கீதம் 119 இப்படிப்பட்ட படைப்பிற்கு முழுமையான உதாரணமாக இருக்கிறது. ஏனென்றால், அதன் 22—8-வரி சரணங்கள் எபிரேய அகர வரிசையின்படி செல்கின்றன.

**சுருக்கம்**

ஆரம்ப நாட்களில் கிறிஸ்த திருச்சபைகளால் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட புத்தக வரிசையில் 150 சங்கீதங்களும் ஐந்து “புத்தகங்களாக வரிசைப்படுத்தப்பட்டன. இந்த புத்தகங்கள் ஒவ்வொன்றும் இறை வாழ்த்துப்பாடலுடன் முடிவடைகின்றன. அவையாவன: (சங்கீதம் 41:13; 72:18-20; 89:52; 106:48; 150:6). இந்த ஐந்து புத்தகங்கள் மோசேயின் ஐந்தாகம புத்தகங்களை பிரதிபலிக்கின்றன என யூத பாரம்பரியத்தினர் முறையீடு செய்தனர்.

தனிப்பட்ட நபருடன் அல்லது குழுவுடன் ஒன்று சேர்க்கப்பட்ட சங்கீதங்களின் கொத்துக்கள் (Clusters) இருக்கின்றன. (உதாரணமாக, கோராவின் புத்திரரின் சங்கீதங்கள் சங்.42-49; ஆசாபின் சங்கீதங்கள் சங்.73-83); 2) ஒரு குறிப்பிட்ட செயல், உதாரணமாக, ஆரோகணம் - ஆரோகண சங்கீதங்கள் (சங்கீதம் 120-134) - அதற்கென்று அர்ப்பணிக்கப்பட்ட சங்கீதங்கள்;

அல்லது 3) துதி ஆராதனைக்கென்று வெளிப்படையாக அர்ப்பணிக்கப்பட்ட சங்கீதங்கள் (சங்.146-150).

ஆனால், எந்தவொரு தொகுப்பும் இந்த ஐந்து புத்தகங்களை எதன் அடிப்படையில் பிரித்தனர் என்ற "இரகசியத்தை" வெளிப்படுத்தவில்லை. ஆகையால், மொத்த சங்கீதங்களுக்கு இடையில் - இந்த ஒரு கருப்பொருளின் அடிப்படையிலான அமைப்பு இருக்கிறது - என்று நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை.

# நீதிமொழிகள்

## தலைப்பு:

எபிரேய வேதாகமத்தில் இதன் தலைப்பு ''சாலமோனின் நீதிமொழிகள்'' - கிரேக்க செப்டுவாஜிண்ட் (LXX) தலைப்பும் ''சாலமோனின் நீதிமொழிகள்'' (1:1) என்பதே. சாலமோன் பேசிய 3000-க்கும் (1ராஜா.4:32; பிரசங்கி 12:9) மேற்பட்ட நீதிமொழிகளில் இருந்தும் சாலமோனின் செல்வாக்கு பெற்ற வேறுசிலரின் நீதிமொழிகளில் இருந்தும் அதிமுக்கியமான 513 நீதிமொழிகளை ஒன்று சேர்த்தது - இந்த நீதிமொழிகள் புத்தகம். நீதிமொழி என்றால் ''போல் இருக்க வேண்டும்'' என்பது. ''பொதுவானவற்றுக்கும், உறுதியான காட்சிகளுக்கும் மற்றும் வாழ்க்கையின் ஆழ்ந்த சத்தியங்களுக்கும் இடையில் ஒப்பீடு'' செய்யும் புத்தகமே நீதிமொழிகள். வாழ்க்கையின் அடிப்படைச் சத்தியங்களை மேம்படுத்திக் காட்டி அவைகளை கற்றுக் கொடுக்கும் எளிய, நீதி நிறைந்த வார்த்தைகள் (விளக்கங்கள்) தான் நீதிமொழிகள். 2நாளா.1:8-12-ல் சாலமோன் தேவனுடைய ஞானத்தை தேடினார் - மனுஷர்களை சிந்திக்க வைக்கவும் ''சுருக்கமும் ஆற்றலும் கொண்ட'' வார்த்தைகளைப் பேசினார் எனக் காண்கிறோம். 1) தேவனுக்கு பயப்படும் பயம் 2) அவருடைய ஞானத்தின்படி வாழ்தல் (1:7; 9:10). இந்த ஞானத்தின் தொகுப்பே நமக்காக மனிதனாக வந்த இயேசு.

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

''சாலமோனின் நீதிமொழிகள்'' (1:1) என்ற சொற்றொடர் - ஆசிரியரைக் குறித்துச் சொல்லும் முழுமையான அறிக்கையாக எடுத்துக் கொள்ளாமல், ''தலைப்பு'' என்ற அளவிலேயே புரிந்து கொள்ளப்பட வேண்டும். இஸ்ரவேலை கி.மு.971-931 வரை சாலமோன் ராஜா ஆண்டபோது, தேவன் அவருக்கு சிறப்பான

ஞானத்தை தந்தார் (1ராஜா. 4:29-34); உபதேச பகுதிகள் (அதிகாரங்கள் 1-9); நீதிமொழிகள் 10:1-22:16-ல் காணப்படும் நீதிமொழிகள்; 22:17-24:34-ல் காணப்படும் ''ஞானிகளுடைய வார்த்தைகள்'' (சாலமோனின் அரசாட்சிக்கு முன் - தேதி அறியப்பட முடியாதனவற்றினை) சாலமோன் தொகுத்து எழுதினார். அதிகாரங்கள் 25-29-ல் உள்ள தொகுப்பு சாலமோனால் தொகுக்கப்பட்டவை (25:1). அவைகளை பிரதியெடுத்து பின் நாளில் யூதாவின் ராஜா எசேக்கியா புத்தகத்தில் சேர்த்தார் (கி.மு.715-686). 30-ம் அதிகாரம் ஆகாரின் வார்த்தைகளையும், 31-ம் அதிகாரம் லெமுவேலின் (ஒருவேளை அவர் சாலமோனாக இருந்திருக்காலம்) வார்த்தைகளையும் பிரதிபலிக்கின்றன. நீதிமொழிகள் புத்தகம் எசேக்கியாவின் நாட்கள் அல்லது அதற்குப் பின்வரை, நாம் இன்று காணும் புத்தகமாக ஒன்று சேர்க்கப்படாதிருந்தது.

இப்புத்தகம் தெய்வீக நோக்கத்தை வெளிப்படுத்தி, ''கபடில்லாதவர்கள்'' மற்றும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தை கற்றுக் கொள்ள வேண்டிய "வாலிபரைக்" குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்பதால், சாலமோனின் இருதயம் தேவனை விட்டு பின்வாங்கி போவதற்கு முன் - சாலமோன் நீதிமொழிகள் புத்தகத்தை எழுதினார் என்று அறிந்து கொள்கிறோம் (1ராஜா.11:1-11). சங்கீதம் 72, 127-ஐயும், பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு புத்தகத்தையும் சாலமோன் எழுதியுள்ளார்.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

இந்த புத்தகம் மூன்று அடுக்குகளாக அமைக்கப்பட்டுள்ளது 1) பொது ஞான இலக்கியம் 2) ராஜரீக அவையில் இருந்து வரும் உட்கருத்துக்கள் 3) தேவனை தியானிக்கும் தியானம் செய்யும் பழக்கத்தை பிள்ளைகளிடத்தில் உருவாக்க ஏதுவாக, தாய்க்கும் தகப்பனுக்கும் - தங்கள் பிள்ளைகளுடன் காணப்படும் மென்மையான உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான

*அறிவுரைகள். நீதிமொழிகள் புத்தகம் ஞான புத்தகமாக இருக்கின்றபடியால், இயல்பாகவே இதனைப் புரிந்து கொள்வது சற்று கடினமாக இருக்கிறது (1:6). ஞான இலக்கியங்கள் பழைய ஏற்பாட்டு சத்தியத்தின் ஒரு பகுதி, ஆசாரியர்கள் நியாயப்பிரமாணத்தை (வேதம்) தந்தனர், தீர்க்கதரிசிகள் கர்த்தரிடத்தில் இருந்து வார்த்தையைப் (வசனத்தை) பெற்றுத் தந்தனர்; ஞானிகள் (ஞானம்) ஆலோசனைகளைத் தந்தனர். (எரேமியா 18:18; எசே. 7:26). நியாயப்பிரமாணத்திலோ அல்லது தீர்க்கதரிசன வார்த்தைகளில் நேரடியாக தீர்வு அளிக்காதவற்றிற்க்கு - நீதிமொழிகள் புத்தகத்தில் வாழ்க்கையில் "முடிச்சு"க்களாக உள்ள பிரச்சினைகளுக்கு, சாலமோன் ஞானி தீர்வு அளிக்கிறார்(1:6). நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தாலும், தேவனுடன் சரியான உறவு கொண்டிருக்கும் போது நேர்மையான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி தார்மீக மற்றும் நெறிமுறைப்படுத்தும் வார்த்தைகளைத் தான் பேசுகிறது; நீதிமொழிகளின் கருத்து மேலோட்டமானதாகவோ அல்லது வாழ்க்கைக்கு சம்மதமாக இல்லாததாகவோ இல்லை. 4:1-4-ம் வசனங்களில் சாலமோன், தாவீது மற்றும் பத்சேபாள் பாதத்தில் அமர்ந்து தான் கற்றுக்கொண்டவற்றை தன் மகன் ரெகோபெயாமிடம் ஒப்புவித்து, மூன்று தலைமுறைகளுக்கு இணைப்பு ஏற்படுத்துவதைக் காண்கிறோம். நீதிமொழிகள், மென்மையாக, சத்தியத்தை தலைமுறை தலைமுறையாக பகிர்ந்து தருவதற்கு சிறந்த உதாரணமாகவும், மற்றவர்களுடன் பகிர்ந்து கொடுப்பதற்கென்று சத்தியத்தை பெற்றிருக்கும் மிகப்பெரிய ஆதாரமாகவும் இருக்கிறது. பரிசுத்த வேதாகமத்தில் தெய்வீக குணாதிசயத்தை முன்மாதிரியாக வெளிப்படுத்தியவர்கள் - பயன்படுத்திய வேதவாக்கியங்களின் அடிப்படையிலான கோட்பாடுகளால், பயன்பாடுகளால் நீதிமொழிகள் நிறைந்திருக்கிறது.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*மிகப்பெரிய வாக்குத்தத்தம், சிலாக்கியம் மற்றும் சந்தர்ப்பம் பெற்றவராக சாலமோன் ராஜாவாக சிம்மாசனத்தில் அமர்ந்தார். தேவன் அவருக்கு ஞானத்தையும் புத்தியையும் (1ராஜா.4:29; 2 நாளா.1:10-12) தந்தார். அதினால், மற்றவர்களைவிட சாலமோன் ஞானத்தில் சிறந்திருந்தார் (1 ராஜா.4:29-31). ஆனால், அதிர்ச்சியூட்டும் உண்மை என்னவென்றால், அவர் அறிந்திருந்ததும், தன் மகன் ரெகோபெயாமுக்குக் கற்றுத் தந்ததுமான சத்தியத்தின்படி வாழ்வதில் இருந்து அவர் தவறிவிட்டார். மேலும் அவருக்கு அவரின் தகப்பன் தாவீது கற்றுத் தந்த பாடங்களையும் நிராகரித்தார் (1ராஜா.12:6-11).*

*நீதிமொழிகள் - வேதாகம கருப்பொருட்களின் தங்கச் சுரங்கம் எனலாம். (1:3) - மனுஷனின் நெறிமுறைத் தேர்வு, அவன் எப்படி சிந்திக்கிறான், வாழ்கிறான், மேலும் அவனது அன்றாட வாழ்க்கையை எப்படி நிர்வகிக்கிறான் என்பவற்றினைத் தேவனுடைய சத்தியத்தின் வெளிச்சத்தில் கேள்வி எழுப்பி - நடைமுறை வாழ்க்கையில் நீதிநிறைந்த வாழத் தேவையான மட்டத்திற்கு வேதவாக்கியங்களின் கருப்பொருட்களை உயர்த்தியுள்ளது. குறிப்பிட்டுச் சொல்வோமானால், நீதிமொழிகள் மனுஷனை தேவன் சிருஷ்டித்த போது, எப்படிப்பட்ட வாழ்க்கை வாழும்படிக்கு அவனை எதிர்பார்த்தாரோ - அப்படிப்பட்ட வாழ்க்கை வாழும்படிக்கு மனுஷனை அழைக்கிறது (சங்.90:1,2,12).*

*நீதிமொழிகள் புத்தகத்தில் மீண்டும் மீண்டும் சொல்லப்படும் வாக்குதத்தம் - பொதுவாக ஞானவான்கள் (தேவனுக்கு கீழ்ப்படியும் நீதிமான்கள்) தீர்க்காயுசுடன் (9:11), செழிப்புடன் (2:20-22) மகிழ்ச்சியை அனுபவித்து (3:13-18), தேவனுடைய நன்மையை தற்காலிகமாக பெற்று (12:21) வாழ்வார்கள், மதியீனர் வெட்கம் (3:35) மற்றும் மரணத்தை (10:21)*

அடைவார்கள். மறுபக்கம் பார்ப்போமானால், இந்த பொதுவான நியதி - பொல்லாதோர் சிலவேளைகளில் தற்காலிகமாக மட்டுமே செழிப்பார்கள் (சங்.73:3,12) என்ற உண்மையினால் சமன்சீர் செய்யப்படுகிறது. தெய்வீக வழியில்செல்லும் ஞானவான்களும் கூட பாடுகளுக்கும், துன்பங்களுக்கும் உட்படுகிறார்கள் என்பதை யோபுவின் புத்தகம் விளக்குகிறது.

நீதிமொழிகள் புத்தகத்தில் முக்கியமான வெவ்வேறான கருப்பொருட்களுக்கு சீரற்ற வரிசைகளில் பதில் கிடைக்கிறது. ஆகையால், நீதிமொழிகள் புத்தகத்தை கீழ்க்காணும் கருப்பொருட்கள் வரிசைப்படி கற்றுக் கொண்டால் பயனுள்ளதாக இருக்கும்.

## *I.* தேவனுடன் மனிதனுக்கு உள்ள உறவு

அ. அவனுடைய விசுவாசம்/ பற்று உறுதி நீதி.22:19

ஆ. அவனுடைய தாழ்மை நீதி.3:34

இ. அவனுடைய தேவனுக்கு பயப்படும் பயம் நீதி.1:7

ஈ. அவனுடைய நீதி நீதி.10:25

உ. அவனுடைய பாவம் நீதி.28:13

ஊ. அவனுடைய கீழ்ப்படிதல் நீதி. 6:23

எ. பலன்களை சந்தித்தல் நீதி.12:28

ஏ. சோதனைகளை சந்தித்தல் நீதி.17:3

ஐ. ஆசீர்வாதங்களை சந்தித்தல் நீதி.10:22

ஒ. மரணத்தை சந்தித்தல் நீதி. 15:11

## *II* மனிதன் தனக்குத் தானே கொண்டுள்ள உறவு

அ. அவனுடைய குணாதிசயம் நீதி.20:11

*ஆ. அவனுடைய ஞானம் நீதி.1:5*

*இ. அவனுடைய மதியீனம் நீதி.26:10,11*

*ஈ. அவனுடைய பேச்சு நீதி.18:21*

*உ. அவனுடைய சுயக்கட்டுப்பாடு நீதி.6:9-11*

*ஊ. அவனுடைய அன்பு நீதி.3:3*

*எ. அவனுடைய செல்வம்/ஆஸ்தி நீதி.11:4*

*ஏ. அவனுடைய பெருமை நீதி.27:1*

*ஐ. அவனுடைய கோபம் நீதி.29:11*

*ஒ. அவனுடைய சோம்பேறித்தனம் நீதி.13:4*

## *III.* மனிதன் மற்றவர்களுடன் கொண்டுள்ள உறவு

*அ. அவனுடைய அன்பு நீதி.8:17*

*ஆ. அவனுடைய நண்பர்கள் நீதி.17:17*

*இ. அவனுடைய சத்துருக்கள் நீதி.16:7*

*ஈ. அவனுடைய விசுவாசமாக இருக்கும் தன்மை நீதி.23:23*

*உ. அவனுடைய வீண்பேச்சு நீதி.20:19*

*ஊ. தகப்பனாக நீதி.20:7; 31:2-9*

*எ. தாயாக நீதி.31:10-31*

*ஏ. பிள்ளைகளாக நீதி.3:1-3*

*ஐ. பிள்ளைகளை படிக்க வைப்பதில் நீதி.4:1-4*

*ஒ. பிள்ளைகளை ஒழுக்கமாக வளர்ப்பதில் நீதி.22:6*

இரண்டு மிகப்பெரிய கருப்பொருட்கள் நீதிமொழிகள் புத்தகத்தின் ஊடாக பின்னிப் பிணைந்து ஒன்றன்மீது ஒன்று சேர்ந்து செல்கின்றன - அவையாவன: ஞானம் மற்றும் மதியீனம். கர்த்தருக்கும், தேவனுடைய வார்த்தைக்கும் பயப்படும் பயத்தின் அடிப்படையில் வரும் ஞானம் - இதில் புத்தி, அறிவு, கட்டளை, பகுத்தறிதல் மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை அடங்கும். ஞானத்திற்கு அப்படியே எதிர்பதமாக இருப்பவை எல்லாம் மதியீனம்.

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

ஞான இலக்கியங்களின் பொதுவான பிடிபடாமல் இருக்கிற நடையே முதல் சவாலாக இருக்கிறது. உவமைகளைப்போல, அதில் இருந்து சொல்லப்படும் சத்தியம் பொதுவாக மேலோட்டமான பார்வை பார்த்தால் புத்திக்கு மறைவானதாக இருக்கும், அதினால் இருதயத்தில் வைத்து தியானிக்கப்பட வேண்டும் (1:6; 2:1-4; 4:4-9).

இணையான பொருத்தங்கள் அதிகமாக பயன்பட்டிருப்பது ஒரு சவால். அது என்னவென்றால், இரண்டு சத்தியங்களை ஒன்றுக்கு அருகில் மற்றொன்றுமாக வைத்து, அதில் இரண்டாவது வரி விரிவடைந்து. பூரணப்படுத்தி, விளக்கம் தந்து, வலியுறுத்தி, அல்லது தர்க்கரீதியாக இறுதியான முடிவு கிடைக்கும். முடிவு சில வேளகளில் எதிர்பதமான கருத்தைக் கூட தெரிவிக்கும்; அதிகமான வேளைகளில் இணையான பொருளையே சுட்டிக்காட்டும். உதாரணமாக, 12:13 வசனத்தில் காண்பது: சொல்லப்படாத ஆனால் இணையான பொருள் கொண்டிருக்கிறது - அதாவது நீதிமான் தனது நல்லொழுக்கமான பேச்சினால் தன் நெருக்கத்தினின்று நீங்குவான் என்பது (28:7, இதனை உறுதிப்படுத்துகிறது). நீதிமொழிகளுக்கு விளக்கம் அளிப்பதில், வாசிப்பவர் 1) இணையான அர்த்தம் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது; ஆசிரியரால் என்ன

சொல்லப்படவில்லை என்பதை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்; 2) உருவக வாக்கியங்களில் அதன் உருவகங்களை எடுத்து விட்டு அதன் கருத்தைச் சொல்ல வேண்டும்; 3) நீதிமொழி கற்றுத் தரும் பாடம் அல்லது நீதி / நியமங்களை சிலவார்த்தைகளில் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்; 4) அது கற்றுத் தரும் நடந்து கொள்ளும் முறையை விவரிக்க வேண்டும்; மற்றும் 5) வேதவாக்கியங்களில் உதாரணங்களை கண்டறிய வேண்டும்.

நீதிமொழிகள் என்ன சூழ்நிலையில் சொல்லப்பட்டன என்பதில் கூட சவால்கள் இருக்கின்றன. அவைகள் யாவும் நமது புரிந்துகொள்ளுதலையும் விளக்கம் அளிப்பதையும் பாதிக்கின்றன. முதலில், எந்த சூழ்நிலையில் அவைகள் பேசப்பட்டன; அதிகமான இடங்களில் வாலிபன் ராஜாவின் அவையில் பேசியது ஆக இருக்கும். இரண்டாவது, புத்தகம் முழுவதிற்கும் இருக்கும் அமைப்பு - அதாவது இதன் பாடங்களை ஏனைய வேதவாக்கியங்களின் அடிப்படையில் எப்படி புரிந்து கொள்வது என்பது. உதாரணமாக, சாலமோனின் ஞானத்தை மனிதனாக அவதரித்த கிறிஸ்துவின் ஞானத்துடன் ஒப்புமை செய்து பார்ப்பதன் மூலம் அனேக விஷயங்களைக் கற்றுக் கொள்ளலாம். இதில் விளக்கம் அவர்கள் வாழ்ந்த நாட்களில் தரப்பட்டவை. அவற்றை அன்றைய வரலாற்று சூழ்நிலையைக் கொண்டு அவற்றின் கோட்பாடுகளையும், சத்தியங்களையும் புரிந்து கொள்ள வேண்டும்.

நீதிமொழிகள் தேவனுடையவழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் ஞானம் நிறைந்த அவதானிப்புக்கள் என்று ஏற்றுக்கொண்டு புரிந்து கொள்வதில் வரும் சவால்கள். அதாவது, அவற்றின் அடிப்படைக் கருத்தாக இருக்கும் (24:3,4) - என்றைக்கும் மாறாத, வளைந்துகொடுக்காத - பிரமாணங்கள் அல்லது முழுமையான வாக்குறுதிகள் இவற்றினைப் புரிந்து கொள்ள வேண்டும். பொதுவான சத்தியத்தின் வெளிப்பாடுகளில்

வாழ்க்கையின் நிச்சயமற்றத் தன்மை மற்றும் வீழ்ந்து போன மனிதனின் நடவடிக்கைகளை நாம் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியாத படியினாலும் "விதிவிலக்குகள்" கொண்டிருக்கும் (உறுதிப்படுத்தும் வசனங்கள் 10:27; 22:4). சீரான முடிவு அல்லது பயன்பாடே ஒவ்வொரு நீதிமொழிக்கும் உண்டு - என எந்தவொரு உத்திரவாதமும் தேவன் தரவில்லை. ஆனால் அதனை வாசித்து, அதனை கடைபிடித்து, ஒருவர் தேவனின் சிந்தையில் என்ன இருக்கிறது, அவரது குணாதிசயம், அவரின் பண்புகள், அவரின் கிரியைகள் மற்றும் அவரின் ஆசீர்வாதங்கள் என்ன என்பதை அறிந்து கொள்ள முடியும். கிறிஸ்துவுக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது (கொலோசேயர் 2:3).

**சுருக்கம்**

***I. முன்னுரை (1:1-7)***

*அ. தலைப்பு (1:1)*

*ஆ. நோக்கம் (1:2-6)*

*இ. கருப்பொருள் (1:7)*

***II. வாலிபருக்கு - துதி மற்றும் ஞானம் பற்றி (1:8 - 9:18)***

***III. எல்லோருக்கும் ஆன நீதிமொழிகள் (10:1 - 22:16)***

*அ. சாலமோனிடம் இருந்து (10:1 - 22:16)*

*ஆ. ஞானிகளிடம் இருந்து (22:17 - 24:34)*

***இ. எசேக்கியாவினால் சேகரிக்கப்பட்ட சாலமோனின் நீதிமொழிகள் (25:1 - 29:27)***

*IV. தனிப்பட்ட நபரின் குறிப்புகள் (30:1 - 31:31)*

*அ. ஆகூர் வார்த்தைகள் (30:1 - 31:31)*

*ஆ. லாமுவேல் வார்த்தைகள் (31:1-31)*

# பிரசங்கி

## ஆசிரியர்

*இந்த புத்தகம் நேராக ஆசிரியரைக் குறிப்பிடவில்லை. தன்னை பிரசங்கி என்று 1:1 ல் அறிமுகப்படுத்திக் கொள்கிறார். தன்னை தாவீதின் குமாரனான எருசலேமின் இராஜாவாகிய பிரசங்கி என்று சொல்லுகிறான். எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் ஞானமடைந்து அனேக நீதிமொழிகளை சேர்த்தேன் என்கிறான் (பிரசங்கி 1:1, 16; 12:9). இஸ்ரவேலை ஆட்சி செய்ய தாவீதுக்கு பிறகு சிங்காசனத்தில் சாலோமோன் உட்கார்ந்தான். (1:12) சாலோமோன் தான் ஆசிரியர் என்று சில காரியங்கள் இந்த புத்தகம் ஆதாரம் தருகிறது. சாலோமோன் மரணத்திற்கு பிறகு சில பகுதிகள் வேறு சிலரால் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிமு. 940 க்கும் 931 க்கும். இடையில் எழுதப்பட்டது.*

*இந்த புத்தகம் சாலோமோனின் கடைசி நாட்களில், எருசலேமில் எழுதப்பட்டது.*

## யாருக்காக எழுதப்பட்டது

*இஸ்ரவேல் மக்களுக்கும், வேதம் வாசிக்கிற அனைவருக்கும் எழுதப்பட்டது.*

## எழுதப்பட்ட நோக்கம்

*இந்த புத்தகம் ஒரு சரியான எச்சரிப்பை நமக்கு தருகிறது. நோக்கமில்லாமல், தேவபயமில்லாமல் வாழ்வது, மாயையையும், காற்றை பின்தொடர்வதுபோல் இருக்கிறது. நாம் இன்பத்தை,*

*பணத்தை, ஞானத்தை, புதிய காரியங்களை ஆராய்வதில், வாழ்ந்தாலும், நம்முடைய வாழ்க்கைக்கு ஒரு முடிவு உண்டு. கடைசியில் நாம் மாயையில் வாழ்ந்தோம் என்று எண்ணமே நமக்கு தோன்றுகிறது. நாம் தேவனுக்கு வாழும்போதுதான், வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிறது.*

## மையக் கருத்து

*தேவனைத் தவிர எல்லாம் மாயையே.*

## பொருளடக்கம்

*1. முன்னுரை — 1:1-11*

*2. வாழ்க்கையின் பலபாகங்களும் மாயைதான் — 1:12-5:7*

*3 தேவனுக்கு பயந்து நடக்கவேண்டும். — 5:8-12:8*

*4 காரியத்தின் முடிவு — 12:9-14*

# சாலொமோனின் உன்னதப்பாட்டு

## தலைப்பு:

*எபிரேய மாசோரெடிக் உரை - யூத வேதாகமத்தின் பாரம்பரிய உரையைபின்பற்றி - கிரேக்க செப்டுவஜிண்ட் (LXX) மற்றும் லத்தீன் வுல்கேட் (vg.) மொழிபெயர்ப்புக்கள் - 1:1 வசனத்தில் உள்ள முதல் இரண்டு வார்த்தைகள் "பாடல்களின் பாடல்", உன்னதப்பாட்டு என தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள பெயரை தலைப்பாகக் கொண்டுள்ளது. 1:1 வசனத்தின் ஒட்டுமொத்த பொருளான "உன்னதப்பாட்டு" என்ற தலைப்பைப் பெற்றுள்ளன. யாத்திராகமம் 26:33,34 மகாபரிசுத்தஸ்தலம் எனவும் வெளிப்படுத்தல் 19:16 - "ராஜாதிராஜா" என மிகைப்படுத்துவதைக் காண்கிறோம். அதனைப்போன்றே, "உன்னத" என்ற மிகைப்படுத்தும் வார்த்தை சாலமோனின் 1005 பாட்டுக்களில் (1ராஜா.4:32) இந்த பாடல் உன்னதமானது எனக் காண்பிக்கிறது. "பாடல்" என்ற வார்த்தை கர்த்தரை மகிமைப்படுத்தும் இசை என்ற அர்த்தத்தையே அதிகமான இடங்களில் குறிக்கிறது (உறுதிப்படுத்தும் வார்த்தைகள் 1 நாளா.6:32,32; சங்கீதம் 33:3;40:3; 144:9).*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*ஒன்று சேர்க்கப்பட்ட ராஜ்ஜியங்களின் ராஜாவாக 40 ஆண்டுகள் (கி.மு. 971-931) அரசாண்ட சாலொமோனின் பெயர் ஏழுமுறை இந்த புத்தகத்தில் தோன்றுகிறது (1:1,5; 3:7,9,1; 8:11,12). அவருடைய எழுதும் திறமைகள், இசையில் இயல்பான திறன் (1ராஜா.4:32), 1:1 வசனம் சாலொமோன் பாடின என்று உறுதியாக சொல்வதால், வேதாகமத்தின் இந்த பகுதி சாலொமோனின் ஆட்சிகாலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். சாலொமோனின் விளக்கங்கள் மற்றும் பிரயாண குறிப்புகளில் வடக்கு மற்றும் தெற்கு பட்டணங்கள்*

குறிப்பிடப்பட்டிருப்பதால், எழுதப்படிருக்கலாம் என்று எண்ணப்படும் காலமும், உண்மையில் எழுதப்பட்ட காலமும் சாலமோனின் ஆட்சிகாலம் முடிவடைவதற்கு முன் இருந்த ஒன்றுசேர்ந்த ராஜ்ஜிய காலத்தையே குறிக்கிறது. வேதவாக்கியங்களின் இந்த பகுதி, ஒரே ஆசிரியரால் எழுதப்பட்ட ஒரே பாடல் - அதாவது இதனை ஒன்றுபட்ட கவிதை மற்றும் ஞான இலக்கியமாக காண்கிறோமே அல்லாமல், ஆசிரியர் இல்லாத, பொதுக்கருப்பொருள் இல்லாத காதல் பாடல்களின் வரிசை என எடுத்துக்கொள்ள முடியாது.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

இந்த வியத்தகு மெய்-வாழ்வின் காதல் பாடலில், இரண்டு நபர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். சாலொமோன் மற்றும் அவருடைய அரசாட்சி 5 முறை குறிப்பிடப்பட்டுள்ளது (1:4,12; 3:9,11; 7:5), அவர் "நேசராக" தோன்றுகிறார். "சூலமித்தியாள்" (6:13) என்ற நபர் குறித்து தெளிவான தகவல் இல்லை, அவள் கலிலேயாவின் கீழ் உள்ள இஸ்ரவேலில் இருந்து 3 பாகை வடக்கே இருக்கும் சூனேம் என்னும் பகுதியை சேர்ந்தவளாக இருந்திருக்கலாம். தாவீது ராஜாவுக்கு சேவை செய்த சூனேம் தேசத்து அபிசாக் ஆக இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர் (1ராஜா1:1-4,15). சூனேம் பகுதியில் இருந்து பெயர் அறியப்படமுடியாத சாலொமோனால் வேலைக்கு அமர்த்தப்பட்டவளாக இருக்கலாம் எனவும் கருதலாம். அவள் சாலொமோனின் 699 மனைவிகள் மற்றும் 300 மறுமனையாட்டிகளைச் சேர்த்துக்கொண்டு (1ராஜா.11:3) பாவம் செய்வதற்கு முன் இருந்த சாலொமோனின் முதல் மனைவியாக இருந்திருக்கலாம் (பிரசங்கி 9:9).

இந்த புத்தகத்தில் வேறு சில குழுக்களின் சிறிய பங்களிப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. முதலாவது, "எருசலேமின் குமாரத்திகள்" எனப்படுவோர் சாலொமோனின் வீட்டு பணிவிடைக்காரர்களாக

*இருந்திருகலாம். அங்கங்கே காணப்படும் அவர்களின் வர்ணனைகள் (1:4b; 8:11; 3:6-11; 5:9; 6:1,10, 13a; 7:1-5; 8:5a). இரண்டாவது, 5:1-ல் நாம் காணும் உறுதிமொழி தம்பதியர் ஒன்றுசேர்ந்த போது உச்சரிக்கப்பட்ட தேவனின் ஆசீர்களாக இருக்கலாம். மூன்றாவது, சூனேமியாளின் சகோதரர்கள் பேசுவது (8:8,9).*

*காட்சி அமைப்பு: நகர்ப்புற மற்றும் கிராமப்புற காட்சிகள். சில காட்சிகள் சூனேமியாள் வாழ்ந்த இடம் (6:13) சாலொமோன் திராட்சைத்தோட்டங்களை நாட்டினதும், ஆடு முதலான திரண்ட ஆஸ்திகள் கொண்டிருந்த (பிரசங்கி 2:4-7) எருசலேமின் வடக்கு மலைப்பிரதேசத்தில் நிகழ்கின்றன. இதர சம்பவங்கள் சாலொமோனின் விவாகம் மற்றும் அதற்குப்பின் வாழ்ந்த சாலோமோனின் தங்குமிடம் இருந்த நகர்ப்புறத்தில் அடங்கியிருக்கின்றன(3:6-7:13).*

*முதல் மாரிகாலம் குறித்து 2:11-13-லும் இரண்டாவது மாரிகாலம் குறித்து 7:12-லும் காண்கிறோம். காலவரிசையில் இடைவெளி இல்லை என எடுத்துக் கொண்டால், உன்னதப்பாட்டின் சம்பவங்கள் நிறைவேறின காலம் ஒரு வருஷம், ஆனால் இரண்டு வருடங்களுக்கு மேல் இருக்க முடியாது.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*சாலோமோனின் உன்னதபாடல்களின் 117 வசனங்களும் யூதர்களால் அவர்களின் புனித எழுத்துக்களின் ஒரு பங்காக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மெகில்லோத் அல்லது ஐந்து தோல்சுருள்கள் என்று அழைக்கப்படும் பழைய ஏற்பாட்டு புத்தகங்களாகிய - ரூத், எஸ்தர், பிரசங்கி மற்றும் புலம்பலுடன் சேர்க்கப்பட்டுள்ளது. யூதர்கள் பஸ்கா அன்று "மகாபரிசுத்தம்" என்று அழைத்து இந்த பாடலை பாடினர். ஆச்சரியப்படும் விஷயம் என்னவென்றால், 8:6-ல் மறைமுகமாக உள்ளதைத்*

*தவிர, வேறு எங்கும் தேவன் என்ற வார்த்தை இந்த பாடலில் எந்தவொரு இடத்திலும் வெளிப்படையாக குறிப்பிடவில்லை. முறையான இறையியல் கருப்பொருள் எங்கும் வெளிப்படவில்லை. புதிய ஏற்பாட்டில் எந்தவொரு இடத்திலும் நேரடியாக உன்னதப்பாட்டு குறித்த குறிப்பு இல்லை (குறிப்பிடப்படாத இதர புத்தகங்கள் எஸ்தர், ஒபதியா மற்றும் நாகூம்).*

*துறவு பெற்று விலகியிருத்தல் மற்றும் விவாகத்திற்கு வெளியே காணப்படும் காம வக்கிரம செயல்கள் என்ற இரண்டு சிதைந்த தீவிரங்களுக்கு மாறாக, இந்த சாலொமோனின் பண்டைய கால காதல் பாட்டு திருமண பந்தத்தினால் உண்டாகும் அன்பு மற்றும் காதலில் உள்ள புனிதத்தை குறித்து உயர்வாக பேசுகிறது. ஏனைய வேதாகமவாக்கியங்களுடன் இசைந்து திருமணத்தைக் குறித்த தேவனின் திட்டம் மற்றும் கணவன் மனைவிக்கு இடையில் பாலுறவினால் உண்டாகும் புனிதத்தை உயர்வாக எடுத்துக்காட்டுகிறது. இந்த கருப்பொருளின் அடிப்படை வேதவாக்கியங்களுடன் சரிசமமாக நின்று, உரிமையுடன் தனது கருத்தினையும் தெரிவிக்கிறது. உதாரணமாக, ஆதி.2:24; சங்கீதம் 45; நீதிமொழிகள் 5:15-23; 1கொரி.7:1-5; 13:1-8; எபே. 5:18-33; கொலோ.3:18,19; மற்றும் 1பேதுரு3:1-7. எபிரேயர் 13:4, இந்த பாடல்களின் அடிப்படைக் கருத்தை "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் என அழகாக எடுத்துக்காட்டுகிறது.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*"உருவக" விளக்கம் அளிக்க முற்படுபவர்களால் இந்த பாடல் அனேக கறைபடிந்த விளக்கங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. அவர்கள் இந்த பாடலுக்கு எந்த ஒரு வரலாற்று அடிப்படையும்*

இல்லை எனவும், இஸ்ரவேலைக் குறித்த தேவனின் அன்பு உடன்/அல்லது சபையைக் குறித்த கிறிஸ்துவின் அன்பினை குறித்து சித்தரிக்கிறது என அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். துதிபாடல்களில், கிறிஸ்துவே சாரோனின் ரோஜா, பள்ளத்தாக்கின் லீலிபுஷ்பம் (2:1) என்ற வழிவிலகச் செய்யும் கருத்து இதில் இருந்தே உண்டாகிறது. ''வகைப்படுத்தும்'' விளக்கமளித்தல் வரலாற்று உண்மையை அனுமதிக்கிறது. ஆனால், இது மணவாளராகிய கிறிஸ்து மணவாட்டியாகிய சபையினிடத்தில் காட்டும் அன்பையே இறுதியாக சித்தரிக்கிறது என முடிக்கிறது.

சாலொமோனின் உன்னதப்பாட்டிற்கு விளக்கம், நேரடியாக இருக்கும் அர்த்தத்தை எடுத்துக்கொண்டு, எப்படி நாம் வழக்கமாக கவிதை உருவகங்களுக்கு விளக்கம் அளிப்போமோ அப்படி விளக்கம் அளிப்பதே சாலச் சிறந்தது. இப்படிச் செய்வதற்கு கீழ்க்காணும் சாலொமோன் பற்றிய செய்திகளை கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள். 1) அவரின் அரசவை நாட்கள் 2) அவரது முதல் திருமணத்தின் ஆரம்ப நாட்கள், அதனைத் தொடர்ந்து 3) இந்த ராஜ தம்பதியினர் வாழ்க்கையின் நல்ல மற்றும் பொல்லாத நாட்களினால் முதிர்ச்சி அடைந்தது. உன்னதப்பாட்டு, ஆதியாகமம் 2:24-ல், வேதாகமம் ஆதியில் திருமணத்திற்கு கொடுத்த அறிவுரைகளின் மீதே கட்டுகிறது, இதினால், வாழ்நாள் முழுவதும் நீடித்திருக்கும் திருமண இசைவிற்கு, மனரம்மியமான ஆவிக்குரிய இசையினை மீட்டுகிறது. மனித உறவில் மிகவும் விலையேறப்பெற்ற மதிப்பை பெற்றிருப்பது திருமண உறவு எனவும் இந்த நெருக்கமான உறவு தேவனின் காதல் மற்றும் அன்பு இவை இரண்டின் அடிப்படையில் கட்டப்பட்டது என்பதே திருமணம் குறித்த தேவனின் நோக்கம். இந்த அடிப்படை நோக்கத்தையும், 1பேதுரு3:7 கூறும், ''அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால்'' என்பதையும்

*நிரூபிக்க நம் கரங்களில் அளிக்கப்பட்டதே சாலொமோனின் உன்னதப்பாட்டு.*

*திருமண உறவில் காணப்படும் அந்தரங்கத்தினை மறைத்திடும் வண்ணம் இந்த புத்தகம் தேவனால் உருவகம் மற்றும் சொற்பொழிவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆசை, காதல் மற்றும் பேராவலின் மகிழ்ச்சி குறித்த பொதுவான நுண்ணறிவை நமக்கு தருவதற்காக காதல்-அன்பினை மிக அழகாக கவிதை மொழியில் எடுத்துக் கூறுகிறது. இந்த விதத்தில், இந்த பாடல்கள் திருமணபந்தத்தின் அன்பின் அற்புதத்தை அழகாக வெளிப்படுத்தும் அதேவேளையில், உணர்ச்சிகளைத் தூண்டும் எழுத்துக்களில் இருந்து தன்னை தூரப்படுத்திக்கொள்கிறது. இந்த புத்தகத்தின் கண்ணியத்தினை அடிப்படையாக இந்த புத்தகத்திற்கு விளக்கம் கொடுக்கும் பொழுது கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் இதில் இல்லாத ஒன்றை உட்புகுத்தியும் வாசிக்க கூடாது.*

**சுருக்கம்**

## *I.* காதல்உறவு: "விட்டுபிரிதல்" *(1:2-3:5)* "*Leaving*"

*அ. காதலர்களின் நினைவுகள் (1:2-2:7)*

*ஆ. காதலர்கள் "தங்களுக்குள் அன்பினை பரிமாறிக்கொள்ளுதல் (2:8-3:5)*

## *II.* விவாகம் "ஒன்றுசேர்தல்" *(3:6-5:1)* "*Cleaving*"

*அ. ராஜரீக மணவாளன் (3:6-11)*

*ஆ விவாகம் முடிந்து இருவரும் ஒன்றாக முதல் இரவினில் சந்தித்தல் (4:1-5:1a)*

*இ. தேவனின் சம்மதம் (5:1b)*

## *III* திருமணம் - "நெசவுபோல் இசைதல்" *(3:6-5:1)* "*Weaving*"

அ. *முதல் பெரிய கருத்துவேறுபாடு (5:2-6:3)*

ஆ. *மீட்டெடுத்தல் (6:4 -8:4)*

ஈ. *கிருபையில் வளர்தல் (8:5-14)*

# ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம்

## தலைப்பு:

*“கர்த்தர் என் இரட்சிப்பு” என்று பொருள் தரும் ஆசிரியரின் பெயரில் இருந்து இந்த புத்தகம் தனது தலைப்பைப் பெறுகிறது. இந்தப் பெயர் யோசுவா, எலிசா மற்றும் இயேசு என்ற பெயர்களுக்கு ஒப்பாக இருக்கிறது. புதியஏற்பாட்டில் நேரடியாக 65 தடவைக்கும் மேலாக குறிப்புகளும் 20-க்கும் அதிகமான இடங்களில் ஏசாயாவின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. வேறு எந்தவொரு பழையஏற்பாட்டு தீர்க்கதரிசியைக் காட்டிலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*யூதா தேசத்தை அரசாண்ட (கி.மு 739-686) நான்கு ராஜாக்கள், உசியா (அசரியா என்று 2ராஜாக்களில் அழைக்கப்பட்டிருக்கிறார்), யோதாம், அகாஸ் மற்றும் எசேக்கியா (1:1) காலத்தில் ஆமோஸின் குமாரன் ஏசாயா, யூதா தேசத்து தீர்க்கதரிசியாக எருசலேமைச் சுற்றி ஊழியம் செய்துவந்தார். ராஜாவின் சமூகத்தில் எளிதில் பிரவேசிக்க தகுதி பெற்றிருந்த (7:3) அந்தஸ்து நிறைந்த குடும்பத்தில் இருந்து வந்திருந்தார். திருமணமானவர் இரண்டு மகன்கள் இவருக்கு உண்டு. மகன்கள் இருவருடைய அடையாளப் பெயர் - சேயார்யாசூபு” மிச்சம் இருப்பவர்கள் திரும்புவர்” மற்றும் மகேர்-சாலால்-அஷ்-பாஸ் “கொள்ளையிடவிரைந்தோடுகிறது, இரையைநோக்கி விரைகிறது” என்பதாகும். உசியா ராஜா மரித்த கி.மு.739-வில் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைப்பைப் பெற்ற போது, ஆரம்பத்தில் இருந்தே அவரது ஊழியம் உடனே பலன் எதிர்பார்க்கமுடியாத எச்சரிக்கும் (6:9-13) உபதேச ஊழியம் என்பதை ஏற்கெனவே அறிந்திருந்த போதிலும், மகிழ்வோடு பணிசெய்ய ஆயத்தமாக இருந்தார். எருசலேமிலேயே*

*வளர்ந்தவராக இருந்தபடியால், தேசத்திற்கு அரசியல் மற்றும் ஆவிக்குரிய ஆலோசனை வழங்க பொருத்தமானவராக இருந்தார்.*

*ஏசாயா, ஓசியா மற்றும் மீகா தீர்க்கதரிசிகள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். அவரின் எழுத்துநடைக்கு எதிராளிகளே இல்லை எனலாம். மேலும் அவரின் எழுத்துநடை பல விதங்கள், கற்பனை, புத்திசாலித்தனம், சொல்வளம் நிறைந்து காணப்பட்டது. ஆதிதிருச்சபையில் இருந்த ஜெரோம் என்பவர் ஏசாயாவை பழம்பெரும் டெமஸ்தனீஸ் என்னும் கிரேக்க பேச்சாளருடன் ஒப்பிட்டுப் பேசியுள்ளார்.*

*ஒப்பிட்டுப்பார்த்தால் எசேக்கியேலில் 1535 வார்த்தைகளும், எரேமியாவில் 1653 வார்த்தைகளும், சங்கீதங்களில் 2170 வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணும்போது, இவரது எழுத்துக்களில் 2,186 வித்தியாசமான வார்த்தைகள் எடுத்தாளப்பட்டுள்ளதன் சிறப்பு விளங்கும். 2நாளாகமம் 32:32 எசேக்கியா ராஜாவின் வாழ்க்கை வரலாற்றை ஏசாயா எழுதினார் எனக் குறிப்பிடுகிறது. தீர்க்கதரிசி குறைந்தது கி.மு.681-ம் வருடம் வரை வாழ்ந்திருப்பார் என நம்பலாம். இக்காலக்கட்டத்தில் சனகெரிப்பின் மரணம் குறித்து எழுதியுள்ளார் (37:38). மனாசே ராஜாவின் காலத்தில் (கி.மு.695-642) வாளால் அறுப்புண்டு மரித்தார் என பாரம்பரியம் கூறுகிறது (எபிரேயர் 11:37).*

*[H2[பிண்ணனி மற்றும் அமைப்பு*

*உசியா ராஜாவின் செழிப்பான 52 வருட அரசாட்சியில் (கி.மு.790-739), யூதா தேசம் வர்த்தக மற்றும் இராணுவ பிராந்தியமாக வளர்ந்து, செங்கடலில் ஒரு துறைமுகத்தையும் பெற்றிருந்தது. சுவர்கள், கோபுரங்கள் மற்றும் கோட்டைகள் (2நாளா. 26:3-5,8-10,13-15) கட்டுவதில் சிறந்து இருந்தது. ஆனாலும் இந்த காலகட்டத்தில் யூதா தேசம் ஆவிக்குரிய வாழ்க்கையில் தரம் குறைந்திருந்தது. பலிபீடத்தில் ஆசாரியர்கள் செய்யும் தகனபலியினை தான் செய்யவேண்டும் என உசியா*

*ராஜா முயற்சி செய்தது, அவனது ராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது (2ராஜா.15:3,4; 2நாளா.26:16-19). கர்த்தர் அவனை அடித்ததினால், மரணநாள் மட்டும் அவனை குஷ்டரோகம் பிடித்தது (2ராஜா.15:5; 2நாளா.26:20,21).*

*அவன் குமாரனாகிய யோதாம் ராஜாவின் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்து, தேசத்தின் ஜனங்களை நியாயம் விசாரித்தான் (கி.மு.750-731). திகிலாத்பிலேசர் தலைமையில் அசீரியா தேசம் சர்வதேசங்களிலும் வல்லமை நிறைந்த தேசமாக வளர்ந்தது. யோதாம் யூதாவின் ராஜாவாக இருந்தான் (2ராஜா.15:19), அந்நாட்களில் யூதாவிற்கு வடபகுதியில் இருந்து இஸ்ரவேல் மற்றும் சிரியாவின் எதிர்ப்பு தோன்றியது (2ராஜா.15:37). யோதாம் அவன் தகப்பனைப் போல கட்டிடங்கள் கட்டுவதில் வல்லவனாக, யுத்தத்தில் வல்லவனாக இருந்தான்; ஆனால், தேசத்தின் ஆவிக்குரிய வாழ்க்கையில் சீர்கேடு தொடர்ந்து கொண்டுதான் இருந்தது (2ராஜா.15:34,35; 2நாளா.27:1,2).*

*ஆகாஸ் தனது 25-வது வயதில் ராஜாவாகி, யூதா தேசத்தை தனது 41-வது வயது வரை 16 வருடம் அரசாண்டான் (2நாளா.28:1,8; கி.மு.735-715). கிழக்கு பகுதியில் இருந்து எழும்பிய அசீரியர்களின் அச்சுறுத்தலை எதிர்க்கும்படி இஸ்ரவேலும் சிரியா தேசமும் கூட்டு சேர்ந்தனர், ஆனால் ஆகாஸ் யூதாவை இந்த கூட்டணியில் சேர்க்க மறுத்துவிட்டார். இதினால் வடக்கில் இருந்த அண்டை தேசத்தார் பகைமை கொண்டு, ஆகாஸை சிங்காசனத்தில் இருந்து இறக்க, யுத்தம் செய்தனர் (கி.மு.734).*

*திகிலடைந்த ஆகாஸ், அசீரிய ராஜாவினிடத்தில் உதவி கேட்டு ஆள் அனுப்பினான் (2ராஜா.16:7), அதற்கு அசீரிய ராஜா காசா நகரில் இருந்தோரை பதவியில் இருந்து தள்ளிவிட்டு, கலிலேயா மற்றும் கிலேயாத் முழுவதையும் சிறைப்படுத்தி, தமஸ்குவையும்*

*(கி.மு.732) கைப்பற்றி அவனது வேண்டுகோளுக்கு மகிழ்வாக பதிலளித்தான். அசீரியர்களுடன் ஆகாஸ் செய்து கொண்ட கூட்டணி - அந்நிய தேவர்களின் பலிபீடத்தை ஆகாஸ் அறிமுகம் செய்து, சாலொமோனின் ஆலயத்திற்குள் கொண்டுவர ஏது உண்டாக்கியது (2ராஜா.16:10-16; 2நாளா.28:3). ஆகாஸின் ஆட்சி காலத்தில் (கி.மு.722) வடதேச ராஜ்ஜியத்தின் தலைநகர் சமாரியாவை அசீரியர் கைப்பற்றினர், மேலும் இஸ்ரவேலின் மிகவும் பலசாலிகளாக இருந்தவர்களை சிறைபிடித்துக் கொண்டு போயினர் (2ராஜா.17:6,24).*

*எசேக்கியா யூதாதேசத்தை கி.மு. 721 வருடத்தில் ஆட்சி செய்ய ஆரம்பித்து 29 ஆண்டுகள் (கி.மு. 686 வரை) ஆட்சி செய்தான் (2ராஜா.18:1,2). சீரமைப்பதற்கு இவரது ஆட்சிகாலத்தில் முக்கியத்துவம் தரப்பட்டது (2ராஜா.18:4,22; 2நாளா.30:1). அசீரியர்களின் படையெடுப்பு, கிழக்கத்திய தேசத்திற்கு அதிக அளவில் கப்பம் கட்டும்படி யூதாதேசத்தை வற்புறுத்தியது. கி.மு.701ல் எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணதருவாயில் இருந்தார். அப்போது அவர் ஜெபித்ததும் கிருபையாய் தேவன் அவருடைய வாழ்நாளில் 15 வருடங்களை கூட்டிச் சேர்த்து தந்தார் (கி.மு.686 வரை; 2ராஜா.20; ஏசாயா38). கி.மு.686 வரை எசேக்கியாவின் வியாதிப்படுதல் மற்றும் அவர் அதில் இருந்து மீண்டுவரும் நாட்களை பாபிலோனை ஆட்சிசெய்தவர்கள் பயன்படுத்தி, யூதாவுடன் கூட்டணி அமைத்து அசீரியாவிற்கு எதிராக ஒரு படையை திரட்ட முடியுமா என முயன்று வந்தனர் (2ராஜா.20:12; ஏசாயா 39). அசீரியாவில் ஏற்பட்ட உள்நாட்டு சண்டையினால் அதன் பெலன் குன்றி வந்தபோது எசேக்கியா ராஜா அத்தேசத்திற்கு கப்பம் கட்டுவதை நிறுத்திவிட்டான் (2ராஜா.18:7). அதினால், கி.மு.701ல் அசீரியா ராஜா, சனகெரிப் இஸ்ரவேலின் கடற்கரை பிரதேசங்களின் மீது படையெடுத்து, இஸ்ரவேலின் தெற்கு பக்கவாட்டில் எகிப்து தேசம் நோக்கி முன்னேறினான். இதில் யூதாவின் அனேக பட்டணங்களை கொள்ளையிட்டு, அதில்*

*இருந்த ஜனங்களை அசீரியாவிற்கு சிறை பிடித்துக் கொண்டு போனான். ஆகீசினை முற்றுகையிட்ட வேளையில், அவன் எருசலேமை முற்றுகையிட ஒரு ராணுவ பிரிவை அனுப்புகிறான் (2ராஜா.18:17 - 19:8; ஏசாயா 36:2-37:8). பக்கத்து தேச விரிவாக்கம் தோற்றுப்போன போது, அவன் இரண்டாவது முறை உடனடியாக சரண் அடையச்சொல்லி எருசலேமிற்கு தூதுவர்களை அனுப்புகிறான் (2ராஜா.19:9; ஏசாயா 37:9). ஏசாயா உற்சாகபடுத்தினதினால், எசேக்கியா சரணடைய மறுத்தான், அதே வேளையில், சனகெரிப்பின் சேனை திடீரென்று ஏற்பட்ட பேரழிவை சந்தித்ததால் அதற்குப்பின் யூதாவிற்கு அச்சுறுத்தலாக அவன் இருக்கவில்லை.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*ராஜ்ஜியங்கள் பிளவுபட்டிருந்த வேளையில் ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தார். குறிப்பாக, அவரது செய்திகள் தெற்கு ராஜ்ஜியமாகிய யூதா தேசத்தை மையப்படுத்தி இருந்தன. அவரது நாட்களில் காணப்பட்ட வெற்று சடங்குகள் (உதாரணமாக, 1:10-15) மற்றும் ஜனங்கள் விக்கிரக ஆராதனையில் வீழ்ந்து கிடந்ததைக் (40:18-20) கண்டித்தார். கர்த்தரை விட்டு விலகிச் சென்றுவிட்டபடியால் யூதா தேசம் பாபிலோனியரால் சிறைபிடிக்கப்படப் போகிறது என்பதை முன்னமே அறிந்திருந்தார் (39:5,7).*

*அவர் சொன்ன தீர்க்கதரிசனங்கள் அவரது வாழ்நாட்களிலேயே நிறைவேறியது, அவரது தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு நல்ல சாட்சியாக இருந்தது. ஏசாயா சொன்னபடியே, எருசலேமைக் கைப்பற்ற சனகெரிப் எடுத்த முயற்சிகள் தோல்வியுற்றன (37:6,7,36-38). ஏசாயா முன்னமே சொன்னபடி மரணத்திற்கு நேராக எசேக்கியாவைக் கொண்டுசென்ற வியாதிப்படுக்கை, மாற்றிப்போடப்பட்டதும் நிறைவேறியது (38:5; 2ராஜா.20:7). பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசு தலைமையேற்று*

*வந்தபோது, ஏசாயா பாபிலோனியரின் கரத்தில் இருந்து யூதாவை விடுவிக்கப்போகிறவர் இவர் எனக் குறிப்பிடுகிறார் (44:28;45:1). கிறிஸ்து இயேசுவின் முதலாம் வருகையைக் குறித்து ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினது, ஏசாயா தேவன் அனுப்பிய தீர்க்கதரிசி என்பதை உறுதிப்படுத்தியது. ஏசாயா ஏற்கெனவே சொல்லிய தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலை வைத்துப் பார்க்கும் போது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து உரைத்திருக்கும் தீர்க்கதரிசனங்களும் நிறைவேறும் என்ற நிச்சயத்தைத் தருகின்றது.*

*வரும் காலங்களில் உள்ள கர்த்தருடைய நாள் மற்றும் அதனைத் தொடரும் நாட்களைக் குறித்து ஏசாயா தகவல்களைத் தருகிறார். நாம் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என எதிலும் காணமுடியாத இஸ்ரவேலரின் எதிர்கால ராஜ்ஜியத்தின் அம்சங்களான இயற்கையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து, விலங்குகளின் உலகம் பற்றி, மற்ற தேசங்களுக்கு நடுவில் எருசலேம் தேசத்தின் நிலை, பாடு அனுபவிக்கும் சேவகனின் தலைமை என வெவ்வேறு அம்சங்களைக் குறித்து ஏசாயா பேசியிருக்கிறார்.*

*"தீர்க்கதரிசன முன்னறிவிப்பு" என்ற இலக்கிய சாதனத்தின் உதவியுடன், ஏசாயா எந்த வரிசையில் நிகழும் என்று வரையறுக்காமல், அவைகளுக்கு இடையில் என்ன கால இடைவெளி இருக்கும் என்பதை குறித்தும் பேசாமல் எதிர்கால சம்பவங்களை முன்னறிவிக்கிறார். உதாரணமாக, மேசியாவின் இரண்டு வருகைகளுக்கு இடையில் எவ்வளவு கால இடைவெளி இருக்கும் என்பதை வெளிப்படுத்தவில்லை. யோவான் வெளிப்படுத்தலில் (20:1-10; 21:1-22:5) எவ்விதமாக வரவிருக்கும் தாற்காலிக ராஜ்ஜியம் மற்றும் நித்திய ராஜ்ஜியத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை தெளிவுபட கூறவில்லையோ, அவ்விதமாகவே, ஏசாயாவும் கூறவில்லை. இந்த இரண்டிற்கும் உள்ள தொடர்பு கடைசி கால தீர்க்கதரிசிகள்*

*மூலமாக, தீர்க்கதரிசன வெளிப்பாடுகளின் தொடர்ச்சி என்னும் தேவனின் திட்டத்தின்படி பின்நாட்களில் வெளிப்படும்படி மறைத்து வைக்கப்பட்டு இருக்கிறது.*

*இஸ்ரவேலிடம் தேவன் காட்டும் கிருபையைக் குறித்து விசேஷமாக அவரது கடைசி **27** அதிகாரங்கள் பேசுவதால், ''சுவிசேஷ தீர்க்கதரிசி'' எனவும் ஏசாயா அழைக்கப்படுகிறார். ஏசாயாவின் ஒப்பில்லா **53-ஆம்** அதிகாரம் கிறிஸ்து நமக்கு பதிலீடாக வந்த தேவ ஆட்டுக்குட்டியானவர் என எடுத்துக்காட்டுவது, இவரின் தீர்க்கதரிசன வார்த்தைகளின் சிறப்பான பகுதியாக இருக்கின்றது.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*நீளமானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான ஏசாயா புத்தகத்தில் விளக்கம் அளிப்பதில் அனேக சவால்கள் இருக்கின்றன. ஏசாயாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் நேரடியாக இயற்கை உலகில் நிறைவேறக் காண்போமா இல்லையா என்பது அவைகளில் மிகஅதிக விமர்சனத்திற்கு உள்ளான கருத்து. மற்றொன்று, கர்த்தர், தமது திட்டத்தின்படி இஸ்ரவேல் தேசத்தை அடியோடு கைவிட்டுவிட்டு, தேசத்திற்கு பதிலாக சபையை நித்தியமாக அந்த இடத்தில் வைத்திப்பதால் இஸ்ரவேல் தேசத்திற்கு எதிர்காலம் இல்லை என்ற கருத்து மிகஅதிக விமர்சனத்திற்கு உள்ளாகிறது.*

*மேலே சொல்லப்பட்டிருக்கும் இரண்டாவது கருத்திற்கு எதிராகவும், தேவன் பூகோளப்படியான இஸ்ரவேல் தேசத்திற்குப் பதிலாக "இருக்கலாம் எனக் கருதப்படும் புதிய இஸ்ரவேலினால்'' நிரப்பி விடவில்லை என்பதற்கு ஆதாரமாக, ஏசாயாவில் இருந்தே அனேக வசனங்களை/பகுதிகளைச் சொல்லலாம். தேவன் தாம் உருவாக்கினவரும், பெயர் சொல்லி அழைத்தவர்களுமான (43:1) இஸ்ரவேல் ஜனங்களை உதறித்*

*தள்ளிவிடமாட்டார் என்பதற்கும் அதிகமாய், ஏசாயா இஸ்ரவேலின் நம்பிக்கைக்குரியவர் தேவன் எனச் சொல்லியிருக்கிறார்.*

*இதோ, என் உள்ளங்கைகளில் (இஸ்ரவேல் தேசம்) உன்னை வரைந்திருக்கிறேன்; உன் மதில்கள் எப்போதும் என்முன் இருக்கிறது* ***(49:16)*** *என்று அவர் வாக்குத்தத்தமாக இஸ்ரவேலருக்கு கொடுத்த வார்த்தையின்படியே, அவர் இஸ்ரவேலரை திரும்ப தம் பக்கமாக திருப்பவேண்டும், மேலும் அவர்களை வரும் காலங்களில் ஆசீர்வதிக்க வேண்டும்* ***(55:10-12).***

*முதலில் சொன்ன விமர்சனத்திற்கு பதில்: ஏசாயாவின் தீர்க்கதரினசங்கள் அனேகமானவை - இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள் பகுதியில் நாம் ஏற்கெனவே கண்டதுபோல நிறைவேறிவிட்டன. இன்னும் நிறைவேறாத தீர்க்கதரிசன வார்த்தைகள் எழுத்தின்படியல்லாத ஒரு நிறைவேறுதலைக் காணும் என வாதிடுவது வேதாகமத்தின் அடிப்படையிலானது அல்ல. இஸ்ரவேலருக்கு முதன்முதலில் வாக்குபண்ணப்பட்ட சில வாக்குதத்தங்களை இன்று சபை பெற்று வருகிறது என முன்வைக்கும் முன்மொழிவை இது தகுதிநீக்கம் செய்கிறது. தாவீதிற்கு வாக்குத்தத்தம் செய்து தரப்பட்ட ராஜ்ஜியம் இஸ்ரவேலருக்கு உரியது, சபைக்கு உரியது அல்ல. எதிர்காலத்தில் எருசலேம் உயர்த்தப்படுதல் பூலோகத்தில் தான் ஏற்படும், பரலோகத்தில் அல்ல. நாம் அறிந்திருக்கிறபடி கிறிஸ்துவின் ஆட்சி தனிப்பட்ட முறையில் பூமியில் நடைபெறும், அதே வேளையில் புதிய வானம் புதிய பூமியிலும் நடைபெறும் (வெளி.22:1,3).*

**சுருக்கம்**

***I. நியாயத்தீர்ப்பு (1:1-35:10)***

*அ. யூதா மற்றும் எருசலேம் குறித்ததான தீர்க்கதரிசனங்கள் (1:1-12:6)*

*1. யூதாவின் பாவங்கள் (1:1-6:13)*

*2. யூதாவின் அரசியல் சிக்கல்கள் (7:1-12:6)*

***ஆ. நியாயத்தீர்ப்பு மற்றும் இரட்சிப்பு குறித்த தேவ வார்த்தைகள் (13:1-23:18)***

*1. பாபிலோன் மற்றும் அசீரியா (13:1-14:27)*

*2. பெலிஸ்தியா (14:28-32)*

*3. மோவாப் (15:1-16:14)*

*4. சிரியா மற்றும் இஸ்ரவேல் (17:1-14)*

*5. எத்தியோப்பியா (18:1-7)*

*6. எகிப்து (19:1-20:6)*

*7. பாபிலோன் தொடர்ச்சி (21:1-10)*

*8. ஏதோம் (21:11,12)*

*9. அரேபியா (21:13-17)*

*10. எருசலேம் (22:1-25)*

*11. தீரு (23:1-18)*

***இ. உலக இரட்சிப்பின் வழியாக இஸ்ரவேலர் மீட்கப்படுதல் (24:1-27:13)***

*1. தேவன் பூமியை அழித்தல் (24:1-23)*

*2. மீட்பினிமித்தம் ஏறெடுக்கப்பட்ட முதல் ஸ்தோத்திர பாடல் (25:1-12)*

*3. மீட்பினிமித்தம் ஏறெடுக்கப்பட்ட இரண்டாம் ஸ்தோத்திர பாடல் (26:1-19)*

*4. இஸ்ரவேலின் சிட்சை மற்றும் இறுதியில் செல்வசெழிப்பு (926:20-27:13)*

***ஈ. எகிப்துடன் கூட்டணி ஏற்படுத்தினதற்கு விரோதமான எச்சரிக்கை (28:1-35:10)***

*1. மதுபானம் குடித்து வெறிக்கும் அரசியல்வாதிகளுக்கு ஐயோ (28:1-29)*

*2. மதச் சம்பிரதாயங்களுக்கு ஐயோ (29:1-14)*

*3. தேவனிடத்தில் இருந்து திட்டங்களை மறைக்கிறவர்களுக்கு ஐயோ (29:15-24)*

*4. எகிப்தை ஆதரிக்கிற கூட்டத்தாருக்கு ஐயோ (30:1-33)*

*5. குதிரைகளிலும் இரதங்களிலும் நம்பிக்கை வைப்பவர்களுக்கு ஐயோ (31:1-32:20)*

*6 அசீரியரை அழிப்பவருக்கு ஐயோ (33:1-24)*

*7. குறிப்பாக ஏதோம் மற்றும் இதர தேசங்களுக்கு விரோதமாக நியாயம் கிடைக்க கதறிச்சொல்லும் வார்த்தைகள் (34:1-35:10)*

***II. வரலாற்று இடைச்சொருகல்கள் (36:1-39:8)***

*அ. எருசலேமை கைப்பற்ற சனகெரிப்பின் முயற்சி (36:1 -37:38)*

*ஆ. எசேக்கியா வியாதிப்படுதல் மற்றும் சுகம்பெறுதல் (38:1-22)*

*இ. எருசலேமுக்கு அனுப்பப்பட்ட பாபிலோனிய தூதுவர்கள் (39:1-8)*

***III. இரட்சிப்பு (40:1-66:24)***

*அ. சிறையிருப்பிலிருந்து விடுதலை (40:1-48:22)*

*1. பாபிலோனில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு ஆறுதல் (40:1-31)*

*2. இஸ்ரவேலின் துயரத்திற்கு முடிவு (41:1 -48:22)*

***ஆ. கர்த்தருடைய ஊழியக்காரரின் பாடுகள் (49:1 -52:12)***

*1. ஊழியக்காரரின் பணி (49:1 - 52:12)*

*2. பாடு அனுபவிக்கும் ஊழியக்காரனால் மீட்க்கப்படுதல் (52:13-53:12)*

*3. பாடு அனுபவிக்கும் ஊழியக்காரனால் மீட்கப்படதன் பலன்கள் (54:1-57:21)*

***இ. தேவஜனத்தின் எதிர்கால மகிமை (58:1 -66:24)***

*1. சமயங்களில் இரண்டு விதம் (58:1-14)*

*2. இஸ்ரவேலரிடம் அவர்கள் பாவங்களை விட்டொழிக்க வேண்டுதல் (59:1-19)*

*3. சீயோனின் எதிர்கால ஆசீர்வாதம் (59:20 - 61:1)*

*4. சீயோனின் விடுதலை நெருக்கமாக இருத்தல் (62:1-63:6)*

*5. தேசத்தின் விடுதலைக்காக விண்ணப்பம் (63:7 - 64:12)*

*6. இஸ்ரவேலரின் வேண்டுகோளுக்கு தேவனின் பதில் (65:1 - 66:24)*

# எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம்

## தலைப்பு:

*இத்தீர்க்கதரிசன புத்தகத்தினை எழுதின ஆசிரியர் "எரேமியாவினுடைய வசனங்கள்" (1:1) என்று ஆரம்பித்த வரிகளில் இருந்து இந்த புத்தகம் தன் தலைப்பைப் பெறுகிறது. எரேமியா ஏனைய தீர்க்கதரிசிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அதாவது அவருடைய ஊழியம் பற்றி, அவர் பேசுவதைக் கேட்ட மக்களின் பிரதிபலிப்புகள், போதனைகள் மற்றும் அவரது தனிப்பட்ட உணர்வுகள் என தன்னை குறித்து அதிகமாக இப்புத்தகத்தில் விவரிக்கிறார். இவரது பெயர், அஸ்திபாரத்தைப் போடுகிறார் என்று அர்த்தப்படுத்தும் "யேகோவா போடுகிறார்" எனப் பொருள் தருகிறது அல்லது யேகோவா ஸ்திரப்படுத்துகிறார், நியமிக்கிறார் அல்லது அனுப்புகிறார் என அர்த்தம் தருகிறது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*எரேமியா, ஆசாரியராகவும் தீர்க்கதரிசியாகவும் ஊழியம் செய்தவர், இல்க்கியா என்னும் பெயருடைய ஆசாரியரின் குமாரன் (2ராஜா. 22:8-ல் நாம் காணும் நியாயப்பிரமாண புத்தகத்தைக் கண்டெடுத்த பிரதான ஆசாரியர் அல்ல இவர்). எருசலேமுக்கு ஏறக்குறைய 3 கி.மீ தூரத்தில், வடகிழக்கு பகுதியில் உள்ள ஆனதோத், இன்றைய நாட்களில் அனட்டா என அழைக்கப்படும் சிறிய ஊரிலிருந்து இருந்து (1:1), பென்யமீன் கோத்திரத்திலிருந்து வந்தவர். யூதருக்கு உண்டான கர்த்தருடைய வார்த்தை "இவ்விடத்தில் பெண்ணை விவாகம்பண்ணவேண்டாம்" என்ற வார்த்தைக்கு இணங்க, எரேமியா விவாகம் செய்யாதிருந்தார் (16:1-4). அவருக்கு ஊழியத்தில் பாருக்கு என்னும் ஒரு வேதபாரகர் உதவி செய்து வந்தார். கர்த்தர் எரேமியாவுடனே சொல்லிவந்த எல்லா*

*வார்த்தைகளையும் அவன் வாய் சொல்ல ஒரு புஸ்தகச் சுருளில் எழுதினான் (36:4,32; 45:1). எரேமியா ''கதறிஅழும் தீர்க்கதரிசி'' என்றும் அறியப்பட்டிருந்தார் (9:1; 13:17; 14:17) படையெடுத்து வந்த பாபிலோனியருக்கு அவர் நியாயத்தீர்ப்பு உண்டு என முன்னமே அறிவித்தபடியால் போராட்டம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தார். அவர் அச்சுறுத்தப்பட்டார், அவரை கொலைசெய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டது, கிடங்கில் அடைக்கப்பட்டார், யோயாக்கீமில் இருந்து தப்பிஓடும்படி துரத்தப்பட்டார், கள்ள தீர்க்கதரிசியால் வெளிப்படையாக அவமானப்படுத்தப்பட்டார் மேலும் ஒருமுறை குழியில் தள்ளப்பட்டார்.*

*எரேமியா யூதாவில் இருந்த தனது சொந்த ஜனங்களுக்கு நேராக ஏறெடுத்த ஊழியத்தையே பெரும்பாலும் செய்து வந்தார்; ஆனாலும், அது சில வேளைகளில் ஏனைய தேசங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. அவர் தேவனின் நியாயத் தீர்ப்பாக படையெடுப்பவர் வந்து சேர்வதற்கு முன் மனம்திரும்பும்படி தன் சொந்த யூதா தேசத்தாரிடம் முறையிட்டுவந்தார் (7,26). யூதா தேசம் மனம்திரும்ப மறுத்த போது, பாபிலோனியர்கள் படையெடுப்பு உறுதியானவுடன், பாபிலோனியர் கைகளில் முழுவதும் அழிந்து போகாதபடிக்கு, தன் தேசத்தாரிடம் பாபிலோனியர்களை எதிர்க்க வேண்டாம் என்று அறுவுறுத்தினார் (27ஆம் அதிகாரம்). மற்ற தேசங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து, தன் ஆலோசனைக்குச் செவிகொடுக்கும்படிக்கும், பாபிலோனியருக்கு அடங்கிச் செல்லும்படிக்கும் கேட்டுக்கொண்டார் (27ஆம் அதிகாரம்). மேலும் மற்ற தேசங்கள் மீது வரவிருக்கும் தேவனுடைய நியாயத் தீர்ப்புகளை முன் அறிவித்தார் (25:12-38; 46-51 அதிகாரங்கள்).*

*எரேமியா ஊழியத்தின் காலகட்டம் யூத ராஜா யோசியாவின் 13ஆம் வருடத்தில் இருந்து (1:2; கி.மு. 627) பாபிலோனியர் கரங்களில் எருசலேம் வீழ்ந்த கி.மு. 586 வரையிலான (எரேமியா*

*39, 40, 52) - ஐந்து தலைமுறைகள் வரைச் செல்கிறது. கி.மு.586-விற்குப் பிறகு, யூதாவில் மீந்தவர்கள் எகிப்துக்கு (எரேமியா 43,44) தப்பிப்போனபோது அவர்களுடன் எரேமியாவும் தப்பி ஓடிப்போக வேண்டி நிர்ப்பந்தமானது. பாபிலோனியர் எகிப்தின் மீது படையெடுத்து முற்றுகையிட்ட போது, எரேமியா பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டுச் சென்றார் என ராபானிக்கேயரின் குறிப்பு ஒன்று உரிமை கோருகிறது. கி.மு.597வில் யூதாவின் ராஜா யோயாக்கீம் பாபிலோனியாவில் சிறைப்பட்டுச் சென்றவர், தனது கடைசிகாலங்களில், அதாவது கி.மு.561-ல் பாபிலோனில் இருந்தபோது அவருக்கு சில சுதந்திரங்கள் கொடுக்கப்பட்டவராக (52:31-34) எரேமியா இப்புத்தகத்தின் கடைசி அத்தியாயங்களை எழுதியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எரேமியா அந்நாட்களிலும் உயிரோடு இருந்தார், அப்பொழுது அவருடைய வயது 85 லிருந்து 90 வருடங்களுக்குள் இருந்திருக்கலாம்.*

## *பிண்ணனி மற்றும் அமைப்பு*

*எரேமியா காலத்தின் பிண்ணனி விபரங்களை 2ராஜா:22-25 மற்றும் 2நாளா:34-36 அதிகாரங்களில் வாசிக்கலாம். எரேமியா செய்திகளின் சித்திரத்தில் இப்படங்களைப் பார்க்கிறோம் 1) ஜனங்களின் பாவம்; 2) படையெடுத்து வருபவரை தேவன் அனுப்புவார்; 3) முற்றுகையின் கொடுமை; மற்றும் 4) நாசத்தினால் உண்டான பேரழிவுகள். எரேமியாவின் விக்கிரக ஆராதனை மற்றும் ஏனைய பாவங்களினால் வரவிருக்கும் நியாயத்தீர்ப்பு குறித்த செய்தி 40 வருட கால இடைவெளிக்குள் பிரசிங்கிக்கப்பட்டது (கி.மு.627-586) யூதாவின் கடைசி 5 ராஜாக்களான: 1) யோசியா, கி.மு. 640-609, 2) யோவாகாஸ், கி.மு. 609, 3) யோயாக்கீம், கி.மு. 609-508. 4) யோயாக்கீன், கி.மு.598 -597, மற்றும் 5) சிதேக்கியா கி.மு. 597-586 காலங்களில் எரேமியாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் நிறைவேறினது.*

யூதா தேசத்தின் ஆவிக்குரிய நிலை கொடிய விக்கிர ஆராதனைகளால் நிறைந்திருந்தது (அதிகாரம்2) எசேக்கியா ராஜாவின் தகப்பன் ஆகாஸ் ராஜா அதாவது எரேமியாவின் காலத்திற்கு முன் ஏசாயாவின் காலங்களில், எருசலேமுக்கு வெளியில் இருந்த இன்னோம் பள்ளாத்தாக்கில் மோளேகுக்கு பிள்ளைகளை பலியிடும் ஒரு பழக்கத்தை ஏற்படுத்தி இருந்தான் (கி.மு. 735-715). எசேக்கியா சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தான், பலிபீடங்களை அகற்றிப் போட்டான் (ஏசாயா 36:7); ஆனால், அவன் குமாரன் மனாசே வளர்ப்பு பிள்ளைகளை பலியிடுதலை விக்கிரக ஆராதனையுடன் சேர்த்து, இவ்வித அருவருப்புகளை தொடர்ந்து செய்துவந்தான் இது எரேமியாவின் காலங்களில் நடந்தது (7:31; 19:5; 32:35). அனேகர் ''வானராக்கினி'' என்னும் அந்நிய தேவர்களை நமஸ்கரித்தார்கள் (7:18; 44:19). யோசியாவின் சீர்திருத்தங்கள் கி.மு.622-வில் உச்சிக்குச் சென்றது, அதில் வெளியரங்கமான தவறான ஆசரிப்புகள் ஒழிக்கப்பட்டது என்றாலும், பாவம் என்பது புற்றைப்போல் ஆழமாக பதிந்து இருந்தது, சிறிய கால இடைவெளி எழுப்புதலுக்குப்பின் மீண்டும் பாவம் தலைதூக்கியது. தேசத்தில் உண்மையின்மை, நேர்மையின்மை, விபச்சாரம், நீதியின்மை, உதவியற்றவர்களுக்கு விரோதமாக இழைக்கப்படும் கொடுமை மற்றும் அவதூறு இயல்பான ஒன்றாக காணப்பட்டது.

எரேமியாவின் காலத்தில் அரசியல் ரீதியாக முக்கியமான சம்பவங்கள் சில நிகழ்ந்தன. அசீரியர்களின் அதிகாரம் படிப்படியாக குறைந்து, அஸ்னாப்பார் கி.மு.626-வில் மரித்தார். அசீரியா தன் பலத்தில் குறைந்து கொண்டே வந்து, இறுதியில் வெல்லவே முடியாத நினிவே, நிர்மூலமானது (நாகூம் புத்தகமும் இதனை உறுதிசெய்கிறது). புதிய பாபிலோனிய பேரரசின் ராஜா நாபோபொலொசர் (கி.மு.626-605) அசீரியர்களின் மீது தொடுத்த யுத்தங்கள் (கி.மு.612), எகிப்தின் மீது (கி.மு.609-605)

மற்றும் (தானியேல் 1; கி.மு.605-ல் நாம் காண்பது போல; 2ராஜா. 24:10-16-ல் காண்பது போல கி.மு. 597-ல்; எரேமியா 39, 40, 52ல் கி.மு.586-ல் காண்பது போல இஸ்ரவேல் மீது 3 காலகட்டங்களில் போர் தொடுத்து, பல வெற்றிகளைக் கண்டு ராணுவத்தில் தன் அதீத ஆதிக்கத்தைச் செலுத்தினார்.

யூதா நியாயம் தீர்க்கப்படும் என்று முன்னமே யோவேல் மற்றும் மீகா தீர்க்கதரிசனம் உரைத்திருந்தாலும், யோசியாவின் காலத்தில் இருந்த தலைசிறந்த தீர்க்கதரிசிகள் - எரேமியா, ஆபகூக் மற்றும் செப்பனியா; பின்நாட்களில் எரேமியா வாழ்ந்த நாட்களில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள் எசேக்கியேல், தானியேல் தீர்க்கதரிசன ஊழியத்தில் முக்கிய பங்கினை வகித்தனர்.

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

எரேமியா புத்தகத்தின் முக்கிய கருப்பொருள் யூதா தேசத்தின் மீது உண்டாயிருக்கும் நியாயத்தீர்ப்பு (அதிகாரங்கள் 1-29) மற்றும் மேசியாவின் ராஜ்ஜியத்தில் அதன் மறுசீரமைப்பு (23:3-8;30-33) என்பதாகும். ஏசாயா தன் புத்தகத்தில் அதிகமான அதிகாரங்களை இஸ்ரவேல் தேசத்தின் எதிர்கால மகிமைக்கென்று (ஏசாயா 40-66) ஒதுக்கி இருந்த போது, எரேமியா இந்த தலைப்பிற்கு மிக குறைந்த அளவே இடம் தந்திருக்கிறார். தேவனுடைய நியாயதீர்ப்பு அண்மையில் நிகழப் போகின்ற ஒன்றாக இருந்தபடியால், அவர் நிகழ்கால பிரச்சினைகளில் கவனம் அதிகம் செலுத்தி, தேசத்தை அழிவில் இருந்து மீட்டு, தேசத்தை திருப்பிக்கொண்டு வருவதில் அதிகம் கவனம் செலுத்தினார்.

தேசத்தின் ஜனங்கள் மனம்திரும்பி வரும்போது மட்டுமே தேவன் அவர்களை பாதுகாத்து ஆசீர்வதிப்பார் என்பது இரண்டாவது கருப்பொருள். இது அடிக்கடி வலியுறுத்தப்படும் கருப்பொருளாக இருந்தாலும், குயவன் வீட்டில் வைத்து மிக அழகாக சித்தரிகத்துக் காட்டப்பட்டுள்ளது (18:1-11). அடுத்து

எரேமியா தேவனுடைய செய்தியை அதிகாரப்பூர்வமாகச் சொல்லியது மற்றும் அவர் தேவனுடைய சித்தம் செய்வதில் கொண்டிருந்த உறுதி போன்ற எரேமியாவின் வாழ்க்கையை குறித்து இப்புத்தகத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது (1:5-19; 15:19-21). ஏனைய கருப்பொருட்கள் 1) தேவன் இஸ்ரவேலுக்காக கொண்டிருந்த பிரியம், - நீ வாழ்க்கைப்பட்டபோது உனக்கிருந்த நேசத்தையும் நினைத்திருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (2:1-3) போன்ற வார்த்தைகளில் வெளிப்படுகிறது. 2) எரேமியா "ஆ, என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் நலமாயிருக்குமென கதறி அழுகிறார் (கதறும் தீர்க்கதரிசி எனப்பெயர் பெற்றார் (9:1 14:17); 3) தேவன் தனது அன்பினை, கச்சையானது மனுஷனுடைய அரைக்குச் சேர்க்கையாயிருக்கிறதுபோல, நான் இஸ்ரவேல் குடும்பத்தாரனைவரையும் யூதாவின் குடும்பத்தாரனைவரையும், எனக்கு ஜனங்களாகவும், கீர்த்தியாகவும், துதியாகவும், மகிமையாகவும் சேர்க்கையாக்கிக் கொண்டேன் என்னும் வார்த்தைகளினால் வெளிப்படுத்துகிறார் (13:11). 4) எரேமியாவின் சோதனைகளினால் விளைந்த பாடுகள், எரேமியாவின் பாடுகளின் வேளையில் தேவன் அவருக்கு போதுமானவராக இருந்தார் என்பது (11:18-23; 20:1-18). 5) உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது என எரேமியா சொல்வதில் இருந்து தேவனுடைய வார்த்தை ஒருவரது வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான இடத்தில் இருக்கிறது என்பது புரிகிறது. 6) உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (அதிகாரம் 32, விசேஷமாக வசனம் 17:27) என்ற வசனத்தின் மூலம் தேவன் இஸ்ரவேலை மீட்டெடுப்பார் என்று எதிர்பார்ப்பதில் விசுவாசத்தின் பங்கு என்ன என்பதை அறிகிறோம். 7) தேசத்தில் தேவனுடைய

*சித்தம் தேவனுடைய செயல்பாட்டுடன் ஒருங்கிணைப்பட ஜெபம்செய்தல்* ***(33:3,6-18).***

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*எரேமியா புத்தகத்தில் கீழ்க்காண்பது போன்று அனேக கேள்விகள் எழுகிறது:*

***1)*** *மோசேயும் சாமுவேலும் என் முகத்துக்கு முன்பாக நின்றாலும், என் மனம் இந்த ஜனங்கள் பட்சமாய்ச் சாராது* ***(15:1)*** *என்றும் நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம்* ***(7:16)*** *என்றும் யூத ஜனங்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்தை தேவன் விலக்கி வைப்பதற்கு ஒருவர் எப்படி விளக்கம் தரமுடியும்?* ***2)*** *எரேமியா பல மைல் தூரம் உண்மையில் ஐப்பிராத்து நதி மட்டும் நடந்து சென்றாரா? அல்லது அவரது அரையிலிருந்த கச்சையை அருகிலேயே புதைத்து வைத்தாரா?* ***(13:4-7) 3)*** *அவருடைய் பிறந்த நாளை அறிவித்த மனுஷருக்கு விரோதமாக எரேமியா இவ்வளவு கடுமையான வார்த்தைகளை எப்படி கூற முடியும்* ***(20:14-18)****?* ***4)*** *கோனியாவின் வம்சத்தை சபித்த சாபத்திற்கும் கிறிஸ்துவிற்கும் தொடர்பு உண்டா?* ***(22:30) 5)*** *அவர்களின் பண்டைய கால தேசத்திற்கு இஸ்ரவேலர் திரும்புவார்கள் எனறு அதிகாரம்* ***30-33-****ல் நாம் காணும் வாக்குதத்ததிற்கு ஒருவர் எப்படி விளக்கம் அறிந்து கொள்ள வேண்டும்? மற்றும்* ***6) 31:31-34-****ல் நாம் காணும் வார்த்தைகளின்படி இஸ்ரவேலுக்கும் சபைக்கும் ஏற்பட்டு இருக்கும் புதிய உடன்படிக்கையை தேவன் எப்படி நிறைவேற்றுவார்? போன்ற கேள்விகள் இருக்கத்தான் செய்கிறது. எல்லாவற்றுக்கும் மேலான சவால், எரேமியா புத்தகம் காலவரிசைப்படி எழுதப்படாமல், கருப்பொருட்களுக்கு ஏற்றாற்போல் முன்னும் பின்னுமாக தொய்வான வரிசையிலேயே தொகுக்கப்பட்டுள்ளபடியால், தீர்க்கதரிசியின் தீர்க்கதரிசன செய்திகளை சரியான காலபிண்ணனியில் வைத்து புரிந்து*

கொள்ள வேண்டும். இதற்கு எதிர் அம்சமாக, எசேக்கியேல் தனது புத்தகத்தை காலவரிசைப்படி அமைத்திருப்பதைக் காணலாம்.

**சுருக்கம்**

***I. எரேமியாவின் ஆயத்தம் (1:1-19)***

*அ. எரேமியாவின் சூழ்நிலை (1:1-3)*

*ஆ. எரேமியாவின் தெரிந்தெடுப்பு(1:4-10)*

*இ. எரேமியா பொறுப்பெடுத்தல் (1:11-19)*

***II. யூதா விற்கு அதிகாரப்ப்பூர்வமாக அறிவித்தல் (2:1-45:5)***

***அ. யூதாவிற்கு கண்டனம் தெரிவித்தல் (2:1 - 29:32)***

*1. முதல் செய்தி (2:1 -3:5)*

*2. இரண்டாம் செய்தி (3:6 - 6:30)*

*3. மூன்றாம்செய்தி (7:1 - 10:25)*

*4. நான்காவது செய்தி (11:1 - 13:27)*

*5. ஐந்தாவது செய்தி (14:1 - 17:18)*

*6. ஆறாவது செய்தி (17:19 -27)*

*7. ஏழாவது செய்தி (18:1 -20:18)*

*8. எட்டாவது செய்தி (21:1-4)*

*9 ஒன்பதாவது செய்தி (22:1 - 23:40)*

*10. பத்தாவது செய்தி (24:1 -10)*

*11. பதினொன்றாவது செய்தி (25:1-38)*

*12. பன்னிரண்டாவது செய்தி (26:1 -24)*

*13. பதின்மூன்றாவது செய்தி (27:1 - 28:17)*

*14. பதினான்காவது செய்தி (29:1-32)*

***ஆ. யூதாவை ஆறுதல்படுத்தல் - புதிய உடன்படிக்கை (30:1 - 33:26)***

*1. மறுசீர்செய்வேன் என்பதனை முன்கூட்டியே அறிவித்தல் (30:1 -31:40)*

*2. மறுசீர்செய்யப்படும் என்பதில் விசுவாசம் காட்டுதல் (32:1-44)*

*3. மறுசீர்செய்வேன் என்பதனை முன்கூட்டியே அறிவித்தல் பாகம் -2 (3:1-26)*

***இ. யூதா வின் பேரிடர் (34:1 -45:5)***

*1.யூதாவின் வீழ்ச்சிக்கு முன் (34:1 45:5)*

*2.யூதாவின் வீழ்ச்சியின் போது (39:1 -18)*

*3. யூதாவின் வீழ்ச்சிக்குப் பின் (40:1 -45:5)*

***III. தேசங்களின் மீது வரப்போகும் நியாயத்தீர்ப்புகள் குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவித்தல் (46:1 - 51:64)***

*அ. அறிமுகம் (46:1; 25:15-26)*

*ஆ. எகிப்திற்கு விரோதமாக (46:2 -28)*

*இ. பெலிஸ்தியா விற்கு விரோதமாக (47:1-7)*

*ஈ. மோவாப் ற்கு விரோதமாக (48:1-47)*

*உ. அம்மோனியருக்கு விரோதமாக (49:1-6)*

*ஊ. ஏதோம் ற்கு விரோதமாக (49:7-22)*

*எ. தமஸ்கு விற்கு விரோதமாக (49:23-27)*

*ஏ. கேதார் மற்றும் ஹஸோர் (அரபியா) விற்கு விரோதமாக (49:28-33)*

*ஐ. ஏலாம் ற்கு விரோதமாக (49:34 -39)*

*ஒ. பாபிலோனிற்கு விரோதமாக (50:1 - 51:64)*

### *IV.* எருசலேமின் வீழ்ச்சி *(52:1-34)*

*அ. எருசலேம் அழிக்கப்படுதல் (52:1-23)*

*ஆ. யூதர்கள் நாடு கடத்தப்படுதல் (52:24-30)*

*இ. கோனியா விடுவிக்கப்படுதல் (52:31-34)*

# எரேமியாவின் புலம்பல்

## தலைப்பு:

*பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு (செப்டுவாஜிண்ட்) லத்தீன் வுல்கேட்டில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டபோது "புலம்பல்" என்ற பெயர் வழங்கப்பட்டது; இது "சத்தமிட்டு கதறும்" என்ற கருத்தை தருகிறது. எபிரேய ஆச்சரியம் "ஏக்கா" என்ற வார்த்தை "எப்படி" என்பது திகைப்பூட்டும் அச்சத்தை வெளிப்படுத்துகிறது. இவ்வார்த்தை 1:1, 2:1, 4:1 வசனங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளதிலிருந்து எபிரேய புத்தகத்தின் தலைப்பைக் கொடுக்கிறது. எப்படியாகிலும், ஆரம்ப நாட்களில் ரபீமார் (யூத குருமார்கள்) இந்த புத்தகத்தை "கதறி அழும் புத்தகம்" அல்லது புலம்பல் என அழைக்க ஆரம்பித்துவிட்டனர் (எரேமியா 7:29). பழையஏற்பாடு முழுவதையும் நாம் பார்க்கும் போது, வேறு எந்தவொரு புத்தகத்திலும் புலம்பல் மட்டுமே உள்ளடக்கம் என நாம் காண்பதில்லை. ஒருகாலத்தில் பூரணவடிவும் சர்வபூமியின் மகிழ்ச்சியுமான நகரமாக இருந்த எருசலேமின் அடக்க ஆராதனையின் போது பாடியதாக இருக்கிற துயரம் நிறைந்த புலம்பல் பாட்டு ஒன்றை நாம் வேதாகமத்தில் வேறு எங்கும் காணமுடியாது (2:15). அந்த வீழ்ச்சியின் நினைவுகளை இந்த புத்தகம் உயிரோட்டத்துடன் அளித்து, விசுவாசிகள் துயரமான வேளையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என கற்றுத் தருகிறது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*புலம்பல் புத்தகத்தில் ஆசிரியரின் பெயர் இந்த புத்தகத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை, ஆனால், இதில் உட்பக்க மற்றும் வரலாற்று குறிப்புகள், எரேமியா தான் இப்புத்தகத்தின் ஆசிரியர் எனச் சுட்டிக்காட்டுகின்றன. கிரேக்க LXX மொழிபெயர்ப்பு*

(புலம்பல் 1:1) இவ்வாறாக அறிமுகம் செய்கிறது "ஐயோ! ஜனம்பெருத்த நகரி தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே! விதவைக்கு ஒப்பானாளே!" எரேமியா உட்கார்ந்து புலம்பினான் (3:48,49) "கதறி அழுது" சொன்னான். யூதா புத்திரருக்காக நீ உன் தலைமயிரைச் சிரைத்து, எறிந்துவிட்டு, உயர்தலங்களிலே புலம்பிக்கொண்டிரு; என்று எரேமியாவிடம் தேவன் சொன்னார் (எரேமியா 7:29), மேலும் எரேமியா யோசியாவிற்காகவும் புலம்பல் பாடினான் (2நாளா 35:25).

கி.மு.586வில் எருசலேமின் வீழ்ச்சியின் போது அல்லது அதனைத் தொடர்ந்து எரேமியா புலம்பல்களை தன் கண்கண்ட சாட்சியாக எழுதினார் (1:13-15, 2:6,9; 4:1-12). இதனை எழுதுவதற்கு ஒருவேளை பாருக் எரேமியாவிற்கு உதவி செய்திருக்கலாம் (எரேமியா.36:4;45:1). ஜூலை மாதத்தின் மைய்ய நாட்களில் பட்டணம் வீழ்ச்சி அடைந்ததாகவும், ஆகஸ்ட் மாதத்தின் மைய்ய நாட்களில் தேவாலயம் எரிக்கப்பட்டிருக்கலாம். எரேமியா, அலங்கம், கோபுரங்கள், வீடுகள், அரமணைகள் மற்றும் ஆலயங்கள் இடிக்கப்படுவதையும் கண்டான்; அவனது நினைவில் இச்சம்பவங்கள் வேதனை தருவதாக அப்படியே பதிந்திருக்கும் வேளையில், அவர் எகிப்துக்குச் செல்லும்படி கட்டாயப்படுத்தி அனுப்பப்பட்ட கி.மு. 583-க்கு (எரேமியா 43:1-7) முன் எழுதினார். புலம்பலில் எரேமியா எழுதின வார்த்தைகள் அவர் எழுதிய பெரிய தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு இணையானதாகவே இருக்கின்றது (1:2-ஐ எரே.30:14 உடன்; 14:1-15-ஐ எரே.8:21 உடன்; 1:6 மற்றும் 2:11-ஐ எரே 9:1,18 உடன்; 2:22-ஐ எரே.6:25; 4:21-ஐ எரே. 49:12 உடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

## பிண்ணனி மற்றும் அமைப்பு

800 வருடங்களுக்கு முன்பதாகவே எருசலேமின் அழிவைக் குறித்த தீர்க்கதரிசன விதை யோசுவாவின் மூலம்

விதைக்கப்பட்டது (யோசுவா 23:15,16). 40 வருடம் எரேமியா வரவிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து தீர்க்கதரிசனமாக உரைத்துவரும் வேளையில், ஜனங்கள் அழிவைக் குறித்து இவர் பிரசங்கிக்கிறார் என (கி.மு. 645-605) தூஷித்தனர். விசுவாசிக்காத ஜனங்கள் மீது நியாயத்தீர்ப்பு நெபுகாத்நேச்சார் மற்றும் பாபிலோனிய சேனையின் மூலம் வந்தபோது, பிடிவாதமான ஜனங்கள் அதேவேளையில் துயரப்படும் ஜனங்களைக் கண்டு மிகுந்த துக்கத்துடனும் மனவுருக்கத்துடனும் எரேமியா பதிலளித்துக் கொண்டே வந்தார். புலம்பல் புத்தகம் தங்கள் பாவத்தினின்று மனம் திரும்பாததினால் தேவனுடைய நியாயத் தீர்ப்பிற்கு உட்பட்ட ஜனங்களின் வேதனையை விவரிக்கும் எரேமியாவின் புத்தகத்துடன் மிகநெருக்கமாக தொடர்பு கொண்டுள்ளது. எரேமியாவின் பெயரைத் தாங்கியுள்ள புத்தகத்தில் அதிகாரம் 1-29ல் பேரிடர் குறித்து முன் கூட்டியே எரேமியா கூறியிருக்கிறார். எருசலேமின் அழிவினால் உண்டான கசப்பான துயரங்கள் மற்றும் மனவேதனைகளுக்கு முக்கியத்துவம் தந்து விரிவாக புலம்பல் புத்தகத்தில் எழுதியுள்ளார். (சங்கீதம் 46:4,5) எருசலேமின் அழிவு மிகவும் மோசமானதாக இருந்ததால், பழைய ஏற்பாட்டு புத்தகத்தின், 4 அதிகாரங்களில், 2ராஜா. 25; எரேமியா 39:1-11,52; மற்றும் 2நாளா.36:11-21 தனிப்பட்ட கருத்தாக குறித்து தரப்பட்டுள்ளது.

யூதர்களின் இரண்டாவது புனிதநூல் வரிசையில், இதில் வரும் 154 வசனங்கள் அனைத்தும் வேதவாக்கியங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்றன. ''மெகிலோத்'' அல்லது 5 தோல்சுருள்கள்'' என்று அழைக்கப்படும் பழைய ஏற்பாட்டு புத்தகங்களான ரூத், எஸ்தர், சாலொமோனின் உன்னதப்பாட்டு மற்றும் பிரசங்கியுடன் சேர்ந்த இந்த புலம்பல் புத்தகம் யூதர்களின் ஆலயங்களில் விசேஷித்த நாட்களில் வாசிக்கப்பட்டது. ஆப் மாதத்தின் ஒன்பதாவது நாள் - (ஜூலை/ ஆகஸ்ட் மாதம்) நெபுகாத்நேச்சார் ராஜா ஏற்படுத்திய

*எருசலேமின் பேரழிவின் நாளில் இப்புத்தகத்தை எடுத்து வாசிப்பார்கள். சுவராஸ்யமான விஷயம் என்னவென்றால், ரோம சாராஜ்யத்தால் ஏரோதின் ஆலயம் இடிக்கப்பட்டதும் இந்த நாளிலே எனக் குறிக்கப்பட்டது.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*யூதாவின் பாவத்திற்குகான தேவ நியாயத்தீர்ப்பே புலம்பல் புத்தகத்தின் முக்கிய கவனம். இந்த கருப்பொருளை புத்தகம் முழுவதும் காணலாம் ( **1:5, 8,18,20; 3:42; 4:6,13,22; 5:16).** தேவனுடைய மனதுருக்கத்தில் வைக்கப்படும் நம்பிக்கை இரண்டாவது கருப்பொருளாக இந்த புத்தகத்தில் மேலெழும்பி வருகிறது **(3:22-24, 31-33;** சங்கீதம் **30:3-5).** தேசத்திற்கு நேர்ந்த அவமானத்தைக் குறித்து இடைபடுவதாக இருந்தாலும், இப்புத்தகம் தேவனின் பெரிதான வாக்குறுதியை காக்கும் பண்பினை **(3:22-25)** நோக்கி நம்மை வழிநடத்துகிறது. எரேமியா புலம்பலில் இருந்து ஆறுதலுக்கு **(5:19-22)** மாறுவதில் இருந்து, இறுதியில் கிருபையுடன் இந்த புத்தகம் முடிவடைகிறது என்பதை நாம் அறிந்துக்கொள்கிறோம் **(5:19-22).***

*தேவனின் ராஜரீக நியாயத்தீர்ப்பு இப்புத்தகத்தின் ஊடாக கடந்து செல்லும் மூன்றாவது கருப்பொருள். யூதாவின் பாவத்திநிமித்தம் தேவன் கொண்ட கோபத்தினால் அவர் ஒரு பேரழிவை கொண்டுவந்தார். தேவகோபாக்கினைக்கு ஒரு கருவியாக பாபிலோன் தெரிந்தெடுக்கப்பட்டது **(1:5,12,15; 2:1,17; 3:37,38;** எரேமியா**50:23).** எரேமியா **- 150** தடவைக்கும் மேலாக பாபிலோன் என்ற வார்த்தையை, எரேமியா **20:4** லிருந்து **52:34** வரையுள்ள வசனங்களில் எடுத்துப் பயன்படுத்துகிறார். ஆனால் புலம்பல் புத்தகத்தில் ஒருமுறைகூட வெளிப்படையாக பாபிலோன் என்றோ அதன் ராஜா நெபுகாத்நேச்சார் குறித்தோ குறிப்பிடவில்லை. யூதாவின்*

*பாவங்களுக்காக அவர்களுடன் கர்த்தர் இடைபட்டார் என அவரைக் குறித்து மட்டுமே எடுத்துக்காட்டுகிறார்.*

*நான்காவதாக, இஸ்ரவேலரின் இரட்சிப்பு மற்றும் தேவனுடைய வாக்குதத்தங்கள் நிறைவேறுவதற்கான எந்தவொரு நம்பிக்கையும் இல்லாமல் அற்றுப்போகும் அளவிற்கு நியாயத்தீர்ப்பு பரந்து விரிந்து காணப்பட்டபடியால், இந்த புத்தகத்தின் அதிகப்படியான இடங்களில் ஜெபம் நிறைந்திருக்கிறது. 1) 1:11, பாவங்களை அறிக்கையிடும் புலம்பலாக இருக்கிறது (வசனம் 18லும் காணலாம்). 2) 3:43-54 எரேமியா 7:16-ல் ''ஜெபம் உட்பிரவேசிக்கக் கூடாதபடிக்கு'' இருந்ததால் ஏற்பட்ட வேதனையைப் பற்றிப் பேசுகிறது. 3) 3:55-59 வசனங்களில் எரேமியா நிவாரணத்திற்காக கதறி புலம்புவதைப் பார்க்கிறோம், அல்லது 3:60-66-ஆம் வசனங்களில் எதிரிகளின் சரிக்கட்டுதலை கோருகிறார் (எரேமியா 50,51-ஆம் அதிகராங்கள் அதற்கு உத்திரவாதம் அளிப்பதைக் காண்கிறோம்). 4) 5:1-22 கிருபையினை மீட்டெடுக்க வேண்டி பரலோகத்திற்கு நேராக வேண்டுதல் ஏறெடுக்கப்படுகிறது. எரேமியா:30-33 அதிகாரங்களில் உள்ள வசனங்கள் தேவனின் வாக்குறுதியைக் காக்கும் தன்மையில் நம்பிக்கை கொண்டிருப்பதன் அடிப்படையில் இதற்குரிய நிச்சயத்தைத் தருகின்றன.(3:23).*

*ஐந்தாவது கருப்பொருள் கிறிஸ்துவுடன் தொடர்புள்ளது. எரேமியா வடித்த கண்ணீர்கள் (3:48,49), அதே எருசலேம் நகரத்திற்காக இயேசு வடித்த கண்ணீர். ''அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுது'' (மத்.23:37-39; லூக்கா 19:41-44) இவ்விரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள். தேவன் நியாயாதிபதி யாகவும் அதனை நிறைவேற்றுபவராக இருந்த போதிலும் இந்த பேரழிவை காண்பது அவருக்கு மிகுந்த மனவேதனையை தருவதாக இருந்தது. அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் (தேவன்) நெருக்கப்பட்டார் என்று நாம் ஏசாயா 63:9-ல்*

*காணும் கூற்று இந்த இடத்திற்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. ஒரு நாளில் தேவன் தாமே நம் கண்ணீர் யாவையும் துடைப்பார் (ஏசாயா:**25:8;** வெளி.**7:17, 21:4**) அந்நாளில் பாவம் என்பதே இல்லாமல் போய்விடும். ஆறாவது, கருப்பொருள் இந்த புத்தகத்தை வாசிக்கும் யாவருக்கும் மறைமுகமான எச்சரிக்கை: தேவன் தமது அருமையான ஜனங்களை (உபா.**32:10**) நியாயம் தீர்க்க தயங்கவில்லை என்றால், அவருடைய வார்த்தையை நிராகரிக்கின்ற தேசங்களைக் குறித்து அவர் என்ன செய்வார்?*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*சில விவரங்கள் ஆரம்பத்தில் கடினமானதாக தோன்றுகின்றன. அவைகளில் சில: **1)** மற்ற பாவிகள் நியாயத்தீர்க்கப்படும்படி சாபமிட்டு வேண்டுதல் செய்தல் ஏன்? (**1:21,22; 3:64-66**); **2)** நான் சத்தமிட்டுக் கூப்பிட்டாலும், என் ஜெபத்துக்கு வழியை அடைத்துப் போட்டார் (**3:8**) என்பதைக் காணும்போது - தேவன் பதில் அளிக்க மறுப்பதற்கு தரும் காரணம் என்ன? மற்றும் **3)** இவ்வளவு கடினமான நியாயத்தீர்ப்பு தரப்பட்டதன் அவசியம் என்ன (**1:1,14; 3:8**).*

## சுருக்கம்

*முதல் **2** அதிகாரங்களின் வசனங்கள் எபிரேய மொழியின் **22** எழுத்துக்களின் ஏறுமுக வரிசை முதல் எழுத்தாக அமைய எழுதப்பட்டுள்ளன. அதிகாரங்கள் **1,2,4**-ல் நாம் **22** எழுத்துக்களும் முதல் எழுத்தாக அமைய எழுதப்பட்டுள்ளன. ஆனால் அதிகாரம் **3**ல்- **22** எழுத்தில் ஒவ்வொன்றும் **3** வரிகளை சேர்த்து வரும் மாதிரியைப் பின்பற்றுகிறது. இதனால், **66** வரிகள் காணப்படுகிறது. நாம் சங்கீதம் **119**-ல் காண்பது போல, மனனம் செய்ய வசதியாக, **22** எபிரேய வார்த்தைகளும் முதல் வார்த்தையாக **8** வசனங்களின் அணிவரிசையாக அமைக்கப்பட்டுள்ளது.*

*கீழ்க்காணும் மிகச்சிறந்த அறிக்கையை நாம் புலம்பல் 3:22-24-ல் காண்கிறோம்.*

*நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன்; இந்த அறிக்கையின் அடிப்படையில் இப்புத்தகம் ஏறுவதும் இறங்குவதுமாக எழுதப்பட்டுள்ளது.*

*"உமது உண்மை பெரிதாயிருக்கிறது" என்பதே இந்த புத்தகம் எழுதப்பட்டதன் மைய்ய கருத்து.*

***I. முதல் புலம்பல்: எருசலேம் பாழ்க்கடிக்கப்படுதல் (1:1-22)***

*அ. எரேமியாவின் துக்கம் (1:1-11)*

*ஆ. எரேமியாவின் துக்கம் (1:12-22)*

***II. இரண்டாவது புலம்பல்: கர்த்தரின் கோபத்திற்கு விளக்கம் தருதல் (2:1-22)***

*அ. கர்த்தருடைய பார்வையில் இருந்து (2:1-10)*

*ஆ. மனுஷ பார்வையில் இருந்து (2:11-19)*

*இ. எரேமியாவின் ஜெபம் (2:20-22)*

***III. மூன்றாவது புலம்பல்:***

*எரேமியா தன் துக்கத்தினை வெளிப்படுத்தினது (3:1—66)*

*அ. எரேமியாவின் துயரம் (3:1-20)*

*ஆ. எரேமியாவின் நம்பிக்கை (3:21-38)*

*இ. எரேமியாவின் ஆலோசனை / ஜெபம் (47:1-7)*

***IV. நான்காவது புலம்பல்: தேவனுடைய கோபாக்கினைக்கு விளக்கம் (4:1-22)***

*அ. எருசலேமுக்காக (4:1-20)*

*ஆ. ஏதோமிற்காக (4:21,22)*

***V. ஐந்தாவது புலம்பல் :மீந்திருந்தோரின் விண்ணப்பங்கள் (5:1-22)***

*அ. கர்த்தரால் நினைவுகூரப்பட இருக்கும் (5: 1-18)*

*ஆ. கர்த்தரால் முன்நிலைமையில் வைக்கப்படுதல் (4:19-22)*

# எசேக்கியேல் தீர்க்கதரிசியின் புத்தகம்

## தலைப்பு:

*எசேக்கியேல் என்னும் இப்புத்தகத்தை எழுதிய ஆசிரியரின் (1:3; 24:24) பெயரே இந்த புத்தகத்திற்குத் தலைப்பாயிற்று, இப்பெயர் பரிசுத்த வேதாகமத்தில் வேறு எந்த பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை. இப்பெயரின் அர்த்தம் "தேவனால் பெலப்படுத்தப்பட்டவர்". தீர்க்கதரிசன ஊழியத்திற்கு தேவனின் அழைப்பைப் பெற்ற இவர் (3:8,9), தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றிய போது இந்த பெயரின் அர்த்தம் இவர் வாழ்வில் நிறைவேறியது. தேவன் தம்முடைய சொந்த ஜனம், நாடு கடத்தப்பட்ட ஜனங்களிடம் சொல்லும் செய்தியை தெரியப்படுத்தவும், சித்தரித்துக் காட்டவும் எசேக்கியேல் தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள், உவமைகள், சின்னங்கள் மற்றும் அடையாளங்களைப் பயன்படுத்துகிறார்.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*வசனம் 1:1ல் நாம் காணும் "முப்பதாம் வருஷம்" எசேக்கியேலின் காலத்தைக் குறிப்பிடுகின்றது என எடுத்துக் கொண்டால், அவர் சிறைபட்டு போனபோது வயது 25 ஆகவும் ஊழியத்திற்கு அழைப்பைப் பெற்ற போது 30 ஆகவும் இருந்திருக்க வேண்டும். ஆசாரியர்கள் தங்கள் பொறுப்பை முப்பதாவது வயதில் ஆரம்பிப்பர், என்பதால் எசேக்கியேலின் வாழ்க்கையில் இது குறிப்பிடதக்க வயதாக இருந்தது. அவரது ஊழியம் கி.மு. 593/92 வில் ஆரம்பித்து 22 வருடங்கள் அதாவது கி.மு. 571/70 வரை (25:17) நீடித்தது. எரேமியா (எசேக்கியேலை விட ஏறக்குறைய 20 வயது மூத்தவர்) மற்றும் தானியேல் (தானியேலின் வயது எசேக்கியேலின் வயது தான்) எசேக்கியேல் இவ்விரு தீர்க்கதரிசிகளின் சமகாலத்தவர். 14:14,20; 28:3 வசனங்களில் ஏற்கெனவே அறிந்திருக்கும் தீர்க்கதரிசி என*

*எசேக்கியேல் குறிப்பிடுகிறார். எரேமியா (எரே.1:1) மற்றும் சகரியா போன்று எசேக்கியேல் - ஆசாரியரும் தீர்க்கதரிசியுமாக இருந்தவர் (சகரி.1:1; நெகேமியா 12:16 உடன்). இவருடைய ஆசாரியத்துவ பிண்ணணியினால், இவர் தேவாலயத்திற்கு அடுத்த காரியங்களில் அதிக நாட்டம் உடையவராக, பரிச்சயம் நிறைந்தவராக இருந்தார். இதனால், தேவாலயம் குறித்து எசேக்கியேல் அதிகமாக எழுதும்படிக்கு தேவன் அவரைப் பயன்படுத்தினார் (8:1-11:25; 40:1-47:12).*

*எசேக்கியேல் மற்றும் அவரது மனைவி (24:15-27-ல் குறிப்பிடப்பட்டு இருக்கிறது) கி.மு. 597-ல் பாபிலோனியரால் சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்ட 10,000 யூதர்களில் ஒருவராக இருந்தனர். பாபிலோனுக்கு தென்கிழக்கு பகுதியில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படும் கேபார் நதியண்டையில் தெலாபீபில் வாழ்ந்திருந்தனர். நாடுகடத்தப்பட்டு இருந்த வேளையில், எசேக்கியேல் என் மனைவி செத்துப் போனாள் என எசேக்கியேல் 24:18-ல் குறிப்பிடுகிறார். ஆனால், எசேக்கியேலின் மரணத்தை அவரது புத்தகம் எங்கும் குறிப்பிடவில்லை. மாறாக, ரபீமார்களின் பாரம்பரியம் கி.மு.560-ல் இஸ்ரவேல் இளவரசனின் விக்கிரகாரதனையை எசேக்கியேல் எதிர்த்த போது அவன் கைகளில் மரித்துப் போயிருக்கலாம் எனத் தெரிவிக்கிறது.*

*முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாந்தேதியிலே, கேபார் நதியண்டையிலே - பாபிலோனில் (கல்தேயர் தேசம்) சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது, கி.மு. 593-ல் எழுதும் ஆசிரியர் தீர்க்கதரிசனம் உரைக்க அழைப்பைப் பெற்றார். யோயாக்கீம் ராஜா அரசாண்ட ஐந்தாம் ஆண்டில் கி.மு.597-ல் இது சம்பவித்தது. எசேக்கியேல் தனது தீர்க்கதரிசன வார்த்தைகளை குறித்து அதிகமான இடங்களில் கி.மு.597-ல் இருந்து உள்ள நாட்களில் எனக் (8:1;20:1; 24:1; 26:1; 29:1; 30:20; 31:1;) குறிப்பிடுகிறார். எசேக்கியேலின் தீர்க்கதரிசன வார்த்தைகளின் காலம் - எருசலேம் கடைசியாக வீழ்ந்த கி.மு.*

*586-க்கு பிறகு 14 ஆண்டுகள் கழித்து கி.மு. 573/72-ல் நடைபெற்றதாக எசே.40:1-ல் குறிப்பிடுகிறார். இப்படி குறிக்கப்பட்ட காலவரிசையில், கடைசி நாட்கள் கி.மு. 571/70 என வசனம் 29:17-ல் காண்கிறோம். 1-28-ஆம் அதிகாரங்களில் நாம் காணும் தீர்க்கதரிசனங்கள் கால வரிசைப்படி வரிசையாக இருக்கின்றன. 29:1-க்கு நாம் வரும் போது, 26:1-க்கு முந்திய வருடத்திற்கு பின்செல்கிறார். எனினும் 30:1-லிருந்து மீண்டும் கண்டிப்புடன் காலவரிசையைப் பின்பற்றுகிறார் (31:1; 32:1,17).*

## பிண்ணனி மற்றும் அமைப்பு

*வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஒருங்கிணைந்து இருந்த இஸ்ரவேலரின் ராஜ்யம் - சவுல், தாவீது மற்றும் சாலமோனின் தலைமையில் 110 வருடங்கள் நீடித்தது (கி.மு. 1043-931). அதன்பின் பிரிந்த ராஜ்யம், இஸ்ரவேல் (வடக்கு) மற்றும் யூதா (தெற்கு) கி.மு. 931-லிருந்து கி.மு. 722/21 வரை நீடித்தது. அசீரியர்களுடனான போரில் இஸ்ரவேல் தோல்வியடைந்தது. அதனால், எஞ்சியிருந்த யூதா ராஜ்யம் 135 வருடங்கள் நீடித்தது, அதுவும் பாபிலோனின் படையெடுப்பினால் கி.மு. 605-586-ல் வீழ்ந்தது. அமைப்பினை நெருக்கமாக பார்க்கும் போது, போர் தந்திரங்களுக்கு ஏதுவாகவே அனேக அம்சங்கள் இருப்பதைக் காணலாம். அரசியல் அமைப்பில், அசீரியர்களின் பெருமிதமாக இருந்த இராணுவம் கி.மு. 626-ற்குப் பின் வீழ்ந்தது. உடன் தலைநகர் நினிவே பாபிலோனியர் மற்றும் மேதியர்களால் (காண்க நாகூம்) கி.மு. 612ல் அழிக்கப்பட்டது. புதிய பாபிலோனிய பேரரசு கி.மு.625-ல் மபோபொலாசார் தலைமைஏற்று சிம்மாசனத்தில் அமர்ந்ததும் பலம் பெற்றது, மேலும் எகிப்தின் பார்வோன் நெகோ II தலைமையின் கீழ் எந்த ராஜ்ஜியங்களை எல்லாம் கைப்பற்ற முடியுமோ அவற்றையெல்லாம் கைப்பற்றியது.*

*பாபிலோன் (கல்தேயர்) அசீரியா தேசத்தை கி.மு. 612-605ல் அடித்து நொறுக்கி, எகிப்திற்கு விரோதமாக தீர்மானிக்கும் வெற்றியை கி.மு.605-ல் கர்கேமிசிலே பெற்றது, பாபிலோனியர்களின் நாளாகமத்தின்படி பார்ப்போமானால், ஒருவரையும் தப்ப விட்டுவிடவில்லை எனக் காண்கிறோம். கி.மு.605-ல் நெபுகாத்நேச்சாரின் தலைமையின் கீழ் பாபிலோன் எருசலேமைக் கைப்பற்றி பிடிக்கப்பட்டவர்களை நாடு கடத்தியது, அவர்களில் ஒருவர் தான் தானியேல் (தானியேல்1:2). கி.மு. 598 டிசம்பர் காலத்தில் எருசலேமை முற்றுகையிட்டார், மார்ச் 16, கி.மு.597-ல் முற்றிலும் கைப்பற்றினார். இந்த முறை யோயாக்கீம் மற்றும் 10,000 பேருடன், எசேக்கியேலையும் சிறைபிடித்தார் (2ராஜா. 24:11-18). கி.மு. 586-ல் எருசலேம் இறுதியாக அழிக்கப்பட்டு, யூதா தோற்கடிக்கப்பட்டு, மூன்றாவது நாடு கடத்தப்படும் சம்பவம் நிறைவேறியது.*

*கர்த்தரைப் பின்பற்றுவதில், யோசியா ராஜா (கி.மு. 640-609-ல் யூதாவில் அனேக சீர்திருத்தங்களைச் செய்தார் (2நாளா.34). சோகமான விஷயம் என்னவென்றால், அவருடைய முயற்சி அதிகம் இருந்தபோதிலும், யூதர்களின் விக்கிர ஆராதனை அவர்களை அதிகமாய் ஆட்கொண்டிருந்தது - அதாவது எடுக்கப்பட்ட சீர்திருத்தங்களின் பலன் மொத்தத்தில் "மேலோட்டமானதாகவே" இருந்தது. எகிப்திய இராணுவம் யோசியவைக் கொன்று, கி.மு.609-ல் இஸ்ரவேலைக் கடந்து சென்றது, யூதா பாவத்தில் மூழ்கி, யோவகாஸ் (கி.மு.609), யோயாக்கீம் (கி.மு.609-598) யோயாக்கீமின், மற்றும் சிதேக்கியா (கி.மு.597 -586) தலைமையில் நியாயத்தீர்ப்பிற்கு நேராகச் சென்றது. உள்நாட்டு விவகாரத்தில், எசேக்கியேல் மற்றும் அவருடன் நாடு கடத்தப்பட்ட 10,000 பேர், பாபிலோனில் நாடுகடத்தப்பட்டவர்களாக வாழ்ந்தனர் (2ராஜா.24:14). கைதிகளுக்கு இருப்பதைக் காட்டிலும் மேலான சில உரிமைகள், அதாவது உழுது பயிர்செய்தல் போன்ற சாதகமான சூழ்நிலையில்*

*குடியேற்றக்காரர்களாக வாழ்ந்தனர் (எரே.29). எசேக்கியேலுக்கு என சொந்தவீடும் இருந்தது என 3:24; 20:1-ல் காண்கிறோம்.*

*தீர்க்கதரிசன ரீதியாக, கள்ள தீர்க்கதரிசிகள் நாடுகடத்தப்பட்டு வந்தவர்களிடம் சீக்கிரத்தில் யூதா தேசத்திற்கு திரும்புவீர்கள் என்று சொல்லி வஞ்சித்து வந்தனர் (13:3,16; எரே.29:1). கி.மு. 593-585 வரை எசேக்கியேல் அவர்களுக்கு அருமையான எருசலேம் பட்டணம் நிர்மூலமாக்கப்படும். அதினால், அவர்கள் உடனடியாக் நாடு திரும்பக்கூடிய நம்பிக்கை இல்லை என எச்சரித்து வந்தார். கி.மு.585-ல் எருசலேமில் இருந்து பாபிலோனியர் கண்களுக்குப்படாமல் தப்பித்து வந்த ஒருவன், எசேக்கியேலை வந்தடைந்து, எருசலேம் பட்டணம் ஆறு மாதங்களுக்கு முன்பே கி.மு.586-ல் சரிந்து விழுந்து விட்டது என்பதனை அறிவித்தான் (33:21). இது அன்னிய தேசத்தில் இருந்தவர்களுக்கு சீக்கிரத்தில் தங்கள் தேசத்திற்கு திரும்புவோம் என்றிருந்த கொஞ்ச நம்பிக்கையைக்கூட தவிடுபொடியாக்கிவிட்டது. அதினால் எசேக்கியேலின் பின்னால் வரும் தீர்க்கதரிசனங்கள் - எதிர்காலத்தில் இஸ்ரவேல் தன் சொந்த தேசத்திற்குச் செல்ல மீட்டெடுக்கப்படும் என்பது குறித்தும், மேசியாவின் இராஜ்யத்தில் உண்டாகும் இறுதி ஆசீர்வாதங்களைக் குறித்து மட்டுமே பேசியது.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*''இதுவே கர்த்தருடைய மகிமை'' என்பதே எசேக்கியேல் புத்தகத்தின் மைய்ய கருத்து; இதனை 1:28; 3:12,23; 10:4, 18; 11:23; 43:4,5; 44:4 வசனங்களில் காண்கிறோம். தேவனது அன்பின் வெளிப்பாட்டின் மத்தியிலும் இஸ்ரவேல் மற்றும் யூதாவின் கீழ்ப்படியாமையை சித்திரமாக விளக்குவதும் இந்த புத்தகத்தின் உள்ளடக்கமாக இருக்கிறது (அதிகாரம் 23 மற்றும் 16ஐ காண்க). இஸ்ரவேல் கனி கொடுப்பதும் அதன் பலன், அவர் ஆசீர்வதிக்க இயன்றதாக இருக்க வேண்டும் என்பதே*

தேவனுடைய விருப்பம் என்பதை இது காட்டுகிறது. தீப்பற்றி எரிந்த திராட்சைச்செடி போன்று (அதிகாரம் 15), யூதா சுய இச்சையில் இழுப்புண்டு விழுந்தது, யூதாவை நியாயத்தீர்ப்பிற்குள்ளாகச் செல்லும்படி ஆயத்தப்படுத்தியது. இஸ்ரவேலரின் விக்கிரக ஆராதனை மற்றும் அதினால் விளைந்த விளவுகள் குறித்து வேதாகமத்தில் ஏராளமான குறிப்புகள் இருக்கின்றன் - உதாரணமாக, ''பெலத்தியா செத்தான்'' (எசே.11:13) என்ற வார்த்தையின் வெளிப்பாடு, ஜனங்களுக்கு ஒட்டுமொத்த பேரழிவு நேர்வதின் அடையாளமாக இருந்தது.

ஆவிக்குரிய நியதிகளை/ விதிகள (Principles) பல அழகிய காட்சிகள் சித்தரிக்கின்றன. அவைகளில் ஒன்று எசேக்கியேல் புஸ்தகச் சுருளை உண்பது (அதிகாரம் 2). நான்கு தேவதூதர்களின் முகங்கள் "வலதுபக்கத்தில் நாலும் மனுஷமுகமும், சிங்கமுகமும், இடதுபக்கத்தில் நாலும் எருது முகமும் கழுகு முகமுமாயிருந்தன'' (1:10). "முடிதிருத்தம் செய்யும் காட்சி (5:1-4). 8:10-ல் நாம் காணும் "சுவற்றில் சித்திரம் தீட்டப்பட்டிருந்த உருவங்கள் காட்சி'' (8:10) மூலம் நாம் அறிவது தேவன் அவரது வாசஸ்தலம் பரிசுத்தமாக இருக்க விரும்புகிறார், அசுத்தமானதாக அல்ல என்பதைக் காட்டுகிறது. கெருபீன்கள் நடுவில் இருக்கும் அக்கினித்தழல் நியாயத்தீர்ப்பைச் சித்தரிக்கிறது (10:2,7).

இறையியல் கருப்பொருளில் மிக முக்கியமானதாக - தேவனுடைய பரிசுத்தமும் இறையாண்மையும் இருக்கின்றன - இக்கருப்பொருள் யூதாவின் பாவங்கள் (1:26-28) பிண்ணனியில் தேவனுடைய பிரகாசமான மகிமையைய சித்தரித்துகாட்டி நமக்கு தேவனுடைய பரிசுத்தத்தின் மேன்மையினை எடுத்துக் காட்டப்படுகிறது, இக்கருத்தை அதிகமாக அதிகாரங்கள் 8-11 மற்றும் 43:1-7ல் காணலாம். அனைவரும் ''நானே கர்த்தர் என்று அறிந்து கொள்ளுங்கள்'' என்பதினால் தேவனுடைய மகிமையான

வெற்றி இவ்வார்த்தைகளுடன் தொடர்புடையது என நாம் அறிந்து கொள்கிறோம். தேவன் தனது செயல்பாடுகளை அங்கீகரிக்கும் அடையாளம் ''நானே கர்த்தர் என்று அறிந்து கொள்ளுங்கள்'' என்பது. இந்த சொற்றொடர் 60 தடவைக்கும் மேலாக இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, பொதுவாக நியாயத்தீர்ப்புடன் சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது (6:7; 7:4). ஆனால், சில இடங்களில் மீட்டுஎடுப்பேன் என்ற வாக்குதத்தத்துடன் சொல்லப்பட்டுள்ளது (34:27; 36:11,38; 39:28). பிண்ணனியில் தேவன் நியமித்திருக்கும் நிகழ்ச்சிகளை தேவனுடைய தூதர்கள் செயல்படுத்துவது இப்புத்தகத்தின் மற்றொரு அம்சம் (1:5-25;10:1-22). நீதியைப் பின்பற்றி நடக்கவேண்டும் தவறினால் ஒவ்வொருவரும் கணக்கு கொடுக்க வேண்டும் என்பது மற்றொரு முக்கியமான கருப்பொருள் (18:3-32).

இஸ்ரவேல் தேசத்திலும் (2:3-7; 8:9,10) மற்ற தேசங்களிலும் (அதிகாரங்கள் 25-32) பாவம் நிறைந்துள்ளது என்பதனை எசேக்கியேல் சுட்டிக்காட்டுகிறார். பாவத்துக்காக நியாயம் தீர்க்க வேண்டி எழும்பிய தேவ கோபாக்கினையின் அவசியத்தைக் குறித்தும் பேசுகிறார். எருசலேம் முற்றுகையிடப்பட்டதில் இருந்து தப்பிக்க மனுஷன் எடுக்கும் உபாய தந்திரங்களினால் தேவன் மனமடிவடைந்தார் எனவும் எடுத்துக்காட்டுகிறார் (12:1-13; எரே. 39:4-7) மேலும் ஆபிரகாமின் உடன்படிக்கைக்குரிய ஜனங்களுக்கு (ஆதி. 12:1-3) அளிக்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில், உடன்படிக்கையின் தேசத்தில் ஆபிரகாமின் சந்ததியினர் தேவனுடைய கிருபையினால் மீட்டு எடுக்கப்படுவது நிறைவேறினது என்பதைக் குறித்தும் பேசுகிறார் (அதிகாரங்கள் 34, 36-48; ஆதி.2:7). மீந்திருக்கும் இஸ்ரவேலர்களை பாதுகாப்பேன் என்ற தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுதலால், தேவன் அவர் அளித்த வாக்குதத்தங்களை

நிறைவேற்றி, அவரது வார்த்தையைத் தீட்டுப்படாதபடிக்குப் பாதுகாக்கிறார் என்பதைக் கற்றுக் கொள்கிறோம்.

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

ஏசாயா, எரேமியாவைப்போல் எசேக்கியேலும் அதிக அளவில் உருவக மொழியினைப் பயன்படுத்துகிறார். இதினால், எசேக்கியேலின் படைப்பில் நேரடியான அல்லது அடையாளப்பூர்வமான அர்த்தம் எடுத்துக்கொள்வதா என்ற கேள்வி எழுகிறது. உதாரணமாக, 3:25-ல் நாம் காணும் இதோ, மனுபுத்திரனே, உன்மேல் கயிறுகளைப்போட்டு, அவைகளால் உன்னைக் கட்டப்போகிறார்கள் என்பது; 8:1-3-ன்படி, எருசலேமிற்கு தீர்க்கதரிசி கொண்டு செல்லப்பட்டாரா? அதிகாரம் 14:22,23-ல் பொல்லாதோர் மரணத்தில் இருந்து தப்பித்தனர் என்றும் சில தேவபக்தியுள்ளவர்கள் படையெடுப்பின் போது மரித்தனர் என 21:3,4ல் - இருக்கும் போது எப்படி அதிகாரம் 18ல் தனிநபரின் நியாயத்தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது? தேவன் தமது உண்மையுள்ள ஊழியனின் மனைவி மரிக்க (24:15-27) எப்படி இடம் கொடுத்தார்? அதிகாரங்கள் 25-32ல் சொல்லப்பட்டிருக்கும் அன்னிய தேசங்களின் மீதான சில நியாயத் தீர்ப்புகள் எப்பொழுது நிறைவேறும்? 40-46 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் தேவாலயம் உண்மையானதா அப்படியானால் அதன் தோற்றம் என்ன? சபையுடன் தேவன் செயல்முறைத் திட்டங்களுக்கும் இஸ்ரவேலரின் எதிர்காலத்தைக் குறித்து தேவன் செய்திருந்த வாக்குத்தங்களுக்கும் எப்படி தொடர்பு ஏற்பட்டிருக்கிறது? போன்றவை நமக்கு முன் விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்களில் சில.

## சுருக்கம்

இப்புத்தகத்தினை பழிவாங்கல்/ கண்டனம் என்பதுவும் ஆறுதல்/ மீட்டமைத்தல் என்ற இரண்டு பிரிவுகளின் கீழ் பிரிக்கலாம்.

*இன்னும் விளக்கமாகப் பார்த்தால், நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது, எருசலேமின் இடிபாடுகளைக் குறித்த தீர்க்கதரிசங்களை அதிகாரங்கள் 1-24ல் காண்கிறோம். இரண்டாவது, அண்டைய தேசங்களைப் பழிவாங்குவது குறித்த தீர்க்கதரினசங்களை அதிகாரங்கள் 25-32ல், உடன் அதில் 28:25,26 ல் தேவன் எதிர்காலத்தில் மீட்டுஎடுப்பார் என்பதற்கான சிறிய குறிப்பையும் காண்கிறோம். மூன்றாவது, மாற்றத்திற்கான ஓர் அதிகாரம், அதிகாரம் 33 - இந்த அதிகாரம்; இஸ்ரவேலை மனம் திரும்ப அழைத்து அறிவுரை கூறுகிறது. இறுதியாக தேவன் இஸ்ரவேலை எதிர்காலத்தில் மீட்டமைப்பார் என்ற எதிர்ப்பார்ப்பினை நான்காவது பிரிவில் காண்கிறோம் (அதிகாரங்கள் 34-38).*

## ***I.எருசலேமின் இடிபாடுகளைக் குறித்த தீர்க்கதரிசங்கள் (1:1-3:27)***

### ***அ. எசேக்கியேலை ஆயத்தப்படுத்தி பொறுப்பில் அமர்த்துதல் (1:1-3:27)***

*1.எசேக்கியேலுக்கு தேவன் வெளிப்படல்(1:1-28)*

*2.எசேக்கியேலுக்கு வரும் தெய்வீக கட்டளை (2:1-3:27)*

### ***ஆ. எருசலேமின் தண்டனையை பிரகடனப்படுத்துதல் (4:1-24:27)***

*1. நியாயத்தீர்ப்பு வருகின்றது என்பதற்கான அடையாளங்கள் (4:1 - 5:4)*

*2. நியாயத்தீர்ப்பு குறித்தச் செய்திகள் (5:5-7:27)*

*3. பட்டணத்திலும் ஆலயத்திலும் காணப்படும் அருவருப்பு*

*குறித்த தரிசனங்கள் (8:1 -11:25)*

*4. நியாயத்தீர்ப்பு குறித்த விளக்கங்கள் (12:1 -24:27)*

***II.* தேசங்கள் பழிவாங்கப்படும் என்பதற்கான தீர்க்கதரிசனங்கள் (25:-32:32)**

*அ. அம்மோன் (25:1-7)*

*ஆ. மோவாப் (25:8-11)*

*இ. ஏதோம் (25:12-14)*

*ஈ. பெலிஸ்தியா (25:15 - 17)*

*உ. தீரு (26:1 -28:19)*

*ஊ. சீதோன் (28:20—24)*

*தனிக்குறிப்பு: இஸ்ரவேல் மீட்டெடுக்கப்படும் (28:25,26)*

*எ. எகிப்து (29:1- 32:34)*

***III.* இஸ்ரவேலின் மனந்திரும்புதலுக்காக முன் ஏற்பாடுசெய்தல் (33:1-33)**

***IV.* இஸ்ரவேல் மீட்டெடுக்கப்படும் என்பதற்கான தீர்க்கதரிசனங்கள் (34:1 - 48:35)**

***அ.* இஸ்ரவேலை தேசத்திற்கு மீண்டும் கொண்டுவருதல் *(34:1 - 37:28)***

*1. மெயான மேய்ப்பன் வாக் குத த் தமாக அளிக்கப்படுதல் (34:1-31)*

*2. தேசங்களுக்குரிய தண்டனை வழங்கப்படுதல் (35:1 - 36:7)*

*3. மீட்டெடுக்கப்படுதலின் நோக்கங்கள் (36:8 -38)*

*4. மீட்டமைக்கப்படுதலின் காட்சிகள் - உலர்ந்த எலும்புகளும் இரண்டு குச்சிகளும் (37:1-28)*

**ஆ. இஸ்ரவேலின் எதிரிகள் தேசத்தில் இருந்து அகற்றப்படுதல் (38:1 - 39:29)**

*1. இஸ்ரவேலைக் கொள்ளையடிக்க கோகின் படையெடுப்பு (38:1 -16)*

*2. இஸ்ரவேலைப் பாதுகாக்க தேவனின் தலையீடு (38:17 - 39:29)*

**இ. இஸ்ரவேலில் மெய்யான ஆராதனையை மறுசீரமைத்தல் (40:1 - 46:24)**

*1. புதிய தேவாலயம் (40:1 - 43:12)*

*2. புதிய ஆராதனை (43:13 - 46:24)*

**ஈ. இஸ்ரவேலில் தேசம் மறுபடியும் பங்கிடப்படுதல் (47:1 - 48:35)**

*1. ஆற்றின் அமைப்பு (47:1 -12)*

*2. கோத்திரங்களின் அமைப்பு (47:13 - 48:35)*

# தானியேலின் புத்தகம்

## *தலைப்பு:*

*எபிரேய வழக்கத்தின்படி, இந்த புத்தகம் - தேவனிடத்தில் இருந்து தொடர்ச்சியாக வெளிப்படுத்தல்களைப் பெற்று வந்த ஒரு தீர்க்கதரிசியின் பெயரையே தலைப்பாகப் பெற்றுள்ளது. பாபிலோன் தேசத்தில் சிறைப்பட்டிருந்த 70 ஆண்டு கால செயல்பாடுகள் முழுவதையும் பாலம் போல் தானியேல் ஒன்று சேர்த்துள்ளார் (கி.மு.605 -536; காண்க 1:1 மற்றும் 9:1-3). புத்தகத்தில் இருக்கும் 12 அதிகாரங்களில், 9 அதிகாரங்கள் தரிசங்னகள்/சொப்பனங்கள் மூலம் பெறப்பட்ட வெளிப்படுத்தல்களே நிறைந்துள்ளன. தானியேல், தேவனின் பேச்சாளராக - யூத மற்றும் புறஜாதியாருக்கு - தேவனின் தற்போதைய மற்றும் எதிர்காலத் திட்டங்களை அறிவித்தார். புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தல் புத்தகம் எப்படி இருக்கிறதோ அப்படியே பழைய ஏற்பாட்டிற்கு தானியேல் புத்தகம் தீர்க்கதரிசன வார்த்தைகள் மற்றும் தீமையை நன்மை வெல்லும் என்பதை எடுத்துச் சொல்லும் புத்தகமாக இருக்கின்றது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*"தேவன் என் நியாயாதிபதி" என்பதே தானியேல் என்னும் வார்த்தையின் அர்த்தம். அனேக வசனங்கள் தானியேல் தான் இப்புத்தகத்தின் ஆசிரியர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன (8:15,27; 9:2; 10:2,7; 12:4,5). வசனம் 7:2-லிருந்து தன் சுயசரிதையை முன்னிலையில் எழுதினார் - பழைய ஏற்பாட்டில் நாம் காணும் இதர 3 தானியேல்களைக் காட்டிலும் (1நாளா.3:1; எஸ்றா 8:2; நெகேமியா10:6) வேறுபட்டவராக நாம் இவரைக் காணவேண்டும். பதின்ம வயதில் இருக்கும்போதே தானியேல் தன்னுடைய உயர்குடியில் இருந்து*

*பாபிலோனுக்கு கடத்தப்பட்டு, பாபிலோனுக்கு கொண்டுவரப்படும் யூதர்களுக்கு, பாபிலோனிய கலாச்சாரத்தை மனதில் புகட்ட வல்லவனாக தானியேல் விளங்க கொண்டு வரப்பட்டான். அங்கே தானியேல் தன் வாழ்நாளில் நீண்ட நெடுங்காலத்தை (85 வருடங்கள் அல்லது அதற்குமேல்) கழித்தார். நாடுகடத்தப்பட்டு வந்தவராக இருந்தாலும், தேவனை அவரது சொந்த குணாதிசயத்தாலும் சேவையினாலும் மகிமைப்படுத்தி அதிகமான நன்மைகளை அனுபவித்தவராக வாழ்ந்தார். ராஜா இவரை பதவியில் நியமித்தபடியால், சீக்கிரத்தில் ராஜ தந்திரி என்னும் அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்டார், மாத்திரமல்ல அன்றைய உலகத்தில் இருந்த மா வல்லரசுகளான பாபிலோன் (2:48) மற்றும் மேதிய-பெர்சிய (6:12) தீர்க்கதரிசியாக சேவை செய்தபடியால், ராஜாக்களின் நம்பிக்கைக்குரியவராக வாழ்ந்தார். இந்த புத்தகத்தின் ஆசிரியர் தானியேல் தான் என கிறிஸ்துவும் மத்தேயு 24:15-ல் உறுதியாகச் சொல்கிறார்.*

*தானியேல்10:1ல் நாம் காணும் காலகட்டத்தைக் காட்டிலும் அதிகமான நாட்கள் தானியேல் வாழ்ந்தார் (கி.மு.536). இந்த நாட்களுக்கு பின்பாக மற்றும் கி.மு.530-க்கு முன்பாக தானியேல் இந்த புத்தகத்தை எழுதி இருக்க கூடும். தானியேல் வசனம்2:4-லின் பின்பகுதி, 7:28-ல் புறஜாதியாரின் உலக வரலாற்றைக் குறித்து தீர்க்கதரிசனமாக தானியேல் சொன்ன வார்த்தைகள், முதலில் அன்றைய சர்வதேச வர்த்தக மொழியாக இருந்த - அராமிக் மொழியில் எழுதப்பட்டிருந்தது. எசேக்கியேல், ஆபகூக், எரேமியா மற்றும் செப்பனியா தீர்க்கதரிசிகள், தானியேல் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள், சமகாலத்தவர்கள் எனலாம்.*

## ***பிண்ணனி மற்றும் அமைப்பு***

*பாபிலோன் (கல்தேயர்) எருசலேமை வெற்றிகொண்டு அங்கிருந்தோரை நாடு கடத்தின கி.மு.605 தான் இந்த புத்தகத்தின் ஆரம்பம். இந்த நாட்களில் தான் தானியேலும் அவரது 3 நண்பர்களும் அன்னிய தேசத்திற்கு அனுப்பபட்டனர். அதற்கு பின் தொடர்ச்சியாக கி.மு. 539 வரை பாபிலோனிய ராஜ்யத்தின் அழிவு காலம் எனலாம். மேதிய-பெர்சியர்களின் கைஓங்கி, பாபிலோனியரை தோற்கடித்திருந்தனர் (5:30,31), அதற்கும் பின்னான வருடங்கள் கி.மு.536 வரைகூட சரிவுற்றது என்பதை 10:1ஆம் வசனத்தில் காண்கிறோம். தானியேல் பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டதற்குப் பின், எருசலேமை பாபிலோனின் வெற்றியாளர்கள் இரண்டு கட்டங்களில் மேற்கொண்டனர் (கி.மு.597, மற்றும் கி.மு.586 ). இந்த இரண்டு வெற்றிகளிலும் அதிக அளவிலான யூதர்களை சிறைபிடித்து, தங்கள் தேசத்திற்கு கொண்டு சென்றனர். வசனம் 6:10-ல் "தன் வீட்டுக்குள்ளே போய், தன் மேலறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க" என நாம் வாசிப்பதில் இருந்து - எருசலேமில் இருந்து கொண்டு செல்லப்பட்டு 70 வருடங்களுக்கு மேலாகியும், எருசலேம் குறித்த தானியேலின் பேரார்வத்தைக் காண்கிறோம். தானியேலின் பின்னணி குறித்து எரேமியா குறிப்பிடும்போது யூதா சிறைபிடிக்கப்படுவதற்கு முன் யூதர்களை ஆட்சிசெய்த 5 ராஜாக்களைக் குறிப்பிடுவதற்கு பதிலாக 3 ராஜாக்கள் - யோசியா, யோயாக்கீம் மற்றும் சிதேக்கியா குறித்து மட்டுமே குறிப்பிடுவதால், தானியேல் குறித்து பகுதியளவில் மட்டுமே எரேமியா சொல்லியிருக்கிறார் எனலாம். எசேக்கியேல் தீர்க்கதரிசியும் தானியேலைக் குறித்து (14:14,20; 28:3) தானியேல் - நீதிமான் மற்றும் ஞானவான் எனக் குறிப்பிடுகிறார். எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் எபிரேயர் 11:33 ல் "சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்" என எபிரேய ஆசிரியர் தானியேலை குறிப்பாக உணர்த்துகிறார். எரேமியா, ஆபகூக் மற்றும் செப்பனியா போன்ற தீர்க்கதரிசிகள்*

*தொடர்ச்சியாக எச்சரிப்பு கொடுத்திருந்தும், தேசத்தில் மனந்திரும்புதல் இல்லாமல் - யூதா தேசம் நீண்டகாலம் பாவத்தில் நிலைத்து இருந்ததால், இறுதியில் தேவ கோபாக்கினைக்கு ஏதுவானது. ஆரம்ப நட்களில், தேவனின் உண்மையுள்ள தீர்க்கதரிசி - ஏசாயா - ஏனைய உடன் தீர்க்கதரிசிகள் - வரவிருக்கும் அபாயத்தை குறித்து எக்காளம் போல் - உரக்கச் சொல்லி வந்தார்கள். கி.மு.625-ல், அசீரியர்களின் பெலன் குன்றி வந்த வேளையில் புதிதாக வந்த பாபிலோனியர்கள் வெற்றி சிறக்க ஆரம்பித்தனர். அவர்கள் குவித்த வெற்றிகள்: 1. கி.மு.612-ல் அசீரியர்களை அவர்களது தலைநகரம் நினிவேயுடன் பிடித்தனர்; 2. எகிப்தை அதனைத் தொடர்ந்து வரும் வருடங்களில் கைப்பற்றினர்; 3. கி.மு.605-ல் யூதாவை, அவர்கள் எருசலேமை வெற்றி கொண்ட 3 வெற்றிகளின் முதல் வெற்றியின் போது கைப்பற்றினர், அடுத்த வெற்றி -கி.மு.597, கி.மு. 586 வருடங்களில்; 4. நாடு கடத்தப்பட்ட முதல்குழுவில் தானியேல் இருந்தார். எசேக்கியேல் தொடர்ந்து கி.மு.597-ல் நாடுகடத்தப்பட்டார்.*

*வடக்கு இராஜ்யமான இஸ்ரவேல் அசீரியர்களின் கைகளில் ஆரம்பத்திலேயே கி.மு.722-ல் வீழ்ந்தது. யூதா சிறைப்பட்டுச் சென்றதுடன் நியாயத்தீர்ப்பு பூரணமானது. நூற்றாண்டுகள் பலவற்றில் அடுத்தடுத்து வரும் காலகட்டங்களில் ஆளுகை செய்யும், அதனை மிகப்பெரிய வெற்றி சிறந்தவர், மேசியாவின் வருகையில் புறஜாதியாரின் ஆளுகை கவிழ்த்துப் போடப்படும் என்ற தேவனுடைய வார்த்தை பாபிலோனில் இருக்கும் போது தானியேலுக்கு வெளிப்பட்டது. பின் மேசியா, அனைத்து சத்துருக்களையும் தோற்கடித்து, அவருடைய உடன்படிக்கையின் ஜனங்களை அவரது மகிமை நிறைந்த ஆயிரம் வருஷ அரசாட்சியில் ஆசீர்வதித்து உயர்த்துவார் என்பதுவும் வெளிப்படுத்தப்பட்டது.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

தேவன் அவர்களுக்காக எப்படிப்பட்ட தீர்மானத்தை வைத்திருக்கிறாரோ, அவைகளை அன்னிய தேசத்தில் இருந்த யூதர்களுக்கு தெரிவித்து, உலகத்தில் அன்னிய தேசத்தாரின் ஆதிக்கம் இருந்தபோது யூதர்களை உற்சாகப்படுத்தும்படிக்கே தானியேல் புத்தகம் எழுதப்பட்டது. தேவனுடைய இறையாட்சியே சர்வ தேசத்தினையும், ராஜாக்களின் செயல்களுக்கும் மேலோங்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்; இறுதியில் அவர்கள் ஆட்சிக்கெல்லாம் பதிலாக மெய் ராஜாவின் ஆட்சி அமையும் என்பதே இப்புத்தகத்தின் மற்ற எல்லா கருப்பொருளைக்காட்டிலும் முன்னணியில் நிற்கிறது. திறவுகோலான வசனங்கள் 2:20-22,44 ( 2:29,37;4:34-35; 6:25-27). தானியேல் 1ல் நாம் காணும் இஸ்ரவேலின் வீழ்ச்சியினை அனுமதித்ததால் தேவன் தோல்வியை சந்தித்ததாக அர்த்தம் அல்ல, அவருடைய உயர்த்தப்பட்ட கிறிஸ்து, அவருடைய ராஜாவினை உலகிற்கு பூரணமாக வெளிப்படுத்தும் அவரது நிச்சயமான நோக்கம் நிறைவேறுவதின் ஒரு பகுதியாகவே அது நிறைவேறியது.

இஸ்ரவேலை அன்னிய தேசத்தார் ஆளுகை செய்ய, அவருடைய இறையாண்மைக்கு உட்பட்டு அனுமதித்தார் - அதாவது, கி.மு.605-539 வரை பாபிலோன், 539-331 வரை மேதிய-பெர்சியா, 331-146 வரை கிரீஸ் தேசம், கி.மு.146-ல் இருந்து கி.பி. 476 வரை ரோமர் இஸ்ரவேலை ஆளுகை செய்ய அனுமதித்தார். அப்படியே இது கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டும் உள்ள காலம் வரைத் தொடர்கிறது. அதிகாரம் 2 மற்றும் 7-ஐ காண்பீர்களானால், இந்த அன்னிய தேசத்தாரின் அதிகாரங்கள் இஸ்ரவேல் மேல் ஓங்கி இருந்த விபரங்கள் தெரிய வரும். இக்கருப்பொருள் இஸ்ரவேலுக்குண்டான தோல்வி அனுபவத்திலும், அதிகாரம் 8-12ல் நாம் காணும் தேவராஜ்யத்தின் ஆசீர்வாதத்திலும் அடங்கியிருக்கக் காண்கிறோம் (2:35,45; 7;27). சகல தேசத்தாரின் மீதும்

மேசியா மகிமை பொருந்தினவராய் ஆட்சிசெய்வார் (2:35,45; 7:27). அந்நாளிலே தேவனின் ராஜரீக கட்டுப்பாடு வெளிப்படும் என்பதே இப்புத்தகத்தின் கருப்பொருளின் திறவுகோலான அம்சம். அவர் 2-ஆம் அதிகாரத்தில் ஒரு கல்லை போலவும், அதிகாரம் 7-ல் மனுஷனுடைய குமாரன் போலவும் ஒப்பிடப்பட்டிருக்கிறார். கூடுதலாக, 9:26 வசனத்தில் அவரே "அபிஷேக்கிக்கப்பட்டவர்" (மேசியா) எனக் குறிப்பிடப்பட்டுள்ளார். அதிகாரம் 9-ல் தானியேலின் காலத்தில் இருந்து கிறிஸ்துவின் ராஜ்யம் வரைக்குமான காலகட்டத்தின் கட்டமைப்பு விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது.

தேவன் ஆட்சி செய்கிறார் என்பது உடன் அவருடைய வல்லமை அற்புதங்கள் மூலமாக வெளிப்படுகிறது என்பதே தானியேல் புத்தகத்தில் இழையோடி ஓடிக்கொண்டிருக்கும் இரண்டாவது கருப்பொருள். தேவன் தமது நோக்கத்தினை நிறைவேற்ற அற்புதங்களை பயன்படுத்துகிறார் என்ற கருப்பொருள் ஆறு பகுதிகளாக காணப்படுகிறது. அவற்றில் ஒரு பகுதி தானியேலில் காணப்படுகிறது. இதர காலங்கள் 1) சிருஷ்டிப்பும் வெள்ளமும் (ஆதி.1-11); 2) ஐந்து ஆகமங்களும் மோசேயும் (ஆதி.12-உபாகமம்) 3) எலியாவும் எலிசாவும் (1ராஜா.17 - 2ராஜா.13) 4) இயேசுவில் அப்போஸ்தலர்களும் (சுவிசேஷ புத்தகங்கள், அப்போஸ்தல நடபடிகள் புத்தகம்) மற்றும் இயேசுவின் இரண்டாம் வருகையின் காலம் (வெளிப்படுத்தல்). தேவன், நித்தியமாக ஆளுகை செய்கின்றவர் மாத்திரமல்ல, அவருடைய சித்தத்தின்படி எதையும் செய்ய வல்லவர் (4:34,35). அற்புதங்கள் செய்ய வல்லவர், ஆதியாகமம் 1-ஆம் அதிகாரத்தில் அவர் சிருஷ்டிகராக இருந்து வெளிப்படுத்திய வல்லமையோடு ஒப்பிட்டுபார்க்கும் போது, இங்கே சொல்பவை எல்லாம் அவரின் வல்லமையின் மிகச்சிறிய அளவினையே வெளிப்படுத்துகின்றன. தேவன் தாமே சொப்பனங்களை வெளிப்படுத்தி, விளக்கம் அளித்து, அவரது சித்தத்தை

*வெளிப்படுத்தினார் என தானியேல் வரிசைப்படுத்தி தன்புத்தகத்தில் எழுதுகிறார் (அதிகாரங்கள் 2,4,7). ஏனைய அற்புதங்களாக 1) தேவன் அவர் சுவற்றில் எழுதியது - தானியேல் அதற்கு விளக்கம் அளிக்க உதவிய அற்புதம் (அதி.5); 2) எரியும் அக்கினி சூளையில் இருந்து 3 பேர்களை காப்பாற்றிய அதிசயம் (அதி.3); 3) சிங்ககுகையில் தானியேலை சிங்கங்களின் வாயில் அகப்படாமல் தப்புவித்த அதிசயம் (அதி.6); மற்றும் 4) இயற்கைக்கு அப்பாற்பட்ட தீர்க்கதரிசனங்கள் (அதிகாரங்கள் 2,7,8; 9-24 - 12:13).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*எதிர்காலத்தில் காத்திருக்கும் உபத்திரவம் மற்றும் ராஜ்யத்தின் வாக்குதத்தங்களுக்குரிய பகுதிகளுக்கு விளக்கம் அளிப்பது - விளக்கம் அளிப்பதில் உள்ள முக்கிய சவால்கள். அராமிக் மொழி ஆராய்ச்சி மற்றும் அகழ்வாராய்ச்சிகள் இப்புத்தகத்தில் எழுதியுள்ளவற்றின் நாட்களை உறுதிபடுத்தியிருந்தும், சில சந்தேகம் நிறைந்த (Skeptical) விளக்கம் அளிப்பவர்கள் - இந்த அற்புதங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் என்பதை அங்கீகரிக்க மனதில்லாமல் இருக்கின்றனர்; இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் பின்நாட்களின் இவற்றை கண்களால் கண்டவர் தன் கருத்தாக எழுதியுள்ளார் எனத் தெரிவிக்கின்றனர் - அவர்கள் அறிந்து கொள்ளவேண்டியது - தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டவைகள் - அதிகாரம் 11ல் உள்ளவற்றில் 100க்கும் மேலானவை ஏற்கெனவே நிறைவேறிவிட்டன. உண்மையில், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின் உள்ள ஏழு வருட நியாயத்தீர்ப்பின் காலம் தானியேல் 7:21,22;11:36-45; 12:1 வசனங்களிலும், கிறிஸ்து இஸ்ரவேலரையும் புறஜாதியாரையும் சேர்த்து செய்யப்போகும் ஆயிரம் வருட அரசாட்சி குறித்து - வெளி.20லும் தானியேல் கற்றுத் தருகிறார். புதிய வானம், புதிய பூமி, புதிய தலைநகர்- எருசலேமில் இந்த யுகம்*

*பரிபூரணமானதாக ஆயிரம் வருட அரசாட்சியில் இருக்கும். தானியேல் தீர்க்கதரிசனத்தையும் சேர்த்து, தீர்க்கதரிசன வார்த்தைகளுக்கு நேரடியான அர்த்தம் பார்க்கும்போது நமக்கு ஆயிரம் வருட ஆட்சிக்கு முந்தைய நாட்களுக்குரிய விஷயங்கள் பல நமக்கு கிடைக்கின்றன.*

*வாசிப்பவர்களுக்கு முன் நிற்கக்கூடிய ஏனைய சவால்கள்: எண்களுக்கு விளக்கம் அளித்தல் (1:12,20; 3:19;9:24-27); ''மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர்'' (7:13,14) என்று ஒருவரை அடையாளம் கண்டதில் உள்ள சவால்; 8:19-23-ல் சொல்லப்படும் உருவகத்தை வைத்து கடந்த காலத்தின் அந்தியோகஸ் என எடுத்துக்கொள்வதா அல்லது எதிர்காலத்தில் தோன்றவிருக்கிற அந்திகிறிஸ்து பற்றியதா? 9:24-27-ல் ''எழுபது வாரங்களுக்குரிய'' விளக்கம் அளிப்பது ஒரு சவால்; 11:21-35-ல் சொல்லப்பட்ட அந்தியோகஸ் குறித்து தான் 11:36-45-லும் சொல்லப்பட்டுள்ளதா அல்லது எதிர்காலத்து அந்திக்கிறிஸ்துவை பற்றிய தீர்க்கதரிசன வார்த்தைகளா? போன்றவை.*

## சுருக்கம்

### *I. தானியேலின் தனிப்பட்டவாழ்க்கை யின் பின்னணி (1:1-21)*

*அ. எருசலேம் தோற்கடிக்கப்படுதல் (1:1,2)*

*ஆ. யூதர்கள் பயிற்சி மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படுதல்1:3-7)*

*இ. சோதனையின் போது 4 நபர்களின் தைரியம் (1:8-16)*

*ஈ. நான்கு பேரும் ராஜரீக தலைமைப்பொறுப்பிற்கு தெரிந்தெடுக்கப்படல் (1:17-21)*

### *II. புறஜாதியார் மேற்கொண்டு ஆளுவார்கள் என்ற தீர்க்கதரிசன வார்த்தை (2:1-7:28)*

அ. நெபுகாத்நேச்சாரின் இருமனம் (2:1 -7:28)

ஆ. பெல்ஷெத்சாரின் ஒழுக்ககேடு மற்றும் மரணம் (5:1-31)

இ. தானியேல் விடுவிக்கப்படுதல் (6:1-28)

ஈ. தானியேலின் சொப்பனம் (7:1-28)

**III இஸ்ரவேல் தேசத்தின் விதிப்பயன் குறித்ததான தீர்க்கதரிசன வார்த்தைகள் (8:1-12:13)**

அ. செம்மறி ஆடு மற்றும் ஆண் வெள்ளாடு குறித்ததான தீர்க்கதரிசனம் (8:1-27)

ஆ. எழுபது வாரங்கள் குறித்ததான தீர்க்கதரிசனம் (9:1-27)

இ. இஸ்ரவேலின் அவமானமும் மீட்டமைக்கப்படுதலும் (10:1 - 12:13)

# *ஓசியா*

## *தலைப்பு:*

*இப்புத்தகத்தின் முக்கிய மனிதர் மற்றும் ஆசிரியராக இருப்பவரின் பெயரில் இருந்து இப்புத்தகத்தின் தலைப்பு பெறப்பட்டுள்ளது. இந்த பெயரின் அர்த்தம் "இரட்சிப்பு"; யோசுவா (எண்.13:8,16) மற்றும் இயேசு (மத்தேயு1:21) என்னும் பெயர்களின் அர்த்தமும் இரட்சிப்பு என்பதாகும். பன்னிரண்டு சிறிய-தீர்க்கதரிசிகளில் முதலில் வருபவர் ஓசியா. இங்கு சிறிய என்பது - ஏசாயா, எரேமியா மற்றும் எசேக்கியேல் தீர்க்கதரிசிகளின் புத்தகத்தின் நீளத்தில் ஒப்பிட்டு பார்க்கும் போது, நீளமானதாக இல்லாமல் சுருக்கமாக இருக்கும் தீர்க்கதரிசன புத்தகம் என்ற அர்த்தத்தில் சிறிய என்ற வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*[H2[புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி*

*ஓசியா புத்தகம் மட்டுமே அதன் ஆசிரியரைப் பற்றிய தகவலைத் தருகிறது. ஓசியா பற்றி மிக குறைவாகவே சொல்லப்பட்டிருக்கிறது, அதிலும் குறைவாகவே அவன் தகப்பன் ''பெயேரி'' (1:1) பற்றி அறிய முடிகிறது. ஓசியா ஒருவேளை வடக்கு ராஜ்ஜியமாகிய இஸ்ரவேலின் - வரலாறு, சூழ்நிலைகள், மற்றும் நிலபரப்பை பற்றி (4:15; 5:1,13; 5:8,9;10:5; 12:11,12; 14:6) அறிந்திருந்தபடியால், இஸ்ரவேலைப் பூர்வீகமாகக் கொண்டவராக இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இதினால் இவரும் யோனா தீர்க்கதரிசியும் இஸ்ரவேல் தேசத்தில் இருந்து வந்தவர்கள் என்பதை அறியலாம். ஓசியா பேசும் போது இஸ்ரவேல் (வடக்கு ராஜ்யம்) குறித்தும் யூதா (தெற்கு ராஜ்யம்) குறித்தும் பேசியிருந்தாலும், இஸ்ரவேலை அரசாண்ட ராஜாவை "எங்கள் ராஜா" எனக் குறிப்பிடுகிறார் (7:5).*

*ஓசியா தீர்க்கதரிசியின் ஊழியப்பாதை நீண்ட காலம் (கி.மு.755-710) சென்றது; அதாவது, யூதாவை அரசாண்ட ராஜாக்கள் - உசியா (கி.மு.790 - 739), யோதாம் (கி.மு.750 - 731), ஆகாஸ் (கி.மு.735 - 715) மற்றும் எசேக்கியா (கி.மு.715 - 686), இஸ்ரவேலில் யெரோபெபாம் II (கி.மு.793 - 753; ஓசி. 1:1) அரசாண்ட நாட்கள் வரை நிறைவேறியது. இஸ்ரவேலை ஆண்ட கடைசி ஆறு ராஜாக்களின் காலம் அதாவது செக்கரியா (கி.மு.753-752) தொடங்கி ஓசேயா (கி.மு.32-722) வரை இவரது தீர்க்கதரிசன பணி கடந்து சென்றது எனலாம். எப்படியெனில், யெகூவின் வம்சத்தில் வந்த செக்கரியா கி.மு.752-ல் கவிழ்த்து போடப்படுவது ஒர் எதிர்கால நிகழ்ச்சியாகச் இப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது (1:4). வடக்கு தேசத்தில் ஆமோஸ் தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்குப் பின் இவர் தொடர்கிறார் எனவும், யூதாவில் ஏற்கெனவே தீர்க்கதரிசனம் உரைத்து வந்த - ஏசாயா மற்றும் மீகா தீர்க்கதரிசிகளின் சமகாலத்தவர் எனவும் அறிகிறோம். ஓசியா தீர்க்கதரிசி ஊழிய வரலாற்றினை 2ராஜாக்கள் 14-20 வரை உள்ள அதிகாரங்களிலும், 2நாளாகமம் 26-32-ல் உள்ள அதிகாரங்களிலும் காண்கிறோம்.*

## பிண்ணனி மற்றும் அமைப்பு

*ஓசியா தன் ஊழியத்தை இஸ்ரவேல் தேசத்தை (எப்பிராயீம் என அதன் மிகப்பெரிய கோத்திரத்தின் பெயரிலும் அழைக்கப்படுகிறது), யெரோபாம் II ஆண்ட இறுதி நாட்களில் ஊழியத்தை ஆரம்பித்தார் (இந்த ராஜாவின் நாட்களில் இஸ்ரவேலில் அரசியல் ரீதியில் சமாதானமும், பொருள் வளமும் இருந்தது. ஆனால், தேசத்தில் தார்மீக வாழ்வில் ஊழல் மலிந்தும், ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் பின்வாங்கிப் போய் இருந்தனர்). யெரோபாம் II மரணத்திற்குப் பின் (கி.மு.753) அராஜகம் தலைதூக்கி ஆடியது; அதினால், இஸ்ரவேல் மிகவேகமாக சரிந்தது. இஸ்ரவேலை அசீரியர்கள் 30 ஆண்டுகள் கழித்து*

*மேற்கொள்ளும் வரை, இஸ்ரவேலை ஆண்ட 6 ராஜாக்களில் 4 பேர் - அவர்களுக்கு அடுத்து வந்த ராஜாவினால் கொலை செய்யப்பட்டனர். சமாரியா தேச வீழ்ச்சியின் சூழல் வந்த வேளையில், இஸ்ரவேலில் நீதி வழிவிலகி, கேடுற்று வருவதாலும், (ஆமோஸ் தீர்க்கதரிசன புத்தகத்தையும் காண்க), அத்தேசம் கர்த்தராகிய தேவனுடன் செய்திருந்த உடன்படிக்கையின் உறவினை உடைத்துக் கொண்டுவருவதாலும் - நியாயத்தீர்ப்பு என்பது உடனடியாக வரப்போகிறது என ஓசியா தீர்க்கதரிசனமாக உரைத்து வந்தார்.*

*தென் தேசத்தினை பார்த்தால், சூழ்நிலைகள் சிறப்பானதாக இல்லை. ஆசாரியரின் பணியை அபகரித்ததால், உசியா ராஜா குஷ்டநோயால் வாதிக்கப்படும் தண்டனைய அடைந்தான் (2நாளா.26:16-21). அவனுக்குப் பின் வந்த யோதாம் விக்கிரக ஆராதனைகாரர்களை மன்னித்தான்; இது ஆகாஸ்-பாகால் வழிபாட்டை இஸ்ரவேலுக்குள் கொண்டுவர வழி வகுத்தது (2நாளா.27:1 - 28:4). யூதாவின் சகோதர நாடான இஸ்ரவேலின் அழிவைப் போன்ற அழிவைக்காண இருந்த யூதா தேசம், எசேக்கியேல் ராஜா கொண்டுவந்த சீர்திருத்தங்களால் சற்று மெதுவாக அழிவை நோக்கி சென்றது எனலாம். இரண்டு பக்கங்களில் இருந்த பலவீனப்பட்ட ராஜாக்கள் - கர்த்தராகிய தேவனின் உதவியைத் தேடாமல், அன்னிய தேசங்களுடன் கூட்டணி அமைத்துக் கொள்ளத் தேடினர் (7:11; 2ராஜா.15:19; 16:7) .*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*தேவன் தன்னுடைய உடன்படிக்கையின் ஜனங்கள் - விக்கிரக வழிபாட்டிற்கு வழிவிலகிச் சென்ற போதும், இஸ்ரவேலருடன் அவர் கொண்டிருந்த அன்பில் உண்மையுள்ளவராக இருந்தார் என்பதே இப்புத்தகத்தின் கருப்பொருள். இதினால், ஓசியா தீர்க்கதரிசி ''பழைய ஏற்பாட்டுகால பரிசுத்த யோவான்''*

*(அன்பின் அப்போஸ்தலர்) என அழைக்கப்படுகிறார். தம் ஜனத்தை குறித்த கர்த்தரின் நேசம் அது முடிவற்றது; அதற்கு எதிராக வரும் எதனையும் அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். தேசத்திற்கும், தனிப்பட்ட நபருக்கும் எதிராக ஓசியாவின் தீர்க்கதரிசன செய்திகள் கண்டிப்பதாக இருந்தன, ஆனால் அதேவேளையில், ஓசியா தேவனுடைய அன்பை அதனுடன் சேர்ந்து வரும் மாபெரும் உணர்வுகளுடன் ஆழமாக எடுத்துச் சொல்கிறார். தேவன் ஓசியாவினிடம் ஒரு சோர ஸ்திரியையும் சோரப்பிள்ளையையும் சேர்த்துக் கொள் எனச் சொல்கிறார். அவளுடன் நடத்தும் குடும்ப வாழ்க்கை அனுபவத்தில் இருந்து ஓசியா இஸ்ரவேலின் பாவம் மற்றும் அத்தேசத்தின் உடன்படிக்கையை மீறும் தன்மையப் புரிந்து கொள்ளச் செய்கிறார். ஓசியாவும் அவன் மனைவி , கோமேரும் இப்புத்தகத்தின் கருப்பொருள்களான : பாவம், நியாயத்தீர்ப்பு மற்றும் மன்னிக்கும் அன்பு இதனை சிறப்பாக விளக்கும் உருவகமாக திகழ்கின்றனர்.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*சோரம் போன ஸ்திரி கோமேர், வாக்குறுதி மீறுகிற, உடன்படிக்கையை மீறின இஸ்ரவேல் தேசத்திற்கு அடையாளமாக நிற்கிறாள். ஆனால், இதில் கேள்விகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன, சிலர் சொல்லுகிறார்கள் அதிகாரம் **1-3** ல் நாம் காணும் சோர ஸ்திரி சம்பவத்தை ஓர் உருவக கதை என்ற அளவில் மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும். இது மிக சாதாரண நடையில் சொல்லப்பட்டிருப்பதால், உண்மையில் இது நிறைவேறினதா என்பதே சந்தேகத்திற்கு இடமளிக்கிறது என்கிறனர். ஆனால், இது உண்மையான சம்பவமாக இல்லாது இருந்தால் அதில் இருந்து அதின் தாக்கத்தைப் புரிந்து கொள்வது கடினம். இப்புத்தகத்தில் உண்மையில்லாத விஷயங்களை சொல்ல வரும் போது "கண்டான்" என்ற அடைமொழி அதனுடன்*

*சேர்க்கப்பட்டிருக்கும் (5:13; 9:10,13). எபிரேயத்தில் உண்மைச்சம்பவம் அல்லாதவற்றுக்குச் அறிமுகமாகச் சேர்க்கப்படும் அடைமொழி சேர்க்கப்பட்டிருக்கும். மேலும், ஒரு தீர்க்கதரிசி தன்னையே ஒரு உருவகம் அல்லது உருவக கதையின் பொருளாக மாற்றிக் கொண்டதாக எங்கும் இல்லை.*

*இரண்டாவது, தேவன் ஓசியாவை ஒரு சோர ஸ்திரியை திருமணம் செய்யச் சொல்வதில் என்ன ஒழுக்கம் இருக்கிறது? இப்படியாக பார்த்தால் சரியாக இருக்கும்: ஓசியா திருமணம் செய்த போது கோமேர் கற்புள்ள பெண் ஆக இருந்து, பின் நாளில் சோர ஸ்திரியாக மாறினாள் எனலாம். சோர ஸ்திரியைச் சேர்த்துக் கொள் என்னும் வரியின் அர்த்தம் எதிர்காலத்தில் வாக்கைமீறும் பெண்ணை என அர்த்தம் தருகிறது. எகிப்தில் இருந்து வெளியே அழைத்து வரப்பட்ட இஸ்ரவேலை ஒரு சோரஸ்திரி என அழைக்க முடியாது (2:15; 9:10). ஆனால் அவள் கர்த்தரை விட்டு பின்வாங்கிப் போனாள் என்பதை 1:1-ல் காண்கிறோம். அதிகாரம் 3, விபச்சாரத்தினிமித்தம் தள்ளி வைக்கப்பட தன் மனைவியை ஓசியா சேர்த்துக் கொண்டார் என விவரிக்கிறது. இப்படியிருக்க ஓசியா சோரஸ்திரி என அறிந்தே திருமணம் செய்துகொண்டார் என்பதுவும் ஏற்றுக் கொள்ளமுடியாது.*

*மூன்றாவது, அதிகாரம் 1 க்கும் அதிகாரம் 3 க்கும் இடையில் உள்ள உறவினைக் குறித்தும் ஒரு கேள்வி எழுகிறது. அதாவது, அதிகாரம் 3ல் சொல்லப்பட்டிருக்கும் பெண் கோமேர் தானா அல்லது வேறு பெண்ணா என்பது. 1:2-ல் அவர் பெற்ற கட்டளை போய், சேர்த்துக் கொள் என்பது. அதிகாரம் 3-ல் ''இன்னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும், விபசாரியுமான ஒரு ஸ்திரீயை சேர்த்துக்கொள் '' என்பதால் ஓசியா தான் மணந்திருந்த பெண்ணிடம் நேசத்தை புதுப்பித்துக்கொள்ள அழைப்பைப் பெற்றார் எனக் காண்கிறோம். மேலும் அதிகாரம் 1-ல் நாம் காணும் கோமேர்*

இஸ்ரவேல் தேசத்திற்கு ஒப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மூன்றாம் அதிகாரத்தில் நாம்காண்கிற இஸ்ரவேல் புத்திரர் பேரில் கர்த்தர் வைத்திருக்கிற அன்புக்கு ஒப்பாக நீ இன்னும் போய், தன் நேசரால் நேசிக்கப்பட்டவளும், விபசாரியுமான ஒரு ஸ்திரீயை சேர்த்துக்கொள் என்று சொன்னார். இதினால் மூன்றாம் அதிகாரம் வேறு ஒரு பெண்ணைக் குறித்துப் பேசுகிறது என்றால் அது இந்த உருவகத்தை அர்த்தமற்றதாக்கி விடும்.

**சுருக்கம்**

***I. சோர ஸ்திரியும் உண்மையுள்ள கணவனும் (1:1 - 3:5)***

*அ. ஒசியாவும் கோமேரும் (1:1-9)*

*ஆ. தேவனும் இஸ்ரவேல் தேசமும் (1:10 - 2:23)*

*இ. இருதிறத்தாரும் ஒப்புரவாக்கப்படல் (3:1 -15)*

***II. வாக்குமீறும் இஸ்ரவேலும் பற்று உறுதியுடன் இருக்கும் கர்த்தரும் (4:1 - 6:3)***

*அ. உடன்படிக்கையை மீறின இஸ்ரவேல் குற்றவாளியாக காணப்படுகிறாள் (4:1 -7:28)*

*ஆ. சோரம்போன இஸ்ரவேல் தள்ளி வைக்கப்படுதல் (5:1-31)*

*இ. வாக்குமீறின இஸ்ரவேல் கர்த்தரிடம் மீண்டும் சேர்க்கப்படல் (11:1 - 14:9)*

# யோவேல்

## *தலைப்பு:*

*கிரேக்க செப்டுவாஜிண்ட் (LXX) மற்றும் லத்தீன் வுல்கேட் (Vg.) எபிரேய மேசோரெடிக் (MT) உரையினைப் பின்பற்றி, தேவனிடத்தில் இருந்து தீர்க்கதரிசன செய்திதனைப் (1:1) பெற்ற தீர்க்கதரிசி யோவேலின் பெயரையே இதன் தலைப்பாக தந்துள்ளனர். இந்த பெயரின் அர்த்தம் "கர்த்தரே தேவன்". இப்புத்தகம் பழைய ஏற்பாட்டில் உள்ள நபர்கள் 12 பேருக்கும் மேலானோரைக் குறிப்பிடுகிறது. யோவேலின் பெயர் புதிய ஏற்பாட்டில் ஒரே ஒரு முறை (அப். 2:16 -21) குறிப்பிடப்படுகிறது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*"பெத்துவேலின் குமாரனாகிய யோவேலுக்கு உண்டான கர்த்தருடைய வசனம் (1:1)" என்று தன்னைத் தான் அறிமுகம் செய்து கொள்கிறார். இந்த அறிமுகத்தைத் தவிர வேறு எந்த விஷயமும் தீர்க்கதரிசியைக் குறித்து குறிப்பிடப்படவில்லை. பழைய ஏற்பாட்டில் வேறு எங்கும் இவரது தகப்பனார் பெயரும் சொல்லப்படவில்லை. தேவாலயபலி செலுத்துதலில் இவர் மிகுந்த வைராக்கியத்தை காட்டினபோதிலும் (1:9; 2:13-16), போதகர் மற்றும் விவசாய வாழ்க்கை இவருக்கு பரிச்சயமாக இருந்தது மற்றும் ஆசாரியர்களிடம் இருந்து இவர் பிரிந்து இருந்ததைக் காணும் போது இவர் லேவியராக இருந்திருக்கக் கூடும் என தெரிகிறது. இவர் ரூபன் கோத்திரத்தில் இருந்து வந்தவர், ரூபன் மற்றும் காத் தேசம், சாகடலின் வடகிழக்கில் இருக்கிற பெத்தோம் அல்லது பெத்லகேம் ஊரைச் சேர்ந்தவர் என வேதாகமத்தில் இல்லாத பாரம்பரியம் கூறுகிறது. ஆனால், இவரது தீர்க்கதரிசன வார்த்தைகளப் பார்க்கும் போது, அதில் அன்னியர் போல் இவர் நடந்து கொள்ளாததால், இவர்*

எருசலேமுக்கு அருகில் இருக்கும் யூதேயாவில் இருந்து வந்தவர் என முடிவு செய்யலாம்.

இப்புத்தகம் வேதாகம புத்தகங்களின் வரிசையில் எங்கு அமைந்துள்ளது, வரலாற்றுக் குறிப்புகள் மற்றும் மொழியியல் கூறுகளை வைத்து மட்டுமே இந்த புத்தகம் எந்த காலத்தில் எழுதப்பட்டது என்பதில் ஒரு முடிவுக்கு வரலாம். 1) பின்நாள் உலகப் பேரரசுகளான ஆன (அசீரியா, பாபிலோன் அல்லது பெர்சியா குறித்து எந்த குறிப்பும் இப்புத்தகத்தில் இல்லை; 2) யோவேலின் எழுத்து நடை, ஓசியா மற்றும் ஆமோஸ் போல இருக்கிறது அல்லாமல், சிறையிருப்பில் இருந்து சொந்த தேசத்திற்கு திரும்பிய பின் எழுந்த தீர்க்கதரிசிகளின் எழுத்து நடைபோல் இல்லை; மற்றும் 3) இவருக்கு முன் இருந்த ஓசியா மற்றும் ஆமோஸின் (யோவேல் 3:16 / ஆமோஸ் 1:2; யோவேல் 3:18 / ஆமோஸ் 9:13) வாய்மொழிக்கு இணையானதாக இவருடைய வார்த்தை இருக்கிறபடியால், இந்த புத்தகம் யோவாஸ் ராஜா (கி.மு. 835-796) காலத்தில் - கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என்பது பொருத்தமானதாக இருக்கிறது. ஆனாலும், இப்புத்தகம் எழுதப்பட்ட தேதியை அறுதியிட்டுச் சொல்ல முடியவில்லை என்பது - இப்புத்தகத்திற்கு விளக்கம் அளிப்பதில் எந்தவித பாதிப்பையும் அதிகமாக ஏற்படுத்தவில்லை. யோவேல் தீர்க்கதரிசியின் வார்த்தைகள் காலங்களுக்கு அப்பாற்பட்டவை, இப்புத்தகத்தின் உபதேசங்கள் எந்த காலத்திற்கும் பொருத்தமானதும் பயன்படுத்த வல்லதாகவும் இருக்கின்றன.

## பின்னணி மற்றும் அமைப்பு

தீரு, சீதோன் மற்றும் பெலிஸ்தியா இஸ்ரவேல் தேசத்திற்குள் அடிக்கடி ஊடுருவல் மேற்கொண்டனர் (3:22). நீண்டகால வறட்சி, வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு பசுமை நிறைந்த தேசத்தை ஒன்றும் இல்லாமல் ஆக்கி, கடுமையான பொருளாதார

*அழிவை உண்டாக்கியது (1:7-20), இதனால், தென் தேசத்து ராஜ்யம் பலவீனமாகியது. இந்தபேரழிவு தேவனுடைய நியாயதீர்ப்பிற்குரிய விளக்கமாக யோவேல் தீர்க்கதரிசிக்கு இருந்தது. பாவத்திற்கு நியாயதீர்ப்பாக வெட்டுக்கிளிகளின் சேதத்தை காணும் போது, எதிர்வரும் ''கர்த்தரின் நாளின்'' நியாயத்தீர்ப்புகள் இவற்றைக்காட்டிலும் கடுமையானதாக இருக்கும். அந்நாளில், தேவன் அவரது சத்துருக்களை நியாயம் தீர்த்து, தம்மிடம் பற்றுதியாக இருப்பவரை ஆசீர்வதிப்பார். இந்த நியாயதீர்ப்பில் இது என்று எந்தவொரு பாவமும் குறிப்பிடப்படவில்லை, அல்லது யூதா விக்கிரகாரதனைக்காக கண்டிக்கப்படவும் இல்லை. ஆனாலும், கசப்பான அலட்சியத்துடன் இருக்கும் ஜனங்களை உண்மையான மனந்திரும்புதலுக்கு தீர்க்கதரிசி அழைக்கிறார்; எப்படி என்றால் ''நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள் எனக்கூறி அழைக்கிறார் (யோவேல் 2 : 13).*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*''கர்த்தருடைய நாள்'' என்பதே யோவேல் புத்தகத்தின் கருப்பொருள். யோவேலின் செய்தியின் அனைத்துப் பகுதிகளிலும் ஊடுருவிச் செல்வதால், பழைய ஏற்பாடு முழுவதிலும் அதிகமாக இக்கருத்தை தக்கவைத்துள்ள புத்தகமாக யோவேல் இருக்கிறது (1:15; 2:1; 2:11; 2:31; 3:14). இந்த கருத்து 8 ஆசிரியர்களால் 19 முறை எடுத்தாளப்பட்டிருக்கிறது (ஏசா.2:12; 13:6,9; எசே.15:5; 30:3; யோவேல் 1:15; 2:1; 2:11; 2:31; 3:14; ஆமோஸ் 5:18 [2x], 20; ஒபதியா15; செப். 1:7, 14 [2x]; செப்.14:1; மல்கியா 4:5). காலவரிசைப்படியான ஒரு காலத்தினை இந்த வார்த்தைகள் குறிப்பிடவில்லை; கர்த்தர் அவர் ஒருவருக்கு மட்டுமே உரிய கோபாக்கினையும் நியாயத்தீர்ப்புமான நாள் ஒன்றினை குறிப்பிடுகின்றது எனலாம்.*

*தேவனுடைய குணாதிசயங்களான, வல்லமை, ஆற்றல் மற்றும் பரிசுத்தம் - தேவனுடைய சத்துருக்களுக்கு திகிலூட்ட வெளிப்படும் பிரத்தியேகமான நாள் - கர்த்தருடைய நாள். கர்த்தருடைய நாள் என்பது எப்பொழுதும் கடைசிகால சம்பவங்களை மட்டும் குறிப்பதாக இல்லை. எசே.13:5-ல் நாம் காண்பது போல் பாபிலோனியர் வெற்றி பெற்று எருசலேமை அழித்துப் போட்ட நாள் போன்று, வரலாற்றில் தீர்க்கதரிசனம் நிறைவேறின நாட்களையும் குறிக்கும். தீர்க்கதரிசனங்களில் நாம் பொதுவாக எதிர்காலத்தில் என்ன/எப்படி நிறைவேறும், என்பதை சமீபமான காலத்தில் நிறைவேறின தீர்க்கதரிசனத்தைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.*

*கர்த்தருடைய நாள் என்பது அதிக அளவில் நிலநடுக்க தொந்தரவுகள் (உதாரணம் 2:1-11; 2:31; 3:16) கொடூரமான தட்பவெட்பநிலை (எசே. 13:5), மேகங்கள் சூழ்ந்த அடர்ந்த இருள் (2:2; செப்பனியா 1:7) பிரபஞ்ச எழுச்சி (2:3,30) மற்றும் கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும் (2:11). அந்த நாள் 1:15-ல் நாம் காண்பது போது ''அது சங்காரம்போல சர்வ வல்லவரிடத்திலிருந்து வருகிறது''. யோவேல் புத்தகத்தில், இரண்டாம் பாதி கர்த்தருடைய நாளுக்கு பின், தொடர்ந்து வரும் நாட்களில் கிடைக்கும் நம்பிக்கை மற்றும் கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் குறித்து பேசுகிறது. 2:28,29 வசனங்கள் ''அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; 2:28,29 வசனங்கள் - அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள் என்ற வாக்குத்தத்தத்தை அளிக்கிறது. எலியாவின் வருகையைக் குறித்துபேசுவது கிறிஸ்துவின் தரிசனத்தை நினைகூருதலாக (Epiphany) இருக்கிறது. இது - மீட்டெடுக்கப்படுதலையும் நம்பிக்கையையும் ஜனங்களுக்குத் தருகிறது (மல்கியா 4:5,6). கர்த்தருடைய*

*நாளின் விளைவாக, பொருளாதார ஆசீர்வாதாங்கள், பலன்கள் நிறைந்த வாழ்க்கை மற்றும் செழிப்பு உண்டாயிருக்கும் ( **2:221; 3:16-21**). அந்த நாள் பாவிகள் மீது நியாயத்தீர்ப்பு செலுத்தப்படும் நாள் அதன் தொடர்ச்சியாக மனம் திரும்பினோர் மீது ஆசீர்வாதங்களும், தேவன் அவருடைய ஜனத்தாருடன் உடன்படிக்கையினை மீண்டும் உறுதிபடுத்திய நாள் ஆகவும் அந்நாள் இருக்கும்.*

## ***விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்***

*"பச்சைப்புழு விட்டதை வெட்டுக்கிளி தின்றது; வெட்டுக்கிளி விட்டதைப் பச்சைக்கிளி தின்றது; பச்சைக்கிளி விட்டதை முசுக்கட்டைப்பூச்சி தின்றது என அதிகாரம் **1** விவரிக்கும் தேசத்தின் சங்காரத்தை நீங்கள் எடுத்து வாசித்தால் நலமாகும். அதிகாரம் **2**-ல் புதிய விளக்கத்தை வாசிப்பவர் காணலாம். இங்கு வெட்டுக்கிளிகளின் சேதாரத்தைக் காட்டிலும் மேலாக சேதத்தினையும் மனம்திரும்பவேண்டியதன் உடனடி அவசியத்தையும் தீர்க்கதரிசி குறிப்பிடுகிறார். தீர்க்கதரிசி சுட்டிக்காட்டும் உருவகங்கள்: உதாரணமாக, அவைகளின் சாயல் குதிரைகளின் சாயலை ஒத்தது **(2:4)**; அவைகள் பராக்கிரமசாலிகளைப்போல ஓடும் **(2:7)** போன்றவற்றை இன்னும் வெட்டுக்கிளிகளின் படையெடுப்பின் சேதாரத்தை எடுத்துக்காட்ட பயன்படுத்துகிறார் கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும், அதைச் சகிக்கிறவன் யார்? **(2:11)** எனக் கேட்கும் அளவிற்கு அது கொடியதும் பயங்கரமுமான நாள் என்று அறிகிறோம்.*

*சிலர், அப்போஸ்தலர் **2:16-21**-ல் பேதுரு மேற்கோள் காட்டும் யோவேலில் **(2:28-32)** உள்ள வசனங்கள், கி.பி. **70**-ல் எருசலேம் தகர்க்கப்பட்ட நாளில் நிறைவேறிற்று என்றனர். மற்றும்ம் சிலர், கர்த்தரின் பயங்கரமும் கொடியதுமான நாள் இன்னும் நிறைவேறவில்லை அது இறுதி நாளில் தான் நிறைவேறும்*

*என்கின்றனர்; இறுதி நாட்கள் என கர்த்தருடைய நாளைத்தான் யோவேல் குறிப்பிடுகிறார் என்பதை நாம் வசனத்தை காணும்போது புரிந்துகொள்கிறோம். பெந்தெகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டது, இவ்வார்த்தைகள் நிறைவேறின நாட்கள் அல்ல; இவ்வார்த்தைகள் மேசியாவின் ராஜ்யத்திற்குப் பின் வரும் கர்த்தருடைய நாட்கள், ஊற்றப்படவுள்ள பரிசுத்த ஆவியாவனவரின் வல்லமை மற்றும் செயல்களுக்கு முன்னோட்டமானதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.*

**சுருக்கம்**

*வசனம் 1:1-ஐத் தொடர்ந்து புத்தகத்தின் உள்ளடக்கங்கள் 3 அடிப்படை பிரிவுகளில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. முதல் பிரிவில் (1:2—20), தீர்க்கதரிசி தன்னுடைய காலத்து கர்த்தருடைய நாளைக் குறித்து விவரிக்கிறார். தேசம் வெட்டுக்கிளிகளாலும் வறட்சியினாலும் மிகப்பெரிய அளிவில் அழிவை சந்தித்திருந்தது. பேரழிவின் விளக்கம் (1:2-12) ஜனங்கள் மத்தியில் வருத்ததிற்கும் சீர்திருத்தத்திற்கும் அழைப்பை விடுகிறது (1:13-20). இரண்டாவது பிரிவு (2:1-17), வரலாற்றில் வெட்டுக்கிளிகளால் வந்த பேரழிவை குறித்து பேசிய அதிகாரம்; ஒன்றிலிருந்து கர்த்தருடைய நாளில் உண்டாகும் கடைசிகால சம்பவங்களாக மாறும் முறையை குறித்து வசனம் 2:18 - 3:21 பேசுகிறது. வெட்டுக்கிளிகளால் ஏற்பட்ட பேரழிவிற்கு ஆட்பட்ட நிலையின் பின்னணியில், தீர்க்கதரிசி, உயர்ந்த ஆவலுடன், மிகவும் தெளிவாக மற்றும் வலியுறுத்தி வரவிருக்கும் கர்த்தரின் வருகையை குறித்து (2:1-11) பேசுகிறார். உடன் வெளிப்படையாக தெரியும் வார்த்தைகளை உபயோகித்து, விடாப்பிடியாக மனந்திரும்புதலின் அவசியத்தை வலியுறுத்துகிறார் (2:12-17).*

மூன்றாம் பிரிவில் (2:18-3:21) கர்த்தர் நேரடியாகப் பேசுகிறார், அவர் தமது ஜனங்களிடம், அவரது பிரசன்னம் அவர்கள் மத்தியில் இருக்கிறது என்ற நிச்சயத்தைத் தருகிறார் (2:27; 3:17,21). இந்த இடத்தில் மனந்திரும்புதல் கோரப்பட்டது என்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது (2:!2-17) எனவும், அவர்களுடைய ஜெபத்திற்கு தேவன் அளித்த பதில் இது என விவரிக்கிறது (2:18,19 முற்பகுதி). யோவேல் 2:18-20 புலம்பலும், ஐயோ என்ற நிலையில் இருந்தும் ஏற்படும் மாற்றத்தை - தேவனுடைய பிரசன்னம் அவர்கள் மத்தியில் இருக்கின்றது என்பதற்கான தெய்வீக நிச்சயத்தையும் குறித்தும், 2:19பின்பகுதி, 20 இந்த திருப்பத்தின் சாராம்சத்தை அறிமுகம் செய்யும் வசனங்களாக இருக்கின்றன. மனம் திரும்பினவர்களுக்கு மூன்று வாக்குதத்தங்களை தேவன் தருகிறார். 1. அவர்கள் தேசத்திற்கு தெய்வீக ஷேமம்; 2. அவர் ஜனங்கள் நடுவில் பொருத்தமான அவரது பிரசன்னம் குறித்த நிச்சயம்; 3. அவருடைய ஆவியை ஊற்றுவதால் உண்டாகும் ஆவிக்குரிய மீட்டமைப்பு. இதனை குறித்து இந்த வசனங்களில் நாம் வாசித்து பயன்பெறலாம். (யோவேல் 2:21-27; 2:28-32; 3:1-21).

1. நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

2.நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துகொள்வீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

3.அதற்கு பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்;

## I. வரலாற்றுப்படி: கர்த்தருடைய நாளின் விளக்கம் (1:1-20)

*அ. செய்தியின் ஆதாரம் (1:1)*

*ஆ. அழிவினைக் குறித்து சிந்திக்க கட்டளை (1: 2 - 4)*

*இ. அழிவின் பூரணம் (1:5 -12)II. (4:1 - 6:3)*

*ஈ. அழிவின் தீவிரத்தை உணர்ந்து மனம் திரும்ப அழைப்பு (4:1 -7:28)*

*[H3[II. கர்த்தருடைய நாள் விவரிக்கப்படுகிறது : இடைநிலை காலம் (2:1-17)*

*அ. எச்சரிக்கை மணி ஒலித்தல். (2:1)*

*ஆ. படை -படையெடுத்து வருதல் (2:2-11)*

*இ. மனம் திரும்ப அறிவுரை (2:12-17)*

***III. கர்த்தருடைய நாள் விவரிக்கபடுகிறது : (காலயியல் அடிப்படையில்) (2:18 - 3:21)***

*அ. அறிமுகம் (2:18-20)*

*ஆ. பொருட்கள் திரும்ப மீட்டமைக்கப்படுதல் (2:21-27)*

*இ. ஆவிக்குரிய மறுமலர்ச்சி (2:28— 32)*

*ஈ. தேசம் திரும்ப பழைய நிலைக்கு மீட்டுஅமைக்கப்படுதல் (3:1-21)*

# ஆமோஸ்

## *தலைப்பு:*

*ஏனைய சிறிய தீர்க்கதரிசிகள் புத்தகத்திற்கு தலைப்பிடுவது போலவே, தேவன் எந்த தீர்க்கதரிசிக்கு தம்முடைய வார்த்தையைத் தந்தாரோ (1:1) அவர்களின் பெயரை இடுவதுபோல, ஆமோஸின் பெயரே இப்புத்தகத்திற்கு இடப்பட்டுள்ளது. ஆமோஸ் என்ற பெயருக்கு "பாரம்" அல்லது "பாரம் சுமப்பவர்" என்று அர்த்தம். இவரை ஏசாயாவின் (ஏசா.1:1) தகப்பன் ஆமோத்சின் (பருமனான, பெலமான) பெயர் போன்று இருப்பதால் குழப்பம் அடைந்து விடக்கூடாது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*ஆமோஸ் எருசலேமிற்கு தெற்கே 10 மைல் தொலைவில் இருக்கும் தெக்கோவா என்ற சிறிய கிராமத்தில் இருந்து வருகிறார். இவர் ஒருவரே அவருடைய தெய்வீக அழைப்பைத் தெரிவிப்பதற்கு முன் தான் உலகப்பிரகாரமாக என்ன தொழில் செய்தேன் என்று அறிவித்தவர். இவர் ஆசாரிய அல்லது மேல்மட்ட குலத்தின் வழிவந்தவர் அல்ல, இவர் ஆடுகளை "மேய்ப்பவர்" (1:1 மற்றும் 2ராஜா.3:4) மற்றும் காட்டத்திப்பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன் என்கிறார் (7:17); யோனா (2ராஜா.14:25), ஓசியா (1:1) மற்றும் ஏசாயா தீர்க்கதரிசிகளின் (1:1) சமகாலத்தவர். இந்த புத்தகம் எழுதப்பட்டது கி.மு.8-ஆம் நூற்றாண்டின் நடுமைய்ய நாட்கள், யூதாவின் ராஜா உசியா அரசாண்ட காலம், மேலும் இஸ்ரவேலில் யெரோபெயாம் - II (கி.மு.793-753) அரசாண்டவேளை, நிலநடுக்கம் (சகரியா 14:5) ஏற்படுவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது.*

## *பின்னணி மற்றும் அமைப்பு*

*இஸ்ரவேலின் வடக்கு பிராந்திய கோத்திரத்தாருக்கு தேவனின் செய்தியை அறிவிக்க வேண்டி ஏற்படுத்தப்பட்ட யூததீர்க்கதரிசி தான் ஆமோஸ் (7:15). யெரோபேயாம்-II நீண்ட மற்றும் பாதுகாப்பான ஆட்சியினால் தேசம் செழித்தோங்கி இருந்த நேரம், அவரது தகப்பன் யோவாஸை (2ராஜா.13:25) பின்பற்றி, இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச் சேர்த்துக் கொண்ட நேரம் அது (2 ராஜா.14:25). அந்த நாட்கள் யூதா தேசத்துடன் சமாதானமாக இருந்த நாட்கள், மேலும் யோனா தீர்க்கதரிசியின் பிரசங்கத்தினால் மனம் திரும்பியிருந்த நினிவே பட்டணத்தாரால், இஸ்ரவேலின் தூரத்து அயலகத்தார், அசீரியரின் அச்சுறுத்தல் அடக்கப்பட்டிருந்தது (யோனா 3:10). ஆவிக்குரிய வாழ்விலோ - பரவலாக ஊழல் மலிந்திருந்ததும், ஒழுக்கம் சீர்குலைந்தும் இருந்த நாட்களாக இருந்தது (4:1; 5:10-13; 2ராஜா.14:24).*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*ஆமோஸ் இஸ்ரவேலரின் முக்கியமான இரண்டு பாவங்களை குறித்து பேசுகிறார், 1) மெய்யான ஆராதனை இல்லாமல் இருப்பது மற்றும் 2) நியாயம் இல்லாமல் போனது. அவர்கள் ஆராதனையின் சடங்குகளில் மூழ்கிப்போய், இறுதியில் முழு இருதயத்தோடு கர்த்தரைப் பின்பற்றவில்லை (4:4-5; 5:4-6); மேலும் அவர்கள் அயலகத்தாருடன் தேவனின் நீதியான நியமத்தைப் பின்பற்றவில்லை. இந்த துரோகம் அவர்கள் தொடர்ச்சியாக, வேண்டுமென்றே, ஆமோஸின் தெய்வீக நியாயத்தீர்ப்பு நிச்சயம் என்ற தீர்க்கதரிசன வார்த்தைகளை நிராகரித்ததால் வெளிப்பட்டது. அவருடைய உடன்படிக்கையினால், மொத்தமும் இஸ்ரவேலை தேவன் கைவிடுவதில்லை, மீந்திருக்கும் நீதியின் பிள்ளைகளுடன் எதிர்காலத்தில் தம்முடைய மறுசீரமைப்பை கொண்டு வருவார் (9:7-15) என்று முடிகிறது.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*9:12-ம் வசனத்தில், தேவன் "அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து" என வாக்குதத்தம் செய்கிறார். எருசலேம் ஆலோசனை சங்கத்தில், விருத்தசேதனம் இல்லாமல் புறஜாதியார்கள் சபைக்குள் நுழைய அனுமத்திக்கப்படலாமா என விவாதிக்கும் போது, யாக்கோபு இந்த வசனத்தை அப்போஸ்தலர் 15-ஆம் அதிகாரம் 15, 16-ஆம் வசனங்களில், பேதுருவுக்கு ஆதரவாக எடுத்துரைக்கிறார்; மேலும், எப்படி தேவன் "புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி " என்று 15:14 ஆம் வசனத்திலும் ஆமோஸின் வார்த்தைகளை மேற்கோள் காட்டிப் பேசுகிறார். இதினால், சிலர் தாவீதின் குமாரனாகிய இயேசுவில் இந்த பத்தியில் சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகள் நிறைவேறின எனக் குறிப்பிடுகின்றனர். இயேசுவின் மூலமாக தாவீதின் பேரரசு திரும்ப ஸ்தாபிக்கப்பட்டது. அப்போஸ்தலர் நடபடிகளில் சொல்லப்பட்டிருக்கும் குறிப்பு ஆமோஸின் வார்த்தைகளுக்குரிய நல்ல விளக்கம் எனவும் அது நிறைவேறுதலாக எடுத்துக் கொள்ள முடியாது எனவும் ஒருசாரார் காண்கின்றனர். எதிர்கால நாட்களில் நிறைவேறும் குறிப்புகள் (அந்நாளில் - 9:11), "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு" (9:12) என்கிறது. மேலும் 9:15-ல் அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார். இவ்வார்த்தைகளெல்லாம் மேசியாவின் இரண்டாம்வருகையில், அவர் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிடுவார் என்பதையும் (ஏசாயா 9:7), அப்போஸ்தலர்களால் ஸ்தாபிக்கப்படும் சபையில் அல்ல என்பதையும் நமக்கு தெளிவுபடுத்துகிறது.*

**சுருக்கம்**

***1. தேசங்களுக்கு விரோதமாக எழும்பும் நியாயத்தீர்ப்புகள் (1:1-2:16)***

*அ. அறிமுகம் (1:1,2)*

*ஆ. இஸ்ரவேலரின் எதிரிகளுக்கு விரோதமாக (1:3-2:3)*

*இ. யூதாவிற்கு விரோதமாக (2:4,5)*

*ஈ. இஸ்ரவேலுக்கு விரோதமாக (2:6-16)*

***II. இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பிய ஆக்கினைதீர்ப்புக்கள் (3:1 -6:14)***

*அ. பொறுப்பற்ற தன்மை என்னும் பாவம் (3:1-15)*

*ஆ. விக்கிரக ஆராதனை என்னும் பாவம் (4:1-13)*

*இ. ஒழுக்கம் / நெறிமுறையில் வீழ்ச்சியடைந்த பாவம் (5:1 - 6:14)*

***III. நியாயத்தீர்ப்பு மற்றும் மறுசீரமைப்பின் தரிசனங்கள் (7:1 - 9:15)***

*அ. கர்த்தர் காப்பாற்றுவர் (7:1-16)*

*1. வெட்டுக்கிளிகள் பற்றி தரிசனம் (7:1-3)*

*2. அக்கினி யைப் பற்றி தரிசனம் (7:4-6)*

*ஆ. இனிமேலும் கர்த்தர் காப்பாற்றமாட்டார் (7:7-9:10)*

*1. தூக்கு நூற்குண்டு தரிசனம் (7:7-9)*

*2. வரலாற்றில் இடைச்சொருகல் (7:10-17)*

*3. பழக்கூடை தரிசனம் (8:1-14)*

*4. பலிபீட தரிசனம் (9:1-10)*

*இ. கர்த்தர் தாமே மீட்டு முன்நிலையில் வைப்பார் (9:11-15).*

# ஒபதியா

## *தலைப்பு:*

*இந்த புத்தகம் தரிசனத்தைப் பெற்ற தீர்க்கதரிசியின் பெயரினையே தலைப்பாகப் பெற்றது (1:1). ஒபதியா என்றால் "கர்த்தருடைய சேவகன்" என்று அர்த்தம். இந்த பெயர், பழைய ஏற்பாட்டில் 20 தடவைக்கும் மேலாக, வேறு நபர்களைக் குறிக்கும் அர்த்தத்தில் வருகிறது. பழைய ஏற்பாட்டில் உள்ள மிகச்சுருக்கமான புத்தகம் ஒபதியா. இப்புத்தகத்தில் இருந்து புதியஏற்பாட்டில் எந்தவொரு மேற்கோளும் காட்டப்படவில்லை.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*ஆசிரியர் குறித்த தகவல் எதுவும் திட்டவட்டமாக அறிய முடியவில்லை. பழைய ஏற்பாட்டில் நாம் இதர இடங்களில் காணும் இதே பெயர் கொண்டவர்களும் இந்த தீர்க்கதரிசியைத் தான் குறிப்பிடுகின்றனரா என்பதுவும் தெரியவில்லை. இவர் எருசலேம், யூதா மற்றும் சீயோன் என அடிக்கடி குறிப்பிடுவது இவர் தென் தேசத்தைச் சேர்ந்தவராக இருந்திருக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது (10-12,17,21). ஒபதியா ஒருவேளை எலியா மற்றும் எலிசா தீர்க்கதரிசிகளின் சமகாலத்தவராக இருந்திருக்கலாம்.*

*வசனங்கள் 10-14-ல் ஏதோமியர் எருசலேமை தாக்கியதுடன் சம்பந்தப்பட்டிப்பதை நாம் அறிந்திருந்தாலும், எழுதப்பட்டகாலத்தை தீர்மானிப்பது கடினமானதாகவே இருக்கிறது. தாக்குதலுக்கு அடுத்த குறுகிய காலத்திலேயே ஒபதியா இப்புத்தகத்தை எழுதியிருக்கலாம் எனத் தெளிவாகிறது. பழைய ஏற்பாட்டு வரலாற்றில் எருசலேம் மீது 4 முக்கிய படையெடுப்பு நடந்திருக்கிறது. 1) கி.மு. 925-ல் ஷிஷாக் என்ற எகிப்தின் ராஜா ரெகோபெயாமின் ஆட்சிகாலத்தில் (1ராஜா.*

14:25,26; 2நாளா.12); 2) பெலிஸ்தியரும் அராபியரும் சேர்ந்து கி.மு. 848-ல் யூதாவின் யெகோராம் (2நாளா.21:8-20) அரசாண்ட காலத்தில்; 3) கி.மு.790-ல் இஸ்ரவேலின் யோவகாஸ் (2ராஜா.14; 2 நாளா.25); மற்றும் 4) பாபிலோனிய ராஜா, நெபுகாத்நேச்சார் கி.மு.586-ல் எருசலேமின் வீழ்ச்சியின்போது. இந்த நான்கு படையெடுப்புகளில் இரண்டாம் மற்றும் நான்காம் படையெடுப்பு வரலாற்றின் தகவலுடன் பொருந்துவதாக இருக்கிறது. நெபுகாத்தேசாரின் காலத்தில்தான் எருசலேம் முழுவதும் இடிக்கப்பட்டது, ஒபதியா எருசலேம் முழுமையும் இடிக்கப்பட்டது என தெரிவிக்காதிருக்கிறபடியால் இரண்டாம் படையெடுப்பு ஒபதியாவின் காலமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மேலுமான காரணங்கள்: நெபுகாத்நேச்சார் ராஜா எருசலேமை முற்றிலும் தகர்த்தபோது ஏதோமியரும் அதில் ஈடுபட்டிருந்தனர் (சங் 137; புலம்பல் 4:21). ஒபதியா பாபிலோனியரின் பெயரை ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை (ஆனால் மற்ற தீர்க்கதரிசிகள் எருசலேமின் வீழ்ச்சி குறித்து எழுதியுள்ளனர்). ஒபதியா தேவாலயம் இடிக்கப்பட்டதை குறித்தோ அல்லது ஜனங்கள் நாடு கடத்தப்பட்டதை குறித்தோ எதுவும் எழுதவில்லை. உண்மையில், சிறைபிடிக்கப்பட்டவர்கள் பாபிலோனின் தென்மேற்கு பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டார்கள், பாபிலோனின் கிழக்கு பகுதிக்கு அல்ல (வசனம் 20).

## பின்னணி மற்றும் அமைப்பு

ஈசாக்கு மற்றும் ரெபெக்காள் (ஆதி.25:24-26) தம்பதியினரின் இரட்டைகுழந்தையில் முதல் பிறந்தவர் ஏசாவின் (கருவில் இருக்கும்போதே ஏசா, யாக்கோபுடன் மோதிக் கொண்டிருந்தவன்; ஆதி. 25:22) வம்சவழியில் வந்தவர்கள் ஏதோமியர்கள். ஏசா சர்வாங்கமும் ரோம அங்கி போர்த்தவன் (ஆதி.25:25). அவனுக்கு ஏதோம் என்றும் பெயர், இதன் அர்த்தம் "சிகப்பு". ஏசா தன் சேஷ்ட புத்திரபாகத்தை

*விற்றுப்போட்டு சிகப்பு கூழைத் தா என வாங்கி குடித்ததால் இந்தப் பெயர் வந்தது (ஆதி.25:30). தேவனுடைய உடன்படிக்கையை மதிக்காமல் இரண்டு கானானிய பெண்களை மணந்தான் (ஆதி.26:34) அதற்குப்பின் இஸ்மவேலின் மகளை மணந்தார் (ஆதி.28:9). தேவனுடன் உடன்படிக்கையில் இல்லாத பெண்களை மணந்தது, அவனுடைய தகப்பனின் ஆசீர்வாதத்தை யாக்கோபு தந்திரமாக வந்து பெற்றுக் கொள்ள விட்டுக் கொடுத்தது அவனை வனசஞ்சாரியாக மாற்றியது (ஆதி.25:27, 27:38-40). சாக்கடலின் தெற்குபகுதியில் இருக்கும் கரடுமுரடான மலைப்பகுதியில் ஏசா சஞ்சரித்து வந்தான் என்று அறிகிறோம் (ஆதி.33:16; 36:8,9; உபா.2:4,5). அந்தப் பகுதி ஏதோம் (கிரேக்க மொழியில் "இதுமேயா" என்று அழைக்கப்படுகிறது). அகோபா வளைகுடா பகுதிக்கு 100 மைல் தெற்கே 40 மைல் பரப்பிற்கு விரிந்து இருக்கும் இடம் இது. பிரபலமான "ராஜபாதை" (எண்.20:17) வடக்கு ஆப்பிரிக்காவை ஆசியா மற்றும் ஐரோப்பா கண்டங்களுடன் இணைக்கும் ஒட்டக வழிப்பாதை இந்த கிழக்கு பீடபூமி வழியாகச் செல்கிறது. கர்ப்பத்தில் பிள்ளைகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு ஏசாவும் யாக்கோபும் பிறந்தது இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது (ஆதி.25:23) என்னும் கர்த்தரின் தீர்க்கதரிசன வார்த்தை நிறைவேறுவதற்கு பலத்த பிண்ணனியாக அமைந்துள்ளது. அவர்களின் வழித்தோன்றல்களாக இருந்த இஸ்ரவேல் மற்றும் ஏதோம் தேசத்தார் நிரந்தர எதிரிகளாக இருந்தனர். இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியேறிய போது, அவனது சகோதரனான யாக்கோபு சாக்கடலின் தெற்கே அமைந்துள்ள ஏதோமின் தேசம் வழியாக செல்ல அனுமதி மறுக்கப்பட்டது (எண்.20:14-21). இருப்பினும், இஸ்ரவேலர் ஏதோமியரிடத்தில் அன்பாக இருக்கவேண்டும் என தேவன் கட்டளையிட்டிருந்தார் (உபா.23:7,8). ஏதோமியர் இஸ்ரவேலருடன் தவறாக நடந்து கொண்டபடியால், ஒபதியா-தேவனிடத்தில் இருந்து தரிசனத்தைப் பெற்றதும், ஏதோமியரின்*

குற்றங்களை அவர்களிடம் விவரித்து அவர்கள் முற்றிலும் அழிக்கப்பட்டுப் போவார்கள் என்பதனை அறிவிக்க அனுப்பப்பட்டார்.

ஏதோமியர் சவுலை எதிர்த்தனர் (கி.மு.1043-1011), ஆனால் அவர்கள் தாவீதினால் கி.மு 1011-971 வரைக்கும் சாலமோனால் கி.மு.971-931 வரைக்கும் அடக்கி வைக்கப்பட்டனர். யெகோசபாத்திற்கு விரோதமாக யுத்தம் செய்தனர் (கி.மு.873-848) யெஹோராமை (கி.மு.853-841) வெற்றிகரமாக எதிர்த்து நின்றனர். ஏதோமியர் யூதாவின் ராஜா அமத்சியாவின் (கி.மு.796-767) காலத்தில் முறியடிக்கப்பட்டனர் எனினும் ஆகாஸ் ராஜா (கி.மு.735-715) அரசாண்டபோது தங்கள் சுதந்திரத்தை மீட்டுக்கொண்டனர். ஏதோம் பின்நாட்களில் அசீரியா மற்றும் பாபிலோன் ராஜ்யத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது; கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் நபாட்டியன்களால் (Nabateans) எதோமியர் அவர்களது பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அங்கிருந்து வெளியேறியவர்கள் இஸ்ரவேலின் தெற்கு பகுதியில் குடியேறினர், அந்த பகுதியில் இதுமேயர் என்று அழைக்கப்பட்டனர். ரோம சாம்ராஜ்யத்தில் கி.பி. 37-ல் இதுமேயனாகிய ஏரோது ராஜா யூதர்களுக்கு ராஜாவாகிறார். ஒருவிதத்தில் ஏசா மற்றும் யாக்கோபிற்கு இடையில் இருந்த பகை, ஏரோது இயேசுவை கொல்ல வகை தேடியதில் தொடர்கிறது எனக் காண்கிறோம். ரோமர்களுக்கு விரோதமாக மேற்கொண்ட யுத்தத்தில் இதுமேயர்கள் பங்கு கொண்டனர், ஆனால் கி.பி. 70-ல் தீத்து இராயனால் யூதர்களோடு சேர்ந்து இதுமேயர்களும் தோற்கடிக்கப்பட்டனர். முரண்பாடான ஒரு விஷயத்தை இங்கு காண்கிறோம், கி.மு. 586-ல் எருசலேமை அழித்துப் போட்டோம் என்று மெச்சினவர்கள் (சங்கீதம் 137:7) கி.பி. 70-ல் அதனை பாதுக்காக்க போராடிய போது தோற்றுப்போனார்கள் என்று காண்கிறோம். அந்நாட்களுக்குப் பின் ஏதோமியரைக் குறித்து குறிப்பு நாம் எங்கும் காணவில்லை. ஒபதியா தீர்க்கதரிசனமாக

*வசனம் **10**-ல் ''நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டுப் போவாய்'' என்று சொல்லியபடியே ஏசாவின் வம்சத்தில் மீதியிராதபடி பட்சிக்கப்பட்டுப் போனார்கள் (வசனம் **18**).*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*ஆதியாகமம் **12:1-3**-ல் சொல்லப்பட்டிருக்கும் சாபங்கள்/ஆசீர்வாதங்களின் ஆய்வு படிப்பே ஒபதியா புத்தகம், இதில் இரண்டு கருப்பொருட்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருக்கின்றன. முதல் கருப்பொருள்: இஸ்ரவேலை சபித்ததினால் தேவன் ஏதோமியரை நியாயம் தீர்த்தத்து வெளிப்படையாக இது யூதாவிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது ஏதோமியரின் பெருமையினிமித்தமும் யூதாவின் வீழ்ச்சிக்கு காரணமாக ஏதோமியர் இருந்ததினிமித்தமும். கர்த்தர் தாமே நியாயம் தீர்ப்பார் என்று மீண்டும் உறுதியாக சொல்லப்பட்டிருந்தது. இரண்டாவது கருப்பொருள்: யூதாவின் மறு சீரமைப்பு, இதில் ஏதோமியரின் பகுதியை மீட்டெடுப்பதும் அடங்கும் (வசனம் **19-21**; ஏசாயா **11:14**).*

*யூதாவை ஒபதியா ஆசீர்வதித்த ஆசீர்வாதத்தில் ஏதோமின் மரணம் (வசனம் **1-14**) தேசத்தின் நியாயத்தீர்ப்பின் நிறைவேற்றம் மற்றும் இறுதியில் இஸ்ரவேல் ஏதோம் தேசத்தை கைப்பற்றும் என்பவையும் அடங்கும் (வசனம் **15-21**).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*ஆச்சரியப்படுத்தும் வகையில், ஒபதியா **1-9** வசனங்களுக்கும் எரேமியா **49: 7-22** வசனங்களுக்கும் இடையில் ஒற்றுமை காணப்படுவதில் - எழுதின ஆக்கியோன் யார் யாரிடம் இருந்து கடன்வாங்கினர்கள் என்று தெரியவில்லை. பொதுவான ஆதாரம் என ஒன்று இராதபடியால், எரேமியா தான் ஒபதியாவிடம் இருந்து வாங்கியிருக்க வேண்டும். ஏனென்றால், மேலே*

சொல்லப்பட்ட வசனங்கள் ஒபதியா புத்தகத்தில் ஒரே இடத்தில் இருக்கின்றன ஆனால் எரேமியா புத்தகத்தில் பல வசனங்களுக்குள் கலந்து இருக்கின்றன என்பது மேல் சொல்லும் கூற்றுக்கு சரியான ஒரு காரணமாக இருக்கலாம்.

**சுருக்கம்**

***I. ஏதோமியரை தேவன் நியாயம் தீர்த்தல் (1-14)***

*அ. ஏதோமின் தண்டனை (1-9)*

*ஆ. ஏதோமின் குற்றங்கள் (10-14)*

***II தேசங்கள் மீது தேவனின் நியாயத்தீர்ப்பு (15,16)***

***III. இஸ்ரவேலை தேவன் மீண்டும் சீரமைத்தல் (17-21)***

# யோனா

## தலைப்பு:

*எபிரேய மசோரெட்டிக் (MT) உரையினைத் தொடர்ந்து, யோனா புத்தகத்தின் முதன்மை நபரின் பெயரையே இந்த புத்தகம் தலைப்பாகப் பெற்றுள்ளது. யோனா என்பதற்கு “புறா” என்று அர்த்தம். இவர் அமித்தாயின் குமாரன் (1:1). கிரேக்க செப்டுவஜிண்ட் (LXX) மற்றும் லத்தீன் வுல்கேட்(Vg.) மொழிபெயர்ப்புகளும் இதே பெயரையே இப்புத்தகத்திற்கு தந்துள்ளன.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*இந்த புத்தகத்தில் இவர் தான் ஆசிரியர் என்று உரிமை கோரும் வார்த்தைகள் எங்கும் இல்லை. புத்தகம் முழுவதும், யோனா மூன்றாம் நபராக அழைக்கப்பட்டிருப்பதால், சிலரை இந்த புத்தகத்தை எழுதியது வேறு எவராக இருக்ககூடுமோ என தேடச் செய்கிறது. மூன்றாம் நபராக சித்தரித்து எழுதுவது என்பது பழைய ஏற்பாட்டிற்கு ஒன்றும் புதிதானது அல்ல (எ.கா., யாத்.11:3; 1சாமு.12:!1). மேலும் இப்புத்தகத்தில் சுயசரிதையாக கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்கள் யோனா தான் இதன் ஆசிரியர் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. அசாதாரணமான சம்பவங்களும் அனுபவங்களும் யோனா தானே சொல்லும் போது தான், அவை முதலாவது நபரிடம் இருந்து கிடைக்கும் செய்தியாக இருப்பின், தலை சிறந்தவைகளாக இருக்கும். ஓசியா, யோவேல், மீகா, செப்பனியா, ஆகாய் மற்றும் சகரியா புத்தகங்களிலும் இப்புத்தகத்தின் ஆரம்பவரிகள் போன்ற ஓர் ஒற்றுமை காணப்படுகின்றன.*

*2ராஜா. 14:25-ன்படி, யோனா நாசரேத் அருகில் இருக்கும் காத்தேப்பேர் என்ற ஊரில் இருந்து வந்தார். இந்த சூழ்நிலையை வைத்து பார்க்கும் போது, யோனா நீண்ட செழிப்பான*

*யெரோபெயாம் II (கி.மு.793-753) வின் வாழ்ந்தவர் என்றும், ஆமோஸின் வருகைக்கு முன் வட கோத்திரத்தாருக்கு எட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் (கி.மு.760) எழும்பிய தீர்க்கதரிசி என அறிகிறோம். "ஒரு தீர்க்கதரிசியும் கலிலேயாவில் இருந்து வரவில்லை" என பரிசேயர்கள் சொன்னது தவறு - ஏனென்றால் யோனா ஓர் கலிலேயர். சாரிபாத் விதவையின் மரித்த மகனை எலியா மீண்டும் உயிரோடு எழுப்பினாரே, அந்த மகன் தான் யோனா என சரிபார்க்கப்படாத யூத பாரம்பரியம் கூறுகிறது (1ராஜா.17:8-24).*

*[H2[பின்னணி மற்றும் அமைப்பு*

*இஸ்ரவேலரின் 10 வடக்கு கோத்திரத்தாருக்கு தீர்க்கதரிசியாக ஆமோஸ் தீர்க்கதரிசியின் பின்னணி மற்றும் அமைப்பை யோனா பகிர்ந்து கொள்கிறார். தேசம் மற்ற நாட்களை ஒப்பிட்டுபார்க்கும் போது சமாதானத்துடன் செழிப்பாக இருந்தது. சிரியா மற்றும் அசீரியா இரண்டு தேசங்களுமே பெலவீனப்பட்டு இருந்தன. அதினால் யெரோபெயாம் II ராஜா தாவீது மற்றும் சாலமோன் காலத்தில் இருந்த அளவிற்கு இஸ்ரவேலரின் வடக்கு எல்லையை விரிவாக்கி இருந்தார் (2ராஜா.14:23-27). ஆவிக்குரிய வாழ்வில் அது வறுமையின் நாட்கள், சடங்குகள் நிறைந்த மற்றும் விக்கிரக ஆராதனை பெருகி, நியாயம் நெறிதவறிய நாட்கள் அவை. சமாதானமும் செல்வமுமான காலங்கள் ஆவிக்குரிய, தார்மீக, நெறிமுறை வாழ்வில், மிக மோசமான நிலைக்கு கொண்டு சென்றிருந்தது (2ராஜா.14:24; ஆமோஸ் 4:1; 5:10-13). இதன் தண்டனையாக கி.மு. 722-ல் அசீரியர்கள் படையெடுத்து வர தேவன் அனுமதித்து, தேசத்தில் அழிவு உண்டாகி, சிறைப்பட்டுப் போனது. கி.மு.765 மற்றும் கி.மு.759-ல் ஏற்பட்ட கொள்ளை நோய்கள் மற்றும் கி.மு763-ல் ஏற்பட்ட சூரிய கிரகணம் நினிவேயின் மனம்திரும்புதலுக்கு உதவியது. மேலும் யோனாவின் நியாயத்தீர்ப்பின் எச்சரிப்பிற்கு தேசத்தை ஆயத்தப்படுத்தியது.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*யோனா இஸ்ரவேலருக்கு தீர்க்கதரிசியாக இருந்தாலும், இஸ்ரவேலில் எங்கும் அவரது தீர்க்கதரிசன ஊழியம் அறியப்படவில்லை. இதுவே பரிசேயர் இயேசுவின் நாட்களில் கலிலேயாவில் இருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்பவில்லை என்று தவறுதலாக (யோவான் 7:52) கேட்கும்படிச் செய்தது. மாறாக, இஸ்ரவேல் மற்றும் யூதா தேசத்திற்கு பல வருடங்களாக விரோதியான - அசீரியர்களின் தலைநகர் - கொடுஞ்செயலுக்கு பெயர் பெற்றிருந்த - நினிவே பட்டணத்திற்கு மனம்திரும்புதலை கூற அழைக்கப்பட்டிருந்தார் எனவும் அவர் நினிவே பட்டணத்திற்குச் செல்ல மறுத்தார் எனவும் நாம் காண்கிறோம். நோவாவின் கொள்ளுப்பேரன் நிம்ரோத்தினால் (ஆதி.10:6-12) நிறுவப்பட்டிருந்த புறஜாதியாரின் பட்டணமே இந்த புத்தகத்தின் மையமாக இருக்கிறது. பண்டைய காலத்தில் அறியப்பட்டிருந்த பட்டணங்களிலேயே மிகப்பெரிய பட்டணமாக இருந்த இது (1:1; 3:2,3; 4:11), யோனாவின் வருகையினால் அவர் காலத்து தலைமுறையினர் மனம்திரும்பினாலும், அதற்குபின் 150 வருடங்கள் கழித்து கி.மு.612-ல் நாகூம் (நாகூம்1:1) தீர்க்கதரிசனமாக உரைத்தது போலவே அழிக்கப்பட்டது. அரசியல் ரீதியாக இஸ்ரவேல் அசீரியரை வெறுத்தது உடன் தேவனுடைய உடன்படிக்கையின் ஆசீர்வாதத்தை பெற்றவர்கள் என்ற ஆவிக்குரிய மேட்டிமையும் சேர்ந்து, யோனாவை பணித்தள ஊழியத்திற்கு தேவன் அழைத்த போது, கீழ்ப்படியாத ஒரு மனப்பான்மையை யோனாவிற்குள் ஏற்படுத்தியது. இஸ்ரவேலோ அனேக தீர்க்கதரிசிகள் வந்து பிரசங்கித்தும் மனம் திருந்தாது இருந்தது. ஆனால் தேவனை அறியாத மக்கள் மத்தியில் அன்னியன் ஒருவன் வந்து பிரசங்கிக்கையில் அத்தேசத்தினர் மனம்திரும்பினர் என்று அறிந்து, இஸ்ரவேல் வெட்கப்படும்படிக்கே - நினிவே பட்டணத்திற்கு யோனா அனுப்பப்பட்டார். சீக்கிரத்தில்*

*அவருடைய உடன்படிக்கைக்குள் இருக்கின்ற மக்கள் மத்தியில் மட்டுமல்ல (ஆதி:9:27; 12-3; லேவி.19:33,34; 1சாமு.2:10; ஏசாயா:2:2; யோவேல்:2:28-32), ஏனைய மனுஷர் மற்றும் மிருக ஜீவன்களிடத்திலும் கூட தேவனுடைய அன்பும் இரக்கமும் காட்டப்படுகிறது என்பதைக் கற்றுக் கொண்டார் (4:2,10,11).*

**சுருக்கம்**

***I. ஏதோமியரை தேவன் நியாயம் தீர்த்தல் (1-14)***

*அ. ஏதோமின் தண்டனை (1-9)*

*ஆ. ஏதோமின் குற்றங்கள் (10-14)*

***II தேசங்கள் மீது தேவனின் நியாயத்தீர்ப்பு (15,16)***

*[H3[III. இஸ்ரவேலை தேவன் மீண்டும் சீரமைத்தல் (17-21)*

# *மீகா*

## *தலைப்பு:*

*கர்த்தருடைய வார்த்தையைப் பெற்று அதனை அறிவிக்க கட்டளை பெற்ற தீர்க்கதரிசியின் பெயர் இந்த புத்தகத்திற்கு தலைப்பாகப் பெறப்பட்டது. மீகா என்னும் பெயர் - பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் இருக்கின்ற வேறு சிலருடன் பங்கிடப்படும் பெயர் (நியா.17:1; 2நாளா.13:2; எரேமியா 36:11), இப்பெயர் மிகயா (அல்லது மிக்காயா) என்னும் பெயரின் சுருக்கமான வடிவம். இப்பெயரின் அர்த்தம் கர்த்தரைப்போல் வேறு யார் உண்டு? என்பதாகும். வசனம் 7:18ல் தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? என்று மீகா தன்பெயரை வைத்தே கர்த்தரைப் புகழ்வதைக் காணலாம்.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*முதல் வசனமே மீகா தான் இதன் ஆசிரியர் என்பதை உறுதி செய்கிறது - அதற்கும் மேல் மீகாவை குறித்து ஏதும் அறிந்து கொள்ள முடியவில்லை. அவர் பெற்றோர் பெயர் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இவரின் பெயரை வைத்து நல்ல தெய்வீக குடிபிறந்தவர் என நிச்சயிக்கலாம். மொரேசா, யூதாவின் மலையடிவாரத்தில் எருசலேமுக்கு ஏறக்குறைய 25 மைல் தென்மேற்கில், யூதா, பெலிஸ்தா எல்லையில் காத் ஊருக்கு அருகாமையில் இருந்த ஊர், இதுவே இவரது பிறந்த ஊர் என்கிறார் (1:1,14). விவசாய உற்பத்தி தேசத்தில் இருந்து, ஆமோஸைப்போல் தேசத்தில் வாழ்ந்தவர். அரசியல் மற்றும் மதமார்க்கத்திலிருந்து வெளியேறியவர் எனினும் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர் (3:8). எருசலேம் பிரபுக்களுக்கும் ஜனங்களுக்கும் நியாயத்தீர்ப்பின் செய்தியை சொல்லும்படிக்கு தெரிந்தெடுக்கப்பட்டவர்.*

யோத்தம் (கி.மு.750-731), ஆகாஸ் (கி.மு.731-715) மற்றும் எசேக்கியா (கி.மு.715-686) ராஜாக்களின் ஆட்சிகாலத்தில் மீகா தீர்க்கதரிசனம் உரைத்தவர். சமூக அநீதிகள் மற்றும் மதமார்க்கத்தில் இருந்த ஊழல் குற்றங்களை எடுத்துரைத்ததினால், ஆமோஸ் (எட்டாம் நூற்றாண்டின் மைய்ய நாட்கள்) மற்றும் அவருடைய சமகாலத்தில் வடக்கு பகுதியில் இருந்த ஓசியா (கி.மு.755-710) மற்றும் ஏசாயா (கி.மு.739-690) கற்றுத்தந்த கருத்துக்களை இவரது வார்த்தைகள் புதுப்பித்தது. இந்த புதுப்பித்தல் ஆகாஸின் (2ராஜா.16:10-18) குணாதிசயத்துடன் பொருந்தியது. மேலும் அவருடைய மகன் எசேக்கியா ராஜாவின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு (2நாளா.29; 31:1) முந்தைய நாட்களில் நிறைவேறியது. சீக்கிரமே சமரியா வீழ்ச்சியடையப் போகிறது என இவர் வசனம் 1:6ல் தெரிவிப்பதில் இருந்து இவரது காலம் கி.மு.722-ற்கு முன்பும் ஏறக்குறைய கி.மு.735-710-ற்கும் இடைப்பட்ட காலம் எனக் கருதப்படுகிறது.

## பின்னணி மற்றும் அமைப்பு

கி.மு.722-ல் மீகாவின் ஊழிய காலத்தில் வடக்கு பிராந்திய தேசம் அசீரியரின் கைகளில் விழப்போகிறது என்று அறிந்திருந்தபடியால், மீகா தன் செய்திகளின் தேதியை யூதா தேசத்து ராஜாக்களுடன் இணைத்து கூறியிருப்பதைக் காணலாம். இஸ்ரவேல் தேசம் இவருடைய வார்த்தைகளுக்கு அரிதாகவே செவிகொடுத்தப்படியால் (1:5-7), இவரது முதன்மையான கவனம் அவர் வாழ்ந்த தென்தேசத்து ராஜ்யத்தின் மீதே இருந்தது. யெரோபெயாம் II ராஜாவின் காலம் (கி.மு.793-753) பொருளாதாரத்தில் செழிப்பு, அயல்தேசத்தாருடன் யுத்தமில்லை என்பதால் பொற்காலம் எனலாம். தாவீது மற்றும் சாலமோனின் ராஜ்ய காலத்தில் பெற்றிருந்த எல்லைகளை யூதா மற்றும் இஸ்ரவேல் தேசங்கள் பெற்றிருந்தன (2ராஜா.14:23-27). சிரியா மற்றும் இஸ்ரவேல்

*தேசம் யூதா தேசத்தை தோற்கடித்து கொடிய ஆகாஸ் ராஜாவை சிறைபிடித்து வந்தன (2நாளா. 28:5-16; ஏசா.7:1,2). அசீரியா சிரியா மற்றும் இஸ்ரவேல் தேசத்தை தோற்கடித்தபின், நல்ல ராஜா எசேக்கியா அசீரியர்களிடம் தான் கொண்டிருந்த பற்றுறுதியினை விலக்கிக்கொண்டார். அதினால், செனாகெரிப் எருசலேமை கி.மு.701ல் முற்றுகையிட்டது (2ராஜா.18,19; 2 நாளா.32). பின்னர் தேவன் யூதாவை விடுவிக்க தமது தூதுவர்களை அனுப்பினார் (2நாளா. 32:21). யூதா தேசம் மெய்தேவனை ஆராதிக்கும்படி திருப்பிட, வழிநடத்த தேவன் எசேக்கியா ராஜாவை பயன்படுத்தினார்.*

*கி.மு.739-ல் உசியா ராஜாவின் செல்வ செழிப்பான ஆட்சி காலத்திற்குப்பின், அவருடைய மகன் யோதாம் தகப்பனின் கொள்கைகளைப் பின்பற்றினார், ஆனால் விக்கிரக மையங்களை அகற்றவில்லை. உள்ளே புரையோடிக்கொண்டிருக்கு சமூக ஊழல்கள் மற்றும் சமய ஒத்திசைவுகளை மறைக்க வெளிப்புறத்தில் காணப்பட்ட செழிப்பு அவர்களுக்கு உதவியது. கானானிய கருவுறுதலுக்கான-தேவதை பாகால் வணக்கம் அதிமதிகமாய் பழைய ஏற்பாட்டு பலிகள் முறைமைகளுடன் கலக்கப்பட்டது. இது ஆகாஸ் ராஜாவின் காலத்தில் மிக அதிக அளவில் தொற்றுநோய் போல் மாறிவிட்டிருந்தது (2நாளா.28:1-4). சமாரியா வீழ்ச்சியடைந்த போது யூதா தேசத்திற்குள் ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாக பிரவேசித்தனர், உடன் அவர்களது சமய ஒத்திசைவுகளையும் கொண்டுவந்தனர். மீகா (ஓசியா தீர்க்கதரிசிபோல்) இந்த பிரச்சினையை எடுத்து கையாண்ட போதிலும், இவர் உரைத்த கடுமையான எச்சரிப்புக்கள் சமூக மற்றும் தனிப்பட்டநபர்களின் குணகுறைபாடுகளை மட்டுமே கண்டிப்பதாக இருந்தது (உதாரணமாக:7:5,6). அந்நாட்களில் அசீரியாவின் கை மேலோங்கி இருந்து வந்தது, அப்போது மீகா- உரைத்த அசீரியர்களின் பிடியில் இருக்கும் யூதாவை பாபிலோன் தோற்கடிக்கும் (4:10) என்ற தீர்க்கதரிசன வார்த்தைகள்*

*நிறைவேறாது என்பது போன்று ஜனங்களுக்கு தோன்றியது. எப்படி இஸ்ரவேலருக்கு ஆமோஸ் தீர்க்கதரிசி இருந்தாரோ அப்படி மீகா யூதா தேசத்தினருக்கு இருந்தார்.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*விடாப்பிடியாக பொல்லாப்பையே செய்து வந்த ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பின் செய்தியை அறிவித்து வந்ததே மீகாவின் தலையாய செய்தி. ஏனைய ஒப்பான தீர்க்கதரிசிகளைப்போல், மீகா தீர்க்கதரிசன செய்தியினை சட்டத்தின் அடிப்படை வார்த்தைகளால் அறிவித்தார் (1:2; 6:1,2). தீர்க்கதரிசனம் மூன்று அடுக்கு தேவ வாக்காக / சுழற்சிகளாக அமைக்கப்பட்டுள்ளது - ஒவ்வொன்றும் "செவிகொடுத்து கேளுங்கள்" என்ற அறிவுரையுடன் ஆரம்பிக்கின்றன. ஒவ்வொரு அடுக்கின் உள்ளேயும், பேரழிவில் இருந்து நம்பிக்கைக்கு கடத்திச் செல்கிறார். சீனாய் மலையில் தரப்பட்ட தேவனுடைய பிரமாணங்கள் மீறப்பட்டதால் பேரழிவுக்கு நேராகவும், அவர்களுடைய மூதாதையருடன் தேவன் மாறாத உடன்படிக்கையை (7:20) ஏற்படுத்தியிருந்தபடியால் நம்பிக்கைக்கு நேராகவும் நடத்தினார். ஜனங்களின் பாவத்தைக் குறித்து புத்தகத்தின் மூன்றில் ஒரு பங்கு பேசுகிறது, அடுத்த மூன்றில் ஒருபங்கு வரவிருக்கும் தேவனுடைய தண்டனையை குறித்தும் அடுத்து இருக்கும் மூன்றில் ஒருபங்கு நியாயதீர்ப்பிற்கு பின் உண்மையாக/பற்றுறுதியுடன் இருப்பவர்களுக்கு நம்பிக்கையை வாக்களிக்கிறது. ஆக, தவிர்க்கமுடியாத பாவத்தினை கண்டிக்க இருக்கும் தெய்வீக தண்டனையும் அவருடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் மீது அவருக்குள்ள மாறாத பற்றுறுதியும் ஒன்று சேருகிறது என்ற கருப்பொருளை இதில் காண்கிறோம். இக்கருப்பொருள் எதினால் ஆக்கப்பட்டிருக்கின்றது என்றால் 1) பாவத்தை நியாயம் தீர்ப்பதில் முழுமையான நிச்சயம்; 2) மீந்திருக்கும் அவருடைய ஜனங்களுடன் தேவன் தனது உடன்படிக்கையை பாதுகாப்பதில்*

இருந்து அவரே இப்பிரபஞ்சம் முழுமையையும் அரசாளுபவர் என்னும் தேவனுடைய குணாதிசயத்தை இச்செய்தியைக் கேட்பவருக்கு வெளிப்படுத்துகிறது. தெய்வீக இடைபடுதலால் பாவிகள் மீது நியாயத்தீர்ப்பை அவர் கொண்டுவருவார் மற்றும் மனம்திரும்புவோருக்கு அவர் ஆசீர்வாதத்தை கட்டளையிடுவார் என்பதை நாம் இந்த தீர்க்கதரிசன புத்தகத்தில் இருந்து அறிந்து கொள்ள வேண்டும்.

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

மீகா 4:1-3 மற்றும் ஏசாயா 2:2,4 ல் நாம் காணும் செங்குத்தான ஒற்றுமை - யார் யாரை குறிப்பிடுகின்றனர் என்ற கேள்வியை எழுப்புகிறது; இதற்கு விளக்கம் கொடுக்கும் இரண்டு குழுவினரும் தெளிவான ஒருபதிலும் விளக்கமாக தராமல் பிரிந்து இருக்கின்றார்கள். இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் நெருக்கமான இடங்களில் வாழ்ந்து வந்தனர், ஒரே காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்துவந்தனர் என்னும் ஒற்றுமையை நாம் எளிதில் புரிந்துகொள்ள முடியும். தேவன் தாமே ஒரே செய்தியை இரண்டு தீர்க்கதரிசிகள் மூலமாக தந்தார். ''கடைசி நாட்களில்'' என்ற 4:1-ஆம் வசனத்தின் ஆரம்ப வரிகள் நாடுகடத்தப்பட்ட நாட்களுக்கு பின் நிறைவேறும்படி இருக்கிறது என்ற கருத்தை நீக்கி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் அதை தொடர்ந்து வரும் ஆயிரம் வருட அரசாட்சி காலயியல் குறித்துள்ள கால கட்டத்திற்கு உரிய வரிகள் என்ற நிச்சயம் உண்டாகிறது.

ஏசாயா 2:2-4 தவிர, மீகாவின் வேறு மூன்று வசனங்கள் வேதாகம வாக்கியங்களில் மேற்கோளாக காட்டப்பட்டு இருக்கின்றன. மீகா 3:12, எரே.26:18-ல் மேற்கோளாக காட்டப்பட்டு யோயாக்கீமின் கரங்களில் இருந்து தீர்க்கதரிசி எரேமியாவை மீகா 3:12 வார்த்தைகள் பாதுகாத்தன. மீகா 5:2 பிரதான ஆசாரியர்களாலும் வேதபாரகராலும் மத்.2:6ல் மேசியாவின் பிறப்பிடம் குறித்து எரோது ராஜா கேட்ட போது

*எடுத்தாளப்பட்டது. மத்.10:35,36-ல் இயேசு தம் சீஷர்களுக்கு அதிகாரம் கொடுத்து அனுப்பும் போது மீகா 7:6-ல் காணும் வார்த்தைகளை எடுத்துப் பயன்படுத்துகிறார்.*

**சுருக்கம்**

***I.* மேல்எழுத்து *(1:1)***

***II.* தேவன் நியாயம் தீர்க்கவும் விடுவிக்கவும் ஒன்று சேர்க்கிறார் *(1:2 - 2:13)***

*அ. சமரியாவும் யூதாவும் தண்டிக்கப்பட்டது (1:2-16)*

*ஆ. ஒடுக்குபவர்கள் நியாயம் தீர்க்கப்பட்டார்கள் (2:41-5)*

*இ. கள்ள தீர்க்கதரிசிகள் கைவிடப்பட்டனர் (2:6-11)*

*ஈ. விடுதலைக்கான வாக்குதத்தம் (2:12,13)*

***III.* தேவன் ஆள்பவர்களை நியாயம்தீர்த்து விடுவிக்க வந்தார் *(3:1- 5:15)***

*அ. நிகழ்கால தலைவர்கள் குற்றவாளிகள் (3:1-12)*

*ஆ. வரப்போகும் தலைவர் விடுவிப்பார் மேலும் மீட்டு சீரமைப்பார் (4:1 - 5:15)*

***IV.* தேவன் குற்றச்சாட்டையும் இறுதி விடுதலையையும் கொண்டுவருகிறார் *(6:1 - 7:20)***

*அ. கண்டித்தல் மற்றும் புலம்பலின் செய்திகள் (6:1-7:6)*

*ஆ. நம்பிக்கை மற்றும் வெற்றியின் செய்திகள் (7:7-20)*

# ***நாகூம்***

## ***தலைப்பு:***

*அசீரியாவின் தலைநகர் - நினிவேக்கு விரோதமாக தேவனின் வாக்கை தீர்க்கதரிசனமாக உரைத்தவரின் பெயர் இந்த புத்தகத்திற்கு தலைப்பாக தரப்பட்டுள்ளது. நாகூம் என்பதற்கு ஆறுதல் அல்லது தேற்றுதல் என்று அர்த்தம். மேலும், இது நெகேமியா (யாவே என் ஆறுதல்) என்ற வார்த்தையின் சுருக்கம். ரோமர் 10:15ல் சொல்லியிருப்பது நாகூம் 1:5 என ஒரு சந்தேக குறிப்பு இருந்தாலும் நாகூம் புதிய ஏற்பாட்டில் எங்கும் மேற்கோளாக காட்டப்படவில்லை.*

## **புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி**

*தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த வாழ்க்கையை குறித்து எழுதுவது அவர்களுக்கு முக்கியம் அல்ல, அவர்களுடைய செய்தியே முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, தீர்க்கதரிசன வார்த்தைகளில் இருந்து அவர்கள் வாழ்க்கையினைப் பற்றித் தெரிந்து கொள்வது அரிது. நமக்கு தேவையான வாழ்க்கை குறிப்பினை நாம் வரலாற்று புத்தகங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம். எல்கோசான் என்று 1:1 வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை தவிர இவரைப் பற்றி வேறு எந்த தகவலும் இல்லை; இந்த எல்கோஸ் அவரது பிறந்த இடம் அல்லது ஊழியம் செய்த இடத்தை குறிக்கிறது. எல்கோஸ் பட்டணம் இருக்கும் இடத்தை அறிய எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன. நாகூம் பிறந்த இடம் வடக்கு ஈராக் பகுதியில் உள்ள அல்குஸ், (அசீரியாவிற்கு கி.மு.722-வில் நாடுகடத்தப்பட்டவர்களின் வம்சவழி வந்தவராக நாகூம் இருக்கலாம்), கப்பர்நகூம் (நாகூமில் காணும் பட்டணம்) அல்லது யூதா தேசத்திற்கு தெற்கில் உள்ள ஓர் இடமாக இருக்கலாம் என அறியப்படுகிறது. அவருடைய பிறந்த இடம்*

*அல்லது வாழ்ந்த இடம் - இவரது புத்தகத்திற்கு விளக்கம் அளிக்க எந்த விதத்திலும் முக்கியமானதாக இல்லை.*

*புத்தக அறிமுகத்தில் எந்தவொரு ராஜாவின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. ஆதலால் நாகூம் தீர்க்கதரிசன காலத்தை வரலாற்றுத் தரவுகளின் வழியாகவே அறிந்துகொள்ள முடியும். நியாயத்தீர்ப்பின் செய்தி நினிவே பட்டணத்திற்கு விரோதமாக வந்த போது அத்தேசம் பலங்கொண்டிருந்தது, அது வீழ்ச்சியடைந்த கி.மு.612க்கு முன் உள்ள நாட்கள், கி.மு.626-ல் அசூர்பனிபால் மரணம் சம்பவித்தது அதற்கும் முந்தைய நாட்கள் எனச் சுட்டிக்காட்டுகிறது. அசூர்பனிபாலின் மரணத்திற்குப் பின் அசீரியர்களின் பலம் மிகவேகமாக குன்றினது.*

*தேபாஸ் என்றும் அழைக்கப்பட்ட நோஅம்மோன் கி.மு.663ல் (அசூர்பனிபாலின் கரங்களில்) வீழ்ந்தது; அந்த நினைவுகள் பசுமையாக நாகூம் வசனம் 3:8-10-ல் குறிப்பிட்டிருக்கிறபடியால், இச்சம்பவத்திற்கு 10 வருடங்களுக்கு பிற்பாடும் எழுப்புதல் ஏற்படாததால், இப்புத்தகத்தின் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி என்றும், மனாசே ராஜா அரசாண்ட காலம் எனவும் பரிந்துரைக்கப்படுகிறது (கி.மு. 695-642; 2ராஜா.21:1-18).*

## பின்னணி மற்றும் அமைப்பு

*யோனாவின் பிரசங்கத்தில் மனம்திரும்பிய நினிவே பட்டணம் ஒரு நூற்றாண்டிற்குப்பின், விக்கிரகாராதனை, வன்முறை மற்றும் ஆணவத்திற்குத் திரும்பியது (3:1-4). எருசலேமில் சனகெரிப்பின் தோல்வியில் (கி.மு.701) இருந்து மீண்டு, அசீரியா அதன் பலத்தின் உச்சத்தில் இருந்தது (ஏசா.37:36-38). அசீரியாவின் எல்லை எகிப்து வரை பரவியிருந்தது. எஸ்ரஹதோன் கி.மு.607-ல் சமாரியா மற்றும் கலிலோயாவை வெற்றிசிறந்து ஜனங்களை இடமாற்றம் செய்திருந்தார் (2ராஜா.17:24; எஸ்றா 4:2). இதினால் சிரியாவும் இஸ்ரவேலும் பெலவீனப்பட்டு இருந்தன.*

*வளர்ந்து வந்த பாபிலோனிய ராஜா நபோபோலஷார் மற்றும் அவருடைய மகன் நெபுகாத்நேச்சாரின் (கி.மு.612) ராஜ்யபாரத்தில் தேவன் நினிவேயை தாழ்த்தினார். தேவனுடைய தீர்க்கதரிசன வார்த்தையின்படியே, அசீரியா மரணித்தத்து.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*நூற்றாண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசனம் உரைத்த யோனா புத்தகத்தின் தொடர்ச்சியாக நாகூம் இருக்கிறது. நினிவேயை குறித்து தேவன் நிச்சயம் நிறைவேறும் என்று சொன்ன நியாயத்தீர்ப்பினை உரைக்கிறார், பின்நாட்களில் நாகூம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறுவதை சித்தரிக்கிறார். நினிவேயின் சுவர்கள் 100 அடியும், 90 அடி ஆழமும் 150 அடி அளவிலான அகழிகளைக் கொண்டிருந்ததால் - தான் அழிக்கப்படமுடியாத பட்டணம் என்று பெருமை கொண்டிருந்தது. சர்வத்தையும் ஆளும் தேவன் அவருடைய பிரமாணங்களை மீறினவர்களை (1:8,14; 3:5-7) பழிதீர்ப்பார் என்று நிச்சயமாகச் சொல்கிறார். பொல்லாப்பினை நியாயம் தீர்க்கும் அதே தேவன் மீட்பவராக, தமது உண்மையுள்ளவர்களுக்கு அன்பினை பொழிபவராக இருக்கிறார் (1:7,12,13,15;2:2). நாகூமின் தீர்க்கதரிசன வார்த்தைகள் யூதர்கள் மற்றும் அசீரியருக்கு பயந்திருந்த யாவருக்கும் ஆறுதலைக் கொண்டுவந்தது.*

*நாகூம் 1:8-ல் "புரண்டுவருகிற வெள்ளத்தினால் சங்காரம் பண்ணுவார்" என்கிறார். அப்படியே டைகிரிஸ் நதி சுவர்களை அழிக்கத்தக்கதான அளவிற்கு புரண்டோடியது அதினால் பாபிலோனியர்கள் உட்பிரவேசித்தார்கள். பட்டணம் வெறிகொண்டு ஒளித்துக் கொள்வாய் என்று 3:11-ல் முன்கூட்டியே நாகூம் அறிவித்தார். கி.மு.612-ல் நிர்மூலமான பிறகு, இந்த இடம் கி.பி.1942-ல் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

எல்கோஸ் என்ற பட்டணம் கண்டறிப்பட்ட முடியாமல் இருக்கின்றது என்பதைத் தவிர இந்த தீர்க்கதரிசன புத்தகம் வேறு எந்த இடத்திலும் விளக்கம் அளிப்பதில் சவாலாக இல்லை. அசீரியர்களுக்கு விரோதமாக, அதன் தலைநகர் நினிவேயின் அக்கிரமம் மற்றும் விக்கிரகாராதனை மீறல்களுக்கு விரோதமாக வந்த தீர்க்கதரிசன அறிவிப்பு தான் இந்த நாகூம் தீர்க்கதரிசன புத்தகம்.

## சுருக்கம்

*I.* **மேல்எழுத்து (1:1)**

*II.* **நினிவே அழிக்கப்படு என்று அறிவிக்கப்பட்டது (1:2 —15)**

*அ. தேவனின் வல்லமை விளக்கமாகச் சொல்லப்பட்டது (1:2-8)*

*ஆ. தேவனுடைய தண்டனை கூறப்பட்டது (1:9-15)*

*III.* **நினிவேயின் அழிவு விபரமாக (2:1-13)**

*அ. பட்டணம் திடீரென தாக்கப்பட்டது (2:1-10)*

*ஆ பட்டணம் அவமதிக்கப்பட்டது (2:1-10)*

*IV. நினிவே அழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை (3:1-19)*

*அ. முதல் குற்றச்சாட்டு (3:1-3)*

*ஆ. இரண்டாம் குற்றச்சாட்டு (3:1-3)*

*இ. மூன்றாம் குற்றச்சாட்டு (3:1-3)*

# ஆபகூக்

## *தலைப்பு:*

*இப்புத்தகத்தை எழுதின ஆசிரியரின் பெயரில் இருந்து, இந்த புத்தகம்-அதன் தலைப்பை பெறுகிறது. இப்பெயரின் அர்த்தம் "அரவணைப்பவர்" (1:1; 3:1) என்பது. இப்புத்தகத்தின் இறுதியில், தேவன் அவருடைய ஜனங்களுக்காக கொண்டிருக்கக்கூடிய திட்டங்களை குறித்து ஒரு குழப்பான சூழ்நிலை வரும் போது சூழ்நிலையைப் பொறுப்படுத்தாமல், தீர்க்கதரிசி தேவனை இறுகப்பற்றிக் கொள்வதைக் காணும்போது, இந்த புத்தகத்தின் பெயர் பொருத்தமானதே என்று தோன்றும்.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*மற்ற சிறிய தீர்க்கதரிசிகளைப் போலவே, இந்த புத்தகத்தில் உள்ள தகவல்கள் தவிர வேறு எங்கும் தீர்க்கத்தரிசியைக் குறித்ததான தகவல்கள் இல்லை. ஆபகூக்கைப் பொறுத்தவரை, உள்ளே தகவல்கள் ஏதும் இல்லை, இதினால் இவரின் அடையாளம் மற்றும் வாழ்க்கையைக் குறித்ததான தகவல்கள் யூகமானவை. "ஆபகூக் என்னும் தீர்க்கதரிசி" என்று இவர் எழுதும் ஆரம்பவரிகளில் இருந்து இவர் வாழ்ந்த நாட்களில் நன்கு அறியப்பட்டிருந்த ஒரு தீர்க்கதரிசி எனவும் இவருக்கு அறிமுகம் தேவையில்லை எனவும் அறிந்து கொள்கிறோம். ஆபகூக் - எரேமியா, எசேக்கியேல், தானியேல் மற்றும் செப்பனியா தீர்க்கதரிசிகளின் சமகாலத்தவர்.*

*கல்தேயர்கள் குறித்த குறிப்பு 1:6-ல் இருப்பதால், புத்தகம் எழுதிய காலம் ஏழாம் நூற்றாண்டின் கடைசி காலமாக இருக்கலாம் - நெபுகாத்நேச்சார், நினிவே (கி.மு.612) ஆரான் (கி.மு.609) மற்றும் கர்கேமிஸ் (கி.மு.605) - எருசலேமிற்குச் செல்லும் வழியில் கைப்பற்றிய காலத்திற்கு முன்பதாக இருக்கும்*

என கருதப்படுகிறது. ஆபகூக்கின் கசப்பான புலம்பல் (1:2-4) இருப்பது இப்புத்தகம் தேவனின் வழிநடத்துதலின்படி பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்த யோசியா (கி.மு.605) மரித்த குறுகிய காலத்திற்குப் பின் இருக்கலாம் (2ராஜா.23) எனக் கருதப்படுகிறது. யோசியா கொண்டுவந்த சீர்திருத்தங்களை அவரைப் பின்பற்றி வந்த யோயாக்கீம் (எரே.22:13-19) தலைகீழாக மாற்றிப் போட்டான்.

## பின்னணி மற்றும் அமைப்பு

அசீரிய பேரரசின் கடைசி நாட்கள் மற்றும் பாபிலோனியாவின் உலகம் முழுவதும் வியாபித்து இருந்த ஆட்சி நெபோபோலஷார் மற்றும் அவரது மகன் நெபுகாத்நேச்சாரின் ஆட்சிகாலத்தில் ஆபகூக் தீர்க்கதரிசனம் உரைத்தார். நபோல்பொலசார் கி.மு.626ல் பதவிக்கு வந்த உடனே, வடக்கேயும் மேற்கேயும் தன் அதிகாரத்தை விரிவாக்கத் தொடங்கினார். அவர் மகனின் தலைமையின் கீழ் கி.மு.612ல் நினிவேயை பாபிலோனிய சேனை மேற்கொண்டது. இது முதலில் ஆரானிலும் பின் கர்கேமிஸிலும் அசீரிய பிரபுக்கள் ஆட்சிசெய்ய வழிவகுத்தது. நெபுகாத்நேச்சார் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று ஆரானை கி.மு.609-லும் கர்கேமிஸ் கி.மு.605லும் கைப்பற்றினார்.

கி.மு609ல் எகிப்திய ராஜா நேகோ, யூதாவின் வழியாக ஓடிப்போகும் அசீரிய ராஜாவிற்கு உதவும்படி பிரயாணம் செய்து வந்த போது, மெகிதோ என்னும் இடத்தில் யோசியா ராஜா அவனை எதிர்த்து யுத்தம் செய்ய புறப்பட்டார் (2நாளா.35:20-24). யோசியா இந்த யுத்தத்தில் மரித்துப் போனார், அது அவருக்குப் பின் அவருடைய மூன்று குமாரர்களும், அவருடைய பேரனும் அவரைத்தொடர்ந்து அரியணை ஏற வழி வகுத்தது. இதற்கு முன்பு, நியாயப்பிரமாண புத்தகம் தேவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட போது, யோசியா ராஜா யூதாவில் அவரது தகப்பன் ஆமோன் (2ராஜா.21:20-22) மற்றும் அவரது பாட்டன்

*மனாசே (2ராஜா.21:11-13) செய்து வந்த விக்கிரகாராதனை முறைகளை ஒழித்து, ஆவிக்குரிய வாழ்க்கையில் முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார் (2ராஜா.22,23). அவருடைய மரணத்திற்குப்பின் தேசம் திரும்ப தன் பொல்லாத வழிகளுக்குத் திரும்பியது (எரே.22:13-19), தேவன் நீர் ஏன் மௌனமாக இருக்கிறீர் எனவும் அவரது உடன்படிக்கையின் ஜனங்கள் சுத்திகரிக்கும்படி - வெளிப்படையாக ஏன் தண்டிக்கப்படவில்லை என்பதையும் ஆபகூக் கேள்வி கேட்கும்படி செய்தது.*

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

*ஆமோஸ் மற்றும் மீகா தீர்க்கதரிசியின் காலத்தில் இருந்த வரலாற்றுச் சூழ்நிலை போன்ற ஒரு சூழ்நிலையை முதல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. தேசத்தில் இருந்து நியாயம் ஒழிந்து போயிருந்தது; கொடுமையும் பொல்லாப்பும் தேசத்தில் மலிந்து, ஒருவரும் கண்டிக்கப்படாது இருந்தது. இப்படிப்பட்ட இருள் சூழ்ந்த நாட்களில், தேவன் இடைபட வேண்டும் என தீர்க்கதரிசி வேண்டிக்கொள்கிறார் (1:2-4). கல்தேயர்களை அனுப்பி, யூதா தேசத்தை நியாயம் விசாரிப்பேன் என்பதே தேவனுடைய பதில் (1:5-11). இது ஆபகூக்கிடம்: தேவன் ஏன் அவருடைய ஜனங்களை சிட்சித்து, அவர்களுடைய நீதியை துளிர்த்து எழச்செய்திருக்கலாமே? மாறாக, கல்தேயரைக்காட்டிலும் நீதியில் சிறந்த அவருடைய ஜனங்களிடத்தில் கல்தேயரை அனுப்பி நியாயம் விசாரிக்க வேண்டியதன் அவசியம் என்ன? என்ற ஓர் இறையியல் கேள்வியை எழுப்பியது (1:12 -2:1). கல்தேயரையும் நியாயம் விசாரிப்பேன் என்ற தேவனின் பதில் தீர்க்கதரிசியின் இறையியல் கேள்விக்கு முழுமையான திருப்தியை அளிக்கவில்லை. சொல்லப்போனால், இன்னும் அதிக கேள்விகளையே தீர்க்கதரிசியிடம் எழுப்பியது. பொல்லாப்பிற்கு தேவன் பதில் அளிக்கவேண்டும் என்பது ஆபகூக்கின் சிந்தையில் இருந்த*

பிரச்சினை இல்லை, தேவன் அவருடைய ஜனங்களுடன் கொண்டிருக்கும் உடன்படிக்கை மற்றும் தேவனின் குணாதிசயம் நியாயப்படுத்தப்பட வேண்டும் என்பதே அவர் கேட்டுக்கொண்ட தீர்மானம் (1:13). யோபுவைப் போல - ஆபகூக் தீர்க்கதரிசி தேவனுடன் வாதிட்டார்; ஆனால், அந்த அனுபவத்தின் முடிவில் - சகலத்தையும் ஆளுகை செய்யும் தேவனின் குணத்தை அறிந்து தேவனிடத்தில் மேலும் உறுதியான விசுவாசத்தைக் காட்டுகிறார் (யோபு 42:5,6; ஏசா.55:8,9). தற்காலிக ஆசீர்வாதத்திற்காக தேவனை ஆராதிக்காமல், அவர் யாராக இருக்கின்றாரோ அதற்காக அவரை நாம் ஆராதிக்கவேண்டும் என்னும் சத்தியத்தை இறுதியில் ஆபகூக் உணர்ந்துகொண்டார் (3:17-19).

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

வாழ்க்கை முழுவதிற்கும் உள்ள அடிப்படை கேள்விகளுக்கு தீர்க்கதரிசி கேட்ட கேள்விகள் பிரதிநித்துவம் செய்கின்றன. அக்கேள்விகளுக்கு கிடைக்கும் பதில்களைக் கொண்டு நாம் தேவனுடைய குணாதிசயம் மற்றும் வரலாற்றில் அவரின் சர்வவல்லமையுடன் ஆளுகைசெய்யும் தேவனின் இறையாட்சி குறித்து சரியான அடிப்படையைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றன. இவரின் செய்தியின் மையம், ”தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்” என்று தேவனை விசுவாசிக்க விடுக்கும் அழைப்பில் இருக்கிறது (2:4). இறையியல் அடிப்படையில் புதியஏற்பாட்டு குறிப்புகள் வழக்கத்திற்கு மாறான முக்கியத்துவத்தை ஆபகூக் புத்தகத்திற்கு தந்துள்ளன. எபிரேயர் ஆசிரியர் - ஆபகூக் 2:4-ஐ எடுத்து பயன்படுத்தி விசுவாசி அவனுக்கு நேரிடும் சோதனைகள் மற்றும் துன்பங்களில் வலிமை வாய்ந்தவர்களாக, விசுவாசத்துடன் இருக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை எபிரேயர் 10:38ல் பேசுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல், இந்த வார்த்தைகளை இரண்டுமுறை - ரோமர் 1:17; கலாத்தியர் 3:17ல் - விசுவாசத்தினால்

நீதிமான்கள் ஆகிறோம் என்ற உபதேசத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க எடுத்து பயன்படுத்துகிறார்.

இப்படி குறிப்புகளுக்கு விளக்கம் அளிப்பதில் எந்தவொரு முரண்பாடுகளும் இல்லை; புதிய ஏற்பாட்டு குறிப்புகள் விசுவாசம் என்ற செயலுக்கும் மேலாக விசுவாசத்தின் தொடர்ச்சியான நிலையையும் உள்ளடக்கி இருக்கின்றன. விசுவாசம் என்பது ஒரே ஒரு சமயத்தில் நடந்து கொள்ளும் செயல் அல்ல, அது வாழும் வழி. உண்மை விசுவாசி, தேவனால் நீதிமான் என பலர் அறிய அறிவிக்கப்பட்டவன் - விடாமுயற்சியுடன் பழக்கத்தினால் - தன் விசுவாசத்தில் தன் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருப்பான் (கொலோ.1:22,23; எபி.3:12-14). எப்பொழுதும் நன்மையானதை மட்டுமே செய்யும்- சர்வவல்லமையுடன் ஆளுகை செய்யும் தேவனை விசுவாசிப்பான்.

**சுருக்கம்**

***I. மேல்எழுத்து (1:1)***

***II. தீர்க்கதரிசியின் குழப்பங்கள் (1:2—2:20)***

*அ. அவரின் முதல் குற்றச்சாட்டு (1:2-4)*

*ஆ. தேவனுடைய முதலாம் பதில் (1:5-11)*

*இ. அவரின் இரண்டாம் குற்றச்சாட்டு (1:12-2:1)*

*ஈ. தேவனுடைய இரண்டாவது பதில் (2:2-20)*

***III. தீர்க்கதரிசியின் ஜெபம்(3:1-19)***

*அ. தேவனுடைய இரக்கத்திற்காக மன்றாடுதல்(3:1,2)*

*ஆ. தேவனுடைய வல்லமையை துதித்தல் (3:3-15)*

*இ. தேவன் போதுமானவர் என்ற வாக்குதத்தம்(3:16-19)*

# செப்பனியா

## தலைப்பு:

ஏனைய சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள் போலவே, இந்த தீர்க்கதரிசியின் புத்தகமும் அதன் ஆசிரியரின் பெயரையே தலைப்பாக பெற்றுள்ளது. இப்பெயரின் அர்த்தம் - "கர்த்தர் மறைக்கிறார்" (2:3).

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

செப்பனியாவைக் குறித்து மிகச்சிறிய அளவிலேயே அறியப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் வேறு மூன்று நபர்கள் இப்பெயருடன் காணப்படுகிறார்கள். இவர் தன்னுடைய வம்சவழியை முந்தைய நான்காவது தலைமுறை எசேக்கியா ராஜா (கி.மு. 765 - 686) மட்டும் அடையாளம் கண்டுபிடித்துள்ளார். இதினால் தீர்க்கதரிசிகளின் மத்தியில் ராஜ வம்சத்தில் வந்த ஒரு தீர்க்கதரிசி என்று தனித்து நிற்கிறார் (1:1). இவர் ராஜ வம்சத்தில் வந்தபடியால் அந்நாட்களில் இவர் பிரசங்கித்த போது யூதாவை ஆண்டுவந்த யோசியா ராஜா செவிகொடுத்து கேட்கச் செய்திருக்கலாம்.

யோசியா ஆட்சி செய்த (கி.மு. 640-609) காலத்தில் என தீர்க்கதரிசியே தன் செய்திகளுக்குரிய காலத்தைக் குறித்திருக்கிறார். தேசத்தின் தார்மீக மற்றும் ஆவிக்குரிய நிலைமைகளை (1:4-6; 3:1-17) பார்க்கும் போது, யூதா விக்கிரகாராதனை மற்றும் பொல்லாப்பில் திளைத்து - யோசியாவின் சீர்திருத்தங்களுக்கு முன் உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள் இவை என்பதாக காண்கிறோம். கி.மு.628-ல் யோசியா பாகால்களின் விக்கிரகத்தோப்புகளை தகர்த்து, பலிபீடங்களை தகர்த்து, விக்கிரங்களை நொறுக்கி தூளாக்கி, எல்லாச் சிலைகளையும் வெட்டிப்போட்ட பின்பு (2நாளா.34:7-

*8) கள்ள தீர்க்கதரிசிகளின் எலும்புகளைச் சுட்டெரித்துப் போட்டார் எனக் காண்கிறோம். கி.மு.622ல் மோசேயின் நியாயப்பிரமாண புத்தகம் கண்டெடுக்கப்பட்டது (2நாளா.34:8 - 35:19). தொடர்ந்து, செப்பனியா கி.மு.635-625 வரை தீர்க்கதரிசனம் உரைத்திருக்கலாம் மேலும் இவர் எரேமியாவின் சமகாலத்தில் வாழ்ந்தவர்.*

## பின்னணி மற்றும் அமைப்பு

*அரசியல்ரீதியாக, அசீரியர்கள் சர்வ உலகத்தின் மீதும் கொண்டிருந்த அதிகாரம் பாபிலோனியர்களுக்கு கைமாறியபோது, நினிவே யூதாவின் மீது கொண்டிருந்த பிடி தளர்ந்து, 50 வருடங்களுக்குப் பின் யூதா தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்தது. வரிச்சுமையில் இருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் கிடைத்த இந்த சுதந்திரம், யோசியா ராஜாவை, பயந்து ஓடிக்கொண்டிருந்த நினிவேயின் ராஜாவை (கி.மு.609; 2நாளா.35:20-27) எகிப்து தடைசெய்ய முயற்சித்த போது, அதில் தலையிடச் செய்தது என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. ஆவிக்குரிய ஜீவியத்தில், எசேக்கியா ராஜாவின் மகன் மனாசேயின் (கி.மு.695-642) 40 வருடங்களுக்கு மேலான ஆட்சி, மற்றும் எசேக்கியாவின் பேரன் ஆமோனின் (கி.மு.642-640 வரை) இரண்டுவருடம் ஆட்சி காலம் முழுவதும் பொல்லாப்பும் எதிர்ப்பும் நிறைந்ததாக இருந்தன (2ராஜா.21; 2நாளா. 33). யோசியாவின் ஆரம்பகால ஆட்சிகாலமும் கூட அவருடைய தகப்பனின் ஆட்சிகாலத்தைப்போல பொல்லாப்பு நிறைந்ததாகவே இருந்தது (2ராஜா.23:4). கி.மு.622-ல் கர்த்தருடைய ஆலயத்தில் பழுதுநீக்கும் வேலை நடந்து கொண்டிருந்த போது, பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா நியாயப்பிரமாண புத்தகத்தைக் கண்டெடுத்தார் (2ராஜா.22:8). அந்த புத்தகத்தை ராஜாவாகிய யோசியா வாசித்த பின், அனேக சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார் (2ராஜா.23). யோசியாவின் ஆரம்ப காலங்களில், மிகப்பெரிய எழுப்புதல் உண்டாவதற்கு*

முன், செப்பனியா உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகள் நிச்சயமாக யோசியா ராஜா கொண்டுவந்த பல சீர்திருத்தங்களில் தாக்கத்தை ஏற்படுத்தின எனலாம். ஆனால், யோசியாவிற்கு முன் 55 வருடங்கள் ஆட்சிசெய்த ராஜாக்களின் பொல்லாப்புக்களை திருத்த முடியாமல் யோசியா ராஜா கொண்டுவந்த சீர்திருத்தங்கள் யூதா தேசத்தின் மீது குறுகிய காலம் மட்டுமே பலன் தருவதாக இருந்தன. யோசியா கொண்டுவந்த சீர்திருத்தங்கள் காலம் கடந்து வந்தாலும் அவருடைய வாழ்நாட்களுக்குள்ளேயே செயல் இழந்து போயின.

## இறையியல் மற்றும் வரலாற்று கருப்பொருட்கள்

கர்த்தருடைய நாளில் செப்பனியாவின் செய்தி —கடைசி நாட்கள் மிக நெருக்கமாக இருக்கின்றன; நெபுகாத்நேச்சார் ராஜா மூலமாக வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சமீபமாக இருக்கின்றது என்று யூதா தேசத்தை எச்சரித்தன (கி.மு.605–586; வசனம்1:4–13). ஆனாலும், தானியேல் தீர்க்கதரிசனமாக உரைத்த 70–வது வார நியாயதீர்ப்பு (1:18;3:8) நிறைவேறுவதற்கு தூரமானதாகவே இருந்தன. ''கர்த்தருடைய நாள் சமீபித்திருக்கிறது (1:7) என எச்சரித்த - சமீபத்தில் இருக்கும் நாள்— கோபாக்கினை, பிரச்சினை, துன்பம், அழிவு, பாழடைதல், அந்தகாரம். இருள், மப்பும் மந்தாரமான நாட்கள், அடர்ந்த இருள், எக்காளம் மற்றும் எச்சரிப்பின் சத்தம் நிறைந்த நாளாக இருக்கும் (1:15,16,18). இப்படிப்பட்ட தேவ கோபாக்கினை- தேவ வாக்கின் மத்தியிலும் தீர்க்கதரிசி ஜனங்களை கர்த்தரைத் தேடும்படி புத்திசொல்கிறார் - நியாயத்தீர்ப்பின் மத்தியிலும் ஒருமறைவிடம் உண்டு எனவும், மீந்திருக்கும் அவருடைய விசுவாசிகளுக்கு இறுதியில் இரட்சிப்பு உண்டு என்ற வாக்குதத்தத்தையும் அறிவிக்கிறார் (2:7; 3:9–20).

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*பாவத்தைக்குறித்து ஒரு தெளிவற்ற கண்டனத்தை இந்த புத்தகம் முன்வைக்கிறது, மேலும், யூதா தேசத்தின் மீது விரைவில் நிறைவேற இருக்கின்ற நியாயத்தீர்ப்பையும் முன்வைக்கிறது. நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன் (3:9) என்னும் வார்த்தைகள் பாபேல் கோபுரம் கட்டப்படுவதற்கு முன் பூமியனைத்தின் மீதும் வழங்கின (ஆதி.11:1-9) ஒரே பாஷையாக இருந்தது - போல உண்டாகும் என்பதை இந்த வசனம் குறிக்கின்றது என சிலர் குறிப்பிடுகின்றனர். ஆதி.11:7லிலும் பாஷை என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது, இங்கேயும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்கிறார்கள். இந்த வசனம் இருதயத்திலும் வாழ்க்கையிலும் உண்டாக இருக்கும் சுத்தத்தை குறிக்கிறது என நாம் எடுத்துக்கொள்வது நலமாகும். இதனை 3:13ஆம் வசனம் உறுதிசெய்கிறதாக இருக்கின்றது. இதில் நாம் கவனிக்க வேண்டியது பொதுவாக ''பாஷை'' என்ற வார்த்தை பொதுவாக - "உதடு" என்று மொழிபெயர்க்கப்படும்; இதனை நாம் ''சுத்தம்'' என்ற வார்த்தையுடன் சேர்த்து பார்த்தால், உள்ளான மனிதனின் பாவம் சுத்திகரிக்கப்பட்டதும் (ஏசா.6:5) வெளிப்படுகிற பேச்சினை இந்த வசனம் குறிக்கிறது என அறிகிறோம் (மத்தேயு 12:34 காண்க) - இதில் அந்நிய தேவர்களின் பெயர் முதல் கொண்டு அவர்கள் உதடுகளில் இருந்து நீக்கப்படும் என்பதும் அடங்கும் (ஓசியா2:17), இது பூமியனைத்தின் மீதும் ஒரே பாஷை என்பதை குறிக்கவில்லை.*

**சுருக்கம்**

***I. மேல்எழுத்து (1:1)***

***II. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு (1:2 - 3:8)***

*அ. பூமியனைத்தின் மீதும்(1:2,3)*

*ஆ. யூதாவின் மீது (1:4-2:3)*

இ. சுற்றி இருக்கும் தேசங்களின் மீது *(2:4-15)*

1. பெலிஸ்தியா *(2:4-7)*

2. மோவாப் / அம்மோன் *(2:8-11)*

3. எத்தியோப்பியா *(2:12)*

4. அசீரியா *(2:13 -15)*

## III. கர்த்தருடைய ஆசீர்வாதம் (3:9-20)

அ. தேசங்களுக்கு*(3:9-20)*

ஆ. யூதா தேசத்திற்கு *(3:11-20)*

# ஆகாய்

## *தலைப்பு:*

*இந்த தீர்க்கதரிசனபுத்தகம் அதன் ஆசிரியரின் பெயரையே தலைப்பாகப் பெற்றுள்ளது. ஏனென்றால், அவருடைய பெயரின் அர்த்தம் ''விழா கொண்டாட்டம்'' என்பது. இதனால் இவர் ஒரு பண்டிகை நாளில் பிறந்திருப்பார் எனக் கருதப்படுகிறது. பழையஏற்பாட்டில் ஆகாய் புத்தகம்தான் இரண்டாவது குறுகிய புத்தகம் (ஒபதியா முதல் புத்தகம்), புதிய ஏற்பாட்டில் ஒரே ஒருமுறை குறிப்பு எடுத்துப் பயன்பட்டிருக்கிறது.*

*[H2[புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி*

*சிறிய தீர்க்கதரிசன புத்தகம் - ஆகாய் குறித்து குறைந்த அளவே விபரங்கள் அறியமுடிகிறது. எஸ்றா **5:1; 6:14**ல் இவரைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு இடங்களிலும் சகரியா தீர்க்கதரிசியினுடன் தொடர்புபடுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. எஸ்றாவில் காணப்படும் அகதிகளின் பட்டியலில் ஆகாயின் பெயர் இல்லை. இவர் ஒருவரே இந்த பெயரை பழைய ஏற்பாட்டில் பெற்றிருக்கிறார். ஆனால் இப்பெயருக்கு ஒத்த வேறு பெயர்கள் கொண்ட அனேகர் இருக்கின்றனர் (ஆதி.**46:16**; எண்.**26:15**; **2**சாமு.**3:4**; **1**நாளா.**6:30**). ஆகாய் **2:3**, ஆசிரியர் சாலமோனின் தேவாலயம் இடிக்கப்படுவதற்குமுன் அதன் மகிமையைக் கண்டவர் எனக்கூறுகிறது. இத்தீர்க்கதரிசன புத்தகத்தை எழுதும் போது இவருக்கு குறைந்தது **70** வயது இருந்திருக்கலாம்.*

*எந்தவொரு குழப்பமோ, முரண்பாடோ இத்தீர்க்கதரிசன வார்த்தை வெளிப்பட்ட நாள் குறித்து இல்லை. இவரின் **4** தீர்க்கதரிசனங்கள் சூழ்நிலைகள் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது (**1:1; 2:1; 2:10; 2:20**). பெர்சிய ராஜா தரியு ஹிஸ்டபெஸின் (கி.மு.**521-486**) இரண்டாம் வருடத்தின்*

*4 மாத கால இடைவெளியில் தீர்க்கதரிசனங்கள் யாவும் நிகழ்ந்தன (கி.மு 520). கி.மு.538-ல், 18 வருடங்களுக்கு முன் பாபிலோனில் இருந்து எருசலேமுக்கு செருபாபேலுடன் ஆகாய் திரும்பியிருக்க வேண்டும்.*

## *பின்னணி மற்றும் அமைப்பு*

*கி.மு.538ல் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் (எஸ்றா1:1-4) பிரகடனத்தால், இஸ்ரவேலர் பாபிலோனில் இருந்து தங்கள் சொந்த தேசத்திற்கு சமூகத் தலைவர் செருபாபேலின் தலைமையிலும், பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் ஆவிக்குரிய வழிநடத்துதலின் கீழ் திரும்பினர் (எஸ்றா 3:2). ஏறக்குறைய 50,000 யூதர்கள் நாடு திரும்பினர். கி.மு.536ல் அவர்கள் ஆலயத்தை திரும்ப கட்ட ஆரம்பித்தனர் (எஸ்றா3:1 - 4:5). ஆனால் பக்கத்து தேசத்தாரின் எதிர்ப்பு மற்றும் யூதர்களின் அலட்சியத்தால் அந்த வேலை கைவிடப்பட்டது (எஸ்றா4:1-24). பதினாறு ஆண்டுகளுக்குப் பின் ஆகாய் மற்றும் சகரியா தீர்க்கதரிசிகள், தேவனின் கட்டளைகளான ஜனங்களை 1) தேவாலயத்தை திரும்பக்கட்ட மட்டுமல்ல, 2) ஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வின் முன்னுரிமைகள் சீரமைக்கவும் அழைப்பை விடுத்தனர் (எஸ்றா 5:1 - 6:22). இதன் விளைவாக, தேவாலயம் 4 வருடங்கள் கழித்து கட்டி முடிக்கப்பட்டது (காலம் கி.மு.516; எஸ்றா 6:15).*

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*கி.மு.586ல் நெபுகாத்நேச்சார் ராஜாவால் தகர்க்கப்பட்டு இடிக்கப்பட்ட தேவனுடைய ஆலயத்தை திரும்ப கட்டுதல் என்பதே முக்கியமான கருப்பொருள். கர்த்தரிடத்தில் இருந்து பெற்ற 5 செய்திகளின் வாயிலாக ஆகாய் கர்த்தருடைய வீட்டை திரும்ப கட்டுவதற்கான முயற்சிகளை ஜனங்கள் திரும்ப*

*புதுப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தி வந்தார். தேசத்தில் வறட்சியும், தானியங்களின் விளைச்சலில் குறைச்சலும் உண்டாயிருக்கிதற்கான காரணம், ஜனங்கள் தங்கள் ஆவிக்குரிய முன்னுரிமைகளை சீர் செய்யாதிருப்பதே; எனவே, சீர் செய்ய வேண்டுமென ஆகாய் ஜனங்களை ஊக்குவித்தார்(1:9-11). தேவனுடைய ஆலயத்தை திரும்ப எடுத்து கட்ட வேண்டும் என்பது மட்டும் ஆகாய் கொண்டிருந்த நோக்கத்தின் முடிவு அல்ல. தேவன் வாசம் செய்யும் இடம், அவர் தெரிந்தெடுத்த ஜனங்களிடம் அவரின் வெளிப்படுத்தும் பிரசன்னம் நிறைந்த இடம் இது என குறிப்பிட்டுக் காட்டும் இடமாக தேவாலயம் இருந்தது. நெபுகாத்நேச்சாரால் ஆலயம் இடிக்கப்பட்டது, தேவன் வாசம் செய்வதால் உண்டாகும் மகிமையை வெளியேறச் செய்தது. (எசே.8-11). தீர்க்கதரிசியைப் பொறுத்தவரை ஆலயத்தை திரும்ப கட்டுதல் என்பது அவர்கள் மத்தியில் தேவனுடைய பிரசன்னம் திரும்ப வந்ததாக அர்த்தப்படுத்தியது. நிலவிய வரலாற்றுச் சூழ்நிலையை ஆரம்ப நாளாக எடுத்துக்கொண்டு, இறுதியாக வரவிருக்கும் மேசியாவின் ஆலயத்தின் மகிமையை ஆகாய் வெளிபடாக அறிவித்தார் (2:7), அதினால் அவர்களுக்கு மேலான சமாதான நாட்கள், செழிப்பு (2:9) தெய்வீக உறவு (2:221,22) மற்றும் தேசிய ஆசீர்வாதத்தின் நாட்கள் ஆயிரம் வருட அரசாட்சியின் நாட்களில் இருக்கிறது என்ற வாக்குத்தத்தத்தை தந்து உற்சாகப்படுத்தினார்.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் என்று 2:7-ல் இருக்கக்கூடிய வார்த்தைகள் தான் விளக்கம் அளிப்பதில் அதிக தெளிவில்லாததாக இருக்கிறது. இதற்கு மொழிபெயர்ப்புகள் அனேகம் இருந்தாலும் விளக்கம் என்னவோ இரண்டு மட்டுமே இருக்கின்றன. 2:8-ல் வருகிற வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்ற வார்த்தைகளையும், ஏசா.60:5 மற்றும் சகரியா 14:14 வசனங்களையும் மேற்கோள்காட்டி, சிலர்*

*இவ்வார்த்தைகள் ஏனைய தேசங்களின் செல்வங்கள் எருசலேமுக்கு ஆயிரம்வருட அரசாட்சியின் போது கொண்டுவரப்படும் என கருத்தில் போட்டியிடுகின்றனர் (ஏசா.60:11,61:6). சகல ஜாதியாரும் எதிர்பார்த்திருக்கிற விடுவிப்பவர் - மேசியாவைக் குறித்து இங்கே குறிப்பாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறபடியால், இக்கருத்தை தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். இந்த விளக்கத்தினை பழங்காலத்து ரபீமார்கள் மற்றும் ஆதி திருச்சபையும் ஆதரித்தனர், வசனத்தின் பின்பகுதியில் காணும் "மகிமை" என்ற வார்த்தை மேசியாவை குறிக்கிறது என்றும் எடுத்துரைக்கிறது.*

**சுருக்கம்**

*[H3[I. கீழ்ப்படியாமைக்காக கண்டித்தல் (1:1-11)*

***II. மீந்திருந்தவர்கள் பதிலளித்தனர் மேலும் திரும்பகட்டினர் (1:12 —15)***

***III. தேவனுடைய மகிமை திரும்ப வருதல் (2:1-9)***

***IV. மதம் அடிப்படையிலான கேள்விகள் (2:10-19)***

***V. கர்த்தரின் அரசாட்சி (2:20-23)***

வருடம் -மாதம்- நாள்

| | | |
|---|---|---|
| *2* | *6* | *1* |
| *2.* | *6* | *24* |
| *2* | *7* | *2* |
| *2.* | *9* | *24* |
| *2.* | *9* | *24* |

# சகரியா

## தலைப்பு:

*யூத மற்றும் கிறிஸ்தவ உலகளாவிய பாரம்பரியம், சகரியா தீர்க்கதரிசி தான் இந்த புத்தகத்திற்கு ஆசிரியர் என்பதனை அங்கீகரிக்கின்றன. இவரது பெயரை பழைய ஏற்பாட்டில் வேறு 29 மனிதர்களும் பெற்றிருக்கிறார்கள் - இந்த பெயரின் அர்த்தம் "கர்த்தர் நினைவில் வைத்திருக்கிறார்" என்பது. மேசியாவைக் குறித்து தீர்க்கதரிசிகள் எழுதின புத்தகங்களில் இப்புத்தகம் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்திற்கு அடுத்தபடியாக வரிசையில் இரண்டாவது புத்தகமாக இருக்கிறது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*எரேமியா மற்றும் எசேக்கியேல் போல சகரியாவும் ஆசாரியராக இருந்தார் (நெகேமியா 12:12-16). பாரம்பரியத்தின்படி, நெகேமியாவால் ஆரம்பிக்கப்பட்டு எஸ்றாவினால் தலைமை ஏற்று வழிநடத்தப்பட்ட 120 பேர் அடங்கிய மாபெரும் ஜெப ஆலயத்தின் பேரவையில் சகரியாவும் ஓர் அங்கத்தினர். இந்த பேரவைதான் பின்நாட்களில் தேசத்தை ஆளும் தலைவர்களைக் கொண்ட சனகெரிப்பு சங்கமாக உருமாறியது. சகரியா பிறந்தது பாபிலோனில், ஆனால் செருபாபேல் மற்றும் யோசுவாவின் தலைமையில் சொந்த தேசத்திற்கு திரும்பிய முதல் நாடு திரும்பினோர் கூட்டத்தாரோடு எருசலேம் வந்து, தன் பாட்டன் இத்தோவிடம் வந்து சேர்ந்தார் (நெகே.12:4). இவர் இத்தோவின் குமாரன் என்று அழைக்கப்பட்டிருப்பதை வைத்துப் பார்க்கும் போது (எஸ்றா5:1; 6:14; நெகே.12:16) சகரியாவின் தகப்பன் பெரேக்கியா - அவர் தகப்பனாருக்குப் பின் ஆசாரியராக பொறுப்பேற்கும் முன்னே சிறுவயதிலேயே மரித்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது.*

சகரியா புத்தகத்தின் ஆரம்பவரிகள், தரியு ராஜாவின் இரண்டாம் ஆண்டு கி.மு.520ல் எழுதப்பட்டது (1:1). பெர்சிய ராஜாவாகிய கோரேசு மரித்தபின் அவரைத் தொடர்ந்து எகிப்தை மேற்கொண்ட கேம்பிஸெஸ் (கி.மு.530-521) அரியணையில் அமர்ந்தார். அவருக்கு மகன் இல்லாதிருந்தது, அவர் தற்கொலை கொண்ட வேளையில் புரட்சியினை அடக்கி, தரியு அந்த பட்டத்திற்கு வந்தார். சகரியா ஆகாய் தீர்க்கதரிசியின் சமகாலத்தவர் - ஆகாய் அறிமுகத்தில் இருந்து அறிந்து கொள்வது ஆகாயின் ஊழிய நாட்களில் அவருக்கு 2 மாதங்களுக்கு பின் சகரியா தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்குகிறார். 2:4 வசனத்தில் வாலிபன் என அழைக்கப்படுவதால், ஆகாயைக் காட்டிலும் சகரியா வயதில் குறைந்தவராக இருந்திருக்கக்கூடும். இவரின் ஊழிய நாட்கள் எவ்வளவு என்பது உறுதியாக தெரியவில்லை.

இவரின் கடைசி தீர்க்கதரிசனத்தின் காலம் (7:1) இவரின் முதல் தீர்க்கதரிசனத்தில் இருந்து 2 வருடங்கள் கழித்து, குறிப்பிட்டுள்ளது, இவருடைய தீர்க்கதரிசன ஊழிய நாட்களும் ஆகாய் தீர்க்கதரிசியின் ஊழிய நாட்களும் ஒன்று போல் காணப்படுகிறது (கி.மு. 520-518). அதிகாரங்கள் 9-14 இவருடைய ஊழியத்தின் கடைசி நாட்களில் வெளிப்பட்டவை எனக் காணப்படுகிறது. எழுத்துநடையில் வித்தியாசம் மற்றும் கிரீஸ் தேசத்தை குறித்த குறிப்பு காணப்படுகின்றபடியால், தரியு ராஜாவின் காலம் கி.மு. 521-486க்கு பிறகு, கி.மு.480-470 காலத்தில், அதாவது எஸ்தரை பெரிசிய தேசத்து ராஜாத்தியாக மாற்றின அகாஸ்வேரு நாட்களில் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம். மத்தேயு 23:35-ன்படி தேவாலயத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையில் ஏற்கெனவே நாம் அறிந்திருக்கும் சகரியா கல்லெறிந்து கொலைசெய்யப்பட்டது போல (2நாளா.24:20,21) - இவரும் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## பின்னணி மற்றும் அமைப்பு

சகரியாவின் வரலாற்று பின்னணி மற்றும் அமைப்பு அவருடைய சமகாலத்து தீர்க்கதரிசி ஆகாயின் அமைப்பைப் போன்றதே. கி.மு.538ல் பெர்சிய ராஜா கோரேசு இஸ்ரவேலில் இருந்து சிறைபிடித்து வந்தவர்களை அவர்களது சொந்த தேசத்திற்குச் செல்ல விடுவித்தார் (எஸ்றா 1:1-4). அதில் ஏறக்குறைய 50,000 பேர் பாபிலோனில் இருந்து தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்பினர். அவர்கள் உடனடியாக தேவாலயத்தை திரும்ப எடுத்துக் கட்ட ஆரம்பித்தனர் (எஸ்றா 3:1 - 4:5), ஆனால் அண்டை நாட்டவரின் எதிர்ப்பினைத் தொடர்ந்து உள்நாட்டவரின் அலட்சியத்தால் ஆலயம் கட்டும் வேலை கைவிடப்பட்டது (எஸ்றா 4:24). பதினாறு வருடங்கள் கழித்து (எஸ்றா 5:1,2) ஆகாய் மற்றும் சகரியா தீர்க்கதரிசிகள் ஜனங்கள் தேவாலயத்தை திரும்பக் கட்டத் தூண்டும்படி, தேவனால் எழுப்பபட்டனர். இதினால், தேவாலயம் கி.மு. 516-ல் நான்கு வருடங்கள் கழித்து கட்டி முடிக்கப்பட்டது (எஸ்றா 6:15).

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

ஜனங்களை அலட்சியப்போக்கில் இருந்து வெளியேற்றி, தேவனுடைய ஆலயத்தை திரும்ப எடுத்துக்கட்ட அறைகூவல் விட்ட ஆகாய் தீர்க்கதரிசியுடன் சகரியாவும் சேர்ந்து கொண்டார். ஜனங்களின் அலட்சியப்போக்கை கண்டிப்பதாகவும், அவர்களின் பாவத்தை, தேவனிடத்தில் நம்பிக்கை இல்லாதிருந்ததை உணர்த்துவதாக ஆகாய் தீர்க்கத்ரிசியின் வார்த்தைகள் இருந்தன. ஆகாய் எழுப்புதலை ஏற்படுத்தியபொது, ஜனங்களின் விசுவாசத்தை பலப்படுத்துவதிலும், ஜனங்களை மனம்திரும்பசெய்வதிலும், அவர்களுக்குரிய எதிர்கால ஆசீர்வாதம் காத்திருக்கிறது என்ற நிச்சயத்தை அளிப்பதிலும் சகரியா பின் தொடர் பணிசெய்தார்.

*ஒருநாளில் மேசியா வந்து அந்த ஆலயத்தில் வாசம் செய்வார் என்று வாக்குத்தத்தம் இருக்கிறபடியால், ஆலயத்தை திரும்ப எடுத்து கட்டவேண்டும் எனக் கூறி சகரியா ஜனங்களை உற்சாகப்படுத்தினார். ஜனங்கள் ஆலயத்தைக் கட்டுவது தற்காலத்திற்காக மட்டும் அல்ல, எதிர்காலத்து நம்பிக்கையாகிய மேசியாவிற்காக கட்ட வேண்டும் என உற்சாகப்படுத்தினார். புறஜாதியாரினால் ஒடுக்கப்பட்ட (1:8-12) ஜனங்களிடம் சகரியா - கர்த்தர் ஜனங்களுக்கு அளித்த அவருடைய உடன்படிக்கையின் வாக்குதத்தங்களை நினைவில் கொண்டிருக்கிறார் எனவும் அவர்களை மீட்டெடுத்து, ஆசீர்வதிப்பார் என்ற உண்மையினைக் கூறி உற்சாகப்படுத்தினார். இந்த தீர்க்கதரிசன புத்தகத்தின் கருப்பொருளை ஒரு விதைபோன்று இப்புத்தகத்தின் தலைப்பின் "கர்த்தர் நினைவில் வைத்திருக்கிறார்" என்ற அர்த்தத்தில் அடங்கியிருக்கிறது.*

*அதிகமாக "பழைய ஏற்பாட்டின் தேவஅருள் வெளிப்பாடு" என அழைக்கப்படும் இந்த புத்தகம், சகரியாவின் முன் இருந்த உடனடி பார்வையாளர்களிடமும் பேசியது; அதேவேளையில் எதிர்காலத்தினரிடமும் பேசியது. இதனை நாம் இந்த தீர்க்கதரிசன புத்தகத்தின் அமைப்பிலேயே காணலாம்: இந்த புத்தகத்தை பிரிக்கும் மூன்று பிரிவுகளிலும் (1-6; 7-8; 9-14) வரலாற்றின் அடிப்படையில் தீர்க்கதரிசனத்தை எழுத தொடங்கி, பின் மேசியா அவருடைய ஆலயத்திற்கு திரும்ப வந்து, அவருடைய பூலோக ராஜ்ஜியத்தினை அமைக்கும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையினைக் குறித்து எழுதி முடிக்கிறார். தீர்க்கதரிசி ஜனங்களிடத்தில் மேசியா உடனடி மற்றும் நீண்டகால ஓர் அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளார் என்பதை நினைவுபடுத்தினார். தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நல்வார்த்தைகளாகவும் ஆறுதலான வார்த்தைகளாக (1:13) சகரியாவின் நாட்களில் நாடுகடத்தப்பட்டவர்களுக்கும்,*

*எதிர்கால நாளுக்கென்று தெரிந்தெடுக்கப்பட்டு சிதறி இருந்த தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களுக்கும் இருந்தது.*

*இந்த புத்தகம்தான் பழையஏற்பாட்டுபுத்தகங்களிலேயே மிக அதிகமாக மேசியாவை குறித்தும், உலகின் இறுதி அழிவுநாட்கள் குறித்தும், மறுமை வாழ்வைக் குறித்தும் பேசும் புத்தகமாக இருக்கிறது. இஸ்ரவேலருக்கு ஆறுதல் அளிக்க வரும் இயேசுவின் வரவிருக்கும் மகிமையைக் குறித்து தீர்க்கதரிசனமாக சொல்லும் ஒரு தீர்க்கதரிசன புத்தகம் சகரியாவின் புத்தகம் (1:13,17). இந்த புத்தகம், தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள், அடையாளங்கள், பரலோகத்தில் இருந்து வரும் தூதர்கள், மற்றும் தேவனுடைய சத்தம் போன்றவற்றினால் நிரம்பியிருந்தாலும் மனம் திரும்புதல், தெய்வீக பாதுகாப்பு, இரட்சிப்பு மற்றும் பரிசுத்த - வாழ்க்கை வாழ்வது போன்ற நடைமுறை விஷயங்கள் குறித்தும் பேசுகிறது. அடுத்து வரும் 400 வருடங்கள் தீர்க்கதரிசன அமைதி உண்டாகும்; பின்னர் யோவான் ஸ்நானகனின் வருகையின் போதே தீர்க்கதரிசனம் வெளிப்படும் என்பதால், எஞ்சியிருக்கும் உண்மையுள்ளவர்கள் இந்த தீர்க்கதரிசன அமைதி நாட்களில் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள ஏதுவாக, எதிர்காலத்திற்குரிய, ஆழமான, பரிபூரணமான வாக்குத்தத்தங்களை சகரியாவின் மூலமாக தேவன் வல்லமையாக வெளிகொண்டுவந்தார்.*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*வாசிப்பவ்ர்களுக்கு அனேக சவால்கள் இருந்தாலும், தீர்க்கதரிசனத்தின் இடையில் காணப்படும் இரண்டு பத்திகளின் கருத்துக்கள், குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கு விளக்கம் அளிப்பதில் சவால்களாக இருக்கின்றன. 11:8-ல் காணும் நல்ல மேய்ப்பர் "ஒரே மாதத்திலே மூன்று மேய்ப்பரையும் அதம்பண்ணினேன்;" என்ற வார்த்தைகள். வரையறுக்கும் சுட்டு இவ்வாக்கியத்தில் இருப்பது பரிச்சயத்தைச் சுட்டிக்காட்டுகிறது. அதினால் யூதர்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் மேய்ப்பர்கள்*

*யார் என்பதை மேலும் விளக்கம் தேவைப்படாமல் புரிந்துகொண்டிருப்பார்கள். ஆனால், இன்றைய நாகரீக வாசகர்கள் புரிந்து கொள்வது எளிதல்ல. அவர்களின் அடையாளம் குறித்து அனேக மாற்றுகருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இருப்பதிலேயே பழமையான, மேலும் சரியானதாக கருதப்படும் கருத்து - மூன்று தலவர்களின் வரிசை- ஆசாரியர்கள், மூப்பர்கள், வேதபாரகர்கள் என்பதை குறிக்கிறது என்கிறது. இயேசுவின் பூலோக ஊழியத்தில், அவரும் யூத மத தலைவர்களின் மாய்மாலத்தை கடுமையான கண்டனங்களுடன் எதிர்த்தார் (மத்.23), தொடர்ச்சியாக தேசமும் கி.பி 70ல் அழிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவினுடைய வருகைக்குப் பிறகு, யூத ஜனங்கள் தீர்க்கதரிசி, ஆசாரியர் அல்லது ராஜா என ஒருவரையும் பெற்றிருக்கவில்லை.*

*13:8 ஆம் வசனத்தில் இருக்கிற "உன் கைகளில் இருக்கிற இந்த வடுக்கள் ஏதென்று" என்னும் வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கும் நபரின் அடையாளம் குறித்தும் அனேக விவாதங்கள் சென்று கொண்டு இருக்கின்றன. சிலர் இந்த வாக்கியம் சிலுவையில் அறையப்பட்டதனால் உண்டான இயேசுவின் வடுக்களைக் குறிக்கிறது என்கின்றனர். ஆனால், இயேசு தான் தீர்க்கதரிசி இல்லை என்று மறுதலித்து இருக்க முடியாது, அவர் ஒரு விவசாயி என்றும் உரிமை பாரட்டி இருக்கவும் முடியாது, அவரின் நண்பர்கள் வீட்டில் காயப்பட்டார் என்றும் சொல்லியிருக்க முடியாது. வெளிப்படையாக, இது விக்கிரகாராதனையினால் காயப்பட்ட ஒரு கள்ள தீர்க்கதரிசியைக் குறிக்கிறது (வசனம் 4, 5) என அறிகிறோம். மேசியாவின் ராஜ்யத்தில் கர்த்தரின் வைராக்கியம் மிக அதிகமாக இருக்கும். அதினால் விக்கிரக வணக்கதார் தங்கள் மெய்யான அடையாளத்தை மறைக்க அனைத்து முயற்சிகளை மேற்கொள்வார்கள், ஆனால் அவரகளது*

வடுக்களோ - அவர்களின் மீறுதல்களுக்கு பேச்சுக்குரிய அடையாளமாக இருக்கும் என்பதே இதன் அர்த்தம்.

**சுருக்கம்**

***I. மனம் திரும்பும்படிக்கு விடப்பட்ட அழைப்பு (1:1-6)***

***II. சகரியாவின் எட்டு இரவுநேர தரிசனங்கள் (1:7 - 6:15)***

*அ. மிருதுச்செடிகளுக்குள் இருந்த மனிதன் (1:7-17)*

*ஆ. நான்கு கொம்புகள் மற்றும் நான்கு தொழிலாளிகள் (1:18 - 21)*

*இ.அளவுநூல் பிடித்திருந்த மனுஷன் (2:1-13)*

*ஈ. பிரதான ஆசாரியனின் சுத்திகரிப்பு (3:1-10)*

*உ. தங்க விளக்குத்தூண் மற்றும் இரண்டு ஒலிவ மரங்கள் (4:1-14)*

*ஊ. பறக்கும் தோல்சுருள் (5:1-14)*

*எ. கூடையில் இருக்கும்பெண் (5:5-11)*

*ஏ நான்கு இரதங்கள் )6:1-18)*

*ஐ. இணைப்பு : பிரதான ஆசாரியன் யோசுவாவின் முடிசூட்டுவிழா (6:9-15)*

***III. சகரியாவின் நான்கு செய்திகள் (7:1 - 8:23)***

*அ. உபவாசத்தை குறித்த கேள்வி (7:1-13)*

*ஆ. நான்கு பதில்கள் (7:4 - 8:23)*

*1. தவறான நோக்கங்கல் கண்டிக்கப்படுதல் (7:4-7)*

*2. மனம் திரும்புதல் தேவை (7:8-14)*

*3. தயவினை திரும்ப மீட்டமைத்தல் (8:1-17)*

*4. உபவாச நாட்கள் விருந்து நாட்களாக மாறுதல் (8:18-23)*

***IV* சகரியாவின் இரண்டு பாரங்கள் (9:1-11:17)**

*அ. மேசியா வின் முதல் வருகையில் நிராகரிக்கப்படுதல் (9:1 11:17)*

*ஆ. மேசியா இரண்டாம் வருகையில் ஏற்றுக்கொள்ளப்படுதல் (12:1 -14:21)*

# மல்கியா

## தலைப்பு:

இப்புத்தகத்தின் தலைப்பு இத்தீர்க்கதரிசன புத்தக ஆசிரியர் மல்கியாவின் பெயரில் இருந்து வருவிக்கப்பட்டது. சிறிய தீர்க்கதரிசிகளின் வரிசையில் கடைசியாக இருக்கும் இந்த புத்தகத்துடன் பழைய ஏற்பாட்டினை வரிசைப்படுத்தலை வரலாற்றின்படியும், தீர்க்கதரிசன ஆகமங்கள்முடிவு எனவும் தேவன் நிறைவு செய்கிறார்.

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

இப்பெயரின் அர்த்தம் "என் தூதுவர்" அல்லது "கர்த்தரின் தூதுவர்" என்று இருக்கிறபடியால், சிலர் இந்த புத்தகம் பெயர் தெரிவிக்காத அல்லது பெயர் அறியப்பட முடியாத ஆசிரியரால் இப்புத்தகம் எழுதப்பட்டு, ஒரு தனிநபரின் பெயராக இருப்பதைக் காட்டிலும் தலைப்பாக இருக்கலாம் என ஆலோசனை தருகின்றனர். இந்தப் பெயர் பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் வேறு எங்கும் காணவில்லை; மேலும், ஆசிரியர் பற்றி வேறு எந்தவொரு தகவலும் கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனாலும், வேறு தீர்க்கதரிசன புத்தகங்கள் வரலாற்றின்படி, முன்னுரையில் எப்படி அதன் ஆசிரியர் அடையாளப்படுத்துகின்றனவோ அவ்விதமே, பழைய ஏற்பாட்டு கடைசி காலத்தில் இஸ்ரவேலில் இருந்த தீர்க்கதரிசன ஆசிரியர் இவர் எனவும், அத்தீர்க்கதரிசியின் பெயர் மல்கியா என்பதாகவும் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வேதாகம வாக்கியங்களை சேகரித்து பாதுகாத்து வந்த மாபெரும் ஜெப ஆலய சங்கத்தில் இவர் அங்கத்தினராக இருந்தார் என யூத பாரம்பரியம் அடையாளப்படுத்துகிறது.

நெகேமியா, பெர்சிய தேசத்திற்கு திரும்பிய ஐந்தாம் நூற்றாண்டு கி.மு.432-323ல் இத்தீர்க்கதரிசனம் வெளிப்பட்டிருக்கலாம் என உள்ளிருப்பு ஆதாரங்களைக் காணும்போது தெரிகிறது (நெகே.5:14; 13:6). கி.மு.516ல் கட்டி முடிக்கப்பட்ட (எஸ்றா 6:13-15) இரண்டம் ஆலயத்தில் பலிகள் செலுத்தப்பட்டது (1:7 - 10; 3:8) பல வருடங்கள் கழிந்து இருந்தபடியால் ஆசாரியர்கள் பதட்டமில்லாமல், சீர்கேடு நிறைந்தவர்களாக மாறியிருந்தனர் (1:6-2:9). மல்கியா 1:8 ஆம் வசனத்தில் "அதிபதி" என்று வருகிறதே, நெகேமியா பெர்சியாவிற்கு திரும்ப சென்றபோது (நெகே.13:6), யூதா தேசத்தில் பெர்சியரின் ஆதிக்கம் அதிகமாகி இருந்த காலத்தைக் குறித்து பேசுகிறது. மல்கியா நியாயப்பிரமாணத்தினை வலியுறுத்தி வருவது (4:4) தற்செயலாக எஸ்றா மற்றும் நெகேமியா கவனம் அதிகம் செலுத்திய கருத்துதுடன் பொருத்தமாக இருக்கின்றது. இதுபோன்று வேறுசில விஷயங்களிலும் பொருந்தி செல்வதை காணலாம். உதாரணமாக, அந்நிய தேசத்து மனைவிகளை மணம் புரிதல் (2:11-15; எஸ்றா 9.10; நெகே.13:23-27), தசமபாகத்தை நிறுத்தி வைத்தல் (3:8-10; நெகே.13:10-14) மற்றும் சமூக அநீதி (2:5; நெகே,5:1-13) போன்றவற்றுடன் பொருந்துகிறது. கி.மு.445ல் நெகேமியா அலங்கத்தைக் கட்டும்படிக்கு எருசலேமுக்கு வந்தார், பின்னர் கி.மு.433ல் பெர்சிய தேச்த்திற்கு திரும்பினார். அந்நாட்களுக்கும் பின்னால் கி.மு.424ல் மல்கியா விவரித்த (நெகே.13:6) பாவங்களை சீர்செய்ய இஸ்ரவேல் தேசத்திற்கு நெகேமியா திரும்ப வந்தார். இதனை வைத்து பார்க்கும்போது, மல்கியா நெகேமியா இல்லாத போது எழுதப்பட்டது என்பதுவும், ஆகாய், சகரியா தீர்க்கத்ரிசிகள் தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பித்த வருடங்களில் இருந்து 100 ஆண்டுகள் கழித்து எழுதப்பட்டது எனவும் அறிகிறோம். வெளி.2,3ல் கிறிஸ்து சபைகளின் நிலைமையை குறித்து என்ன நினைக்கிறார் என்று எழுதியிருக்கிறது. அதுபோல, இங்கே தேவன் மல்கியாவின் மூலம் இஸ்ரவேல் தேச்த்தை குறித்து

தன்னுடைய எண்ணங்கள் என்ன என்பதை இஸ்ரவேல் தேசத்தாரின் மனதில் பதியவைக்கும்படிக்கு எழுதுகிறார்.

## பின்னணி மற்றும் அமைப்பு

பாபிலோனின் இருந்து சிறைகைதிகளாக பிடிக்கப்பட்டுச் சென்றவர்களில் 50,000 பேர் மட்டும் (கி.மு.538-536ல்) யூதா தேசத்திற்கு திரும்பி இருந்தனர். கி.மு.516ல் செருபாபேல் தலைமையில் ஆலயம் திரும்ப கட்டப்பட்டு பலியிடுதல் முறைமைகள் திரும்ப புதுப்பிக்கப்பட்டது. எஸ்றா கி.மு.458லும், அவரைத்தொடர்ந்து நெகேமியா கி.மு.445ல் சொந்த தேசத்திற்கு திரும்பினார்கள். இஸ்ரவேல் தேசத்திற்கு திரும்பி நூற்றாண்டு காலம் ஆன வேளை தொடர்ந்து யூதர்களின் மத சடங்காச்சாரங்களில் ஈடுபட்டு வந்தது இஸ்ரவேல் ஜனங்கள் மற்றும் ஆசாரியர்கள் - தேவன் அவர்கள் மீது கொண்டிருந்த மகா அன்பினைக் குறித்து இருதயக்கடினம் ஏற்படச்செய்து, தேவனுடைய பிரமாணங்களில் இருந்து வழிவிலகச் செய்தது. இப்படிப்பட்ட தவறுகளை மல்கியா அதட்டி கண்டித்தார், அவர்களின் குற்றத்திற்கு பொறுப்பேற்று, ஜனங்கள் மனம்திரும்ப வேண்டும் என வற்புறுத்தி வந்தார். நெகேமியா பெர்சிய தேசத்தில் இருந்து (கி.மு.424) வில் இரண்டாவது முறை நாடு திரும்பிய போது, ஆலயத்திலும் ஆசாரியர்கள் மத்தியில் காணப்பட்ட - பரிசுத்த ஓய்வுநாள் இளைப்பறுதல் மீறப்படுதல், மணம் புரிந்த யூதபெண்களை விவாகரத்து செய்து விட்டு அந்நிய தேசத்து பெண்களை விவாகம் செய்தல் போன்ற முறைகேடுகளை கடுமையாக கண்டித்தார் (நெகே.13). பழைய ஏற்பாட்டின் வரலாற்றில் 2,000 வருடங்கள் கடந்து சென்ற பிறகும், ஆபிரகாமின், தாவீதின் மற்றும் புதிய உடன்படிக்கைகள் எதுவும் அவைகளின் இறுதியான அர்த்தத்தின்படி இன்னும் நிறைவேறவில்லை. இருப்பினும் முக்கியத்துவம் அளித்துச்சொல்லக்கூடிய குறிப்புகள் இஸ்ரவேலின் வரலாற்றில், உதாரணமாக, யோசுவா, தாவீது மற்றும் யோசியா

போன்றவ்ரின் வாழ்க்கையில் இருந்தது. இஸ்ரவேலர்கள் சொந்த நாட்டிற்கு திரும்பி 100 வருடங்கள் ஆன நாட்களில் தேவனுடைய தயவினைப் பெற்றுக் கொள்ள - யூதர்கள் தங்களுக்கு கிடைத்த அனைத்து சந்தர்ப்பங்களையும் இழந்து விட்டதாக வெளிப்படையாக காணப்பட்டது. அவர்கள் மீது அசீரியர்கள் மற்றும் பாபிலோனியரின் படையெடுத்து வந்து சிறைபிடித்துச் செல்லும்படிச் செய்த முந்தைய அக்கிரமங்களைக் காட்டிலும் அதிகமான பாவத்தின் ஆழத்திற்குள் யூதர்கள் தற்போது விழுந்து கிடந்தனர். இவைகளுக்கும் மேலாக, மிக அதிகமான நாட்கள் எதிர்பார்க்கப்பட்ட மேசியா இன்னும் வரவில்லை; வருவதற்கான தோற்றம் அவர்களுக்கு கண்ணுக்கு எட்டிய தூரத்திலும் இல்லை.

ஆகையால், மல்கியா இரண்டு ஏற்பாடுகளையும் இணைக்கும் தீர்க்கதரிசனத்தை பழைய ஏற்பாட்டு காலத்தில் உரைத்தார். இஸ்ரவேல் தொடர்ந்து பாவத்தில் ஜீவிப்பதினால் இஸ்ரவேல் நியாயம் தீர்க்கப்படும் என்றும், வருங்காலத்தில் ஒருநாள் யூதர்கள் மனம்திரும்புவார்கள், மேசியா வெளிப்படுவார், மேலும் தேவனின் உடன்படிக்கை வாக்குதத்தங்கள் யாவும் நிறைவேறும் என்ற தேவனின் வாக்கினையும் உரைக்கிறார். மல்கியா உரைத்த குற்றச்சாட்டு மட்டுமே யூதர்களின் செவியில் ஒலித்து வந்தது. தெய்வீக தீர்க்கதரிசன வெளிப்பாட்டில் அமைதி உண்டாயிற்று - 400 வருடங்களுக்குப்பின் தான் தேவனிடம் இருந்து செய்தியை கொண்டுவரும் மற்றொரு தீர்க்கதரிசியின் வார்த்தை உண்டாயிற்று. அது யோவான் ஸ்நானகன் உரைத்த "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது!" என்ற வார்த்தை (மத்.3:2). மேசியா வந்து விட்டார்.

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

தேவன் திரும்ப திரும்ப இஸ்ரவேலுடன் தான் கொண்டிருக்கும் உடன்படிக்கையை எடுத்துக்காட்டி நினைவுபடுத்திக் கொண்டே வந்தார் (2:4,4,8,10,14; 3:1); அதாவது - இஸ்ரவேலர் தேவனின் அன்பில், தேவன் அவர்களுடன் கொண்டிருக்கும் மணவாளன்-மணவாட்டி என்ற உறவில் பற்றுறுதி இல்லாதவர்களாக இருக்கின்றனர் என்பதை ஆரம்பவரிகளில் இருந்தே நினைவுபடுத்தி வந்தார் (1:2-5). தேவன் அவருடைய ஜனங்களிடத்தில் கொண்டிருந்த அன்பு இப்புத்தகம் முழுவதும் ஊடுருவிச் செல்கிறது. மேசியாவின் வருகை குறித்து வெளிப்பட்ட முந்தைய தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்கள் மேலும் மேசியா வரும்போது, அவர் விடுதலையை கொண்டுவருவார், யுகத்திற்கான ஆசீர்வாதங்கள், கிமு.500-ல் அண்மையில் ஆகாய் மற்றும் சகரியா தீர்க்கதரிசிகளால் கொண்டுவரப்பட்ட வாக்குத்தத்தங்கள் ஜனங்களையும், அவர்களின் தலைவர்களையும் அவர்கள் ஏற்கெனவே கொண்டிருந்த அகமகிழ்வில் இன்னும் உறுதியானவர்களாக இருக்கச் செய்தது. அவர்கள் இப்படியாக சிந்தித்தார்கள் - இந்த புதிய உறவு அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்தினாலும், முறையான சடங்குகளை ஆசரிப்பதினால் மட்டுமே இன்னும் அழியாமல் பாதுகாக்கமுடியும் என்று நம்பினார்கள். ஆனால் தீர்க்கதரிசியோ ஆசாரியர்களையும் (1:6-2:9) ஜனங்களையும் (2:10-16) அவர்கள் ஆவலுடன் தேடும் (3:1) கர்த்தரின் வருகை அவர்களை சுத்திகரிக்க, களையெடுக்க (3:2,3) வருவதாக நியாயம் தீர்க்க வருவதாக இருக்கும் என்பதை நினைவுபடுத்துகிறார். கர்த்தருக்கு நியாயப்பிரமாணத்துடன் வெளித்தோற்றமான இணக்கம் மட்டுமல்ல, உள்ளான ஏற்றுக்கொள்ளுதலும் (மத்.23:23) காணப்பட வேண்டும் என்பது அவசியம் என அவர்கள் எண்ணங்களை உருவக்குத்தும் கருத்தினை தெரிவிக்கிறார். தீர்க்கதரிசி அவர்களுக்குள் காணப்பட்ட மாயமாலம், துரோகம், அநீதியோடு ஒத்துப்போதல், விவாகரத்து, மாயமான ஆராதனை மற்றும்

*ஆணவம் போன்ற சீர்கேடுகள், பொல்லாப்பு மற்றும் தேவனுடைய பாதுகாப்பை தவிர்க்கும் சுயபாதுகாப்பிற்கு விரோதமாக வரவிருக்கும் நியாயத்தீர்ப்புகளை எடுத்துக்கூறி வலிந்து தாக்குகிறார்.*

*மல்கியா தமது தீர்க்கதரிசனத்தை கேள்விகேட்டு பதில் அளித்து வாக்குவாதம் செய்வது போன்று அமைத்திருக்கிறார். கர்த்தர் அவருடைய ஜனங்களுக்கு விரோதமாக குற்றச்சாட்டை சுமத்தும் போது, அவருடைய ஜனங்கள் அதற்கு இழிவான கேள்வியையே அதற்குபதிலாக அளித்தனர் (1:2,6,7; 2:17; 3:7,8,13). வேறு சில நேரங்களில், தீர்க்கதரிசி தன்னை தேவனுடைய பொறுப்பாக இருக்கும் சட்டவல்லுநராக அறிமுகப்படுத்தி, ஜனங்களிடம் அவர்களின் எதிர்மறையான விமர்சனங்களை பேச்சுத்திறம் வாய்ந்த கேள்விகள் கேட்டு மடக்குவதைக் காண்கிறோம் (1:6,8,9; 2:10,15; 3:2).*

*மல்கியா ஆசாரியர்களையும் ஜனங்களையும் அவர்கள் வேண்டுமென்றே செய்த 6 பாவங்களுக்காக குற்றம்சாட்டுகிறார்: 1) தேவனுடைய அன்பை நிராகரித்தல் (1:2-5); 2) தேவனுக்கு உரிய கனத்தினை செலுத்த தவறுதல் (1:6-2:9); 3) தேவனின் வாக்கினை காக்கும் பண்பினை உதாசீனம் செய்தல் (2:10-16); 4) தேவனுடைய நீதியை மறுவரையறை செய்தல் (2:17 - 3:6); 5) தேவனுடைய ஐசுவரியத்தை கொள்ளையிடல் (3:7-12); மற்றும் 6) தேவனுடைய கிருபையை தூற்றுதல் (3:13-15). இதில் மல்கியா நியாயத்தீர்ப்பு வழங்கிய மூன்று இடைவெளிக்காட்சிகள் இருக்கின்றன: 1) ஆசரியர்களுக்கு (2:1-9); 2) தேசத்திற்கு (2:1-6); மற்றும் மீந்திருப்பவர்களுக்கு (3:16-4:6).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா*

*தீர்க்கதரிசியை அனுப்புகிறேன் (4:5) என்பதன் அர்த்தம் அதிகமாக விவாதத்திற்கு உள்ளாகிறது. அது யோவான் ஸ்நானகனால் பூர்த்திசெய்யப்பட்டதா அல்லது இன்னும் வருங்காலத்திற்கென்று இத்தீர்க்கதரிசன நிறைவேற்றம் வைக்கப்பட்டுள்ளதா - எலியா திரும்ப மறுபிறவி எடுப்பாரா? மல்கியாவின் தீர்க்கதரிசனம் யோவான் ஸ்நானகரைத்தான் குறிக்கிறது என்றும் எலியா திரும்ப வந்ததாக எடுத்துக்கொள்ளாமல் பார்ப்பதே சாலசிறந்தது. மாத்திரம் அல்ல தேவதூதன் லூக்கா 1:17ல் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்று யோவான் ஸ்நானகரைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பதையும் யோவான் ஸ்நானகர் நான் எலியா அல்ல (யோவான்1:21) என்று சொல்லியிருப்பதையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆக, யோவான்ஸ்நானகர் எலியாவைப்போல் உள்ளான மனிதனில் "ஆவியும் பலமும்" உடையவராக இருந்தார் எனவும் வெளிப்படையில் முரட்டுத்தனமான சுதந்திரமும், இணங்காதவராகவும் இருந்தார் எனக் காண்கிறோம். யூதர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்வார்களானால், அது அவர்களுக்குச் சொல்லப்பட்ட எலியாவைப் போன்று அவர் இருப்பார் என்றும் (மத்.11:14; 17:9-13), அவர்கள் ராஜாவை மறுத்தார்கள் என்றால், எலியாவைப் போன்ற ஒரு தீர்க்கதரிசி ஒருவேளை நாம் வெளிப்படுத்தலின் விசேஷம் 11:1-19ல் சாட்சி கூறுவதாக காணும் இரண்டு சாட்சிகளில் ஒருவராக எதிர்காலத்தில் அனுப்பி வைக்கப்படுவார்.*

**சுருக்கம்**

*[H3[I. இஸ்ரவேலின் பாவங்கள் கண்டிக்கப்படுதல் (1:1-2:16)*

*அ. இஸ்ரவேலுக்கான தேவனுடைய அனபி நினைவுபடுத்துதல் (1:1-15)*

*ஆ. ஆசாரியர்கள் கண்டிக்கப்படுதல் (1:6-2:9)*

*1. தேவனுடைய பலிபீடத்தை அவமதித்தல் (1:6-14)*

*2. தேவனுடைய மகிமை அவமதிக்கப்படுதல் (2:1-3)*

*3. தேவனுடைய நியாயப்பிரமாணம் அவமதிக்கப்படுதல் (2:4-9)*

*இ. ஜனங்கள் கண்டிக்கப்படுதல் (2:10-16)*

***II. இஸ்ரவேலின் நியாயத்தீர்ப்பும் ஆசீர்வாதமும் உறுதியாக அறிவிக்கப்படுதல் (2:17- 4:6)***

*அ. தூதுவரின் வருகை (2:!7-3:5)*

*ஆ. மனம்திரும்பும்படிக்கு சவால் விடப்படுகிறது (3:6-12)*

*இ. கர்த்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் விமர்சித்தல் (3:13-15)*

*ஈ. பற்றுறுதியோடு காத்திருந்து- மீந்திருப்பவர்களுக்கு வரும் ஆறுதல் (3:16-4:6)*

# மத்தேயு எழுதின சுவிசேஷம்

## தலைப்பு:

''கர்த்தரின் ஈவு'' என்று அர்த்தம் தரும் மத்தேயு என்பது லேவி (9:9) என்னும் பெயரின் வேறொரு பெயர்; இவர் ஆயக்காரரர் - கிறிஸ்துவை பின்பற்றுவதற்காக எல்லாவற்றையும் விட்டு வந்தவர் (லூக்கா 5:27,28). மத்தேயு 12 சீஷர்களில் ஒருவர் (10:3; மாற்கு 3:18; லூக்கா 6:15; அப்போஸ்தலர் 1:13). அவர் தான் எழுதிய அப்போஸ்தலர்களின் பட்டியலிலும் ''ஆயக்காரனாகிய மத்தேயு'' (10:3) என தன்னை அழைத்துக் கொள்கிறார். மற்ற சுவிசேஷகர்களும் கூட இவருடைய கடந்த கால பாவ வாழ்க்கையை குறித்து பேசும்போது "லேவி" என்னும் ஏற்கெனவே இருந்த பெயரைக் கொண்டே அழைக்கின்றனர். இது மத்தேயுவின் தாழ்மைக்கு சான்று; மற்ற சுவிசேஷ புத்தகங்களைப் போலவே இந்த புத்தகமும் இதன் ஆசிரியர் பெயரையே தலைப்பாக பெற்றுள்ளது.

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

திருச்சபை ஏற்றுக்கொண்ட புத்தகங்கள் வரிசையில் வருவதைக் குறித்தோ அல்லது மத்தேயு தான் இப்புத்தகத்தின் ஆசிரியர் என்பதனையோ ஆதிதிருச்சபையில் எவரும் கேள்வி கேட்கவில்லை. யூசிபியஸ் (கி.பி. 265 -339) மற்றும் ஆரிஜின் (கி.பி. 185 -254) இருந்து கீழ்வருமாறு எடுத்துகாட்டுகின்றனர்.

பரலோகத்தின் கீழ் உள்ள தேவனுடைய திருச்சபையில் மறுக்கமுடியாத ஒன்றாக இருக்கக்கூடிய நான்கு சுவிசேஷ புத்தகங்களிலும், நான் வழக்கத்தின்படி அறிந்து இருப்பது முதல் புத்தகம் மத்தேயுவினால் எழுதப்பட்டது, இவர் ஒருகாலத்தில் ஆயக்காரராக இருந்தார், அதற்குபின் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலராக மாறிய இவர் எழுதிய புத்தகம்,

யூதமதத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு எழுதிய புத்தகம் (திருச்சபை வரலாறு,6:25). கி.பி. 70-ஆம் ஆண்டு ஆலயம் நிர்மூலமாக்கப்படுவதற்கு முன் இந்த புத்தகம் எழுதப்பட்டது. சில ஆசிரியர்கள் இந்த சுவிசேஷம் கி.பி.50-ல் எழுதப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர்.

## பின்னணி மற்றும் அமைப்பு

மத்தேயு சுவிசேஷம் யூதர்களுக்காக எழுதப்பட்டது என்பதை புத்தகம் முழுவதும் நாம் காணமுடிவது குறிப்பிடத்தக்கது. மத்தேயு ஆரம்ப வரிதனில் ஆபிரகாமின் குமாரனாகிய ...... இயேசுகிறிஸ்துவினுடைய வம்சவரலாறு: என ஆபிரகாம் வரைக்கும் மட்டுமே வம்சவழியை எழுதியதில் இருந்தே தெளிவாகிறது. மறுபுறம், லூக்கா - இயேசுகிறிஸ்து மனுக்குலத்தின் மீட்பர் என்பதை காட்டும்படிக்கு ஆதாம் வரை வம்சவரலாற்றை எழுதியுள்ளதாக காண்கிறோம். இஸ்ரவேலின் ராஜாவும் மேசியாவும் கிறிஸ்துவே என்ற கருத்தை முக்கியப்படுத்துவதே மத்தேயுவின் நோக்கம்; பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன வரிகளில் இருந்து 60 தடவைக்கும் மேலாக மேற்கோள்காட்டி, அவைகளில் காணப்படும் - அனைத்து வாக்குதத்தங்களின் நிறைவேறுதல் கிறிஸ்து - என்பதை மத்தேயு சுவிசேஷம் வலியுறுத்துகிறது.

மத்தேயு புத்தகம் யூதர்களைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்டது - என்ற உண்மைக்கு அதிக வாய்ப்பு இருக்கிறது என்பதை பின்வரும் காரணங்களினால் நாம் அறியலாம். மத்தேயு யூதர்களின் பழக்க வழக்கங்களை, மற்ற சுவிசேஷங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அதிக விளக்கம் தராமல் குறிப்பிடுகிறார் (மாற்கு7:3; யோவான் 19:40). அவர் கிறிஸ்துவை “தாவீதின் குமாரன்” (1:1; 9:27; 12:23; 15:22; 20:30; 21:9,15; 22:42-45) என நிலையாக அழைக்கிறார். தேவனுடைய நாமத்தைக் குறித்து யூதர்கள் கொண்டிருந்த

உணர்வுகளை பாதுகாக்கும் எண்ணத்துடன் நாம் மற்ற சுவிசேஷகர்கள் "தேவனுடைய ராஜ்யம்" எனக் குறிப்பிடுமிடத்தில் "பரலோக ராஜ்யம்" என்ற வார்த்தைகளை மத்தேயு பயன்படுத்துவதைக் காண்கிறோம். புத்தகத்தின் அனைத்து கருப்பொருட்களும் பழையஏற்பாட்டில் வேரூன்றி, மேசியாவின் வருகையை எதிர்பார்த்திருக்கும் வெளிச்ச பின்னணியில் அமைந்துள்ளது. மத்தேயு கிரேக்க மொழியை பயன்படுத்தியது - அவர் பாலஸ்தீன யூதராக நின்று வேறு பகுதிகளில் இருக்கும் கிரேக்க யூதர்களுக்கு எழுத பயன்படுத்தியதைச் சுட்டிக்காட்டுகிறது. அவர் விவரிக்கும் அனேக சம்பவங்கள் நசரேயனாகிய இயேசுவின் வார்த்தைகள் மற்றும் கிரியைகளை தன் கண்களால் கண்ட சாட்சியாக முதல்நபராக இருந்து எழுதுவதாகக் காண்கிறோம்.

இயேசுவே யூத தேச்த்தார் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த மேசியா என்பதனை நிரூபிக்க வேண்டும் என்பதே மத்தேயுவின் நோக்கம் எனத் தெளிவாக காணமுடியும். அவருடைய எண்ணிக்கைக்கு அடங்காத பழையஏற்பாட்டு மேற்கோள்கள் காட்டுதல் - வாக்குத்தத்தம் செய்யப்பட்ட மேசியாவிற்கும் வரலாற்று நாயகர் இயேசுவிற்கும் இடையில் இருக்கக்கூடிய தொடர்பினை எடுத்துக்காட்டவே வடிவமைக்கப்பட்டது. அவர் கொண்டிருந்த நோக்கம் எந்த இடத்திலும் கவனம் சிதறியதாக இல்லாமல் இருக்கிறது, மேலும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தில் காணப்படும் தற்செயலான விபரங்களைக்கூட இயேசுவே மேசியா என்று உரிமைபாராட்ட எடுத்துப் பயன்படுத்துவதைக் காண்கிறோம் (உதாரணமாக, ***2:17,18; 4:13-15; 13:35; 21:4,5; 27:9,10***).

வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

இயேசுவே மேசியா, யூதர்களுக்கு ராஜா - என்பதனை நிச்சயமாக அறிவிக்க வேண்டும் - என கருத்தாழம் மிக்கவராக

மத்தேயு இருந்தபடியால், இந்த நற்செய்தி புத்தகம் முழுவதும் பழைய ஏற்பாட்டின் ராஜ்ய வாக்குத்தத்தங்களை எடுத்துக் காட்டுவதில் ஓர் ஆர்வம் இருப்பதைக் காணமுடியும். மத்தேயுவின் கையொப்ப வாக்கியம் ''பரலோக ராஜ்யம்'' வேதாகம புத்தகத்தில் வேறுஎங்கும் நாம் காணமுடியாது - 32 முறை எடுத்துப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆரம்ப வரிகளில் நாம் காணும் வம்சவரலாறு - இஸ்ரவேலின் ராஜா - இயேசு கிறிஸ்து என்பதை ஆதாரசான்றுகளுடன் நிருபிக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. புத்தகத்தின் இதர அத்தியாயங்கள் இந்த கருப்பொருளை பூரணமாக்குகின்றன. ராஜவம்சத்தின் வழி வந்தவர் கிறிஸ்து என்பதை மத்தேயு எடுத்துக்காட்டுகிறார். வர இருக்கும் ராஜாவைக் குறித்து பழையஏற்பாட்டில் சொல்லப்பட்டிருந்த அனேக வாக்குத்தத்தங்கள் இயேசுவில் நிறைவேறி இருக்கின்றன என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்கின்றார். கிறிஸ்துவின் ராஜரீக தனியுரிமையை நிலைநாட்ட சான்றுகளுக்கு மேல் சான்றுகள் என தந்துகொண்டே இருக்கிறார். புத்தகத்தில் நாம் காணும் இதர வரலாற்று மற்றும் இறையியல் கருப்பொருட்களும் கூட இந்த கருப்பொருளைச் சுற்றியே வந்துகொண்டிருக்கின்றன.

மத்தேயு 5 சொற்பொழிவுகளை குறித்து தந்துள்ளார்: அவை மலைப்பிரசங்கம் (அதிகாரங்கள் 5-7); அப்போஸ்தலர் பணியின் கட்டளையை சீஷர்களுக்கு வழங்குதல் (அதிகாரம் 10); தேவனுடைய ராஜ்யம் குறித்ததான உவமைகள் (அதிகாரம் 13); விசுவாசி ஒரு சிறுபிள்ளையைப் போன்றவர் என்ற சொற்பொழிவு (அதிகாரம் 18); அவருடைய இரண்டாம் வருகையைக் குறித்த சொற்பொழிவு (அதிகாரங்கள் 24,25). ஒவ்வொரு சொற்பொழிவும் “இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது” (7:28; 11:1; 13:53; 19:1; 26:1) என்ற வரிகளுடன் முடிவடைவதைக் காண்கிறோம். புதிய விவரித்தலின் மையக்கருத்து இது என அர்த்தப்படுத்துகிறது.

*ஆரம்ப பகுதி (அதிகாரங்கள் 1-4) நீண்டதானதாவும், முடிவுரை குறுகியதானகவும் (அதிகாரங்கள் 28:16-20) இருக்கிறது. இவ்விரண்டிற்கும் இடையில் இருப்பது எல்லாம் சுவிசேஷத்தின் பகுதிகள்: 5 பிரிவுகளாக, ஒவ்வொரு பிரிவிலும் ஒரு சொற்பொழிவும் அத்துடன் விவரிக்கும் பகுதி ஒன்றுமாக இயற்கையாகவே அமைந்து இருக்கிறது. சிலர் இந்த 5 பிரிவுகளும் பழையஏற்பாட்டு மோசேயின் ஆகமங்கள் உடன் இணையொத்ததாக இருப்பதாகக் காண்கின்றனர்.*

*இயேசுவிற்கும் பரிசேயர்களுக்கும் இடையில் காணப்படும் முரண்பாடு, மத்தேயு சுவிசேஷ புத்தகத்தின் பொதுவான மற்றொரு கருப்பொருள் ஆகும். ஆனால், மத்தேயு பரிசேயரின் தவறுகளை ஆர்வமாகச் சுட்டிக்காட்டுவது, தன்னை கவனிக்கும் யூதர்களுக்கு பயன்படும் என்பதே அல்லாமல், தற்பெருமைக்காக அல்ல என அறிகிறோம். பரிசேயரும், ஆயக்காரரும் என்ற உவமை மத்தேயுவை சாதகமான வெளிச்சத்தில் நிறுத்தியிருக்கும் என்றாலும் - அதனை அவர் தன் சுவிசேஷ புத்தகத்தில் தவிர்த்து விடுகிறார்.*

*மற்ற சுவிசேஷ புத்கங்களைக் காட்டிலும் அதிகமாக சதுசேயர்கள் குறித்து மத்தேயு குறிப்பிடுகிறார். தொடர்ச்சியாக, பரிசேயரும் சதுசேயரும் எதிர்மறை கருத்துக்களுக்காக எடுத்துக்காட்டப்பட்டு நம்மை எச்சரிக்கும் தீப்பந்தங்களாக நிற்கின்றனர். அவர்கள் உபதேசம் புளித்தமா போன்றது; முற்றிலும் தவிர்க்க வேண்டும் (15:11,12). இவ்விருதிறத்தாரும் தங்களுக்குள் கொண்டிருந்த கொள்கையில் வேறுபட்டிருந்தாலும், இயேசுவினிடத்தில் காட்டும் வெறுப்பில் ஒன்றுசேர்ந்து நின்றனர். கிறிஸ்துவை ராஜா என்று ஏற்றுக்கொள்வதை நிராகரிக்கின்ற இஸ்ரவேலில் இருந்த அனைவருக்கும் அடையாளமாக - பரிசேயரும் சதுசேயரும் மத்தேயுவிற்கு முன் நின்றனர்.*

இஸ்ரவேலல் மேசியாவை நிராகரித்தல் என்பதும் மத்தேயு புத்தகத்தில் தொடர்ச்சியாக இழையோடி வரும் மற்றொரு கருப்பொருள். இயேசுவிற்கு எதிராக வந்த எதிர்ப்புகள் இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல மற்ற எந்த சுவிசேஷ புத்தகத்திலும் அதிகமாக எடுத்துக்காட்டப்படவில்லை. எகிப்திற்கு ஓடிச்சென்றதில் இருந்து சிலுவையின் காட்சிவரை, மற்ற சுவிசேஷகர்களைக் காட்டிலும் மத்தேயு மிக அழகாக இயேசு யூதர்களால் நிராகரிக்கப்பட்டார் என்ற விபரங்களைச் விவரிக்கிறார்.. சிலுவைப்பாட்டினைக் குறித்து மத்தேயு எழுதுவதில், உதாரணமாக, மனம்திரும்பும் கள்ளனைப் பற்றி அல்லது சிலுவையைச் சுற்றியிருந்த இயேசுவிற்கு அன்பானவர்கள் மற்றும் நண்பர்களைக் குறித்து குறிப்பிடவில்லை. அவருடைய மரணத்தில் தேவனாலும் அவர் கைவிடப்பட்டார் (27:46). என்று இவர் சுட்டிக்காட்டுவதில் இருந்து, கைவிடப்பட்ட சூழ்நிலையின் நிழல் இவர் எழுதும் சம்பவங்களில் இருந்து எந்த ஒரு இடத்திலும் வேறுபிரிக்கப்படவில்லை என அறிகிறோம். ஆனாலும், மத்தேயு இயேசுவை வெற்றி சிறந்த ராஜாவாக - ஒருநாளில் திரும்ப வர இருக்கின்ற ராஜாவாக - மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிற ராஜாவாகத் (24:30) தான் நமக்கு முன்வைக்கிறார்.

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

மேலே நாம் கண்டது போல, மத்தேயு 5 சொற்பொழிவுகளைச் சுற்றி தன் சுவிசேஷ புத்தகத்தின் விபரங்களை தெரிவிப்பதை அமைத்திருக்கிறார். காலவரிசைப்படி விபரங்களைச் சொல்வதில் கவனம் செலுத்தாமல், ஏனைய சுவிசேஷ புத்தகங்களை ஒப்பிட்டு பார்ப்போமானால், சம்பவங்களை ஒழுங்கற்று மத்தேயு அமைத்திருப்பதைக் காணலாம். மத்தேயுவின் எழுத்துக்களில் கருப்பொருளுக்கும் உட்கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றாரே அல்லாமல் காலவரிசைப்படி

*அமைக்கவேண்டும் என்பதற்கல்ல என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.*

*தீர்க்கதரிசன பத்திகளில் நாம் விளக்கம் அளிப்பதில் சவாலை சந்திக்கிறோம். இயேசுவின் ஒலிவமலை சொற்பொழிவில் - உதாரணமாக, கி.பி.70யில் வன்முறையாக ஆலயம் இடிக்கப்பட்டுப்போகும் என்பதை விளக்க சில உருவங்கள் விவரிக்கப்படுகின்றது. சிலர் மத்தேயு 24:34-ல் ''இவைகளெல்லாம் சம்பவிக்குமுன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று இருக்கின்றகின்ற படியால் - ரோமர்கள் வெற்றி சிறந்த நாட்களில் நிறைவேறிவிட்டன - உண்மையில் சொல்லப்பட்ட நாட்களில் இல்லாது அதற்கும் முன்பே நிறைவேறிவிட்டன என்கிறனர். இதனை ''முன்னோடிவாதம்'' என்று கூறுகின்றனர். இப்படி கூறுவது விளக்கம் அளிப்பதில் உள்ள தவறு - சோல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளில் ஆவிக்குரிய பொருள் எடுத்துக் கொள்கிறோம் என்றுச் சொல்லிக்கொண்டு - உண்மையான அர்த்தத்தை விட்டு விலகிச் செல்வது தவறு; வரிசைப்படி, வரலாற்றுப்படி சொல்லப்பட்ட இடத்தின் இலக்கண வரம்பிற்குள் நின்று முக்கியமான தீர்க்கதரிசனங்களுக்கு விளக்கம் அளிப்பது, விளக்கம் அளிப்பதில் நிலைத்தன்மையை, எதிர்காலத்திற்குரிய புரிந்துகொள்ளுதலை சரியாக உருவாக்குகிறது.*

**சுருக்கம்**

***I. (முன்னுரை) ராஜாவின் வருகை (1:1-4:25)***

*அ. அவரின் பிறப்பு (1:1-2:23)*

*1. அவரின் பரம்பரை (1:1-17)*

*2. அவரின் வருகை (1:18-25)*

*3. அவரின் எதிரிகள் (2:13-23)*

*ஆ. அவரின் பொது மக்கள் ஊழிய பிரவேசம் (3:1 -4:25)*

*1. அவரின் முன்னோடிகள் (3:1-12)*

*2. அவரின் ஞானஸ்நானம் (3:13-17)*

*3. அவரின் சோதனை (4:1-11)*

*4. அவரின் ஊழியத்தின் ஆரம்ப காலம் (4:12-25)*

***II. ராஜாவின் அதிகாரம் (5:1 - 7:29)***

*அ. சொற்பொழிவு 1 மலைப்பிரசங்கம் (5:1 -7:29)*

*1. நீதியும் மனமகிழ்ச்சியும் (5:1-12)*

*2. நீதியும் சீஷத்துவமும் (5:13-16)*

*3. நீதியும் வேதாகம வசனங்களும் (5:17-20)*

*4. நீதியும் ஒழுக்கமும் (5:21-48)*

*5. நீதியும் நடைமுறை மார்க்கமும் (6:1-18)*

*6. நீதியும் இம்மைக்குரியவைகளும் (6:19-34)*

*7. நீதியும் மனுஷ உறவுகளும் (7:1-12)*

*8. நீதியும் இரட்சிப்பும் (7:13-29)*

*ஆ. விபரம் 1 நிரூபிக்கும் அற்புதங்கள் (8:1 - 9:38)*

*1. தொழுநோயாளி சுத்தமாகுதல் (8:1-4)*

*2. நூற்றுக்கதிபதி வேலைக்காரன் சுகம் பெறுதல் (8:5-13)*

*3. பேதுருவின் மாமி சுகம் பெறுதல் (8:14,15)*

*4. பெரும் கூட்டத்தினர் சுகம் பெறுதல் (8:16-22)*

*5. காற்றையும் கடலையும் அதட்டுதல் (8:23-27)*

*6. பிசாசு பிடித்த இருவர் விடுவிக்கப்படுதல் (8:28-34)*

*7. பிடிவாதக்காரன் மன்னிக்கப்பெற்று சுகம் பெறுதல் (9:1-8)*

*8. ஒரு ஆயக்காரன் அழைப்பைபெறுதல் (8:9-13)*

*9. ஒரு கேள்விக்கு பதில் அளிக்கப்படுதல் (9:14-17)*

*10.மரித்த பெண் உயிரோடு எழுப்பபடுதல் (9:18-26)*

*11.இரண்டு குருடர்கள் பார்வையடைதல் (9:27-31)*

*12. ஊமையன் பேசுதல் (9:32-34)*

*13. பெரும் கூட்ட்த்தினரை மனதுருக்கத்துடன் பார்த்தல் (9:35-36)*

## *III ராஜாவின் நிகழ்ச்சிநிரல் (10:1 -12:50)*

*அ. சொற்பொழிவு 2 : பன்னிரண்டு சீஷர்களை நியமித்தல் (10:1-42)*

*1. எஜமானரின் ஆட்கள் (10:1-4)*

*2. சீஷர்களை அனுப்பிவிடல் (10:5-23)*

*3. சீஷத்துவத்தின் தரக்குறியீடு (10:24-42)*

*ஆ. விபரம் 2 ராஜாவின் பணி (11:1-12:50)*

*1.யோவான்ஸ்நானகனின் சீஷர்களுக்கு இயேசுவின் அடையாளம் உறுதிபடுத்தப்படுதல் (11:1-19)*

*2. மனம்வருந்தாதவர்களுக்கு ஐயோ! (11:20-24)*

*3. வருத்தப்படுகிறவர்களுக்கு இளைப்பாறுதலை தருதல் (11:25-30)*

*4. ஒய்வுநாளுக்கும் ஆண்டவர் என்று உறுதியாக கூறுதல் (12:1-13)*

*5. யூத தலைவர்கள் எதிர்ப்பை தூண்டுதல் (12:14-45)*

*6. ஆவிக்குரிய வழிமரபினால் நித்திய உறவினை நிலைநாட்டுதல் (12:46-50)*

***IV. ராஜாவின் எதிராளிகள் (13:1 - 17:27)***

*அ. சொற்பொழிவு 3 ராஜ்யத்தின் உவமைகள் (13:1-52)*

*1. நிலங்கள் (13:1-23)*

*2. கோதுமையும் களையும் (13:24-30; 34-43)*

*3. கடுகு விதை (13:31,32)*

*4. புளித்த மா (13:33)*

*5. மறைந்திருக்கும் பொக்கிஷம் (13:44)*

*6. விலையேறப்பெற்ற முத்து (13:35,46)*

*7. சேர்த்து வாரிக்கொள்ளும் வலை (13:47-50)*

*8. வீட்டெஜமானாகிய மனுஷன் (13:51,52)*

*ஆ. விபரம் 3 ராஜ்யத்தில் முரண்பாடு (13:53-17:27)*

*1. நாசரேத் ராஜாவை நிராகரித்தல் (13:53-58)*

*2. ஏரோது யோவான் ஸ்நானகரைக் கொலைசெய்தல் (14''1-12)*

*3. இயேசு 5000 பேரைப் போஷித்தல் (14:13-21)*

*4. இயேசு கடலின் மேல் நடத்தல் (14:22-33)*

*5. பெருந்திரளான மக்கள் சுகமளிக்க வேண்டி வருதல் (14:34-36)*

*6. வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடம் சவால் விடுதல் (15:1-20)*

*7. சீதோன் பட்டணத்தில் இருக்கும் கானானிய ஸ்திரி விசுவாசித்தல் (15:21-28)*

*8. இயேசு பெருந்திரளான ஜனத்தாருக்கு சுகமளித்தல் (15:29-31)*

*9. இயேசு 4000 பேரை போஷித்தல் (15:32-39)*

*10. பரிசேயரும் சதுசேயரும் ஒரு அடையாளத்தைத் தேடுதல் (16:1-12)*

*11. பேதுரு இயேசுவை அறிக்கை செய்தல் (16:13-20)*

*12. இயேசு தன் மரணத்தை முன்னறிவித்தல் (16:21-28)*

*13. இயேசு தம் மகிமையை வெளிப்படுத்துதல் (17:1-13)*

*14. இயேசு ஒரு சிறுபிள்ளையைச் சுகப்படுத்துதல் (17:41-21)*

*15. இயேசு தான் காட்டிக்கொடுக்கப்படுவேன் என்பதை முன்னரே தெரிவித்தல் (17:22,23)*

*16. இயேசு ஆலய வரியினை கட்டுதல் (17:24-27)*

***V ராஜாவின் நிர்வாகம் (16:1 -18:1-35)***

*அ. சொற்பொழிவு : விசுவாசி சிறுபிள்ளையைப் போன்றவன் (18:1-35)*

*1. சிறுபிள்ளையைப் போன்று விசுவாசிக்க அழைப்பு (18:1-6)*

*2. குற்றங்களுக்கு விரோதமாக எச்சரிப்பு (19:7-0)*

*3. காணாமல் போன ஆட்டைக் குறித்த உவமை (18:10-14)*

*4. சபை ஒழுக்கத்திற்கு முன்மாதிரி (18:15-20)*

*5. மன்னிப்பை குறித்த பாடம் (18:21-25)*

*ஆ. விபரம் 4: எருசலேம் ஊழியம் (19:1-23:39)*

*1. சில ராஜரீக பாடங்கள் (19:1 - 20:28)*

*அ. விவாகரத்து குறித்து (19:1-10)*

*ஆ. பிரம்மச்சாரியத்தைக் குறித்து (19:11,12)*

*இ. பிள்ளைகள் குறித்து (19:13-15)*

*ஈ. சரணடைதல் குறித்து (19:16-20)*

*உ. யார் ரட்சிக்கப்படக்கூடும் என்பது குறித்து (19:23-39)*

*ஊ ராஜ்யத்தில் யாவரும் சமம் என்பது குறித்து (20:1-16)*

*எ. அவருடைய மரணம் குறித்து (20:17-18)*

*ஏ. உண்மையில் யார் பெரியவர் என்பது குறித்து (20:20-28)*

*2. சில ராஜரீக செயல்கள் (20:29-34)*

*அ. இரண்டு குருடர்களை அவர் பார்வையடையச் செய்கிறார் (20:29-34)*

*ஆ. வழிபடுதலை ஏற்றுக்கொள்கிறார் (21:1-11)*

*இ. தேவாலயத்தைச் சுத்தப்படுத்துகிறார் (21:12-27)*

*ஈ. அத்திமரத்தை சபிக்கிறார் (21:18-22)*

*உ. ஒரு சவாலுக்கு பதில் அளிக்கிறார் (21:23-27)*

*3. சில ராஜரீக உவமைகள் (21:28-22:14)*

*அ. இரண்டு குமாரர்கள் (21:28-32)*

*ஆ. பொல்லாத திராட்சைத் தோட்டக்காரர்கள் (21:33-46)*

*இ. கலியாண விருந்து (22:1-14)*

*4. சில ராஜரீக பதில்கள் (22:15-46)*

*அ. ஏரோதியரிடம்: வரிசெலுத்துவது குறித்து (22:15-22)*

*ஆ. சதுசேயர்களுக்கு உயிர்த்தெழுதலைக் குறித்து (22:23=33)*

*இ. வேதபாரகர்களிடம்: முதல் மற்றும் பிரதான கட்டளை குறித்து (22:34-40)*

*ஈ. பரிசேயர்களிடம்: தாவீதின் பெரிய குமாரன் குறித்து (22:41-46)*

*5. சில ராஜரீக பிரகடனங்கள் (23:1-39)*

*அ. வேதபாரகர்களுக்கும் பரிசேயர்களுக்கும் ஐயோ (23:1-36)*

*ஆ, எருசலேமுக்கு ஐயோ (23:37-39)*

***VI ராஜா பலியாகசெலுத்தப்படுதல் (24:1 - 25:36)***

*அ. சொற்பொழிவு 5: ஒலிவ மலை சொற்பொழிவு (24:1 - 25:46)*

*1. ஆலயம் தகர்க்கபடுதல் (24:1,2)*

*2. காலத்தின் அடையாளங்கள் (24:3-31)*

*3. அத்திமரத்தின் உவமை (25:32-35)*

*4. நோவாவின் பாடம் (24:36-44)*

*5. இரண்டு வேலையாட்கள் உவமை (24:51-51)*

*6. பத்து கன்னிகைகள் உவமை (25:1-13)*

*7. தாலந்துகள் உவமை (25:14-30)*

*8. தேசங்கள் நியாயம்தீர்க்கப்படுதல் (25:31-36)*

*ஆ. விபரம் 5: சிலுவையில் அறையப்படுதல் மற்றும் உயிர்த்தெழுதல் (26:1-28:15)*

*1. ராஜாவை கொல்ல திட்டம் தீட்டுதல் (26:1-5)*

*2. மரியாளின் அபிஷேகம் (26:6-13)*

*3. யூதாஸ் காட்டிக்கொடுத்தல் (26:14-16)*

*4. பஸ்கா பண்டிகை (26:17-30)*

*5. பேதுரு மறுதலிப்பான் என்று முன்னமே உரைத்தல் (26:31-35)*

*6. இயேசுவின் மனவேதனை (26:36-46)*

*7. இயேசு கைது செய்யப்படல் (26:47-56)*

*8. சனகெரிப்பு சங்கத்தின் முன் விசாரிக்கப்படுதல் (26:57-68)*

*9. பேதுரு மறுதலித்தல் (26:69-75)*

*10. யூதாஸ் நான்று கொண்டு மடிதல் (27:1-10)*

*11. பிலாத்துவின் முன்பு விசாரிக்கப்படுதல் (27:11-26)*

*12. சேனைவீரர்களின் கேலிபேச்சு (27:27-31)*

*13. சிலுவையில் அறையப்படுதல் (27:32-56)*

*14. அடக்கம் செய்யப்படுதல் (27:57-66)*

*15. உயிர்த்தெழுதல் (28:1-15)*

***VII (இறுதியுரை) ராஜாவின் நிர்ணயம் (28:15-20)***

# மாற்கு எழுதின சுவிசேஷம்

***தலைப்பு:***

*இந்த சுவிசேஷத்தை எழுதிய மாற்கின் பெயராலேயே இது அழைக்கப்படுகிறது, மேலும், இவர் அப்போஸ்தலர் பேதுருவுடன் ஊழியம் செய்தவர்; இவருடைய பெயர் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பல இடங்களில் ''மாற்கு என்னும் பேர்கொண்ட யோவான்'' என்று வருவதைக் காணலாம் (அப்.12:12,25, 15:37,39). பேதுரு சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்டவுடன் (அப்.12:12), எருசலேமில் இருந்த மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானின் தாயாரின் வீட்டிற்கு சென்றார். பவுலின் முதல் ஊழிய பிரயாணத்தில் (அப்.12:25; 13:5) உடனிருந்த பர்னபா மாற்குவின் இனத்தார் என கொலோசேயர் 4:10-ல் காண்கிறோம். ஆனால் பெர்கே பட்டணத்தில் பவுலைவிட்டு பிரிந்து எருசலேமுக்கு திரும்பிவிட்டர் எனவும் அறிகிறோம் (அப்.13:13). பவுலின் இரண்டாவது ஊழிய பிரயாணத்தில் மாற்குவையும் அழைத்துச் செல்லும்படி பர்னபா கேட்டுக்கொண்ட போது பவுல் மறுத்து விட்ட படியினால், பவுலுக்கும் பர்னபாஸுக்கும் இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு இருவரும் பிரிந்து விட்டனர் எனவும் காண்கிறோம் (அப்.15:38-40). முன்பு மாற்குவிடத்தில் காணப்பட்ட உறுதியற்ற தன்மை, பின்நாட்களில் மிகுந்த பலமும் முதிர்ச்சியுமாக வெளிப்படையாக மாறி, அவர் பவுலுக்கும் கூட தன்னை நிரூபிப்பதைக் காண்கிறோம். பவுல் கொலோசேயருக்கு எழுதும் போது அவர்களிடத்தில் மாற்கு வந்தால் அங்கீகரித்துக் கொள்ளுங்கள் என கொலோ.4:10ல் எழுதுகிறார். பிலமோனுக்கு எழுதும் போது சீஷர்களின் வரிசைப்படியலில் மாற்குவையும் பவுல் சேர்த்துக் கொள்கிறார். பின்நாட்களில், 2தீமோத்தேயு 4:11ல் ''மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்'' என்றுச்*

சொல்லும் அளவிற்கு ஒருபெரிய மாற்றம் பவுலுக்குள் ஏற்படுவதைக் காண்கிறோம். மாற்கு என்னும் பேர்கொண்ட யோவான் ஊழியத்தில் எனக்கு பிரயோஜனமுள்ளவன் என்று சொல்லுமளவிற்கு மாற்றம் ஏற்பட்டதற்கு பேதுருவின் ஊழியத்தின் தாக்கமும் ஒருகாரணமாக இருந்திருக்கலாம். மாற்கு பேதுருவுடன் நெருங்கிய ஓர் உறவு கொண்டிருந்தார் என்பதை "என் குமாரனாகிய மாற்கு" என்று 1பேதுரு 5:13ல் பேதுரு அழைப்பதில் இருந்து அறிகிறோம். உண்மையில், பேதுருவும் ஆரம்ப காலத்தில் தோல்விகளை சந்தித்தவராக இருந்த போதிலும், வாலிபனாகிய மாற்குவினிடத்தில் அவர் கொண்டிருந்த செல்வாக்கு மாற்கு தேவனிடத்தில் இருந்து பெற்றிருந்த ஊழிய அழைப்பை நிறைவேற்ற மாற்குவை பலசாலியாக, முதிர்ச்சியுற்றவராக மாற்றியதில் முக்கிய பங்கு வகித்தது.

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

நிருபங்களைப் போல் இல்லாது, சுவிசேஷ புத்தகங்கள் அவற்றின் ஆசிரியரின் பெயரை குறிப்பிடுவதில்லை. ஆதிதிருச்சபையின் தலைவர்கள், இரண்டாவது சுவிசேஷ புத்தகம் மாற்குவினால் தான் எழுதப்பட்டது என ஏகமனதாக உறுதியாகச் சொல்கின்றனர். ஹைரோபோலிஸின் தலைமை ஆயர் பாபியாஸ், கி.பி.140 ல் எழுதும் போது இதனைக் குறிப்பிடுக்கிறார்:

திருச்சபை மூப்பர் (அப்போஸ்தலர் யோவான்) சொன்னார்: பேதுருவிற்கு உடன் சென்று மொழிபெயர்ப்பாளராக இருந்த மாற்கு, தனக்கு எவைகளெல்லாம் நினைவில் நின்றனவோ - அவைகளை துல்லியமாக எழுதி வைத்தார்; அதில் இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளை - வரிசைப்படி அப்படியே மாற்கு எழுதி வைக்கவில்லை. மாற்கு இயேசு பேச கேட்டவராகவோ அல்லது இயேசுவுடன் இருந்தவராக இல்லாதிருப்பினும், பின்நாட்களில் பேதுருவுடன்

*சேர்ந்து ஊழியத்தை செய்யும் போது பேதுரு [கேட்பவருக்கு] பிரயோஜனம் ஆகும் அவசியமான அறிவுறுத்தல்களை மாற்குவிற்கு தந்து வந்தார் - ஆனால், ஆண்டவரின் வார்த்தைகளை வரிசைக்கிரமமாக மாற்குவிற்குச் சொல்ல வேண்டும் என்ற உள்நோக்கம் பேதுருவுக்கிற்கு இல்லை. இதினால், மாற்கு தனக்கு நினைவில் எவை இருந்தனவோ அவற்றை எந்த பிழையும் இல்லாமல் எழுதினார் - இதனைச்செய்யும்போது அவர் கேட்டவற்றில் ஒன்றையும் தவறவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார்; மட்டுமல்ல, எந்த ஒன்றையும் கற்பனையாகவும் அவர் சேர்க்கவில்லை.*

*கி.மு.150ல் ஜஸ்டின் மார்டிர் மாற்கு சுவிசேஷத்தைக் குறித்து எழுதும் போது "பேதுருவின் நினைவுகள்" என்று குறிப்பிடுகிறார். இத்தாலியில் இருந்த போது மாற்கு அவரது சுவிசேஷத்தை எழுதியிருக்கக் கூடும் என்று யூகித்திருக்கிறார். இது முந்தைய நாட்களின் பாரம்பரிய கருத்தான, மாற்கு சுவிசேஷம் ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு ரோமபுரியில் இருந்து எழுதப்பட்டது என்பதனை ஏற்றுக்கொள்கிறது. இரேனேயஸ் கி.பி185ல் எழுதும்போது, மாற்கு - "பேதுருவின் சீஷர் மற்றும் மொழிபெயர்ப்பாளர்" என்று அழைக்கிறார் மேலும் "இரண்டாவது சுவிசேஷ புத்தகம் கிறிஸ்துவை குறித்து பேதுரு என்ன பிரசங்கித்தாரோ அவைகள் மாற்கு சுவிசேஷ புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன" என்றார். பேதுருவின் மரணத்திற்கு (கி.பி67-68) முன் அல்லது பின் மாற்கு சுவிசேஷம் எழுதப்பட்டது என்ற கருத்தில் ஆதித்திருச்சபை மூப்பர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு காணப்பட்டது.*

*சுவிசேஷ அறிஞர்கள், இயேசு மாற்கு 13:2ல் ஆலயத்தை குறித்துப் பேசுகிறபடியால், எருசலேமும் அதின் ஆலயமும் இடிக்கப்பட்டுப் போவதற்கு முன் மாற்கு சுவிசேஷம் கி.பி. 50 லிருந்து 70ஆம் ஆண்டிற்குள் எழுதப்பட்டிருக்க வேண்டும்*

*என்கின்றனர். லூக்கா சுவிசேஷம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திற்கு முன் எழுதப்பட்டது (அப்.1:1-3) என்பது தெளிவாக காணப்படுகிறது. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் எழுதப்பட்ட நாட்கள் கி.பி.63 என எடுத்துக்கொண்டால், அதற்கும் முன்பதாக மாற்கு சுவிசேஷம் அதாவது கி.பி.50 களில் எழுதப்பட்டிருக்கலாம் (இதனை உறுதியாகச் சொல்ல முடியாது).*

## பின்னணி மற்றும் அமைப்பு

*மத்தேயு யூதர்களுக்காக எழுதப்பட்டது போல, மாற்கு ரோமாபுரியிலிருந்த விசுவாசிகள், குறிப்பாக புறஜாதியாரை கவனத்தில் வைத்து எழுதப்பட்டது. அராமிக் மொழி வார்த்தைகள் வரும்போது, அவற்றினை மாற்கு தனது வாசகர்களுக்காக மொழிபெயர்த்துள்ளார் (3:17; 5:41; 7:11,34; 10:46; 14:36; 15:22,34). மற்றொருபக்கம், சில இடங்களில் கிரேக்க பதங்களுக்கு பதிலாக லத்தீன் பதங்களை எடுத்துப் பயன்படுத்தியிருக்கிறார் (5:9; 6:27; 12:15,42; 15:16,39). ரோமர்கள் கால குறிப்புகளை வைத்து அவர் கணக்கிடுவதையும் காண்கிறோம் (6:48; 13:35) மற்றும் யூதர்களின் பழக்கவழக்கங்களுக்கு கவனமாக விளக்கம் அளிக்கிறார் (7:34; 14:12; 15:42). மாற்கு யூதர்களின் பழக்கங்களின் ஒருபகுதியான வம்ச வரலாற்றினை மத்தேயு, லூக்கா வைப்போல் எழுதாமல் தவிர்க்கிறார். இந்த சுவிசேஷம் பழையஏற்பாட்டு குறிப்புகள் ஒரு சிலவற்றை மட்டுமே பயன்படுத்துகிறது - அதைப்போலவே யூதர்களுக்கு விருப்பமான பகுதிகள் - சதுசேயர், பரிசேயர்கள் பற்றிய குறிப்புகளைத் தவிர்க்கிறது (சதுசேயர் என்ற பெயர் 12:18ல் ஒரே ஒருமுறை மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறது). சீரேனே ஊரார் சீமோனை 15:21ல் குறிப்பிடும்போது, மாற்கு அவரை ரோமாபுரியில் இருந்த சபையின் அங்கத்தினர் (ரோ.16:13) ரூப்புக்கும் தகப்பன் என்று குறிப்பிடுகிறார். மேற்சொன்ன யாவும் ரோமாபுரியில் இருந்த சபை மக்களுக்காக*

*மாற்கு சுவிசேஷம் எழுதப்பட்டது என்ற பாரம்பரிய நம்பிக்கையை ஆதரிப்பதாக இருக்கின்றன.*

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*மனுஷகுமாரன்... அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என மாற்கு10:45ல் எழுதுகிறார். இயேசுவின் போதனைகளைக் காட்டிலும் அவருடைய செயல்பாடுகளில் மாற்கு அதிகம் கவனம் செலுத்தி, அவருடைய சேவை மற்றும் தியாகத்திற்கு முக்கியத்துவம் தருகிறார். மற்ற சுவிசேஷபுத்தகங்களில் நாம் காணும் சொற்பொழிவுகளை தவிர்த்து, மாற்கு அதிகமாக இயேசுவின் போதனைகளின் சுருக்கமான விபரங்களை சார்ந்து - இயேசுவின் போதனைகளின் சாராம்சங்களை எழுதுகிறார். மாற்கு இயேசுவின் பரம்பரை மற்றும் பிறப்பு போன்ற தகவல்களையும் தவிர்த்து, அவர் என்றைக்கு ஜனங்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்கென்று யோவான் ஸ்நானகனால் வனாந்திரத்தில் ஞானஸ்நானம் பெற்று ஆரம்பித்தாரோ அதில் இருந்து தன் புத்தகத்தை எழுத ஆரம்பிக்கிறார்.*

*மற்ற எந்த சுவிசேஷபுத்தக ஆசிரியரைக் காட்டிலும், மாற்கு இயேசு மனுவாக வெளிப்பட்டவர் என்பதை மிக அழகாக எடுத்துக்காட்டுகிறார், அதில் இயேசு வெளிப்படுத்திய மனுஷீக உணர்வுகளை அழுத்தமாகக் கூறுறார் (1:41; 3:5; 6:34; 8:12; 9:36), அவர் மனுஷராக வந்ததினால் அவருக்கு இருக்கும் வரம்பெல்லைகள் (4:38; 11:12; 13:32), மற்றும் இயேசு மனுஷகுமாரன் என்பதில் இவர் மனுஷராக வெளிப்பட்டவர் என்பதனைக்காட்டும் சிறு விபரங்களையும் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறார் (உதாரணமாக, 7:33,34; 8:12; 9:36; 10:13-16).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*மாற்கு புத்தகத்திற்கு விளக்கம் அளிப்பவருக்கு எதிரில் - மூன்று முக்கிய கேள்விகள் நிற்கின்றன 1) மாற்குவிற்கு - மத்தேயு, லூக்காவுடன் என்ன உறவு? 2) காலயியல் - அதாவது ஆத்துமாவின் மரணம் மற்றும் மறுவாழ்வு குறித்து வரும் பத்திகளுக்கு எப்படி பதில் அளிப்பது? மற்றும் 3) அதிகாரம் 16ன் கடைசி 12 வசனங்கள் மாற்கு சுவிசேஷ மூலமுதலான எழுத்துக்களா? என்பவை.*

*மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷ புத்தகங்களின் உள்ள ஒத்த-வாக்கியங்களில் காணப்படும் பிரச்சினைகள்: மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷ புத்தகங்களை மேலோட்டமாக வாசிக்கும் போது கூட ஆச்சரியமூட்டும் ஒற்றுமைகள் வெளிப்படும் (மாற்கு 2:3-12; மத்தேயு 9:2-8; லூக்கா 5:18-26) அத்துடன் ஒவ்வொரு ஆசிரியரும் இயேசுவின் வாழ்க்கை, ஊழியம் மற்றும் போதனைகளைப் பார்ப்பதில் வேறுபடுவதையும் காணலாம். இப்படிப்பட்ட ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை - "Syn-ஒன்றுசேர்த்து Optic-பார்ப்பதில் இருக்கும் பிரச்சினையை "சினாப்டிக் ப்ராப்ளம்" (Synoptic Problem) என்கின்றனர். இப்பிரச்சினைக்குரிய நாகரீக தீர்வு - சுவிசேஷகர்கள் மத்தியிலும் கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு - இந்த மூன்று சுவிசேஷக புத்தகங்களின் மத்தியில் ஒருவித இலக்கிய சார்பு இருக்கின்றது என ஏற்றுக்கொள்வது. "இரண்டு ஆதாரங்கள்" என்னும் கொள்கையின் அடிப்படையில் இந்த தேற்றத்திற்கு விளக்கம் தரப்படுகிறது. இந்த கொள்கையின்படி, மாற்கு சுவிசேஷமே முதலில் எழுதப்பட்டது எனவும் மத்தேயுவும் லூக்காவும் மாற்குவின் புத்தகத்தினை அடிப்பட்டையாக கொண்டு தங்களது சுவிசேஷத்தை எழுதினார்கள் என்பது. இந்த கொள்கையை முன்வைப்பவர்கள், உலகில்இல்லாத, இரண்டாவது ஆதாரம்- பெயர் Q - இதுவே*

மத்தேயு மற்றும் லூக்கா சுவிசேஷகம் எழுதுவதற்கு ஆதாரம் எனவும் இது மாற்கு சுவிசேஷபுத்தகத்திற்கு இல்லை எனவும் கூறுகின்றனர். இந்த அவர்களது கருத்திற்கு ஆதாரமாக அனேக சான்றுகளை முன்வைக்கின்றனர்.

முதலில், மத்தேயு மற்றும் லூக்காவிற்கு இணையொத்ததாக மாற்கு சுவிசேஷம் இருக்கின்றது. மாற்கு புத்தகம் குறுகினதாக இருக்கின்றதால், மத்தேயுவும் லூக்காவும் மாற்குவின் விரிவாக்கம் செய்யப்பட்ட புத்தகங்கள். மூன்று சுவிசேஷ புத்தகங்களும் காலவரிசையைப் பின்பற்றுகின்றன. மத்தேயு அல்லது லூக்கா காலவரிசைபடுத்துதலில் விலகிச் சென்றாலும் மாற்கு புத்தக வரிசைக்கே திரும்ப வந்துவிடுகின்றன. வேறுவிதமாக சொல்லுவோமானால், மத்தேயு மற்றும் லூக்கா புத்தகமங்கள் இரண்டும் எந்தவொரு இடத்திலும் மாற்கு புத்தக காலவரிசைக்கு விலகிச்செல்வதில்லை. இதனிமித்தமே, சிலர் மத்தேயுவும் லூக்காவும் மாற்கு புத்தகத்தை தங்கள் வரலாற்று கட்டமைப்புக்கு அடிப்படையாக பயன்படுத்தினர் என்ற விவாதத்தை முன்வைக்கின்றனர். மூன்றாவது, மூன்று சுவிசேஷக புத்தகங்களுக்கும் பொதுவாக இருக்கும் சம்பவத்தை விவரிக்கும் போது அந்த சம்பவம் மாற்கு புத்தகத்தில் இருப்பதைக்காட்டிலும் வேறுபட்டதாக இருப்பின், மத்தேயு மற்றும் லூக்கா எழுதும் வார்த்தைகள் ஒத்துப்போவதே இல்லை. இச்செயல் ''இரண்டு ஆதாரங்கள்'' கொள்கையை முன்வைக்கிறவர்கள் - ‘‘மாற்கு’’ புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டே மத்தேயு மற்றும் லூக்கா எழுதினர் என்ற உண்மையை உறுதிபடுத்துகிறது என்கின்றனர்.

‘‘மாற்கு’’ புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டே மத்தேயு மற்றும் லூக்கா எழுதினர் என்பதை இப்படிப்பட்ட வாதங்கள் நிரூபிப்பதில்லை. சொல்லப்போனால், அவர்கள் காட்டும் சான்றுகள் அவர்களின் கொள்கைக்கு எதிரானவையாகவே இருக்கின்றன.

*1. மத்தேயு சுவிசேஷமே முதலில் எழுதப்பட்ட சுவிசேஷம் என திருச்சபையில் ஏகமனதாக பத்தொன்பதாவது நூற்றாண்டுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டது - இப்படி பல நூற்றாண்டுகள் நிலைத்த சான்றினை எளிதில் மறுக்க முடியாது.*

*2. கிறிஸ்துவின் கண்கண்ட சாட்சியாக இருக்கும் மத்தேயு அவரது மன மாற்றம் குறித்தும் அவரது புத்தகத்தில் எழுதும் மத்தேயு, ஏன் மாற்குவின் புத்தகத்தை (மாற்கு கண்கண்ட சாட்சி இல்லை) சார்ந்திருக்க வேண்டும்?*

*3. மேற்கண்ட மூன்று சுவிசேஷ புத்தகங்களில் புள்ளிவிபரப்படி ஆராய்ச்சி செய்தததில் அவைகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகள் மிக குறைவே; வேறுபாடுகள் பொதுவாக இருக்கின்றது என ஏற்றுக்கொண்டதைக் காட்டிலும் வித்தியாசங்கள் மிகஅதிகம். இந்த வித்தியாசங்கள் சுவிசேஷ ஆசிரியர்கள் எழுதுவதற்கு ஒருவரையொருவர் சார்ந்திருந்தனர் என்பதற்கு விரோதமாகவே ஆதாரங்களை முன்வைக்கின்றன.*

*4.வரலாற்றில் நிறைவேறிய சம்பவங்களின் நிரல்களையே சுவிசேஷபுத்தகங்கள் எழுதுகின்றன; இப்படி இருக்கும் போது, ஒரு பொதுவான வரலாற்று வரிசையை ஆசிரியர்கள் பின்பற்றவில்லை என்றால் தான் நமக்கு ஆச்சரியத்தை தரும். உதாரணமாக, அமெரிக்க யுத்தங்களினை விவரிக்கும் மூன்று புத்தகங்களில் நாம் காணும் ஒரே மாதிரியான வரிசை: புரட்சி யுத்தம், உள்நாட்டு யுத்தம், முதல் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், வியட்நாம் யுத்தம், மற்றும் வளைகுடா யுத்தம் என்று காண்பதினால், மூன்று புத்தக ஆசிரியர்களும் ஒருவர் புத்தகத்தை பார்த்து மற்றவர் எழுதினார் என்று ஆகாது. பொதுவான வரிசை உள்ளடக்கங்களில் இருப்பதினால், எழுதுவதற்கு ஒன்றையொன்று சார்ந்திருந்தன என்று கூற முடியாது.*

*5. மாற்குவின் புத்தகத்தை பின்பற்றிதான் மத்தேயுவும் லூக்காவும் சுவிசேஷம் எழுதினார்கள் என்றால் - மத்தேயுவும் லூக்காவும் மாற்குவின் வார்த்தைகளை ஏன் அவ்வளவாக மாற்றி எழுதவேண்டும்?*

*6. மாற்கு முக்கியமானது எனக்கருதி எழுதியதை லூக்கா எழுதாமல் விட்டிருக்கிறார் என்பது - லூக்கா தன்புத்தகத்தை எழுதும்போது மாற்குவின் புத்தகத்தை பார்க்கவில்லை என்று ஆகிறது. மாற்குவின் புத்தகத்தை பார்த்து தான் லூக்கா எழுதினார் என்ற "இரண்டு ஆதாரங்கள்" கொள்கை தவறு என்பது இதனால் உறுதிப்படுகிறது.*

*7. ஒவ்வொரு சுவிசேஷ புத்தக ஆசிரியர்களும் சார்ந்து எழுதினர் என்றால் அது ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் எப்படிப்பட்ட தொடர்பில் இருந்திருப்பர் என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. மாற்குவும், லூக்காவும் பவுலின் உடன் ஊழியர்கள் (பிலமோன் 1:24). மாற்குவின் தாயார் வீட்டில்தான் (அப்.12:12) திருச்சபை ஆரம்ப நாட்களில் கூடிவந்தது (இதில் மத்தேயுவும் அடக்கம்). சிசெரியா பட்டணத்தில் பவுல் இரண்டுவருடங்கள் சிறையில் இருந்த போது லூக்கா நிச்சயமாக மத்தேயுவை சந்தித்து இருக்க வாய்ப்புள்ளது. இப்படிப்பட்ட தொடர்புகள் "ஒருவரைபார்த்து ஒருவர்" சுவிசேஷத்தை எழுதினார் என்ற கருத்தை அர்த்தமற்ற கருத்தாக மாற்றிவிடுகிறது.*

*மூன்று சுவிசேஷ புத்தகங்களும் ஒன்றை பார்த்து மற்றது எழுதப்பட்டது என்ற ஒரு பிரச்சினையே இல்லை! குற்றம் சாட்டுபவர்களால் தகுந்த ஆதாரங்கள் தரமுடியவில்லை என்பதால் இதனை குறித்து அவர்கள் விளக்கம் தர அவசியமே இல்லை.*

*பாரம்பரியமாக விசுவாசிக்கப்படும் மூன்று ஆசிரியர்களும் தனித்தனியே தேவனுடைய உந்துதலால் பரிசுத்த*

ஆவியானவரினால் ஏவப்பட்டு எழுதினார்கள் என்ற ஒரே தீர்வு தான் நிலைத்து நிற்கும் தீர்வு.

வாசிப்போர், மேற்சொன்ன மூன்றுசுவிசேஷ பகுதிகளுக்குள் ஆசிரியர்களின் பார்வையை வெவ்வேறானவைகளாகக் காண்கின்றனர்; ஆனால், அவைகள் ஒவ்வொன்றும் எப்படி பொருந்தும்படி அமைந்து மேலும் பூரணமான ஒரே சம்பவம் அல்லது செய்தியினைக் கூறுகின்றன என்பதையே இறுதியில் காண்கிறோம். மேற்சொன்ன அம்சங்கள் யாவும் ஒன்றுக்கொன்று முரணானவை அல்ல. மாறாக, ஒன்றுக்கு ஒன்று உதவுபவைகளாக இருக்கின்றன; இருந்து ஒன்றாக சேர்த்துப் பார்க்கும்போது, முழுமையான வெளிப்பாட்டை நமக்கு வெளிப்படுத்துகின்றன.

**சுருக்கம்**

***I. (முன்னுரை) வனாந்திரத்தில் (1:13)***

*அ. யோவானின் செய்தி (1:1-8)*

*ஆ. யோவானின் ஞானஸ்நானம் (1:9-11)*

*இ. இயேசு சோதிக்கப்படுதல் (1:12,13)*

***II. இயேசு தமது ஊழியத்தை கலிலேயாவிலும் அதனைச்சுற்றியிருந்த பகுதிகளிலும் ஆரம்பித்தல் (1:14,15)***

*அ. அவர் தமது செய்தியை அறிவிக்கிறார் (1:14,15)*

*ஆ, அவர் தமது சீஷர்களை அழைக்கிறார் (1:16-20)*

*இ. கப்பர்நகூமில் ஊழியத்தை நிறைவேற்றுகிறார் (1:21-34)*

*ஈ. கலிலேயா விற்கு சென்றடைகிறார் (1:35-45)*

*உ. அவர் அவரது ஊழியத்தை பாதுகாக்கிறார் (2:1-3:6)*

*ஊ. திரளான ஜனக்கூட்டத்திற்கு பிரசங்கிக்கிறார் (3:7-12)*

*எ. பன்னிரண்டு சீஷர்களை நியமிக்கிறார் (3:13-19)*

*ஏ. வேதபாரகரையும் பரிசேயர்களையும் அதட்டுகிறார் (3:20-30)*

*ஐ. அவரது ஆவிக்குரிய குடும்பத்தார் யார் என்பதை அடையாளம் காட்டுகிறார் (3:31-36)*

*ஒ. உவமைகளினால் பிரசங்கிக்கிறார் (4:1-34)*

*1. விதைக்கிறவன் (4:1-9)*

*2. உவமைகளுக்கான காரணம் (4:10-12)*

*3. விதைக்கிறவன் உவமைக்கு விளக்கம் தருகிறார் (4:13-20)*

*4. விளக்கு (4:21-25)*

*5. விதை (4:26-29)*

*6. கடுகு விதை (4:30-34)*

*ஓ. அவருடைய அதிகாரத்தை நிரூபிக்கிறார் (4:35-5:43)*

*1, கடல் அலைகளை அமைதிபடுத்துதல் (4:35-41)*

*2. பிசாசுகளை துரத்துதல் (5:1-20)*

*3. வியாதியஸ்தர்களை சுகப்படுத்துதல் (5:32-34)*

*4. மரித்தோரை உயிருடன் எழுப்புதல் (5:35-43)*

*ஔ. அவர் தம்முடைய சொந்த ஊருக்கு திரும்புதல் (6:1-6)*

*க. அவருடைய சீஷர்களை அனுப்பி வைக்கிறார் (6:7-13)*

*ங. ஏரோது என்னும் எதிரியின் செயல்கள் (6:14-29)*

*ச. அவருடைய சீஷர்களை திரும்ப ஒன்று சேர்த்தல் (6:20-32)*

*ஞ. ஐயாயிரம் பேரை போஷித்தல் (6:33-34)*

ட. தண்ணீரின் மீது நடக்கிறார் *(6:45-52)*

ண. அனேகரை சுகப்படுத்துதல் *(6:53-56)*

த. பரிசேயருக்கு பதில் அளிக்கிறார் *(7:1-23)*

**III அனேக புறஜாதியார் தேசங்களில் ஊழியத்தை விரிவுபடுத்துதல் (7:24-9:50)**

அ. தீரு சீதோன் பட்டணத்தில் ஒரு புறஜாதிப் பெண்ணின் மகளை குணப்படுத்துதல் *(7:24-30)*

ஆ. தெக்கபோலியு: ஊமையும் காதுகேளாதவனுமாக இருந்த ஒருவனை சுகப்படுத்துதல் *(7:31-37)*

இ. கலிலேயா கடற்கரையின் கிழக்குபகுதியில் 4000 பேரை போஷித்தல் *(9:1-9)*

ஈ.தல்மனூத்தா: அவர் பரிசேயர்களுடன் விவாதிக்கிறார் *(8:10-12)*

உ. ஏரியின் மறுபக்கம்: அவருடைய சீஷர்களை அதட்டுகிறார் *(8:13-21)*

ஊ. பெத்சாயிதா: குருடனுக்கு பார்வை அளிக்கிறார் *(8:22-26)*

எ. கனசரேத்து, பிலிப்பி மற்றும் கப்பர்நகூம்: அவர் தமது சீஷர்களுக்கு கட்டளை தருகிறார் *(8:27-9:50)*

1. பேதுரு இயேசுவே கிறிஸ்து என்று அறிக்கையிடுகிறார் *(8:27-30)*

2. அவருடைய மரணத்தை முன்னறிவிக்கிறார் *(8:31-33)*

3. சீஷத்துவத்தின் கிரயத்தைக் குறித்து விளக்கம் தருகிறார் *(8:34-38)*

4. அவருடைய மகிமையை வெளிப்படுத்துகிறார் *(9:1-10)*

*5. எலியாவின் பங்கு குறித்து விளக்கம் தருகிறார் (9:11-13)*

*6. பிடிவாத ஆவியை துரத்துகிறார் (9:14-29)*

*7. மீண்டும் அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலைக் குறித்தும் முன்னறிவிக்கிறார் (9:30-32)*

*8. பரலோகராஜ்ஜியத்தில் யார் பெரியவனாக இருப்பான் என்பதை எடுத்துரைக்கிறார் (9:33-37)*

*9. மெய்யான ஆவிக்குரிய கனியை அடையாளம் காட்டுகிறார் (9:38-41)*

*10.தடுக்கல் ஆன கற்களை குறித்து எச்சரிக்கிறார் (9:42-50)*

## *IV. அவருடைய ஊழியத்தினை முடிவுக்கு கொண்டுவருதல் (10:1-52)*

*அ. விவாகரத்து குறித்து போதித்தல் (10:1-12)*

*ஆ. சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தல் (10:13-16)*

*இ. ஆளுகை செய்யும் வாலிப பிரபுவை சந்தித்தல் (10:17-27)*

*ஈ. சீஷர்களுக்கு பலனை உறுதிசெய்தல் (10:28-31)*

*உ. அவருடைய மரணத்திற்கு சீஷர்களை ஆயத்தப்படுத்துதல் (10:32-34)*

*ஊ. தாழ்மையான ஊழியத்தைச் செய்யும்படிக்கு சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்தல் (10:35-45)*

*எ. குருடன் ஒருவனை சுகப்படுத்துதல் (10:46-52)*

## *V. அவருடைய ஊழியத்தை நிறைவாக்குதல்: எருசலேம் (11:1-16:20)*

*அ. வெற்றிகரமான பிரவேசம் (11:1-11)*

ஆ. சுத்திகரிப்பு *(11:12-19)*

*1.* அத்திமரத்தை சபித்தல் *(11:12-14)*

*2.* ஆலயத்தை சுத்திகரித்தல் *(11:15-19)*

இ. வெளியரங்கமாகவும், இரகசியமாகவும் போதித்தல் *(11:20-26)*

*1.* தேவாலயத்தில் வெளியரங்கமாக *(11:20-12:44)*

அ. முகவுரை: சபிக்கப்பட்ட அத்திமரத்தில் இருந்து கற்றுக்கொள்ளுதல்*(11:20-26)*

ஆ. அவருடைய அதிகாரத்தைக் குறித்து *(11:27-33)*

இ. அவர் நிராகரிக்கப்படுவார் என்பது குறித்து *(12:1-12)*

ஈ. வரிசெலுத்துவதைக் குறித்து *(12:13-17)*

உ.உயிர்த்தெழுதல் குறித்து *(12:18-27)*

ஊ. பிரதானகட்டளை குறித்து *(12:28-34)*

எ. மேசியாவே மெய்யான குமாரன் என்பதைக்குறித்து *(12:35-37)*

ஏ. வேதபாரகர்களைக்குறித்து *(12:38-40)*

ஐ. கொடுத்தலைக் குறித்து *(12:41-44)*

*2.* இரகசியமாக: ஒலிவ மலையின் மீது *(13:1-37)*

அ. கடைசிகாலத்தினை குறித்து சீஷர்கள் கேள்விகேட்டல் *(13:1)*

ஆ. கர்த்தரின் பதில் *(13:2-37)*

ஈ.காட்டிக்கொடுக்க ஏற்பாடுகள் செய்தல் *(14:1,2,10,11)*

*உ. தைலத்தை சிரசின் மேல் ஊற்றுதல், கர்த்தருடைய கடைசிபந்தி, காட்டிக்கொடுக்கப்படுதல், கைது செய்யப்படுதல்,விசாரணை (யூதர்களின் கட்டம்) (14:3-9; 12-72)*

*1. தைலத்தை சிரசின் மேல் ஊற்றுதல்: பெத்தானியா (14:3-9)*

*2. கடைசி பந்தி: எருசலேம் (14:12-31)*

*3. ஜெபம்: கெத்சமனே (14:32-42)*

*4. காட்டிக்கொடுக்கப்படுதல்: கெத்சமனே (14:43-52)*

*5. யூதர்களின் விசாரணை: காய்பா வின் வீடு (14:52-72)*

*ஊ. விசாரணை (ரோமர்களின் கட்டம்) சிலுவையிலறைதல் (15:1-41)*

*1. ரோமர்களின் விசாரணை ) பிலாத்துவின் தலைமையகம் (15:1-15)*

*சிலுவையிலறைதல்: கொல்கதா (15:16-41)*

*எ. அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பின் கல்லறையில் அடக்கம் செய்யப்படுதல் (15:42-47)*

*ஏ. உயிர்த்தெழுதல் (16:1-8)*

*ஐ. பின்குறிப்பு: (16:9-20)*

# லூக்கா எழுதின சுவிசேஷம்

***தலைப்பு:***

*மற்ற மூன்று சுவிசேஷ புத்தகங்களுக்கு எப்படி தலைப்பு பெறப்பட்டதோ, அப்படியே இந்த புத்தகத்திற்கும் ஆசிரியரின் பெயரே தலைப்பாகி இருக்கிறது. பாராம்பரிய கருத்தின்படி லூக்கா ஒரு புறஜாதியார். அப்போஸ்தலனகிய பவுல் இந்த கருத்தை உறுதி செய்வதை கொலோசேயர் **4:11,14**-ஆம் வசனங்களில் காண்கிறோம். ''விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள்'' என்பதில் லூக்காவை வேறுபடுத்திக் காட்டுகிறார். இதிலிருந்து லூக்கா மாத்திரமே பரிசுத்த வேதாகமத்தில் உள்ள ஒரு புத்தகத்தை எழுதிய யூதரல்லாத, புறஜாதியார் ஆவார். புதிய ஏற்பாட்டில் அதிக பங்குகளை எடுத்துக்கொள்ளும் லூக்கா சுவிசேஷ பகுதி மற்றும் அப்போஸ்தலரின் நடபடிகள் புத்தகம் இரண்டையும் எழுதியவர் இவர்.*

*லூக்காவைப்பற்றி நாம் அறியவருவது மிக சொற்பமானதே. அவருடைய புத்தகத்தில் அவரைப் பற்றி எதுவும் எழுதவில்லை, இவருடைய பின்னணி அல்லது அவர் எப்படி மனம்மாறினார் என்பது போன்ற விபரங்கள் நமக்கு கிடைக்கவில்லை. வரலாற்று ஆசிரியர்களான யொசிபஸ் மற்றும் யெரோம், இவர் அந்தியோகியா பட்டணத்தார் எனக் குறிப்பிடுகின்றனர். இதினால் தான் என்னவோ அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் அனேக நிகழ்வுகள் அந்தியோகியா பட்டணத்தைச் சுற்றியே நிகழ்கின்றன (அப்.**11:19-27; 13:1-3; 14:26; 15:22,23 30-35; 18:22,23**). லூக்கா அதிகமாக பவுல் அப்போஸ்தலனுடன் பிரயாணப்பட்டவர்; பவுலின் மக்கோதொனியா தரிசனத்தில் (அப்:**16:9,10**) இருந்து பவுல் இரத்த சாட்சியாக மரித்த நாள் மட்டும் (2தீமோ.**4:11**) பவுலைப் பின்பற்றினார் எனலாம்.*

அப்போஸ்தலர் பவுல் லூக்காவை வைத்தியர் எனக் குறிப்பிடுகிறார் (கொலோ.4:14). இயேசு கிறிஸ்துவின் சுகமாக்கும் செயல்களுக்கு இவரது எழுத்துக்களில் அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதியிருப்பதில் இருந்தே இவர் ஒரு வைத்தியர் என்பது புலனாகும் (4:38-40; 5:15-25; 6:17-19; 7:11-15; 8:43-47; 49-56; 9:2,6,11; 13:11-13; 14:2-4; 17:12-14; 22:50,51). லூக்காவின் காலங்களில் மருத்துவர்கள் அவர்களுக்கே உரிய பிரத்யேக நுட்பமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதில்லை; இதினால், லூக்காவின் வார்த்தைகள் மற்ற சுவிசேஷ ஆசிரியர்களின் வார்த்தைகளிலும் வேறுபட்டதாக நாம் காண்பதில்லை.

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இரண்டும் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டவை (1:1-4, அப்.1:1). இவர் தன்னுடைய பெயரை எங்கேயும் குறிப்பிடவில்லை என்றாலும், இவர் “நாங்கள்” என அப்போஸ்தலருடைய நடபடிகளில் பல இடங்களில் குறிப்பிடுவதால், இவர் பவுல் அப்போஸ்தலனுடன் அதிகமாக பிரயாணம் மேற்கொண்டவர் என்பது தெளிவாகிறது (அப்.16:10-17; 20:5-15; 21:1-18; 27:1- 28:16). பவுல் தன்னுடன் ஊழியம் செய்தவர்களில், லூக்காவின் பெயரை மாத்திரமே தன்னுடைய நிருபத்தில் குறிப்பிட்டு எழுதியுள்ளார் (கொலோ.4:14; 2தீமோ.4:11; பிலேமோன் 24); இவற்றில் இருந்து லூக்காதான் இந்த இரு புத்தகங்களுக்கும் ஆசிரியர் ஆக இருக்ககூடும் என்பதற்கு பொருத்தமானவராக இருக்கிறார். இது ஆதி திருச்சபை ஏகமனதாக லுக்கா தான் இந்த சுவிசேஷ புத்தகத்தை எழுதினார் என்று ஏற்றுக் கொண்ட பாரம்பரியத்திற்கு ஏற்புடையதாக இருக்கிறது. இவருடைய இந்த இரண்டு புத்தகங்களிலும், லூக்கா முதலாவதாகவும், அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாவதாகவும்; அதே வேளையில் அவை

ஒரேநேரத்தில் எழுதப்பட்டவைகளாகத் தோன்றுகின்றன. ''தெயோப்பிலு'' என்பவருக்கு 2 தொகுப்புகளாக இந்த இரண்டு புத்தகங்களும் - கிறிஸ்தவத்தின் அடிப்படை கருப்பொருள் மற்றும் அமைப்பை விவரித்து எழுதிய புத்தகங்கள், கிறிஸ்துவின் பிறப்பு முதல் பவுல் ரோம பேரரசினால் வீட்டு காவலில் வைக்கப்பட்டது வரை விவரிக்கின்றன (அப்.28:30,31).

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம், பவுல் இன்னும் ரோமாபுரியில் இருப்பதுடன் முடிவடைவதால், பவுல் சிறைச்சாலையில் இருந்த நாட்களில் ரோமாபுரியில் இருந்து லூக்கா இப்புத்தகங்களை எழுதினார் என்பது தெளிவாகிறது (கி.பி.60-62). எருசலேம் நிர்மூலமாக்கப்படும் (கி.பி.70) என்ற இயேசுவின் தீர்க்கதரிசன வார்த்தைகளை லூக்கா குறிப்பிடுகிறார், ஆனால் அத்தீர்க்கதரிசனம் நிறைவேறியது என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. பொதுவாக, லூக்கா எந்தவொரு தீர்க்கதரிசன நிறைவேறுதலையும் குறிப்பிடுபவர் (அப்.11:28) ஆகையால் ரோமர்கள் எருசலேமை கைப்பற்றியதற்கு முன்பே இப்புத்தகங்களை எழுதியிருக்கலாம்.. கி.பி.64-ல் ஆரம்பித்த நீரோ மன்னனின் வன்கொடுமை குறித்தும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் குறிப்பு இல்லை. மேலும் அனேக வேதசாஸ்திரிகள் யாக்கோபு இரத்த சாட்சியாக மரித்தத்து கி.பி.62-ல் என குறிப்பிடுகின்றனர். இச்சம்பவம் லூக்கா புத்தகம் எழுதுவதற்கு முன் நிறைவேறி இருந்தால் நிச்சயமாக லூக்கா குறிப்பிட்டிருப்பார் - ஆனால், குறிப்பிடவில்லை! எனவே இந்த சுவிசேஷ புத்தகம் எழுதப்பட்ட காலம் கி.பி.60- 61 ஆக இருக்கலாம்.

## பின்னணி மற்றும் அமைப்பு

''மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே'' (அர்த்தம், தேவனை நேசிப்பவர்) என அழைத்து தனது சுவிசேஷபுத்தகத்தை லூக்கா ஆரம்பிக்கிறார் (லூக்.1:1; அப்.1:1). இராயனுடைய

அரண்மனையில் (பிலிப்பியர் 4:22) இருந்த போது கிறிஸ்துவிடம் மனம் திரும்பிய ரோம சாம்ராஜ்யத்தின் கனவான்களில் ஒருவராக "தெயோப்பிலு" இருந்திருக்க கூடும். இவர் மகா கனத்திற்கு உரியவராக இருந்திருக்க வேண்டும். இது ஒரு பதவி அல்லது புனைப்பெயர் ஆக இருந்திருக்கலாம். இந்த ஒரே மனிதருக்கு என்று இல்லாமல், மிகப்பெரிய அளவிலான வாசகர்களை மனதில் நிறுத்தித்தான் லுக்கா எழுதினார் என்பது நிச்சயம். இன்றைய நாகரீக புத்தகங்களில் நாம் சமர்ப்பணம் என்று காண்கிறோமே, அப்படி லூக்கா தன் புத்தகத்தை சமர்ப்பித்து எழுதுகிறார். இது நிருபங்கள் எப்படி அழைத்து ஆரம்பிக்கின்றதோ அப்படிப்பட்ட ஆரம்பம் இல்லை இது.

"ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு, வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே" என்று லூக்கா வெளிப்படையாகவே இந்த சுவிசேஷம் கண்கண்ட சாட்சிகளின் அறிக்கையின் அடிப்படையில் எழுதப்பட்டது, தான் கண்ணுற்று எழுதியதாக அல்ல என தெரிவிக்கிறார். இயேசுவின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை ஓர் ஒழுங்கின்படி தொகுத்து வழங்கவேண்டும் என்பதே லூக்காவின் நோக்கம் என்பதை நாம் முன்னுரையில் இருந்து அறிந்துகொள்கிறோம், ஆனாலும், அவர் எல்லா இடங்களிலும் காலவரிசையின்படி எழுதினார் என்றும் அர்த்தப்படுத்தாது.

நடப்பில் இருக்கும் ஆதாரங்களைக் கொண்டு எழுதினேன் என்று லூக்கா ஒப்புக்கொண்டாலும், லூக்கா அவருடைய பணி தேவனுடைய ஆவியானவரின் உந்துதலின்படியே நிறைவேறியது என்பதை மறுக்கவில்லை. வேதாகம வாக்கியத்தினை எழுதும் இயல்பான ஆசிரியரின் ஆள்தத்துவம், வார்த்தைகள் மற்றும் நடையில் இருந்து அகத்தூண்டுதல் ஒருபோதும் வழிவிலகிச் செல்லவோ அல்லது புறக்கணிக்கவோ செய்யவில்லை. வேதாகம வாக்கியங்களை எழுதும் ஆசிரியர்களின் தனித்தன்மை வேதவாக்கியங்களில் அழியாமல் எப்பொழுதும் முத்திரை

*பதிக்கப்படுகிறது. லுக்காவின் ஆராய்ச்சியும் இந்த விதிக்கு விதிவிலக்கல்ல! அவருடைய ஆராய்ச்சியும் கூட தெய்வீக வழிநடத்துதலின்படியே பண் ஒன்று சேர்ந்து இசைப்பது போல ஒன்றாக இணைக்கப்பட்டது. அவருடைய எழுத்துக்களை - லூக்கா - ''தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்'' என்று 2பேதுரு 1:21 ல் நாம் காண்பது போல் எழுதினார். ஆகையால், இவர் எழுதும் வார்த்தைகள் யாவும் நிச்சயமான சத்தியம்.*

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*மிகவும் படித்த, மேதையின் வார்த்தைகளுக்கு ஒப்பாக லூக்காவின் வார்த்தைகள் மற்றும் மொழி நடை இருக்கிறது. இவர் உன்னிப்பாக கவனித்து எழுதும் வரலாற்று ஆசிரியர் போல் எழுதியுள்ளார். இதில் அவர் சொல்லும் சம்பவங்களுக்கு தொடர்புடைய வரலாற்று சூழலை நாம் அடையாளம் காணவும் உதவி செய்வதை காண்கிறோம் (1:5; 2:1,2; 3:1,2; 13:1-4). அனைத்து சுவிசேஷங்களையும் ஒப்பிடும் போது, இயேசுவின் பிறப்பு குறித்து லூக்கா கொடுத்திருக்கும் தகவல்கள் பரிபூரணமானவைகள் (லூக்காவின் இதர எழுத்துக்கள் போலவே). மேலும் அவற்றின் இலக்கிய நடை மெருகூட்டப்பட்டது. இயேசுவின் பிறப்பை விவரிக்கும் போது அதில் சில துதி சங்கீதங்களை சேர்த்து தந்துள்ளார் (1:46-55; 1:68-79; 2:14; 2:29-32,34, 35). இவர் ஒருவர் மாத்திரமே - யோவான் ஸ்நானகனின் பிறப்பின் போது நிகழ்ந்த அசாதாரணமான நிகழ்வுகள், மரியாளுக்கு முன் அறிவித்தல், முன்னணையில் கிடத்தியிருத்தல், மேய்ப்பர்கள் மற்றும் சிமியோன், அன்னா வந்து தரிசித்தல் போன்ற விபரங்களை எழுதுகிறார் (2:25-38).*

*லூக்கா சுவிசேஷம் முழுவதும் வியாபித்திருக்கிற கருப்பொருள் - புறஜாதியார், சமாரியர்கள், பெண்கள், பாலகர்கள், ஆயக்காரரர்கள், பாவிகள் மற்றும் இஸ்ரவேலில் எப்பொழுதும் தள்ளி வைக்கப்பட்டவர்கள் என்று கருதப்பட்டவர்கள் = குறித்து இயேசு கொண்டிருந்த மனதுருக்கம். எப்பொழுது எல்லாம் ஆயக்காரர் என்று அவர் பேசுகிறாரோ (**3:12; 5:27; 7:29; 15:1; 18:10-13; 19:2**), அப்பொழுது எல்லாம் அவர்களின் நேர்மறையான விஷயத்தை குறித்தே பேசுகிறார். அதேவேளையில், ஐசுவரியவான்கள் மற்றும் கனத்திற்குரியவர்களின் இரட்சிப்பை குறித்து பேச தவறவில்லை, உதாரணமாக, **23:50-53** காண்க. ஆரம்பத்தில் நிறைவேறின இயேசுவின் வெளியரங்கமான ஊழியத்திலிருந்து (**4:18**) சிலுவையில் இயேசு மொழிந்த கடைசி வார்த்தைகள் வரை கிறிஸ்துவின் ஊழிய கருப்பொருளை சமுதாயத்தால் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு லூக்கா முக்கியத்துவம் கொடுத்து எடுத்துச்செல்கிறார். தங்கள் தேவை என்ன என்பதை நன்கு உணர்ந்திருந்தவர்களுக்கு ''மிகப்பெரிய மருத்துவர்'' எப்படியாக உதவிசெய்கிறார் என்பதை மீண்டும் மீண்டும் லூக்கா எடுத்துக் காட்டுகிறார் (**5:31,32; 15:4-7,31,32; 19:10**). பெண்களுக்கு லூக்கா அதிமுக்கியத்துவம் கொடுப்பது கவனிக்கத்தக்கது. இயேசுவின் பிறப்பின் வம்சவழியில் மரியாள், எலிசபெத், அன்னாள் ஆகிய பெண்களுக்கு முக்கியத்துவம் தந்துள்ளார் (அதிகாரங்கள் **1,2**), உயிர்த்தெழுதலின் காலை வேளையில் பெண்கள் தான் முக்கிய பங்கு வகித்தார்கள் என்பதை லூக்கா மீண்டும் எடுத்துக்காட்டுகிறார். நமது ஆண்டவரின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தில் பெண்களின் பங்கு அதிகம் என்பதை லூக்கா வலியுறுத்துகிறார் (**7:12; 15:37-60; 8:2,3 43-48; 10:38-42; 13:11-13; 21:2,4; 23:27-29,49,55,56**). லூக்கா சுவிசேஷபுத்தகத்தில் நினைவிற்குவரும், வேறு சில அடிக்கடி நிகழும் நிகழ்வுகள் இழையோடி இருக்கின்றன. தேவனுடைய சமூகத்தில் மனுஷருடைய பயம், மன்னிப்பு (**3:3;5:20-25; 6:37;***

*7:41-50; 11:4; 12:10; 17:3,4; 23:34; 24:47); மகிழ்ச்சி; தெய்வீக சத்தியத்தின் இரகசியங்களில் உள்ள அதிசயங்கள்; பரிசுத்தாவியானவரின் பங்கு (1:15, 35, 41,67,; 2:25-27; 3:16,22; 4:1,14, 18; 10:21;11:13; 12:10,12); எருசலேமின் தேவாலயம் (1:9-22;2:27-38, 46-49; 4:9-13; 18:10-14; 19:45-48; 20:1-21:6; 21:37,38; 24:53); மற்றும் இயேசுவின் ஜெபங்கள். லூக்கா 9:51-ஆம் வசனத்தில் இருந்து, லூக்கா, இயேசு எருசலேமுக்கு சென்ற கடைசிநாட்களில் நடந்த சம்பவங்களை விவரிக்க 10 அதிகாரங்களை ஒதுக்கியுள்ளார். இந்த பகுதிகளில் காணும் அனேக சம்பவங்கள் தனித்தன்மை வாய்ந்தவை, லூக்கா சுவிசேஷ புத்தகத்தில் மட்டுமே காணக் கிடைக்கும், இது லூக்கா சுவிசேஷ புத்தகத்தின் இருதயம் போன்ற முக்கிய பகுதி என்றும் சிலுவையை நோக்கி இயேசு சென்ற பாதையின் இடைவிடாத முன்னேற்றத்தை எடுத்துகாட்டுவது லூக்கா சுவிசேஷ புத்தக கருப்பொருளின் விசேஷ அம்சம். இந்த ஒரு நோக்கத்தை நிறைவேற்றவே இயேசு இப்பூவுலகிற்கு வந்தார். அதனை தள்ளிப்போட மாட்டார். பாவிகளை இரட்சிப்பதே இயேசு கிறிஸ்துவின் முழுமையான திட்டம் / நோக்கம்; இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார் (19:10).*

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*மத்தேயுவைப்போல் இல்லாது, மாற்கு புத்தகத்தைப் போல் லூக்கா சுவிசேஷ புத்தகம் புறஜாதியாரை கருத்தில் கொண்டு எழுதினார். யூதர்கள் அனைவருக்கும் தெரிந்திருந்த இடங்களை லூக்கா அடையாளப்படுத்தி எழுதுகிறார் (உதாரணமாக, 4:31; 23:51; 24:13); இதிலிருந்து லூக்கா சுவிசேஷ புத்தகத்தை வாசிப்பவர்கள் - பாலஸ்தீன பூகோள அமைப்பை நன்கு அறிந்தவர்களை காட்டிலும் அதிகமான வேறுபகுதிகளில் இருந்தோருக்கும் எழுதப்பட்டது என அறிகிறோம். லூக்கா கிரேக்க வார்த்தைகளையே எபிரேய வார்த்தைகளைக் காட்டிலும்*

*அதிகமாக எடுத்துப் பயன்படுத்துகிறார் (உதாரணமாக, **23:7,8**ல் கொல்கதாவிற்கு பதிலாக "கல்வாரி"). யூதரை வெறுக்கிற வார்த்தைகள் உதாரணமாக, "அப்பா" (மாற்கு **14:36**); ரபீ (மத்.**23:7,8**); யோவான் (**1:38,49**) மற்றும் "ஓசன்னா" (மத்.**21:9**; மாற்கு **11:9,10**; யோவான்:**12:13**) போன்ற வார்த்தைகளை லூக்கா எடுத்துப் பயன்படுத்தவில்லை அல்லது அதற்கு இணையான கிரேக்க வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார். லூக்கா, மத்தேயுவைக் காட்டிலும் சுருக்கமாக பழையஏற்பாட்டில் இருந்து எடுத்தாளுகிறார். அப்படியே பயன்படுதினாலும் எபிரேயத்தில் இருந்து மொழி பெயர்த்து கிரேக்க மொழியில் எழுதிய LXX மொழிபெயர்ப்பினையே எடுத்துப் பயன்படுத்துகிறார். மேலும் விரிவாக பார்த்தோமானால், லூக்கா பழையஏற்பாட்டில் இருந்து நேரடி மேற்கோள்களுக்கு பதிலாக குறிப்பீடுகளையே பயன்படுத்துகிறார் எனவும் அதிலும் அவை இயேசு பேசும் வார்த்தைகளில் வெளிப்படுகின்றனவே அல்லாமல் லூக்கா விவரிக்கும் பகுதிகளில் காணப்படவில்லை (**2:23,34; 3:4-6; 4:4,8,10-12, 18,19; 7:27; 10:27; 18:20; 19:46; 20:17, 18, 37, 42, 43; 22:37**).*

*லூக்கா, மற்ற சுவிசேஷ எழுத்தாளர்களை விட "சுவிசேஷத்தின் அழைப்பு உலகளாவிய நோக்கம் கொண்டது" என்பதை முன்னிலைப்படுத்துகிறார். இயேசு இஸ்ரவேலினால் மறுதலிக்கப்பட்டு பின்னர் உலகத்திற்கு பரிசாக அளிக்கப்பட்ட மனுஷகுமாரன் என்பதை எடுத்துகாட்டினார். மேலே நாம் கருப்பொருள் பகுதியில் கண்டபடி, இயேசுவின் கண்களில் தயவு பெற்ற புறஜாதியார், சமாரியர்கள், மற்றும் புறக்கணிக்கப்பட்டவர்களை லூக்கா திரும்பத் திரும்ப நமக்குமுன் மதிப்புள்ள உறவுகளாக எடுத்துக்காட்டுகிறார். "புறஜாதியாருக்கு அப்போஸ்தலராக" இருந்தவருடன் மிக நெருக்கமாக பயணங்களை மேற்கொண்டவரின் எழுத்துக்கள்*

*இப்படித்தான் இருக்கும் என நாம் எதிர்பார்த்தது போலவே லூக்கா விடாப்பிடியாகப் பேசுகிறார் (ரோமர் 11:13).*

*ஆனாலும் சில குறைகாண்கிறவர்கள் லூக்காவின் இறையியலுக்கும் பவுலுடையதற்கும் மிகப்பெரிய இடைவெளி இருப்பதைக் காண்பதாக குற்றஞ்சாட்டுகிறார்கள். உண்மைதான் - லூக்கா தன்னுடைய மொழி நடையில் பவுலின் சொற்களை எடுத்துப்பயன்படுத்தவில்லை. லூக்கா தனக்கே என்று ஒருபாணி வகுத்துக்கொண்டு அதன்படி எழுதினார், ஆனாலும் அப்போஸ்தலரிகளின் இறையியலுடன் கனகச்சிதமாக இவரது இறையியல் இசைந்து போகிறது. பவுலுடைய உபதேசத்தின் மைய்யப்ப்பொருள், விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்பதே (ரோ.3:24); விசுவாசத்தினால் நீதிமான் பிழைபான் என்ற கருத்தை, லூக்காவும் பரிசேயன் மற்றும் ஆயக்காரன் உவமை (18:9-14), பிரசித்தமான கெட்டகுமாரன் கதை (15:11-32); சீமோன் வீட்டில் நிகழ்ந்த சம்பவம் (7:36-50); மற்றும் சகேயுவின் இரட்சிப்பு (19:1-10) போன்ற வற்றில் மேம்படுத்தி விவரிக்கிறார்.*

## சுருக்கம்

### *I.* (தொடக்கம்) கிறிஸ்துவின் ஊழியம் *(1:1 - 4:13)*

*அ. முன்னுரை (1:1-4)*

*ஆ. கிறிஸ்துவின் பிறப்பு (1:5-2:38)*

*1. சகரியாவிற்கு முன்னுரைத்தல் (1:5-25)*

*2. மரியாளுக்கு முன்னறிவித்தல் (1:26-38)*

*3. வருகை (1:39-45)*

*4. பெரியது (1:46-56)*

*5. முன்னோடியவரின் பிறப்பு (1:57-80)*

*6. இயேசுவின் பிறப்பு(1:46-56)*

*இ. இயேசுவின் சிறுவயது (2:39-52)*

*1. நாசரேத்தில் (2:39,40)*

*2. ஆலயத்தில் (2:41-50)*

*3. மனுஷகுமானரன் வம்சவரலாறு (3:23-38)*

*4. மனுஷகுமாரன் சோதிக்கப்படல் (4:1-13)*

**II கலிலேயாவில் ஊழியம் (4:14-9:50)**

*அ. அவருடைய ஊழியத்தின் ஆரம்பம் (4:14-44)*

*1. நாசரேத் (4:14-30)*

*2. கப்பர்நகூம் (4:31-42)*

*அ. ஒரு பிசாசு துரத்தப்படல் (4:31-37)*

*ஆ. திரளான ஜனங்கள் சுகம் பெறுதல் (4:38-42)*

*3. கலிலேயா பட்டணங்கள் (4:43,44)*

*ஆ. அவருடைய சீஷர்களை அழைத்தல் (5:1 - 6:16)*

*1. நான்கு மீனவர்கள் (5:1-26)*

*அ. மனுஷர்களை பிடிக்கிறவர்களாக்குவேன் (5:1-11)*

*ஆ. குஷ்டரோகியை சுகப்படுத்துதல் (5:12-16)*

*இ. பாவங்கள் மன்னிக்கப்படுதல் (5:17-26)*

*2. லேவி (5:27-6:11)*

*அ. சுவிசேஷம் நீதிமான்களுக்கல்ல, பாவிகளுக்கு (5:27-32)*

*ஆ. திராட்சைரசத்தை பழைய துருத்திகளில் அல்ல புதிய துருத்திகளில் (5:33-39)*

*இ. ஓய்வுநாள் ஆசரிப்பு அடிமைப்படுத்துவதற்குஅல்ல நன்மைசெய்வதற்கு (6:1-11)*

*3. பன்னிரண்டு சீஷர் (6:12-16)*

*இ. அவருடைய பணியை தொடருதல் (6:17-9:50)*

*1. வனாந்திரத்தில் பிரசங்கித்தல் (6:17-49)*

*அ. பாக்கியவான்கள் (6:17-23)*

*ஆ. ஐயோ! (6:24-26)*

*இ. கட்டளைகள் (6:27-49)*

*2. பட்டணங்களில் ஊழியம் செய்தல் (7:1 - 8:25)*

*அ. நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரனை சுகப்படுத்துதல் (7:1-10)*

*ஆ.விதவையின் மகனை உயிருடன் எழுப்புதல் (7:11-17)*

*இ. யோவான்ஸ்நானகனின் சீஷர்கள உற்சாகப்படுத்துதல் (7:18-35)*

*ஈ. பாவியான மனுஷியை மன்னித்தல் (7:36-50)*

*உ. அன்பான சீஷர்களை ஒன்று சேர்த்தல் (8:1-3)*

*ஊ. திரளான ஜனங்களுக்கு உவமைகளைச்சொல்லி கற்றுத்தருதல் (8:4-21)*

*எ. காற்றையும் கடலையும் அதட்டுதல் (8:22-25)*

*3. கலிலேயாவில் பிரயாணம் செய்தல் (8:26-9:50)*

*அ. பிசாசு பிடித்திருந்தவனை விடுவிக்கிறார் (8:26-39)*

*ஆ. ஒரு பெண்ணை சுகப்படுத்துகிறார் (8:40-49)*

*இ. சிறு பெண்ணை உயிருடன் எழுப்புகிறார் (8:49-56)*

*ஈ. பன்னிரண்டு சீஷர்களை அனுப்பிவைக்கிறார் (9:1-6)*

*உ. ஏரோது வினை பிரமிக்க வைக்கிறார் (9:7-9)*

*ஊ. திரளான ஜனங்களை போஷிக்கிறார் (9:10-17)*

*எ. அவருடைய சிலுவை மரணத்தை முன்கூட்டியே அறிவிக்கிறார் (9:18-26)*

*ஏ. அவருடைய மகிமையை வெளிப்படுத்துகிறார் (9:27-36)*

*ஐ. அசுத்த ஆவியை துரத்துகிறார் (9:37-42)*

*ஒ. அவருடைய சீஷர்களுக்கு அறிவுரை கூறுகிறார் (9:43-50)*

***III எருசலேமுக்கு பிரயாணம் செய்தல் (9:51 -19:27)***

*அ. சமாரியா (9:51-10:37)*

*1. ஒருகிராமத்தில் அவரை திருப்பி அனுப்புகின்றனர் (9:51-56)*

*2. அரைமனதுடன்வந்தவர்களை திருப்பி அனுப்புகிறார் (9:57-62)*

*3. எழுபது பேரை அனுப்பி வைக்கிறார் (10:1-24)*

*4. நல்லசமாரியன் உவமையை கூறுகிறார் (10:25-37)*

*ஆ. பெத்தானியா மற்றும் யூதேயா (10:38-13:35)*

*1. மரியாள் மற்றும் மார்த்தாள் (10:38-42)*

*2. கர்த்தர் கற்றுத்தந்த ஜெபம் (11:1-4)*

*3.வருந்திக் கேட்பதின் அவசியம் (11:5-13)*

*4. நடுநிலையாக இருப்பேன் என்பது இயலாத காரியம் (11:14-35)*

*5. பரிசேயர்கள் மற்றும் நியாயதிபதிகளுக்கு ஐயோ (11:37-54)*

*6. வழியில் செல்லும் போதுசொல்லும் பாடங்கள் (12:1-59)*

*அ. மாய்மாலத்திற்கு விரோதமாக (12:1-12)*

*ஆ. உலகப்பொருளாசை க்கு விரோதமாக (12:13-21)*

*இ. கவலைப்படுதலுக்கு விரோதமாக (12:22-34)*

*ஈ. உண்மையில்லாத தன்மைக்கு விரோதமாக (12:35-48)*

*உ. வீட்டார் பிரிந்திருப்பார்கள் என்பதாக (12:49-53)*

*ஊ. ஆயத்தமில்லாது இருப்பதற்கு விரோதமாக (12:54-56)*

*எ. பிரிவினைக்கு விரோதமாக (12:57-59)*

*7. கேள்விகளுக்கு பதில் (13:1-30)*

*அ. தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்து (13:1-9)*

*ஆ.ஓய்வுநாள் குறித்து (13:10-17)*

*இ. தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து (13:18-21)*

*ஈ. இரட்சிக்கப்பட்ட ஒருசிலரைக் குறித்து (13:22-30)*

*8. கிறிஸ்துவின் புலம்பல் (13:31-35)*

*இ. பெர்சியா (14:1 - 19:27)*

*1. பரிசேயர்களின் ஒரு விருந்தாளி (14:1-24)*

*அ. ஒய்வுநாளைக் குறித்து இயேசுவை சோதித்துபார்த்தல் (14:1-6)*

*ஆ. இயேசு அவர்களுக்கு தாழ்மையை குறித்து கற்றுத்தருதல் (14:7-14)*

*இ. பரலோகத்தின் விருந்து குறித்து அவர்களிடம் சொல்கிறார் (14:15-24)*

*2. பெருந்திரளான ஜனங்களுக்கு போதிப்பவர் (14:25 - 18:34)*

*அ. சீஷத்துவத்தின் கிரயம் (14:25-35)*

*ஆ. காணாமல் போன ஆட்டைக் குறித்த உவமை (15:1-7)*

*இ. காணாமல் போன காசு பற்றிய உவமை (15:8-10)*

*ஈ. காணாமல் போன மகன் குறித்த உவமை (15:11-32)*

*உ. அநீதியான உக்கிராணக்காரன் குறித்த உவமை (16:1-18)*

*ஊ. ஐசுவரியவானும் லாசருவும் (16:19-31)*

*எ. மன்னிப்பதை குறித்த ஒரு பாடம் (17:1-4)*

*ஏ. பற்றுறுதியுடன் இருப்பது குறித்த ஒரு பாடம் (17:5-10)*

*ஐ. நன்றியறிதலுடன் இருப்பது குறித்த ஒரு பாடம் (17:11-19)*

*ஒ. ஆயத்தமாக இருப்பது குறித்த ஒரு பாடம் (17:20-37)*

*ஓ. விடாமுயற்சியுடன் இருந்த விதவை குறித்த உவமை (18:1-8)*

*ஔ.பரிசேயனும் ஆயக்காரர் (18:9-14)*

*க. குழந்தையைப்போல் இருக்கவேண்டியது குறித்த பாடம் (18:15-17)*

*ங. கட்டுப்பட்ட நிலை குறித்த ஒரு பாடம் (18:18-30)*

*ச. மீட்டெடுத்தலின் திட்டம் குறித்த ஒரு பாடம் (18:31-34)*

*3. பாவிகளின் நேசர் (18:35-19:10)*

*அ. குருடர்களின் கண்களை திறத்தல் (18:35-43)*

*ஆ. இழந்து போனவர்களை இயேசு தேடி இரட்சிக்கிறார் (19:1-19)*

*4. சகல பூலோகத்தாருக்கும் நியாயாதிபதி (19:11-27)*

*அ. நீண்ட பயணத்தின் முடிவு (19:11)*

*ஆ. திரவியம் கொடுத்துச்சென்ற பிரயாணக்கரன் உவமை (19:12-27)*

## *IV.* **பேரார்வம் மிகுந்த வாரம் (19:28 - 25:36)**

*அ. திங்கட்கிழமை (19:28-44)*

*1. வெற்றிகரமான பிரவேசம் (19:28-40)*

*2. கிறிஸ்து பட்டணத்திற்காக அழுகிறார் (19:41-44)*

*ஆ. செவ்வாய்கிழமை (19:45-48)*

*1. இயேசு ஆலயத்தை சுத்தப்படுத்துகிறார் (19:45,46)*

*2. பஸ்கா ஆசரிக்க வந்திருந்த கூட்டத்தாருக்கு கற்றுத்தருகிறார் (19:47,48)*

*இ. புதன்கிழமை (20:1-22:6)*

*1. ஆளுகை செய்யும் யூதர்களுடன் வாதிடுகின்றார் (20:1-8)*

*2. பஸ்கா ஆசரிக்க வந்திருந்த கூட்டத்தாருக்கு கற்றுத்தருகிறார் (20:9-21:38)*

அ. பொல்லாத திராட்சைதோட்ட வேலைக்காரர்கள் குறித்த உவமை *(20:9-19)*

ஆ. வரிசெலுத்துவது குறித்து பரிசேயர்களுக்கு பதில் *(20:20-26)*

இ. சதுசேயர்களுக்கு உயிர்த்தெழுதலைக் குறித்து பதில் *(20:27-40)*

ஈ. வேதபாரகர்களிடம் மேசியாபற்றிய தீர்க்கதரிசனத்தில் ஒரு கேள்வி *(20:41-47)*

உ. விதவை போடுகின்ற இரண்டுகாசு காணிக்கை யிலிருந்து பாடம் *(21:1-4)*

ஊ. எருசலேம் இடிக்கப்படும் என்ற தீர்க்கதரிசனம் உரைத்தல் *(21:5-24)*

எ. காலம் நிறைவேறினது என்பதற்கான சில அடையாளங்கள் *(21:25-28)*

*3.* இயேசுவிற்கு விரோதமாக திட்டம் தீட்டல் *(22:1,2)*

*4.* யூதாஸ் சதிதிட்டத்திற்கு உடன்படுதல் *(22:3-6)*

ஈ.வியாழக்கிழமை *(22:7-53)*

*1.* பஸ்காவிற்காக ஆயத்தபடுதல் *(22:7-13)*

*2.* கர்த்தருடைய பந்தி *(22:14-38)*

அ. புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது *(22:14-22)*

ஆ. சீஷர்களின் மத்தியில் விவாதம் *(22:23-30)*

இ. பேதுருவின் மறுதலிப்பு முன்னறிவிக்கப்பட்டது *(22:31-34)*

ஈ. தேவன் தேவைகளை சந்திப்பார் என்ற வாக்கு *(22:35-38)*

*3.* தோட்டத்தில் தாங்கொணாத்துயர் *(22:39-46)*

*4.* இயேசு கைதுசெய்யப்படல் *(22:47-53)*

உ. வெள்ளிக்கிழமை *(22:54 - 23:55)*

*1.* பேதுருவின் மறுதலிப்பு *(22:54-62)*

*2.* இயேசுவை கேலிசெய்து வாரினால் அடிப்பித்தல் *(22:63-65)*

*3.* சனகெரிப்பு சங்கத்தின் முன் விசாரணை *(22:66-71)*

*4.* பிலாத்துவிற்கு முன் விசாரணை *(23:1-25)*

அ. குற்றச்சாட்டு *(23:1-5)*

ஆ. ஏரோது கேட்கும் கேள்விகள்/ விசாரணை *(23:6-12)*

இ. பிலாத்துவின் தீர்ப்பு *(23:13-25)*

*5.* சிலுவையில் அறையப்படுதல் *(23:26-49)*

*6.* அடக்கம் பண்ணப்படுதல் *(23:50-55)*

ஊ. ஓய்வுநாள் *(23:56)*

**V. கிறிஸ்துவின் ஊழியப்பணி நிறைவேறுதல் (24:1-53)**

அ. உயிர்த்தெழுதல் *(24:1-12)*

ஆ. எம்மாவு ஊருக்குச் செல்லும் பாதை *(24:13-45)*

இ. பரம் ஏறுதல் *(24:46-53)*

# யோவான் எழுதின சுவிசேஷம்

## *தலைப்பு:*

*சுவிசேஷம் என்று பெயர்பெற்று நற்செய்தியை அறிவிக்கும் புத்தகங்களின் வரிசையில், இந்த நான்காம் சுவிசேஷ புத்தகம், இதர சுவிசேஷ புத்தகங்களைப் போலவே தலைப்பினைப் பெற்றுள்ளது. யோவான் எழுதின புத்தகம் என்றே முதலில் பெயர் இருந்தது; பின்நாட்களில் சுவிசேஷம் என்ற வார்த்தையானது சேர்க்கப்பட்டது.*

## புத்தகத்தின் ஆசிரியர் மற்றும் தேதி

*சுவிசேஷ புத்தகத்தில் ஆசிரியரின் பெயர் எங்கும் காணவில்லை, ஆதிதிருச்சபையின் பாரம்பரியம் வலுவாக, தொடர்ச்சியாக இப்புத்தகத்தை எழுதியது - அப்போஸ்தலர் யோவான் தான் என அடையாளம் காட்டுகிறது. ஆதிதிருச்சபை தந்தை இரனேயஸ் என்பவர் (கி.பி.130-200), பால்கார்ப் (கி.பி.70-160) என்பவரின் சீஷர், இவர் அப்போஸ்தலர் யோவானின் சீஷரும் ஆவார். யோவான் தமது சுவிசேஷ புத்தகத்தை அவரின் வயது முதிர்வடைந்த நாட்களில், ஆசியா கண்டத்தில் இருக்கும் எபேசு பட்டணத்தில் தங்கியிருக்கும் போது எழுதினார் என பால்கார்ப் அதிகாரத்தில் சாட்சியாக கூறுகிறார். இரனேயஸுக்குப்பின் வந்த திருச்சபை தலைவர்கள் யாவருமே இச்சுவிசேஷ புத்தகத்தின் ஆசிரியர் யோவான் தான் என ஏற்றுக்கொண்டனர். அலெக்சந்திரியாவின் கிளமெண்ட் (கி.பி.150-215) - யோவான் - மற்ற சுவிசேஷ புத்தகங்களில் இருக்கும் உண்மைகளை நன்கு உணர்ந்தவராக இருப்பினும் பரிசுத்த ஆவியானவரால் ஒரு "ஆவிக்குரிய சுவிசேஷம்" எழுதும்படிக்கு வழிநடத்தப்பட்டார்.*

*சுவிசேஷங்களின் உள்ளான தன்மை ஆதிதிருச்சபையின் பாரம்பரியங்களை வலுப்படுத்துவது ஆகும். சினாப்டிக் சுவிசேஷங்கள் - அதாவது ஒன்று சேர்த்து பார்க்கவேண்டும்*

*என்னும் மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்களும் அப்போஸ்தலர் யோவான் என ஏறக்குறைய **20** முறை யோவானுடையப் பெயரைச் சொல்லி அழைக்கின்றனர். ஆனால், யோவான் சுவிசேஷத்தில் ஒருமுறை கூட நேரடியாக அவரது பெயர் சொல்லி அழைக்கப்படவில்லை. மாறாக, ஆசிரியர் தன்னை ''இயேசுவிற்கு அன்பானவனாயிருந்தவன்'' என அடையாளப்படுத்திக் கொள்கிறார் **(13:23; 19:26; 20:2; 21:7,20).** இந்த சுவிசேஷத்தில் ஏனைய சீஷர்களின் பெயர் அழைக்கப்படுவதாக இருந்த போதிலும்,யோவானின் பெயர் நேரடியாக ஒருபோதும் எழுதப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நேரடியாக தன்பெயரை அழைத்துக்கொள்ளாமலும், ''இயேசுவிற்கு அன்பானவனாயிருந்தவன்'' எனவும் தன்னை யோவான் அழைப்பதில் இருந்து அவருடைய தாழ்மையையும் அவர் ஆண்டவர் இயேசுவோடு கொண்டிருந்த உறவினைக் கொண்டாடும் இடத்தில் வைக்கிறார் என்பதையும் காட்டுகிறது.*

*முதலில் இச்சுவிசேஷத்தை வாசித்தவர்கள் யோவான் தான் இதன் ஆசிரியர் என்பதை புரிந்திருந்தனர் என்பதால் எங்கேயும் யோவானின் பெயர் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. அதிகாரங்கள் **20,21**-ல் இயேசு உயிர்த்தெழுந்த நாட்களுக்குபின் நடந்த சம்பவங்களைக் கண்டவர் - "இயேசுவிற்கு அன்பான சீஷன்" என்று தன்னை அழைத்துக்கொண்டவர் ''அப்போஸ்தலர் யோவான்'' என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதாக காண்கிறோம் **(21:24; 21:2).** யோவான் சுவிசேஷ ஆசிரியர் அனைத்து நபர்களின் பெயரை குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். ஒருவேளை அப்போஸ்தலர் யோவான் அல்லாமல் வேறு ஒருநபர் இதன் ஆசிரியர் என்று எடுத்துக் கொள்வேமானால் அவர் யோவானின் பெயரை குறிப்பிடாது இருந்திருக்க மாட்டார். எனவே*

அப்போஸ்தலர் யோவான் தான் இச்சுவிசேஷத்தின் ஆசிரியர் என்று நிச்சயமாகிறது.

மற்ற சுவிசேஷ புத்தகங்களை ஒப்பிடும்போது, முற்றிலும் வேறுபட்ட உள்ளடக்கம் கொண்ட சுவிசேஷபுத்தகம் மற்றும் ஆதிதிருச்சபையின் ஏகமனதான சம்மதத்தை பெறும் சுவிசேஷம் - எழுதுவதற்கு விஷயங்களை நன்கு அறிந்த மற்றும் முதன்மையான அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர் போன்ற அந்தஸ்தில் இருப்பவர் மட்டுமே எழுத முடியும் என்ற காரணம் - யோவான் சுவிசேஷ புத்தக ஆசிரியரின் பெயரை நேரடியாக புத்தகத்தில் இருந்து அறிந்து கொள்ள முடியாமல் இருந்தாலும், யோவான் தான் இதன் ஆசிரியர் என்னும் கருத்தை மிகவும் வலுப்படுத்துகிறது. விலக்கப்பட்ட நற்செய்தி நூல்கள் என்று இரண்டாம் நூற்றாண்டின் மைய்ய நாட்களில் தொகுத்து தரப்பட்டவை அப்போஸ்தலர்களுக்கோ அல்லது இயேசுவுடன் பிரபலமாக இருந்தவர்களின் பெயருடன் இணைத்துச் சொல்லப்பட்டாலும், அகில உலகத்திலும் இருக்கும் திருச்சபையால் முற்றிலும் நிராகரிக்கப்பட்டது.

''செபதேயுவின் குமாரர்கள்'' (மத்.10:2-4) என்று அறியப்பட்ட யோவான் மற்றும் யாக்கோபு சகோதரர்களுக்கு இயேசு - இடிமுழக்க மக்கள் (மாற்கு 3:17) என்று பெயர் தந்திருந்தார். யோவான் ஓர் அப்போஸ்தலர் (லூக்கா : 6:12-16), மேலும் இயேசுவிற்கு மிக நெருக்கமாக இருந்த மூவர் - பேதுரு, மற்றும் யாக்கோபு உடன் இவரும் ஒருவர் (மத்.17:1; 26:37). அதாவது இயெசுவின் பூலோக ஊழியத்தின் கண் கண்ட சாட்சிகள் மற்றும் அதில் பங்குபெற்றவர் (1யோவான்:1:1-4). கிறிஸ்து பரம் ஏறினவுடன், எருசலேம் திருச்சபையில் யோவான் ஒரு ''தூண்'' ஆக மாறிவிட்டார் (கலா.2-9). எருசலேம் தேவாலயம் இடிக்கப்படுவதற்கு முன், எபேசுவிற்கு புறப்பட்டுச் செல்வது வரை பேதுருவுடன் சேர்ந்து ஊழியம் செய்தார் (அப்.3:!; 4:13; 8:14). எபேசுவில் இருந்த போது இச்சுவிசேஷ புத்தகத்தை

எழுதினார். அங்கிருந்து பின்னர் ரோம போர்வீரர்கள் யோவானை பத்முதீவிற்கு நாடு கடத்தினர் (வெளி.1:9). இந்த சுவிசேஷ புத்தகத்தை (கி.பி.80-90), மட்டுமல்லாமல், 1-3 யோவான் நிருபம் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் (வெளி:1-1) புத்தகத்தையும் அப்போஸ்தலர் யோவான் எழுதினார்.

ஆதி திருச்சபை தலைவர்களின் எழுத்துக்களில் யோவான் தமது வயது மூப்படைந்த காலத்தில் இந்த சுவிசேஷத்தை எழுதியிருக்கலாம் எனவும், யோவானுக்கு ஒன்று சேர்த்து பார்க்கவேண்டிய மூன்று சுவிசேஷங்களை (மத்தேயு, மாற்கு, லூக்கா- சினாப்டிக் சுவிசேஷங்கள்) நன்குத் தெரியும் எனச் சுட்டிக்காட்டுகின்றனர். அனேகர் இந்த மூன்று சுவிசேஷங்களுக்குப் பின் யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டது எனவும் 1-3 யோவான் நிருபங்கள் மற்றும் வெளிப்படுத்தலின் புத்தகம் எழுதுவதற்கு முன் எழுதப்பட்டது என்கின்றனர். யோவான் இந்த சுவிசேஷத்தை கி.பி.80-90ல் அதாவது ஏறக்குறைய 50 வருடங்கள் அவர் இயேசுவின் பூலோக ஊழியத்தை கண்கண்ட சாட்சியாக அறிந்த நாட்களுக்குப் பின்வரும் நாட்களில் எழுதினார்.

## பின்னணி மற்றும் அமைப்பு

யோவானின் பின்னணி மற்றும் வாழ்க்கையுடன் சிறப்பம்சமாக அவர் ஒன்று சேர்த்துபார்க்க வேண்டியது - சுவிசேஷங்கள் (சினாப்டிக் சுவிசேஷங்கள்) பற்றி அறிந்திருந்தார் என்பது. ஆண்டவருடைய வாழ்க்கையின் தனித்தன்மையான நிகழ்வுகளின் ஆதாரங்களை குறிப்பிட்டு (''ஆவிக்குரிய சுவிசேஷம்'') எழுத வேண்டும் என்பதினாலும், மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களுக்கு துணையாகவும், அவற்றினை பாராட்டும் விதத்திலும் இந்த சுவிசேஷத்தை எழுதினார்.

யோவான் சுவிசேஷத்தின் தனித்தன்மையே அவர் எழுதியதின் நோக்கத்தை பலப்படுத்துகிறது. முதலில், யோவான் மற்ற

சுவிசேஷங்களில் குறிப்பிடாத அனேக தனிப்பட்ட விஷயங்களை தமது சுவிசேஷத்தில் வழங்கினார். இரண்டாவது, நாம் சினாப்டிக் சுவிசேஷங்களில் வாசிக்கும் சம்பவங்களை புரிந்து கொள்ள உதவும் விஷயங்களையும் தந்தார். உதாரணமாக, சினாப்டிக் சுவிசேஷம் இயேசுவின் ஊழியம் கலிலேயா பகுதியில் ஆரம்பித்தது எனக் குறிப்பிடும் போது - அதற்கு முன்னும் இயேசு பணிகள் பெற்றிருந்தார் என்பதனை சுட்டிக்காட்டும் (உதாரணம் மத்.4:12; மாற்கு 1:13). இயேசு யூதேயாவிலும் சமாரியாவிலும் செய்த ஊழியத்திற்கு முன் அவர் செய்த பணிகள் குறித்த தகவல்களை யோவான் (அதிகாரம் 3 மற்றும் 4ல்) பதிலாக அளித்தார். மாற்கு 6:45ல் நாம் காண்பது 5000 பேரை இயேசு போஷித்த பின் இயேசு தமது சீஷர்களை கலிலேயா கடலைக் கடந்து பெத்சாயிதாவிற்குச் செல்லும்படி கட்டளையிடுகிறார்.

யோவான் அதற்கு காரனத்தை எழுதுகிறார் - இயேசு அற்புதமாக அனேகரை போஷிக்கும்படி அப்பங்களைப் பெருகச்செய்தபடியால் ஜனங்கள் அவரை ராஜாவாக ஏற்படுத்தும்படி திட்டம் தீட்டினர். அவர்கள் தவறான நோக்கத்தோடு எடுத்த முயற்சிகளைத் தவிர்க்கும்படிக்கு இயேசு அப்படிச் செய்தார் (6:26). மூன்றாவது யோவான் சுவிசேஷ புத்தமே ஏனைய சுவிசேஷபுத்தகங்களைக் காட்டிலும் அதிகமான இறையியல் கருத்துக்கள எடுத்துச் சொல்லும் புத்தகம். உதாரணமாக, மிக ஆழமான இறையியலை மையமாக கொண்ட முன்னுரையை பெற்றுள்ளது (1:1-18), யோவான் சொல்லக்கூடிய விபரங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது, உபதேசங்களும் சொற்பொழிவு கருத்துக்களும் மிக அதிக அளவில் இருக்கின்றன (3:13-17). மிக அதிக அளவில் பரிசுத்த ஆவியானவர் பற்றிக் கற்றுத்தருகிறது (14:16,17,26: 16:7-14). யோவான் இதர மூன்று சுவிசேஷ புத்தகங்களை நன்கு தெரிந்து வைத்து இருந்தபடியால் அவைகளை மனதில் நிறுத்திக்கொண்டு அவைகளுக்கு ஏற்ப தன் சுவிசேஷத்தை வடிவமைத்தார்.

*மட்டுமல்ல, யோவான் தன் சுவிசேஷத்தை எழுதுவதற்கு வேண்டிய தகவல்களுக்கு -மற்ற சுவிசேஷங்களை சார்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லாதிருந்தது. மாறாக, பரிசுத்த ஆவியானவரின் உந்துதலின்படி, அவர் தமது சொந்த ஞாபகத்தையே - சுவிசேஷத்தை எழுதுவதற்கு பயன்படுத்தினார் (1:14; 19:35 ;21:24).*

*லூக்கா எழுதின சுவிசேசத்திற்கு அடுத்து ஆசிரியரின் நோக்கத்தை (1:1-4) துல்லியமாகச் சொல்வது யோவான் சுவிசேஷம் இரண்டாவது இடத்தில் உள்ளது (20:30,31). யோவான் 20:31ல் "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது என பலர் அறியக் கூறுகிறார். ஆகையால், முதன்மையான நோக்கங்கள் இரண்டு: 1.சுவிசேஷத்தை அறிவித்தல் மற்றும் தவற்றில் இருந்து மனம்திரும்பி மன்னிப்பை பெற்றுக்கொள்வது; "விசுவாசி" என்ற வார்த்தை 100 தடவைக்கும் மேலாக இந்த புத்தகத்தில் காணப்படுவது சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு முதலிடம் இந்த புத்தகம் தருகிறது என்ற கருத்திற்கு வலுவூட்டுகிறது. சினாப்டிக் சுவிசேஷ புத்தகங்கள் (மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா) மூன்றும் சேர்ந்தே இதன் பாதி எண்ணிக்கை அளவில் கூட "விசுவாசி" என்ற வார்த்தையை பயன்படுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது. தனது நற்செய்தியை வாசிப்போர் - இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தும் விசுவாசத்தைப் பெற்று, அதன் விளைவாக அவர்கள் தெய்வீக பரிசாகிய நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளத் (1:12) தேவையான காரணங்களக் கூறி யோவான் தன்னுடைய சுவிசேஷத்தை எழுதினார்.*

*மனந்திரும்புதல், சுவிசேஷத்தை அறிவித்தல் என்ற நோக்கத்துடன் மிக நெருக்கமாகத் தொடர்புடையது. இயேசுவின் மெய்*

*அடையாளம் அவர் தேவன் - மனுஷனாக வெளிப்பட்டவர் (அவதரித்தவர்) என்பதை அவரின் சுவிசேஷத்தை வாசிப்போர் விசுவாசிக்க ஏதுவானவற்றை யோவான் எழுதினார். இயேசுவின் தெய்வீக மற்றும் மனுஷ குணங்கள் பூரணமாக இரண்டற கலந்து இருப்பது ஒரே மனுஷருக்குள் இருப்பதைக் காணவும் - இவரே உலகின் இரட்சகர் - வருவார் என்று தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டவர்; இவரே மேசியா (கிறிஸ்து) என்று அறிந்துகொள்ளத் - தேவையான எல்லாவற்றையும் எழுதினார் (1:41; 3:16; 4:25,26; 8:58). இவருடைய சுவிசேஷம் முழுவதையும் - இயேசுவின் மெய்யான அடையாளத்தை உறுதிப்படுத்தி வாசிப்போரை விசுவாசத்திற்குள் வழிநடத்தும் - 8 ''அடையாளங்கள்'' அல்லது நிரூபணங்களைச் சுற்றி ஒழுங்காக அமைத்திருக்கிறார். கிறிஸ்துவின் ஆள்தத்துவத்தில் நம்பிக்கையை உண்டாக்குகிற 7 அற்புத அடையாளங்களினால் இவரது சுவிசேஷத்தின் முதல் பாதி நிறைந்திருக்கிறது: 1) தண்ணீரை திராட்சைரசமாக மாற்றியது (2:1-11); 2) ராஜாவின் மனுஷர் ஒருவனுடைய குமாரனை குணப்படுத்துதல் (4:46-54); 3) முடவனைக் குணப்படுத்துதல் (5:1-18); 4) திரளான ஜனங்களைப் போஷித்தல் (6:1-15); 5) தண்ணீரின் மீது நடத்தல் (6:16-21); 6) குருடனுக்கு பார்வை அளித்தல் (9:1-41); மற்றும் 7) லாசருவை உயிருடன் எழுப்புதல் (11:1-57). கடலில் மீன்களை அற்புதமாக பிடித்தல் (21:6-11), உயிர்த்தெழுந்த பின் செய்த எட்டாவது அடையாளம்.*

## வரலாற்று மற்றும் இறையியல் தொடர்புடைய கருப்பொருட்கள்

*யோவான் எழுதின சுவிசேஷத்தின் கருப்பொருள்: சுவிசேஷம் அறிவித்தல் மற்றும் மனந்திரும்பி மன்னிப்பை பெற்றுக்கொள்ள அழைத்தல்- இவ்விருநோக்கங்கள் மற்றும் இச்சுவிசேஷத்தின் முழுமையான செய்தி என்ன என்பதை நாம்'' இயேசு*

தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." யோவான் 20:31ல் காணலாம். ஆகையால், இந்த புத்தகம் இயேசு என்னும் நபரையும் அவரின் செயல்களையும் சுற்றிக் கட்டப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நம்முடைய இரட்சிப்பு இருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்த 20:30, 31 ஆம் வசனங்களில் நாம் காணும் மூன்று முக்கிய வார்த்தைகள் - அடையாளங்கள், விசுவாசி மற்றும் ஜீவன், இவை மூன்றும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகின்றன. இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நம்முடைய இரட்சிப்பு இருக்கிறது என்ற கருத்தை முன்னுரையில் (யோவான் 1:1-18ல்; 1யோவான் 1:1-4) காண்கிறோம். மட்டுமல்ல, சுவிசேஷ புத்தகம் முழுவதும் வெவ்வேறு வழிகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது (6:35,48; 8:12; 10:7,9; 10:11-14; 11:25; 14:6; 17:3). யோவான், இயேசுவுக்கும் அவர் அளிக்கும் இரட்சிப்பிற்கும் ஜனங்கள் எப்படியாக பதில் அளித்தனர் என்பதையும் நமக்கு குறித்து தந்துள்ளார். சுருக்கமாகச் சொல்வோமானால், யோவான் எழுதின சுவிசேஷம் இந்த மூன்று விஷயங்களில் கவனம் செலுத்துகிறது: 1) இயேசுவே வார்த்தை, மேசியா மற்றும் மனுஷகுமாரன்; 2) இரட்சிப்பு என்னும் பரிசினை மனுக்குலத்திற்கு கொண்டுவருபவர்; 3) இந்த பரிசினை மனுக்குலம் ஏற்றுக்கொள்கிறது அல்லது நிராகரிக்கிறது.

யோவான் முதன்மையான கருப்பொருளுக்கு வலிமை சேர்க்க சில எதிர்மறையான உபகருப்பொருட்களையும் பயன்படுத்துகிறார். இருபொருள் வாதத்தை பயன்படுத்துகிறார் (ஜீவன் மற்றும் மரணம்; வெளிச்சம் மற்றும் இருள்; அன்பு மற்றும் வெறுப்பு; மேல் இருந்து மற்றும் கீழ் இருந்து) — இயேசு என்னும் நபர் மற்றும் அவரது செயல்கள் குறித்து

*அவசியமான தகவல்களைத் தருவதும் அவரை நாம் விசுவாசிக்கவேண்டிய அவசியத்தையும் தெரிவிப்பதே இதன் நோக்கம் (உதாரணமாக, **1:4,5,12,13; 3:16-21; 12:44-46; 15:17-20).** இயேசுவே தேவன் மற்றும் மேசியா என்பதை வலியுறுத்திக்கூறும் ''நானே'' என்னும் ஏழு கூற்றுக்கள் இந்த புத்தகத்தில் இருக்கிறது; குறிப்பு: இதோ - தேடி எடுத்து வாசித்து பயன்பெறுங்கள் **(6:35; 8:12; 19:7,9; 10:11,14; 11:25; 14:6; 15:1,15).***

## விளக்கம் அளிப்பதில் உள்ள சவால்கள்

*யோவான் தனது எழுத்துக்களை தெளிவாக மற்றும் எளிய நடையில் எழுதினதால், சிலர் இந்த சுவிசேஷத்தின் ஆழத்தை குறைத்து மதிப்பிடும்படி முனைகின்றனர். யோவானின் சுவிசேஷம் "ஆவிக்குரிய" சுவிசேஷம் - அவர் எடுத்துரைக்கின்ற சத்தியங்கள் மிகவும் ஆழ்ந்த அறிவுள்ளவை. அப்போஸ்தலர் யோவான் அன்போடு அவருடைய சுவிசேஷத்தில் அளிக்கும் ஆழமான ஆவிக்குரிய பொக்கிஷங்களை - பரிசுத்த ஆவியானவரின் உதவியுடன் கண்டுபிடிக்க - இந்த புத்தகத்தை ஆய்வு செய்ய முயலுபவர்கள் ஜெயத்துடனும், கூர்மையாககவனித்தும் அறிந்து கொள்ள வேண்டும். காலவரிசைப்படி நாம் கணக்கிட்டு பார்க்கும் போது, வசனம் **13:2** ல் நாம் காணும் கர்த்தருடைய பந்தியின் காலகுறிப்பு தான் - யோவான் சுவிசேஷத்திற்கும் சினாப்டிக் சுவிசேஷங்களுக்குமிடையில் ஒரு சவாலாக இருக்கின்றது. ஏனைய மூன்று சுவிசேஷங்களும் ஆண்டவரும் சீஷர்களும் பஸ்கா பந்தி வியாழக்கிழமை மாலை (நிசான் **14**) அன்று உண்டார்கள், இயேசு வெள்ளிக்கிழமை சிலுவையில் அறையப்பட்டார் என்று சொல்கின்றன. யோவான் சுவிசேஷம் யூதர்கள் ''தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிபதியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்*

*(18:28) என்று கூறுகிறார். ஆக, சீஷர்கள் பஸ்கா பந்தியை வியாழக்கிழமை மாலை உண்டனர்; ஆனால், யூதர்கள் ஆசரிக்கவில்லை. உண்மையில், யோவான் 19:14ல் பஸ்காவிற்கு ஆயத்தமான நாளில் இயேசுவை விசாரித்தலும் சிலுவையில் அறைப்படுதலும் இருந்தது எனவும் பஸ்கா பந்தியை உண்டபின் அல்ல என்கிறார். ஆகையால் இயேசுவை விசாரித்தலும் சிலுவையில் அறையப்படுதலும் வெள்ளிக்கிழமை நிறைவேறியது. 19:14ல் இருந்து நாம் அறிவது பஸ்கா ஆடுகள் அடிக்கப்படும் அதே மணிவேளையில் கிறிஸ்து நமக்காக பலியானார் என அறிகிறோம். இங்கே கேள்வி என்னவென்றால் - அப்படியானால் சீஷர்கள் பஸ்கா பந்தியை வியாழக்கிழமை ஏன் ஆசரித்தனர்? என்பதே.*

*இதற்கு பதில் யூதர்கள் தங்கள் நாட்களின் ஆரம்பம் மற்றும் முடிவை கணக்கிட்ட வழிகளில் இருந்த வித்தியாசமே. யோசேப்பஸ், மிஸ்ரா மற்றும் இதர பழங்கால யூத ஆதாரங்களை வைத்து பார்க்கும் போது நாம் அறிவது: யூததேசத்து வடக்கு பகுதிகளில் இருந்தவர்கள், ஒரு நாள் - என்பது ஒரு சூரிய உதயத்தில் இருந்து அடுத்த சூரிய உதயம் எனக் கணக்கிட்டு வந்தனர். அந்த இடம் இயேசுவும் அவருடைய சீஷர்களில் யூதாஸைத்தவிர மற்ற அனைவருடைய கலிலேயா பகுதியை உள்ளடக்கியது. இதனால் அதிகமான பரிசேயர்கள் (எல்லோரும் அல்ல) இந்த விதமாக நாளை கணக்கிட்டு வந்தனர் என்பது தெளிவாகிறது. ஆனால், தென் பகுதிகளில் எருசலேமைச் சுற்றியிருந்த யூதர்கள் ஒரு நாள் என்பது சூரிய அஸ்தமானம் முதல் அடுத்த சூரிய அஸ்தமானம் வரை என கணக்கிட்டனர். எருசலேமினைச் சுற்றி அல்லது எருசலேமில் ஆசாரியர்கள், ஏனைய சதுசேயர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் யூதா தேசத்து தென்பகுதிகளின் நாள் கணக்கீடு முறையைப் பின்பற்றினர். இந்த கணக்கீட்டு முறையில் இருந்த வித்தியாசம் குழப்பத்தை ஏற்படுத்தியது, ஆனால், அதின் நடைமுறையில் சில நன்மைகளும் இருந்தது. அதாவது பந்தியை*

இரண்டு தொடர்ந்து வரும் நாட்களில் ஆசரிக்க இது உதவியது. ஆலயத்தில் பலியிடுதலும் இரண்டு மணி நேரத்திற்கு பதிலாக நான்கு மணி நேரம் நடைபெற்றது. இந்த விதமாக நாட்கள் கணக்கிடுவதில் வேறுபாடு இருப்பது இரண்டு பிரிவினருக்கும் இடையில் எழும்பும் சண்டைகளை குறைத்தது.

மேற்கண்ட கருத்தினை நாம் வைத்துப்பார்க்கும் போது சுவிசேஷ புத்தகங்களில் ஆண்டவரின் கடைசி பந்தி நாட்களில் இருக்கும் முரண்பாட்டிற்கு விளக்கம் கிடைத்து விடும். கலிலேயர்களாகிய இயேசுவும் அவரது சீஷர்களும் பஸ்கா -வியாழக்கிழமை சூரிய உதயத்தில் இருந்து ஆரம்பித்து வெள்ளிக்கிழமை என்று எடுத்துக்கொண்டனர். இயேசுவை கைது செய்து விசாரித்த யூத தலைவர்கள் - அதிகமாக ஆசாரியர்களும் சதுசேயர்களுமாக இருந்தபடியால் அவர்கள் கணக்கீட்டின்படி, பஸ்காநாள் வியாழக்கிழமை சூரிய அஸ்தமனத்தில் இருந்து வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனம் வரை ஆகும். சகலத்தையும் ஆளுகைசெய்யும் தேவனின் திட்டப்படி, இந்த நாள் கணக்கீட்டில் இருக்கும் வித்தியாசத்தினால் இயேசு அவரும் அவருடைய சீஷர்களும் சட்டப்படியான நாளில் கர்த்தருடைய கடைசி பந்தியை ஆசரிக்கவும் பஸ்கா நாளில் அவர் நமக்காக பலியாகவும் உதவியது.

மீண்டும் ஒருமுறை தேவன் எப்படி தமது சர்வவல்லமையுள்ள திட்டத்தின்படி இந்த மீட்பின் திட்டத்தை துல்லியமாக தேவைகளை சந்தித்து நிறைவேற்றினார் என்பதை நாம் காணலாம். மனுஷரின் பொல்லாத செயல்திட்டங்களால் இயேசு பலியிடப்பட்டார், குருட்டாட்டமான சூழ்நிலைகளால் அல்ல. அவர் பேசின ஒவ்வொரு வார்த்தையும் அவருடைய ஒவ்வொரு செயலும் தெய்வீக வழிநடத்துதல் மற்றும் பாதுகாவலுக்கு உட்பட்டவை. அவருக்கு விரோதமாக எழும்பின வார்த்தைகளும் செய்கைகளும் கூட தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள்

உட்பட்டே நிறைவேறின என்பதையும் காண்கிறோம் (11:49-52; 19:11).

## சுருக்கம்

### I. தேவ குமாரனின் அவதாரம் (1: 1 —18)

அ. அவர் நித்தியமானவர் (1:1,2)

ஆ. அவர் அவதரிக்கும் முன் நாட்களின் செயல்பாடுகள் (1:3-5)

இ. அவருக்கு முன்னோடினவர் (1:6-8)

ஈ. அவர் நிராகரிக்கப்படல் (1:9-11)

உ. அவர் ஏற்றுக்கொள்ளப்படல் (1:12,13)

ஊ. இயேசுவின் தெய்வீகத்தன்மை (1:14-18)

[H3[II தேவகுமாரன் அறிமுகப்படுத்தப்படுதல் (1:19 -4:54)

அ. யோவான் ஸ்நானகரால் அறிமுகபடுத்தப்படுதல் (1:19-34)

1. மத தலைவர்களுக்கு (1:19-28)

2. கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தில் (1:29-34)

ஆ. யோவான் ஸ்நானகருடைய சீஷர்களுக்கு அறிமுகபடுத்தப்படுதல் (1:35 - 51)

1. அந்திரேயாவும் பேதுருவும் (1:35-42)

2. பிலிப்புவும் நத்தானியேலும் (1:43-51)

இ. கலிலேயருக்கு அறிமுகம் செய்தல் (2:1-12)

1. தண்ணீரை திராட்சைரசமாக மாற்றிய அதிசயம் (2:1-10)

2. சீஷர்கள் விசுவாசித்தல் (2:11,12)

*ஈ. யூதேயாவில் அறிமுகம் செய்தல் (2:13-3:36)*

*1. தேவாலயத்தை சுத்தம் செய்தல் (2:13-25)*

*2. நிக்கொதெமுவிற்கு கற்றுத்தருதல் (3:1-21)*

*3. யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தல் (3:22-36)*

*உ. சமாரியாவில் அறிமுகம் செய்தல் (4:1-42)*

*1. சமாரியா ஸ்திரீக்கு சாட்சி சொல்லுதல் (4:1-26)*

*2, சீஷர்களுக்கு சாட்சி சொல்லுதல் (4:27-38)*

*3. சமாரியர்களுக்கு சாட்சி சொல்லுதல் (4:39-42)*

*ஊ. கலிலேயருக்கு அறிமுகம் செய்தல் (4:43-54)*

*1, கலிலேயர்களால் வரவேற்கப்படுதல் (4:43-45)*

*2. இரண்டாவது அடையாளம்: ராஜாவின் மனுஷன் ஒருவனுடைய மகனை குணப்படுத்துதல் (4:46-54)*

***III தேவகுமாரனுக்கு வந்த எதிர்ப்பு (5:1 -12:50)***

*அ. எருசலேம் விருந்தில் எதிர்ப்பு (5:1-47)*

*1. மூன்றாவது அடையாளம்: வெகுகாலமாய் வியாதிப்பட்டிருந்தவனை சுகப்படுத்தல் (5:1-9)*

*2. யூதர்களால் நிராகரிக்கப்படுதல் (5:10-47)*

*ஆ. பஸ்காவின் நாட்களில் எதிர்ப்பு (6:1-71)*

*1. நான்காவது அடையாளம் 5,000 பேரை போஷித்தல் (6:1-14)*

*2. ஐந்தாவது அடையாளம்: தண்ணீரின் மீது நடத்தல் (6:15-21)*

*3. ஜீவ அப்பம் சொற்பொழிவு (6:22-71)*

*இ. கூடாரப்பண்டிகை விருந்தில் எதிர்ப்பு (7:1 -10:21)*

*1. எதிர்ப்பு (7:1-8:59)*

*2. ஆறாவது அடையாளம் (9:1 -10:21)*

*ஈ. அர்ப்பணிப்பின் விருந்தில் எதிர்ப்பு (10:22-42)*

*உ. பெத்தானியாவில் எதிர்ப்பு (11:1 -12:11)*

*1. ஏழாவது அடையாளம் : லாசருவை உயிருடன் எழுப்புதல் (11:1-44)*

*2. பரிசேயர்கள் இயேசுவை கொலை செய்ய திட்டம் தீட்டல் (11:45-57)*

*3. மரியாள் இயேசுவை நற்கந்த தைலத்தால் அபிஷேகித்தல் (12:1-11)*

*ஊ. எருசலேமில் எதிர்ப்பு (12:12-50)*

*1. வெற்றி பவனி மற்றும் பிரவேசம் (12:12-22)*

*2. விசுவாசமும் அதனை மறுதலித்தல் குறித்த சொற்பொழிவு (12:23-50)*

## *IV.* தேவகுமாரன் தன் சீஷர்களை ஆயத்தப்படுத்துதல் (13:1-17:26)

*அ. மேல்வீட்டறையில் (13:1-14:31)*

*1. கால்களை கழுவுதல் (13:1-20)*

*2. காட்டிக்கொடுக்கப்படுவேன் என அறிவித்தல் (13:21-30)*

*3. கிறிஸ்து பரமேறுதல் குறித்த சொற்பொழிவு (13:31-14:31)*

*ஆ. தோட்டத்திற்கு செல்லும் வழியில் (15:1-17:26)*

*1. சீஷர்களுக்கு அறிவுரை கூறுதல் (15:1-17:26)*

*2. பிதாவிடம் பரிந்து பேசுதல் (17:1-26)*

***V. தேவகுமாரன் சிலுவையில் அறையப்படுதல் (18:1 -19:37)***

*அ. இயேசுகிறிஸ்துவை நிரகரித்தல் (18:1 -19:16)*

*1. இயேசு கைது செய்யப்படல் (18:1-11)*

*2. இயேசுவின் விசாரணைகள் (18:12- 19:16)*

*ஆ. கிறிஸ்து சிலுவையில் அறையப்படல் (19:17-37)*

***VI. தேவகுமாரன் உயிர்த்தெழுதல் (19:38-21:23)***

*அ. கிறிஸ்து அடக்கம் செய்யப்படுதல் (19:38-42)*

*ஆ. கிறிஸ்து உயிர்த்தெழுதல் (20:1-10)*

*இ. கிறிஸ்து தோற்றம் அளித்தல் (20:11 - 21:23)*

*1. மகதலேனா மரியாளுக்கு வெளிப்படல் (20:11-18)*

*2. சீஷர்களுக்கு - தோமா இல்லாத போது (20:19-25)*

*3. சீஷர்களுக்கு தோமாவுடன் (20:26-29)*

*4. சுவிசேஷம் எதற்காக எழுதப்பட்டது என்ற கூற்று (20:30,31)*

*5. சீஷர்களுக்கு (21:1-4)*

*6. பேதுருவுக்கு (21:15-23)*

***VII. முடிவுரை (21:24,25)***

# அப்போஸ்தலர்களுடைய நடபடிகள்

## ஆசிரியர்

*மருத்துவராகிய லூக்கா, இந்த புத்தகத்தின் ஆசிரியர் ஆவார். அப்போஸ்தலர்களின் பல நிகழ்வுகளுக்கு லூக்கா ஒரு கண்கண்ட சாட்சியாக இருந்தார். பல பகுதிகளில் நாம் என்ற பதத்தைப் பயன்படுத்துவதிலிருந்து இது உறுதியாகிறது. (16: 10-17; 20: 5-21: 18; 27: 1-28: 16). பாரம்பரியமாக அவர் ஒரு சிறந்த மனிதராக கருதப்பட்டார், குறிப்பாக அவர் ஒரு சுவிசேஷகனாக இருந்தார்.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி 60-63 ன் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.*

*எழுதப்பட்ட இடங்கள் எவையெனில் எருசலேம், சமாரியா, லித்தா, யோப்பா, அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை, பிலிப்பி, தெசலோனிக்கே, பெரோயா, ஏதென்ஸ், கொரிந்து, எபேசு, செசரியா, மெலித்தா, ரோம் ஆகியனவாகும்.*

## யாருக்காக எழுதப்பட்டது

*தெயோபிலுவுக்கு லூக்கா எழுதினார் (அப்போஸ்தலர் 1: 1). துரதிருஷ்டவசமாக, தெயோபிலு யார் என்பது பற்றி அதிகம் அறியப்படவில்லை. லூக்காவின் ஆதரவாளராக இருந்திருக்கலாம் அல்லது தெயோபிலு என்ற பெயர், தேவனை நேசிப்பவர் என்று பொருள்படும் உலகளாவிய எல்லா கிறிஸ்தவர்களையும் குறிப்பதற்காக இருக்கலாம் என்று சில சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.*

*[H2[எழுதப்பட்ட நோக்கம்*

*அப்போஸ்தலருடைய நடபடிகளின் நோக்கம் சபையின் பிறப்பு மற்றும் வளர்ச்சியைப் பற்றிய காரியங்களைக் கூறுவதாகும். இது யோவான் ஸ்நானகன், இயேசு மற்றும் சுவிசேஷங்களில் அவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் செய்தி ஆகியவற்றைத் தொடர்கிறது. பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியின் வருகையிலிருந்து கிறிஸ்தவம் பரவிய காரியங்களை இது நமக்குக் கொடுக்கிறது.*

## மையக் கருத்து

*சுவிசேஷத்தின் பரவுதல்*

## பொருளடக்கம்

*1. பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தம் — 1:1-26*

*2. பெந்தெகொஸ்தே: பரிசுத்த ஆவியானவரின் வெளிப்பாடு — 2:1-4*

*3. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அப்போஸ்தலர்கள் செய்த ஊழியமும், எருசலேம் சபைக்கு உண்டான உபவத்திரவங்களும் — 2:5-8:3*

*4. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அப்போஸ்தலர்கள் யூதேயாவிலும் சமாரியாவிலும் செய்த ஊழியங்கள் — 8:4-12:25*

*5. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அப்போஸ்தலர்கள் உலகின் கடைமுனைவரை செய்த ஊழியங்கள் — 8:4-12:25*

# ரோமர்

## ஆசிரியர்

*ரோமருக்கு எழுதிய நிருபத்தின் ஆசிரியர் பவுல் என்று ரோமர் 1: 1 சுட்டிக்காட்டுகிறது, 16 வயதான நீரோ ரோம பேரரசனாக பொறுப்பெடுத்து, மூன்று வருடங்கள் கழித்து, கிரேக்க நகரமாகிய கொரிந்துவிலிருந்து ரோமருக்கு எழுதினார். முக்கிய கிரேக்க நகரம் பாலியல் ஒழுக்கக்கேடு மற்றும் சிலை வணக்கத்தின் மையமாக இருந்தது. ஆகவே, மனிதகுலத்தின் பாவத்தையோ அல்லது தேவனுடைய கிருபையின் வல்லமையைப் பற்றி பவுல் ரோமரில் எழுதியபோது அதிசயமாகவும், வாழ்க்கையை மாற்றியமைக்ககூடியதாகவும் இருந்தது, அவர் பேசியதை அவர் அறிந்திருந்தார். கிறிஸ்தவ சுவிசேஷத்தின் அடிப்படைகளை பவுல் கருத்தில் எடுத்துக்கொள்வது, முக்கிய குறிப்புகள் அனைத்தையும் தொடுகிறது: தேவனுடைய பரிசுத்தத்தன்மை, மனிதகுலத்தின் பாவம், இயேசு கிறிஸ்து வழங்கும் இரட்சிப்பின் கிருபை.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறத்தாழ கிபி 57 காலகட்டத்தில் கொரிந்துவிலிருந்து எழுதப்பட்டது.*

*எழுதப்பட்ட முக்கிய இடம் ரோமாக இருக்கலாம்.*

## யாருக்காக எழுதப்பட்டது

*ரோமப் பேரரசின் தலைநகரான ரோமில் (ரோமர் 1: 7) தேவாலயத்தின் உறுப்பினர்கள், அதாவது தேவனால் நேசிக்கப்படுகிற, அவருடைய அனைத்து பரிசுத்தவான்கள்.*

## எழுதப்பட்ட நோக்கம்

ரோமருக்கு எழுதிய நிருபம் கிறிஸ்தவ உபதேசத்தின் தெளிவான மற்றும் மிகவும் முறைப்படுத்தப்பட்ட விளக்கமாக உள்ளது. எல்லா மனிதகுலத்தின் பாவத்தன்மையும் பற்றி பவுல் விவாதிக்கத் தொடங்குகிறார். தேவனுக்கு எதிரான நமது கலகம் காரணமாக எல்லா மக்களும் குற்றவாளிகள் என்று தீர்க்கப்பட்டிருக்கின்றனர். எனினும், தேவன் அவரது கிருபையில் அவரது குமாரனில் வைக்கும் நம்பிக்கை மூலம் நம்மை நீதிமான்களாக்குகிறார். நாம் தேவனால் நீதிமான்களாக்கப்படும்போது, மீட்பை அல்லது இரட்சிப்பை பெறுகிறோம், ஏனென்றால் கிறிஸ்துவின் இரத்தம் நம் பாவத்தை மறைக்கிறது. இந்த விஷயங்களைக்குறித்த பவுலின் அணுகுமுறையானது, ஒரு நபர் தன்னுடைய பாவத்தின் தண்டனையிலிருந்து, எவ்வாறு தனது பாவத்தின் வல்லமையிலிருந்து காப்பாற்றப்பட முடியும் என்பதை தெளிவான மற்றும் முழுமையான விளக்கத்தைக் கொடுக்கிறது.

## மையக் கருத்து

தேவனுடைய நீதி

## பொருளடக்கம்

1. பாவத்திற்கான நியாயம்தீர்க்கப்படுதலின் நிலை மற்றும் நீதியின் தேவை — 1:18-3:20

2. நீதியை சுமத்துதல், நீதிமானாக்குதல் — 3:21-5:21

3. நீதியை வழங்குதல், பரிசுத்தமாக்குதல் — 6:1-8:39

4. இஸ்ரவேலுக்கு தெய்வீக பாதுகாப்பு — 9:1-11:36

5. நீதியை நடைமுறையில் செயல்படுத்துதல் — 12:1-15:13

6. முடிவு: தனிப்பட்ட செய்தி — 15:14-16:27

# *1 கொரிந்தியர்*

## *ஆசிரியர்*

*இந்த புத்தகத்தின் ஆசிரியர் பவுல் என ஏற்றுக்கொள்ளப்படுகிறார் (1 கொரிந்தியர். 1: 1-2; 16: 21) பவுலின் நிருபமும் எனவும் அழைக்கப்படுகிறது. சில சமயங்களில், எபேசுவில் பவுல் இருந்த சமயத்தில் அல்லது அதற்கு முன்பு, 1 கொரிந்தியர் (5: 10) க்கு முன்பு கடிதத்தை எழுதினார். கொரிந்தியர் கடிதத்தை தவறாகப் புரிந்து கொண்டார்கள், துரதிருஷ்டவசமாக அந்த கடிதம் இனி வெளியாகவில்லை. இந்த "முந்தைய கடிதத்தின்" உள்ளடக்கங்கள் (அது அழைக்கப்படுவது போலவே), முழுமையாக அறியப்படவில்லை, கொரிந்து சபையிலிருந்து பவுல் பெற்ற கடிதத்திற்கு பதில் கடிதமாக முதலாம் நிருபத்தை எழுதுகிறார், கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்திற்கு முன்பு பவுல் எழுதிய கடிதத்திற்கு கொரிந்தியர்கள் பதில் கடிதம் எழுதியிருக்கலாம்.*

## *எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*கிபி. 55 முதல் 56 வரையான காலப்பகுதியில் ஏறக்குறைய எழுதப்பட்டிருக்கலாம்.*

*இந்த நிருபம் எபேசுவிலிருந்து எழுதப்பட்டதாகும் (1 கொரி. 16: 8).*

## *யாருக்காக எழுதப்பட்டது*

*கொரிந்தியருக்கான முதலாம் நிருபத்தின் உத்தேசிக்கப்பட்ட வாசகர்கள் கொரிந்துவிலிருந்த தேவனின் திருச்சபையின் உறுப்பினர்கள் ஆவர். (1 கொரிந்தியர் 1: 2). இருந்தபோதிலும் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத்*

தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும், சகல இடங்களிலும்" (1: 2) என்று பவுல் தன்னுடைய நோக்கமுள்ள வாசகர்களாக அனைத்து வாசகர்களுக்கும் எழுதுகிறார்.

## எழுதப்பட்ட நோக்கம்

கொரிந்து சபையின் தற்போதைய நிலைமையைப் பற்றி பவுல் பல ஆதாரங்களில் இருந்து தகவலைப் பெற்றுக்கொண்டார். இந்த கடிதத்தை எழுதுவதற்கான அவரது நோக்கம், திருச்சபையின் பலவீனமான பகுதியைக் கட்டியெழுப்புதல், அறிவுறுத்துதல், பிரிவினைகள் போன்ற தவறான பழக்கவழக்கங்களை சரிசெய்தல் ஆகியனவாகும், (1 கொரி. 1: 10-4: 21), தவறான போதனை (உயிர்த்தெழுதல் பற்றிய தவறான போதனை) ஆகியவற்றை செய்தல் ஆகும். (1 கொரிந்தியர். 15), ஒழுக்கக்கேடு (1 கொரி. 5, 6: 12-20), மற்றும் கர்த்தரின் இரா போஜனம் குற்றப்படுத்தப்படுதல் (1 கொரிந்தியர் 11: 17-34). கொரிந்திய தேவாலயம் வரங்கள் நிறைந்ததாக இருந்தது (1: 4-7) ஆனால் முதிர்ச்சியற்ற நிலை மற்றும் ஆவிக்குரியதல்லாததாக இருந்தது (3: 1-4) ஆகவே பவுல், சபைக்கு நடுவே காணப்படும் பாவப்பிரச்சனைகளை சபையானது எவ்விதம் கையாளவேண்டும் என்ற ஒரு முக்கியமான மாதிரியை வழங்கினார். சம்பந்தப்பட்ட பிரிவினைகள் மற்றும் அனைத்து விதமான ஒழுக்கக்கேடுகளுக்கும் ஒரு கண்டும் காணாமல் இருப்பதற்கு பதிலாக, அவர் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தார்.

## மையக் கருத்து

விசுவாசியின் நடத்தை

## பொருளடக்கம்

1. அறிமுகம் — 1:1-9

2. கொரிந்து சபையிலுள்ள பிரிவினைகள் — 1:10-4:21

*3.* ஒழுக்க மற்றும் நெறிமுறை ஆகியவற்றில் காணப்பட்ட ஒழுங்கின்மை — *5:1-6:20*

*4.* திருமணத்திற்கான கோட்பாடுகள் — *7:1-40*

*5.* அப்போஸ்தலர்களின் சுயாதீனம் — *8:1-11:1*

*6.* ஆராதனை பற்றிய அறிவுரைகள் — *11:2-34*

*7.* ஆவியின் வரங்கள் — *12:1-14:40*

*8.* உயிர்த்தெழுதலைக் குறித்த உபதேசம் — *15:1-16:24*

# *2 கொரிந்தியர்*

## *ஆசிரியர்*

*பவுல் 2 கொரிந்தியர் நிருபத்தை தனது வாழ்க்கையின் பெலவீனமான நேரத்தில் எழுதினார். கொரிந்து சபையில் சண்டையிட்டுக் கொண்டிருப்பதை அவர் அறிந்திருந்தார், எனவே உள்ளூர் சபை விசுவாசிகளின் ஒற்றுமையைக் காப்பாற்ற அவர் நடவடிக்கை எடுக்க முயன்றார். பவுல் அந்த கடிதத்தை எழுதியபோது, கொரிந்துவிலிருந்த விசுவாசிகளின் மீதுள்ள அவருடைய அன்பின் காரணமாக அவர் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவித்தார். துன்பங்கள், மனிதனின் பலவீனங்களை வெளிப்படுத்துகின்றன, ஆனால் தேவனின் தகுதியை வெளிப்படுத்துகின்றன-என் கிருபை உங்களுக்கு போதுமானது, உன் பலவீனத்தில் என் பெலன் பூரணமாக விளங்கும் (2 கொரி 12: 7-10). அந்த கடிதத்தில், பவுல் தன்னுடைய ஊழியத்தையும் அப்போஸ்தல அதிகாரத்தையும் பலமாக பாதுகாக்கிறார். அவர் தேவனுடைய சித்தத்தினாலே கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக இருக்கிறார் என்பதை மீண்டும் உறுதி செய்வதன் மூலம் அவர் கடிதம் தொடங்குகிறார் (2 கொரி. 1: 1). அப்போஸ்தலனையும் கிறிஸ்தவ விசுவாசத்தையும் பற்றி பவுல் எழுதிய இக்கடிதம் நிறைய வெளிப்படுத்துகிறது.*

## *எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*கிபி. 55 முதல் 56 வரையான காலப்பகுதியில் ஏறக்குறைய எழுதப்பட்டது.*

*கொரிந்தியருக்கு பவுல் எழுதிய இரண்டாம் கடிதம் மக்கதோனியாவிலிருந்து எழுதப்பட்டது.*

## *யாருக்காக எழுதப்பட்டது*

*இந்த நிருபம் கொரிந்துவிலுள்ள தேவனுடைய சபைக்கும் அகாயாவிலுள்ள கொரிந்து பட்டணத்தை தலைநகரமாகக் கொண்ட ரோமானிய மாகாணமாகிய அகாயாவிலுள்ள மக்களுக்குக் கொடுக்கப்பட்டதாகும் (2 கொரி 1: 1).*

## எழுதப்பட்ட நோக்கம்

*கொரிந்தியர்கள் பவுலின் வேதனையுள்ள கடிதத்திற்கு (1: 3-4; 7: 8-9, 12: 13) சாதகமான பதிலளித்ததினால் பவுல் தான் உணர்ந்த ஆறுதலையும், சந்தோஷத்தையும் வெளிப்படுத்த, ஆசியா பிராந்தியத்தில் அவர் கடந்து சென்ற துயரத்தை அவர்கள் அறிந்துகொள்வதற்காக (1: 8-11), இடறல் உண்டாக்குபவர்களை அவர்கள் மன்னிக்கும்படி கேட்பதற்காக (2: 5-11), அவர்கள் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படக்கூடாது என எச்சரிப்பதற்காக (6: 14-7: 4), கிறிஸ்தவ ஊழியத்தின் உன்னதமான அழைப்பையும் உண்மைத் தன்மையையும் அவர்களுக்கு விளக்குவதற்காக (2: 14-7: 4), கொரிந்தியர்களுக்கு கொடுத்தலின் கிருபையைக் கற்றுக்கொடுக்கும்படியாகவும், எருசலேமில் உள்ள கிறிஸ்தவர்களுக்காக சேகரிப்பதை நிறைவு செய்வதை உறுதிப்படுத்தும்படியாக என இதுபோன்ற அநேக நோக்கங்களை பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது தனது மனதில் கொண்டிருந்தார். (அதிகாரம் 8 9).*

## மையக் கருத்து

*பவுல் தன்னுடைய அப்போஸ்தல பட்டத்தை தற்காக்கிறார்.*

## பொருளடக்கம்

*1. தனது ஊழியத்தைக் குறித்து பவுலின் விளக்கம் — 1:1-7:16*

*2. எருசலேமில் ஏழைகளுக்காக சேகரித்தல் — 8:1-9:15*

*3.* *பவுல் தனது அதிகாரத்தை தற்காத்துக்கொள்ளுதல்* — *10:1-13:10*

*4.* *திரித்துவக் கருத்தோட்டத்துடன் ஆசீர்வாதம் வழங்குதல்* — *13:11-14*

# கலாத்தியர்

## ஆசிரியர்

*அப்போஸ்தலனாகிய பவுல் இந்த நிருபத்தின் ஆசிரியர் ஆவார், ஆரம்பகால சபையின் ஒருமித்த கருத்தாக இது இருந்தது. ஆசியா மைனருக்கு தனது முதல் மிஷனரி பயணத்தின்போது அவைகளைத் தொடங்குவதற்கு உதவிசெய்த பிறகு, தெற்கு கலாத்தியாவிலுள்ள சபைகளுக்கு பவுல் எழுதினார். ரோமாபுரி அல்லது கொரிந்து போல கலாத்தியா ஒரு நகரம் அல்ல, மாறாக ரோம மாகாணத்தில் பல நகரங்களும் ஏராளமான சபைகளும் இருந்தன. கலாத்தியர் நிருபமானது யாருக்காக எழுதப்பட்டதோ அந்தக் கலாத்தியர்கள் பவுலினால் மனந்திரும்பியவர்கள் ஆவர்.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி. 48 க்கு இடையில் எழுதப்பட்டது.*

*அனேகமாக பவுல், அந்தியோகியாவிலிருந்து கலாத்தியர் நிருபத்தை எழுதினார், ஏனெனில் இது அவருடைய சொந்த வீடுபோல இருந்தது.*

## யாருக்காக எழுதப்பட்டது

*கலாத்தியர் நிருபம் கலாத்தியாவிலுள்ள சபைகளின் உறுப்பினர்களுக்கு எழுதப்பட்டது (கலா. 1: 1-2).*

## எழுதப்பட்ட நோக்கம்

*யூத மார்க்கத்தமைந்தவர்களின் பொய் சுவிசேஷத்தை மறுப்பதே இந்த கடிதத்தின் நோக்கம், ஏனென்றால் விருத்தசேதனம் என்பது இரட்சிப்புக்கு இன்றியமையாதது என இந்த யூத கிறிஸ்தவர்கள் நினைத்தனர். அவர்களுடைய இரட்சிப்பின் உண்மையான*

அடித்தளத்தை கலாத்தியர்களுக்கு ஞாபகப்படுத்துவதும் இந்த நிருபத்தின் நோக்கமாகும். பவுல் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை தெளிவாக உறுதிப்படுத்தியதன் மூலம் பதிலளித்தார், அதோடு அவர் பிரசங்கித்த சுவிசேஷத்தை உறுதிப்படுத்தினார். கிருபையினால் விசுவாசத்தின் மூலம் மக்கள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள், விசுவாசத்தினால் மட்டுமே அவர்கள் ஆவிக்குரிய சுதந்திரத்தில் தங்கள் புதிய வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

## மையக் கருத்து

*கிறிஸ்துவில் சுதந்திரம்*

## பொருளடக்கம்

*1. அறிமுகம் — 1:1-10*

*2. நற்செய்தி அங்கீகாரம் — 1:11-2:21*

*3. விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்படுதல் — 3:1-4:31*

*4. விசுவாசம் மற்றும் சுதந்திரத்தின் வாழ்க்கையை அப்பியாசப்படுத்துதல் — 3:1-4:31*

# எபேசியர்

## ஆசிரியர்

எபேசியருக்கு எழுதப்பட்ட நிருபத்தின் ஆசிரியர் அப்போஸ்தலனாகிய பவுல் என்று எபேசியர் 1:1 கூறுகிறது. எபேசியர் நிருபமானது திருச்சபையின் ஆரம்ப நாட்களில் பவுல் எழுதியதாகக் கருதப்பட்டது, மேலும் அப்போஸ்தல பிதாக்கள்-ரோமாபுரியின் கிளெமென்ட், இக்னேசியஸ், ஹெர்மஸ் மற்றும் பாலிகார்ப் ஆகியோரால் மேற்கோள் காட்டப்பட்டது.

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிபி 60 காலகட்டங்களில் எழுதப்பட்டது.

ரோம சிறையில் இருந்தபோது பவுல் அதை எழுதியிருக்கலாம்.

## யாருக்காக எழுதப்பட்டது

முதன்மை பெறுநராக எபேசிய சபை இருந்தது. அவரது உத்தேசிக்கப்பட்ட வாசகர்கள் புறஜாதிகளே என்பதை தெளிவாகக் குறிப்பிடுகிறார். எபேசியர் 2:11-13 ல், தன்னுடைய வாசகர்கள் “பிறப்பால் புறஜாதிகள்” (2:11) என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார், எனவே, யூதர்கள் “வாக்குத்தத்த உடன்படிக்கைகளுக்கு அந்நியர்களாக” (2:12) கருதுகிறார்கள். இதேபோல், எபிரெயர் 3:1 ல் பவுல் தன் உத்தேசிக்கப்பட்ட வாசகர்களிடம், “புறஜாதிகளாகிய உங்கள் நிமித்தம் தான் ஒரு கைதி” என்று கூறுகிறார்.

## எழுதப்பட்ட நோக்கம்

கிறிஸ்துவின் முதிர்ச்சிக்கு ஒப்பாக முதிர்ச்சியடைய விரும்பும் அனைவருமே இந்த நிருபத்தைப் பெறுவார்கள் என்று பவுல் எண்ணினார். எபேசியரின் நிருபத்தில் தேவனுடைய

உண்மையான பிள்ளைகளாக வளர தேவையான ஒழுக்கம் இருக்கிறது. மேலும், எபேசியர் நிருபத்தைக்குறித்த ஒரு ஆய்வு, ஒரு விசுவாசியை உறுதிப்படுத்த மற்றும் பாதுகாக்க உதவும், அதன்மூலம் அந்த நபர் தேவன் கொடுத்த அழைப்பு மற்றும் நோக்கத்தை நிறைவேற்ற முடியும். எபேசுவில் உள்ள விசுவாசிகளுக்கு திருச்சபையின் தன்மையையும் நோக்கத்தையும் விளக்குவதன் மூலம் கிறிஸ்தவ விசுவாசத்தில் அவர்கள் பலப்படுவதற்கு பவுல் நோக்கம் கொண்டிருந்தார். பவுல் எபேசிய நிருபத்தில் ஏராளமான வார்த்தைகளைப் பயன்படுத்தினார், முந்தைய மதங்களில் பயன்படுத்தப்பட்ட, தலை-உடல், முழுமை, இரகசியம், காலம், அதிபதி, முதலியவை அவருடைய புறஜாதி கிறிஸ்தவ வாசகர்களுக்கு தெரிந்திருக்கும். கிறிஸ்துவானவர், தெய்வங்கள் என்பவைகள் மற்றும் ஆவிக்குரிய உயிரினங்களுக்கும் மேலாக உயர்ந்தவராகவும் மேலானவராகவும் இருக்கிறார் என்பதை அவரது வாசகர்களிடம் நிரூபிக்க அவர் இந்த வார்த்தைகளை பயன்படுத்தினார்.

## மையக் கருத்து

*கிறிஸ்துவில் ஆசீர்வாதம்*

## பொருளடக்கம்

1. *சரீரமான சபை அங்கத்தினர்களின் சத்தியங்கள்* — ***1:1-3:21***
2. *சரீரமான சபை அங்கத்தினர்களின் கடமைகள்* — ***4:1-6:24***

# *பிலிப்பியர்*

## *ஆசிரியர்*

*பவுல் இதை எழுதினதாகக் கூறுகிறார் (1: 1) மற்றும் மொழி, பாணி, மற்றும் வரலாற்று உண்மைகளின் அனைத்து உள் குணாதிசயங்கள் ஆகியவை இதை உறுதிப்படுத்துகிறது. ஆரம்பகால சபை, பவுல் ஆசிரியர் என்றும் அதிகாரம் பற்றியும் தொடர்ந்து பேசுகிறது. பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் கிறிஸ்துவின் சிந்தையை வெளிப்படுத்துகிறது (2: 1-11). பிலிப்பியர் நிருபத்தை எழுதும்போது பவுல் கைதியாக இருந்தபோதிலும் அவர் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தார். பிலிப்பியர் நிருபம் நமக்கு, துன்பங்கள் மற்றும் பாடுகளுக்கு நடுவில் இருந்தாலும் கிறிஸ்தவர்கள் சந்தோஷமாக இருக்க முடியுமென கற்றுக்கொடுக்கிறது. நாம் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் நம்பிக்கையின் காரணமாக நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.*

## *எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*ஏறக்குறைய கிபி 61 க்கு இடையில் எழுதப்பட்டது.*

*ரோமாபுரியில் சிறைச்சாலையில் இருக்கும்போது பவுல் பிலிப்பியர் நிருபத்தை எழுதினார் (அப்போஸ்தலர் 28: 30). பிலிப்பியர் சபையிலிருந்து கிடைத்த நிதி உதவியுடன் ரோமில் இருந்த பவுலிடம் வந்த எப்பாப்பிரோதீத்துவிடம் பிலிப்பியருக்கு எழுதப்பட்ட கடிதம் கொடுக்கப்பட்டது. (பிலிப்பியர் 2: 25; 4: 18). ஆனால் ரோமிலிருந்த சமயத்தில் எப்பாப்பிரோதீத்து நோயுற்றார், அது அவருடைய பயணத்தைத் தாமதமாகி, கடிதத்தின் வழங்குவதை (2: 26-27) தாமதப்படுத்தியது.*

## *யாருக்காக எழுதப்பட்டது*

*மக்கெதோனியா மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் ஒன்றான பிலிப்பி நகரில் உள்ள கிறிஸ்தவ சபை.*

## எழுதப்பட்ட நோக்கம்

*பவுல் தான் சிறைச்சாலையில் இருந்தபோது காரியங்கள் எப்படி இருந்தது என்பதையும் (1: 12-26), அவருடைய திட்டங்கள் என்னவாக இருந்தது மற்றும் அவருடைய விடுதலை ஆகியவற்றைக்குறித்து சபையானது அறியும்படி பவுல் விரும்பினார். (பிலி 2: 23-24). சபையில் சில குழப்பம் மற்றும் பிரிவு இருப்பதாகத் காணப்பட்டது, எனவே அப்போஸ்தலன், ஒற்றுமையை நோக்கிய ஒரு கண்ணோட்டத்தில் மனத்தாழ்மையை ஊக்குவிக்க எழுதுகிறார் (2: 1-18; 4: 2-3). போதக இறையியல் அறிஞரான பவுல், (3: 2-3) எதிர்மறையான கள்ள உபதேசங்களையும் மற்றும் சில குறிப்பிட்ட தவறான போதகர்களின் விளைவுகளைத் தலைகீழாக்குமாறு எழுதுகிறார். பவுல், எப்பாபிரோதீத்துவின் ஆரோக்கியத்தையும் திட்டங்களையும் பற்றி அறிக்கை கொடுக்க தீமோத்தேயுவை உற்சாகப்படுத்த எழுதினார் (2: 19-30) மற்றும் பவுல் தன்னைக் குறித்த சபையின் அக்கறைக்காகவும், அவர்கள் கொடுத்த நன்கொடைகள் (4: 10-20) ஆகியவற்றிற்காகவும் நன்றி தெரிவிக்க பவுல் எழுதினார்.*

## மையக் கருத்து

*மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கை*

## பொருளடக்கம்

*1. வணக்கவுரை — 1:1, 2*

*2. பவுலின் சூழ்நிலை மற்றும் சபையை உற்சாகப்படுத்துதல் — 1:3-2:30*

3. தவறான போதனைக்கு எதிரான எச்சரிக்கைகள் — 3:1-4:1

4. இறுதி அறிவுரைகள் — 4:2-9

5. நன்றி சொல்லுதல் — 4:10-20

6. இறுதி வாழ்த்துக்கள் — 4:21-23

# கொலோசெயர்

## ஆசிரியர்

கொலோசெயர் பவுலின் உண்மையான கடிதம் ஆகும் (1: 1). ஆரம்பகால சபையில், ஆசிரியரின் விஷயத்தில் பேசும் அனைவருமே பவுல் தான் ஆசிரியர் என்று தெரிவிக்கிறார்கள். கொலோசேயிலுள்ள சபை பவுலினால் நிறுவப்படவில்லை. பவுலின் சக ஊழியர்களில் ஒருவரான எப்பாப்பிரா முதலில் கொலோசெயில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்திருந்தார் (4: 12, 13). கள்ளப் போதகர்கள் கொலோசெக்கு விசித்திரமான, புதிய உபதேசங்களோடு வந்திருந்தார்கள். அவர்கள் கிறிஸ்தவத்துடன் புறசாதி தத்துவம் மற்றும் யூத மார்க்கத்தையும் கலந்தார்கள். கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் மேலானவர் என்பதைக் காட்டுவதன் மூலம் இந்தப் பொய் போதனைகளை பவுல் எதிர்த்தார். கொலோசெயர் நிருபமானது, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட நிருபம் என்று அழைக்கப்படுகிறது. இயேசு கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலாக தலைமை வகிக்கிறார் என்பதை இது காட்டுகிறது.

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிபி 60 க்கு இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.

ரோமில் முதலாம் முறையாக சிறைச்சாலையில் இருக்கும்போது பவுல் அதை எழுதியிருக்கலாம்.

## யாருக்காக எழுதப்பட்டது

“கொலோசெயாவில் கிறிஸ்துவில் பரிசுத்தவான்களுக்கும் உண்மையுள்ள சகோதரர்களுக்கும்” (1: 1-2) என்று எழுதப்பட்டபடி பவுல், எபேசுவிலிருந்து நூறு மைல்

*தூரத்திலிருந்த, லீகஸ் பள்ளத்தாக்கின் முக்கிய இடத்தில் இருந்த கொலோசேயிலுள்ள சபைக்கு எழுதினார். அப்போஸ்தலன் சபையை ஒருபோதும் சந்திக்கவில்லை (1: 4; 2: 1).*

## எழுதப்பட்ட நோக்கம்

*கொலோசெயில் எழுந்திருந்த ஆபத்தான கருத்துக்களுக்கு எதிரான அறிவுரை கொடுப்பதற்காக பவுல் எழுதினார்: "அனைத்து படைப்புகளுக்கும் (1: 15; 3: 4), கிறிஸ்துவின் முழுமையான, நேரடி, தொடர்ந்து மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தியதன் மூலம், (3: 5; 4: 6) கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் வாழ்வதற்காகவும், ஒழுக்கமான கிறிஸ்தவ வாழ்வை தக்க வைத்துக் கொள்ளவும், தவறான போதகர்களின் அச்சுறுத்தலுக்கு எதிராக விசுவாசத்தில் அவர்கள் உறுதியையும் பராமரிக்கவும் சபையை ஊக்குவிக்கவும் (2: 2-5) எழுதினார்.*

## மையக் கருத்து

*கிறிஸ்துவின் மேலாதிக்கம்*

*பொருளடக்கம்*

*1. பவுலின் வணக்கவுரையும் ஜெபமும் — 1:1-14*

*2. கிறிஸ்துவுக்குள் உள்ள நபருக்கு பவுலுடைய உபதேசம் — 1:15-23*

*3. தேவனின் திட்டத்திலும் நோக்கத்திலும் பவுலின் பங்கு — 1:24-2:5*

*4. தவறான போதனைக்கு எதிரான எச்சரிக்கை — 2:6-15*

*5. பவுல் மதவெறி அச்சுறுத்தலை எதிர்கொள்கிறார் — 2:16-3:4*

*6. கிறிஸ்துவில் உள்ள புதிய மனிதனின் விளக்கம் — 3:5-25*

### 7. *பாராட்டுதல், இறுதி வாழ்த்து* — *4:1-18*

# *1 தெசலோனிக்கேயர்*

## *ஆசிரியர்*

*அப்போஸ்தலனாகிய பவுல் இந்த கடிதத்தின் ஆசிரியர் என்று இருமுறை தன்னை அடையாளம் காட்டினார் (1: 1; 2: 18). பவுலின் மிஷனரி பயணத் தோழர்களான சீலா மற்றும் தீமோத்தேயு (3: 2, 6), இரண்டாவது மிஷனரி பயணத்தின்போது (அப்போஸ்தலர் 17: 1-9) சபையை நிறுவியபோது, அவர் அந்த சபையை விட்டுக் கடந்து சென்ற சில மாதங்களுக்குள் அந்த விசுவாசிகளுக்கு இந்த முதல் கடிதத்தை எழுதினார். தெசலோனிக்கேயில் பவுல் செய்த ஊழியம் யூதர்களை மட்டுமல்ல, புறஜாதியரையும் உண்மையாகவே தொட்டது. சபையில் உள்ள பல புறஜாதிகள் விக்கிரகாராதனையை விட்டு வெளியே வந்தார்கள், அது அந்த நேரத்தில் யூதர்கள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட பிரச்சனையாக இருக்கவில்லை (1 தெசலோனிக்கேயர் 1: 9).*

## *எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*ஏறக்குறைய கிபி. 51 க்கு இடையில் எழுதப்பட்டது.*

*கொரிந்து பட்டணத்திலிருந்து தெசலோனிக்கே சபைக்கு பவுல் முதல் கடிதத்தை எழுதினார்.*

## *யாருக்காக எழுதப்பட்டது*

*தெசலோனிக்கேயர் 1: 1 ல், தெசலோனிக்கேயர்களின் சபையின் உறுப்பினர்களே தெசலோனிக்கேயர்களுக்கு முதல் கடிதத்தின் உத்தேசிக்கப்பட்ட வாசகர்களாக அடையாளம் காட்டுகிறது, இருந்தாலும் பொதுவாக எல்லா இடங்களிலும் உள்ள எல்லா கிறிஸ்தவர்களுக்கும் அது பொருந்துகிறது.*

## *எழுதப்பட்ட நோக்கம்*

*இந்த கடிதத்தை எழுதும்போது பவுலின் நோக்கம் என்னவென்றால், புதிதாக மனந்திரும்பியவர்கள் தங்களின் சோதனைகளில் உற்சாகப்படுத்துவது (3: 3-5), தேவபக்தியான வாழ்க்கையைப் பற்றிய அறிவுரைகளை வழங்குவது (4: 1-12) கிறிஸ்துவின் வருகைக்குமுன் இருக்கும் விசுவாசிகள் எதிர்காலத்தைப் பற்றி உறுதியளிப்பது (4: 13-18), ஒழுக்க மற்றும் நடைமுறை, விஷயங்களை சரி செய்வது போன்றவையாகும்.*

## மையக் கருத்து

*தேவாலயத்தில் அக்கறை*

## பொருளடக்கம்

1. *நன்றிகூறுதல் — 1:1-10*
2. *அப்போஸ்தல நடவடிக்கைகளின் பாதுகாப்பு — 2:1-3:13*
3. *தெசலோனிக்கேயர்களுக்கு உற்சாகமூட்டுதல் — 4:1-5:22*
4. *முடிவான ஜெபமும் ஆசீர்வாதம் கூறுதலும் — 5:23-28*

# *2 தெசலோனிக்கேயர்*

## *ஆசிரியர்*

*1 தெசலோனிக்கேயரைப் போலவே இந்த கடிதமும் பவுல், சீலா தீமோத்தேயு ஆகியோரிடமிருந்து வந்தது. இந்த கடிதத்தின் எழுத்தாளர், பவுல் எழுதிய 1 தெசலோனிக்கேயர் மற்றும் பிற கடிதங்களில் உள்ள அதே எழுத்துநடையைப் பயன்படுத்துகிறார். பவுல் முக்கிய எழுத்தாளர் என்று இது காட்டுகிறது. சீலாவும் தீமோத்தேயும் வாழ்த்துக்களில் சேர்க்கப்படுகிறார்கள் (2 தெச 1: 1). பல வசனங்களில், நாங்கள் எழுதுகிறோம் என்ற வார்த்தைகள், மூன்று பேரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. இறுதி வாழ்த்து மற்றும் ஜெபத்தை மட்டும் எழுதியதில் இருந்து பவுலின் கையெழுத்து அல்ல (2 தெச 3: 17). பவுல் இந்தக் கடிதத்தின் வார்த்தைகளை ஒருவேளை தீமோத்தேயுவிடமோ அல்லது சீலாவிடமோ கூறியிருக்கலாம்.*

## *எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*ஏறக்குறைய கிபி 51-52 க்கு இடையில் எழுதப்பட்டது.*

*1 தெசலோனிக்கேயர் எழுதியபோது இருந்த கொரிந்துவில் 2 தெசலோனிக்கேயர் நிருபத்தையும் பவுல் எழுதினார்.*

## *யாருக்காக எழுதப்பட்டது*

*2 தெசலோனிக்கேயர் நிருபத்தின் உத்தேசிக்கப்பட்ட வாசகர்கள், தெசலோனிக்கேயர் சபையின் உறுப்பினர்கள் என 2 தெசலோனிக்கேயர் 1: 1 கூறுகிறது.*

## *எழுதப்பட்ட நோக்கம்*

*கர்த்தருடைய நாள் பற்றிய உபதேசத்தில் இருந்த பிழைகளைச் சரிசெய்வதே இதன் நோக்கம் ஆகும். விசுவாசிகளை பாராட்டவும், விசுவாசத்தில் தங்களுடைய விடாமுயற்சியையும் ஊக்குவிப்பதற்காகவும், ஆண்டவரின் வருகையின் நாள் மிக விரைவிலேயே சம்பவிக்கும் என்று கடைசிக் காலத்தைக் குறித்து தங்களையே வஞ்சித்து, தங்கள் சொந்த ஆதாயத்திற்காக உபதேசத்தை கறைப்படுத்துபவர்களை கடிந்துகொள்வதற்காகவும் எழுதப்பட்டது.*

## மையக் கருத்து

*நம்பிக்கையில் வாழ்தல்*

## பொருளடக்கம்

*1. வாழ்த்துரை — 1:1, 2*

*2. துயரத்தில் ஆறுதல் — 1:3-12*

*3. கர்த்தரின் நாள் பற்றிய திருத்தம் — 2:1-12*

*4. அவர்களுடைய முடிவைக் குறித்து நினைவூட்டல் — 2:13-17*

*5. நடைமுறை விஷயங்களைப் பற்றி அறிவுரை — 3:1-15*

*6. இறுதி வாழ்த்துக்கள் — 3:16-18*

# 1 தீமோத்தேயு

## ஆசிரியர்

*இந்த நிருபத்தின் ஆசிரியர் பவுல் ஆவார், 1 தீமோத்தேயுவின் வார்த்தைகள், இந்த நிருபத்தை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதியதாக தெளிவாகக் கூறுகின்றன. தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல் (1 தீமோ 1:1) (1 தீ. 1:1). ஆரம்பகால சபை அது உண்மையிலேயே பவுலின் நிருபம் என்று தெளிவாகக் கூறுகிறது.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி 62-64 க்கு இடையில் எழுதப்பட்டது.*

*பவுல், எபேசுவில் தீமோத்தேயுவை விட்டுச் சென்றபோது, அவர் மக்கெதோனியாவுக்கு சென்றார். அங்கிருந்து அவர் தீமோத்தேயுவுக்கு எழுதினார். (1 தீமோத்தேயு. 1:3; 3:14, 15).*

## யாருக்காக எழுதப்பட்டது

*பவுலின் பயணத் தோழனும் மிஷனரி பயணத்தில் உதவியாளனுமான தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதுவதால், அழைப்பதாலேயே இந்த நிருபம் தீமோத்தேயு என்று பெயரிடப்பட்டது. தீமோத்தேயு மற்றும் சபை ஆகிய இருவரும் 1 தீமோத்தேயுவின் வாசகர்களே.*

## எழுதப்பட்ட நோக்கம்

*தீமோத்தேயுவை தேவனுடைய குடும்பம் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை (3:14-15) அறிவுறுத்துவதற்கும் தீமோத்தேயு இந்த வழிமுறைகளை எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவதற்கும் இந்த நிருபம் எழுதப்பட்டது. இந்த வசனங்கள் 1 தீமோத்தேயு*

*நிருபத்திற்கான பவுலின் எண்ணக்கருவாக செயல்படுகின்றன. ஜீவனுள்ள தேவனுடைய சபையார், சத்தியத்தின் தூணும் அஸ்திவாரமுமாய் இருக்கிறவர்கள், தேவனுடைய வீட்டிலே தங்களைச் செய்யவேண்டியது இன்னதென்று அவர்களுக்குத் தெரியும்படிக்கு அவர் எழுதுகிறார். பவுல் கடிதங்களை அனுப்பி, சபைகளை பலப்படுத்துவது மற்றும் கட்டியெழுப்புவது எப்படி என்று ஆண்களுக்கு அவர் குறிப்பிடுகிறார்.*

## மையக் கருத்து

*ஒரு இளம் சீடனுக்கான வழிமுறைகள்*

## பொருளடக்கம்

1. *ஊழியத்தின் பயிற்சிகள்* — *1:1-20*
2. *ஊழியத்தின் கொள்கைகள்* — *2:1-3:16*
3. *ஊழியத்தின் பொறுப்புகள்.* — *4:1-6:21*

# *2 தீமோத்தேயு*

## *ஆசிரியர்*

*ரோம சிறையில் இருந்து பவுல் விடுவிக்கப்பட்ட பிறகு, நான்காவது மிஷனரி பயணத்தின்போது, 1 தீமோத்தேயு எழுதினார், பவுல் மீண்டும் பேரரசர் நீரோவினால் சிறையில் அடைக்கப்பட்டார். இந்த சமயத்தில் அவர் 2 தீமோத்தேயு எழுதினார். அவரது முதல் சிறைத்தண்டனைக்கு மாறாக, அவர் ஒரு வாடகை வீட்டில் (அப்போஸ்தலர் 28: 30) வசித்த போது, இப்போது ஒரு சாதாரண குற்றவாளி போல (1: 16; 2: 9) சங்கிலியால் பிணைக்கப்பட்டு ஒரு குளிர்ச்சியான சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார் (4: 13). பவுல் தன்னுடைய வேலையைச் செய்து முடித்துவிட்டார் என்றும் அவருடைய வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது (4: 6-8) என்பதை அறிந்திருந்தார்.*

## *எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*ஏறத்தாழ கிபி 66-67 இடையில் எழுதப்பட்டது.*

*பவுல் ரோமிலிருந்த 2 வது முறையாக சிறைத்தண்டனை அனுபவித்தார், அவர் மரண தண்டனைக்குக் காத்திருக்கும்போது இந்த கடிதத்தை எழுதினார்.*

## *யாருக்காக எழுதப்பட்டது*

*தீமோத்தேயுவே இரண்டாம் தீமோத்தேயு நிருபத்தின் முக்கிய வாசகர் ஆவார், ஆனால் அவர் விஷயங்களை சபைக்கு பகிர்ந்து கொண்டார்.*

## *எழுதப்பட்ட நோக்கம்*

இறுதியான உற்சாகத்தோடும் பாராட்டுகளோடும் பவுல் தீமோத்தேயுவுக்குக் கொடுத்த வேலையை தைரியத்தோடும் *(1: 3-14)*, குறிக்கோளுடனும் *(2: 1-26)*, மற்றும் விடாமுயற்சியுடனும் *(3: 14-17; 4: 1-8)* தொடரும்படி தீமோத்தேயுவை விட்டுச் செல்வதற்காக.

## மையக் கருத்து

விசுவாசமுள்ள ஊழியத்திற்கு ஒரு பொறுப்பு

## பொருளடக்கம்

1. ஊழியத்திற்கான உற்சாகம் — *1:1-18*
2. ஊழியத்தில் முன்மாதிரி — *2:1-26*
3. தவறான போதனைக்கு எதிரான எச்சரிக்கை — *3:1-17*
4. உற்சாகத்தின் வார்த்தைகளும் ஆசிர்வாதமும் — *4:1-22*

# தீத்து

## ஆசிரியர்

தீத்துவுக்கு எழுதப்பட்ட நிருபத்தின் ஆசிரியர் என பவுல் தன்னை அடையாளப்படுத்துகிறார், மேலும் அவர் தன்னை தேவனுக்கு ஒரு கட்டப்பட்ட அடிமை ஊழியனாகவும், இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகவும் தன்னை அழைத்தார் (1: 1). தீத்துவுடனான பவுலின் உறவின் ஆரம்பம் இரகசியமாக மூடி மறைக்கப்பட்டிருக்கிறது, என்றாலும் பவுல் ஊழியத்தினால் அவர் மனமாற்றமடைந்திருக்கலாம் என்று கருதலாம், அவர் தீத்துவை ஒரு பொதுவான விசுவாசத்தில் என் உண்மையான மகன் என்று (1: 4) அழைத்தார். பவுல் தெளிவாக தீத்துவை ஒரு நண்பனாகவும் சுவிசேஷத்தில் சக ஊழியனாகவும் புகழ்பெற்றவராகவும், தீத்துவை அவனுடைய பாசத்திற்காகவும், ஆர்வத்துக்காகவும், மற்றவர்களிடம் ஆறுதல்படுத்துவதற்காகவும் பாராட்டினார்.

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிபி. 63-65 க்கு இடையில் எழுதப்பட்டது.

அப்போஸ்தலனுடைய முதல் ரோம சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட பிறகு பவுல் தன்னுடைய கடிதத்தை தீத்துவிற்கு நிக்கோபொலிஸிலிருந்து எழுதினார். எபேசுவில் தீமோத்தேயுவை ஊழியம் செய்வதற்காக விட்டுவந்த பிறகு பவுல் தீத்துவுடன் சேர்ந்து கிரேத்தா தீவுக்குச் சென்றார்.

## யாருக்காக எழுதப்பட்டது

கிரேத்தாவிலிருந்த விசுவாசத்தில் மகனும் இன்னொரு சக ஊழியக்காரனுமான, தீத்துவுக்கு எழுதப்பட்டது.

## எழுதப்பட்ட நோக்கம்

*கிரேத்தாவிலுள்ள இளம் சபைகளில் சில குறைபாடுகளை சரிசெய்ய தீத்துவை அறிவுறுத்துதல், ஒழுங்கமைத்தல் மற்றும் ஒழுங்கற்ற நடத்தையுடைய உறுப்பினர்கள் ஆகியோருக்கு உதவுவதற்காக, (1) புதிய மூப்பர்களை நியமித்தல், (2) கிரேத்தாவிலுள்ள அவிசுவாசிகளுக்கு முன்பாக விசுவாசத்தின் சிறந்த சாட்சிகளை கொடுப்பதற்கு அவர்களை தயார்படுத்துதல் (1: 5).*

## மையக் கருத்து

*நடத்தைக்கான ஒரு கையேடு*

## பொருளடக்கம்

1. *வாழ்த்துக்கள் — 1:1-4*
2. *மூப்பர்களின் நியமனம் — 1:5-16*
3. *பல்வேறு வயதினரைப் பற்றிய அறிவுரை — 2:1-3:11*
4. *முடிவுரை குறிப்புகள் — 3:12-15*

# பிலேமோன்

## ஆசிரியர்

*பிலேமோன் புத்தகத்தை எழுதியவர் அப்போஸ்தலன் பவுல் (1: 1). பிலேமோனுக்கு பவுல் எழுதிய கடிதத்தில் ஒநேசிமுவை பிலேமோனிடம் மீண்டும் அனுப்புகிறார், மற்றும் கொலோசெயர் 4: 9 ல் ஒநேசிமு தீகிக்குவுடன் கொலேசே பட்டணத்திற்கு வருபவராக அடையாளம் காணப்படுகிறார். (கொலோசெயர்களுக்கு நிருபத்தைக் கொடுக்கும் நபர்) பவுல் இந்த கடிதத்தை தனது சொந்தக் கையால் எழுதுவதன்மூலம் இது எவ்வளவு முக்கியமானது என்பதை காட்டுவது சுவராசியமான ஒன்றாகும்.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி 60 காலகட்டத்தில் எழுதப்பட்டது.*

*பவுல் ரோமில் பிலேமோன் நிருபத்தை எழுதினார், பிலேமோனுக்கு கடிதம் எழுதப்பட்ட சமயத்தில் பவுல் கைதியாக இருந்தார்.*

## யாருக்காக எழுதப்பட்டது

*பிலேமோன், அப்பியாள், அர்க்கிப்பு மற்றும் அர்க்கிப்புவின் வீட்டில் கூடிவரும் சபைக்கு பவுல் கடிதம் எழுதினார். நிருபத்தின் உள்ளடக்கத்திலிருந்து, அது முதன்மையான உத்தேசிக்கப்பட்ட வாசகர் பிலேமோன் என்று தெளிவாக தெரிகிறது.*

## எழுதப்பட்ட நோக்கம்

*பவுல் ஒநேசிமுவை திரும்பவும் தண்டனையின்றி சேர்த்துக்கொள்வதற்காக பிலேமோனை சம்மதிக்க செய்தல் (10-*

*12, 17). (அடிமையாகிய ஒனேசிமு தன் எஜமான் பிலேமோனிடமிருந்து திருடிவிட்டு தப்பி ஓடிவிட்டார்) மேலும் ஒனேசிமுவை அடிமையாக அல்ல, ஒரு "பிரியமான சகோதரனாக" (15-16) பிலேமோன் ஏற்றுக்கொள்ளும்படி பவுல் விரும்பினார். ஒனேசிமு இன்னும் பிலேமோனுடைய சொத்தாக இருந்தான், மற்றும் ஒனேசிமு தனது எஜமானிடம் திரும்புவதற்கான வழியை சுமூகமாக்குவதற்காக பவுல் எழுதினார். பவுல் அவரிடம் சாட்சி கொடுத்ததால், ஒநேசிமு ஒரு கிறிஸ்தவராக மாறினார் (1: 10).*

## மையக் கருத்து

*மன்னிப்பு*

## பொருளடக்கம்

1. *வாழ்த்துரை — 1:1-3*
2. *நன்றிகூறுதல் — 1:4-7*
3. *ஒனேசிமுவுக்காக மன்றாடுதல் — 1:8-22*
4. *இறுதி வார்த்தைகள் — 1:23-25*

# எபிரெயர்

## ஆசிரியர்

*எபிரெயர்களுக்கு எழுதிய கடிதத்தின் எழுத்தாளர் யார் என்பது இன்னும் இரகசியமாக இருக்கிறது. சில அறிஞர்கள் பவுல்தான் இந்த நிருபத்தின் ஆசிரியர் என்று கருதுகின்றனர். ஆனால் உண்மையான எழுத்தாளர் யார் என்பது புதிராகவே இருக்கிறது. கிறிஸ்தவத்தின் பிரதான ஆசாரியராக, ஆரோனின் ஆசாரியத்துவத்திற்கு மேலானவராகவும், நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிடமிருந்தும் கிறிஸ்துவை வரையறுக்கிற வேறு புத்தகம் இல்லை. இந்த புத்தகம், கிறிஸ்துவை நம் விசுவாசத்தைத் துவக்குபவராகவும் முழுமையாக்குபவராகவும் வெளிப்படுத்துகிறது (எபிரெயர் 12: 2).*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய 1 கிபி 64-70 க்கு இடையே எழுதப்பட்டது.*

*எபிரேயருக்கு எழுதப்பட்ட கடிதம் எருசலேமில் எழுதப்பட்டது, கிறிஸ்து பரலோகத்திற்கு சென்ற சில காலத்திற்குப் பிறகு, எருசலேமின் அழிவிற்கு சில நாட்களுக்கு முன்பு ஆகிய இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.*

## யாருக்காக எழுதப்பட்டது

*பழைய ஏற்பாட்டை அறிந்திருந்த மனந்திரும்பிய யூதர்களுக்கு இந்த கடிதம் முதன்மையாக எழுதப்பட்டது. அவர்கள் யூத மதத்திற்குத் திரும்புவதற்கு அல்லது யூத சுவிசேஷத்தைத் திரும்ப சோதிக்கப்பட்டார்கள். விசுவாசிகளுக்குக் கீழ்ப்படிந்த பல ஆசாரியர்களிடமிருந்து பெற்றவர்கள் (அப். 6: 7) இருந்து வந்தார்கள் என்பதையும் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.*

## எழுதப்பட்ட நோக்கம்

உள்ளூர் யூத போதனைகளை நிராகரிக்கவும், இயேசுவுக்கு தொடர்ந்து உண்மையாக இருக்கவும், இயேசு கிறிஸ்து மேன்மையானவர் என்பதைக் காட்டவும், அவர், தேவதூதர்கள், ஆசாரியர்கள், பழைய ஏற்பாட்டுத் தலைவர்கள், அல்லது எந்த மதம் ஆகியவற்றைக் காட்டிலும் தேவனுடைய குமாரன் சிறந்தவர் என்பதைக் காட்டும்படி எபிரெயர் நிருபத்தை எழுதியவர், அவருடைய சபையாரை ஊக்கப்படுத்த எழுதினார். கிறிஸ்து சிலுவையில் இறந்து உயிர்த்தெழுப்பப்படுவதன் மூலம், விசுவாசிகளின் இரட்சிப்பு மற்றும் நித்திய ஜீவனை உறுதிப்படுத்துகிறார், நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து செலுத்திய தியாக பலியானது, பூரணமானது மற்றும் முழுமையானது ஆகும். விசுவாசமானது தேவனைப் பிரியப்படுத்துகிறது, நாம் தேவனுக்குக் கீழ்ப்படிதல் மூலம் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறோம்.

## மையக் கருத்து

கிறிஸ்துவின் மேன்மை

## பொருளடக்கம்

1. இயேசு கிறிஸ்து தேவதூதர்களை விட உயர்ந்தவர் — 1:1-2:18

2. இயேசு, நியாயப்பிரமாணம் மற்றும் பழைய உடன்படிக்கைக்கு மேலானவர் — 3:1-10:18

3. விசுவாசம் மற்றும் சோதனைகள் மூலம் சகிப்புக்கு ஒரு அழைப்பு — 10:19-12:29

4. இறுதி அறிவுரைகள் மற்றும் வாழ்த்துக்கள் — 13:1-25

# யாக்கோபு

## ஆசிரியர்

யாக்கோபு ஆவார். யாக்கோபு (1:1), இவர் எருசலேம் தேவாலயத்தில் முக்கியத் தலைவரும், இயேசு கிறிஸ்துவின் சகோதரனும் ஆவார். யாக்கோபு கிறிஸ்துவின் பல சகோதரர்களில் ஒருவராக இருந்தார், மத் 13:55. அனேகமாக பெயர்ப்பட்டியலில் முதலாவதாக வருவதால் மூத்தவராக இருக்கலாம். ஆரம்பத்தில் அவர் இயேசுவை நம்பவில்லை, மேலும் அவர் இயேசுவுக்கு சவால் விடுத்து, அவருடைய ஊழியத்தைத் தவறாக புரிந்துகொண்டார் (யோ 7:2-5). பின்னர் அவர் தேவாலயத்தில் மிகவும் முக்கியமானவராக ஆனார். கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிறகு காட்சியளித்த நபர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருந்தார் (1 கொரிந்தியர் 15:7), பவுல் அவரை தேவாலயத்தின் தூணாக அழைத்தார் (கலா 2:9).

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிபி. 40 முதல் 50 வரையான காலப்பகுதியில் எழுதப்பட்டது.

கிபி 50 ல் எருசலேம் கவுன்சிலுக்கு முன்னும், கிபி 70 தேவாலயத்தின் அழிவுக்கு முன்னதாக எழுதப்பட்டது.

## யாருக்காக எழுதப்பட்டது

அந்த கடிதத்தின் யாருக்காக எழுதப்பட்டதுகள், அனேகமாக யூதேயா மற்றும் சமாரியா முழுவதும் சிதறி இருந்த யூத விசுவாசிகளாக இருந்தனர். யாக்கோபு ஆரம்பத்தில் “தேசங்களிடையே சிதறியிருந்த பன்னிரெண்டு கோத்திரத்தாருக்கு” கொடுக்கப்பட்ட வாழ்த்துக்களை அடிப்படையாகக் கொண்டு கவனிக்கும்போது, இந்த பகுதிகள்

யாக்கோபின் உண்மையான வாசகர்களின் இருப்பிடத்திற்கு வலுவான வாய்ப்புகள் ஆகும்.

## எழுதப்பட்ட நோக்கம்

யாக்கோபின் பிரதானமான நோக்கத்தை அறிய யாக்கோபு 1:2, 4 ஐ பார்க்க வேண்டும். அவருடைய ஆரம்ப வரிகளில், யாக்கோபு தன் வாசகர்களுக்கு கூறியது என்னவெனில், எனது சகோதர சகோதரிகளே, நீங்கள் பலவித சோதனைகளை சந்திக்கும்போது, அதை சந்தோஷமாகக் கருதுங்கள். ஏனென்றால், உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது, விடாமுயற்சியை உண்டாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்றார். இந்த பத்தியானது, யாக்கோபின் வாசகர்கள் பல வகையான சோதனையை சந்தித்தனர் என்று குறிப்பிடுகிறது. யாக்கோபு, தேவனிடத்திலிருந்து ஞானத்தைத் தொடர அவரது வாசகர்களை அழைத்தார் (1:5) இதனால் அவர்கள் தங்களது சோதனைகளில் மகிழ்ச்சியாக இருக்கமுடியும். யாக்கோபின் வாசகர்களில் சிலர் விசுவாசத்திலிருந்து வெகுதூரம் சென்று விட்டனர். யாக்கோபு, உலகத்தோடு நண்பர்களாக இருப்பதை எச்சரித்தார் (4:4), யாக்கோபு தேவன் அவர்களை உயர்த்தும்படி விசுவாசிகள் தாழ்மையுள்ளவர்களாக இருக்கும்படி கூறுகிறார். தேவனுக்கு முன் மனத்தாழ்மையாக இருத்தல் ஞானத்திற்கான ஒரு பாதை என்று கற்பிக்கிறார் (4:8-10).

[H2[மையக் கருத்து

உண்மையான விசுவாசம்

## பொருளடக்கம்

1. யாக்கோபு உண்மையான மதத்தைப் பற்றிய அறிவுரைகள் — 1:1-27

*2. உண்மையான விசுவாசம் நல்ல செயல்களால் நிரூபிக்கப்படுகிறது — 2:1-3:12*

*3. உண்மையான ஞானம் தேவனிடமிருந்து வருகிறது — 3:13-5:20*

# 1 பேதுரு

## ஆசிரியர்

இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு தான் ஆசிரியர் என்று முதல் வசனம் சுட்டிக்காட்டுகிறது. இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாக தன்னை அழைத்தார் (1 பேதுரு 1: 1). கிறிஸ்துவின் துன்பங்களைக் குறித்த வசனங்களை அடிக்கடி கூறுவதன்மூலம் (2: 21-24; 3: 4; 1: 5; 1: 4) துன்பம் அனுபவிக்கும் ஊழியரின் நிலையானது அவருடைய நினைவில் ஆழமாக பதிவாகியிருந்தது என்பதைக் காட்டுகின்றன. அவர் மாற்குவை "மகன்" என்று அழைக்கிறார் (5: 13), குறிப்பிடப்பட்டுள்ள இளைஞருக்கும் குடும்பத்திற்கும் அவரது பாசத்தை நினைவுகூர்கிறார் (அப்போஸ்தலர் 12: 12). அப்போஸ்தலனாகிய பேதுருதான் இந்த கடிதத்தை எழுதினார் என்ற கருத்திற்கு இந்த உண்மைகள் இயல்பாகவே வழிநடத்துகின்றன.

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

ஏறக்குறைய கிபி 60-64 க்கு இடையில் எழுதப்பட்டது.

5: 13 இல் ஆசிரியர் பாபிலோனில் உள்ள தேவாலயத்தில் இருந்து வாழ்த்து தெரிவிக்கிறார்.

## யாருக்காக எழுதப்பட்டது

பேதுரு இந்த கடிதத்தை ஆசியா மைனர் வடக்குப் பகுதிகளிலிருந்த சிதறிப்போன ஒரு கிறிஸ்தவர்களுக்கு இந்த நிருபத்தை எழுதினார். யூதர்களையும் புறஜாதிகளையும் உள்ளடக்கிய ஒரு குழுவிற்கு அவர் எழுதினார்.

## எழுதப்பட்ட நோக்கம்

*பேதுரு, தங்களுடைய விசுவாசத்திற்காக துன்புறுத்தலை அனுபவிக்கிற தனது வாசகர்களை ஊக்குவிப்பதற்காக இந்த நிருபத்தை எழுதினார். தேவனின் கிருபை எங்கே காணப்படுகிறதோ, அந்த கிறிஸ்தவத்தை முழுமையாக நம்புவதை அவர் விரும்பினார், ஆகவே விசுவாசத்தை விட்டுவிடவில்லை. 1 பேதுரு 5: 12 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நான் உங்களுக்கு சுருக்கமாக எழுதியிருக்கிறேன், இது தேவனுடைய உண்மையான கிருபையாக இருக்கிறது என்று அறிவித்து உற்சாகப்படுத்துகிறேன். அதில் உறுதியாக நிற்கவும். இந்த துன்புறுத்தல் அவரது வாசகர்களிடையே பரவலாக காணப்பட்டது. 1 பேதுரு, வடக்கு ஆசியா மைனரிலிருந்த கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதை பிரதிபலிக்கிறது.*

## மையக் கருத்து

*பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளித்தல்*

## பொருளடக்கம்

1. *வாழ்த்துரை — 1:1, 2*
2. *தேவனின் கிருபைக்காக அவரைத் துதியுங்கள் — 1:3-12*
3. *வாழ்க்கை பரிசுத்தத்திற்கு உற்சாகப்படுத்துதல் — 1:13-5:12*
4. *இறுதி வாழ்த்துக்கள் — 5:13, 14*

# 2 பேதுரு

## ஆசிரியர்

*1 பேது 1:1 ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 2 பேதுருவின் ஆசிரியர் அப்போஸ்தலனாகிய பேதுரு ஆவார். 2 பேதுரு 3:1 ல், 2 பேதுருவின் ஆசிரியர் இயேசுவின் மறுரூப நிலைக்கு சாட்சியாக இருப்பதாக கூறுகிறார் (1:16-18). ஒருநோக்கு சுவிசேஷ புத்தகங்கள் கூறுகிறபடி, பேதுரு, இயேசுவோடு இருந்த மூன்று சீடர்களில் ஒருவராக இருந்தார் (மற்ற இரண்டு பேரும் யாக்கோபும் யோவானும் ஆவர்). 2 பேதுருவின் ஆசிரியர், இரத்தசாட்சியாக மரிக்கவேண்டும் என்ற உண்மையை (1:14) அவர் குறிப்பிடுகிறார் என்பதையும்; யோவான் 21:18-19 ல் இயேசு, பேதுரு கைதியாகக் கட்டப்பட்டப்பின் இரத்தசாட்சியாக மரிப்பார் என்று முன்னறிந்தார்.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி 65-68 க்கு இடையில் எழுதப்பட்டது.*

*இதை அப்போஸ்தலன் தன் வாழ்நாளின் இறுதி வருடங்களில் ரோமிலிருந்து எழுதியிருக்கலாம்.*

## யாருக்காக எழுதப்பட்டது

*முதல் பேதுருவைப் போலவே இது வடக்கு ஆசியா மைனரிலிருந்த அதே வாசகர்களுக்கு எழுதப்பட்டிருக்கலாம்.*

## எழுதப்பட்ட நோக்கம்

*கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படையை நினைவூட்டுவதற்காக (1:12-13, 16-21), விசுவாசத்தின் எதிர்கால தலைமுறையினரை அறிவுறுத்துவதற்காக (1:15) அதன் அப்போஸ்தல பாரம்பரியத்தை உறுதிப்படுத்துவதற்காக (1:13-14; 2:1-3) பேதுரு*

*எழுதினார், தனது நாட்கள் குறுகியது என்று அவர் அறிந்ததினாலும், தேவ மக்கள் அநேக ஆபத்துக்களை சந்திக்கிறதினாலும் பேதுரு இதை எழுதினார். தேவனுடைய வருகையை மறுதலிக்கிற கள்ளப் போதகர்களின் வருகையைக் குறித்து தன்னுடைய வாசகர்களை எச்சரிக்கும்படி பேதுரு எழுதினார் (2:1-22) (3:3-4).*

## மையக் கருத்து

*தவறான ஆசிரியர்களுக்கு எதிராக எச்சரிக்கை*

## பொருளடக்கம்

1. *வாழ்த்துரை — 1:1, 2*
2. *கிறிஸ்தவ நல்லொழுக்கங்களில் வளர்ச்சியடைதல் — 1:3-11*
3. *பேதுருவின் செய்தி நோக்கம் — 1:12-21*
4. *தவறான ஆசிரியர்களுக்கு எதிராக எச்சரிக்கை — 2:1-22*
5. *கிறிஸ்துவின் வருகை — 3:1-16*
6. *முடிவுரை — 3:17, 18*

# *1 யோவான்*

## *ஆசிரியர்*

*இந்த நிருபமானது ஆசிரியர் யார் என்பது குறிப்பிடப்படவில்லை. ஆனால் திருச்சபையின் வலுவான, சீரான மற்றும் ஆரம்பகால சான்று, சீஷனாகவும் அப்போஸ்தலனாகவும் இருந்த யோவானை குறிப்பிடுகிறது (லூக்கா 6:13, 14). இந்த கடிதங்களில் யோவானின் பெயரைக் குறிப்பிடாதபோதிலும், அவர் ஆசிரியர் என்று அவரைக் குறிக்கும் மூன்று நிரூபணமான குறிப்புகள் உள்ளன. முதலாவதாக, இரண்டாவது நூற்றாண்டு எழுத்தாளர்கள் அவரை ஆசிரியர் எனக் குறிப்பிட்டனர். இரண்டாவதாக, யோவான் நற்செய்திக்கு ஒத்த வார்த்தைகளின் பயன்பாடு மற்றும் எழுத்து நடை இந்த நிருபங்களில் உள்ளன. மூன்றாவதாக, இயேசுவின் சரீரத்தை அவர் கண்டறிந்து, தொட்டார் என்று ஆசிரியர் எழுதினார், இது அப்போஸ்தலன் என்பதற்கான உண்மையாகும் (1 யோவான் 1:1-4; 4:14).*

## *எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*ஏறக்குறைய கிபி 85-95 இடைப்பட்ட காலகட்டத்தில் எழுதப்பட்டது.*

*யோவான் தனது வயதான காலத்தில் பெரும்பாலான நேரத்தை செலவிட்ட எபேசுவில் அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் யோவான் நிருபத்தை எழுதினார்.*

## *யாருக்காக எழுதப்பட்டது*

*1 யோவானின் வாசகர்கள் யார் என்பது இந்தக் கடிதத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்படவில்லை. எனினும், விசுவாசிகளுக்கு யோவான் எழுதியதாக உள்ளடக்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன (1 யோவான் 1:3-4; 2:12-14). இது பல*

இடங்களில் இருக்கும் பரிசுத்தவான்களுக்கு எழுதினார் என்பது சாத்தியம். பொதுவாக எல்லா இடங்களிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கு, 2:1, "என் சிறு பிள்ளைகள்."

## எழுதப்பட்ட நோக்கம்

நாம் சந்தோஷத்தால் நிறைந்து, பாவத்திலிருந்து விலகும்படி ஐக்கியத்தை கொண்டுவருவதற்காகவும், இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுப்பதற்காகவும், விசுவாசிக்கு முழுமையான இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுப்பதற்காகவும், கிறிஸ்துவுடனான தனிப்பட்ட உறவை விசுவாசிக்குக் கொண்டுவருவதற்காகவும் யோவான் இந்த நிருபத்தை எழுதினார். சபையிலிருந்து பிரிந்து சென்றவர்களும், சுவிசேஷத்தின் உண்மையிலிருந்து விலகும்படி மக்களை வழிநடத்த விரும்புகிறவர்களுமான கள்ளப் போதகர்களின் காரியத்தை யோவான் குறிப்பாக கூறுகிறார்.

## மையக் கருத்து

தேவனுடனான ஐக்கியம்

## பொருளடக்கம்

1. அவதாரம் என்பதின் உண்மைத்துவம் — 1:1-4

2. ஐக்கியம் — 1:5-2:17

3. வஞ்சகத்தை அங்கீகரிப்பது — 2:18-27

4. தற்காலத்தின் பரிசுத்த வாழ்வுக்கான தூண்டுதல் — 2:28-3:10

5. உத்தரவாதம் அடிப்படையிலான அன்பு — 3:11-24

6. தவறான ஆவிகளை பகுத்தறிதல் — 4:1-6

7. பரிசுத்தமாகுதலின் முக்கியம் — *4:7-5:21*

# 2 யோவான்

## ஆசிரியர்

*அப்போஸ்தலனாகிய யோவான் ஆசிரியர் ஆவார். 2 யோவான் 1 இல் "மூப்பர்" என்று அவர் தன்னை விவரிக்கிறார். நிருபத்தின் தலைப்பு "2 யோவான்." அப்போஸ்தலனாகிய யோவானின் பெயரைச் சுமக்கும் 3 நிருபங்களின் வரிசையில் இது இரண்டாவது ஆகும். 2 யோவான் நிருபத்தின் கவனமானது, தவறான போதகர்கள் யோவானின் சபைகளிடையே ஒரு ஊழியத்தை நடத்துகிறார்கள், மாற்றங்களை செய்ய முயலுகிறார்கள், கிறிஸ்தவ உபசரிப்பை தங்களுக்கு சாதகமாக முன்னெடுத்து வருகின்றனர் என்பதாகும்.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி 85-95 இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.*

*அநேகமாக எபேசுவில் எழுதப்பட்டிருக்கலாம்.*

*[H2[யாருக்காக எழுதப்பட்டது*

*இரண்டாவது யோவான், அன்பிற்குறிய பெண் மற்றும் அவரது குழந்தைகள் என்று குறிப்பிடப்பட்ட ஒரு சபைக்கு எழுதப்பட்ட கடிதமாகும்.*

## எழுதப்பட்ட நோக்கம்

*யோவானின் இரண்டாவது நிருபம் இந்த "பெண்மணி மற்றும், அவருடைய பிள்ளைகளின்" உண்மைத்தன்மையைப் பாராட்டுவதைக் காட்டவும், அன்பில் நடப்பதை உற்சாகப்படுத்தவும், தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும் யோவான் எழுதினார். அவர் அவளுக்கு,*

*தவறான போதகர்களுக்கு எதிரான எச்சரிக்கை கொடுத்து, மற்றும் அவர் விரைவில் அவளை சந்திக்க திட்டமிட்டிருக்கிறார் என்று தெரிவிக்கிறார். யோவான் அவளை "சகோதரி" என்று வாழ்த்துகிறார்.*

## மையக் கருத்து

*விசுவாசியின் பகுத்தறிவு*

## பொருளடக்கம்

*1. வாழ்த்துரை (1-3)*

*2. அன்பில் சத்தியத்தை பாதுகாத்தல் (4-11)*

*3. இறுதி வாழ்த்துக்கள் (12-13)*

# 3 யோவான்

## ஆசிரியர்

*யோவானின் மூன்று நிருபங்களும் நிச்சயமாக ஒரு மனிதனின் வேலையாக இருக்கின்றன, பெரும்பாலான அறிஞர்கள் அதை அப்போஸ்தலனாகிய யோவான் என்று முடிக்கிறார்கள். சபையில் அவரது ஸ்தானம், அவரது முதிர்ந்த வயது காரணமாக யோவான் தன்னை "மூப்பர்" என்று அழைத்துக் கொள்கிறார், மற்றும் நிருபத்தின் ஆரம்பம், நிறைவுசெய்தல், பாணி மற்றும் கண்ணோட்டம் ஆகியவை 2 யோவானுக்கு மிகவும் ஒத்திருக்கிறது என்பதால், அதே எழுத்தாளர் இரண்டு கடிதங்களையும் எழுதினார் என்பதில் சந்தேகமே இல்லை.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி 85-95 இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.*

*ஆசிய பிராந்தியத்தில் உள்ள எபேசுவிலிருந்து யோவான் இந்த நிருபத்தை எழுதினார்.*

## யாருக்காக எழுதப்பட்டது

*3 யோவான் நிருபம் காயுவுக்கு எழுதப்பட்டது. அப்போஸ்தலனாகிய யோவானுக்கு நன்கு அறிமுகமாயிருந்த சபைகளில் ஒன்றில் இவர் ஒரு முக்கிய அங்கத்தினராக இருந்தார். காயு அவருடைய விருந்தோம்பலுக்காக அறியப்பட்டார்.*

## எழுதப்பட்ட நோக்கம்

*உள்ளூர் திருச்சபையை நடத்துவதில் தன்னையே உயர்த்திக்கொள்வதற்கும் பெருமைகொள்வதற்கும் எதிராக*

எச்சரிப்பதற்கும், தனக்கும் மேலாக சத்தியத்தை போதிக்கும் ஆசிரியர்களின் தேவைகளை சந்திக்கும் காயுவை பாராட்டுவதற்காகவும் (வச 5-8), தியோத்திரேப்புவை அவன் தனது சொந்த தேவைகளை நிறைவேற்றுகிற இழிவான நடத்தைக்கு எதிராக எச்சரிக்கவும் (வச 9), பயணம் செய்யும் ஆசிரியரும் 3 வது யோவான் நிருபத்தை கொண்டு செல்பவருமான தேமேத்திரியுவை பாராட்டவும் (வச 12), யோவான் தன் வாசகர்களை விரைவில் சந்திக்க வருகிறார் என்று தெரிவிக்கவும் (வச 14) இந்த நிருபம் எழுதப்பட்டது.

## மையக் கருத்து

விசுவாசிகளின் விருந்தோம்பல்

## பொருளடக்கம்

1. அறிமுகம் — 1:1-4

2. பயண ஊழியர்களுக்கான விருந்தோம்பல் — 1:5-8

3. பொல்லாதவையல்ல, நல்லவைகளை பிரதிபலித்தல் — 1:9-12

4. முடிவுரை — 1:13-15

# யூதா

## ஆசிரியர்

*"இயேசு கிறிஸ்துவின் ஊழியனாகவும், யாக்கோபின் சகோதரனாகவும் இருக்கிற யூதா" (1: 1) என்று எழுத்தாளர் தன்னை அடையாளம் காட்டுகிறார். யூதா, யோவான் 14: 22 ல் "யூதாஸ்" என்று ஒருவேளை அப்போஸ்தலர்களில் ஒருவராக கூறப்பட்டுள்ளவராக இருக்கலாம். பொதுவாக அவர் இயேசுவின் சகோதரனாகவும் கருதப்படுகிறார். அவர் முன்னர் ஒரு அவிசுவாசியாக இருந்தார் (யோவான் 7: 5), பின்னர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு, அவர் மேல்வீட்டறையில் அவருடைய தாயார் மற்றும் பிற சீடர்களுடன் இருந்தார் (அப்போஸ்தலர் 1: 14).*

*[H2[எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்*

*ஏறக்குறைய கிபி 60-80 காலகட்டத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.*

*அலெக்ஸாண்டிரியாவிலிருந்து ரோமாபுரி வரை எழுதப்பட்ட இடத்தின் ஊகங்களாக இருந்தன.*

## யாருக்காக எழுதப்பட்டது

*"பிதாவாகிய தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டும், இயேசு கிறிஸ்துவை காத்துக்கொள்ளுகிறவர்களுக்கும், மற்றும் அழைக்கப்பட்டவர்களுக்கும்" என்ற பொதுவான சொற்றொடர் எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிக்கிறது. இன்னும், தவறான ஆசிரியர்களிடம் தனது செய்தியை ஒரு குறிப்பிட்ட குழுவினரை விட அவர் தவறான ஆசிரியர்களைப் பேசுவதாக இருந்திருக்கலாம்.*

## எழுதப்பட்ட நோக்கம்

*விசுவாசத்தில் உறுதியாய் இருப்பதற்கும் வீணான காரியங்களுக்கு எதிராக எதிர்ப்பதற்கும் தொடர்ந்து விழிப்புணர்வு தேவை என்று சபைக்கு ஞாபகப்படுத்த முயற்சிக்கும்படி இந்த கடிதத்தை யூதா எழுதினார். எல்லா இடங்களிலும் உள்ள கிறிஸ்தவர்கள் செயல்படவேண்டும் என்று தூண்டுதல் கொடுத்து அவர் எழுதினார். பொய்ப் போதனைகளின் ஆபத்தை அவர்கள் உணர்ந்துகொள்ளவும், தங்களைத் தாங்களே மற்றும் மற்ற விசுவாசிகளையும் காப்பாற்றவும், ஏற்கனவே வஞ்சிக்கப்பட்டவர்களை மீண்டும் மனந்திரும்பச்செய்யவும் அவர் விரும்பினார். தேவனுடைய தண்டனையைக் குறித்துப் பயப்படாமல், கிறிஸ்தவர்கள் தாங்கள் விரும்பியதைச் செய்ய முடியுமென்று கூறிக்கொண்டிருந்த தேவபயமற்ற போதகர்களுக்கு எதிராக யூதா எழுதினார்.*

## மையக் கருத்து

*விசுவாசத்திற்காகப் போராடுவது*

## பொருளடக்கம்

*1. அறிமுகம்* — ***1:1, 2***

***2.*** *கள்ளப் போதகர்களின் விளக்கம் மற்றும் விதி* — ***1:3-16***

***3*** *கிறிஸ்துவில் விசுவாசிகளுக்கு ஊக்கமளித்தல்* — ***1:17-25***

# வெளிப்படுத்தின விசேஷம்

## ஆசிரியர்

*அப்போஸ்தலனாகிய யோவான், தேவதூதன் மூலமாக தேவன் சொன்னவைகளை எழுதினவர் என்று தன்னைத்தானே குறிப்பிடுகிறார். ஜஸ்டின் மார்டையர், ஐரெனியஸ், ஹிப்போலிடஸ், தெர்துல்லியன், அலெக்ஸாண்டிரியாவின் கிளெமெண்ட் மற்றும் முர்டோரியன் போன்ற சபையின் ஆதி எழுத்தாளர்கள், அப்போஸ்தலனாகிய யோவானை, வெளிப்படுத்துதல் புத்தகத்தின் ஆசிரியர் என்று கூறுகின்றனர். வெளிப்படுத்தின விசேஷம், "வெளிப்பாடுகள்" வடிவத்தில், உபத்திரவத்தின் மத்தியில் உள்ளவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும்படி (தேவனுடைய இறுதியான வெற்றியில்) அடையாள கற்பனைகளைப் பயன்படுத்தும் யூத இலக்கியத்தின் ஒரு வகையாக எழுதப்பட்டிருக்கிறது.*

## எழுதப்பட்ட காலம் மற்றும் இடம்

*ஏறக்குறைய கிபி 95-96 க்கு இடையில் எழுதப்பட்டது.*

*யோவான் தீர்க்கதரிசனத்தைப் பெற்றபோது ஏகியன் கடலில் உள்ள ஒரு தீவான பத்மு தீவில் இருந்ததாக அவர் குறிப்பிடுகிறார், (1: 9).*

## யாருக்காக எழுதப்பட்டது

*ஆசியாவில் ஏழு சபைகளுக்கு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டதாக யோவான் கூறினார் (1: 4).*

## எழுதப்பட்ட நோக்கம்

*இயேசு கிறிஸ்துவையும் (1: 1), அவருடைய ஆள்தத்துவம், அவருடைய வல்லமை, ஆகியவற்றை வெளிப்படுத்துவதும்,*

*சீக்கிரத்தில் சம்பவிக்கப்போகிறவைகளை அவருடைய ஊழியர்களுக்குக் காண்பிப்பதும் வெளிப்படுத்துதலின் நோக்கமாக இருக்கிறது. உலகமானது முடிவுக்கு வரும் மற்றும் நியாயத்தீர்ப்பு உண்டாகும் என்பதற்கான இறுதி எச்சரிக்கை இதுவாகும். இது நமக்கு பரலோகத்தைப்பற்றிய ஒரு சிறிய பார்வையைக் கொடுக்கிறது மற்றும் தங்கள் வஸ்திரங்களை வெண்மையாக பாதுகாத்துக் காத்திருக்கும் அனைவருக்கும் மகிமை காத்திருக்கிறது. வெளிப்படுத்தல், எல்லாக் கேடுகளுடனும் மிகுந்த உபத்திரவத்தின் வழியாக நம்மை எடுத்துச் செல்கிறது. எல்லா அவிசுவாசிகளும் நித்தியத்திற்காக எதிர்கொள்ளும் கடைசி அக்கினியைப் பற்றியும் சொல்கிறது. புத்தகம் சாத்தானின் வீழ்ச்சி மற்றும் அவனது தூதர்கூட்டமும் கட்டிப் பிணைக்கப்படுவதை மீண்டும் கூறுகிறது.*

## மையக் கருத்து

*அறிமுகப்படுத்துதல்*

## பொருளடக்கம்

*1. கிறிஸ்துவின் வெளிப்பாடு மற்றும் இயேசுவின் சாட்சி — 1:1-8*

*2. நீங்கள் பார்த்திருக்கிற காரியங்கள் — 1:9-20*

*3. ஏழு உள்ளூர் சபைகள் — 2:1-3:22*

*4. சம்பவிக்கப்போகும் விஷயங்கள் — 4:1-22:5*

*5. கர்த்தரின் கடைசி எச்சரிக்கையும், அப்போஸ்தலனின் கடைசி ஜெபமும் — 22:6-21*

